# வங்கியியல்

(BANKING)

டாக்டர் மா. பா. குருசாமி

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்--395

# வங்கியியல்

(பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்
டாக்டர் மா. பா. குருசாமி, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
பேராசிரியர், பொருளியல் துறைத் தலைவர்,
ஆதித்தனார் கல்லூரி,
திருச்செந்தூர்.

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

First Edition—December, 1972
Revised Edition—September, 1976
Revised & Reprint — February, 1986

Number of Copies — 2000

T.N.T.B.S. (C.P.) No. 395

© Government of Tamilnadu

**BANKING**

Dr. M. P. Gurusamy

**Price: Rs. 14-00**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed by*
Bhagat Printers, Madras-600016

# அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி இருபத்தைந்தாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப்படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்களின் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். நாடு முழுவதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன் வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

அகராதியியல், அரசியல், இயற்பியல், உயிரியல், உளவியல், கணிதவியல், சட்டவியல், தாவரவியல், புவியமைப்பியல், புவியியல், புள்ளியியல், பொருளியல், பொறியியல், மனையியல், மெய்ப்பொருளியல், வணிகவியல், வரலாற்றியல், வானியல், விலங்கியல், வேதியியல் முதலிய பல துறைகளில் மூலநூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான வங்கியியல் என்னும் இந் நூல் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் வெளியான 395ஆவது வெளியீடாகும். தமிழ்மக்களின் பேராதரவினாலும் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டவர்களின் நல்லூக்கத்தினாலும் இதன் முந்தைய பதிப்புப் படிகள் அனைத்தும் விற்பனையாகி விட்டன. ஆதலின் இப்பொழுது இந் நூல் மீண்டும் வெளி வருகின்றது. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூகநல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம்பெற வேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள் அவற்றைத் தமிழில் பயிலவேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளரவேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரித்தாகுக.

செ. அரங்கநாயகம்

# பொருளடக்கம்


பக்கம்

1. வங்கி முறையின் வரலாறும் வளர்ச்சியும் ... 1

வரலாறு — முன்னோடிகள் — இங்கிலாந்து — இந்தியா — முக்கியத்துவம்.

2. வங்கிகளின் வகைகள் ... 12

வணிக வங்கிகள் — தொழில் வங்கிகள் — வேளாண்மை வங்கிகள் — சேமிப்பு வங்கிகள் — வெளிநாட்டுச் செலாவணி வங்கிகள் — நாட்டுப்புற வங்கியாளர்கள் — மைய வங்கி — பன்னாட்டு வங்கிகள்.

3. வணிக வங்கியின் பணிகள் ... 18

வங்கி - ஒரு விளக்கம் — அடிப்படைக் கொள்கைகள் — பணிகள்—முதன்மைப் பணிகள்—துணைப் பணிகள் — பொருளாதார வளர்ச்சி.

4. வணிக வங்கிகளின் அமைப்பு முறை ... 35

(அ) அமைப்பு முறை—(ஆ) கிளை வங்கியும் தனி வங்கியும்—(இ) கிளை வங்கி முறையில் நன்மைகள் — (ஈ) கிளை வங்கி முறையிலுள்ள குறைகள் — (உ) தனி வங்கி முறையின் நன்மைகளும் குறைகளும்— (ஊ) இந்தியாவில் கிளை வங்கிமுறை — (எ) வங்கிகளின் இணைப்பு — (ஏ) கலப்பு வங்கி முறை.

5. வணிக வங்கிகளின் சொத்துகளும் பொறுப்புகளும் ... 64

(அ) இருப்பு நிலைக் குறிப்பு — (ஆ) ரொக்க வீத நிருணயம் — (இ) வங்கியின் முதலீட்டுக் கொள்கை.

6. வணிக வங்கிகளின் கடன் (பணம்) உற்பத்தி ... 88

பொது விளக்கம்—முறைகள்—வரையறைகள் — மதிப்பீடு.

பக்கம்

7. கடன் கருவிகள் ... 104

(அ) கடன்-சிறு விளக்கம் — (ஆ) வாக்குறுதிப் பத்திரம்—(இ) மாற்றுச் சீட்டு — (ஈ) காசோலை.

8. தீர்வகங்கள் ... 118

பொது விளக்கம் — செயல்படும் முறை — இலண்டன் தீர்வகம் — இந்தியத் தீர்வகங்கள்.

9. இந்திய வணிக வங்கி முறை ... 125

வரலாற்றுப் பின்புலம் — நாட்டு வங்கியர்கள்— பதிலாள் இல்லங்கள் — தற்கால வங்கிமுறை — கூட்டுப் பங்கு வங்கிகள் — அந்நியச் செலாவணி வங்கிகள் — வங்கிச் சட்டங்கள் — தற்கால நிலை — வைப்புக் காப்பீட்டு நிறுவனம்.

10. இந்தியக் கூட்டுறவு வங்கி முறை ... 146

பின்புலம் — அமைப்பு — அடிப்படைச் சங்கங்கள்—மத்திய வங்கிகள் — மாநிலக் கூட்டுறவு வங்கிகள்—வளர்ச்சி—நில(அடைமான)வள வங்கிகள்.

11. இந்திய ஸ்டேட் வங்கி ... 154

பின்புலம் — நிருவாகம் — பணிகள் — சட்டங்கள் — செயல்முறை.

12. பொருளாதார வளர்ச்சியும் சிறப்பு வங்கிகளும் ... 165

I. இந்தியத் தொழில் நிதிக் கழகம்—II. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி — III. மாநில நிதிக் கழகங்கள் — IV. இந்தியத் தொழில் கடன் முதலீட்டுக் கழகம் — V. தேசியத் தொழில் வளர்ச்சிக் கழகம் — VI. தேசியச் சிறு தொழில்கள் கழகம் — VII. வேளாண்மை மறுநிதிக் கழகம் — VIII. இந்திய யூனிட் டிரஸ்ட்—IX. முன்னோடி வங்கித் திட்டம் — X. வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி.

13. வங்கிகளை நாட்டுடைமையாக்கல் ... 176

(அ) அரசின் கட்டுப்பாடு — (ஆ) நாட்டுடைமையாக்கல் — (இ) இந்தியாவில் வங்கிகளை நாட்டுடைமையாக்கல்.

பக்கம்

14. மைய வங்கியின் அமைப்பும் பணிகளும் ... 202

தோற்றம் — தனித்தன்மை — அமைப்பு — பொருளாதார, சமுதாய நோக்கங்கள் — பணிகள்.

15. மைய வங்கியின் கடன் கட்டுப்பாட்டு முறைகள் ... 224

பொது விளக்கம் — (அ) கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகள் — 1. வங்கிவிகித அல்லது கழிவுவிகிதக் கொள்கை — 2. வெளிச் சந்தை நடவடிக்கைகள் — 3. ரொக்க இருப்புவீத மாறுதல் — (ஆ) கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் — 1. வரம்புத் தேவைகளைக் குறித்தல் — 2. நுகர்வோர் கடனை நெறிப்படுத்துதல் — 3. ஆணைகளின் மூலம் கட்டுப்பாடு — 4. நேரடி நடவடிக்கை — 5. அறிவுறுத்தல் — 6. கடன் பங்கீடு.

16. பணச் சந்தை ... 261

1. அமைப்பு, வகை, வளர்ச்சி — 2. இலண்டன் பணச் சந்தை — 3. நியூயார்க் பணச் சந்தை — 4. இந்தியப் பணச் சந்தை.

17. இந்திய ரிசர்வ் வங்கி ... 289

பின்புலம் — நாட்டுடைமையாக்கல் — தேவை — அமைப்பு — நிருவாகம் — துறைகள் — சாதாரண வங்கிப் பணிகள் — மதிப்பீடு.

18. இங்கிலாந்து வங்கி ... 312

பின்புலம் — வளர்ச்சி — அமைப்பு — பணிகள் — கடன் கட்டுப்பாட்டு முறைகள்.

19. அமெரிக்கக் கூட்டரசு ரிசர்வ் முறை ... 320

வரலாற்றுப் பின்புலம் — கூட்டரசு ரிசர்வ் முறை — அமைப்பு — பணிகள் — கடன் கட்டுப்பாடு.

20. உலக நிதி, வங்கி நிறுவனங்கள் ... 329

1. உலகப் பணத் தொடர்புகள் — 2. பன்னாட்டுப் பண நிதி — 3. புனரமைப்பு, வளர்ச்சிப் பன்னாட்டு வங்கி.

கலைச்சொற்கள் ... 351

# 1. வங்கிமுறையின் வரலாறும் வளர்ச்சியும்

இன்றைய பொருளாதார நடவடிக்கைகளுக்கு வங்கிகள் பெருந்துணையாக இருக்கின்றன. குறிப்பாகத் தொழில், வாணிப வளர்ச்சியில் வங்கிகள் பெரும் பங்கு பெறுகின்றன. ஒரு நாட்டின் வாழ்வோடும் வளத்தோடும் வங்கிகளின் வளர்ச்சியும் பணிகளும் பிரிக்க முடியாத வகையில் அமைந்துள்ளன. இதனால்தான் கிரௌதர், 'வங்கிகள் பண ஏற்பாட்டிற்கு அச்சாணியாக உள்ளவை', என்று கூறுகின்றார்.

இன்று நாம் காண்கின்ற வங்கிகள் கட்டுக்கோப்பான அமைப்புருவம் பெற்றிருப்பவை; நுணுக்கமான பணிகளையும் திறமையாகச் செய்யுமளவிற்கு வளர்ச்சிபெற்றவை. இன்றைய வங்கிகளை யெல்லாம் மைய வங்கியின் கண்காணிப்பும் கட்டுப் பாடும் ஊடுருவி நிற்கின்றன. ஆலமரம் வளர்ந்து கிளைகள் பரப்ப, அவற்றிலிருந்து வரும் விழுதுகள் தனிமரங்களைப்போல் மண்ணில் வேரூன்றி நிற்க, காலம் கடந்த நிலையில் எது மூல மரம், எது விழுதுமரம் என்று தெரியாத நிலை ஏற்படலாம். வங்கிகளும் இன்று வளர்ந்த நிலையில் முதிர்ந்த ஆலமரம் போன்றே இருக்கின்றன. ஒவ்வொரு துறையிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றுப் பணிபுரிகின்ற வங்கிகள் இருக்கின்றன. வெளிப்படையாகப் பார்க்கின்றபொழுது அவை தனித்தனி அமைப்பாகத் தோன்றலாம். ஆனால், நுணுகிப் பார்த்தால் அவை எல்லாவற்றிற்கும் அடிப்படை ஒன்றென்பது விளங்கும்.

இங்கிலாந்தில் தொழிற்புரட்சி நடைபெற்ற காலத்தில்தான் வங்கிகள் அவற்றின் முழுமையான உருவத்தைப் பெற்றன. அதுவரை படிப்படியாக அவை வளர்ந்த மிகத் தொன்மையான வரலாறு ஒன்று இருக்கின்றது. இன்றைய வங்கிகளின் அமைப்பையும் பணிகளையும் நன்றாகப் புரிந்துகொள்ள அவற்றின் வரலாற்றை அறிந்துகொள்வது அவசியமாகும்.

## வரலாறு

இன்றைய வங்கிகள் மிகப்பல பணிகளைச் செய்கின்றன. இவற்றில் வங்கித் தொழிலுக்கு அடிப்படையாக அமைகின்ற வைப்புகளைப் பெறுதல், கடன் தருதல் முதலிய பணிகளை மேற் கொண்டிருந்தவர்கள் மிகவும் நெடுங்காலத்திற்கு முன்னரே இருந்தார்கள் என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது.

பாபிலோனியர்கள் இயேசு கிறித்து பிறப்பதற்கு ஏறத்தாழ 2,000 ஆண்டுகளுக்கு முன்னரேயே கோவில்களில் கடன் கொடுத்தல், வாங்கல் ஆகிய தொழில்களைச் செய்திருக் கின்றனர். வட்டிக்குக் கடன் கொடுக்கின்ற தொழிலைக் கிரேக்கர்களும் ரோமானியர்களும் மேற்கொண்டிருந்ததற்குச் சான்றுகள் உள்ளன. கடன் கொடுக்கும் (லேவாதேவி) தொழில் பல்வேறு நாடுகளிலும், அவற்றின் சூழ்நிலைகளுக் கேற்ப அமைந்திருந்த நிலையை உலக வரலாறு கூறுகின்றது.

வங்கிகளைக் கட்டுக்கோப்பான அமைப்பு முறையில் பன்னிரண்டாம் நூற்றாண்டில்தான் அமைத்தனர். முதன் முதலில் வெனிசிலும் (Venice), ஜெனோவாவிலும் (Genoa) கட்டுக்கோப்பான முறையில் வங்கிகளை அமைத்தனர்.

ஆங்கிலத்தில் வங்கியைக் குறிக்கின்ற 'பேங்க்' (Bank) என்னும் சொல் இத்தாலியச் சொற்களான 'பாங்கஸ்' (Bancus), 'பாங்கோ' (Bangue) என்பவற்றிலிருந்து வந்திருக்க லாமென்று கருதப்படுகின்றது. இந்தச் சொற்களுக்கு 'அமர் கின்ற பெஞ்சு' என்பது பொருள். 'பேங்க்' என்னும் சொல் 'பேக்' (Back) என்னும் ஜெர்மானியச் சொல்லிலிருந்து தோன்றியிருக்கலாமென்ற கருத்தும் இருக்கின்றது. 'பேக்' என்னும் ஜெர்மானியச் சொல்லுக்குக் 'கூட்டுப் பங்கு நிதி' என்பது பொருளாகும்.

## முன்னோடிகள்

இனி, வங்கிமுறை தோன்றியதைப்பற்றி விளக்குவோம். கையில் மிகுதியாகப் பணமோ செல்வமோ வைத்திருந்த பலருக்கு அதனைப் பாதுகாப்பது என்பது சிக்கலான ஒன்றாக இருந்தது. அப்பொழுது, சமுதாயத்தில் செல்வாக்குப் பெற் றிருந்த, பொருள் வளமுடைய, நம்பிக்கைக்குரிய சிலரிடம் பணத்தையோ செல்வத்தையோ கொடுத்து வைக்கும் பழக்கம்

ஏற்பட்டது. பணத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் தங்களிடம் பணம் கொடுத்து வைப்பதற்குச் சான்றாக ரசீது கொடுத்தனர். காலப்போக்கில் இந்த ரசீதுகளைப் பணத்தைப்போல, கொடுக்கல் வாங்கலில் பயன்படுத்தும் பழக்கம் ஏற்பட்டது. பணத்தைப் பெற்று வைத்திருந்தவர்கள் பெட்டியில் பணம் பயனற்று இருப்பதைவிட அதனைக் கடன் கொடுத்து வட்டி வாங்கினால் வருவாய் கிடைக்குமென்று புரிந்துகொண்டனர். ஆதலால் தங்களிடமிருந்த பணத்தை வட்டிக்குக் கடன் கொடுத்தனர்; தங்களிடம் பணம் கொடுத்து வைத்திருந்தவர்களுக்கும் குறைந்த வீதத்தில் வட்டி கொடுத்தனர். பின்னால் இது வங்கித் தொழிலாக வளர்ந்தது.

கிரௌதர் (Crowther), வங்கிமுறைக்கு முன்னோடிகளாக வணிகர்கள், வட்டிக்குக் கடன் கொடுப்போர் (லேவாதேவிக் காரர்), பொற்கொல்லர்கள் (Goldsmiths) ஆகிய மூன்று பிரிவினரையும் கருதுகின்றார்.

முதலாவதாக, வணிகர்கள் வாணிபத்தின் பொருட்டு ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பணத்தைக் கொண்டு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. தொழில், வாணிபம் விரிவடைந்தபொழுது இத்தகைய தேவைகள் மிகுந்தன. அந்தக் காலத்தில் பணத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்வதில் பல இடர்ப்பாடுகள் இருந்தன. ஆதலால், வணிகர்கள் தேவையை ஒட்டி ஒரு முறையை ஏற்படுத்திக் கொண்டனர். தங்களிடம் பணமிருக்கின்றது என்பதற்குச் சமுதாயத்தில் செல்வாக்குள்ளவர்களிடம் சான்றிதழ்கள் பெற்றுச் சென்றனர். இத்தகைய சான்றிதழ்களைச் சில பொது அவைகளும் கொடுத்திருக்கலாம். 'இந்த மனிதர் அல்லது அவைதான் ஆரம்ப வங்கியாளர்', என்று கிரௌதர் கூறுகின்றார். இந்தச் சான்றிதழ்கள் கொடுக்கல், வாங்கல், வாணிப நடவடிக்கைகள் ஆகியவை விரிவாகவும் விரைவாகவும் நடைபெற உதவின.

இரண்டாவதாக, கடன் கொடுப்பவர்கள் (லேவாதேவிக் காரர்கள்) வங்கிமுறை வளரக் காரணகர்த்தாக்களாக இருந்தனர். கடன் கொடுக்கின்ற பழக்கம் பணப்பொருளாதாரம் தோன்றுவதற்கு முன்னரேயே, பண்டமாற்றுக் காலத்திலேயே ஏற்பட்டிருக்கலாம். ஆனால், கடனளவு கருவியாக இருக்கின்ற பணம், புழக்கத்திற்கு வந்த பின்னர், வட்டிக்குக் கடன் கொடுக்கின்ற தொழில் வளர்ந்தது. வட்டிக்குக் கடன் கொடுத்தவர்கள் உயர்ந்த வீதத்தில் வட்டி வாங்கினர். கடன்

பெற்றவர்கள் கடுமையான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியவராயிருந்தனர். கடன் கொடுத்தவர்கள் கடனைத் திரும்பப் பெறுவதில் கடுமையான முறையில் நடந்து கொண்டமையால், லேவாதேவித் தொழிலைச் சமயங்கள் கடிந்து ஒதுக்கின. இத் தொழிலில் ஈடுபட்டவர்களைச் சமுதாயம் பழித்தது. ஆனால், பொருளாதார வளர்ச்சிப் போக்கில், வாணிபத்தையும் தொழிலையும் நடத்துவதன் பொருட்டுக் கடன் வாங்குவது தவிர்க்க முடியாத தொன்றாக அமைந்துவிட்டது. இதனால் 'லேவாதேவித் தொழில்' வளர்ந்தது. முதலில் லேவாதேவிக்காரர்கள் தங்களிடமிருந்த மூலதனத்தை வைத்துத் தொழிலை நடத்தினர். பின்னர், பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதியைப் பெறுகின்ற பழக்கம் ஏற்பட்டது. பெரிய லேவாதேவிக்காரர்களால் அதிக அளவில் கடன் கொடுக்க முடிந்தது. பேரளவு உற்பத்தி முறை வளர்ச்சி பெற்ற நிலையில், போக்குவரத்து முன்னேற்றம் பெற்று வாணிபம் பரந்து, விரிந்து வளர்ந்த நிலையில், லேவாதேவிக்காரர்களின் முக்கியத்துவம் உயர்ந்தது. பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் (Deposits) பெற்று, தேவையானவர்களுக்குக் கடன் தருகின்ற இன்றைய வங்கிகளின் பணியை அன்றே லேவாதேவிக்காரர்கள் செய்துவந்தனர் என்பதை அறிகின்றோம்.

மூன்றாவதாக, வங்கிமுறை அமைப்பிற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் பொற்கொல்லராவர். இங்கிலாந்திலிருந்த தனிப்பட்ட சூழ்நிலையில், பொற்கொல்லர்கள் சில பணிகளை மேற்கொண்டிருந்தனர். பின்னர் வங்கிகள் அமைவதற்கு அவை அடித்தளம் அமைத்துத் தந்தன. இங்கிலாந்திலிருந்த பொற்கொல்லர்கள் நல்ல செல்வ வளம் பெற்றவர்களாக இருந்தனர். அவர்களிடம் தங்கத்தையும் அணிகலன்களையும் வைக்கின்ற பாதுகாப்பு அறைகள் இருந்தன. தங்களிடம் இருந்த தங்கம், வெள்ளி ஆகியவற்றைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடியாதவர்கள், அவற்றைப் பொற்கொல்லர்களிடம் கொடுத்து வைத்தனர். பொற்கொல்லர்கள் தாங்கள் பெற்றுக்கொண்டவற்றிற்கு ரசீது கொடுத்தனர். இத்தகைய ரசீதுகளைக் கொடுக்கல் வாங்கலில் பணம்போலப் பயன்படுத்தினர். பொன், வெள்ளியைப் பொற்கொல்லரிடம் கொடுத்து வைத்திருப்பவர் வேறொருவருக்குப் பணம் தர வேண்டியிருந்தால், அவருக்குப் பொற்கொல்லர் கொடுத்த ரசீதையும், பொற்கொல்லருக்கு ஒரு கடிதத்தையும் கொடுத்தால், மற்றவர் நேரில் சென்று பொற்கொல்லரிடம் கடிதத்தை

யும் ரசிதையும் கொடுத்துப் பணத்தையோ வெள்ளி தங்கத் தையோ பெற்றுக் கொள்ளலாம். இன்றைய காசோலை (Cheque) முறைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது பொற் கொல்லர்கள் கொடுத்த இந்த ரசிதுதான்.

பொற்கொல்லர்கள் காலப்போக்கில் தங்களுடைய பட்டறிவின் மூலம் ஓர் அடிப்படை உண்மையைக் கண்டு கொண்டார்கள். தங்களிடம் கொடுத்து வைத்திருப்பவர்கள் எல்லாம் ஒரே நேரத்தில் பணத்தைக் கேட்பதில்லை என்ற உண்மையைப் புரிந்துகொண்டார்கள். இதனால் சிலரிடமிருந்து பணம் எதுவும் பெற்றுக்கொள்ளாமலேயே, அவர்களுக்கு உதவும் நோக்கில், பணம் கடன் தருவதைப் போன்று, தங்களிடம் பொன், வெள்ளி கொடுத்திருப்பதைப்போல ரசிது கொடுத்தனர். இந்த ரசிதுகளைப் பெற்றுக்கொண்டவர்கள், அவற்றைப் பணம்போலப் பயன்படுத்தினர். தாங்கள் மற்றவர் களுக்குக் கொடுக்கவேண்டிய பணத்திற்குப் பதிலாக இந்த ரசிதைக் கொடுத்தனர். ரசிது கொண்டு வருபவர்களுக்கு அதில் குறிப்பிட்டுள்ள தொகையைப் பொற்கொல்லர்கள் கொடுத்து விடுவார்கள். பின்னர் அதனை யாருக்காகக் கொடுத்தார்களோ அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார்கள். இன்று வங்கிகள் தங்களிடமுள்ள வைப்புகளுக்கும் அதிகமாகக் கடன் கொடுப் பதற்கு—அதாவது பணத்தை உருவாக்குவதற்கு—முன்னோடி யாகப் பொற்கொல்லர்களின் பணி இருந்தது கவனிக்கத்தக்க தாகும்.

தற்கால வங்கிமுறை, முன்னர் இங்கிலாந்தில் லேவா தேவிக்காரர்களும் பொற்கொல்லர்களும் செய்த பணிகளை மேற்கொண்டிருக்கின்றது. இதனைக் கிரௌதர் மிகவும் சிறப்பான முறையில், 'பணம் இருவித வடிவங்களை உடையது' எனச் சிலேடையாகக் கூறுகின்றார். அது தட்டையானது; அடுக்கி வைத்துச் சேமிப்பதற்கு உகந்தது. அது வட்டமானது; உருண்டோடிப் புழங்குவதற்கு உகந்தது. லேவாதேவிக்காரரின் சந்ததிகள் இவ் வடுக்கி வைக்கும் பணமான (சேமிப்பு) தட்டைப் பணம் சம்பந்தப்பட்டவர்கள். பொற்கொல்லரின் சந்ததிகள் வட்டப்பணம் (புழக்கத்திலிருக்கும் பணம்—ரொக்கம்) சம்பந்தப் பட்டவர்கள். 'தற்காலப் பெரிய வங்கிகள் இவ்விருவருடைய பணிகளையுமே செய்கின்றன' என்கின்றார்.

ஒவ்வொரு நாட்டின் சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்றாற்போலப் பலவகையான வங்கிகள் வளர்ந்தன. வங்கி களின் பணிகள் விரிவடைந்தன. ஆதலால், வங்கிகளின்

பணிகளை நெறிப்படுத்த வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்தது. இதற்காகச் சட்டங்கள் கொண்டுவரப்பெற்றன.

வங்கிமுறை வளர்ச்சியின் குறிப்பிடத்தக்க காலகட்டமாக அமைந்தது, மைய வங்கியை நிறுவியதாகும். பல்வேறு வங்கிகளின் பணிகளை இணைக்கவும், நெறிப்படுத்தவும், வழிகாட்டவும் மைய வங்கி தேவையென்ற பட்டறிவின் காரணமாக முதன்முதலில் டென்மார்க்கில் 1609ஆம் ஆண்டில் ஆம்ஸ்டர்டாம் வங்கி (Bank of Amsterdam) என்னும் மைய வங்கியைத் தோற்றுவித்தனர். பின்னர்ப் பல நாடுகளில் மைய வங்கிகள் தோன்றி வளர்ந்தன.

## இங்கிலாந்து

முதன்முதலில் வேறு நாடுகளில் வங்கிகள் தோன்றிய போதிலும், வங்கிகள் விரைந்து வளர்ந்து சிறப்பான முறையில் கட்டுக்கோப்பான நிலையை அடைந்ததன் காரணமாக, இங்கிலாந்தைத் தற்கால வங்கிமுறையின் தாயகமாகக் கருதுகின்றோம். ஆதலால், இங்கிலாந்தின் வங்கிமுறை வளர்ச்சியின் போக்கைச் சுட்டிக்காட்டுவது, பொதுவான வங்கிமுறை வளர்ச்சியை அறிய உறுதுணையாக இருக்கும்.

தொடக்க காலத்தில் சமயத்தின் அடிப்படையில் வட்டி வாங்குவது பாவமென்ற கருத்து நிலவியது. கடன் கொடுப்பவர்களுக்குத் தூண்டுதல் இல்லாமையால் கடன் கொடுப்பதில் பலர் ஈடுபடவில்லை. ஆனால், பிற்காலத்தில் வட்டி வாங்குவதைச் சட்டம் ஏற்றுக்கொண்டது. லேவாதேவித் தொழிலுக்கு மற்றைய தொழில்களைப்போல வளரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

மிகுதியாகப் பணம் வைத்திருந்தவர்கள், பாதுகாப்புக் கருதித் தங்களுடைய நம்பிக்கைக்குரிய வணிகர்களிடம் கொடுத்து வைத்தனர். அப்பொழுது இங்கிலாந்திலேயே மிகவும் பாதுகாப்பிற்குரிய இடமாக அரசின் கருவூலமான இலண்டன் கோட்டை (Tower of London) கருதப்பெற்றது. ஆதலால், வணிகர்கள் தங்களிடமிருந்த பணத்தை அரசின் கருவூலத்தில் கொடுத்து வைத்திருந்தனர்.

முதலாம் சார்லஸ் மன்னருக்கு அரசியல் காரணங்களுக்காகப் பணம் தேவைப்பட்டது. வேறுவகைகளில் தேவையான பணத்தைப் பெற முடியாத மன்னர், பண நெருக்கடியிலிருந்து

மீளும்பொருட்டு அரசின் கருவூலத்தில் வணிகர்கள் பாதுகாப்புக் கருதி வைத்திருந்த பணத்தில் ஏறத்தாழ 1,30,000 பவுனை எடுத்துச் செலவு செய்துவிட்டார். மன்னர், தாம் எடுத்துச் செலவிட்ட பணத்தைப் பின்னர்த் திருப்பிச் செலுத்துவதாக வாக்குறுதி கொடுத்திருந்துங்கூட, மன்னரின்மீதிருந்த நம்பிக்கை தேய்ந்தது. ஆதலால், இலண்டன் கோட்டையில் பணத்தைக் கொடுத்து வைக்கும் பழக்கம் குறைந்தது.

அப்பொழுது இங்கிலாந்தில் செல்வ வளமுள்ள பொற் கொல்லர்கள், தங்களுடைய வீடுகளில் நிலவறைகள் அமைத் திருந்தனர். அவர்கள் பொதுமக்களின் நம்பிக்கைக்குரியவர் களாகவும் இருந்தனர். ஆதலால், வணிகர்களும் பொது மக்களும் பொற்கொல்லர்களிடம் பணத்தைக் கொடுத்து வைத்தனர். பொற்கொல்லர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட பணத்திற்கு ரசீது கொடுத்தனர். பொற்கொல்லர்கள் தங்களிடம் தேங்கிய பணத்தை வட்டிக்குக் கடன் கொடுத்து இலாபம் பெற்றனர்; தங்களிடம் பணம் கொடுத்து வைக்கின்ற வர்களுக்கும் சிறிதளவு வட்டி கொடுத்தனர்.

இரண்டாம் சார்லஸ் மன்னருக்குப் பண நெருக்கடி ஏற் பட்டது. பொதுமக்களிடமிருந்து கடன் பெறுவதைவிடப் பொற்கொல்லர்களிடமிருந்து கடன் பெறுவது எளிதெனக் கண்ட இரண்டாம் சார்லஸ், அவர்களிடமிருந்து 13,28,526 பவுன் கடனாகப் பெற்றார். ஆனால், 1672-ல் மன்னரால் கடனைத் திருப்பிக் கொடுக்க இயலவில்லை. மன்னர் வட்டியை மட்டுமே கொடுத்தார். இது பொற்கொல்லர்களுக்கு ஒரு நெருக்கடி நிலையைத் தோற்றுவித்தது. தங்களிடம் பணம் கொடுத்து வைத்திருந்த பொதுமக்கள் கேட்கின்றபொழுது பணத்தைக் கொடுப்பதில் பொற்கொல்லர்கள் சில தொல்லை களை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனாலும், இந்த நெருக்கடியைப் பொற்கொல்லர்கள் சமாளித்துவிட்டனர்.

மூன்றாம் வில்லியம் மன்னருக்கு ஃபிரெஞ்சுப் போரை நடத்துவதற்குப் பணம் தேவைப்பட்டது. மன்னர் பொது மக்களிடமிருந்து கடன் வாங்க முயன்றார். ஆனால், எதிர் பார்த்ததைப் போலக் கடன் கிடைக்கவில்லை. மன்னருக்கு வேண்டிய பணம் கிடைக்க ஸ்காட்லாந்துக்காரரான வில்லியம் பேட்டர்சன் (William Paterson) ஒரு திட்டம் தீட்டிக் கொடுத்தார். இந்தத் திட்டத்தின்படி 1694-ல் மன்னர் தனியார் சிலரிடம் 8 சதவீத வட்டியில் 12 லட்சம் பவுன் கடன்

வாங்கிக்கொண்டு, அவர்களுக்கு இங்கிலாந்து வங்கியை (Bank of England) நிறுவ ஒரு பட்டயம் (Charter) அளித்தார்.

அஃது அரசின் பட்டயப்படி தனியார் சிலரின் கூட்டு நிறுவனமாக இயங்கியது. மன்னருக்குக் கடன் கொடுத்த அளவிற்குக் காகிதப் பணத்தை (Notes) அச்சிட வங்கிக்கு உரிமை வழங்கப் பெற்றது. அரசு ஆண்டிற்கு 4,000 பவுன்கள் நிருவாகச் செலவிற்காக மானியமாகத் தர ஒப்புக்கொண்டது. ஆண்டிற்கு வட்டியும், நிருவாக மானியமுமாக ஒரு லட்சம் பவுன் வருவாய் வரும் ஏற்பாட்டுடன் இங்கிலாந்து வங்கி பணியாற்றத் தொடங்கியது. இங்கிலாந்து வங்கிக்கு முதலில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கப்பெற்ற பட்டயம், உரிய காலங்களில் தொடர்ந்து புதுப்பிக்கப் பெற்றது. காலப்போக்கில் நாடெங்கும் வங்கிகள் செழித்து வளர்ந்தன. படிப்படியாகக் காகிதப் பணத்தை வெளியிடும் முற்றுரிமை இங்கிலாந்து வங்கிக்கு வந்தது. சூழ்நிலையின் காரணமாக இங்கிலாந்து வங்கி மைய வங்கியாகச் செயல்பட்டது. வங்கித்தொழில் விரிவடைந்த பொழுது, அரசு பல்வேறு சட்டங்களின்மூலம் இதனை நெறிப்படுத்தியது. 1947-ல் இங்கிலாந்து வங்கியை அரசு நாட்டுடைமையாக்கிற்று.

## இந்தியா

நமது நாட்டிலும் இன்று வங்கிகள் செய்கின்ற பல்வேறு பணிகளைப் பழங்காலத்திலிருந்தே சில தனி மனிதர்கள் செய்து வந்ததற்குச் சான்றுகள் உள்ளன. மனுசாத்திரத்திலும், மகாபாரதத்திலும் லேவாதேவித் தொழில் நடைபெற்றதற்கான குறிப்புகள் காணப்பெறுகின்றன. கௌடில்யரின் அர்த்த சாத்திரம் வட்டிவீதம் பற்றிக் கூறுகின்றது. புத்த சமய இலக்கியங்களில் லேவாதேவித் தொழிலைப்பற்றிப் பல செய்திகள் காணப் பெறுகின்றன. முகலாயரின் ஆட்சிக் காலத்தில் நாணய முறை வளர்ச்சி பெற்றது. இது வங்கித் தொழில் விரிந்த முறையில் நடைபெறத் துணை செய்தது. வாணிபத்தில் கடன் கொடுத்து வாங்குவதிலுள்ள இடர்ப்பாடுகளைக் குறைக்கும் வகையில் உண்டியல் (Hundis) முறை நெடுங்காலமாகப் புழக்கத்தில் இருந்துவந்திருக்கின்றது.

இன்றைய வங்கிமுறை வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தவர்கள் கிழக்கிந்திய நிறுவனத்தினராவார்கள். கிழக்கிந்திய நிறுவனத்தின் வாணிப நடவடிக்கைகள் பெருகியபொழுது, வங்கிகளின் தேவையை உணர்ந்தனர். மேற்கத்திய அமைப்பு

முறையை ஒட்டிக் கிழக்கிந்திய நிறுவனம் 1683-ல் முதல் வங்கியைச் சென்னையில் தொடங்கிற்று. 1809-ல் அரசின் உதவியோடு கல்கத்தா வங்கி நிறுவப்பெற்றது. கல்கத்தா, பம்பாய், சென்னையிலிருந்த மாநில வங்கிகளை இணைத்து 1921-ல் இந்தியாவின் இம்பீரியல் வங்கியை (Imperial Bank of India) உருவாக்கினர். 1935-ல் இந்தியாவின் மைய வங்கியான ரிசர்வ் வங்கி உருவாக்கப் பெற்றது. இதற்கிடையில் நாட்டில் ஏற்பட்ட தொழில் வாணிப வளர்ச்சியை ஒட்டிப் பல தனியார் வங்கிகள் தோன்றின. அரசு, வங்கிகளின் பணிகளை முறைப் படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1949-ல் ரிசர்வ் வங்கியையும் 1955-ல் இம்பீரியல் வங்கியையும் நாட்டுடைமை யாக்கினர். 1969 ஜூலை 19-ல் இந்தியாவிலுள்ள 14 பெரிய வங்கிகளை நாட்டுடைமையாக்கியது வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சியாகும்.

## முக்கியத்துவம்

பொருளாதார நடவடிக்கைகளின் தேவையை ஒட்டித் தோன்றிய வங்கிகளின் பொருளாதார முக்கியத்துவம் வளர்ந்து வருகின்றது. சமுதாயத்தின் சேமிப்பை வளர்க்கின்ற, சிதறிக் கிடக்கின்ற சேமிப்புகளை ஒன்று திரட்டுகின்ற பணியை வங்கிகள் மேற்கொள்ளுகின்றன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இது இன்றியமையாத பணியாகும். முதலின் திரட்சியின்றிப் பொருளாதார வளர்ச்சியைப் பெற இயலாது. இந்தப் பணியின் முக்கியத்துவம் வளர்ச்சிபெற்ற நாடுகளைவிட வளர்கின்ற நாடுகளிலேயே மிகுதியாக உணரப்படுகின்றது. வளர்கின்ற நாடுகளில் வருவாய் குறைவாக இருப்பதால் 'நுகர்வு விருப்பம்' (Propensity to consume) மிகுதியாகவும், 'சேமிப்பு விருப்பம்' (Propensity to save) குறைவாகவும் இருக்கின்றது. ஆதலால், மக்களைச் சேமிக்கத் தூண்டுகின்ற பணியை வங்கிகள் மிகவும் திறமையாகச் செய்தால்தான் ஓரளவாவது வெற்றி கிடைக்கும்.

வங்கிகள் வைப்புகளைப் பெறுவதைப் போன்றே, அவை கடன் தருவதும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பணியாக இருக்கின்றது. தொழில், வாணிபத் திறமையுள்ளவர்கள் முதலீட்டு வாய்ப்பு இன்மையால் முடங்கிக் கிடக்க நேரலாம். வங்கிகள் சரியான ஆள்களுக்குத் தக்க அளவில் கடன் கொடுக்கின்றபொழுது புதிய தொழில்கள் மலர்ச்சி பெறுவதைக் காணலாம். வங்கிகள் இயங்குகின்ற

முறையால், தாங்கள் வைப்புகளாகப் பெற்றுக்கொண்டதை விட மிகுதியாகவே கடன் தருகின்றன. இதனைப் 'பண உற்பத்தி' என்றும் கூறுவதுண்டு இந்த ஆற்றலின் காரண மாகத்தான் வங்கிகளின் பணியில் சமுதாயத்தின் ஈடுபாடு அதிகரிக்கின்றது.

வங்கிகள், தாங்கள் கொடுக்கின்ற கடன்களின் மூலம் நாட்டிலுள்ள மொத்த விலைவுள்ள வாங்கும் ஆற்றலைப் (Effective Purchasing Power) பெருக்குகின்றது. இதனால் பொருள்களுக்கான தேவை கூடுவதையும், பின்னர் அதனை ஒட்டிப் பொருளாதார நடவடிக்கைகள் விரிவாக்கம் பெறு வதையும் காணலாம். நாட்டிலுள்ள இயற்கை வளங்களையும், மனித ஆற்றலையும் சிறந்த முறையில் பயன்படுத்த வங்கிகளின் பணிகள் துணை செய்கின்றன.

எப்பொழுதும் மக்கள் சிறிதளவு பணத்தைத் தங்களுடைய கைகளில் வைத்திருக்கின்றனர். இதனை 'நீர்மை விருப்பம்' (Liquidity preference) என்கிறோம். வங்கிகள் இருப்பதால் மக்கள் தங்கள் கையில் ரொக்கம் வைத்துக்கொள்ள வேண்டிய தேவைகள் குறைந்துள்ளன. இதனால் பணம் எங்கும் முடங்கித் தேங்கி நிற்காமல் நாட்டின் பொருளாதார வளர்ச் சிக்குப் பயன்படுவதைக் காண்கிறோம்.

நமது நாட்டில் வங்கிகளின் முக்கியத்துவம் மிகுதியாக உணரப்படுகின்றது. நமது நாட்டில் இப்பொழுது சிக்கல் நிறைந்த புதிர் போன்ற பொருளாதாரச் சூழ்நிலை தோன்றி யிருக்கின்றது. ஒரு பக்கம் நமக்கு மிகவும் வேண்டிய உணவு, உடை முதலிய அத்தியாவசியமான பொருள்கள் பற்றாக் குறையாக இருக்கின்றன. அதே நேரத்தில் உற்பத்தி செய்த பொருள்களை 'விலைவுள்ள தேவை' (Effective demand) இல்லாத காரணத்தால் விற்க முடியவில்லை. இத்தகைய 'பின்னிறக்கத்திற்குப்' (Recession) பல காரணங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமான காரணங்களாக மிகுதியான பற்றாக் குறை நிதியாக்கம், உயர்ந்த வரி, பற்றாக்குறையான முதலாக்கம் ஆகியவற்றைக் கூறலாம்.

இந் நிலையில் வங்கிகள் நாட்டில் இருக்கின்ற சேமிப்புகளை எல்லாம் ஒன்றுதிரட்டி, மொத்தச் சேமிப்பையும் ஆக்கப் பணி களில் ஈடுபடுத்த ஆவன செய்யவேண்டும். சேமிப்புகளைத் திரட்ட வங்கிமுறைப் பழக்கத்தை மக்களிடம் ஏற்படுத்தத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தேவையாகும். நாட்டின்

வளர்ச்சிக்குத் துணை செய்கின்ற ஆக்கப் பணிகளுக்கு முதலிடம் அளித்துக் கடன் கொடுக்கவேண்டும்.

நாட்டின் வாழ்வோடும் வளத்தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்ற வங்கிகளின் அமைப்புமுறைகள், பணிகள் ஆகியவற்றைப்பற்றி விரிவாக ஆராயலாம்.

## துணை நூல்கள்


1. R. S. Sayers, 'Modern Banking'.
2. Walter Leaf, 'Banking'.
3. Horace White, 'Money and Banking'.
4. Crowther, 'An Outline of Money'.
5. George W. Southgate, 'English Economic History'.
6. I. T. A. Vaswani, 'Indian Banking System'.

# 2. வங்கிகளின் வகைகள்

வங்கிகளின் அமைப்புகளையும், அவற்றின் பணிகளையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்துகொள்ள, வங்கிகளை அவற்றின் பணிகளின் அடிப்படையில் வகைப்படுத்தலாம். ஆனால், வங்கிகளை வகைப்படுத்துவதில் சில சிக்கல்கள் அமைகின்றன. எல்லா நாடுகளிலும் வங்கிகள் ஒரே வகையான பணிகளைச் செய்வதில்லை. வங்கிகளின் பணிகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. சில நாடுகளில் ஒரே நிறுவனம் பல்வேறு வகையான பணிகளைச் செய்வதைக் காண்கின்றோம். ஆதலால், வங்கிகளைத் துல்லியமான முறையில் தெளிவாக வகைப்படுத்த இயலாது. இருந்தாலும், வங்கிகளை நன்கு அறிந்துகொள்ள அவற்றிற்கிடையில் இருக்கின்ற வேறுபாடுகளையும் தனி இயல்புகளையும் தெரிந்துகொள்ளுதல் மிகவும் இன்றியமையாதது.

### வணிக வங்கிகள்
### (Commercial Banks)

இவை பொதுமக்களிடமிருந்து வைப்புநிதிகளைப் பெறுகின்றன. எப்பொழுதெல்லாம் வைப்புநிதியாளர்கள் பணம் கேட்கின்றார்களோ அப்பொழுதெல்லாம் இவை பணம் தரும். இதற்குக் 'காசோலைகள்' (Cheques) பயன்படுத்தப்பெறும். காசோலைகளைப் பணம்போலக் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்துகின்றனர்.

வணிக வங்கிகள், தாங்கள் பெற்றுக்கொண்ட வாடிக்கையாளர்களின் சேமிப்புகளைத் தொழில், வாணிபம் ஆகியவற்றில் ஈடுபட்டவர்களுக்குக் கடன் கொடுக்கின்றன.

தொழில், வாணிபக் கடன் தேவைகள் இரு வகைகளாக அமைகின்றன. ஒன்று, குறுகிய காலக் கடன் தேவைகள் (Short-term needs). மற்றொன்று, நீண்ட காலக் கடன் தேவைகள் (Long-term needs) பொதுவாக வணிக வங்கிகள் குறுகிய காலக் கடன்கள் தருகின்றன. வணிக வங்கிகளின் தொன்மையான கோட்பாட்டின்படி அவை நீண்ட காலக்

கடன்கள் கொடுக்கக் கூடாதெனக் கருதப்பட்டது. ஆனால், மாறிவருகின்ற பொருளாதாரச் சூழ்நிலைகளில், நாட்டின் தேவை கருதி, இப்பொழுது இந்தக் கோட்பாட்டைக் கைவிட்டிருக்கின்றனர். குறிப்பாக, வேளாண்மைக்குத் துணை செய்வதையும் வணிக வங்கிகளின் கடமைகளில் ஒன்றாகக் கருதுகின்றனர். வேளாண்மை வங்கிகளுக்கு நீண்டகாலக் (Long-term) கடன்கள் தேவைப்படுகின்றன. வணிக வங்கிகள் இப்பொழுது இடைக்காலக் கடன்களும் கொடுக்கின்றன. அரசின் கடன்பத்திரங்களில் முதலீடு செய்கின்ற போக்கும் காணப்படுகின்றது.

ஒரு காலத்தில் தொழில், வாணிப நிறுவனங்களுக்கு நடைமுறை முதல் (Working capital) மட்டும் வழங்கிக் கொண்டிருந்த வணிக வங்கிகள், இப்பொழுது நிலைமுதலும் (Fixed capital) வழங்குகின்றன. இலாப நோக்கில் இயங்கு கின்ற வணிக வங்கிகளின் பணிகள் விரிவாக்கம் பெறுவது இயல் பான ஒன்றேயாகும்.

## தொழில் வங்கிகள்
(Industrial Banks)

தொழில் நிறுவனங்களுக்கு வேண்டிய நிலைமுதலை நீண்ட காலக் கடனாகக் கொடுக்கின்ற பணியைத் தொழில் வங்கிகள் அல்லது முதலீட்டு வங்கிகள் (Investment Banks) மேற்கொள் கின்றன. பெரிய தொழில், வாணிப நிறுவனங்களுக்கு இயந்திரங்கள், கருவிகள் வாங்கல், கட்டடம் கட்டல் முதலான பணிகளுக்கு 'நிரந்தரமான முதலீடாக' (Permanent investment) அமையத்தக்க நீண்ட காலக் கடன் தேவைப்படுகிறது. புதிய நிறுவனங்களுக்குத் தொழிலைத் தொடங்குகின்றபொழுது இத்தகைய கடன் தேவையாக இருக்கின்றது. பழைய நிறுவனங்கள் தங்களுடைய தொழிலை விரிவடையச் செய்கின்ற பொழுது இத்தகைய கடன்களைப் பெற முயல்கின்றன. பெரும்பாலான நாடுகளில் தொழில், வாணிப நிறுவனங் களுக்குத் தேவையான நீண்ட காலக் கடன்களைத் தொழில் வங்கிகளும், நடைமுறை முதலாகப் பயன்படக்கூடிய குறுகிய காலக் கடன்களை வணிக வங்கிகளும் வழங்குகின்றன.

## வேளாண்மை வங்கிகள்
(Agricultural Banks)

உழவர்களுக்கு மூன்று வகையான கடன்கள் தேவைப் படுகின்றன. முதலாவதாக, வேளாண்மைத் தொழிலுக்கு

வேண்டிய விதை, உரம் முதலிய பொருள்களை வாங்க, களை எடுத்தல், நீர் இறைத்தல், கதிர் அறுத்தல் முதலிய பணிகளைச் செய்ய, நிலவரி, குத்தகைப் பணம் முதலியவற்றைச் செலுத்த, கால்நடைகள், குடும்பம் ஆகியவற்றிற்கு அன்றாடம் செலவிடக் குறுகிய காலக் கடன் தேவைப்படுகின்றது. இத்தகைய கடன்கள் தேவைப்படுகின்ற பொழுதெல்லாம் கொடுக்கின்ற நிறுவனங்கள் தேவையாக இருக்கின்றன.

இரண்டாவதாக, திருந்திய வேளாண்மைக் கருவிகளை வாங்கல், கால்நடைகள் வாங்கல், வேலியடைத்தல் முதலிய பணிகளை மேற்கொள்ள இடைக்காலக் கடன் (Intermediate credit) தேவைப்படுகின்றது. இத்தகைய கடன்கள் ஓராண்டு முதல் மூன்று ஆண்டு காலத்திற்குக் கிடைத்தால் உழவர் களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

மூன்றாவதாக, நிலத்தில் கிணறு வெட்டுதல், நிலம் வாங்குதல், நீர் இறைக்கும் குழாய்களை அமைத்தல் முதலிய முதலீடுகளுக்கு நீண்ட காலக் கடன் தேவையாக இருக்கின்றது. நீண்டகாலக் கடன் போதுமான அளவிலும், முதலீட்டிலிருந்து கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு வசதியான தவணைகளில் கட்டக்கூடிய முறையிலும் இருக்கவேண்டும்.

வேளாண்மைக்கு வேண்டிய கடன்களை வழங்க வணிக வங்கிகள் முன்வருவதில்லை. இதற்குப் பல முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக, வேளாண்மை ஓர் உறுதியற்ற, சிக்கல்கள் நிறைந்த தொழிலாகும். 'பருவ மழையில் சூதாட்டமாக' அமைகின்ற வேளாண்மையின் விளைச்சலை நம்பி மிகுதியாகக் கடன் கொடுக்க முடியாது. இரண்டாவதாக, விளைச்சல் உறுதியற்றதாக இருந்த போதிலும், வேளாண்மைப் பணிகளுக்கு வேண்டிய கடனின் அளவு பெரும்பாலும் மாறாமலிருக்கின்றது. மாறுகின்ற விளைச்சலை நம்பி, மாறாத அளவில் கடன் கொடுப்பதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. மூன்றாவதாக, பெரும்பாலும் வேளாண்மை அலகுகள் (units) சிறியனவாக உள்ளன. தனி மனிதர்கள் அவற்றை நடத்துகின்றனர். ஆதலால், அவர் களுடைய சொந்தப் பொறுப்பில் சிறிதளவே கடன் கொடுக்க முடிகின்றது. நான்காவதாக, உழவர்கள் எந்த வகையான அமைப்புக்குள்ளும் வருவதில்லை. பரவலாகச் சிதறிய நிலையி லுள்ள எண்ணற்ற சிறிய உழவர்களுக்குக் கடன் கொடுக்கும் முறையில் வணிக வங்கிகளின் அமைப்பு இல்லை. ஐந்தாவதாக உழவர்கள் நிலத்தை மட்டும்தான் ஈடாகக் கொடுக்கும்

நிலையில் உள்ளனர். வணிக வங்கிகளின் நோக்கில் நிலத்தின் மீது கடன் கொடுப்பதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. ஆறாவதாக, விலைகள் அடிக்கடி மாறுவதால், உழவர்களின் வருவாயில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய நிலையற்ற வருவாயை நம்பிக் கடன் கொடுக்க வணிக வங்கிகள் விரும்புவதில்லை.

ஆகையால், வணிக வங்கிகளுக்குத் தேவையான கடன்களைக் கொடுக்கத் தனிவகையான வங்கிகள் தேவைப்படுகின்றன. ஸ்காண்டிநேவியன் நாடுகளில் கூட்டுறவு வங்கிகள் வேளாண்மைக்கு வேண்டிய கடன்களைத் தருகின்றன. இங்கிலாந்தில் நன்கு வளர்ச்சி பெற்றிருக்கின்ற கூட்டுப் பங்கு வங்கிகள் (Joint-stock Banks) நாட்டுப்புறங்களில் அமைந்திருக்கும் தங்களுடைய கிளைகளின் மூலமாக வேளாண்மைக் கடன்களை வழங்குகின்றன. நமது நாட்டில், இன்றுவரை வேளாண்மைக் கடன்களை வழங்குவதில் தனியாரும், லேவா தேவிக்காரர்களுமே பெரும் பங்கு பெறுகின்றனர். அரசு பல வழிகளிலும் வேளாண்மைக் கடன் வழங்கும் சிக்கல்களைத் தீர்க்க முயல்கின்றது. குறுகிய, இடைக்காலக் கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு வங்கிகளும் வழங்கும் வகையில் கூட்டுறவு நிறுவனங்களை நாடெங்கும் நிறுவ முயல்கின்றனர். நிலவள வங்கிகள் (Land-mortgage Banks) நீண்டகாலக் கடனை வழங்குகின்றன. ஸ்டேட் வங்கியும் (State Bank) இப்போது அரசுடைமையாக்கப் பெற்ற 20 வங்கிகளும் அரசு தருகின்ற உறுதிப்பாட்டின்மீது கடன் தருகின்றன.

## சேமிப்பு வங்கிகள்
## (Savings Banks)

சமுதாயத்திலுள்ள குறைந்த வருவாய் பெறுகின்ற மக்களிடம் சேமிப்பு உணர்வை வளர்த்து, அவர்களிடமுள்ள சிறுசேமிப்புகளை ஒன்றுதிரட்டி, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்பதே சேமிப்பு வங்கிகளின் நோக்கமாகும். மக்களிடம் சிக்கன உணர்வை வளர்க்க இது ஏற்ற முறையாகும். சிறிய அளவுச் சேமிப்பைக் கூட நாட்டின் ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்தத்தக்க வழிமுறையாகச் சேமிப்பு வங்கிகள் இருக்கின்றன.

சேமிப்பு வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புகளைப் பெறுகின்றன. மக்கள் சேமிப்புக் கணக்கிலிருந்து குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட திரும்பப்பெறல்தாம் இருக்க வேண்டும்.

இவை தங்களிடமுள்ள வைப்புகளுக்குச் சிறிய அளவில் வட்டி கொடுக்கின்றன. இதனால் மக்களுக்கு அவர்களுடைய சேமிப்புகளை வங்கியில் போட்டு வைக்கத் தூண்டுதல் கிடைக்கின்றது.

உலகத்தில் ஜப்பான் நாடுதான் சேமிப்பில் முதலிடம் பெறுகின்றது. முதன்முதலில் 1765-ல் ஹாம்பர்க்கில் (Hamburg) சேமிப்பு வங்கியை நிறுவினார்கள். இப்பொழுது உலகில் எல்லா நாடுகளும் ஏதாவது ஒரு முறையைப் பின்பற்றிச் சேமிப்பைச் சேர்க்க முயல்கின்றன. நமது நாட்டில் அஞ்சலகங் களும் வணிக வங்கிகளும் சேமிப்பு வங்கிகளின் பணியை மேற்கொள்கின்றன.

## வெளிநாட்டுச் செலாவணி வங்கிகள்
(Foreign Exchange Banks)

வெளிநாட்டு வாணிபத்திற்கு உதவுகின்ற வகையில் வெளி நாட்டுச் செலாவணி கிடைக்க, வெளிநாட்டு மாற்று உண்டியல் களுக்குப் பணம் பெறத் தேவையானவற்றைச் செய்கின்ற வங்கிகள் இருக்கின்றன. சில நாடுகளில் வணிக வங்கிகளே இத்தகைய பணிகளையும் செய்கின்றன. நமது நாட்டில் அயல் நாட்டுச் செலாவணித் தொடர்பான பணிகளில் ஈடுபடத் தனி வங்கிகள் உள்ளன. இவற்றின் தலைமை நிலையங்கள் வெளி நாடுகளில் உள்ளன.

## நாட்டுப்புற வங்கியாளர்கள்
(Indigenous Bankers)

சிறந்த கட்டுக்கோப்பான அமைப்பிற்குள் வராத தனி வகையான வங்கியாளர்கள் இருக்கின்றனர். இவர்கள் வங்கி களின் பணிகளில் ஒன்றான கடன் கொடுப்பதை மட்டும் மேற்கொள்கின்றனர். நமது நாட்டில் இத்தகைய வங்கியர்கள் மிகுதியாகக் காணப்படுகின்றனர். இவர்களுக்கு ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு பெயர் வழங்கப் பெறுகின்றது.

## மைய வங்கி
(Central Bank)

வணிக வங்கிகள் வளர்ச்சியடைந்தபொழுது, தேவையை ஒட்டி மைய வங்கி தோற்றுவிக்கப் பெற்றது. வணிக வங்கி களின் வகையைச் சேர்ந்ததாக இருந்தபோதிலும் வங்கிகளின் தலைமை வங்கியாக மைய வங்கி திகழ்கின்றது. விலையில்

நிலையான போக்கை ஏற்படுத்தும் வகையில் நாட்டின் கடன் அளவை, பண அளவைக் கட்டுப்படுத்துகின்ற பணியை மைய வங்கி மேற்கொள்கின்றது. வணிக வங்கிகளை மேற்பார்த்து, அவற்றின் பணிகளை நெறிப்படுத்துவதாக மைய வங்கி இருப்பதால், இதனை 'வங்கிகளின் வங்கி' என்றும் கூறுவதுண்டு. மைய வங்கி இலாப நோக்கமின்றி நாட்டின் பொருளாதார நலனைப் பேணிக் காக்கும் வகையிலேயே செயல்படுகின்றது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ப் பெரும்பாலான நாடுகளில் மைய வங்கிகளை நாட்டுடைமையாக்கியுள்ளனர்.

## பன்னாட்டு வங்கிகள்
## (International Banks)

உலக நாடுகளுக்கிடையில் ஏற்படுகின்ற பணத் தொடர்பான நடவடிக்கைகளைக் கவனிக்கத் தனிவகையான வங்கிகள் தேவைப்படுகின்றன. இதுவரை உலகில் மூன்று வகையான உலக வங்கிகள் தோன்றியுள்ளன.

முதலாம் உலகப்போர் முடிந்த பின்னர், ஜெர்மனியின் இழப்பீட்டுப் (German Reparation) பணிகளைக் கவனிக்கவும், முதல் உலகப்போரின் காரணமாக ஏற்பட்ட கடன்களைத் தீர்ப்பதற்குத் துணைசெய்யவும், 1930-ல் பன்னாட்டுத் தீர்வுகளின் வங்கி (The Bank of International Settlements) ஒன்று நிறுவப்பெற்றது. இஃது இப்பொழுது மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குத் தீர்வக வங்கியாகப் பணி செய்கின்றது.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் உலக நாடுகளின் வளர்ச்சியைக் கவனிக்கவும், பணத் தொடர்புகளை நெறிப்படுத்தவும் இரட்டை நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பெற்றன. முதலாவது, உலக வங்கி (World Bank) என்று அழைக்கப் பெறுகின்ற பன்னாட்டுப் புனரமைப்பு வளர்ச்சி வங்கி (International Bank for Reconstruction and Development). இரண்டாவது, பன்னாட்டுப் பண நிதி (International Monetary Fund). இவை இரண்டும் பன்னாட்டு நிதித் தொடர்புகளிலுள்ள சிக்கல்களை ஓரளவு தீர்க்க முயல்கின்றன.

# 3. வணிக வங்கியின் பணிகள்

## வங்கி — ஒரு விளக்கம்

வங்கியைப்பற்றிப் பல்வேறு பொருளியலறிஞர்களும் விளக்கி உள்ளனர். எத்தனையோ வங்கிகளைப் பற்றிய விளக்கங்கள் இருந்த போதிலும், அவற்றில் ஒன்றைக்கூட முழுமையானதாக ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனென்றால், வங்கிகள் பலவகையான பணிகளைச் செய்கின்றன. வங்கிகளின் பணிகள் காலப்போக்கில் மாறியும் விரிவடைந்தும் வருகின்றன. ஒவ்வொரு பொருளியலறிஞரும் தமது கண்ணோட்டத்தின்படி ஏதாவதொரு பணியின் முக்கியத்துவத்தையே மிகவும் வலியுறுத்திக் கூறியிருக்கின்றார். இருந்தாலும், வங்கிகளுக்குத் தருகின்ற இலக்கணங்களை அறிவதன்மூலம் வங்கிகளின் இயல்பை ஓரளவு அறிந்துகொள்ளலாம்.

வால்டர் லீப் (Walter Leaf), வங்கியை, 'காசோலை மூலம் கேட்கின்றபொழுது செலுத்தவேண்டிய வைப்புகளைப் பொது மக்களிடமிருந்து பெறுவதற்காக இருக்கின்ற ஒரு மனிதர் அல்லது நிறுவனம்' என்று விளக்குகின்றார். இந்த விளக்கம் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலுள்ள வங்கிகளுக்குப் பொருத்தமானதாக இருக்கும். அங்கெல்லாம் காசோலைகள் மிகுதியாகப் பயன்படுத்தப் பெறுகின்றன. ஆனால், நமது நாட்டைப் போன்ற பின்தங்கிய நாடுகளில் காசோலை இன்னும் மிகுதியாகப் புழக்கத்திற்கு வாராதது கவனிக்கத்தக்கதாகும்.

ஹோரேஸ் ஒயிட் (Horace White), வங்கியை, 'ஒரு கடன் உற்பத்தியாளர்; மாற்றுகளுக்கு வழிவகுக்கின்ற ஒரு முறை' என்று கூறுகின்றார்.

டாக்டர் ஹெர்பெர்ட் எல். ஹார்ட் (Dr. Herbert L. Hart), 'வங்கியாளர் என்பவர் அவருடைய சாதாரண வாணிப நடவடிக்கையின் போக்கில், மக்களிடமிருந்து அவர்களுக்காக நடப்புக் கணக்குகளில் (Current Accounts) பணத்தைப் பெற்று அவர்கள் அவர்மீது எழுதும் காசோலைகளுக்குப் பணமளிக்

கின்றார்' என்று குறிப்பிடுகின்றார். இந்த விளக்கம், வங்கிகளின் பல பணிகளுள், வைப்புகளைப் பெற்றுத் திருப்பித்தரும் ஒரு பணியை மட்டும் வலியுறுத்திக் கூறுகின்றது. ஆதலால், இதனை முழுமையான விளக்கம் என்று ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

*(1) வைப்புக் கணக்குகளைப் பெறுதல்; (2) நடப்புக் கணக்குகளை வைத்தல்; (3) காசோலைகளைக் கொடுத்தல், செலுத்தல்; (4) வாடிக்கைக்காரர்களுக்காகக் கோடிட்ட (Crossed), கோடிடாத காசோலைகளுக்குப் பணம் வசூலித்தல் ஆகியவற்றைச் செய்யாத ஆளோ, நிறுவனமோ, மற்றவையோ வங்கியாளராக முடியாதென்பது சரியான உய்த்துணர்தலாகும்'* என்று சர் ஜான் பேஜட் (Sir John Paget) கூறுகின்றார். இந்த விளக்கத்தில் வங்கியின் முக்கியப் பணிகளெல்லாம் அடங்கியுள்ளன. இருந்தாலும், இந்த விளக்கத்தில் துணைப் பணிகள் விடுபட்டிருப்பதைச் சுட்டிக்காட்டலாம்.

'எந்த நிறுவனத்தின் கடன்களை ஏனையோர் தமக்கிடையே நேரும் கடன் பேரங்களைத் தீர்ப்பதற்குத் தயக்கமின்றி ஏற்றுக் கொள்கின்றனரோ, அந்த நிறுவனமே வங்கி ஆகும்' என்றும், 'பணத்தில் வாணிபம் செய்வது ஒன்றே வங்கிகளின் தொழில் அன்று; வங்கிகள் பணத்தை உற்பத்தி செய்யும் நிறுவனங்களாகவும் திகழ்கின்றன' என்று ஆர். எஸ். செயர்ஸ் (R. S. Sayers) குறிப்பிடுகின்றார்.

'வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம்' (Banking Regulation Act) வங்கித் தொழிலை, 'பொதுமக்களிடமிருந்து வைப்புகளைக் கடன் கொடுப்பதற்காகவும் அல்லது முதலீடு செய்வதற்காகவும் ஏற்றுக்கொள்ளுதலும், காசோலை, உண்டியல் (Draft) ஆணை அல்லது வேறுவழி மூலமோ எடுக்கக்கூடியதாகவும், கேட்ட உடனேயோ வேறு வகையிலோ திருப்பித்தரக் கூடியதாகவும் இருத்தலும் ஆகும்' என்று விளக்குகின்றது.

## அடிப்படைக் கொள்கைகள்

வணிக வங்கிகள் சில முக்கியமான கொள்கைகளின் அடிப்படையில் இயங்குகின்றன. அவற்றைத் தொகுத்துக் கூறலாம்.

முதலாவதாக, வணிக வங்கிகள் பொதுவாகக் குறுகிய காலக் கடன் கொடுப்பதே சிறந்ததாகும். பெரிய தொழில் வாணிப நிறுவனங்களுக்கு நீண்டகாலக் கடன் கொடுப்பதைத்

தவிர்க்க வேண்டும். வங்கிகளிடமுள்ள வைப்புத் தொகை எங்காவது சென்று முடங்கிவிட்டால், வங்கிகளால் தமது அன்றாடப் பணிகளைத் திறமையாகச் செய்ய முடியாது. கூடியவரை கொடுக்கின்ற கடன்கள் 'நீர்மைத் தன்மை' (liquidity) உடையனவாக இருக்கின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். அதாவது, விரைவாகச் சிக்கலின்றித் திரும்பப் பெறக்கூடிய கடன்களையே பெரும்பாலும் வழங்குதல் நல்லது.

இரண்டாவதாக, கொடுக்கின்ற கடன்கள் நல்ல பாதுகாப்பு உள்ளவைகளாக இருக்கவேண்டும். கூடியவரை தக்க ஈட்டின் மீது கடன் தருதலே சிறந்ததாகும். சிலருக்கு மிகப் பெருந் தொகையாகக் கடன் கொடுப்பதைவிடப் பலருக்குச் சிறுசிறு தொகைகளாகக் கொடுப்பது நல்லது. ஏனென்றால், பலருக்குக் கடன் கொடுக்கின்றபொழுது வாணிப இடர்ப்பாடுகள் (risks) பரவலாக்கப்படும்.

மூன்றாவதாக, வணிக வங்கிகளின் வெற்றி, அவை கையிருப்பாக எவ்வளவு பணம் ஒதுக்கி (Reserves) வைத்திருக்கின்ற தென்பதை ஒட்டியதாகும். கூடியவரை வாடிக்கையாளர்களின் தேவைக்குச் சமமாக ரொக்கப் பணத்தை ஒதுக்கிவைப்பதில் தான், வணிக வங்கிகளின் நிருவாக வெற்றி இருக்கின்றது. தேவைக்குக் குறைவாகப் பணம் வைத்திருந்தால், அது நெருக்கடியான சூழ்நிலை தோன்றக் காரணமாகிவிடும். தேவைக்கு மேல் பணத்தைக் கையில் வைத்திருந்தால், எச்சப் பணத்திலிருந்து வருகின்ற வருவாய் கெட்டுவிடும். ஆனால், ஒதுக்கீடாக எவ்வளவு பணம் வைத்திருக்க வேண்டுமென்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியாது. நிருவாகிகள் தங்களுடைய பட்டறிவின் அடிப்படையில்தான் இதனை முடிவுசெய்ய வேண்டும்.

நான்காவதாக, வங்கிகளுக்கு எப்படித் தங்களுடைய நிதியைப் பயன்படுத்தி உச்சநிலையில் இலாபம் பெறுவதென்பது தெரியவேண்டும். ஆனால், இலாப நோக்கில் தேவையான அளவு 'நீர்மைத் தன்மை' காக்கப்பெறுகின்றதா வென்பதைக் கவனிக்கவேண்டும். எப்பொழுது கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும் என்பதை அறிந்து, உடனே அதனைப் பயன்படுத்தத் தக்க நடவடிக்கைகள் எடுப்பது தேவையாகும்.

ஐந்தாவதாக, ஐயப்பாடான பிணையின்மீது (Security) கடன் கொடுக்கக்கூடாது. அப்படிப்பட்ட கடனால் சட்டத் தொடர்பான சிக்கல்கள் எழலாம். கடனைத் திரும்பப்

பெறுவதில் மிகுந்த காலதாமதம் ஆகும். இதனால் வருவாயின்றியே வங்கியின் மூலதனத்தில் ஒரு பகுதி முடங்கு கின்ற நிலை ஏற்படலாம்.

## பணிகள்

ஒரு நாட்டின் தொழில், வாணிப வளர்ச்சி நிலைக்கேற்ப வணிக வங்கிகள் பல வகையான பணிகளை மேற்கொள்கின்றன. பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகளில் வங்கிகள் எண்ணற்ற பணிகளைப் புரிகின்றன. வளர்ச்சி பெறுகின்ற நாடுகளில் வங்கிகளின் பணிகளும் விரிவாக்கம் பெறுகின்றன. தொன்மைப் பொருளியலறிஞர்கள் வங்கிகள் சில வகையான பணிகளை மட்டும்தான் மேற்கொள்வது சிறந்ததெனக் கருதினர். காலப் போக்கில், வங்கிகள் அமைத்திருந்த சூழ்நிலையையும், நாட்டின் பொருளாதாரத் தேவையையும் ஒட்டிப் பழைய மரபுவழிப் பணிகளோடுகூடச் சில புதிய பணிகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

வணிக வங்கிகள் பணியாற்றுகின்ற முறையிலும், மேற் கொள்கின்ற பணிகளிலும் நாட்டிற்கு நாடு சிறிய அளவில் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், பொதுவான பணிகள் ஏறத்தாழ ஒன்றுபோல இருக்கின்றன. வணிக வங்கிகளின் பணிகளில் முக்கியமானவற்றைத் தொகுத்துக் கூறலாம்.

**இருவகை:** வங்கிகளின் பணிகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, முதன்மைப் (Primary or Main) பணிகள். மற்றொருவகை, துணைப் (Subsidiary) பணிகள். பெரும் பாலும் எல்லா நாடுகளிலுமுள்ள வங்கிகள் முதன்மைப் பணிகளைச் செய்கின்றன. துணைப்பணிகளைச் செய்வதில் தான் வேறுபாடுகள் உள்ளன. மேலும், ஒவ்வொரு பணியையும் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள வங்கிகள் மேற்கொள்வதில் நடைமுறை வேறுபாடுகள் இருக்கலாம்.

## முதன்மைப் பணிகள்

வணிக வங்கிகள், அவற்றின் முதன்மையான பணிகளின் மூலம் தொழில், வாணிப வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்கின்றன. முதன்மைப் பணிகளில் பின்வருபவை மிகவும் முக்கியமானவைகளாகும்.

முதலாவதாக, வணிக வங்கிகள் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெறுகின்றன. மக்களிடமுள்ள சேமிப்புகள் அவர்களிடம் ரொக்கமாக இருந்தால், அவற்றால் அவர்களுக்கு வருவாய் கிடைப்பதில்லை. வங்கிகளிடம் கொடுத்து வைக்கின்ற பொழுது வட்டி கிடைக்கின்றது. மக்களிடமிருந்து வைப்புகளைப் பெறுவது வங்கிகள் கடன் பெறுவதைப் போன்றதாகும். மற்ற வாடிக்கைக்காரர்கள் கடன் பெறுவதற்கும் வங்கிகள் கடன் பெறுவதற்கும் வேறுபாடு உண்டு. வாடிக்கையாளர்கள் நுகர்வுக்காகவோ, முதலீட்டிற்காகவோ கடன் பெறுவார்கள். வங்கிகளோ மறுபடியும் கடன் கொடுப்பதற்காகக் கடன் பெறுகின்றன. வங்கிகளிடம் கொடுத்து வைக்கின்ற பணம் பாதுகாப்பாகவும், ரொக்கத்தன்மையுடையதாகவும் (கேட்கின்றபொழுது கிடைக்கக்கூடியதாகவும்), வருவாய் தரத்தக்கதாகவும் இருப்பதால் வங்கிகளைத் தேடிச்சென்று வாடிக்கையாளர்கள் தங்களுடைய சேமிப்புகளைப் போட்டு வைக்க விரும்புகின்றனர்.

வங்கிகள் வைப்புக் கணக்குகளைப் பல வகையான முறைகளில் பெறுகின்றன. பொதுமக்கள் தங்களுக்குரிய வாய்ப்புகளுக்கேற்ப வைப்புக்கணக்கை வைத்துக்கொள்ளலாம்.

(அ) தேவை ஏற்படுகின்ற போதெல்லாம் பணத்தை எடுத்துக்கொள்கின்ற வகையில் கணக்கு வைத்துக்கொள்வதை **நடப்புக் கணக்கு** (Current Account) அல்லது **தேவை வைப்பு** (Demand Deposit) என்கின்றோம். வாடிக்கையாளர்கள் எப்பொழுதெல்லாம் தேவை ஏற்படுகின்றதோ, அப்பொழுதெல்லாம் காசோலைகளின் (Cheques) மூலம் பணத்தைப் பெறலாம். மற்றவர்களுக்குத் தரவேண்டிய பணத்திற்குக் காசோலைகளைத் தரலாம். காசோலைகள் பணம்போலப் பயன்படக் கூடியனவாகும். நடப்பு வைப்பிலுள்ள பணத்திற்குப் பொதுவாக வங்கிகள் வட்டி கொடுப்பதில்லை. சில வேளைகளில் இந்த வகைக் கணக்குகள் வைத்திருப்பவர்களிடமிருந்து சிறிய அளவில் கட்டணம் வசூலிப்பதும் உண்டு. இது வணிகர்கள், தொழில்முயல்வோர் ஆகியோருக்கு ஏற்ற முறையாகும்.

நடப்புக் கணக்குகள் இரண்டு வகைகளில் ஏற்படுகின்றன. ஒன்று, வாடிக்கையாளர்கள் தங்களிடமிருக்கும் ரொக்கப் பணத்தை வங்கியில் கட்டி நடப்புக் கணக்கைத் தொடங்கலாம். இதனை 'ரொக்க வைப்பு' (Cash Deposit) என்கின்றனர்.

இரண்டாவதாக, சிலர் வங்கிகளிடம் கடன் பெறலாம். கடன் பணத்தை ரொக்கமாய்ப் பெற்றுக்கொள்ளாமல், தங்களுடைய கணக்கில் வரவு வைத்துக்கொள்ளச் சொல்லலாம். இப்படிப் பட்ட வைப்பைக் 'கடன் வைப்பு' (Credit Deposit) என்கின்றோம்.

இன்றைய வங்கிகளின் நடவடிக்கைகள் நடப்புக் கணக்கைச் சுற்றியே சுழல்கின்றன. தற்காலத்தில் வைப்புக் கணக்குகளின் அளவு கூடியுள்ளது. நடப்புக் கணக்கில் ஒரு தடவையில் இவ்வளவு பணம்தான் எடுக்க வேண்டுமென்றோ, வாரத்தில் இத்தனை தடவைகள்தாம் பணத்தை எடுக்கலாமென்றோ வரையறைகள் இல்லை. இதனால் இந்தக் கணக்கில் போட்டு வைக்கும் பணத்திற்கு ரொக்கத்தன்மை மிகுதியாக இருக்கின்றது. இந்தக் கணக்கிலுள்ள பணத்தைக் கொடுக்க எப்பொழுதும் வங்கிகள் தயாராக இருக்க வேண்டுமாதலால் இதனை வங்கிகள் மிகுதியாகப் பயன்படுத்த முடியாது. இதனால்தான் இந்த வகைக் கணக்குகளுக்குக் குறைந்த வட்டி தரப்படுகின்றது.

(ஆ) சிறிய அளவுகளில் பணத்தைச் சேமிக்கின்றவர்களுக்குத் துணை செய்வதற்காகச் சேமிப்புக் கணக்கை (Savings Account) வங்கிகள் அனுமதிக்கின்றன. இத்தகைய கணக்கில் பணத்தைப் போட்டுவைப்பதைச் 'சேமிப்பு வைப்பு' (Savings Deposit) என்கின்றோம். இந்தக் கணக்கிலும் காசோலைகளின் மூலம் பணத்தை எடுக்கவோ, மற்றவர்களுக்குக் கொடுக்கவோ செய்யலாம். ஆனால், இந்த வகைக் கணக்கு வைத்திருக்கின்றவர்களுக்குச் சில வகையான கட்டுப்பாடுகள் இருக்கின்றன. வாரத்திலோ, மாதத்திலோ இத்தனை தடவைகள், இவ்வளவு பணத்திற்கு மேற்போகாமல் எடுக்க வேண்டும் என்பன போன்ற கட்டுப்பாடுகள் இருக்கும். சேமிப்பு வைப்பில் இருக்கின்ற பணத்திற்கு வங்கி வட்டி தருகின்றது. குறைந்த அளவில் வருவாய் உள்ளவர்களுக்கு ஏற்றதாக இஃது இருக்கின்றது.

(இ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர்ப் பணத்தைத் திரும்பப் பெற ஒப்புக்கொண்டு பணத்தை வங்கியில் போட்டு வைப்பதை நிலைவைப்பு (Fixed Deposit) என்கின்றோம். பணம் போட்டு வைக்கின்ற காலம் மூன்று மாதமாகவோ, ஆறு மாதமாகவோ, ஓராண்டாகவோ, ஐந்து ஆண்டுகளாகவோ வாடிக்கையாளரின் வசதியையும் விருப்பத்தையும் ஒட்டி அமையும். குறிப்பிட்ட காலம் முடிந்த பின்னர்தான்

பணத்தைத் திருப்பித் தருகின்ற பொறுப்பு வங்கிக்கு உண்டு. வைப்பின் கால அளவு அதிகமாக இருந்தால், வட்டி வீதமும் மிகுதியாக இருக்கும். இந்த வகைக் கணக்கில் வருகின்ற பணத்தை வங்கிகள் குறிப்பிட்ட காலம்வரை ஓர் உறுதிப் பாட்டோடு மற்றவர்களுக்குக் கடன் கொடுக்கப் பணத்தைப் பயன்படுத்த முடியும். நிலைவைப்புக் கணக்கு வைத்திருப் பவர்கள் காசோலை மூலம் பணத்தை எடுக்க முடியாது. பணம் தேவையாக இருந்தால் நிலைவைப்பைப் பிணையாகக் (Security) கொண்டு பணத்தை வங்கியிடமிருந்து கடனாகப் பெறலாம். ஆனால், வங்கிகள் தாங்கள் கொடுக்கும் கடனுக்குப் பெறுகின்ற வட்டி, நிலைவைப்புகளுக்குக் கொடுக்கின்ற வட்டியைவிட அதிகமாக இருக்கும். இங்கிலாந்தில் நிலைவைப்பில் இருக்கின்ற பணத்தை 7 முதல் 14 நாள்கள்வரை முன்னறிவிப்புக் கொடுத்து எடுத்துக்கொள்ள வழிவகை செய்துள்ளனர். இத்தகைய வைப்புகளை அவர்கள் 'கால வைப்பு' (Time Deposit) என்கின்றனர்.

(ஈ) மரபு வழியாக நடப்பு வைப்பு, சேமிப்பு வைப்பு, நிலைவைப்பு ஆகிய மூன்று வகை வைப்புகள் இருந்து வருகின்றன. காலப்போக்கில் இவற்றோடுகூட வேறு வகை யான வைப்புகளும் தோன்றியிருக்கின்றன.

வாரந்தோறும், அல்லது மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட அளவு தொகையைச் செலுத்திவர, ஒரு குறிப்பிட்ட காலத் திற்குப் பின்னர்ப் போட்டுவைத்த மொத்தத் தொகையையும், அதற்கான கூட்டு வட்டியையும் பெறுகின்ற வகையில் கணக்கு வைத்துக்கொள்ளலாம். இத்தகைய கணக்கிலுள்ள வைப்பைத் தொடர் (Recurring) அல்லது வளர்வைப்பு (Cumulative) என்று கூறுகின்றோம்.

சிறிது முன்னறிவிப்போடு கேட்கின்றபொழுது மொத்த மாகப் பணத்தைத் திரும்பப் பெறத்தக்க வகையில் வைப்புகளை ஏற்றுக்கொள்கின்ற வங்கிகளும் இருக்கின்றன. இத்தகைய வைப்பை அறிவிப்பு வைப்பு (Deposit at Notice) என்கின்றனர். கேட்டவுடன் கிடைக்கின்ற வகையில் உள்ளதை அழைப்பு வைப்பு (Deposit at Call) என்கின்றோம்.

மாத ஊதியம் பெற்றுக்கொண்டிருக்கின்றவர்கள், இப் பொழுது சிறுகச் சிறுகச் சேமித்து எதிர்காலத்தில் ஓய்வு பெற்ற பிறகு பயன் பெறத்தக்க வைப்புமுறையும் இருக்கின்றது.

ஒருவர் திங்கள்தோறும் தமது வருவாயில் குறிப்பிட்ட ஓர் அளவுத் தொகையை வங்கியில் கட்டிவருதல் வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் வட்டியோடு சேர்த்து, கணக்குப்படி மாதந் தோறும் ஒரு குறிப்பிட்ட அளவு தொகையைப் பெற்றுக் கொண்டு இருக்கலாம். இத்தகைய வைப்பை ஓய்வுக்கால நல வைப்பு (Retirement Benefit Deposit) என்கின்றோம்.

இப்பொழுது சேமிப்பு வைப்புகளைக் கூட்ட வங்கிகள் பல புதிய முறைகளைக் கையாள்கின்றன. சில வங்கிகள் 'பரிசு திட்டத்தை' அறிவித்துள்ளன. இந்தத் திட்டப்படி, ஒருவர் ஒரு குறிப்பிட்டுள்ள அளவுப் பணத்தை வங்கியில் குறிப்பிட்ட கால இருப்புக் கணக்கில் கட்டவேண்டும். இப்படிக் கட்டியவர் களின் பெயர்களைத் திங்கள்தோறும் குலுக்கி எடுத்து, கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்குகின்றனர்.

புதுவகையான சேமிப்புத் திட்டங்களுக்கு எடுத்துக் காட்டாக நாட்டுடைமையாக்கப் பெற்ற கானரா வங்கியில் நடைமுறையிலுள்ள 'நிரந்தர வைப்புத் திட்டம்' (Nirantara Deposit Scheme) பற்றிக் குறிப்பிடலாம். இதன்படி ஒருவர் திங்கள்தோறும் பத்து ரூபாவோ அல்லது அதைப்போல பல மடங்குகளோ கட்டிவரலாம். ஏழாண்டுகளுக்குப் பிறகு திங்கள்தோறும் அவர் கட்டிய அளவுத் தொகையைத் தொடர்ந்து கொடுப்பார்கள். எவ்வளவு காலம் வேண்டு மானாலும் பெறலாம். கட்டிய மொத்தத் தொகையைப் பெறுவதற்கும் வழிவகை செய்திருக்கின்றார்கள்.

வங்கிகள் பல்வேறு வகையான வைப்புகளைப் பெறுவதன் மூலம் பொதுமக்கள் நன்மை பெறுகின்றனர். வங்கிகளால் பணத்தில் வாணிபம் செய்ய முடிகின்றது. ஆதலால், வங்கிகளின் பணிகளில் வைப்புகளைப் பெறுவது தலையாய பணியாகக் கருதப்படுகின்றது.

இரண்டாவதாக, வங்கியின் முக்கியமான பணி தொழில், வாணிப நிறுவனங்களுக்கும் மற்றவர்களுக்கும் கடன் கொடுப்ப தாகும். வங்கியின் நோக்கம் பணம் கொடுக்கல் வாங்கலின் மூலம் மிகுதியாக இலாபம் பெறுவதாகும். ஆதலால், வங்கிகள் தாம் பெறுகின்ற வைப்புகளைக் கையில் ரொக்கமாக வைத் திருக்க விரும்புவதில்லை. உடனுக்குடன் அதிக வட்டிக்குக் கடன் கொடுக்கவே விரும்புகின்றன. வைப்புக் கணக்குகளில் பணத்தை வைத்திருக்கின்ற வாடிக்கைக்காரர்கள் எல்லாம் ஒரே நேரத்தில் எல்லாப் பணத்தையும் கேட்கமாட்டார்கள்

என்ற பட்டறிவின் அடிப்படையில் வங்கிகள் தங்களிடமுள்ள வைப்புகளைக் கடன் கொடுக்கப் பயன்படுத்துகின்றன. வங்கி களிடம் கடன் பெறுகின்றவர்கள் பெரும்பாலும் ரொக்கமாகப் பணத்தைப் பெறுவதில்லை. பணம் அவர்களுடைய கணக்கில் வரவு வைத்துக்கொள்ளப்படுகின்றது. காசோலை முறையில் பணத்தைக் கொடுக்காமலேயே கொடுக்கல் வாங்கல்கள் நடை பெறுகின்றன. இதனால் வங்கிகள் தாம் பெற்ற வைப்பைவிட மிகுதியாகவே கடன் தருகின்றன. இதனை வங்கிகளின் 'பண உற்பத்தி' (Creation of money) என்கின்றோம்.

வைப்புகளில் பல வகைகள் இருப்பதைப் போலவே, வங்கிகள் வழங்குகின்ற கடன்களும் பல வகைகளாக அமைந் திருக்கின்றன. பெரும்பாலும் வங்கிகள் குறைந்த காலக் கடனே தருகின்றன.

பொதுவாகக் கடன்களை இரு வகைகளில் வழங்குகின்றனர். பெயர்பெற்ற நல்ல பொருளாதார நிலையிலுள்ள நிறுவனங் களுக்கோ, தனி மனிதர்களுக்கோ எந்த வகையான பிணையு மின்றி, நம்பிக்கையின்மீது கொடுக்கின்ற கடன் ஒரு வகையான தாகும். இதனைப் 'பிணையற்ற கடன்' (Clean advance or an Unsecuredloan) என்று கூறுவார்கள். இரண்டாவது வகை: தங்கம், வெள்ளி, பத்திரங்கள் முதலியவற்றை ஈடாக வைத்துக்கொண்டு தருகின்ற நேரடிக் கடன்களாகும். இவற்றைச் சாதாரணக் கடன்கள் அல்லது 'பிணைக் கடன்கள்' (Secured loans) என்று கூறுகின்றோம்.

வாடிக்கையாளர்கள் கடனைப் பெற்றுப் பயன்படுத்துகின்ற முறைகளும் இருவகையாக அமைந்திருக்கின்றன. ஒருவகையில், முதலிலேயே வாடிக்கையாளர்கள் எந்த அளவுவரை கடன் பெறலாமென்ற உச்சவரம்பை வரையறுத்து விடுகின்றனர். வாடிக்கையாளர் தமது தேவைக்கேற்பக் காசோலைகளின் மூலம் பணத்தை எடுத்துக்கொண்டிருக்கலாம். அவர் உண்மையில் எடுக்கின்ற பணத்தை மட்டும்தான் அவரது கணக்கில் பற்று எழுதுவார்கள். அந்தப் பணத்திற்கு மட்டுமே அவர் வட்டி கொடுக்கவேண்டிய தேவை இருக்கும். இத்தகைய கடனை **மேல்வரைப் பற்றுக் கடன்** (Over Draft) என்று கூறுகின்றோம்.

மற்றொரு முறையில், வாடிக்கைக்காரருக்குக் கொடுக்கின்ற கடன்தொகை முழுவதையும், உடனடியாக வாடிக்கையாளரின் கணக்கில் பற்றெழுதிவிடுகின்றனர். கடன் வாங்கியவர் எவ்வளவு பணம் பயன்படுத்தினாலும், கடன் வாங்கிய முழுத்

தொகைக்கும் வட்டி தரவேண்டும். இந்த வகைக் கடனை ரொக்கக் கடன் (Cash credit) என்று குறிப்பிடுகின்றோம்.

இப்பொழுது வணிக வங்கிகள் வேளாண்மை செய்வதற்கும் நமது நாட்டில் கடன் தருகின்றன. தவணை முறையில் கடனாகப் பொருள்களை வாங்குபவர்களுக்கு வங்கி கடன் தருகின்றது. அரசுபத்திரங்களில் முதலீடு செய்ய விரும்பு கின்றவர்களுக்கும் வங்கிகள் கடன் தருகின்றன.

வங்கிகளின் கடன் கொடுக்கின்ற பணி நாட்டின் பொருளாதார வாழ்விற்கும் வளத்திற்கும் அடித்தளம் அமைத்துத் தருகின்றது. குறிப்பாக, நமது நாடு போன்று வளர்ந்துவருகின்ற நாடுகளில் தொழில், வாணிப வளர்ச்சிக்கு நிறைய முதல் தேவைப்படுகின்றது. இந்த முதலைத் திரண்ட நிலையில் வைத்திருப்பவர்கள் அதிகமாக இல்லை. ஆதலால், சிறிய அளவில் பலரிடம் சிதறிக் கிடக்கின்ற முதலை மொத்தமாகத் திரட்டித் தருகின்ற பணி முக்கியத்துவம் பெறுகின்றது. வங்கிகள் தரும் கடனைப் பெற்று நாட்டின் வாணிபமும் தொழில்களும் வளர்ச்சியடைகின்றன.

மூன்றாவதாக, மாற்றுச்சீட்டுக்குக் (Bill of Exchange) கழிவு செய்து (Discounting) பணம் தருகின்ற பணியை வங்கி மேற்கொள்ளுகின்றது. வாணிபத்தில் எப்பொழுதும் ரொக்கத் திற்கே பொருள்களை விற்பதில்லை. கடனுக்குப் பொருள்களை விற்கின்றபொழுது, பாதுகாப்புக் கருதி, ஒரு குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் பணத்தைத் தரும்படி எழுதி ஒப்புதல் பெற்றிருப்பதுதான் மாற்றுச்சீட்டு என்பது. மாற்றுச்சீட்டைப் பெற்றிருப்பவர் பணம் பெறக் குறிப்பிட்ட காலம்வரை காத்திருக்கவேண்டும். ஆனால், அவருக்கு இடைக்காலத்தில் பணம் தேவைப்பட்டால், அவர் வங்கியில் மாற்றுச்சீட்டைக் கழிவுசெய்து பணம் பெறலாம். வங்கி குறிப்பிட்ட காலத்தில் (Due Date) பொருள்களை வாங்கியவரிடமிருந்து பணத்தைப் பெறும். அவர் பணம் தரவில்லை என்றால், மாற்றுச்சீட்டைக் கழிவுசெய்து பணம் பெற்றவர் பணத்தைத் தரவேண்டும். மாற்றுச்சீட்டைக் கழிவுசெய்து பணம் கொடுப்பதும் ஒரு வகையில் கடன் அல்லது முன்பணம் கொடுப்பது போன்றது தான். வாணிப நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்கு இந்தச் செயல் பெரிதும் உதவுகின்றது.

நான்காவதாக, பணத்தைக் கைமாற்றுகின்ற பணியையும் வங்கி செய்கின்றது. ஒருவரிடமிருக்கின்ற பணத்தைக்

காசோலையின் மூலம் மற்றவருக்கு மாற்றலாம். ஓரிடத்திலிருக்கின்ற ஒருவர், மற்றோர் இடத்திலிருக்கும் ஒருவருக்குக் குறைந்த செலவில் பணத்தை அனுப்ப வங்கி துணை செய்கின்றது. இதற்காக 'வங்கிப் பணச்சீட்டுப்' (Bank Draft) பயன்படுத்தப்பெறுகின்றது.

ஐந்தாவதாக, வங்கிகள் காசோலை முறை (Cheque system) செயல்படத் துணை நிற்கின்றது. காசோலை வங்கியிலிருந்து பணத்தை எடுக்க மட்டும் கருவியாக இருக்கவில்லை. நன்கு வளர்ச்சிபெற்ற சமுதாயங்களில் காசோலை பணமாகப் பயன்படுத்தப்பெறுகின்றது. தொடக்க காலத்தில் பணம் வெளியிடுகின்ற உரிமை வங்கிகளுக்கு அளிக்கப் பெற்றிருந்தது. இப்பொழுது இந்த உரிமை, மைய வங்கியிடம் இருக்கின்றது. பணம் செய்கின்ற பணிகளை எல்லாம் காசோலையும் செய்கின்றது.

## துணைப் பணிகள்

வங்கிகள் காலப்போக்கில் வங்கிமுறையோடு நேரடியாகத் தொடர்பில்லாத வேறுபல பணிகளை மேற்கொண்டிருக்கின்றன. வாடிக்கையாளர்களுக்கு உதவுகின்ற நோக்கத்தோடு இத்தகைய பணிகளை வங்கி செய்கின்றது. வங்கி மேற்கொள்கின்ற பல்வேறு துணைப் பணிகளையும் இரு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, பதிலாள் பணிகள் (Agency Services). மற்றொரு வகை பொதுப் பயன்பாட்டுப் பணிகள் (General Utility Services). இவற்றைத் தனித்தனியாக ஆராயலாம்.

பதிலாள் பணிகளைச் செய்கின்றபொழுது வங்கி, வாடிக்கையாளர்களின் பதிலாளாக (Agent) இருக்கின்றது. வாடிக்கையாளர்களுக்காக, அவர்கள் சார்பில் வங்கிகள் கீழ்க்காணும் **பதிலாள் பணிகளைச் செய்கின்றன:**

(அ) வங்கிகள் வாடிக்கையாளர்களுக்குச் சொந்தமான பங்குகள், கடன்பத்திரங்கள் ஆகியவற்றிற்குச் சேரவேண்டிய பங்குத்தொகை (Dividends), வட்டி ஆகியவற்றை வசூலிக்கின்றது. வாடிக்கையாளர்கள் தங்களிடமுள்ள பங்கு, கடன் பத்திரங்களை வங்கியிடம் கொடுத்து, உரிய காலத்தில் அவற்றிற்கு வரவேண்டிய பணத்தை வசூலிக்கும்படி கூறினால் வங்கி இந்தப் பணியைச் செய்யும். வாங்குகின்ற பணத்தை

வாடிக்கையாளர்களின் கணக்கில் வரவுவைக்கும். இதற்காக வங்கிகள் சிறிதளவு பணம் (Commision) எடுத்துக்கொள்ளு கின்றன.

(ஆ) வாடிக்கைக்காரர்கள் மாதந்தோறும், அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை ஆயுள் காப்பீட்டுத் தவணைப் பணம், உறுப்பினராக இருக்கும் சங்கங்களுக்கான கட்டணம் முதலியவற்றைச் செலுத்தவேண்டியிருக்கும். இவை போன்ற பணிகளை வாடிக்கைக்காரர்கள் கேட்டுக்கொண்டால் வங்கிகள் மேற்கொள்ளலாம். குறிப்பிட்ட காலத்தில் பணத்தைச் செலுத்திவிட்டு வாடிக்கையாளர்கள் கணக்கில் பற்று எழுதிவிடுவார்கள்.

(இ) வங்கிகள் வாடிக்கைக்காரர்களுக்காகப் பங்குப் பத்திரங்களை வாங்கி விற்கின்ற பணிகளைச் செய்கின்றன.

(ஈ) வாடிக்கையாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பணம் அனுப்ப வேண்டியிருக்கலாம். அத்தகைய சமயங்களில் வங்கி பணத்தை அனுப்ப உதவுகின்றது.

(உ) வாடிக்கையாளர்கள் கேட்டுக்கொண்டால் வங்கி, அவர்களுடைய சொத்துகளுக்குப் பொறுப்பாளராக (Trustee) இருக்கும். நிலத்தைக் குத்தகைக்கு விடுதல், சொத்துகளைக் கவனித்தல் முதலிய பணிகளை வாடிக்கைக்காரர்களுக்காக மேற்கொள்ளும். வாடிக்கைக்காரரின் விருப்பத்தின்படி அவரது உயிலை நிறைவேற்றுபவராகச் (Executor) செயல்படும்.

(ஊ) வங்கிகள் வாடிக்கையாளர்களின் சார்பாக நீதி மன்றத்திற்குக்கூடச் செல்லலாம். வாடிக்கையாளர்கள் சட்டப்படி அதிகாரக் கடிதம் கொடுத்தால், வங்கிகள் வாடிக்கையாளர்களின் பணியை அவர்களுக்காக நிறைவேற்ற லாம்.

வங்கிகள் தங்களுடைய வாடிக்கைக்காரர்களுக்காகப் பல **பொதுப் பயன்பாட்டுப் பணிகளையும்** செய்கின்றன. இப் பணிகளைச் செய்கின்றபொழுது வங்கிகள் வாடிக்கையாளர் களின் பதிலாளராக இருப்பதில்லை. வாடிக்கையாளர்களுக்குச் சில வசதிகளைத் தருவதற்காகக் கீழ்க்காணும் பொதுப் பயன் பாட்டுப் பணிகளை வங்கிகள் மேற்கொள்ளுகின்றன:

(அ) விலையுயர்ந்த பொருள்களையும் பத்திரங்களையும் வங்கிகள் பாதுகாப்பாகப் பெற்று வைத்திருக்கின்றன.

இவற்றைக் காப்பாக வைத்திருப்பதற்குச் சிறிதளவு கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. சில வங்கிகள் காப்பு வைப்பறைகளை வாடகைக்கு விடுகின்றன. வணிகர்கள் தங்களுடைய சொத்துகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள இம் முறை உதவுகின்றது.

(ஆ) வாணிபத்தின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் வங்கிகள் துணை செய்கின்றன. உள்நாட்டு வாணிபத்தில் ஒருவர் மற்றொருவருக்குப் பொருள்களை விற்கின்றபொழுது, இருவரும் தெரிந்தவர்களாக இருந்தால் வாணிபம் எளிதாக நடைபெறுகின்றது. மாறாக இவ் இருவரும் வெவ்வேறு இடத்தைச் சேர்ந்தவர்களாகவும் முன்னைய தொடர்பு ஒருவருக்கொருவரிடை இல்லாதவர்களாகவும் இருந்தால், வாணிபத் தொடர்பில் சில இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. இத்தகைய சூழ்நிலைகளில் வங்கிகளின் உதவி தேவைப்படுகின்றது. பொருள்களை அனுப்புகின்றவர் வங்கிகளின் மூலம் அனுப்பலாம். வாங்குகின்றவர் பணத்தை வங்கியில் கட்டி விட்டுப் பொருள்களைப் பெறலாம். இத்தகைய ஏற்பாட்டால் தெரியாதவர்களுக்கிடையிலும் வாணிபம் நடைபெற முடிகின்றது.

வங்கிகள் மாற்றுச்சீட்டுகளைக் (Bills of Exchange) கழிவு செய்வது வாணிப விரிவாக்கத்திற்குப் பெருந்துணை புரிகின்றது. உடனடியாக மாற்றுச் சீட்டுகளைக் கழிவுசெய்து பணம் கொடுப்பதால் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபம் நடைபெற ரொக்கப் பணம் கிடைக்கின்றது. வெளிநாடுகளிலிருந்து தங்களுடைய வாடிக்கைக்காரர்கள் பொருள்களை வாங்குகின்றபொழுது வாடிக்கைக்காரர்களுக்காகப் பணம் செலுத்துகின்ற பொறுப்பை வங்கிகள் மேற்கொள்கின்றன.

(இ) வணிகர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் அவர்களுடைய வாணிபமும் தொழிலும் சிறப்பாக நடைபெறப் பல வகையான செய்திகள் தேவைப்படுகின்றன. மற்றைய இடங்களிலுள்ள தொழில்கள், வாணிப நிறுவனங்கள் பற்றியும், அங்காடி நிலவரங்கள் முதலியவை பற்றியும் தேவையான விவரங்களைச் சேகரித்துத் தருகின்ற பணிகளை வங்கிகள் செய்கின்றன.

(ஈ) வாடிக்கையாளர்களுக்குச் சில வேளைகளில் தங்களுடைய சொத்து, நிதி நிலைமை ஆகியவற்றைப்பற்றிய நிலையை மற்றவர்களிடம் உறுதிப்படுத்த வேண்டியிருக்கும்.

அத்தகைய சூழ்நிலைகளில் இவைபற்றிய சான்றுக் கடிதத்தை வங்கியிடம் பெற்று அனுப்பலாம். இதனால் வாடிக்கைக் காரர்களின் வாணிபத் தொடர்புகள் விரிவடைகின்றன.

(உ) புதிய நிறுவனங்கள் தோன்றுகின்றபொழுது, அவற்றிற்குத் தொடக்க காலத்தில் சில சிக்கல்கள் ஏற்படும். குறிப்பாகப் பங்குகளை எளிதாக விற்கமுடியாது. இத்தகைய சூழ்நிலைகளில் பங்குகளை விற்றுத்தர உதவுகின்றது. விற்பனை யாகாத பங்குகளைத் தானே வாங்கிக்கொள்வதாக உறுதி கூறு கின்றது. சில தொழில்நிறுவனங்கள் வெளிநாடுகளிலிருந்து தவணையில் பணம் செலுத்துவதாகக் கூறி எந்திரங்களை இறக்குமதி செய்யலாம். இத்தகைய தவணைக் கடன்களைச் செலுத்துகின்ற பொறுப்பை வங்கிகள் ஏற்கலாம்.

## பொருளாதார வளர்ச்சி

வங்கிகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் மேம் பாட்டிற்கும் பல வழிகளில் துணை செய்கின்றன. நாட்டின் பொருளாதாரம் விரைந்து முன்னேறுவதற்கு வேண்டிய அடித்தளத்தை வங்கிகள் அமைத்துத் தருகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக இங்கிலாந்தைக் கூறலாம். இங்கிலாந்தில் தொழிற்புரட்சி தோன்றுவதற்கான பலவகையான காரணங் களில் ஒன்று, அங்கிருந்த வங்கிமுறை வளர்ச்சியாகும். இன்றைய பொருளாதார அமைப்புகள் மிகவும் சிக்கல்கள் நிறைந்தனவாக இருக்கின்றன. ஒவ்வொரு துறையும் திறம்பட இயங்குவதற்கு வங்கிகளின் துணை இன்றியமையாத தேவையாகி விட்டது. எந்தெந்த வழிகளில் நாட்டின் வளர்ச்சிக்கு வங்கிகள் துணைசெய்கின்றன என்பதைத் தொகுத்துக் கூறலாம்.

முதலாவதாக, இப்பொழுது வாணிபமும் தொழிலும் பேரளவில் நடைபெறுகின்றன. ஆதலால், வாணிபம் தொழில் நடவடிக்கைகளுக்கு மிகுதியாக நிலைமுதலும், நடைமுதலும் தேவைப்படுகின்றன. வணிகர்களும் தொழில்முயல்வோரும் முழுக்க முழுக்கத் தங்களுடைய சொந்த முதலைக்கொண்டே வாணிபத்தையும் தொழிலையும் நடத்த இயலாது. வங்கிகள் பேரளவு நிறுவனங்களுக்கு வேண்டிய கடனைத் தருகின்றன. மேலும், அங்காடியின் அளவு உற்பத்தியின் அளவைக் கட்டுப்படுத்துமென்பதை அறிவோம். வங்கிகள் அங்காடிகள் விரிவடைய ஆவன செய்கின்றன. காசோலை முறையால்

கொடுக்கல் வாங்கல்கள் எளிதாக நடைபெறுகின்றன. தவணை முறை விற்பனைக்குக் கடன் கொடுப்பதன் மூலம் வாணிப விரிவாக்கத்திற்குத் துணைசெய்கின்றன. மாற்றுச்சீட்டுகளைக் கழிவுசெய்து கொடுப்பதால் வெளிநாட்டு வாணிபமும் விரிவடைகின்றது. ஒரு நாட்டின் தொழில் வாணிப வளர்ச்சியைக் காட்டுகின்ற கருவியாக வங்கிகள் உள்ளன. வங்கிகள் வளர்ச்சி அடையாமலிருந்தால் தொழிலும் வாணிபமும் இந்த அளவிற்கு இன்று முன்னேறியிருக்க முடியாதென்று கருதலாம்.

இரண்டாவதாக, நாட்டின் முதல் திரட்சிக்கு வங்கிகள் பெருந்துணை செய்கின்றன. குறிப்பாகப் பின்தங்கிய நாடுகளில் முதலின் இன்றியமையாத் தேவை ஒவ்வொரு துறையிலும் உணரப்படுகின்றது. பொதுமக்களிடம் சிறிய அளவுகளில், சிதறிய நிலையில் இருக்கின்ற சேமிப்புகளை ஒன்றுதிரட்டி, மொத்தமாகப் பெரிய அளவில் மூலதனமாக மாற்றித் தொழில், வாணிப நிறுவனங்களுக்குக் கடனாக வழங்குகின்றன. மக்களில் பல்வேறு வருவாய்களைக் கொண்டவர்களும், அவர்களுடைய சேமிப்பு நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப, பல வகையான கணக்குகளை வைத்துக்கொள்ள வங்கிகள் வழி செய்து உள்ளன. எந்த நாட்டில் மக்களிடம் வங்கிப் பழக்கம் மிகுதியாக இருக்கின்றதோ, அந்த நாட்டில் பணம் வீணாக வீட்டுப் பெட்டிகளில் முடங்கிக் கிடக்காமல், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுவதைக் காணலாம்.

மூன்றாவதாக, பின்தங்கிய பகுதிகளில் தொழில்வளர்ச்சிக்கு வங்கிகள் உற்ற துணையாக அமைகின்றன. ஒவ்வொரு வட்டாரத்திலும் அந்த வட்டாரத்தின் தொழில்வளர்ச்சிக்கு வேண்டிய மொத்த மூலதனம் கிடைக்குமென்று கூற முடியாது. பின்தங்கிய வட்டாரங்களில் மக்களின் சேமிப்பு ஆற்றல் மிகக் குறைவாக இருக்கும். ஆனால், சில வட்டாரங்களில் எச்சமான நிலையில் மூலதனத் திரட்சி ஏற்படுவதைக் காணலாம். முதல் எச்சமாக இருக்கும் வட்டாரங்களிலிருந்து, முதல் பற்றாக்குறையாக இருக்கும் வட்டாரங்களுக்குச் செல்ல வங்கிகள் ஆவன செய்கின்றன. இதனால் பின்தங்கிய வட்டாரங்களும் தொழில் வளர்ச்சி பெற்று முன்னேற முடிகின்றது.

நான்காவதாக, நாட்டில் சரியான தொழில்கள், தக்க முறையில் வளர, வங்கிகளின் நடவடிக்கைகள் பெருந்துணை செய்கின்றன. வங்கிகள் எல்லா வகையான தொழில்நிறுவனங்களுக்கும் கடன் கொடுப்பதில்லை. ஒரு நிறுவனத்திற்குக் கடன்

கொடுப்பதற்கு முன்னால், அந்த நிறுவனம் மேற்கொண்டிருக்கின்ற தொழிலின் இன்றைய நிலை, அதன் எதிர்கால முன்னேற்ற வாய்ப்பு ஆகியவற்றை நன்றாகக் கவனித்தே வங்கிகள் கடன் வழங்குகின்றன.

சமுதாயத்தில் கிராக்கியுள்ள பொருள்களை உற்பத்தி செய்ய வங்கிக் கடன் கிடைக்கின்றது. வங்கிகளின் கடனுதவியால் தொழில் நிறுவனங்களால் புதியபுதிய கருவிகளைப் பயன்படுத்தியும் சிறந்த உற்பத்தி முறைகளைப் புகுத்தியும் உற்பத்தியைப் பெருக்க முடிகின்றது.

ஐந்தாவதாக, நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் வேண்டிய மாற்றங்களை வங்கிகளால் கொண்டுவர இயலும். இதற்கான கருவியாக வட்டிவீதம் அமைகின்றது. வங்கி வட்டிவீதத்தைக் கூட்டினால் கடன் அளவு குறையும்; இதனால் வாணிப நடவடிக்கைகள் சுருங்கும். வங்கிகள் மலிவான பணக்கொள்கையைப் பின்பற்றி, குறைந்த வட்டியில் மிகுதியாகக் கடன் கொடுக்கின்றபொழுது, நாட்டில் பொருளாதார நடவடிக்கைகள் வளர்ச்சிபெறும். வட்டிவீத மாற்றத்தின்மூலம் வணிக வங்கிகளின் நடவடிக்கைகளை மைய வங்கி கட்டுப்படுத்துகின்றது. நாட்டின் தொழில்வளர்ச்சிக்குக் குறைந்த வட்டிவீதம் பெரிதும் துணைசெய்கின்றது.

ஆறாவதாக, வங்கிகளிடமிருக்கின்ற கடன் உற்பத்தி செய்யும் ஆற்றல் தொழில், வாணிப வளர்ச்சிக்குப் பெரிதும் துணைசெய்கின்றது. வங்கிகள் தங்களிடமிருக்கும் வைப்புகளைவிட மிகுதியாகக் கடனை உற்பத்தி செய்கின்றன. மிகுதியாக முதலீடு செய்வதற்கு வங்கி பணம் உதவுகின்றது. முதலீடு பெருகுகின்ற பொழுது வேலைவாய்ப்புகள் மிகுதிப்படும். நாட்டில் செழிப்பான நிலை உருவாகும்.

ஏழாவதாக, வங்கிகளின் நடவடிக்கைகளால் சமுதாயத்தில் கடன்பத்திரங்களின் ரொக்கத்தன்மை மிகுதிப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் வரவேண்டிய கடனுக்குரிய பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு கழிவு செய்து பணம் கொடுக்கின்ற முறையால் நாட்டில் ரொக்கப் பண அளவு கூடும். இதனால் தொழில், வாணிப நடவடிக்கைகள் தங்கு தடைகளின்றி விரிவாக நடைபெறுவதைக் காணலாம்.

எட்டாவதாக, வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கின்ற நாடுகளில் வங்கிகளின் பணிகள் மிகவும் முக்கியத்துவம் பெற்று

விளங்குகின்றன. சேமிப்புகளைச் சேகரிப்பதிலும், தக்க தொழில்களில் முதலீடு செய்யத் தூண்டுவதிலும் வங்கிகள் குறிப்பிடத் தக்க வழிகளில் பணியாற்றலாம். வேளாண்மை, சிறுதொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும், கடன் கொடுத்து நாட்டின் மொத்த உற்பத்தியைப் பெருக்கவும், வேலைவாய்ப்பைக் கூட்டவும் இயலும்.

ஒன்பதாவதாக, வங்கிகள் வாடிக்கைக்காரர்களுக்குச் செய்கின்ற பதிலாள், பொதுப் பயன்பாட்டுப் பணிகள் ஆகியவை மறைமுகமாகத் தொழில்வளர்ச்சிக்குத் துணைசெய்கின்றன. பதிலாள், பொதுப் பயன்பாட்டுப் பணிகளை வங்கிகள் செய்வதால், வாடிக்கைக்காரர்கள் சில்லறைக் கவலைகளின்றித் தொழில், வாணிப வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட இயலும்.

வளர்ச்சி பெற்ற நாடுகளில் வங்கிகளின் முக்கியத்துவம் மிகவும் உணரப்படுகின்றது. வங்கிகளின் துணையின்றிப் பொருளாதார நடவடிக்கைகள் செவ்வனே நடைபெறாது என்னும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. நமது நாட்டைப் போன்று பொருளாதார வளர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கின்ற நாடுகளில் வங்கிகள் போதுமான அளவில் வளரவில்லை. வங்கிகள் நாடெங்கும் வளர்ந்து திறமையாகப் பணி செய்கின்றபொழுது, பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையும் முன்னேறும். நாடு செல்வத்தின் செழிப்பைக் காணும்.

## துணை நூல்கள்


1. R. S. Sayers, 'Modern Banking', Chapters 1 and 2.
2. M. L. Tannan, 'Banking Law and Practice in India'.
3. Agger, 'Organised Banking'.
4. Alak Ghosh and Biswant Moihra, 'Studies in the Fundamentals of Practical Banking', Chap. 6.
5. 'Indian Banking Companies' Act of 1949.

# 4. வணிக வங்கிகளின் அமைப்பு முறை

## (அ) அமைப்பு முறை

வங்கிகளின் அமைப்பு முறை எல்லா நாடுகளிலும் ஒன்று போல் இருக்கவில்லை. அந்தந்த நாட்டில் வங்கிகள் வளர்ந்த சூழ்நிலையை ஒட்டி வங்கியின் அமைப்புமுறை உருவாகியுள்ளது. பொதுவாக உலகிலுள்ள வங்கிகளை அவற்றின் அமைப்பின் இயல்பை ஒட்டி இரு வகைகளாகப் பிரிக்கலாம். முதல் வகை, இங்கிலாந்து முறையை ஒட்டி வளர்ந்திருக்கின்ற கிளை வங்கி முறை (Branch Banking) ஆகும். இரண்டாம் வகை, அமெரிக்காவின் வங்கி முறையை ஒட்டி வளர்ந்திருக்கின்ற தனி வங்கி முறை (Unit Banking) ஆகும்.

அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளில் உள்ள வங்கிகளின் வரலாற்றுப் பின்புலத்தைக் கவனித்தால் இரண்டு நாடுகளிலும் வங்கிகளின் அமைப்பு முறை வேறுபட்டிருப்பதற்கான காரணத்தை அறிந்துகொள்ளலாம்.

அமெரிக்காவில் வாணிப நிறுவனங்களின் இணைப்பு மிகுதியாக இருந்தது. சிலரிடம் பொருளாதாரச் சக்திகள் குவியக் கூடிய ஆபத்துத் தொடர்ந்து இருந்தது. ஆதலால், அமெரிக்க அரசு, சில இயக்குநர்களின் கையில் பொருளாதாரச் சக்தி குவிவதைத் தடுப்பதில் எப்பொழுதும் கவனமாக இருந்தது. ஆதலால், அமெரிக்க வங்கிகள் மிகப் பெரிய அளவில் வளராத வகையில் அமெரிக்கச் சட்டம் அவற்றைக் கட்டுப்படுத்தியது.

இங்கிலாந்தில் சூழ்நிலை வேறுவகையாக இருந்தது. தொழிற்புரட்சிக் காலத்தில் வங்கிகள் வேகமாக வளர்ந்தன. பேரளவு உற்பத்திக்கு உதவுகின்ற வகையிலும், வளர்ந்து கொண்டிருந்த வாணிபத் தேவைகளுக்குத் துணைநிற்கும் வகையிலும் வங்கிகளைப் பெரிதாக அமைப்பது தேவையாயிற்று. மேலும், அமெரிக்காவில் இருந்ததைப்போல, இணைப்பைப்

பற்றிய அச்சம் இங்கிலாந்தில் இருந்ததில்லை. ஆதலால், இங்கிலாந்தில் பல்வேறு கிளைகளோடு வங்கிகளை அமைக்க அரசு அனுமதித்தது. பல நிலைகளில் வங்கிகள் இணைந்து ஒன்றாயின. இதனால் இங்கிலாந்தில் கிளை வங்கிமுறை செழித்து வளர்ந்துள்ளது.

## (ஆ) கிளை வங்கியும் தனி வங்கியும்

ஒரு வங்கி பல கிளைகளோடு, ஆலமரம் பல விழுதுகளை விட்டுப் பரந்து விரிந்து வளர்ந்திருப்பதைப்போல, பெரிய நிறுவனமாக வளர்ச்சி பெற்றிருக்கின்றதைக் 'கிளை வங்கிமுறை' என்று கூறுகின்றனர். இம் முறையில், தொழில் வாணிபத் தேவையை ஒட்டி நாடு முழுதும் ஒரு வங்கியின் கிளைகள் தோன்றி வளரும். கிளைகளோடு சேர்ந்த வங்கியை முழுமையாக ஓர் இயக்குநர் குழு நிருவகிக்கும். இஃது ஒரு பங்குதாரர் குழுவுக்குச் சொந்தமானதாக இருக்கும்.

கிளை வங்கி முறை இங்கிலாந்திலிருந்த 'கூட்டுப் பங்கு வங்கி' (Joint Stock Bank) அமைப்பு முறையிலிருந்து தோன்றியதாகும். ஆதலால், இந்த முறையைப் 'பிரிட்டிஷ் முறை' (British System) என்று குறிப்பிடுகின்றனர். இங்கிலாந்தில் வங்கித் தொழில், இப்பொழுது ஐந்து வங்கிகளின் கையிலிருக்கின்றது. மிட்லாண்டு (Midland), வெஸ்ட்மினிஸ்டர் (Westminster), பார்க்லேஸ் (Barclays), லாயிட்ஸ் (Lloyds), நேஷனல் புரவின்ஷியல் (National Provincial) என்பவைதாம் அவ் வைந்து வங்கிகளும் ஆகும். அவற்றை 'ஐம்பெரும் வங்கிகள்' (The Big Five) என்று குறிப்பிடுகின்றனர். இவை ஏறத்தாழ 80,000 கிளைகளோடு நாடெங்கும் செயல்படுகின்றன.

கிளை வங்கி முறை, உலகின் பிற நாடுகளிலும் தோன்றி வளர்ந்திருக்கின்றது. தென்னாப்பிரிக்கா, இந்தியா, ஃபிரான்சு, ஜெர்மனி, கானடா ஆகிய நாடுகளில் கிளைவங்கி முறையே பின்பற்றப்படுகின்றது. கானடாவில் நான்கு பெரிய சாசன வங்கிகள் (Chartered Banks) இருக்கின்றன. இவை ஏறத்தாழ 6,000 கிளைகளோடு செயல்படுகின்றன. மொத்த வங்கித் தொழிலில் 80 சதவிதம் இவற்றின் கையிலிருக்கின்றன. ஜெர்மனியில் நான்கு பெரும் வங்கிகளின் கையில் நாட்டின் வங்கித் தொழில் முழுமையாக இருக்கின்றது. நமது நாட்டில் 76 பதிவு செய்யப்பெற்ற வங்கிகள் (Scheduled Banks) இருக்கின்றன. இவற்றிற்கு 6,329 கிளைகள் இருக்கின்றன.

இவற்றின் கையில்தான் பெரும்பாலான வங்கித் தொழில் இருக்கின்றது.

அமெரிக்காவில் தோன்றி வளர்ந்திருக்கின்ற 'தனி வங்கி முறை' கிளை வங்கி முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கின்றது. தனி வங்கி முறையில் ஒவ்வொரு வங்கியும் தென்னைமரம்போலத் தனித்து நிற்கின்றது. ஒவ்வொரு வங்கிக்கும் ஓர் அலுவலகம்தான் இருக்கும். அந்த அலுவலகத்தின் மூலமாகத்தான் வங்கி அதனுடைய எல்லா வகையான பணிகளையும் மேற்கொள்ளும். அமெரிக்காவில் சில வங்கிகளுக்கு மட்டும் குறிப்பிட்ட எல்லைக்குள் கிளைகளைத் தொடங்கிப் பணிசெய்யும் உரிமையை அரசு அளித்திருக்கின்றது. 1962 ஜனவரியில் அமெரிக்காவில் மொத்தம் 13,442 வங்கிகள் இருந்தன. இவற்றுள் 11,948 தனி வங்கிகள் இருந்தன. மீதமிருந்த 1,484 வங்கிகள் ஏறத்தாழ 6,000-க்கு மேற்பட்ட கிளைகளோடு செயல்படுகின்றன.

அமெரிக்காவில் தனி வங்கி முறை செழித்து வளர்ந்த போதிலும், கிளை வங்கி முறையின் நன்மைகளைப் பெறும் வகையில் சில நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். தனி வங்கிகளை இணைக்க அங்கு மூன்று வகையான அமைப்புகள் உள்ளன. முதலாவதாக, ஒரு நிறுவனத்தின்கீழ் இரண்டுக்கு மேற்பட்ட வங்கிகள் இணைந்து செயல்படுகின்றன. இத்தகைய அமைப்பு முறையைத் 'தொகுப்பு வங்கி முறை' (Group Banking) என்கிறோம். 1954ஆம் ஆண்டின் இறுதியில் 46 தொகுப்பு வங்கிகள் இருந்தன. இவற்றில் 291 வங்கிகள் இணைந்திருந்தன. இந்த வங்கிகள் 627 கிளைகளோடு செயல்பட்டுக் கொண்டிருந்தன. இரண்டாவதாக, சில இயக்குநர்கள் சில வங்கிகளின் நிருவாகத்தில் பங்கு பெறுகின்றனர். சிலர் சில வங்கிகளைச் சொந்தமாகக் கொண்டிருக்கின்றனர். இவர்களால் தாங்கள் தொடர்புகொண்டிருக்கின்ற வங்கிகளுக்கிடையில் அன்றாடம் பணிகளில் ஓர் இணைப்பை ஏற்படுத்த முடிகின்றது. இத்தகைய அமைப்பினைத் 'தொடர் வங்கி முறை' (Chain Banking) என்று கூறுகின்றனர். 1954ஆம் ஆண்டின் இறுதியில் 522 வங்கிகள் தொடர் வங்கி முறையின் மூலம் இணைக்கப் பெற்றிருந்தன. 777 கிளைகளைக்கொண்ட இந்த வங்கிகள் 115 தொடர் வங்கிகளாகச் செயல்பட்டன. மூன்றாவதாக, சிறிய வங்கிகள் தங்களுடைய பணிகள் விரிவாகவும் திறமையாகவும் அமைய, பெரிய வங்கிகளோடு ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. பெரிய வங்கிகளில் சிறியன ஒரு குறிப்பிட்ட

அளவில் வைப்புநிதியை வைத்திருக்கின்றன. சிறிய வங்கிகளுக்குப் பெரியவை சில பணிகளை மேற்கொள்கின்றன. இத்தகைய அமைப்பு முறையைத் 'தொடர்பு வங்கிமுறை' (Correspondent Banking) அல்லது 'பதிலாள் வங்கிமுறை' என்று கூறுகின்றோம்.

தனி வங்கிமுறையையும் கிளை வங்கிமுறையையும் ஒப்பிட்டு ஒவ்வொன்றிலுமுள்ள நிறைகுறைகளை ஆராயலாம். இப்படி ஒப்பிட்டுப் பார்ப்பது இரண்டு முறைகளில் எது சிறந்ததென இனங்கண்டுகொள்ள உதவும்.

பேராசிரியர் சேயர்ஸ், இந்த இருவகை அமைப்பு முறைகளையும் ஒப்பிடுவது குறித்து, தனி வங்கி முறை, 'சிற்றளவு' (Small Scale) நிறுவன அமைப்பை ஒத்திருக்கும். கிளை வங்கி முறை, 'பேரளவு' (Large Scale) நிறுவன அமைப்பை ஒத்திருக்கும். எனவே, நாம் 'தனி வங்கி முறையையும், கிளை வங்கி முறையையும் ஒப்பிடுவது, சிற்றளவு நிறுவன அமைப்பையும், பேரளவு நிறுவன அமைப்பையும் ஒப்பிடுவது போன்றதேயாகும்' என்று கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

## (இ) கிளை வங்கி முறையின் நன்மைகள்

கிளை வங்கி முறையில் ஒரு நிறுவனத்திற்கு நாடெங்கும் கிளைகள் அமைகின்றன. பரந்து விரிந்த முறையில் பணியாற்றுவதால் இத்தகைய அமைப்பில் சில குறிப்பிடத்தக்க நன்மைகள் கிடைக்கின்றன. அவற்றைத் தொகுத்துக் கூறலாம்.

முதலாவதாக, பேரளவு நடவடிக்கையில் கிடைக்கின்ற அக, புறச் சிக்கனங்கள் எல்லாம் கிளை வங்கி முறையில் கிடைக்கின்றன. பெரிய வங்கியில் வேலைப் பகுப்புமுறையைப் பின்பற்றி, அதனால் கிடைக்கக்கூடிய சிக்கன நன்மைகளைப் பெறலாம். மிகவும் திறமையான அலுவலர்கள் உயர்மட்டத்தில் வேலைகளைக் கவனிக்கலாம். கிளை வங்கி முறையில் அதிக ஊதியத்தில் தொழில்நுணுக்கம் பெற்ற நிபுணர்களை வேலைக்கு அமர்த்தலாம். ஒவ்வொரு வங்கியின் கிளையிலும் நிபுணர்கள் வேலை செய்வதால் நிறுவனத்தின் ஆற்றல் வளரும். எல்லா நிலைகளிலும் வேலைப் பகுப்பு இருக்குமாதலால் வேலைத் திறமை வளர வழியுண்டு. தனி வங்கி முறையில் இத்தகைய சிக்கனங்களைப் பெற முடியாது. அவற்றின் வருவாய் குறைவாக இருப்பதால் ஆற்றல்மிக்க நிபுணர்களை வேலைக்கு அமர்த்த

இயலாது. விரிவான முறையில் வேலைப் பகுப்புமுறையைப் பின்பற்ற வாய்ப்புகள் இரா. ஆனால், கிளை வங்கி முறையில் பலவகையான பொருளாதாரச் சிக்கனங்கள் கிடைக்கின்றன.

இரண்டாவதாக, கிளை வங்கிகள் சிக்கனமான முறையில் ரொக்க இருப்பை வைத்துக்கொள்ளலாம். வங்கிகள் வாடிக்கையாளர்கள் கேட்கின்றபொழுதெல்லாம் பணம் கொடுக்க ஓரளவு ரொக்கப் பணம் வைத்திருக்க வேண்டும். கிளை வங்கி முறையில் ஒவ்வொரு கிளையும் குறைந்த அளவில் ரொக்கம் வைத்துக்கொண்டு அதனுடைய பணிகளைச் செய்யலாம். திடீரென்று மிகுதியாகப் பணம் தேவையானால் அடுத்துள்ள கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய வசதியினால் வங்கிகள் தங்களுடைய ரொக்கப் பணத்தைத் திறமையாகப் பயன்படுத்த முடியும். ஏதாவது ஒரு வட்டாரத்தில் பணத்திற்கான தேவை மிகுதியாக இருந்தால், மற்றைய பகுதிகளிலுள்ள கிளைகளில் இருக்கும் எச்சப் பணத்தை அந்த வட்டாரத்திலுள்ள கிளைக்கு மாற்றிப் பயன்படுத்தலாம். இதனால் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வட்டிவீதம் ஒன்று போல அமைய இயலும். ஆனால், தனி வங்கிகள் மிகுதியாக ரொக்க இருப்பை வைத்துக்கொள்ள வேண்டியது தேவையாகும். வெளி உதவி உடனே கிடைக்கும் வாய்ப்பு இல்லாமையால், தனி வங்கி தனது சொந்தக் காலிலேயே நிற்கும் வகையில் மிகுதியாக ரொக்கம் வைத்துக்கொண்டு செயல்படுவது அவசியமாகின்றது.

மூன்றாவதாக, கிளை வங்கியால் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சிக்கனமான முறையில் பணம் அனுப்ப இயலும். கிளை வங்கிக்கு நாட்டின் பல இடங்களிலும் கிளைகள் இருக்கும். இதனால், செய்தி அனுப்பிக் குறிப்பிட்ட ஆளுக்குக் குறிப்பிட்ட கிளை பணம் தரும்படி செய்யலாம். மேலும், வாடிக்கைக்காரர் களின் மாற்று உண்டியல்கள், காசோலைகள் முதலியவற்றிற்குக் கிளைகளின் மூலம் எளிதாகப் பணத்தை வசூல் செய்யலாம். கிளை வங்கிகள் இத்தகைய பணிகளைக் குறைந்த செலவில் செய்து முடிப்பது குறிப்பிடத்தக்கதாகும். தனி வங்கிகள் இதே பணிகளை மற்றைய வங்கிகளின் துணையோடுதான் செய்ய முடியும். ஆதலால், அவற்றிற்கும் சிறிதளவு கட்டணம் கொடுக்க வேண்டும். இதனால் பணம் அனுப்புதல், காசோலை களுக்குப் பணம் வசூல் செய்தல் முதலியவற்றிற்குத் தனி வங்கிகள் அதிகக் கட்டணம் வசூலிக்கின்றன.

நான்காவதாக, கிளை வங்கி முறையில் வாணிப இடர்களைப் (risks) பரவலாக்க இயலும். கிளை வங்கி நாட்டின் பல பாகங்களிலும் பணிகளை மேற்கொள்கின்றது. ஒவ்வொரு கிளையும் அஃது அமைந்திருக்கும் வட்டாரத்தின் சூழலுக்கேற்ப ஒரு வகையான தொழிலுக்குக் கடன் கொடுக்கும். ஆதலால், சில வட்டாரங்களிலுள்ள கிளைகளின் நடவடிக்கைகளினால் இழப்பு ஏற்பட்டாலும், வேறு சில வட்டாரங்களிலுள்ள கிளைகள் இலாபத்தைத் தேடித் தரும். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே மாதிரியான சூழ்நிலை அமைந்து, மொத்தத்தில் இழப்பே ஏற்படும் என்று கூற முடியாது. ஆதலால், ஒரு கிளையில் ஏற்படக்கூடிய இழப்பை மறுபக்கத்திலுள்ள கிளையில் கிடைக்கின்ற ஆதாயம் ஈடுசெய்யுமென்று எதிர்பார்க்கலாம். ஆனால், தனி வங்கி முறையில் இத்தகைய வாய்ப்பு இல்லை. ஒரு வங்கி பணியாற்றுகின்ற வட்டாரத்தில் மந்த நிலை ஏற்பட்டால், அது அந்த வங்கியின் நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிக்கும். தொடர்ந்து அந் நிலை நீடித்தால் வங்கியை மூடவேண்டிய நிலையே ஏற்படலாம். இதனை உலகப் பொருளாதார வரலாற்றில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியின் மூலம் விளக்கலாம். 1929-ல் பெருமந்தம் எங்கும் பரவியது அமெரிக்காவில் பெரு மந்தத்தால் வேளாண்மை பாதிக்கப்பட்டது. இதனால் ஏறத்தாழ 6,000 சிறிய வங்கிகள் முறிந்தன. ஆனால், இங்கிலாந்தில் பொருளாதார மந்தத்தால் பெருமளவில் வங்கிகள் பாதிக்கப்படவில்லை. லங்காஷயரில் துணித்தொழில் பாதித்தது. இதனால் அந்தப் பகுதியிலிருந்த வங்கிக் கிளைகளின் பணிகள் முடங்கின. ஆனால், அதே நேரத்தில் மற்றைய பகுதிகளிலிருந்த வங்கிகளின் கிளைகள் சிறப்பாகப் பணியாற்றின. லங்காஷயர் பகுதியில் ஏற்பட்ட இழப்பை, மற்றைய பகுதிகளிலிருந்த கிளைகளுக்குக் கிடைத்த ஆதாயத்தால் சரிக்கட்ட முடிந்தது. மொத்தத்தில் இங்கிலாந்து வங்கிகள் மந்தத்தால் வீழ்ச்சியடையாமல் தலைதூக்கி நிற்க முடிந்தது.

ஐந்தாவதாக, கிளை வங்கிகளால் மிகுதியான இலாபம் தேட இயலும். எந்தக் கிளையிலும் வீணாகப் பணம் முடங்கிக் கிடக்காமல் பார்த்துக் கொள்வார்கள். கிளைகளின் திறமை நன்கு வளர்ந்திருக்கும். இவை யாவும் வங்கிகளுக்குக் கிடைக்கின்ற இலாபத்தைக் கூட்டுவதைக் காணலாம்.

ஆறாவதாக, கிளை வங்கிமுறையால் சிறிய சமுதாயத் திற்குக்கூடப் பலன் கிடைக்கும். சின்னஞ்சிறு ஊர்களில்கூடக் கிளைகளைத் தொடங்கலாம். இதனால் ஒவ்வொரு வட்டாரத்

திலும் தொழில், வாணிப வளர்ச்சி ஏற்படும். நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்ற சேமிப்பை ஒன்றுசேர்த்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்த இது மிகவும் சிறந்த முறையாகும்.

ஏழாவதாக, தனி வங்கியோடு ஒப்பிடுகின்றபொழுது கிளை வங்கிகள் மிகுந்த முதலோடு இயங்கும். ஆதலால், பெரிய நிறுவனங்களுக்குத் தேவையான கடனை அதிக அளவில் கொடுக்க இயலும். தனி வங்கிகளின் முதல் சிறிய அளவிலேயே இருக்கும். ஆதலால், அவற்றால் அதிக அளவில் கடன் கொடுக்க இயலாது.

எட்டாவதாக, கிளை வங்கிகளைச் சிறப்பான முறையில் மைய வங்கியால் கட்டுப்படுத்தி நெறிப்படுத்த முடியும். கிளை வங்கி முறையில் வங்கிகளின் தலைமை அலுவலகங்களோடு மட்டும் தொடர்புகொண்டு, மைய வங்கி தனது பணக் கொள்கையைச் செயல்படுத்தலாம். தனி வங்கி முறையில் ஒரு நாட்டில் எண்ணற்ற வங்கிகள் இருக்கும். அவற்றை எல்லாம் கண்காணித்து, அவற்றின் பணிகளை நெறிப்படுத்துவது மைய வங்கிக்கு மிகவும் தொல்லையான செயலாக இருக்கும்.

ஒன்பதாவதாக, கிளை வங்கி முறையில், செலவு குறைவாக இருக்குமென்று கூறப்படுகின்றது. கிளைகளைச் சாதாரணக் கட்டடங்களில்கூட நடத்தலாம். குறைந்த அளவில் தேவையை ஒட்டி ஊழியர்களை வைத்துக்கொண்டு கிளை வங்கிகள் பணி களைத் திறமையாகச் செய்யும். தனி வங்கி முறையில் மிகப் பெரிய கட்டடத்தில் கண்ணையும் கருத்தையும் கவரும் பல வகையான ஏற்பாடுகளுடன் இயங்க வேண்டியது ஒவ்வொரு வங்கியின் தேவையாக இருக்கும். இதனால் பல வழிகளிலும் செலவுகள் மிகுதியாக இருக்கும்.

பத்தாவதாக, கிளை வங்கி முறையில் நாட்டின் பல பகுதி களிலும் கிளைகள் இருக்குமாதலால் நாட்டின் பொருளாதார நிலையை நன்கு அறிந்துகொள்ள வாய்ப்பு இருக்கும். ஒவ்வொரு பகுதியைப் பற்றியும் நேரடியாக அறிய முடிவதால் அந்தந்தப் பகுதிக்கான தேவைகளை உணர்ந்து, அவற்றிற்கு ஏற்ற முறை யில் தங்களுடைய பணிகளை அமைத்துக்கொள்ள இயலும். தனி வங்கி முறையில், நாடு தழுவிய பொருளாதாரச் சிக்கல் களின் உண்மையான நிலையை அறிய முடியாது.

பதினொன்றாவதாக, ஊழியர்களுக்குத் தக்க முறையில் பயிற்சியளிக்கக் கிளை வங்கி ஏற்றதாக இருக்கின்றது. புதிய ஊழியர்களை முதலில் மிகச் சிறிய கிளைகளில் பணிசெய்வதற்கு அமர்த்துவர். அவர்கள் தக்க பயிற்சி பெற்ற பின்னர், பெரிய கிளைகளில் பணியாற்றச் செய்யலாம். தனி வங்கிகளில் ஊழியர்கள் பயிற்சி பெற இத்தகைய வாய்ப்பு இல்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பன்னிரண்டாவதாக, கிளை வங்கி முறையில், ஒவ்வொரு கிளையினரும் அந்த வட்டார மக்களை நன்கு தெரிந்து கொள்ளவும் நெருங்கிப் பழகவும் வாய்ப்பு இருக்கின்றது. இதனால் தகுதியற்றவர்களுக்குக் கடன் கொடுப்பதைத் தவிர்க்கலாம். தேவையானால், தலைமை அலுவலகம் கடன் கொடுக்க அனுமதிக்கவில்லையென்று கூறி, அலுவலர்கள் அந்த வட்டார மக்களுக்குத் தம்மீது வெறுப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம்.

## (ஈ) கிளை வங்கி முறையிலுள்ள குறைகள்

கிளை வங்கி முறையில் பல நன்மைகள் கிடைத்த போதிலும், அவை தொடர்ந்து கிடைக்குமென்று கூறமுடியாது. ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் வங்கிகள் விரிவடைகின்ற பொழுது, கிடைத்த நன்மைகள் குறைய, சில குறைகள் தலை தூக்குவதைக் காணலாம். அப்படித் தோன்றக்கூடிய குறை களைத் தொகுத்துக் கூறலாம்.

முதலாவதாக, கிளை வங்கி கட்டுக்கடங்காமல் வளர வாய்ப்பு உண்டு. பேராசிரியர் ஆடம் ஸ்மித், 'வேலைப் பகுப்பு முறை அங்காடியின் அளவினால் கட்டுப்படுத்தப்படுகின்றது' என்று கூறுகின்றார். இது வங்கியின் பணிகளுக்கும் பொருந்தும். போட்டி போட்டுக்கொண்டு, வட்டாரங்களின் தேவைகளைக் கவனியாமல் மிகுதியாகக் கிளைகளைத் தொடங்கிக்கொண்டே போகும் நிலை ஏற்படலாம். அத்தகைய சூழ்நிலைகளில் கிளை வங்கிக்கு முழுமையாக வேலை இருக்காது. இதனால் வங்கியின் மொத்தச் செலவு அதிகமாகும்.

இரண்டாவதாக, கிளை வங்கி முறையின் வாழ்வோடும் தாழ்வோடும் நாட்டின் பொருளாதாரம் பின்னிப் பிணைந் துள்ளது. எண்ணற்ற கிளைகளோடு இயங்குகின்ற ஒரு பெரிய வங்கி திடீரென்று முறிவதால் நாட்டின் பொருளாதாரம்

பாதிக்கப்படலாம். ஆனால், தனி வங்கி முறையில் ஓரிரு வங்கிகள் வீழ்ச்சியடைவதால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்காது.

மூன்றாவதாக, கிளை வங்கி முறையில் வாடிக்கையாளர்களோடு நேரடித் தொடர்பு கொள்ளாமல் சில முடிவுகளுக்கு வரும் நிலை ஏற்படலாம். பெரிய அளவில் கடன் தருவதற்குக் கிளைவங்கி, தலைமை வங்கியின் ஒப்புதலைப் பெறுவது தேவையாகின்றது. தலைமை அலுவலகத்தினர் வாடிக்கையாளர்களின் உண்மை நிலையை உணராமலேயே ஒரு முடிவுக்கு வர வழி இருக்கின்றது. மேலும், கிளை வங்கிகளின் ஊழியர்களை அடிக்கடி மாற்றிக்கொண்டிருந்தாலும் ஊழியர்களுக்கும் வாடிக்கைக்காரர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு ஏற்படுவதற்கு வழி இல்லாமல் போகலாம்.

நான்காவதாக, கிளை வங்கி முறையில் சிலவற்றைத் தீர்மானிப்பதால் அதிக அளவு காலதாமதம் ஆகலாம். கிளை வங்கிகள் தலைமை அலுவலகத்தைக் கேட்டே முடிவுசெய்ய வேண்டியவையாய் இருக்கலாம். அவை தொடர்பாகத் தலைமை அலுவலகத்திற்கு எழுதி, தலைமை அலுவலகம் எழுப்புகின்ற ஐயப்பாடுகளுக்கெல்லாம் விடையளித்துக் குறிப்பிட்ட ஒன்றிற்கு ஒப்புதல் பெறுதற்கு உண்டாகும் காலதாமதத்தைத் தவிர்க்க இயலாது. தனி வங்கிமுறையில் இத்தகைய கடிதப் போக்குவரத்துக்கோ, ஒப்புதல் பெற வேண்டியதற்கோ தேவையிரா. உடனுக்குடன் ஒவ்வொன்றைப் பற்றியும் முடிவுசெய்து, செயல்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

ஐந்தாவதாக, கிளை வங்கி மற்றையில் ஒரு வட்டாரத்தில் சேமிக்கப்பெற்ற பணத்தை மற்றொரு வட்டாரத்தில் பயன்படுத்துகின்ற நிலை ஏற்படலாம். இதனால் அந்தந்த வட்டாரப் பணம் அந்தந்தத் தொகுதிக்குப் பயன்படாமல் போகின்ற சூழ்நிலை தோன்றும்.

ஆறாவதாக, கிளை வங்கி முறையில் சில வங்கிகள், மிகப் பெரியனவாக விரிவடைந்து வளர்ந்து, வங்கித் தொழிலில் முற்றுரிமை பெற்றுத் திகழலாம். இப்படி முற்றுரிமை பெற்று விளங்குகின்ற பெரிய வங்கிகளின் கையில் பொருளாதாரச் சக்திகள் குவிந்திருக்கும். இத்தகைய நிலை சமுதாய நலனுக்கும் மக்களாட்சி செயல்படுவதற்கும் ஏற்றதாக இருக்காது.

ஏழாவதாக, எண்ணற்ற கிளைகளோடு, நாடெங்கும் பரவி, விரிவான முறையில் வளர்ந்திருக்கும் பெரிய வங்கியை நிருவகிப்பது மிகவும் சிக்கலான செயலாக இருக்கும். சிறிது மேற்பார்வை குறைந்தாலும் சில கிளைகளின் நிருவாகம் சீர்கெடலாம். இது வங்கியைக் காலப்போக்கில் பெரிதும் பாதிக்கும். சில கிளைகளில் உள்ள குறைகள் களையப்படாமல் தொடர்ந்து நீடிக்க வழியுண்டு. வங்கியின் அளவு கூடுகின்ற பொழுது நிருவாகத் திறமை குறைவதால் இத்தகைய குறைகள் ஏற்படுகின்றன.

கிளை வங்கிமுறையிலுள்ள நன்மைகளையும் குறைகளையும் தொகுத்துக் கூறினோம். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால், குறைகளைவிட நன்மைகளே மிகுதியாக இருக்கின்றன. கூறப்பெற்ற குறைகள் யாவும் கிளை வங்கி முறையின் உள்ளார்ந்த குறைகள் என்று கூறமுடியாது. ஓரளவு கவனம் செலுத்தித் தக்க நடவடிக்கைகள் எடுத்தால் கிளை வங்கியிலுள்ள குறைகளைப் போக்கலாம். உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளில் கிளை வங்கி முறை வளர்ந்திருப்பதற்குக் காரணம் அதிலுள்ள நன்மைகள்தாம்.

## (உ) தனி வங்கி முறையின் நன்மைகளும் குறைகளும்

தனி வங்கி முறையில் ஒரு நாட்டில் எண்ணற்ற சிறு வங்கிகள் வளர்ந்திருக்கும். இம் முறையில் கீழ்க்காணும் நன்மைகள் கிடைக்கின்றனவென்று கூறப்படுகின்றது.

முதலாவதாக, வட்டார வளர்ச்சிக்கு வாய்ப்புக் கிடைக்கும். ஒவ்வொரு வட்டாரத்திலும் சேமிக்கப் பெறுகின்ற பணம் அந்தந்த வட்டாரத்திலேயே பயன்படுத்தப்பெறும். இதனால் நாட்டிலுள்ள பல வட்டாரங்களும் வளர்ச்சியடைவதைக் காணலாம்.

இரண்டாவதாக, தனி வங்கி ஒரு குறிப்பிட்ட இடத்தில் தொடர்ந்து பணியாற்றுவதால், வங்கி மேலாளர் அந்த வட்டாரத்தைப்பற்றி நன்கு தெரிந்திருப்பார். ஆதலால், அவரால் அந்த வட்டாரத்தின் நிலைமையை ஒட்டி, எந்தெந்தத் தொழிலுக்கு எவ்வளவு கடன் கொடுக்கலாம் என்பதை முடிவு செய்ய இயலும். ஏதாவது சிக்கல்கள் எழுந்தாலும் அவற்றை மேலாளரால் உடனுக்குடன் தீர்க்க முடியும்.

மூன்றாவதாக, தனி வங்கி முறையின் நிருவாகம் சிறப்பாக அமையும். தனி வங்கிகள் சிறியவைகளாக இருப்பதால், அவற்றை மிகுந்த திறமையோடு நிருவகிக்கலாம். வங்கியின் எல்லாப் பணிகளையும் மேலாளரால் கண்காணிக்க இயலும்.

நான்காவதாக, வங்கிகள் ஓரளவுக்குமேல் வளர்கின்ற பொழுது, அவை பெற்ற சிக்கனங்களை இழக்க வேண்டியிருக்கும். ஆனால், பொதுவாகத் தனி வங்கிகள் ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் வளரா. ஆதலால் பெற்ற சிக்கன நன்மைகளை இழக்கவேண்டிய நிலை ஏற்படாது.

தனி வங்கிமுறையில் தோன்றக்கூடிய குறைகளைச் சுட்டிக் காட்டலாம்.

முதலாவதாக, தனி வங்கிகளில் குறைந்த அளவில்தான் மூலதனம் இருக்கும். அவற்றால் கிளை வங்கிகளைப் போன்று திரண்ட அளவு மூலதனத்தைத் திரட்ட முடியாது. நாட்டில் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டால் தனி வங்கிகள் பெரிதும் பாதிக்கப்படும்.

இரண்டாவதாக, பெரும்பாலும் தனி வங்கிகள் நகரங்களிலேயே அமைக்கப்பெறுகின்றன. நகரங்களில் அமைந்தால் தான் தனி வங்கிகளுக்குப் போதுமான அளவு இலாபம் கிடைக்கும். இத்தகைய போக்கினால் சிறிய சமுதாயங்கள் புறக்கணிக்கப்படுவதைக் காணலாம். கிளை வங்கிமுறையில் சின்னஞ்சிறிய ஊர்களில்கூடக் கிளையைத் தொடங்கலாம்.

மூன்றாவதாக, தனி வங்கி முறையில் அந்தந்த வட்டாரத்து மக்களோடு மேலாளர் மிக நெருங்கிப் பழக வாய்ப்பு இருக்கும். இதனால் சிலருக்கு மட்டும் தனிச் சலுகைகள் காட்டுகின்ற போக்குத் தோன்றலாம்.

கிளை வங்கி முறையையும், தனி வங்கி முறையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், கிளை வங்கி முறையிலேயே மிகுதியாக நன்மைகள் இருப்பதைக் காணலாம். சேயர்ஸ், 'கிளை வங்கி முறையைப் பொதுவான விதியாகக் கருதி, அமெரிக்கத் தனி வங்கி முறையை ஒரு விதிவிலக்காகக் கொள்வதில் தவறு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை' என்று கூறுவதை இங்குக் குறிப்பிடலாம்.

## (ஊ) இந்தியாவின் கிளை வங்கி முறை

நமது நாட்டிலுள்ள பொருளாதாரச் சூழ்நிலை இங்கிலாந்து, அமெரிக்கச் சூழ்நிலைகளிலிருந்து மாறுபட்டு இருப்பதனைக் காணலாம். இங்கிலாந்தோடு ஒப்பிடுகின்றபொழுது, இந்தியா மிகப் பெரிய நாடு. அமெரிக்காவில் கிளை வங்கிமுறை செயல்படுவதைச் சட்டம் தடைசெய்தது. நமது நாட்டில் அப்படிப்பட்ட சட்டத் தடைகள் எதுவும் இல்லை. இங்குக் கிளை வங்கி முறை வளர்ச்சிக்கு வேண்டிய சூழ்நிலைகள் எல்லாம் இருந்தபோதிலும் கிளை வங்கிகள் பல்கிப் பெருகாமல் இருப்பது கவனிக்கத்தக்கதாகும். இந்தியாவில் சில வங்கிகள் தாம் மிகப் பெரிய வங்கிகளாக வளர்ந்திருக்கின்றன. பெரும்பாலான வங்கிகள் சிறிய வங்கிகளாகவே இருக்கின்றன.

இந்திய வங்கிகளை இரு வகைகளாகப் பிரிப்பதுண்டு. ஒரு வகை வங்கிகள் பட்டியலில் சேர்க்கப்பெற்றவை. மற்றொரு வகை வங்கிகள் பட்டியலில் சேர்க்கப்பெறாதவை. 1965-ல் நமது நாட்டில் பட்டியலில் சேர்க்கப்பெற்ற 76 வங்கிகள் (Scheduled Banks) இருந்தன. அவை 5,935 கிளைகளோடு செயல்பட்டன. பட்டியலில் சேர்க்கப்பெறாத (Non-scheduled) 33 வங்கிகள் 233 கிளைகளோடு பணியாற்றின. நமது நாட்டில் ரிசர்வ் வங்கி (Reserve Bank) இருவகையான வங்கிகளையும் நெறிப்படுத்துகின்றது. ரிசர்வ் வங்கியின் கண்காணிப்பிற்குள் வராமல், மரபுவழியில் வங்கியின் சில பணிகளை மேற்கொண்டிருக்கின்ற எண்ணற்ற தனி நிறுவனங்கள் நமது நாட்டில் இருக்கின்றன.

இந்தியாவில் கிளை வங்கி முறையைப் பின்பற்றிய போதிலும் நாடு முழுவதும் பரவலாகவும், சீராகவும் வங்கிகள் வளர்ந்திருக்கவில்லை. இப்பொழுதுள்ள வங்கிகள் பெரும்பாலும் தமிழ்நாடு, பம்பாய், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், மேற்கு வங்காளம், கேரளம் ஆகிய மாநிலங்களிலேயே அமைந்திருக்கின்றன. மொத்தத்தில் வங்கிகள் போதுமான அளவில் இல்லை. நமது நாட்டில் ஒரு வங்கி அலுவலகம் சராசரியாக 70,000 மக்களுக்குப் பணிபுரிகின்றது. நாட்டுப்புறங்களில் மட்டுமல்லாமல் வங்கிகள் இல்லாத பல சிறிய நகரங்களையும் நமது நாட்டில் காணலாம்.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில், வங்கிகள் நாடெங்கும் ஏராளமான கிளைகளைத் தோற்றுவித்தன.

கிளைகளின் எண்ணிக்கையைக்கொண்டு வங்கிகளின் வலிமையைக் கூறிவிட முடியாது. இங்கிலாந்து வங்கிகளைப் போன்று இந்திய வங்கிகள் வலுவான அடிப்படையில் அமையவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. நமது நாட்டில் போர்க்காலத்தில் வங்கிகள் போட்டிபோட்டுக்கொண்டு கிளைகளைத் தொடங்கின. பெரும்பாலும் ஒரே இடத்தில் போட்டி வங்கிகளின் கிளைகள் தொடங்கப்பெற்றன. வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புகளைக் கவர்ந்திழுக்கும் நோக்கத்தில் வட்டி வீதத்தைக் கூட்டினர். இவற்றாலெல்லாம் பல புதிய கிளைகள் பொருளாதார அடிப்படையில் இயங்கும் நிலையில் இருந்தில. மேலும் புதிய கிளைகளின் நிருவாகிகளில் பலர் போதுமான அனுபவம் இல்லாதவர்களாயிருந்தனர். வங்கியின் பணம் சில கிளைகளில் தவறான வழிகளில் பயன்படுத்தப்பெற்றது. இக்குறைபாடுகளால் பல கிளைகள் மூடப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இந்தியாவின் கடந்த கால அனுபவம், மிகவும் எச்சரிக்கையோடுதான் வங்கிகள் கிளைகளைத் தொடங்க வேண்டும் என்று காட்டுகின்றது. இருந்தாலும், நமது நாட்டிற்குக் கிளை வங்கி முறைதான் மிகவும் ஏற்றதென்று பொருளியலறிஞர்கள் கருதுகின்றனர். இந்த முடிவுக்கான காரணங்களைத் தொகுத்துக் கூறலாம்.

முதலாவதாக, இதுவரை வங்கிகள் போதுமான அளவில் வளர்ந்திருக்கவில்லை. மற்றைய நாடுகளில் வங்கிகள் வளர்ந்திருக்கும் நிலையோடு ஒப்பிட்டால், நமது நாட்டின் பின்தங்கிய நிலை தெளிவாக விளங்கும். ஒரு மில்லியன் மக்கள்தொகைக்கு அமெரிக்காவில் 127 வங்கிகள் இருக்கின்றன. இங்கிலாந்தில் 230 வங்கிகள் உள்ளன. நமது நாட்டில் 125 வங்கிகள்தாம் இருக்கின்றன. ஆதலால், பெரும்பாலான மக்களுக்கு வங்கிகளின் பணி கிடைக்க வேண்டுமானால் தனி வங்கிகளை நாடெங்கும் தொடங்க முடியாது. கிளை வங்கி முறையில் ஏராளமான கிளைகளைத் தொடங்க வாய்ப்பு இருக்கின்றது. அரசு நாட்டுடைமையாக்கிய 220 பெரிய வங்கிகள் இப்போது விரிவான முறையில் கிளைகளைத் தொடங்கிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இரண்டாவதாக, மிகுந்த ஆதாயம் கருதி, நமது நாட்டில் வங்கிகள் பெரும்பாலும் நகரங்களிலேயே பணிபுரிய

விரும்புகின்றன. இதனால் நாட்டுப்புறங்கள் புறக்கணிக்கப் பெறுகின்றன. நமது நாட்டில் 1971ஆம் ஆண்டில் மக்கள் கணக்கெடுப்பின்படி 80.13 சதவீத மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். கிராம மக்களிடமிருக்கின்ற சிறிய அளவுச் சேமிப்புகளையும் தொகுத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டியது இன்றைய காலத் தேவையாகும். கிளை வங்கி முறையில்தான் சிற்றூர்களிலும் பேரூர்களிலும் மிகுதியாக வங்கிக் கிளைகளைத் தொடங்கமுடியும்.

மூன்றாவதாக, தனி வங்கி முறையில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு ஈடுகொடுக்க முடியாத பல சிறு வங்கிகள் தோன்றும். அத்தகைய வங்கிகள் ஒன்றிரண்டு முறிவடைந்தாலுங்கூட, வங்கி முறையின்மீது மக்களுக்குரிய நம்பிக்கை குறையும். மக்களிடம் வங்கிமுறைப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலையில் நாம் இருக்கின்றோம். ஆதலால், மக்களுக்கு நம்பிக்கையளிக்கின்ற வங்கிமுறைதான் நமக்கு இன்றைய காலத் தேவையாகும். கிளை வங்கிமுறை இதற்கு ஏற்றதாக இருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

நான்காவதாக, நாட்டைத் தொழில்மயமாக்கும் நோக்கில் அரசும் மக்களும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். பெரிய தொழில்களைத் தொடங்க முயல்கின்றனர். இதற்கு மிகத் திரண்ட முதல் தேவை. தனி வங்கிகளால் அதிக அளவில் முதலைத் திரட்ட முடியாது. கிளை வங்கிகளால் மிகுதியாக முதலைத் திரட்ட முடியுமாதலால், நமது நாட்டிற்குக் கிளை வங்கி முறையே ஏற்றதென்று கூறப்படுகின்றது.

## (எ) வங்கிகளின் இணைப்பு
### (Amalgamation of Banks)

தனி வங்கி முறை சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமானால் ஒவ்வொரு தனி வங்கியும் ஒரு குறிப்பிட்ட அளவிலாவது அமைய வேண்டும். போதுமான அளவு வசதிகள் இருக்கவேண்டும். அது அமைந்திருக்கின்ற வட்டாரத்தின் தேவைகளுக்கேற்பவும், மாறுகின்ற சூழ்நிலைகளை ஒட்டியும் செயல்படக்கூடிய ஆற்றல் இருக்கவேண்டும். இத்தகைய நிலைகளில் அமையாத, வலுவற்ற வங்கிகள் ஏராளமாக இருப்பது நாட்டின் பொருளாதாரத்தின் நிலையான நன்மைக்கு ஏற்றதாக இருக்காது. திடீரென்று ஏற்படுகின்ற பொருளாதார மந்தம் போன்ற சூழ்நிலைகளில் வலுவற்ற வங்கிகள் முறியும். இது, நாட்டின் பொருளாதாரத்

தைப் பெரிதும் பாதிக்கும். ஆதலால், வலுவான சில வங்கிகள், போதுமான முதலோடு, நாடெங்கும் கிளைகளைத் தொடங்கிப் பணி செய்வதே விரும்பத்தக்கதெனப் பொருளியலறிஞர்கள் கருதுகின்றனர். பெரிய அளவில் அமைகின்ற கிளை வங்கிகளில் அகச் சிக்கனங்களும் (Internal Economies) புறச் சிக்கனங்களும் (External Economies) கிடைக்கின்றன. இதனால் காலப்போக்கில் தனி வங்கிகளாக இருப்பவைகூட இணைந்து பெரிய வங்கியாக உருப்பெற்றுப் பேரளவு நிறுவனத்தின் நன்மைகளைப் பெறலாம்.

உலக நாடுகளில் வங்கிகளின் இணைப்பு எப்படி நடைபெற்று வந்திருக்கின்றதெனபதைச் சில நாடுகளின் எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கலாம்.

## இங்கிலாந்தில் வங்கிகளின் இணைப்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிறு வங்கியாளர்களுக்குச் சொந்தமான தனியார் வங்கிகள் ஏராளமாக இருந்தன. அப்பொழுது கூட்டுப்பங்கு வங்கிகள் (Joint Stock Banks) வரையறுக்கப்படாத பொறுப்போடு (Unlimited Liability) செயல்பட்டுக் கொண்டிருந்தன. இங்கிலாந்தில் 1825-ல் ஒரு பொருளாதார நெருக்கடி தோன்றியது. ஆதலால், 1828-ல் ஒரு சட்டமியற்றி வங்கிகளுக் கிருந்த சில தடைகளை நீக்கினார்கள். 1833-ல் வங்கிகளின் வளர்ச்சிக்குத் துணைசெய்யும் வகையில் மற்றுமொரு சட்டமும் நிறைவேற்றப்பட்டது. இதனால் கூட்டுப்பங்கு வங்கிகளின் எண்ணிக்கை மிக வேகமாக வளர்ந்தது. ஏழு ஆண்டுகளில் 86 வங்கிகள் புதியனவாக நிறுவப்பெற்றன. இத்தகைய வளர்ச்சிப் போக்கினை இங்கிலாந்து வங்கியும் (Bank of England), பிற தனியார் வங்கிகளும் விரும்பவில்லை. இங்கிலாந்து வங்கி புதிய வங்கிகளோடு கணக்கு வைத்துக்கொள்ள மறுத்துவிட்டது. எதிர்ப்பை ஏற்றுக்கொண்டு, போட்டிகளுக்கு ஈடு கொடுக்க எண்ணி, எப்படியும் வளர முயன்ற புதிய வங்கிகள் அதிக வட்டி கொடுத்து வைப்புகளைப் பெற நடவடிக்கைகளை மேற் கொண்டன. இதனால் அவற்றிற்கு இழப்பு மிகுந்தது. இழப்பைச் சரிக்கட்ட முடியாத நிலையில் பல வங்கிகள் முறிந்தன. 1845-ல் 118 கூட்டுப் பங்கு வங்கிகள்தாம் தலைதூக்கி நின்றன.

வங்கிகளுக்கு ஏற்பட்ட இந்த நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க, வங்கிகளை இணைத்து, அவற்றின் உரிமையைப் பெருக்கவேண்டியது தேவையெனப் பல வங்கியாளர்கள் கருதி

முயன்றனர். இருந்தாலும் சூழ்நிலை அவர்களுடைய முயற்சிக்குச் சாதகமாக இல்லை. ஆனால், இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வங்கிகளின் இணைப்பு இயக்கம் மகத்தான வெற்றி பெற்றது. பின்தங்கிய பகுதிகளிலும் கிளைகளைத் தொடங்கும் நோக்கில் வங்கிகளின் இணைப்பிற்கானவற்றைச் செய்தனர்.

முதல் உலகப்போர்க் காலத்தில் வங்கிகளின் இணைப்பு இயக்கம் தடைப்பட்டபோதிலும், போருக்குப் பின்னர், இவ் வியக்கம் மறுபடி மிகவும் வேகமாக நடைபெற்றது. மொத்தத்தில் 80 சதவீத வங்கிகள் 'ஐம்பெரும்' (Big Five) வங்கிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன. அப்பொழுதிருந்த 10,874 வங்கிகளில் 9,717 வங்கிகள் இவ் வைம்பெரும் வங்கிகளின் கையிலிருந்தன.

இங்கிலாந்தில் வங்கிகள் இணைந்ததற்கான காரணங்களை அகக்காரணங்கள் என்றும், புறக்காரணங்கள் என்றும் பிரித்துக் கூறலாம். அகக்காரணங்களில் கீழ்க்காண்பவை முக்கியமானவையாகும்.

முதலாவதாக, வங்கித் தொழிலில் நிலையான தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் வங்கிகள் இணைந்தன. சிறிய தனி வங்கிகளிடம் அந்த வட்டாரத்துத் தொழில், வாணிபத் தேவைகளுக்குப் போதுமான அளவில் முதல் இல்லை. ஒரு வட்டாரத்திற்குள் இயங்குவதால் ஏற்படக்கூடிய இத்தகைய குறையைப் போக்கி, வங்கியின் வளத்தைப் பெருக்கிக்கொள்ள வங்கிகள் இணைந்தன.

இரண்டாவதாக, மாநிலங்களிலிருந்த வங்கிகள் எப்படியாவது இலண்டனில் தங்களுக்காகச் செயல்படுகின்ற ஒரு நிறுவனம் தேவையென்று கருதின. காரணம், இலண்டன் ஒரு நீர்வுமையமாக வளர்ச்சி பெற்றிருந்தது. மேலும், தங்களுடைய முதலை மிகுந்த ஆதாயம் பெறத்தக்க முறையில் பயன்படுத்த இலண்டன்தான் சிறந்த இடமென்று கருதினர். ஆதலால், இலண்டனின் வெளிப்புறங்களில் இருந்த வங்கிகள், இலண்டனிலுள்ள வங்கிகளோடு இணைந்துகொள்ள விரும்பின.

மூன்றாவதாக, சில பகுதிகள் விரைந்து தொழில்மயமாகிக் கொண்டிருந்தன. அந்த வட்டாரங்களில் எல்லாம் பணத்தேவை அதிகமாக இருந்தது. வேளாண்மை மிகுந்த நாட்டுப்புற

வங்கிகளில் எச்சமாகப் பணம் இருந்தது. இந்த எச்சப்பணத்தைப் பயன்படுத்த விரும்பிய கிராமப்புற வங்கிகள், தொழில் வளர்ச்சி பெற்ற வட்டாரங்களிலுள்ள வங்கிகளோடு தொடர்புகொள்ள இணைப்பை விரும்பின.

வங்கிகள் இணைவதற்குக் கீழ்க்காணும் புறக்காரணங்களும் இருந்தன.

முதலாவதாக, இங்கிலாந்திலிருந்த வாணிப நிறுவனங்கள் வேகமாக வளர்ந்தன. மிகவும் செறிந்த குவிதலான முறையில் வளர்ந்த நிறுவனங்களுக்கு அதிகமான அளவில் முதல் தேவைப் பட்டது. சிறிய வங்கிகளால், வளர்ந்துகொண்டிருந்த பெரிய வாணிப நிறுவனங்களுக்குத் தேவையான கடனைக் கொடுக்க இயலவில்லை. ஆதலால், வங்கிகளைப் பெரிய அளவில் அமைப்பது அன்றைய காலத்தேவையாக இருந்தது.

இரண்டாவதாக, இங்கிலாந்தில் போக்குவரத்து வசதிகள் வியக்கத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றன. இதனால் ஓரிடத் திலிருந்து மற்ற இடங்களுக்குச் சென்று வருவது எளிதாயிற்று. இதனால், ஒரு வங்கி நாடு முழுவதும் தனது கிளைகளை அமைத்துக்கொள்ள முடிந்தது.

மூன்றாவதாக, தொழில் சமுதாய அமைப்பும், அதனுடைய பணிகளும் சிக்கல்கள் நிறைந்தனவாக இருந்தன. புதிய துறைகளிலெல்லாம் வங்கிகள் மிகுதியாக ஈடுபடவேண்டிய சூழ்நிலை உருவாகியது. அந்நியச் செலாவணி, பங்கு அங்காடி முதலியவற்றில் ஈடுபடுவது தேவையாயிற்று. இத்தகைய பணிகளைத் திறமையாகச் செய்ய இலண்டனில் கிளை இருப்பது அவசியமாயிற்று. இதனால் பல மாநில வங்கிகள் இலண்டன் வங்கிகளோடு இணைவது தேவையாயிற்று.

இங்கிலாந்தில் வங்கிகள் இணைந்தமையால் சில குறிப்பிடத் தக்க விளைவுகள் ஏற்பட்டன. அவற்றைத் தொகுத்துக் கூறலாம்.

முதலாவதாக, இணைந்த வங்கிகள் சிறப்பான முறையில் திறமையாகப் பணி செய்தன. நிருவாகச் சிக்கனங்கள் கிடைத்தன. பேரளவு நிருவாகத்தின் நன்மைகளைப் பெற முடிந்தது. போதுமான அளவு முதலோடு வங்கிகள் செயல் பட்டன. இதனால் கிடைத்த ஆதாயத்தின் அளவு கூடியது.

மேலும், வங்கிகளில் எல்லாம் ஒரே வகையான நடைமுறைகள் தோன்ற இணைப்பு, வழிவகுத்துக் கொடுத்தது.

இரண்டாவதாக, பொருளாதார நெருக்கடி தோன்றிய காலங்களில் வங்கிகளை இணைத்து ஒரு வலுவான அமைப்பு முறையோடு நெருக்கடியைச் சமாளிக்கின்ற ஆற்றல் கிடைத் திருந்தது. கடந்த நூறு ஆண்டுக் காலத்தில் ஒரு வங்கிதான் தோல்வி அடைந்ததென்று கூறப்பெறுகின்றது. 1930-ல் தோன்றிய பொருளாதாரப் பெருமந்தக் காலத்தில் அமெரிக்கா வில் ஏறத்தாழ 7,000 வங்கிகள் முறிவுற்றன என்பது குறிப்பிடத் தக்க ஒன்றாகும். 1933ஆம் ஆண்டில் பிப்ரவரி. மார்ச்சு ஆகிய இரண்டு மாதங்களில் மட்டும் 3,000 வங்கிகள் முறிவுற்றன. இந்தக் காலத்தில் இங்கிலாந்தில் ஒரு வங்கிகூட முறிவுறவில்லை யென்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மூன்றாவதாக, ஐந்து வங்கிகளில் வங்கித் தொழிலில் ஈடுபடுத்தப்பெற்றிருந்த முதலில் ஏறத்தாழ எண்பது சதவீதம் இருந்தமையால், இந்த ஐம்பெரும் வங்கிகள் முற்றுரிமைபெற்றுத் திகழும் நிலை ஏற்படலாமென்று பொதுமக்கள் கருதினர். இவை தங்களுடைய நிதியைத் தவறாகவும் பயன்படுத்தலா மென்ற அச்ச உணர்வும் எழுந்தது. வங்கிகளின் இணைப்பால் இங்கிலாந்து வங்கியின் செல்வாக்குக் குறைந்துவிட்டதென்று சிலர் கருதினர். இதனால், 1918ஆம் ஆண்டில் வங்கிகளின் இணைப்பால் தொழில், வாணிபம் ஆகியவற்றில் ஏற்பட்ட விளைவுகளையும் இணைப்பையும் தடுக்கச் சட்டம் தேவையா என்பதையும் ஆராய்ந்து கூற ஒரு குழுவை அமைத்தனர். அந்தக் குழு கருவூலம் (Treasury), வாணிபக் கழகம் (Board of Trade) ஆகியவற்றின் ஒப்புதல் பெற்றுத்தான் வங்கிகள் இணையவேண்டுமென்று பரிந்துரைத்தது. இப்படி ஒரு சட்டம் இயற்றப்பெறாதபோதிலும் வங்கிகளை இணைப்பதில் ஒரு நெறியான போக்குத் தோன்றியது. இதனால் நாட்டிற்கு நன்மை விளைந்தது.

### அமெரிக்காவில் வங்கிகளின் இணைப்பு

அமெரிக்கா, கிளை வங்கி முறையை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் கிளை வங்கி அமைப்பதைத் தடை செய்யக்கூடிய சட்டம் அந்த நாட்டில் இருக்கிறது. 10,000-க்கும் மேற்பட்ட வங்கிகள் செயல்படுகின்றன. 1923-24-ல் நகரங்களிலிருந்த வங்கிகளுக்கிடையில் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இதனை ஒட்டி வங்கிகளை இணைக்கின்ற போக்குத் தலை

தூக்கியது. நியூயார்க்கின் முதல் தேசிய நகர வங்கி (First National City Bank of New York) 129 கிளைகளோடு இயங்கியது. இவற்றில் 72 வங்கிகள் பெரும்பாலும் வெளிநாடுகளில் அமைந்திருந்தன.

அமெரிக்காவில் ஒன்பது மாநிலங்களில் இங்கிலாந்தைப் போன்று கிளைவங்கிகள் தொடங்க அனுமதியளித்துள்ளனர். இந்த ஒன்பது மாநிலங்களிலும் 1928-க்குப் பின்னர் வங்கிகள் இணைவது அதிகமாக இருந்தது. இதனால், 1921-ல் 30,000 ஆக இருந்த வங்கிகளின் எண்ணிக்கை 1931-ல் 23,000 ஆகக் குறைந்தது. வங்கிகளின் இணைப்பைச் சட்டம் கட்டுப்படுத்திய போதிலும் 'தொகுப்பு வங்கி முறை' (Group Banking), 'தொடர் வங்கி முறை' (Chain Banking), 'தொடர்பு வங்கி முறை' (Correspondent Banking) ஆகிய அமைப்புகளின் மூலம் வங்கிகள் இணைந்து செயல்படுகின்ற நிலையை அமெரிக்காவில் காண்கின்றோம்.

### இந்தியாவில் வங்கிகளின் இணைப்பு

நமது நாட்டில் பெரும்பாலும் சிறிய சிறிய வங்கிகளே வளர்ந்திருக்கின்றன. ஆதலால், சூழ்நிலையையும் நாட்டின் நிலையையும் கருதி வங்கிகளை இணைப்பது தேவையான ஒன்றென்று சில பொருளியலறிஞர்கள் கருதுகின்றனர். வங்கி நிறுவனங்களின் சட்டத்தின் (Banking Companies Act) 44-A பிரிவின்படி சரியான முறையில் வங்கிகளின் இணைப்பு அமைய வழிகாட்ட வேண்டியது இந்திய ரிசர்வ் வங்கியின் பொறுப்பாகும். ரிசர்வ் வங்கியின் அனுமதியின்றி வங்கிகளை இணைக்க முடியாது. நாட்டின் வங்கி அமைப்புமுறை மிகவும் வலுவாக அமையத் துணை செய்யக்கூடிய இணைப்புகளை மட்டும்தான் ரிசர்வ் வங்கி அனுமதிக்கும். 1950 டிசம்பரில் மேற்கு வங்காளத்திலிருந்த நான்கு பெரிய பதிவுபெற்ற வங்கிகள், 'இந்திய ஐக்கிய வங்கி' (United Bank of India Ltd.) என்ற பெயரில் இணைந்தன. 1951-ல் பாரத் வங்கி (Bharath Bank Ltd.) பஞ்சாப் தேசிய வங்கியோடு (Punjab National Bank Ltd.) இணைந்தது. வங்கிகளின் இணைப்பு மிகுதியாக இல்லை என்பது கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

## (ஏ) கலப்பு வங்கி முறை

வங்கிகள் கடன் கொடுக்கின்ற முறைகளையும், அவை மேற்கொள்கின்ற பணிகளையும் ஒட்டி, வங்கிகளை மூன்று

வகைகளாகப் பிரிப்பதுண்டு. இவை வைப்பு வங்கிமுறை, முதலீட்டு வங்கிமுறை, கலப்பு வங்கிமுறை என்று வழங்கப் படுகின்றன.

முதலாவதான வைப்பு வங்கிமுறை (Deposit Banking) மரபு வழியில் செயல்படுகின்றது. இதனுடைய முதன்மையான நோக்கம் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெறுவதாகும். வைப்பு வங்கிகள் குறுகிய காலக் கடன்களை மட்டுமே வழங்கும். இன்றுள்ள வணிக வங்கிகள் இந்த வகையைச் சேர்ந்தனவாகும்.

இரண்டாவதான முதலீட்டு வங்கிமுறையைச் (Investment Banking) சேர்ந்த வங்கிகள் தொழில்நிறுவனங்களுக்கு நீண்ட காலக் கடன் கொடுக்கின்ற பணியை முதன்மையாகக் கொண்டு செயல்படுகின்றன.

மூன்றாவதான கலப்பு வங்கி முறையைச் (Mixed Banking) சேர்ந்த வங்கிகள் மரபுவழியான வணிக வங்கியின் பணிகளை யும், முதலீட்டு வங்கிகளின் பணிகளையும் சேர்த்து மேற் கொள்கின்றன. இத்தாலி, ஜெர்மனி, ஹங்கேரி, பெல்ஜியம், நெதர்லாந்து ஆகிய நாடுகளில் அவற்றின் தேவையை ஒட்டிக் கலப்பு வங்கிமுறை செழித்து வளர்ந்திருக்கின்றது.

வைப்பு வங்கிமுறையின் கோட்பாடுகளின்படி இப்பொழுது வணிக வங்கிகள் இயங்குகின்றன. வாணிப, தொழில்நிறுவனங் களுக்குத் தேவையான குறுகிய காலக் கடனைத் தருகின்ற பணியை இவை மேற்கொள்கின்றன. தொழில்நிறுவனங்களுக்கு வேண்டிய நடைமுதலை (Working Capital) வழங்குவதால் வங்கிகளின் ரொக்கத் தன்மை குறைவதில்லை. வாடிக்கை யாளர்கள் கேட்கின்ற பொழுதெல்லாம் பணம் கொடுக்க வேண்டியது வங்கிகளின் பொறுப்பாகும். மரபுவழிச் சிந்தனை யாளர்கள் வைப்பு வங்கிகள் ரொக்கத் தன்மைக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கருதியதால், நீண்டகாலக் கடன் கொடுக்கும் பணியை மேற்கொள்ளக் கூடாதென்று கூறி வந்தனர்.

சில குறிப்பிட்ட சூழ்நிலைகள் ஒரு நாட்டில் நிலவுமானால், அந்த நாட்டிற்கு வைப்பு வங்கிமுறை ஏற்றதாக இருக்கும் என்று கூறலாம்.

முதலாவதாக, தொழில்களுக்கு நீண்டகாலக் கடன் கொடுக்கின்ற வங்கிகள் செழித்து வளர்ந்திருந்தால், குறுகிய

காலக் கடன் கொடுக்கும் பணியை மட்டும் மேற்கொண்டிருக்கின்ற வைப்பு வங்கிகளை வைத்திருக்கலாம்.

இரண்டாவதாக, வங்கிகளின் முதல் மிகக் குறைவாக இருந்தால், அவை நீண்ட காலக் கடன் கொடுப்பது நல்லதன்று. குறுகிய காலக் கடன் கொடுப்பதன் மூலமாகத்தான் வங்கிகளால் நீர்மைத் தன்மையைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

மூன்றாவதாக, ஒரு நாட்டில் தொழிலுக்கு நேரடியாக முதலீடு செய்யக்கூடிய செல்வந்தர்கள் இருந்தாலும் அந்த நாட்டில் வைப்பு வங்கிகள் செழிப்புற்று வளர இயலும்.

### வரலாற்றுப் பின்புலம்

வங்கிகள் தொழில்களுக்குத் தேவையான நிலைமுதலை (Fixed capital) நீண்ட காலக் கடனாகக் கொடுக்கலாமென்ற கருத்து வளர்ந்தது. இத்தகைய கருத்து நாட்டிற்கு நாடு வேறுபடுவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து வங்கியாளர்கள் தொழில்களுக்கு வேண்டிய நீண்ட கால நிதியை அளிப்பது வங்கிகளின் பணியன்று என்பதில் மிக உறுதியாக இருக்கின்றனர். ஆனால், ஜெர்மனியின் வரலாற்றுப் பின்புலம் வேறு வகையாக அமைந்துவிட்டது. அங்குத் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மூலதனம் போதுமான அளவில் தனியாரிடம் இல்லை. மூலதனம் வைத்திருந்த தனிப்பட்டவர்களும் தொழில்களில் முதலீடு செய்யத் தயங்கினார்கள். ஆதலால், தொழில்களுக்கு வேண்டிய பலவகையான முதல்களையும் வழங்கவேண்டியது ஜெர்மானிய வங்கிகளின் தவிர்க்க முடியாத பணியாயிற்று.

ஜெர்மானிய வங்கிகள் தொழில்களை நிறுவுவதிலும் நிறுவிய தொழில்களைக் கட்டிக்காத்து வளர்ப்பதிலும் நேரடியாகப் பங்கு பெற்றன. இந்த அளவிற்குத் தொழில்வளர்ச்சியில் வங்கிகள் ஈடுபடாமல் இருந்திருந்தால், ஜெர்மனி ஒரு வலிமைமிக்க தொழில்நாடாக வளர்ச்சிபெற்றுத் திகழ்ந்திருக்க முடியாது. இத்தாலி, ஹங்கேரி, பெல்ஜியம், நெதர்லாந்து ஆகிய நாடுகளிலும் ஜெர்மனியைப் போன்றே கலப்பு வங்கி முறை பின்பற்றப்படுகின்றது.

### செயல்முறை

கலப்பு வங்கிமுறையில் வங்கியின் மூலதனத்தின் பெரும் பகுதி, தொழில்களுக்கு நீண்ட காலக் கடன் தருவதற்குப் பயன்

படுத்தப்பெறுகின்றது. கலப்பு வங்கி, தனது தொழில் வாடிக்கையாளரைப் பற்றிய எல்லா விவரங்களையும் தெரிந்திருக்கும். வேண்டியபொழுதெல்லாம் தொழில்நிறுவனத்திற்குத் தக்க பாதுகாப்போடு கடன் கொடுக்கின்றது. கலப்பு வங்கிகள் தொழில்நிறுவனங்களைப்பற்றி நன்கு தெரிந்திருப்பதால், பொதுமக்களுக்கும் எப்படி முதலீடு செய்வதென்பதைப்பற்றி வழிகாட்டும் நிலையில் இருக்கின்றன.

கலப்பு வங்கிகள் வெற்றிகரமாகச் செயல்படவேண்டுமானால் அவை நடைமுறையில் சில கொள்கைகளையும் விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். வங்கி அதனுடைய ரொக்கத்தன்மையை முற்றிலும் இழந்துவிட முடியாது. ஆனால், அதே நேரத்தில் மிகுதியாக ஆதாயம் பெறும் வகையில் தன்னிடமுள்ள மூலதனத்தைப் பயன்படுத்துவதிலும் கவனம் தேவை. வங்கிகளிடம் செலுத்தப்பெற்ற முதலும் (Paid-up Capital), நிலையான வைப்பும் (Fixed Deposit) இருக்கின்றன. இந்த முறைகளில் கிடைக்கின்ற வங்கி நிதி ரொக்கமாக இருக்க வேண்டுமென்ற தேவை இல்லை. இதனை நீண்ட காலத்திற்குக் கடன் கொடுக்கவும் பயன்படுத்தலாம். வங்கியிடமுள்ள மொத்தப் பணத்தில் ஒரு குறிப்பிட்ட அளவை நீண்ட காலக் கடன் தரப் பயன்படுத்துவதால் தீங்கு ஒன்றும் நேராது.

கலப்பு வங்கி காலப்போக்கில் தனது செலுத்தப் பெற்ற மூலதனத்தின் அளவைக் கூட்ட முடியுமானால் துணிச்சலோடு தொழில்களுக்கு நீண்ட காலக் கடனை வழங்கலாம். வங்கிகளுக்கிடையில் கூட்டாகச் செயல்படும் முறையை வளர்க்கலாம். குறுகிய காலக் கடன்களை வங்கிகள் தனித்தனியாக வழங்கலாம். ஆனால், நீண்ட காலக் கடன்களைக் கூட்டு அமைப்பின் மூலமாக வழங்கலாம். இதனால் தனி வங்கிகளின் பொறுப்புக் குறையும்.

### நன்மைகள்

கலப்பு வங்கிமுறையில் சில குறிப்பிடத்தக்க நன்மைகள் உள்ளன. அவற்றைத் தொகுத்துக் கூறுவோம் :

முதலாவதாக, நாட்டில் தொழிலை அமைப்பதற்கும், நடத்துவதற்கும் வேண்டிய எல்லா வகையான முதலையும் வங்கிகள் வழங்குகின்றன. இதனால் நாட்டின் தொழில் வளர்ச்சி விரைந்து நடைபெறும்.

இரண்டாவதாக, பணம் படைத்தவர்கள் சிலர், நேரடியாகத் தொழில்களில் முதலீடு செய்யத் தயங்கலாம். அத்தகையவர்களுக்குக் கலப்பு வங்கி உதவுகின்றது. அவர்கள் தங்களுடைய பணத்தை வங்கிகளிடம் ஒப்படைக்கலாம். வங்கிகள் அதனைச் சரியான வகையில் முதலீடு செய்கின்றன.

மூன்றாவதாக, கலப்பு வங்கிகள் வாணிப, தொழில் நிறுவனங்களோடு நெருங்கிய தொடர்புகொண்டிருக்கின்றன. இதனால் அவற்றிற்கு நாட்டின் பல்வேறு பொருளாதார துறைகளைப் பற்றிய எல்லா விவரங்களும் தெரிந்திருக்கும். ஆதலால், அவற்றால் தொழிலை முன்னேற்றுதல், தொழில் சிக்கல்களைத் தீர்த்தல், அங்காடியை விரிவுபடுத்துதல் ஆகியவை குறித்து வேண்டிய ஆலோசனைகளை வழங்க முடியும்.

நான்காவதாக, நீண்ட காலக் கடன்களுக்கு அதிக வட்டி வாங்குவார்கள். இதனால் வங்கியின் வருவாய் மிகுதிப்படுவதைக் காணலாம்.

## தீமைகள்

கலப்பு வங்கி முறையில் கீழ்க்காணும் குறைகள் உள்ளடங்கி இருக்கின்றன.

முதலாவதாக, பணவாட்டக் காலங்களில் கலப்பு வங்கிகள் மிகவும் நட்டப்படுகின்ற சூழ்நிலை தோன்றும். கலப்பு வங்கிகள் பங்குகள், கடன்பத்திரங்கள் முதலியவற்றில் பெருமளவு முதலீடு செய்திருக்கும். பணவாட்டக் காலத்தில் கடன்பத்திரங்கள், பங்குகள் ஆகியவற்றின் மதிப்புக் குறையும். ஆதலால், வங்கிகள் தொழில்துறைகளில் செய்த முதலீட்டினால் மிகுதியாக நட்டப்படும்.

இரண்டாவதாக, நல்ல அங்காடி (Stock Market) அமைந்திருக்குமானால் கலப்பு வங்கிகள் ரொக்கத் தேவை ஏற்படுகின்ற பொழுதெல்லாம் தங்களிடமுள்ள பங்குகளை விற்றுப் பணமாக மாற்றிக்கொள்ளலாம். நல்ல பங்கு அங்காடி வளர்ச்சி பெறாத நாடுகளில், கலப்பு வங்கியால் ரொக்கத் தேவையைச் சமாளிக்க முடியாத நிலை ஏற்படலாம்.

மூன்றாவதாக, சொந்த முதல் மிகுதியாக வைத்திருக்கும் வங்கிகள், நீண்ட காலக் கடன் கொடுப்பதில் இடர்ப்பாடு

எதுவும் இருக்காது. மாறாகக் குறைந்த சொந்த முதல் உள்ள வங்கி, தொழில் கடன் கொடுப்பதால், அதன் நீர்மைத் தன்மை குறையக் குறைய நெருக்கடியான சூழ்நிலைகள் ஏற்படலாம்.

நான்காவதாக, நாட்டில் பொருளாதாரச் செழிப்பு இருக்கு மானால், தொழில்களில் மிகுதியாக இலாபம் கிடைக்கும். ஆதலால், மிகுந்த ஆதாயத்தை எதிர்நோக்கும் வங்கிகள், தொழில்களில் செய்கின்ற முதலீட்டின் அளவைக் கூட்டும். இதனால் நாட்டிலுள்ள பணவீக்கம் மேலும் அதிகமாகும்.

### ஜெர்மனியில் கலப்பு வங்கி முறை

ஜெர்மனியிலுள்ள வங்கிகள் தொழில்களுக்கு நீண்ட காலக் கடன் கொடுப்பதை விரும்பி மேற்கொள்ளவில்லை. சூழ்நிலை யின் காரணமாகத் தொழில் கடனை ஜெர்மானிய வங்கிகள் வழங்கத் தொடங்கின. இங்கிலாந்தோடு போட்டியிட்டுப் பெருந்தொழில்களை அமைக்க ஜெர்மனி முயன்றது. இங்கிலாந்தில் இறுதியான அடிப்படையின்மீது தொழில்கள் வளர்ந்திருந்தன. இந் நிலையில் ஜெர்மனியில் மூலதனப் பற்றாக்குறை இருந்தது. சொந்தமாக முதலீடு செய்யக்கூடிய தொழிலதிபர்களும் எண்ணிக்கையில் குறைவாக இருந்தனர். ஆதலால், தொழில்நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான முதலுக்கு வங்கிகளையே எதிர்பார்த்தன. நாட்டுமக்களின் சேமிப்புகளைச் சேர்க்கின்ற ஆற்றல் பெற்றிருந்த வங்கிகள் தொழில்நிறுவனங்களுக்குக் கடன் தரும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வது தேவையாயிற்று.

ஜெர்மனியில் மக்கள் வளமான வாழ்வு வாழவில்லை. வறுமையின் பிடியில் அகப்பட்டுப் பெரும்பாலான மக்கள் வாடிக் கொண்டிருந்தனர். இருந்தபோதிலும் மக்களிடம் ஓரளவு சேமிப்பு இருந்தது. அந்தச் சேமிப்பை எப்படித் திரட்டுவதென்பது பெரிய சிக்கலாக இருந்தது. சேமிப்பை வைத்திருந்தவர்கள் நேரடியாகத் தொழில்களில் முதலீடு செய்யவும் விரும்பவில்லை. தொழில்களில் முதலீடு செய்ய விரும்பிய மற்றவர்களுக்குக் கடன் தரவும் தயங்கினார்கள். அத்தகைய சூழ்நிலையில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஏதாவது ஒரு நிறுவனம் நாட்டிலுள்ள சேமிப்புகளை எல்லாம் ஒன்றுதிரட்டி, திரண்ட முதலைத் தொழில்வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது தேவையாயிற்று. இந்தப் பணியை ஜெர்மனி யிலுள்ள கடன் வங்கிகள் மேற்கொண்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தொழில் நிறுவனங்கள் இணைகின்ற போக்குக் காணப்பட்டது. பெரிய அளவில் நடைபெற்ற தொழில்களுக்கு அதிக அளவில் நிதி தேவைப்பட்டது. தனி நிறுவனங்களால் போதுமான அளவில் நிதியைத் தேடிக்கொள்ள முடியவில்லை. ஆதலால், அவை முதலுக்கு வங்கிகளையே எதிர்நோக்கின.

ஜெர்மன் வங்கிகள் தொடக்க காலத்திலிருந்தே பலவகையான பணிகளை மேற்கொண்டன. இங்கிலாந்தில் இருப்பதைப் போல் ஒவ்வொரு பணியையும் ஏற்றுச் செய்ய ஜெர்மனியில் தனி வங்கிகள் இல்லை. வணிக வங்கிகள், அடைமான வங்கிகள், கழிவு நிறுவனங்கள், நிறுவனங்களைத் தோற்றுவிப்பவர்கள், உண்டியல், பங்குத் தரகர்கள் ஆகிய எல்லாருடைய பணிகளையும் ஜெர்மன் வங்கிகள் செய்துவந்தன. ஆதலால், முதலீட்டுப் பணியையும் வங்கிகள் ஏற்க வேண்டியதாயிற்று. 1848-ல் ஜெர்மனியில் முதல் கூட்டுப் பங்கு வங்கி நிறுவப்பெற்றது. முதல் வங்கியே தொழில்வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டிருந்தது. அதுமுதல், காலப்போக்கில் தொழில்வளர்ச்சியில் வங்கிகளின் பங்கு அதிகமாயிற்று.

### பிறநாடுகளின் கலப்பு வங்கிமுறை

இரண்டு உலகப் போர்களுக்கும் இடையில் உலகில் பல நாடுகளில் கலப்பு வங்கிமுறைக்குச் சாதகமாகக் கருத்து உருவாகியது. வைப்பு வங்கியின் தாயகமான இங்கிலாந்தில் கூடத் தொழிலதிபர்கள் வங்கிகள் தொழில்களுக்கு வேண்டிய நீண்ட காலக் கடனைத் தரவேண்டுமென்று கருதினர். ஆனால், இங்கிலாந்து வங்கியாளர்கள் நீண்ட காலக் கடன் தருவதை விரும்பவில்லை. தொழில்களுக்கு நீண்ட காலக் கடன் கொடுப்பதற்காக பிரிட்டிஷ் வாணிபக் கழகத்தை (British Trade Corporation) அமைத்தனர். ஆனால், அஃது ஏற்றுமதிக்குக் கடன் கொடுத்ததேயொழியத் தொழில்நிறுவனங்களுக்கு வேண்டிய கடனைக் கொடுக்கவில்லை. 1929-30ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்து வங்கிகள் தொழில்நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்தன. பெரு மந்தத்தின் காரணமாகத் தொழில் நிறுவனங்களால் வாங்கிய கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த இயலவில்லை. ஆதலால், வங்கிகள் அவற்றை நீண்ட காலக் கடன்களாக மாற்றின. நிலக்கரி, எஃகு, இரும்பு, பருத்தித் தொழிற்சாலைகள் நீண்ட காலக் கடனைப் பெற்றன. தொழில்நிறுவனங்களுக்கு நீண்ட காலக் கடன் கொடுப்பதை

மரபுவழி வங்கிக் கொள்கையின் அடிப்படையில் சிலர் எதிர்த்த போதிலும்கூட, பெருமந்தக் காலத்தில் தொழில்களுக்கு நீண்ட காலக் கடன் இன்றியமையாத தேவையாக இருந்தது. இங்கிலாந்து வங்கியும் தொழில்களுக்குக் கடன் கொடுப்பதை ஆதரித்தது. வங்கியாளர்களின் தொழில்வளர்ச்சிக் குழு (Bankers Industrial Development Commission), கடன் பத்திர நிருவாகக் கழகம் (Security Management Trust) என இரண்டு அமைப்புகள் இங்கிலாந்து வங்கியின் ஒத்துழைப்போடு உருவாக்கப் பெற்றன. இங்கிலாந்து வங்கிகள் அளிக்கின்ற கடனில் ஏறத்தாழ 20 சதவீதம் உண்மையான சொத்துகளின் மீது தரப்பெறுகின்றன.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவில் வாணிப வங்கிகள் முதலீட்டு வங்கிகளின் பணிகளையும் மேற்கொண்டன. கலப்பு வங்கிகளாகப் பணியாற்றியவை மிகுதியாகத் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்தன. இதனால், பொருளாதார பெருமந்தக் காலத்தில் வங்கிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. எனவே, 1933ஆம் ஆண்டுச் சட்டம் முதலீட்டுப் பணிகளை வங்கிகளின் பணிகளிலிருந்து பிரிக்கின்றது. அதுமுதல் சொத்துகளை ஈடாகப் பெற்றுக் கொண்டு நீண்ட காலக் கடன் கொடுப்பதைச் சட்டம் தடை செய்ததால், வங்கிகள் நீண்ட காலக் கடன் கொடுப்பதை நிறுத்திக்கொண்டன.

உலகப் பெருமந்தக் காலத்தில் தொழில் வங்கிகள் பெருமளவில் வணிக வங்கிகளின் பணிகளை மேற்கொள்கின்ற போக்கு ஃபிரான்சில் காணப்பெற்றது. மற்றைய நாடுகளில் கலப்பு வங்கிமுறைக்குச் சில சட்டத் தடைகள் இருந்ததைப் போல, ஃபிரான்சில் இருக்கவில்லை. 1945-ல் வணிக வங்கிகளின் பணிகளையும் தொழில் வங்கிகளின் பணிகளையும் பிரித்தனர். இருந்தபோதிலும் முதலீட்டு வங்கிகள் பெரும்பாலான வணிக வங்கிகளின் பணிகளைச் செய்வதை இன்றும் காணலாம்.

### இந்தியாவில் கலப்பு வங்கி

நமது நாட்டிலும் ஜெர்மனி முறையைப் பின்பற்றி வணிக வங்கிகள் நீண்ட காலத் தொழில் கடன்களைக் கொடுக்க வேண்டுமென்று கருதுகின்றவர்கள் இருக்கின்றனர். வணிக வங்கிகள் தங்களுடைய இயல்பான பணிகளோடு தொழில் முதலீட்டுப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று

கருதுகின்றனர். நமது நாட்டு வங்கிகளும் கடந்த காலத்தில் மும்முறை நீண்ட காலக் கடன் கொடுக்கும் பணியை மேற் கொண்டிருந்தன. ஆனால், அவற்றின் விளைவுகள் ஆக்கமும் ஊக்கமும் தேடித்தருபவைகளாக இருந்ததில்லை.

1903 முதல் 1913 வரை நாட்டில் நடைபெற்ற சுதேசி இயக்கம் பல வங்கிகள் தோன்றக் காரணமாக இருந்தது. வங்கிகள் எந்த வகையான வேறுபாடும் காட்டாமல் தொழில் களுக்கு மிகுதியாகக் கடன் கொடுத்தன. 1913-ல் இந்திய மக்கள் வங்கி (People Bank of India) அதனுடைய மூலதனத்தில் பெரும் பகுதியைத் தொழில்களில் முதலீடு செய்த காரணத்தால் முறிந்தது. இதே நிலை பெரும்பாலான வங்கிகளுக்கும் ஏற்பட்டன. 1913 முதல் 1917 வரை 87 வங்கிகள் தோல்வி யடைந்தன.

1921-ல் மறுபடியும் வங்கிகள் தொழில்களுக்கு நீண்ட காலக் கடன் கொடுக்க முயன்றன. கிடைத்த அனுபவங்கள் கலப்பு வங்கி முறைக்குச் சாதகமாக அமையவில்லை. மூன்றாம் முறையாக, இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னர்ப் பல வங்கிகள் பங்குமாற்று ஊக வாணிபத்திற்காகக் (Stock exchange speculation) கடன் கொடுத்தன. இதனுடைய விளைவும் வங்கி களின் தோல்வியில் சென்று முடிந்தது. குறிப்பாக வங்காளத்தில் பல வங்கிகள் முறிந்தன.

ஆனால் வங்கிகள் நீண்ட காலத் தொழில் கடன்களையும் வழங்கவேண்டுமென்று கருதுகின்றவர்கள், கடந்த காலத்தில் வங்கிகள் தோல்வியடைந்தது தொழில் கடன்கள் கொடுத்த தால் மட்டும் அன்றென்றும், வேறு பல காரணங்களால் என்றும் சுட்டிக்காட்டுகின்றனர். மேலும், கலப்பு வங்கிமுறையைப் பின்பற்றத் தக்க சூழ்நிலைகள் நமது நாட்டில் உருவாகியிருக் கின்றதென்றும் கூறுகின்றனர். நாடு விடுதலை பெற்ற பின்னர் வங்கிகளின் வைப்புகள் ஏறத்தாழ மூன்று மடங்கு கூடியிருக் கின்றன. மொத்தத்தில் நிலைவைப்புத் (Fixed Deposit) தொகை மிகுந்திருக்கின்றது. 1962 ஜனவரியில் வைப்புக் காப்பீட்டுக் கழகத்தை (Deposit Insurance Corporation) அமைத்திருக்கின்றனர். இதனால் வைப்புகளுக்குரிய பாதுகாப்புக் கூடியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் வங்கிகள் நீண்ட காலத் தொழில் கடன் கொடுப்பது சரியானதே என்று வாதிடு கின்றனர்.

ஆனால், கலப்பு வங்கிமுறையில் நமது நாட்டு வங்கிகள் இயங்கக் கூடாதென்று கூறுபவர்கள் கீழ்க்காணும் காரணங்களைக் குறிப்பிடுகின்றனர்.

முதலாவதாக, போருக்கு முந்திய காலத்தில் இருந்ததைவிட நமது வாணிப வங்கிகள் இப்பொழுது அளவிலும் ஆற்றலிலும் வளர்ந்திருக்கின்றனவென்பது உண்மையே. ஆனால், ஜெர்மனி முதலிய நாடுகளில் கலப்பு வங்கிமுறையில் செயல்படுகின்ற நிறுவனங்களோடு ஒப்பிட்டால், நமது வங்கிகள் சிறியனவாகவே இருக்கின்றன. ஆதலால், இவை நீண்ட காலக் கடன் கொடுக்கும் பணியை மேற்கொள்வது அவ்வளவு நல்ல விளைவுகளைத் தரா.

இரண்டாவதாக, வங்கிகளின் வைப்புகளில் பெரும் பாலானவை குறுகிய கால வைப்புகளாகவே இருக்கின்றன. இவற்றை நீண்ட காலக் கடனில் முடக்குவது வங்கிகளுக்கு நெருக்கடி நிலையைத் தோற்றுவிக்கலாமென்றும் கூறப்படுகின்றது.

மூன்றாவதாக, தொழில்களுக்குக் கடன் கொடுக்க மிகுந்த தொழில்நுணுக்க அறிவும் நிருவாகத் திறனும் தேவைப்படுகின்றன. நமது வங்கிகளிடம் இத்தகைய ஆற்றல்கள் குறைவாக இருப்பதால், நீண்ட காலக் கடன் கொடுக்கும் பணியை மேற்கொள்ளாமல் இருப்பதே சிறந்ததென்று கூறப்படுகின்றது.

*1953*-ல் வணிக வங்கிகள் கடன் கொடுக்கின்ற முறையைப் பற்றி ஆராய்ந்த ஷிராப் குழு (Shroff Committee), வணிக வங்கிகள் அளித்துள்ள கடனில் மூன்றில் ஒரு பகுதி தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பெற்ற கடனென்று கூறுகின்றது. வணிக வங்கிகள் தொழில்நிறுவனங்களுக்கு நீண்ட காலக் கடன்கள் கொடுத்திருக்கின்றனவென்றும், அவைபற்றிய சரியான புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லையென்றும் குறிப்பிடுகின்றது. இக் குழுவின் கருத்துப்படி மறைமுகமான முறைகளில் வணிக வங்கிகள் தொழில்களுக்கான கடன்களை மிகுதியாகக் கொடுக்கலாமென்று பரிந்துரைத்துள்ளது. தொழில் நிதி நிறுவனம் போன்றவற்றில் பங்குகளையும் கடன்பத்திரங்களையும் வாங்குவதன்மூலம் தொழில் கடன்களில் மறைமுகமாக ஈடுபடலாமென்பதே ஷிராப் குழுவின் கருத்தாகும்.

இப்பொழுது நமது நாட்டில் தொழில்களுக்கு வேண்டிய நிதியை வழங்கத் தனி நிறுவனங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இரண்டாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தில் இந்திய அரசு ஒரு திட்டத்தை மேற்கொண்டது. அதன்படி விரிவடைகின்ற தொழில் நிறுவனங்களுக்கு வேண்டிய இடைக்காலக் கடன்களை (Medium term loans) வழங்க வணிக வங்கிகளுக்கு வாய்ப்புக் கிடைத்தது. 1958 ஜூனில் தொழில் மறுநிதிக் கழகம் (Refinance Corporation of Industry Ltd.) நிறுவப்பெற்றது. முதலில் 15 பதிவுபெற்ற பெரிய வங்கிகளுக்குத்தான் இதில் பங்கு பெற வாய்ப்புக் கிடைத்தது. 1959-60-ல் இந்தத் திட்டம் மேலும் 43 பதிவுபெற்ற வங்கிகளும், 15 மாநில நிதிக் கழகங்களும் (State Financial Corporations), 3 மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் பங்கு பெறும் வகையில் விரிவு செய்யப்பெற்றது.

1664-ல் தொழில் மறு நிதிக் கழகம் புதிதாகத் தொடங்கப் பெற்ற இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியோடு (Industrial Development Bank of India) இணைக்கப்பட்டது. இந்த வங்கி மறுநிதிக் கணக்கிலிருந்த தொகையில் 80 சதவீதம் மறு நிதியாக அளித்தது. மீதி 20 சதவீதம் வங்கியின் சொந்த நிதியிலிருந்து கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு ஆயிற்று.

இப்பொழுது நாட்டின் இருபது பெரிய வங்கிகளை நாட்டுடைமையாக்கிய சூழ்நிலையில், அவை அரசின் கொள்கைப்படி மிகுதியாகத் தொழில்வளர்ச்சியில் ஈடுபாடு காட்டுகின்றன. தொழில் நிறுவனங்களின் குறுகிய காலத் தேவையும் மிகுந்து வருகின்றது. ஆதலால், தொழில் நிறுவனங் களுக்கு வேண்டிய குறுகிய காலக் கடன்களை வழங்கும் பணிகளை வணிக வங்கிகள் திறமையாகச் செய்தால், நீண்ட காலக் கடன்கள் வழங்குவதை அதற்கென அமைந்த நிறுவனங்கள் கவனிக்குமென்று கூறப்படுகின்றது.

## துணை நூல்கள்

1. Sayers, 'Modern Banking', Chapter 2.
2. Madden and Nadlar, 'International Money Market'.
3. Dr. N. Das, 'Industrial Enterprise in India'.
4. S.K. Basu, 'A Survey of Contemporary Banking Trends', Part II, Chapter II.
5. S.C. Kuchhal, 'Corporation Finance', Chapter 19.
6. S.K. Basu, 'Industrial Finance in India'.
7. S.K. Muranjan, 'Modern Banking in India'.

# 5. வணிக வங்கிகளின் சொத்துகளும் பொறுப்புகளும்

வணிக வங்கிகளின் முதன்மையான பணி வாடிக்கைக்காரர் களிடமிருந்து வைப்புகளை ஏற்றுக்கொண்டு, அவர்கள் காசோலைகளின் மூலம் கேட்கின்றபொழுது பணத்தைத் தருவது என்ற போதிலும், அவை இலாப நோக்கில் செயல்படுகின்ற நிறுவனங்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆதலால், அவை, தங்களிடம் வருகின்ற வைப்புத் தொகைகளை ஆதாயம் கிடைக் கின்ற வழிகளில் பயன்படுத்த வேண்டும்.

இதற்காக வங்கிகள் தக்க வாடிக்கைக்காரர்களுக்குக் கடன் கொடுக்கின்ற, நல்ல வருவாய் தருகின்ற இனங்களில் முதலீடு செய்கின்ற பணிகளை மேற்கொள்கின்றன. ஆதலால்தான், வங்கிகள் வைப்புகளிலும் கடன்களிலும் வாணிபம் செய்கின்றன வென்று கூறப்படுகின்றது.

வங்கிக்குக் கிடைக்கின்ற ஆதாயம், அது தனது சொத்து களையும் (Assets), பொறுப்புகளையும் (Liabilities) எப்படி வைத்துக்கொள்கின்றது என்பதை ஒட்டி அமைகின்றது.

வங்கிக்குத் தான் வைத்திருக்கின்ற சொத்துகளிலிருந்து வருவாய் கிடைக்கின்றது. வங்கி தன்னிடமுள்ள வைப்புகளுக்கு வட்டி கொடுக்கவேண்டும். பொறுப்புகளினால் வரக்கூடிய வேறு சில செலவுகளையும் ஏற்கவேண்டும். ஆதலால், செலவினங்களை விட வருவாய் அதிகமாகக் கிடைக்கின்ற வகையில் சொத்துகளை யும் பொறுப்புகளையும் வைத்துக்கொள்வதில்தான் வங்கிகளின் வெற்றி அடங்கியிருக்கின்றது. இதனால், வங்கிகளின் சொத்து களையும் பொறுப்புகளையும்பற்றி அவை எந்தக் கோட் பாட்டின் அடிப்படையில் அமைகின்றன என்பதைப் பற்றியும் விரிவாகவும் தெளிவாகவும் ஆராயவேண்டியது அவசிய மாகின்றது.

## (அ) இருப்புநிலைக் குறிப்பு
(Balance Sheet)

வங்கிகளும் எல்லா வாணிப நிறுவனங்களையும் போன்றே செயல்படுகின்றன. பெரும்பாலும் வங்கிகள் கூட்டுப்பங்கு நிறுவனங்களாகச் செயல்படுகின்றன. ஆதலால், வங்கியின் பொருளாதார நிலை பங்குதாரர்களுக்குத் தெரிய ஆறு திங்களுக்கு ஒரு முறையோ, ஆண்டிற்கொரு முறையோ வங்கியின் நிலையைத் தெளிவாக விளக்குகின்ற அறிக்கை வெளியிடுவது தேவையாகும். அத்தகைய அறிக்கை வங்கியின் வாணிபத்தின் இயல்பையும், நிதி நிலைமையையும் வெளிக் காட்டுவதாக அமையவேண்டும். வங்கியின் 'இருப்புநிலைக் குறிப்பு' (Balance Sheet) இத்தகைய நிதி அறிக்கையாகப் பயன் படுகின்றது.

வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு, வங்கியின் சொத்துகளை யும் பொறுப்புகளையும் காட்டும் கண்ணாடியாக விளங்கு கின்றது. இருப்புநிலைக் குறிப்பில் இரண்டு பக்கங்கள் உள்ளன. வலப்பக்கத்தில் வங்கியின் சொத்துகளையும் இடப்பக்கத்தில் வங்கியின் பொறுப்புகளையும் எழுதுகின்றனர்.

வங்கியின் சொத்து என்பது அதனிடமிருக்கும் செல்வ மாகவோ, மற்றவர்களுக்குக் கொடுத்து இனி வரவேண்டி யிருக்கும் கடனாகவோ இருக்கும். பொறுப்பு என்பது வங்கி முன்னரேயே பெற்றுக்கொண்ட, இனித் தரவேண்டிய இனமாக இருக்கும். வங்கியின் சொத்துகளும் பொறுப்புகளும் மாறிக் கொண்டே இருக்கும். இருந்தாலும் வங்கியின் நிலையை அறியக் குறிப்பிட்ட தேதியில் இருக்கும் நிலையைக் காட்டும் வகையில் இருப்புநிலைக் குறிப்புத் தயாரிக்கப்படுகின்றது.

எல்லா இருப்புநிலைக் குறிப்புகளையும் போன்று வங்கியின் இருப்புநிலைக் குறிப்பிலும் சொத்துகளும் பொறுப்புகளும் சமமாக இருக்கவேண்டும். ஒரு வங்கி தனது சொத்துகளைக் கூட்டுகின்றபொழுது, நேரடியாக அதனுடைய பொறுப்புகளும் கூடுகின்றன. இன்னொரு வகையில் கூறினால், வங்கிகளின் பொறுப்புகள்தாம் சொத்துகளாக மாறுகின்றன. வங்கிப் பற்றுகளிலும் (Debits) வரவுகளிலும் (Credits) செய்கின்ற வாணிபத்தின் மொத்தத் தொகுப்பு நிலையைப் பார்த்தவுடன் வெளிக்காட்டுவதாக இருப்புநிலைக் குறிப்பு இருக்கின்றது.

31—12—71-ல்............................................................வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு

(Balance Sheet of...............................................................Bank as on 31—12—71)

| பொறுப்புகள் (Liabilities) | தொகை ரூ. | காசு | சொத்துகள் (Assets) | தொகை ரூ. | காசு |
|---|---|---|---|---|---|
| 1. முதல் (Capital) | | | 1. கையில் ரொக்கம் (Cash in hand) | | |
| (i) அனுமதித்த முதல் (Authorised Capital) | | | 2. மற்றைய வங்கிகளில் இருப்பு (Balance with other Banks) | | |
| (ii) வெளியிட்ட முதல் (Issued Capital) | | | (i) உள்நாட்டில் | | |
| | | | (ii) வெளிநாட்டில் | | |
| (iii) ஒப்பிய முதல் (Subscribed Capital) | | | 3. அழைப்பு, குறுந்தவணைக் கடன் (Money at Call and Short Notice) | | |
| (iv) அழைத்த முதல் (Called up Capital) | | | 4. முதலீடு (Investments) | | |
| (v) செலுத்திய முதல் (Paid up Capital) | | | (i) மத்திய, மாநில அரசுக் கடன் பத்திரங்கள் | | |
| | | | (ii பங்குகள் (Shares) | | |
| 2. ஒதுக்கு நிதியும் பிற காப்பு நிதிகளும் (Reserve Fund and other Reserves) | | | (iii) கடன் பத்திரங்கள் (Debentures or Bonds) | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. வைப்புகளும் பிற கணக்குகளும் (Deposits and other Accounts) | | | (iv) பிற முதலீடுகள் | | |
| (i) நிலை வைப்புகள் (Fixed Deposits) | | | (v) தங்கம் | | |
| (ii) சேமிப்பு வைப்புகள் (Savings Deposits) | | | 5. கடன், முன்பணம் (Loan and Advances) | | |
| (iii) நடப்புக் கணக்குகள் (Current Accounts) | | | (i) உள்நாட்டில் | | |
| 4. பிற வங்கிகளிடமிருந்து கடன் (Borrowings from other Banks) | | | (ii) வெளிநாட்டில் | | |
| 5. செலுத்த வேண்டிய மாற்றுச்சீட்டுகள் (Bills payable) | | | (iii) கழிவு செய்த மாற்றுச்சீட்டுகள் (Bills Discounted) | | |
| 6. வசூலில் உள்ள மாற்றுச்சீட்டுகள் (Bills for Collecting being Receivable) | | | 6. பெற வேண்டிய மாற்றுச்சீட்டுகள் (Bills Receivable) | | |
| (i) உள்நாட்டில் செலுத்த வேண்டியவை | | | 7. வாடிக்கையாளரின் ஏற்புகள் (Constituents' Liabilities for Acceptance) | | |
| (ii) வெளிநாட்டில் செலுத்த வேண்டியவை | | | 8. கட்டடம் (தேய்மானம் போக) Premises (Less Depreciation) | | |
| 7. பிற பொறுப்புகள் (Other Liabilities) | | | 9. தளவாடச் சாமான்கள் (கழிவு போக) Furnitures and Fixtures (Less Depreciation) | | |

| பொறுப்புகள் (Liabilities) | தொகை ரூ. | காசு | சொத்துகள் (Assets) | தொகை ரூ. | காசு |
|---|---|---|---|---|---|
| 8. ஏற்புகள், மேல் எழுத்துகள் (Acceptances and Endoresments) | | | 10. பிற சொத்துகள் (Other Assets) | | |
| 9. எதிர்பாராப் பொறுப்புகள் (Contingent Liabilities) | | | 11. இலாப-நட்டக் கணக்குப்படி—நட்டம் (Loss as per Profit and Loss Accounts) | | |
| 10. இலாப-நட்டக் கணக்குப்படி—இலாபம் (Profit as per the Profit and Loss Account) | | | | | |
| மொத்தம் (Total) | | | மொத்தம் (Total) | | |

இதனைப் பேராசிரியர் கிரௌதர், 'வங்கி வணிகத்தில் சிறப்பான வகையில் சொத்துகள், பொறுப்புகளின் இருப்பு நிலையை (இருப்புநிலைக் குறிப்பு) உணர்த்துகின்றது. வங்கி, தன் பொறுப்புகளை அதிகரித்துச் சொத்துகளைப் பெறுகின்றது. மற்றத் தொழிலில் உள்ளதுபோல் மறைமுக வாணிபத்தில் இது பெறப்படுவதில்லை; நேரிடையாகவே பெறப்படுகிறது. வங்கியின் சொத்துகள் நேரிடையாகவே அதன் பொறுப்புகளுக்கு ஈடாகப் பெறப்படுகின்றன' என்று கூறுகின்றார்.

பொதுவாக ஒரு வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு எப்படி அமையுமென்பதை, முன் மூன்று பக்கங்களிலுமுள்ள மாதிரி இருப்புநிலைக் குறிப்புக் காட்டுகின்றது.

பொறுப்புகள்: இருப்புநிலைக் குறிப்பின் வலப் பக்கத்தில் வங்கியின் பொறுப்புகள் குறிக்கப்பெற்றுள்ளன. இதிலிருந்து வங்கி தரவேண்டிய பணத்தின் அளவையும், வங்கியின் பொறுப்புகளின் இயல்புகளையும் அறியலாம். பொறுப்புகளை ஒவ்வொன்றாக விளக்குவோம்.

(1) முதல் (Capital): அனுமதித்த முதல் (Authorised Capital) என்பது ஒரு கூட்டுப்பங்கு. வங்கி, அதனுடைய பதிவு செய்த விதிகளின்படி (Memorandum of Association) உச்ச நிலையில் எவ்வளவு முதல் வைத்துக்கொள்ளலாமென்பதைக் காட்டுகின்றது. பொதுவாக இயக்குநர்கள் உச்சநிலையளவிற்குப் பங்குகளை முதலிலேயே வெளியிடமாட்டார்கள். எடுத்துக் காட்டாக ஒரு கூட்டுப்பங்கு நிறுவனத்தின் அனுமதித்த முதல் ரூ. 10,00,000 (நூறு ரூபா மதிப்புள்ள ஓர் இலட்சம் பங்குகளைக் கொண்டது) என்றால், அதில் எட்டு இலட்சம் ரூபாவுக்குள்ள பங்குகளை (எண்பதினாயிரம் பங்குகளை, முதலில் பொதுமக்கள் வாங்கும் பொருட்டு வெளியிடுவார்கள். இதனை வெளியிட்ட முதல் (Issued Capital) என்கின்றோம். வெளியிடுகின்ற பங்குகளை முழுவதுமாகவோ, ஒரு பகுதியையோ பொதுமக்கள் வாங்கலாம். உண்மையில் மக்கள் வாங்குகின்ற பங்குகளின் மதிப்பை ஒப்பிய முதல் (Subscribed Capital) என்று குறிப்பிடுகின்றோம். பங்குகளின் மொத்தத் தொகையையும் ஒரே தடவையில் செலுத்துவதில்லை; தவணைகளாகத்தாம் பங்குத் தொகையைச் செலுத்துவார்கள். தவணைகளாகச் செலுத்தும்படி பங்குதாரர்களைக் கேட்ட மொத்தத் தொகையை, அழைத்த முதல் (Called up Capital) எனக் குறிப்பிடுகின்றோம். கேட்ட பணத்தை எல்லாம் பங்குதாரர்கள்

செலுத்தியிருப்பார்கள் என்று கூறமுடியாது. உண்மையில் பங்குதாரர்கள் செலுத்திய பணத்தைச் 'செலுத்திய முதல்' (Paid up Capital) என்று குறிப்பிடுகின்றோம். இந்தப் பணத்தை வங்கி, பங்குதாரர்களுக்குத் தரவேண்டியிருப்பதால், இதுதான் வங்கியின் முதல் பொறுப்பாக இருக்கின்றது.

**(2) ஒதுக்கு நிதியும் பிற காப்பு நிதிகளும்** (Reserve Fund and other Reserves): பாதுகாப்புக் கருதி ஒவ்வொரு வங்கியும் ஒதுக்கு நிதியை உருவாக்குகின்றது; ஒவ்வோர் ஆண்டிலும் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்காத ஆதாயத்தை ஒதுக்கி வைக்கின்றது. இழப்பு ஏற்படுகின்ற காலத்தில் அதனை ஈடுகட்ட ஒதுக்கு நிதியிலிருந்து பணத்தை எடுத்துக்கொள்ளுகின்றனர். இதனால், ஒதுக்கு நிதியை விரைவாகப் பணமாக மாற்றக்கூடிய பத்திரங்களில் முதலீடு செய்வார்கள். ஒதுக்கு நிதியின் முக்கியத் துவத்தை எல்லாரும் உணர்ந்திருக்கின்றனர்.

நமது நாட்டில் 1949ஆம் ஆண்டின் வங்கிகள் நிறுவனச் சட்டத்தின் (Banking Companies Act) 17ஆம் பிரிவு, ஒவ்வொரு வங்கியும் அதனுடைய இலாபத்தில் 20 சதவீதத்தை ஒதுக்கு நிதியில் சேர்க்க வேண்டுமென்பதை வங்கியின் கடமையாக்கு கின்றது. இப்படி உருவாகின்ற ஒதுக்கு நிதி, நிறுவனத்தின் செலுத்திய முதலுக்குச் சமமாகின்றவரை ஆதாயத்திலிருந்து 20 சதவீதத்தை ஒதுக்கி வைக்க வேண்டும்.

ஒதுக்கு நிதியைப் போன்றே, 'இரகசிய ஒதுக்கு நிதிகள்' (Secret Reserves), 'கெட்ட கடன், ஐயப்பாடான கடன்' ஆகிய வற்றிற்கான ஒதுக்கு நிதிகள் (Reserves for Bad and Doubtful Debts), 'பங்குத் தொகை சமனப்படுத்தும் நிதி' (Dividend Equalisation Fund) முதலிய நிதிகளையும் உருவாக்குகின்றனர். இத்தகைய நிதிகள் எல்லாம் நெருக்கடி நேரங்களில் வங்கி களுக்குத் துணைநிற்கும் ஊன்றுகோல்களாக உள்ளன.

**(3) வைப்புகள்** (Deposits): வங்கிகளின் முக்கியமான பொறுப்பாக வைப்பு இருக்கின்றது. இதனுடைய பொருளாதார முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கதாகும். ஏனென்றால், வளர்ச்சி பெற்ற நாடுகளில் பணத்தின் ஒரு வகையாக இஃது அமைகின்றது. வங்கிகள் மூன்று வகையான வைப்புகளைப் பெறுகின்றன. முதலாவது, நடப்பு வைப்புகள் (Current Deposits or Demand Deposits). இந்தப் பணத்தை எந்த நேரத்திலும் வாடிக்கை யாளர்கள் திரும்பப் பெறலாம். இரண்டாவதாக, சேமிப்பு

வைப்புகளைச் (Savings Deposits) சில வரையறைகளுக்கு உட்பட்டு வாடிக்கையாளர்கள் எடுக்கலாம். மூன்றாவதாக, நிலை வைப்புகளை (Fixed Deposits), ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர்தான் திரும்பப் பெற முடியும். வைப்புகளை எல்லாம் வங்கி திருப்பித்தர வேண்டுமாதலால் அவை பொறுப்புகளாகின்றன.

கீன்ஸ் (Keynes), தமது 'பணத்தைப் பற்றிய ஆய்வு' (Treatise on Money) என்னும் நூலில் வைப்புகளை வேறு வகையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்றார். அவை, 'வருவாய் வைப்புகள்' (Income Deposits), 'வாணிப வைப்புகள்' (Business Deposits), 'சேமிப்பு வைப்புகள்' (Savings Deposits) என்பனவாகும். ஒருவர் வருவாய் பெறுவதற்கும், செலவிடுவதற்கும் இடையில் கால இடைவெளி இருக்கின்றது. ஆதலால், செலவுக்குத் தேவையான பணத்தை எடுக்கின்ற முறையில் அமைகின்ற வைப்புகளை 'வருவாய் வைப்புகள்' என்கிறார். வாணிபத் தேவைகளுக்காகப் பணத்தைப் பயன்படுத்தும் வகையில் வங்கியில் பணம் போட்டு வைப்பது வாணிப வைப்புகளாகும். வருவாய் வைப்புகளும், வாணிப வைப்புகளும் நடப்புக் கணக்கு (Current Account) வகையைச் சேர்ந்தவை. முதலீட்டு நோக்கில் வங்கிகளிடம் போட்டு வைக்கின்ற வைப்பைக் கீன்ஸ், 'சேமிப்பு வைப்பு' என்கின்றார். இது நிலை வைப்பைப் போன்றதாகும்.

**(4) பிற வங்கிகளிடமிருந்து கடன் :** வங்கி, மைய வங்கியிடமிருந்தும், பிற வங்கிகளிடமிருந்தும் கடன் பெறுகின்றது. இந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவது வங்கியின் பொறுப்பாகும்.

**(5) செலுத்த வேண்டிய மாற்றுச்சீட்டுகள் :** வங்கிகள் பணம் செலுத்திப் பெற வேண்டிய மாற்றுச்சீட்டுகள் மற்றைய ஆள்களிடமோ, வங்கிகளிடமோ இருக்கலாம். அவற்றிற்குப் பணம் கொடுக்க வேண்டும். மேலும் வங்கிகள் பணம் பெற்றுக் கொண்டு வாடிக்கைக்காரர்களுக்குப் 'பேற்றுரிமைச் சீட்டுகள்' (Drafts) வழங்கியிருக்கலாம். அவற்றிற்கு இனிமேல் கேட்கின்ற பொழுது பணம் தரவேண்டும். இது வங்கியின் பொறுப்பாகும்.

**(6) வசூலில் உள்ள மாற்றுச்சீட்டுகள் :** வாடிக்கையாளர்கள் தங்களிடமுள்ள மாற்றுச்சீட்டுகளுக்கு உரிய காலத்தில்

பணம் வாங்குகின்ற பொறுப்பை வங்கியிடம் ஒப்படைத் திருப்பார்கள். பணத்தை வசூலித்து வாடிக்கையாளர்களுக்குத் தரவேண்டியது வங்கியின் பொறுப்பாகும்.

**(7)** பிற பொறுப்புகள்: வங்கி, பிறருக்குத் தரவேண்டிய சில தொகைகள் வங்கியிடமே இருக்கலாம். எடுத்துக்காட்டாக, பங்குதாரர்கள் பெற்றுக்கொள்ளாத பங்குத்தொகை, செலுத்து வதற்காக ஒதுக்கி வைத்திருக்கும் வரித்தொகை, வட்டி முதலியவை பிற பொறுப்புகள் என்ற பிரிவில் அடங்கும்.

**(8) ஏற்புகள், மேல் எழுத்துகள்:** வங்கி வாடிக்கையாளர் களுக்காகச் சில மாற்று உண்டியல்களை ஏற்றுக்கொண்டோ (Acceptances) மேல் எழுத்தளித்தோ (Endorsement) இருக்கலாம். அவற்றிற்கு உரிய காலத்தில் பணம் தருவது வங்கியின் பொறுப்பாகும்.

**(9)** எதிர்பாராப் பொறுப்புகள் (Contingent Liabilities): சில எதிர்பாராத பொறுப்புகளை வங்கிகள் ஏற்கவேண்டி யிருக்கும். எடுத்துக்காட்டாக, இயக்குநர்கள், அலுவலர்கள் சார்பில் வங்கி பணம் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கலாம். சில வகையான பங்குகளுக்கு (Cumulative Preference Shares) இலாபப் பங்குப் பணத்தைச் சேர்த்துத் தரவேண்டும். அது வங்கிக்குப் பொறுப்பாகும்.

**சொத்துகள்:** இருப்புநிலைக் குறிப்பின் வலப்பக்கத்தில் சொத்துகளைக் குறிக்கின்றனர். வங்கியின் சொத்துகளிலிருந்து வங்கியின் நிதி எப்படிப் பயன்படுத்தப் பெற்றிருக்கின்ற தென்பதை அறியலாம். வங்கியின் சொத்துகளை அவற்றை ரொக்கமாக மாற்றக்கூடிய நீர்மைத் தன்மையின் அடிப் படையில் வரிசைப்படுத்தி எழுதுவார்கள். வங்கிகளின் சொத்து களைப்பற்றி ஆராய்வது சுவையானதாகும். அதே நேரத்தில் இது சிக்கல்கள் பல நிறைந்தனவாகவும் இருக்கும். வங்கியின் வெற்றி அஃது எப்படித் தனது சொத்துகளை வைத்துக் கொள்கின்றதென்பதை ஒட்டி அமைகின்றது.

வங்கி வருவாய் நோக்கில் தனது பொறுப்புகளைச் சொத்துகளாக மாற்றுகின்றது. இப்படிச் சொத்துகளை உருவாக்குகின்ற பொழுது மூன்று முக்கியமானவற்றை வங்கி கவனிக்க வேண்டும். அவை, 'இலாபத்தன்மை' (Profitability), 'ரொக்கத்தன்மை' (Liquidity), 'பாதுகாப்புத்தன்மை' (Safety) என்பவையாகும்.

முதலாவதாக, வங்கியின் சொத்துகளிலிருந்து கிடைக்கக் கூடிய வருவாயை—இலாபத்தை—கவனிக்கும் வாணிப நிறுவனம் என்ற முறையில் அதனுடைய நடைமுறைச் செலவுக்கு வேண்டிய வருவாயைப் பெறுவது வணிக வங்கியின் இன்றி யமையாத தேவையாகும். மேலும், வங்கிக்கு முதலீடு செய்தவர்களுக்கு ஓரளவாவது இலாபத்தில் பங்கு தரவேண்டும். ஆதலால், ஓரளவு போதுமான அளவு வருவாய் கிடைக்கத்தக்க வகையில் வங்கி, தனது சொத்துகளை அமைத்துக்கொள்வது தேவையாகின்றது.

இரண்டாவதாக, வங்கியின் நோக்கம் இலாபம் பெறுவதாக இருந்தபோதிலும், வங்கி, வைப்புகள் வைத்திருக்கின்ற வாடிக்கையாளர்கள் காசோலை மூலம் பணம் கேட்கின்ற பொழுது பணம் கொடுக்க வேண்டிய தலையாய கடமையை மறந்துவிடக் கூடாது. ஆதலால், எப்பொழுதும் ஓரளவு ரொக்கம் வைத்துக்கொள்வது வங்கிக்குத் தேவையானதாக இருக்கின்றது. ரொக்கத்தன்மை என்பது கையில் ரொக்கமாக வைத்திருக்கின்ற பணத்தை மட்டும் குறிப்பதில்லை. தேவை யான பொழுது எளிதாக மாற்றிக்கொள்ளக்கூடிய சொத்து கையிலிருந்தாலும், அதனை ரொக்கத்தன்மையுடையதாகக் கருதுகின்றோம். வங்கி, பொதுமக்களிடம் உருவாக்குகின்ற நம்பிக்கையை ஒட்டித்தான் தொழிலில் வெற்றிபெற முடியும். இந்த நம்பிக்கையை உருவாக்க வாடிக்கையாளர்கள் கேட்கின்ற பொழுதெல்லாம் பணம் கொடுக்கின்ற நிலையில் வங்கி இருக்க வேண்டும். ஆதலால், நல்ல இலாபமான சொத்துகளில் முதலீடு செய்கின்ற பொழுது, அவற்றின் ரொக்கத் தன்மை யையும் கவனிக்கவேண்டும்.

மூன்றாவதாக, வங்கி முதலீடு செய்கின்ற சொத்துகள் பாதுகாப்பானவைகளா என்பதையும் பார்க்கவேண்டும். சொத்து, பாதுகாப்பான இனமாக இருப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். வங்கிப் பணம் மற்றவர்களுடைய தாகையால், அந்தப் பணத்தைச் செலவிடுவதில் வங்கி மிகவும் கவனமாக இருக்க வேண்டியது தேவையாகின்றது.

**(1) ரொக்கம் (Cash) :** வங்கி தன்னிடம் ஓரளவு பணத்தை எப்பொழுதும் ரொக்கமாக வைத்திருக்க வேண்டும். வாடிக்கை யாளர்கள் காசோலைகள் மூலம் பணம் கேட்கின்றபொழுது தங்குதடையின்றிப் பணம் கொடுக்கக் கையில் ரொக்கம் தேவைப்படுகின்றது. ஆனால், இந்த ரொக்கப் பணம்

வங்கியின் மொத்த வைப்போடு ஒப்பிடுகின்றபொழுது மிகவும் குறைவான அளவிலேயே இருக்கும். வங்கி, நாள்தோறும் சில புதிய வைப்புகளையும் ஏற்குமாதலால், அந்தப் பணத்தையும் கேட்கின்ற வாடிக்கையாளர்களுக்குப் பணம் கொடுக்கப் பயன்படுத்தலாம். அதற்கு மேலும் தேவைப்படுகின்ற பணத்திற்குத்தான் ரொக்கம் கையில் வைத்திருப்பது தேவையாகின்றது.

ரொக்கமாக வைத்திருக்கின்ற பணத்தினால் வங்கிக்கு ஆதாயம் கிடைக்காது. ஆதலால், ரொக்கப் பணத்தைக் குறைவான அளவில் வைத்துக்கொள்ளவே வங்கி விரும்பும். இடர்ப்பாடு ஏற்படாத வகையில் வங்கி ரொக்கம் வைத்துக் கொள்வதை முடிவு செய்யவேண்டும். எந்த விகிதத்தில் ரொக்கப் பணம் வைத்துக்கொள்வதென்பது நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. இங்கிலாந்தில் வங்கியினுடைய மொத்த வைப்பில் எட்டுச் சதவீதம் ரொக்கமாக இருக்கவேண்டுமென்று கருதப்படுகின்றது. இங்கிலாந்து வங்கியில் மொத்த வைப்பில் நான்கு சதவீதத்தை வணிக வங்கிகள் வைத்திருப்பது மரபுவழித் தேவையாக இருக்கின்றது.

நமது நாட்டில் வங்கிகள் வைத்திருக்கின்ற ரொக்கம் மற்றைய நாடுகள் வைத்திருக்கின்ற ரொக்கத்தோடு ஒப்பிடுகின்றபொழுது அதிகமாக இருக்கின்றது. நாட்டில் பல வகையான வங்கிகள் இருப்பதனைப் போன்றே, வங்கிகள் வைத்திருக்கின்ற ரொக்க விகிதத்திலும் வேறுபாடு இருக்கின்றன. இந்திய வங்கிகள் அவற்றினுடைய மொத்த வைப்பில் 15 சதவீதம்வரை ரொக்கமாக வைத்திருக்கின்றன. 1949ஆம் ஆண்டின் சட்டப்படி, ஒவ்வொரு வங்கியும் ரிசர்வ் வங்கியில் நடப்பு வைப்பில் ஐந்து சதவீதமும், நிலை வைப்பில் இரண்டு சதவீதமும் இருப்பு வைக்க வேண்டும். 1963ஆம் ஆண்டின் திருத்திய சட்டப்படி, மொத்த வைப்பில் மூன்று சதவீதத்திற்குக் குறையாமலும் 15 சதவீதத்திற்குமேல் போகாமலும் ரிசர்வ் வங்கியில் இருப்பு வைக்க வேண்டும்.

**(2)** மற்றைய வங்கிகளில் இருப்பு: வணிக வங்கிகள் சட்டப்படி ரொக்கத் தன்மையைக் காப்பாற்ற மைய வங்கியில் இருப்பு வைத்துக்கொள்ளுகின்றன. இது தவிர, பிற வங்கிகளிடமும் ஓரளவு பணத்தை வைத்திருக்கலாம். இது வங்கிகளின் பணிகளை ஒட்டி அமையும். வெளிநாடுகளிலும் தொடர்பு கொள்ளுகின்ற வங்கி உள்நாட்டில் மட்டுமன்றி, வெளிநாடுகளிலுள்ள வங்கிகளிலும் இருப்பு வைத்துக்கொள்ளும்.

**(3) அழைப்பு, குறுந்தவணைக் கடன்** (Money at call and short notice): கேட்டவுடனேயோ, குறுகிய கால அறிவிப்பிலோ கிடைக்கும் வகையில் வங்கி கடன் கொடுத்து வைக்கலாம். இங்கிலாந்தில் கழிவகங்களுக்கும் (Discount Houses), மாற்றுச் சீட்டுத் தரகர்களுக்கும் (Bill Brokers) இத்தகைய கடன்களை வங்கிகள் வழங்குகின்றன. 24 மணி நேரத்திற்கும் குறைவான அறிவிப்பில் இவற்றைத் திருப்பிப் பெறமுடியும். இத்தகைய கடன்களுக்கு மிகவும் குறைந்த அளவில்தான் வட்டிவீதம் இருக்கும். இங்கிலாந்தில் மாற்றுச்சீட்டுச் சந்தை (Bill Market) வளர்ச்சி பெற்றிருப்பது, இத்தகைய கடன்களுக்கு மிகுந்த வாய்ப்பளிக்கின்றது. அங்குத் தனி மனிதர்களும், நிறுவனங்களும் மாற்றுச்சீட்டைக் கழிவு செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த நிறுவனங்கள் தங்கள் முதலையும், வணிக வங்கிகளிடம் வாங்குகின்ற கடன்களையும் கழிவகங்களில் பயன்படுத்துகின்றன. வங்கிகளுக்கு இத்தகைய கடன்களின் மூலம் ½ சதவீதம் முதல் 1 சதவீதம் வரைதான் வட்டி வருவாய் கிடைக்கின்றது. ஆனால், இந்தக் கடன்களில் ரொக்கத் தன்மை மிகுதி. கேட்டவுடன் பணம் திரும்பக் கிடைக்கும். நெருக்கடிக் காலங்களில் வங்கிகளுக்கு இவை பெரிதும் கைகொடுக்கின்றன.

மாற்றுச்சீட்டு அங்காடி வளர்ச்சி பெறாத நாடுகளில் பங்கு மாற்று நிலையங்களுக்காக (Stock Exchanges) இத்தகைய கடன்களைத் தருகின்றனர். எடுத்துக்காட்டாக அமெரிக்காவில் பங்குச் சந்தையில் உள்ளவர்கள் இத்தகைய கடன்களைப் பெறுகின்றனர்.

நமது நாட்டில் மாற்றுச்சீட்டுச் சந்தையோ பங்குச் சந்தையோ நன்கு வளர்ச்சி பெறவில்லை. இங்குப் பெரும்பாலும் வங்கிகளுக்கு இடையில் கொடுத்து வாங்குவதும், தங்க அங்காடியிலுள்ளோர் வாங்குவதும் கேட்டவுடன் கிடைக்கின்ற கடனாக அமைகின்றது. மிகப்பெரிய செல்வந்தர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இத்தகைய கடன்களைப் பெறுகின்றனர். நமது நாட்டில் அழைப்பு, குறுந்தவணைக் கடன்களுக்குரிய வட்டிவீதம் பருவகாலத்தை ஒட்டியும், கடனின் தேவை, பண அளிப்பு ஆகியவற்றைச் சார்ந்தும் வேறுபடுகின்றது.

**(4) முதலீடு** (Investment): வங்கிகள் இலாபம் கிடைக்கின்ற வகைகளில் தங்களுடைய பணத்தை முதலீடு செய்கின்றன. இத்தகைய முதலீடுகள் பல வகைகளில் அமையலாம்.

மத்திய, மாநில அரசுகளின் கடன் பத்திரங்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இவற்றில் வங்கிகள் முதலீடு செய்யலாம். பொதுத்துறை வளர்ச்சி பெற்றுவிட்ட இந்தக் காலத்தில் வங்கிகள் முதலீடு செய்யப் பலவகையான பங்குப் பத்திரங்களும், கடன் பத்திரங்களும் கிடைக்கின்றன. தங்கத்திலும் வங்கிகள் முதலீடு செய்யலாம்.

இத்தகைய முதலீடுகளில் ஈடுபடுத்தப்பெற்ற பணத்தை விரைவில் பெறலாம். ஆனால் கிடைக்கின்ற பணம், பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றிற்குரிய அங்காடி விலையை ஒட்டி அமையும்.

**(5) கடன், முன்பணம்** (Loan and Advance): வங்கியின் பணிகளில் மையமானதாகவும், முக்கியமானதாகவும் அமைவது கடன் கொடுக்கின்ற பணியாகும். கடன் முன்பணத்தில் கிடைக்கின்ற வருவாய்தான் வங்கியின் வருவாயில் பெரும் பகுதியாக இருக்கின்றது. கடன் கொடுப்பதில் வருவாய் மிகுதியாகக் கிடைத்தபோதிலும், அதனுடைய ரொக்கத்தன்மை பெரும்பாலும் குறைவாக இருப்பது கவனிக்கத்தக்கதாகும். கடன்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வாங்குகின்றனர். அந்தக் காலம் முடிவதற்குள் பணத்தைத் திரும்பப் பெறமுடியாது.

வங்கி இரண்டு முறைகளில் கடன் தருகின்றது. ஒன்று மேல்வரைப் பற்றுக் (Over Draft) கடன். இதில் எந்த அளவு வரை வாடிக்கையாளர் கடன் பெறலாம் என்பதை முடிவு செய்கின்றனர். உண்மையில் பெற்றுக்கொண்ட கடனுக்கு மட்டுந்தான் வட்டி வாங்கப் பெறுகின்றது. இரண்டாவது வகை, ரொக்கக் கடன் (Cash Credit) முறையாகும். இதில் பெற்றுக் கொள்ளுகின்ற கடனுக்கெல்லாம் வட்டி கிடைக்கின்றது. பெரும்பாலும் கடன் வாங்குகின்றவர்கள் பணத்தை ரொக்கமாகப் பெறுவதில்லை. அவர்கள் கணக்கில் பணம் வரவு வைத்துக் கொள்ளப்படுகின்றது. கேட்கின்ற பொழுதெல்லாம் அவர்களுக்குப் பணம் கிடைக்கும்.

கடன் கொடுப்பதைப் போன்ற நடைமுறைதான் வங்கிகளின் மாற்றுச்சீட்டுக் கழிவு செய்வதுமாகும். வாணிப மாற்றுச்சீட்டுகளைப் பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட அளவு கழிவுத் தொகையைக் கழித்துக்கொண்டு வங்கி பணம் தருகின்றது. இந்தப் பணம் மாற்றுச்சீட்டைக் கொடுத்த வாடிக்கையாளரின் கணக்கில் பற்றில் எழுதப் பெறுகின்றது. உரிய காலத்தில் வங்கி மாற்றுச்சீட்டுக்குரிய மொத்தப்

பணத்தைப் பெறுகின்றது. கழிவு செய்த தொகை வங்கிக்கு வரவாக இருக்கின்றது. பணம் கிடைத்தவுடன் வாடிக்கை யாளர் கணக்கை வரவு வைப்பார்கள்.

**(6) பெற வேண்டிய மாற்றுச்சீட்டுகள் :** வங்கியிடம் இருக் கின்ற மாற்றுச்சீட்டுகள் எல்லாம் வங்கியின் சொத்துகள் ஆகும். உரிய காலத்தில் இவற்றிற்குப் பணம் கிடைக்கும்.

**(7) வாடிக்கையாளரின் ஏற்புகள் (Constituent's Liabilities for Acceptances):** வாடிக்கையாளர்களின் கடன்களுக்கு வங்கிகள் பொறுப்பேற்றுக் கொள்ளலாம். அப்பொழுது, பொறுப்பேற்றுக் கொண்ட தொகைகளுக்கு வாடிக்கையாளர் களிடம் பொறுப்புகளை எழுதி வாங்குவார்கள். இவை வங்கி களுக்குச் சொத்தாக இருக்கும்.

**(8) கட்டடம் (Premises):** வங்கிக்குச் சொந்தமான கட்டடம் வங்கியின் சொத்தாகும். ஆண்டுதோறும் அதில் ஒரு பகுதியைத் தேய்மானத்திற்காகக் கழிப்பார்கள்.

**(9) தளவாடச் சாமான்கள் (Furniture and Fixtures):** வங்கிகள் திறமையாகச் செயல்பட மேஜை, நாற்காலிகள், தட்டெழுத்து எந்திரம் முதலிய கருவிகள் தேவை. இவற்றி லிருந்து வங்கிக்கு எந்த வருவாயும் கிடைக்காது. ஆண்டு தோறும் இவற்றின் தேய்மானத்திற்காக இவற்றின் மதிப்பி லிருந்து ஓரளவு தொகையைக் கழித்துவிடுவார்கள்.

**(10) பிற சொத்துகள் :** சில சொத்துகள் முன் குறிப்பிட்ட எந்த வகையிலும் அடங்கா. எடுத்துக்காட்டாக, நீதிமன்றத்தி லிருக்கும் சொத்துகளைக் கூறலாம்.

**(11) நட்டம் :** வங்கிக்கு ஏற்படக்கூடிய நட்டத்தை முதலில் சொத்தின் பக்கத்தில் குறிப்பார்கள். பின்னர் இந்தத் தொகையை ஒதுக்கு நிதியிலிருந்து கழித்துவிடுவார்கள்.

## (ஆ) ரொக்க வீத நிருணயம்
### (Determining the Cash Ratio)

வணிக வங்கிகளின் தலையாய கடமை வாடிக்கையாளர் களின் காசோலைகள் வருகின்றபோதெல்லாம் அவற்றிற்கு ரொக்கமாகப் பணந்தரவேண்டும். அப்பொழுதுதான் வங்கிகள் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் திறமையாகச் செயல்பட

இயலும். இதற்காக நிறையப் பணத்தை வங்கி ரொக்கமாக வைத்திருந்தால் அதற்கு வரக்கூடிய வருவாய் குறையும். ஆனால், வங்கிகள் ரொக்க இருப்பை மிகவும் குறைவாக வைத்திருக்குமானால் வாடிக்கையார்களின் காசோலைகளுக்குப் பணம் கொடுக்க இயலாமல் வங்கிகள் முறிவு அடையவேண்டி யிருக்கும்.

பெரும்பாலான நாடுகளில் மொத்த வைப்புகளில் எவ்வளவு சதவீதத்தை ரொக்கமாக வைத்துக்கொள்ள வேண்டுமென் பதைச் சட்டத்தின் மூலம் அரசு நிருணயிக்கின்றது.

வங்கி, சட்டத்தின் மூலம் ரொக்க வீதத்தை நிருணயிக்கா விட்டாலும், ஒவ்வொரு வங்கியும் தேவையை ஒட்டி ஒரு குறிப் பிட்ட அளவு பணத்தை ரொக்கமாக வைத்திருப்பதுதான் பாதுகாப்பென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எந்த விகிதத்தில் ரொக்கத்தை வைத்துக்கொள்ள வேண்டு மென்பதை வங்கியின் மேலாளர் முடிவு செய்கின்றார். ரொக்க வீதம் இடத்திற்கு இடமும், காலத்திற்குக் காலமும் வேறுபடும். ரொக்க வீதத்தை நிருணயிக்கின்ற பொழுது கவனிக்க வேண்டிய காரணிகளைத் தொகுத்துக் கூறலாம்.

முதலாவதாக, வைப்புகளின் அளவையொட்டி வங்கி வைத் திருக்கின்ற ரொக்கத்தின் அளவு அமையும். எண்ணிக்கையில் மிகுதியான வாடிக்கையாளர்கள் குறைவான அளவில் வைப்பு களை வைத்திருந்தால், அவர்கள் சிறிய அளவிலேயே பணத்தைத் திரும்பப் பெறுவார்களென்று எதிர்பார்க்கலாம். ஆதலால், குறைந்த அளவில் ரொக்கத்தை வைத்துக்கொண்டு வாடிக்கை யாளர்கள் கேட்கின்றபொழுது பணம் கொடுக்க இயலும். ஆனால், சில செல்வந்தர்கள் மிகவும் அதிகமான அளவில் வங்கியில் வைப்புகளை வைத்திருந்தால், அவர்கள் பணம் எடுக்கின்றபொழுது மிகுதியான அளவிலேயே ரொக்கப் பணத்தை வைத்திருக்க வேண்டியிருக்கும். ஏனென்றால், ஒருவர் இலட்சக் கணக்கில் திடீரென்று பணத்தை எடுத்தாலும் வங்கியில் நெருக்கடி ஏற்படும். இந் நிலை ஏற்படாமல் பார்க்க வேண்டியது வங்கியாளரின் கடமையாகும்.

இரண்டாவதாக, நாட்டில் நடைபெறுகின்ற வாணிப நடவடிக்கைகளின் அளவையும், இயல்பையும், எண்ணிக் கையையும் ஒட்டி ரொக்க அளவு நிருணயிக்கப்படும். வாணிபம் மிகுதியாகவும், விரைவாகவும் நடைபெறுகின்றபோது, அதிக

அளவில் ரொக்கம் வைத்திருக்கவேண்டும். வாணிப மந்தக் காலங்களில் ரொக்க இருப்பைக் குறைத்துக்கொள்ளலாம். வாணிப நடவடிக்கைகள் சில பருவகாலத்தில் அதிகப்படலாம். எடுத்துக்காட்டாக, திருவிழாக்காலங்களில் வாணிப நடவடிக்கைகள் கூடுவதையும், ரொக்கப் பணத்தின் தேவை அதிகமாவதையும் காணலாம். அத்தகைய சூழ்நிலைகளில் வங்கிகள் அதிகமாக ரொக்கம் வைத்திருக்க வேண்டும்.

மூன்றாவதாக, நாட்டுமக்களின் வங்கிப் பழக்கத்திற்கும் வங்கியின் ரொக்கக் கையிருப்பிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. மக்களிடம் வங்கிப் பழக்கம் மிகுந்திருக்குமானால் காசோலைகளுக்குப் பெரும்பாலும் பணம் கேட்கமாட்டார்கள். காசோலைகளை மக்கள் பணம்போலப் பயன்படுத்துவார்கள். அத்தகைய சூழ்நிலையில் வங்கிகளால் குறைந்த அளவு ரொக்கத்தை வைத்துக்கொண்டே தங்களுடைய பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும். மக்களிடம் வங்கிப் பழக்கம் இல்லாத நாட்டில் காசோலைகளுக்கு ரொக்கமாகப் பணம் தரவேண்டிய தேவை அதிகமாக இருக்கும். ஆதலால், அதிக அளவில் ரொக்கம் வைத்துக்கொள்ள வேண்டும்.

நான்காவதாக, நாட்டில் தீர்வகங்கள் (Clearing Houses) பணியாற்றுவதை ஒட்டியும் ரொக்கத்தின் அளவு அமையும். தீர்வகங்கள் செம்மையாகச் செயல்படுமானால் காசோலைகளுக்கு நேரடியாகப் பணம் கொடுக்காமலேயே வங்கிகள் தங்களிடம் இருக்கும் காசோலைகளை மாற்றிக்கொள்ள வாய்ப்புகள் இருக்கும். இதனால் குறைந்த அளவில் ரொக்கத்தை வைத்துக்கொண்டே வங்கிகளால் செயல்பட முடியும். தீர்வகங்கள் இல்லாத நாட்டில் மிகுதியாக ரொக்கம் வைத்திருக்கவேண்டும்.

ஐந்தாவதாக, மற்றைய வங்கிகளின் ரொக்க இருப்பைச் சார்ந்து ஒரு வங்கியின் ரொக்க அளவு அமைகின்றது. மற்றைய வங்கிகள் வைத்திருக்கின்ற ரொக்க வீதத்திற்குக் குறையாமல் ஒவ்வொரு வங்கியும் கையில் ரொக்கம் வைத்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற முடியும்.

ஆறாவதாக, வங்கி வைத்திருக்கின்ற சொத்துகளின் இயல்பை ஒட்டியும், அது வைத்துக்கொள்ளுகின்ற ரொக்கத்தின் அளவு அமையும். ரொக்கத்தன்மையுள்ள சொத்துகள் ஒரு வங்கியில் அதிகமாக இருக்குமானால், அந்த வங்கியால் குறைந்த

அளவு ரொக்கத்தை வைத்துக்கொண்டு அதனுடைய பணிகளை மேற்கொள்ள முடியும். திடீரென்று மிகுதியாகப் பணம் தேவைப்பட்டால், அதிக ரொக்கத்தன்மை உள்ள சொத்தை உடனடியாகப் பணமாக மாற்றிக்கொள்ளலாம். ரொக்கத் தன்மை குறைவாக உள்ள சொத்துகளை வைத்திருக்கின்ற வங்கிகள் கையில் அதிகமாக ரொக்கம் வைத்திருக்க வேண்டும்.

ஏழாவதாக, நாட்டிலுள்ள செழிப்பையும், மந்த நிலையையும் சார்ந்து வங்கியின் ரொக்கத் தேவை மாறும். நாட்டில் செழிப்புநிலை இருக்கின்றபொழுது வாணிப நடவடிக்கைகள் பெருகிக்கொண்டிருக்கும். வங்கிகள் மிகுதியாகக் கையிருப்பு வைத்துக்கொண்டிருக்கவேண்டும். மந்தக் காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் முடங்கியிருக்குமாதலால், வங்கிகளால் குறைந்த அளவு ரொக்கத்தோடு செயல்பட முடியும்.

எட்டாவதாக, வாடிக்கையாளர்களின் இயல்பை ஒட்டியும் ரொக்க அளவு நிருணயிக்கப்படும். வங்கியில் வைப்புக் கணக்கு வைத்திருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மாத ஊதியம் பெறுபவர்களாக இருந்தால் அவர்கள் மாதம் முழுவதும் பரவலாகப் பணத்தை எடுப்பார்களென்று எதிர்பார்க்கலாம். மாறாக வணிகர்களும், ஊக வாணிகத்தில் ஈடுபட்டோரும் அதிகமாக இருந்தால், அவர்கள் வாணிபத்தின் நிலையை ஒட்டித்தான் கூடுதலாகவோ, குறைவாகவோ பணம் கேட்பார்கள். அதற்கு ஏற்றாற்போல ரொக்கம் வைத்திருப்பது அவசியமாகும்.

## (இ) வங்கியின் முதலீட்டுக் கொள்கை
(Investment Policy of a Bank)

வாணிப வங்கியின் நோக்கம் மிகுதியாக ஆதாயத்தைப் பெறுவது. ஆதலால், வங்கியின் கண்ணும் கருத்தும் எப்படித் தனது பங்குதாரர்களுக்கு மிகுதியாக இலாபத்தைப் பெற்றுத் தருவது என்பதிலேயே இருக்கும். வங்கிக்குக் கிடைக்கின்ற வருவாய் அதனுடைய செலவுகளைவிட அதிகமாக இருந்தால் தான் வங்கிக்கு இலாபம் கிடைக்கும்.

வங்கிக்குப் பல வகைகளில் வருவாய் கிடைக்கின்றது. கடன் கொடுப்பதன் மூலமாகவும், முன்பணம் கொடுப்பதன் வாயிலாகவும் வட்டி வருவாய் கிடைக்கின்றது. வங்கி உண்டியல்களைக் கழிவுசெய்து கொடுப்பதற்குக் கழிவுப் பணம் பெறுகின்றது. அரசு பத்திரங்கள், கடன் பத்திரங்கள் முதலியவற்றில் முதலீடு

செய்வதால் வருவாய் கிடைக்கின்றது. பதிலாள் பணிகளையும் பொதுப் பயன்பாட்டுப் பணிகளையும் செய்வதால் வங்கிக்கு வருவாய் கிடைக்கின்றது.

வங்கிக்குக் கிடைக்கின்ற எல்லா வருவாய்களிலும் முதன்மை யானதாகவும், அதிக அளவில் கிடைப்பதாகவும் இருப்பது, அது கொடுத்த கடனுக்கும் முன்பணத்திற்கும் கிடைக்கின்ற வட்டி யாகும். பலவகையான கடன்களைக் கொடுத்தும், பத்திரங்களில் முதலீடு செய்தும் எப்படி எல்லாம் வருவாயையும், அதன்வழி இலாபத்தையும் பெருக்கலாம் என்பதில் வங்கியாளர்கள் கவன மாக இருப்பார்கள்.

வங்கியாளர்கள் கொடுக்கின்ற கடனின் அளவு, அவர்களிட முள்ள பல்வேறு வகையான கடன்களின் அளவைச் சார்ந்து அமைகின்றது. கடன்களின் அளவோ மக்கள் வங்கியிடம் வைத்திருக்கின்ற ரொக்கத் தன்மையை ஒட்டி அமைகின்றது. மக்கள் வங்கியிடம் நம்பிக்கை கொள்ளவேண்டுமானால், வாடிக்கையாளர்கள் கேட்கின்றபொழுது, கேட்கின்ற பணத்தைக் கொடுக்கின்ற நிலையில் வங்கி ரொக்கத்தன்மை பெற்றிருக்க வேண்டும். ஆதலால், இலாப நோக்கில் செயல்படுகின்ற வங்கி, முதலீடு செய்கின்றபொழுது, முதலீடு செய்கின்ற சொத்துகளின் ரொக்கத்தன்மையையும் கவனிக்கவேண்டும். சொத்தின் மதிப்புக் குறையாமல் அதனைப் பணமாக மாற்றக்கூடிய முதலீடுதான் சிறந்ததாக இருக்கும்.

வாணிப வங்கிகள் சொத்துகளைத் தெரிந்தெடுத்து முதலீடு செய்கின்றபொழுது இலாபத்தன்மை (Profitability), ரொக்கத் தன்மை (Liquidity), பாதுகாப்பு (Safety) ஆகிய மூன்று முக்கிய மானவற்றையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

முதலாவதாக, ரொக்கத்தன்மைக் கருத்தை ஆராயலாம். ரொக்கத்தன்மை என்பது, வாடிக்கையாளர்கள் அவர்களுடைய வைப்புகளைக் கேட்கின்றபொழுது கொடுக்கக்கூடிய வங்கியின் ஆற்றலைக் குறிக்கின்றது. வாடிக்கையாளர்களின் காசோலை களுக்குப் பணம் தருவது வங்கியின் தலையாய பொறுப்பாகவும், அதுவே வங்கித் தொழிலின் வெற்றிக்கு அச்சாணியாகவும் இருப்பதால், ரொக்கத்தன்மையைக் கட்டிக்காப்பதில் வங்கி கவனமாக நடந்துகொள்ளவேண்டும். மக்களிடம் வங்கியைப் பற்றிய நம்பிக்கையை உருவாக்க நீர்மைத்தன்மை தேவையான ஒன்றாகின்றது.

ஒரு வங்கியின் கடன் தீர்வுத்தன்மை (Solvency) வேறு; ரொக்கத்தன்மை வேறு என்பது குறிப்பிடத்தக்கதாகும். வங்கியின் பொறுப்புகளைவிடச் சொத்துகள் அதிகமாக இருக்கு மானால், வங்கி கடன் தீர்வுத் தன்மையோடு நல்ல பொருளாதார நிலையில் இயங்குகின்றதென்று கூறலாம். கடன் தீர்வுத்தன்மை யோடு இருக்கின்ற வங்கி ரொக்கத்தன்மையோடுதான் இருக்கு மென்று கூறமுடியாது. அதன் சொத்துகள் உடனடியாகப் பணமாக மாற்ற முடியாத சொத்துகளில் முதலீடு செய்யப் பெற்றிருக்குமானால், அதன் ரொக்கத்தன்மை குறைவானதாக இருக்கும்.

ரொக்கத்தன்மையின் அடிப்படையில் மரபுவழிச் சிந்தனை யாளர்கள் குறுகியகாலக் கடனளிப்பதை மட்டும் வங்கிகள் மேற்கொள்வதே சரியென்று கருதுகின்றனர். அவர்களுடைய கருத்தின்படி சுய நீர்மைத்தன்மை (Self Liquidity) இருப்பதாக வும், ஆக்கத்திறன் கொண்டதாகவும் இருப்பவை குறுகிய காலக் கடன்கள்தாம். உற்பத்திப் பணிகளையும், போக்கு வரத்துப் பணிகளையும் மேற்கொள்ள அளிக்கின்ற குறுகிய காலக் கடன்கள் விரைவில் திரும்புமென்ற உறுதிப்பாடு இருக்கின்றது. உண்மையான வாணிப நடவடிக்கைகளுக்கு வங்கி முன்பணம் கொடுத்தால், அந்த வாணிப நடவடிக்கை நிறைவு பெறுகின்றபொழுது, தானே கொடுத்த பணம் வங்கிக்குக் கிடைக்கும். எடுத்துக்காட்டாக மாற்றுச்சீட்டைக் (Bill of Exchange) குறிப்பிடலாம். மாற்றுச்சீட்டுக்குக் கொடுக்கின்ற முன்பணத்தால் வங்கிக்கு மாற்றுச்சீட்டுச் சொத்தாகின்றது. உரிய காலத்தில் (Due date) மாற்றுச் சீட்டுக்குப் பணம் வருகின்றபொழுது சொத்து ரொக்கமாக மாறுகின்றது. இப்படி நிதி வழங்குகின்ற கொள்கை 'உண்மை மாற்றுச்சீட்டுக் கோட்பாடு' (Real Bills Doctrine) அல்லது 'சுய ரொக்கத்தன்மைக் கோட்பாடு' (Theory of Liquidity) என்று கூறப்படுகின்றது.

சுய ரொக்கத்தன்மைக் கோட்பாட்டைப் பல கோணங் களிலிருந்து குறைகூறுகின்றனர். குறுகிய காலக் கடன்மூலம் கிடைக்கின்ற சொத்துகளும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர்தான் ரொக்கமாக மாறும். அதுவரை வங்கி அந்தப் பணத்தை மட்டும் எதிர்பார்த்துக்கொண்டு பேசாமல் இருக்க முடியாது. தேவை ஏற்படுகின்றபொழுது இந்தச் சொத்துகளை யெல்லாம் யாருக்காவது மாற்றிக்கொடுத்து ரொக்கத்தைப் பெறும் வாய்ப்பு இருக்க வேண்டும். பழைய மாற்றுச்சீட்டு

களுக்குப் பணம் கிடைத்த பிறகுதான் புதிய மாற்றுச்சீட்டு களுக்குப் பணம் கொடுப்பதாக இருந்தால், வாணிபமும் உற்பத்தியும் பாதிக்கப்படும். இதனால் மக்களின் வாங்குகின்ற ஆற்றல் குறையும். இதன் விளைவாக விலை குறையும். பழைய கடன்காரர்களால் பணத்தைத் திருப்பிச் செலுத்த இயலாது. மிகவும் உறுதியோடு உண்மை மாற்றுச்சீட்டுக் கோட்பாட்டை நடைமுறையில் பின்பற்றினால் சமுதாயத்தின் வாங்கும் சக்தி பெரிதும் பாதிக்கும்.

மேலும், குறுகிய காலக் கடன் குறுகிய காலத்திலேயே பணமாக மாறுமென்று கூறமுடியாது. குறுகிய காலக் கடனை மறுபடியும் புதுப்பிக்க விரும்புவார்கள். புதுப்பிக்க மறுத்து விட்டால், அதனால் ஏற்படும் விளைவுகளினால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதைக் காணலாம். குறிப்பாகப் பண மந்தக்காலத்தில் இதன் விளைவுகள் கடுமையானதாக இருக்கும்.

ஆதலால், சொத்தின் நீர்மைத்தன்மை என்பது எவ்வளவு காலத்திற்குக் கடன் கொடுக்கின்றார்கள் என்பதை ஒட்டியன்று; அந்தச் சொத்தை எவ்வளவு விரைவாக ரொக்கமாக மாற்ற முடியும் என்பதை ஒட்டியே அமைகின்றது. எடுத்துக்காட்டாக அரசின் கடன் பத்திரங்களைக் குறிப்பிடலாம். அவற்றின் நிறைவுநாள் சில ஆண்டுகளுக்குப்பின் இருந்தபோதிலும், அவற்றை வாங்கவும் விற்கவும் நிலையான அங்காடி இருப் தால், அவற்றின் நீர்மைத் தன்மை அதிகமாக இருக்கும்.

ஒரு சொத்தை இழப்பின்றிப் பணத்திற்கு மாற்றுவதைப் பற்றிய கோட்பாடு (Shiftability theory) ரொக்கத்தன்மை என்பது சொத்தை மாற்றக்கூடிய இயல்பை ஒட்டி அமைகின்ற தென்று கூறுகின்றது. எப்பொழுதும் பணமாக மாற்றக்கூடிய சொத்து எவ்வளவு காலத்திற்குப் பின்னர் தானே ரொக்கமாக மாறும் என்பதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

சொத்தின் மாற்றக்கூடிய இயல்பைப்பற்றிக் கவனிக்கின்ற பொழுது அதிலுள்ள இடர்ப்பாட்டையும் கருத்தில் கொள்ள வேண்டும். இழப்பு ஏற்படாமல் ரொக்கமாக மாற்றக்கூடிய சொத்துகளில் இடர்ப்பாடுகள் குறைவாக இருக்கும். குறுகிய காலத்தில் ரொக்கமாக மாற்றக்கூடிய சொத்துகளில் இடர்ப் பாடுகள் குறைவாக இருக்கும். நீண்ட காலச் சொத்துகளை வாங்குவதற்குப் போதுமான அளவில் ஆள்கள் அதிகமாக இருக்கமாட்டார்கள். ஆதலால், இவற்றை ரொக்கமாக மாற்ற

முடியுமென்றாலும், கிடைக்கின்ற மதிப்புக் குறைவானதாக இருக்கும். நீண்டகால அரசின் கடன் பத்திரங்களில் நீர்மைத் தன்மை அதிகம் இருப்பதாகக் கருதப்படுகின்றது. காரணம், இவற்றை வாங்குவதற்கு அங்காடி இருக்கின்றது.

சொத்துகளை மாற்றுவதென்று கூறுகின்றபொழுது மற்றொன்றையும் கவனிக்க வேண்டும். வணிக வங்கிகள் தங்களுடைய சொத்துகளை மற்றைய வங்கிகளுக்கு மாற்றலாம். ஆனால், இப்படி மாற்றுகின்றபொழுது பொதுமக்களுக்கு அந்த வங்கியின்மீது நம்பிக்கை ஏற்படாது. ஆனால், இறுதிநிலைக் கடன் ஈவோனாக இருக்கின்ற மைய வங்கிக்குச் சொத்துகளை மாற்றுவதால் எந்தச் சிக்கலும் எழுவதில்லை. ஆதலால், மைய வங்கி ஏற்றுக்கொள்கின்ற சொத்துகளில்தாம் அதிக மாற்றுத் தன்மை இருக்கின்றதெனக் கருதுகின்றனர்.

இரண்டாவதாக, வங்கிகள் இலாப நோக்கத்தோடு சொத்துகளைப் பெறுகின்றதென்பதை நினைவுபடுத்தலாம். வங்கி தனது பொறுப்புகளைச் சொத்துகளாக மாற்றுகின்றபொழுது, எல்லா வகையான சொத்துகளிலும் முதலீடு செய்யமாட்டார்கள். எந்தச் சொத்தில் அதிக வருவாய் கிடைக்குமோ அதில் தான் மிகுதியாக முதலீடு செய்ய விரும்புவார்கள்.

கிரௌதர், வங்கிகள் இலாப நோக்கில் எப்படிச் செயல் படுகின்றனவென்பதை, 'இலாபகரமாக வங்கி நடத்தும் இரகசியமே கீழ்க்காணும் முறையில்தானிருக்கின்றது. வங்கி தனது மூலதனத்தைக் கொண்டு சொத்துகள் வாங்கும்போது, ஒவ்வொரு தேவைக்கும் பணம் கொடுப்பதற்கு ரொக்கத்தையும், அதே நேரத்தில் வங்கியின் செலவுகளைச் சமாளிக்கவும், பங்குதாரர்களுக்கு இலாபம் கொடுக்கவும் நிறை வருமானத்தைப் பெற ரொக்க நிலையும், இலாபத்தன்மையும் செம்மையான நிலையிலிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று கூறுகின்றார்.

நடைமுறையில், இலாபத் தன்மையும் ரொக்கத்தன்மையும் ஒன்றுக்கொன்று முரண்படுவதைக் காணலாம். இதனை ஏ. சி. எல். டே (A. C. L. Day), 'எந்தவகை சொத்துகளை வைத்துக்கொள்வதென்று முடிவு செய்யும்பொழுது, வணிக வங்கிகள் இலாப விருப்பம், எச்சரிக்கை என்னும் இரு எதிர் மறைச் சக்திகளுக்கு ஆட்படுகின்றன. எச்சரிக்கைச் சொத்தில் பெரும்பகுதியை ரொக்கமாக வைத்திருக்க வேண்டுமென்று

கூறுகின்றது. இலாப விருப்பம் சொத்துகளில் பெரும்பகுதியைக் குறைந்த அளவு ரொக்கத்தில் வைத்துக்கொள்ளத் தூண்டுகின்றது' என்று குறிப்பிடுகின்றார்.

இலாபத்தன்மையும் ரொக்கத்தன்மையும் முதலீட்டில் முரண்பட்டு நிற்பதை ஓர் எடுத்துக்காட்டின்மூலம் விளக்கலாம். ஒரு வங்கி, தனது பொறுப்பை அரசின் கடன் பத்திரமாகவோ, கூட்டுப் பங்கு நிறுவனத்தின் பங்குப் பத்திரமாகவோ மாற்றலாம். அரசின் கடன் பத்திரத்தில் குறைவான வட்டியே கிடைக்கும். இலாபம் குறைவாக இருந்தபோதிலும், அரசின் கடன் பத்திரத்தில் ரொக்கத்தன்மை அதிகம். அதனை எப்பொழுதும் மைய வங்கி ஏற்றுக்கொள்ளும். ஆனால், கூட்டுப் பங்கு நிறுவனத்தின் பங்குகளில் முதலீடு செய்கின்றபொழுது வங்கிக்கு வருவாய் மிகுதியாகக் கிடைக்கும். ஆனால், கூட்டுப் பங்கு நிறுவனத்தின் பங்கை நினைத்தவுடன் ரொக்கமாக மாற்ற முடியாது. அங்காடி நிலவரத்தை ஒட்டித்தான் கூட்டுப் பங்கு நிறுவனத்தின் பங்கை ரொக்கமாக மாற்ற இயலும்.

மூன்றாவதாக, வங்கி முதலீடு பாதுகாப்பானதாக இருக்கின்றதா என்பதைக் கவனிக்க வேண்டும். வங்கி பொதுமக்களின் பணத்தை முதலீடு செய்கின்றது. ஆதலால், மிகவும் எச்சரிக்கையோடு முதலீடு செய்வது தேவையாகின்றது. பெரும்பாலும் ஊக நிலையிலுள்ள சொத்துகளில் முதலீடு செய்வது சிறந்ததன்று. அதைப்போன்றே ஊக வாணிப நடவடிக்கைகளுக்கும் கடன் கொடுப்பதால் பாதுகாப்புத் தன்மை மிகவும் குறைவதைக் காணலாம். வருவாய் குறைவாக இருந்தாலும் மிகவும் பாதுகாப்பான இனங்களில் முதலீடு செய்வதுதான் வரவேற்கத்தக்கதாகும்.

முதலீட்டில் வங்கி கவனிக்க வேண்டிய ரொக்கத்தன்மை, இலாபத்தன்மை, பாதுகாப்பு ஆகிய மூன்று கருத்துகளும் ஒன்றோடொன்று முரண்படுபவைகளாக இருப்பதனைக் கவனிக்க வேண்டும். சில சொத்துகளில் ரொக்கத்தன்மை மிகுதியாக இருக்கும். ஆனால், அவற்றில் கிடைக்கின்ற வருவாய்—இலாபம் குறைவாக இருக்கும். வருவாயைப் புறக்கணித்துவிட்டு, ஒரு வங்கி தொழிலில் வெற்றிபெற முடியாது. சில சொத்துகளில் இலாபம் மிகுதியாகக் கிடைக்கும். ஆனால், அவற்றில் ரொக்கத்தன்மை குறைவாக இருக்கும். அவற்றில் முதலீடு செய்வது பாதுகாப்பாகவும் இராது. ரொக்கத்தன்மையும் பாதுகாப்பும் அற்ற இனங்களில் முதலீடு

செய்தால் நெருக்கடி தோன்றுகின்றபொழுது மிகுந்த இடர்ப்பாடு களுக்கு ஆளாக நேரிடும்.

சொத்துகளைத் தெரிந்தெடுக்கின்றபொழுது வங்கிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இதனை ஏ.கே. பாசு (A.K. Basu), 'யார் உண்டியலுக்கும் (Bill) அடைமானத்திற்கும் (Mortgage) இடையிலுள்ள வேறுபாட்டை அறிந்திருக் கின்றாரோ, அவரே நல்ல வங்கியாளர்' என்று கூறுகின்றார். உண்டியலில் முதலீடு செய்வதற்கும் அடைமானக்கடன் கொடுப் பதற்கும் வேறுபாடு இருக்கின்றது. உண்டியலுக்குக் கழிவு செய்து முன்பணம் கொடுத்திருந்தால், அதற்கு உரிய காலத்தில் பணம் கிடைத்துவிடும். ஆதலால், இதனைத் தானே ரொக்க மாகும் சொத்து (Self-liquidating asset) என்று கூறுகின்றோம். ஆனால், உண்டியல்களைக் கழிவு செய்வதன்மூலம் கிடைக்கின்ற வருவாய் மிகவும் குறைவானதாக இருக்கும். அடைமானக் கடன் களில் ரொக்கத்தன்மை குறைவாக இருக்கும். ஆனால், கிடைக் கின்ற வட்டி வருவாய் அதிகமாக இருக்கும்.

வங்கிகள் எப்படித் தங்களுடைய சொத்துகளை வைத்திருக் கின்றனவென்பதற்கும், அவற்றின் ரொக்க இருப்புக்கும் தொடர்பு இருக்கின்றது. வங்கி ரொக்கமாகப் பணத்தை வைத்திருப்பது இன்றியமையாத தேவையாகும். ஆனால், ரொக்கப் பணத்தால் வங்கிக்கு வருவாய் இல்லையென்பது கவனிக்கத்தக்கது. பட்டறிவின் மூலமாகவும், சட்டத்தின் கட்டுப் பாட்டை ஒட்டியும், நெருக்கடி ஏற்படாத வகையில் குறைந்த அளவில் ரொக்கத்தை வைத்துக்கொண்டு, மீதியை வருவாய் தருகின்ற சொத்துகளாக வைத்திருப்பதால் வங்கிக்கு அதிக இலாபம் கிடைக்கும்.

வங்கி முதலீடு செய்கின்றபொழுது, முதலீட்டின் இடர்ப் பாடுகள் பரவலாக (Diversification of risks) இருக்கும் வகையில் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏதாவது ஒரே இனத்தில் அதிகம் முதலீடு செய்வது சிறந்ததன்று. எடுத்துக்காட்டாக, ஒரு வங்கி நூற்பு ஆலைகளுக்கே அதிகமாகக் கடன் கொடுக்கின்றதென்று வைத்துக்கொள்ளுவோம். நூற்பு ஆலைத் தொழிலில் திடீரென்று மந்தநிலை ஏற்படுமானால், அஃது அந்த வங்கியைப் பெரிதும் பாதிக்கும். பல்வேறு வகையான தொழில்களிலும், வாணிபங் களிலும் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்குக் கடன் கொடுத்தால் இடர்ப்பாடு செறிந்த முறையில் அல்லாமல் பரவலாக அமையும். இதனால் சிலருக்குக் கொடுத்த கடனைத் திருப்பிப் பெறுவதில்

காலம் கடந்தாலும், பெரும்பாலான கடன்கள் சரியான முறையில் திருப்பிக் கிடைக்குமானால் வங்கித் தொழில் தடங்கல்களின்றி நடைபெற இயலும்.

தக்க பண அங்காடியும், இக்கட்டில் துணை நிற்கின்ற மைய வங்கியும் பெரும்பாலான நாடுகளில் அமைந்திருக்கின்றன. இதனால் ரொக்கத் தன்மையைப்பற்றி ஓரளவு கவலைப்படாமல் வங்கிகள் துணிச்சலோடு தங்களிடமுள்ள நிதியை முதலீடுசெய்து மிகுதியாக இலாபம் பெற முடிகின்றது.

## துணை நூல்கள்

1. Manning Dacey, 'The British Banking Mechanism', Chap. 11.
2. A. C. L. Day, 'Outline of Monetary Economics'.
3. Sayers, 'Modern Banking', Chap. 2.
4. A. K. Basu, 'Fundamentals of Banking Theory and Practice'.
5. S. K. Basu, 'A Survey of Contemporary Banking Trends'.
6. Muranjan, 'Modern Banking in India'.
7. Tannan, 'A Survey of Contemporary Banking Trends'.

# 6. வணிக வங்கிகளின் கடன் (பணம்) உற்பத்தி

## பொது விளக்கம்

ஒரு நாட்டில் பயன்படுத்துகின்ற பணத்தின் அளவு மூன்று வகையான இனங்களைச் சார்ந்திருக்கின்றது. முதலாவதாக, சில்லறை நாணயங்கள் புழக்கத்திலிருக்கின்றன. நமது நாட்டில் ஒரு ரூபாவும், அதற்குக் குறைந்தவையும் நாணயங்களாக இருக்கின்றன. சிறிய வாணிப நடவடிக்கைகளுக்கு இன்றியமையாத நாணயங்களின் கூட்டுத்தொகை, நாட்டில் பயன்படுகின்ற மொத்தப் பணத்தில் மிகவும் குறைவானதாகவே இருக்கும். ஆதலால், இதனை முக்கியமானதாகக் கருதுவதில்லை.

இரண்டாவதாக, காகிதப் பணம் (Paper Currency) புழக்கத்திலிருக்கின்றது. நாட்டின் பண அளவில் காகிதப் பணம் மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகமாக இருக்கின்றது. நமது நாட்டில் ஒரு ரூபாவும், அதற்கு மேலுள்ள அளவுகளிலும் காகிதப் பணம் வெளியிடப்பெறுகின்றது. பெரிய வாணிப, தொழில் நடவடிக்கைகளுக்குக் காகிதப்பணம் துணையாக நிற்கின்றது.

மூன்றாவதாக, வங்கி வைப்புகள் (Bank Deposits) பணம் போலப் பயன்படுத்தப்பெறுகின்றன. வங்கி வைப்புப் பணமாக மாறக் கூடியதாகும். வைப்பின்மீது கொடுக்கின்ற காசோலைகளுக்கு வங்கி பணம் தருகின்றது. வைப்புகள் என்பது வங்கிகள் பொதுமக்களுக்குக் கொடுக்கவேண்டிய கடனாகும். வங்கி பொறுப்பாக இருக்கின்ற வங்கிப் பணத்தைச் சொத்துகளாக் மாற்றுகின்றது. வங்கிகளுக்குச் சொத்துகளைத் தந்து அவற்றின்மீது வாடிக்கையாளர்கள் கடன் வாங்குகின்றனர். கடனைக் காசோலையின்மூலம் பணமாக மாற்றலாம். வங்கியின் வைப்புகள் பணமாக மாறுகின்றபொழுது பொதுமக்களிடம் இருக்கின்ற வாங்குந்திறன் அதிகரிக்கும். வளர்ச்சிபெற்ற நாடுகளின் மொத்தப் பணத்தில் வங்கிப் பணம் குறிப்பிடத்தக்க

அளவில் மிகுதியாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தில் புழங்குகின்ற பணத்தில் ஏறத்தாழ 80 சதவீதம் வங்கிப்பண மென்பதைக் கூறலாம். அமெரிக்காவில் இதனைவிட அதிகமாக வங்கிப் பணம் புழக்கத்தில் இருக்கின்றது.

வங்கிகள் வைப்புகளைப் போட்டுவைக்கின்ற வாடிக்கைக் காரர்களையும், கடன் பெறுபவர்களையும் இணைக்கின்ற பணியை மட்டும் செய்வதில்லை. இந்தப் பணிகளை மட்டும் மேற்கொள்ளுகின்ற ஆயுள் காப்பீட்டுக் கழகம், முதலீட்டுப் பொறுப்பாட்சி நிறுவனம் (Investment Trust) முதலியவை வைப்பாகப் பெற்ற பணத்தை மட்டும் கடனாகத் தருகின்றன. அதற்குமேல் அவற்றால் கடன் தர முடியாது. ஆனால், வங்கிகள் அவை வைப்பாகப் பெற்ற பணத்தைப்போலப் பல மடங்கு கடன் தருகின்றன. ஆதலால்தான் வங்கிகளைப் 'பண உற்பத்தி' நிலையங்களாகக் கருதுகின்றோம். இதனைச் சேயர்ஸ், 'பணத்தில் வாணிபம் செய்வது ஒன்றே வங்கிகளின் தொழில் அன்று; வங்கிகள் பணத்தை உற்பத்தி செய்யும் நிறுவனங்களாகவும் திகழ்கின்றன' என்று கூறுகின்றார்.

வங்கி, எப்படிப் பணத்தை உற்பத்தி செய்கின்றதென்பதை விளக்குவோம். வங்கிகள் பொதுமக்களிடமிருந்து பணத்தைப் பெறுகின்றபொழுது வைப்புகள் உருவாகின்றன. இந்த வைப்புகள் மூலமாக அமைய, வங்கிகளால் மேலும் மேலும் வைப்புகளை உருவாக்க முடிகின்றது. 'வங்கிகளும் பொது மக்களும் தங்களுக்குள்ள உரிமைகளை (claims) மாற்றிக் (exchange) கொள்ளுவதை ஒட்டியே வங்கி வைப்புகள் (Deposits) உற்பத்தி செய்யப்படுகின்றன' என்று சேயர்ஸ் கூறுகின்றார்.

## முறைகள்

பொதுவாக வங்கி வைப்புகள் இரண்டு முறைகளில் உருவாக்கப்படுகின்றன.

முதலாவதாக, வாடிக்கையாளர்கள் ரொக்கப் பணத்தைக் கொடுத்து வங்கிகளில் வைப்புகளை ஏற்படுத்துகின்றனர். இந்த வைப்புகளைத் தேவையை ஒட்டி எப்பொழுது வேண்டு மானாலும் பணமாக மாற்றிக்கொள்ளவோ, மற்றவர்கள் கைக்கு மாற்றவோ வாடிக்கையாளர்களுக்கு உரிமை இருக் கின்றது. வாடிக்கையாளர்களிடம் இருக்கின்றவரை ரொக்க மாக இருந்த பணம், இப்பொழுது வைப்பு என்ற உருவம்

பெற்றிருக்கின்றது. இப்படி வாடிக்கையாளர்களால் ரொக்கப் பணத்தின் மூலம் உருவாக்கப் பெற்றவற்றை 'முதன்மை வைப்புகள்' (Primary Deposits) என்கின்றோம்.

இரண்டாவதாக, வங்கிகள் கடன் கொடுப்பதன்மூலம் வைப்புகளை உருவாக்குகின்றன. வங்கிகள் ஆதாய நோக்கில் செயல்படுகின்ற நிறுவனங்கள் என்ற முறையில் முதன்மை வைப்புகள்மூலம் வந்த பணத்தையெல்லாம் ரொக்கமாகவே வைத்திருக்க விரும்புவதில்லை. மற்றவர்களுக்கு முன்பண மாகவோ, கடனாகவோ கொடுத்து வருவாயைப் பெருக்க முயல்கின்றன. வாடிக்கையாளர்கள் முதன்மை வைப்புகளில் போட்டிருக்கின்ற பணத்தை எல்லாம் உடனே திருப்பிப் பெறமாட்டார்கள். வங்கிகள் தங்களுடைய பட்டறிவின் அடிப் படையில் வைப்புகளில் ஓரளவை மட்டும் ரொக்கமாக வைத்துக் கொண்டு மீதியை மற்றவர்களுக்குக் கடனாகத் தருகின்றன. வங்கிகளில் கடன் வாங்குகின்றவர்கள் பெரும்பாலும் ரொக்க மாகப் பணத்தைக் கேட்பதில்லை. பொதுவாக வங்கி வாடிக்கையாளர்களுக்குத் தருகின்ற பணத்தை அவர்களின் பெயரில் வரவு வைத்துக்கொள்ளும். வாடிக்கையாளர்கள், அவர் பெற்றிருக்கும் கடன்தொகையைத் தேவையான பொழுதெல்லாம் காசோலைகளின் மூலம் எடுத்துக்கொள்ள லாம். அல்லது, மற்றவர்களுக்குக் காசோலையின்மூலம் பணத்தைக் கைமாற்றிக் கொள்ளலாம். வங்கி கொடுக்கின்ற கடன் வைப்பாக உருவம் பெறுவதனை 'ஒவ்வொரு கடனும் ஒரு வைப்பைத் தோற்றுவிக்கிறது' (Every loan creates a deposit) என்னும் வங்கிப் பழமொழி கூறுகின்றது. இப்படித் தோன்று கின்ற இரண்டாம் நிலை வைப்புகளை, 'வருவிக்கப் பெற்ற வைப்புகள்' (Derived Deposits) என்று குறிப்பிடுகின்றோம். இந்த வைப்புகள் வங்கியின் பொறுப்புகளாகின்றன.

முதன்மை வைப்புகளைவிட விடுவிக்கப்பெற்ற வைப்புகளே வங்கியில் மிகுதியாக இருக்கின்றன. விடுவிக்கப்பட்ட வைப்புகள் பல வழிமுறைகளில் தோன்றுகின்றன. மேலைநாடுகளில் கடன் வாக்குறுதிகள் (IOU) பணமாக்கப் பெறுகின்றன. மாற்று உண்டியல்களுக்கு வங்கிகள் கழிவுசெய்து பணம் தருகின்ற பொழுதும் வங்கி வைப்புகள் உருவாக்கப்படுகின்றன. மாற்று உண்டியல்களைக் கழிவுசெய்து, அந்தப் பணத்தை வாடிக்கை யாளர்களின் கணக்கில் வரவு வைக்கின்றபொழுது, புதிய வைப்புத் தோன்றுகின்றது. மேலும் வங்கி கட்டடம், பத்திரங்கள் முதலிய சொத்துகளை விலைக்கு வாங்கலாம்.

பொதுவாகச் சொத்துகளை விற்பவர்களுக்கு ரொக்கமாகப் பணம் தருவதில்லை. சொத்துகளை விற்பவர்களின் பெயரில் அந்தப் பணத்தை வரவு வைத்துக்கொள்ளும். இது வைப்பாக உருவம் பெறும்.

வங்கிகள் எப்படி வைப்புகளை உருவாக்குகின்றன என்பதை, அவற்றின் இருப்புநிலைக் குறிப்பின் (Balance sheet) மூலம் தெளிவாக விளக்கலாம். வங்கி தன்னிடமுள்ள பணத்தை மேல் வரைப்பற்று முறையிலோ (Over draft system), ரொக்கக் கடன் முறையிலோ (Cash credit system) வாடிக்கையாளர்களுக்குக் கடனாகத் தருகின்றது. வங்கி, ரொக்கக் கடன் முறையில் ஏதாவது துணைப்பிணையைப் (Collateral Security) பெற்றுக் கொண்டு கடன் தருகின்றதென்று வைத்துக்கொள்வோம். வங்கி கொடுத்த கடனின் அளவு சமுதாயத்தில் பணத்தின் அளிப்புக் கூடுகின்றது. வங்கி வாடிக்கையாளர்களிடமிருந்து எவ்வளவு பணத்தைப் பெறுகின்றதோ, அந்த அளவிற்கு வங்கியின் பொறுப்புகள் கூடுகின்றன. அந்த அளவு பணம் முழுவதையும் வங்கி கடன் கொடுத்தால், கடன் கொடுத்த அளவிற்கு அதன் சொத்துகள் கூடுகின்றன. வங்கி, ஐம்பதி னாயிரம் ரூபாவை வைப்பாகப் பெற்று, அதனை அப்படியே கடனாகத் தருகின்றதென்று வைத்துக்கொண்டால், அதன் இருப்புநிலைக் குறிப்புக் கீழ்க்காணுமாறு அமையும்.

## இருப்புநிலைக் குறிப்பு

(Balance Sheet)

| பொறுப்புகள் (Liabilities) | தொகை ரூ. | சொத்துகள் (Assets) | தொகை ரூ. |
|---|---|---|---|
| வைப்புகள் (வாடிக்கையாளர்களின் வரவுகளின் கூட்டுத்தொகை) | 50,000 | கடன்கள் (வாடிக்கையாளர்களுக்கு வங்கி கொடுத்தவை) | 50,000 |

வங்கி, தான் கொடுக்கும் கடன்களுக்கு அதிகமாக வட்டி வாங்கி, தன்னிடம் வந்த வைப்புகளுக்குக் குறைந்த அளவில் கொடுக்கின்றது. இத்தகைய நடவடிக்கைமூலம் வங்கிக்கு வருவாய் கிடைக்கின்றது.

கடன் வாங்கிய வாடிக்கையாளர் காசோலையின்மூலம் தாமே பணத்தை எடுத்துக்கொள்ளலாம். அல்லது, மற்றவர்களுக்குக் காசோலைகளை வழங்கலாம். மற்றவர்களுக்குக் காசோலைகளைத் தருகின்றபொழுது வங்கியின் பொறுப்புக் காசோலைகளை வைத்திருக்கின்றவர்களுக்கெல்லாம் இருக்கின்றது.

வங்கி வாடிக்கையாளர்களுக்குக் கடன் தருவதைப்போன்றே அவர்களுடைய மாற்றுச்சீட்டுகளைக் கழிவு செய்துகொண்டும் பணம் தரலாம். வங்கி வருவாய் கருதிக் கடன் கொடுப்பதைப் போன்றே வருவாய் கருதி முதலீடும் செய்கின்றது. அரசின் பத்திரங்களிலோ, வேறு வருவாய் கிடைக்கின்ற இனங்களிலோ முதலீடு செய்கின்றபொழுது, பத்திரங்களையோ, சொத்துகளையோ விற்றவர்களுக்கு வைப்புகளை உருவாக்குகின்றது. இப்பொழுது வங்கியின் சொத்துகளும் பொறுப்புகளும் கூடுகின்றன. இதனைக் கீழ்க்காணும் இருப்புநிலைக் குறிப்புக் காட்டுகின்றது.

| பொறுப்புகள் | தொகை ரூ. | சொத்துகள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| வைப்புகள் (வாடிக்கையாளர்களுக்குக் கொடுத்த கடன்கள்) | 50,000 | முதலீடு (அரசின் பத்திரங்கள் பிறவற்றில்) | 50,000 |

வைப்புகள் மற்றொரு வகையிலும் ஏற்படலாம். ஒரு வங்கியில் ஒருவருக்கு உரிமையாக இருக்கின்ற வைப்பு, மற்றொரு வங்கியில் மற்றொருவருக்குரிய வைப்பாக மாறப்படலாம். இதனை ஓர் எடுத்துக்காட்டின்மூலம் விளக்கலாம். மணிவண்ணன் என்பவர் பொன்னலட்சுமி வங்கியில் பத்தாயிரம் ரூபா வைப்புக் கணக்கில் வைத்திருக்கின்றார். அவர் முருகனுக்கு ஐயாயிரம் ரூபாவுக்கு ஒரு காசோலை தருகின்றார். முருகன் சோழன் வங்கியில் கணக்கு வைத்திருக்கிறார். முருகன் காசோலையைச் சோழன் வங்கியில் கொடுக்கின்றார். இந்நிலையில் வங்கிகளுக்கிடையில் வைப்புகள் மாறும். மொத்தப் பணம் கூடவில்லை. ஆனால் வங்கிகளின் சொத்துகளின் நிலையில் மாற்றம் ஏற்படும்.

மணிவண்ணன் முருகனுக்குக் காசோலை கொடுப்பதற்கு முன்னர், மணிவண்ணன் கணக்கு வைத்திருக்கும் சொர்ண

லட்சுமி வங்கியின் இருப்புநிலைக் குறிப்புக் கீழ்க்காணுமாறு அமையும்.

### சொர்ணலட்சுமி வங்கி

| பொறுப்புகள் | தொகை ரூ. | சொத்துகள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| வைப்புகள் (மணிவண்ணன்) | 10,000 | கடன்கள் | 10,000 |

மணிவண்ணனிடமிருந்து காசோலையை வாங்குவதற்கு முன்னால், முருகன் கணக்கு வைத்திருக்கும் சோழன் வங்கியின் இருப்புநிலைக் குறிப்புக் கீழ்க்காணுமாறு இருக்கின்றதென்று வைத்துக்கொள்ளுவோம்.

### சோழன் வங்கி

| பொறுப்புகள் | தொகை ரூ. | சொத்துகள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| வைப்புகள் (முருகன்) | 1,000 | மாற்றுச்சீட்டுகள் கழிவு, முதலீடு | 1,000 |

மணிவண்ணன் முருகனுக்கு ஐயாயிரம் ரூபாவுக்குக் காசோலை கொடுத்த பின்னர், இரண்டு வங்கிகளின் இருப்பு நிலைக் குறிப்புகளும் கீழ்க்காணும் வகையில் இருக்கும்.

### சொர்ணலட்சுமி வங்கி

| பொறுப்புகள் | தொகை ரூ. | சொத்துகள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| வைப்புகள் (மணிவண்ணன்) | 5,000 | கடன்கள், பிற | 10,000 |
| மற்ற வங்கியின் உரிமை | 5,000 | | |

## சோழன் வங்கி

| பொறுப்புகள் | தொகை ரூ. | சொத்துகள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| வைப்புகள் (முருகன்) | 6,000 | மாற்றுச்சீட்டுகள் கழிவு, முதலீடு | 1,000 |
| | | பிற (சொர்ணலட்சுமி) வங்கியிடமிருந்து வரவேண்டியது | 5,000 |

சோழன் வங்கி சொர்ணலட்சுமி வங்கியிடமிருந்து பணத்தைப் பெறும். வைப்புகளை மாற்றுகின்றபொழுது சமுதாயத்தின் மொத்த வாங்கும் சக்தியில் மாற்றம் ஏற்படவில்லை. மணிவண்ணனிடமிருக்கின்ற வாங்கும் சக்தி, முருகனின் கைக்கு மாறுகின்றது. இறுதி நிலையில், சொர்ணலட்சுமி வங்கியில் பொறுப்புகளும் சொத்துகளும் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையும். சோழன் வங்கியில் சொத்துகளும் பொறுப்புகளும் ஐயாயிரம் ரூபாவுக்குக் கூடும்.

வங்கிகள் முதன்மை வைப்பின் அளவிற்கு மட்டும் கடன் கொடுப்பதில்லை. முதன்மை வைப்பைப்போன்று பல மடங்கு கடனை உருவாக்குகின்றன. இதனைக் **கடன் பெருக்க விரிவாக்கம்** (Multiple expansion of credit) என்று கூறுகின்றோம். இதனை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். ஒரு வங்கியில் ஒருவர் ரூ. 10,000 வைப்புக் கணக்கில் போடுகின்றார் என்று வைத்துக் கொள்ளுவோம். இது முதன்மை வைப்பு ஆகும். வங்கி, பத்தாயிரம் ரூபாவையும் ரொக்கமாகஎப்பொழுதும் வைத்திருக்க வேண்டும் என்றால் அதனால் எந்தக் கடனையும் உருவாக்க முடியாது. ஆனால், ஓரளவு பணத்தை மட்டும் வைத்துக் கொண்டு, மீதியைக் கடனாகக் கொடுக்கும் வகையில் வங்கியின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

வங்கி பல மடங்கு கடனை உற்பத்தி செய்கின்றதென்பதை விளக்க மேலும் இரண்டு எடுகோள்கள் தேவைப்படுகின்றன. முதலாவதாக, ஒவ்வொரு வங்கியும் அதனிடமுள்ள மொத்த வைப்புத்தொகையில் 10 சதவீதம் மட்டும் ரொக்கமாக வைத்திருந்தால் போதுமென்று கருதுவோம். இரண்டாவதாக, வங்கி கொடுக்கின்ற கடனை மக்கள் ரொக்கமாக உடனே பெற்றுக்கொள்ளாமல் காசோலைகளின் மூலம் எடுப்பதாகவோ, காசோலைகளின் மூலம் மற்றவர்களுக்குக் கொடுப்பதாகவோ வைத்துக்கொள்ளுவோம். இந்தப் பணத்தைப் பயன்படுத்து

கின்றவர்கள் எல்லாரும் ஏதாவது ஒரு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களென்று வைத்துக்கொண்டு, வங்கிமுறையில் மொத்தமாக எவ்வளவு கடன்தொகை கூடுமென்பதை விளக்கலாம்.

முதன்மை வைப்பாக வருகின்ற பத்தாயிரம் ரூபாவில், வங்கி ஆயிரம் ரூபா மட்டும் ரொக்கமாக வைத்திருந்தால் போதும். மீதி ஒன்பதாயிரம் ரூபாவைக் கடனாகக் கொடுக்கவோ, முதலீடு செய்யவோ வங்கி முன்வருகின்றது. இந்நிலையில் முதல் வங்கியின் இருப்புநிலைக் குறிப்புக் கீழ்க்காணுமாறு அமையும்.

| பொறுப்புகள் | தொகை ரூ. | சொத்துகள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| வைப்புகள் | 10,000 | ரொக்கம் | 1,000 |
| | | கடன், முதலீடு | 9,000 |
| | 10,000 | | 10,000 |

முதல் வங்கி ஒன்பதாயிரம் ரூபா கடன் கொடுக்கின்றது. இந்தக் கடன்களைப் பெற்றவர்கள் இந்தத் தொகைக்கு மற்றவர் களுக்குக் காசோலை தருகின்றனர் என்று வைத்துக்கொள்ளு வோம். காசோலையைப் பெற்றவர்கள் அதனை இரண்டாவது வங்கியில் வைப்புக் கணக்கில் போடுவதாகக் கொள்ளுவோம். இரண்டாவது வங்கி, அதில் 10 சதவீதத்தை ரொக்கமாக வைத்துக்கொண்டு, மீதியைக் கடன் கொடுக்கும். இரண்டாவது வங்கியின் இருப்புநிலைக் குறிப்புக் கீழ்க்காணுமாறு அமையும்.

| பொறுப்புகள் | தொகை ரூ. | சொத்துகள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| வைப்புகள் | 9,000 | ரொக்கம் | 900 |
| | | கடன், முதலீடு | 8,100 |
| | 9,000 | | 9,000 |

இரண்டாவது வங்கி கொடுத்த கடன், அதே வங்கியில் அல்லது மற்றொரு வங்கியில் வைப்பாக மாறும். அதில் பத்துச்

சதவீதம் (ரூ. 810) ரொக்கமாக இருக்க, மீதிக் கடன் கொடுக்கப் படும். இந் நிலை சங்கிலித் தொடர்போல வளர்ந்து செல்லும். ரொக்கம் மிகவும் குறையும் நிலையில் கடன் கொடுப்பது நிற்கும். இப்படிக் கடன் எந்த அளவுவரை விரிவடையும் என்பதை,

$$\text{கடன் பெருக்க விரிவாக்கம்} = \frac{\text{முதன்மை வைப்பு}}{\text{ரொக்க இருப்பு வீதம்}}$$

என்னும் வாய்பாடு குறிக்கின்றது. இந்த வாய்பாட்டைப் பயன்படுத்தி நமது எடுத்துக்காட்டில் குறிப்பிட்ட முதன்மை வைப்பு $10,000 \times \frac{100}{10} = 1,00,000$ வரை விரிவடையும் என்று கணிக்கலாம்.

வங்கிகளின் கடன் உற்பத்திக்கு முதன்மை வைப்பு அடிப்படை யாக அமைகின்றது. முதன்மை வைப்பின்றி வங்கியால் மற்றைய வைப்புகளை உருவாக்க முடியாது. இதனை 'வெறும் காற்றி லிருந்து வங்கிகள் பணத்தை உருவாக்குவதில்லை' என்று டிகாக் (Dekock) கூறுகின்றார். 'கடன்கள் வைப்புகளின் குழந்தைகள்; வைப்புகள் கடன்களின் குழந்தைகள்' என்று கீன்ஸ் குறிப்பிடு கின்றார்.

## வரையறைகள்
## (Limitations)

வங்கிகள் தங்களுடைய விருப்பம்போல் எந்த அளவிற்கு வேண்டுமானாலும் கடனைப் பெருக்கிக்கொண்டே போக இயலு மென்று கருத முடியாது. அதற்கு ஓர் அளவு இருக்கின்றது. வங்கி வைப்பை உருவாக்குகின்றபொழுது, அந்த வைப்பிற்குப் பணம் கொடுப்பது அதன் பொறுப்பாகின்றது. அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதில் வங்கி கவனமாக இருக்க வேண்டும். கடன்களை உற்பத்தி செய்வது வங்கிக்கு மிகவும் ஆதாயமானதென்பதில் ஐயம் இல்லை. ஆனால், அளவு கடந்து கடனை உற்பத்தி செய்வதால் வங்கிக்கு நெருக்கடி ஏற்படும். வங்கியின் கடன் உற்பத்தி ஆற்றல் கீழ்க்காணும் காரணிகளை ஒட்டி அமைகின்றது.

முதலாவதாக, வங்கிகளின் கடன் உற்பத்தித் திறன், அவற்றிடமிருக்கின்ற ரொக்க இருப்பை ஒட்டி அமைகின்றது. முதன்மை வைப்புகள் கூடிக்கொண்டேயிருந்தால், வங்கியின் ரொக்க இருப்புக் கூடும். இதனால் வங்கியின் கடன் கொடுக்கும்

திறன் மிகுதிப்படும். ரொக்கம் இன்றிக் கடனின்மூலம் வைப்புகளை உருவாக்கினால் வாடிக்கையாளர்கள் கேட்கின்றபொழுது பணம் கொடுக்க முடியாத நிலை ஏற்படும். இதனால் பொது மக்கள் வங்கியின்மீது வைத்திருக்கின்ற நம்பிக்கை குறையும். இதன் விளைவாக வங்கி முறியும் நிலை ஏற்படலாம்.

இரண்டாவதாக, வங்கிகள் செம்மையான முறையில் செயல்படுவதற்காக, ஒவ்வொரு நாட்டுச் சட்டமும் வங்கிகள் அவற்றின் வைப்புகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ரொக்கமாக வைத்திருக்க வேண்டுமென்பதைக் கட்டாயமாக்கியிருக்கின்றது. ரொக்கமாக இருக்கவேண்டிய பணத்திலும், ஒரு குறிப்பிட்ட அளவை வங்கிகள் மைய வங்கியிடம் வைத்திருக்கவேண்டுமென்பதையும் சட்டம் வலியுறுத்துகின்றது. ரொக்க வீதம் குறைவாக நிருணயிக்கப்பெற்றிருந்தால், வங்கிகளின் கடன் கொடுக்கும் திறன் மிகுதியாக இருக்கும். சட்டம் ரொக்க இருப்பு வீதத்தைக் கூட்டுகின்றபொழுது, வங்கிகளின் கடனளிக்கும் ஆற்றல் குறைகின்றது. 1946ஆம் ஆண்டுக்கு முன்னால் இங்கிலாந்து வங்கிகள் அவற்றின் வைப்புகளில் 10 சதவீதத்தை ரொக்கமாக வைத்திருக்கவேண்டுமென்ற விதி இருந்தது. 1946ஆம் ஆண்டுக்குப் பின்னர், ரொக்க வீதத்தை 8 சதவீதமாகக் குறைத்துள்ளனர். நமது நாட்டில் 1963ஆம் ஆண்டுவரை நிலைவைப்புத் (Fixed Deposit) தொகையில் குறைந்தது 2 சதவீதமும் கூடியது 8 சதவீதமும், நடப்பு வைப்புத் (Current Deposit) தொகையில் குறைந்தது 5 சதவீதமும் கூடியது 20 சதவீதமும் ரிசர்வ் வங்கியில் இருப்பாக வைக்க வேண்டுமென்ற விதி இருந்தது. 1963ஆம் ஆண்டுக்குப் பின்னர், நடப்பு வைப்பிற்கும் நிலை வைப்பிற்கும் சேர்த்துக் குறைந்தது 3 சதவீதமும் கூடியது 15 சதவீதமும் இருப்பாக ரிசர்வ் வங்கியில் வைத்திருப்பது தேவையாகும்.

மூன்றாவதாக, நாட்டிலுள்ள சட்டமுறைப் பணத்திற்கும் வங்கிகளின் கடனுற்பத்தித் திறனுக்கும் தொடர்பு இருக்கின்றது. சட்டமுறைப் பணத்தை வெளியிடுகின்ற உரிமை மைய வங்கியிடம் இருக்கின்றது. மைய வங்கி வெளியிடுகின்ற பண அளவு கூடினால், வங்கிகளின் முதன்மை வைப்புகள் கூடுவதற்கு வழியுண்டு. இதனைச் சார்ந்து, வங்கிகளின் கடன் திறன் கூடும். நாட்டிலுள்ள ரொக்கம் குறைகின்றபொழுது வங்கிகளின் கடன் ஆக்கத்திறன் குறையும்.

நான்காவதாக, மக்களிடமிருக்கின்ற ரொக்க விருப்பத் தன்மைக்கும் வங்கிகளின் கடன் உற்பத்தித்திறனுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. மக்களிடம் வங்கிப் பழக்கம் மிகுந்து, கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் பெரும்பாலும் காசோலைகளின் மூலமாக நடைபெறுமானால், வங்கிகளால் மிகுயாகக் கடன் உற்பத்தி செய்ய முடியும். மாறாக, பொது மக்கள் எப்பொழுதும் ரொக்கத்தையே விரும்பினால் வங்கிகள் கையில் ரொக்கமாக அதிகப் பணம் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். அதனால் அவற்றின் கடனை உருவாக்குகின்ற ஆற்றல் குறையும்.

ஐந்தாவதாக, நாட்டின் செழிப்புநிலை தொடர, வாணிபமும் தொழிலும் விரிவடையுமானால், பொருளாதார நடவடிக்கைகள் அதிகமாகும். இதனால், மக்களின் பணத் தேவை மிகுதியாகும். வங்கிகளிடம் கடன் வாங்க முன்வருவார்கள். வங்கிகள், மேலும் மேலும் கடனைப் பெருக்க வாய்ப்பு ஏற்படும். பொருளாதார மந்தக் காலத்தில் நேர் எதிரான சூழ்நிலை காணப்படும். பொருளாதார நடவடிக்கைகள் சுருங்குவதால் மக்களின் பணத்தேவை குறையும். இதனால் வங்கிகளின் கடன் உற்பத்தித் திறன் குறைவதைக் காணலாம்.

ஆறாவதாக, வங்கிகள் வெறும் வாக்குறுதிகளை நம்பிக் கடன் தருவதில்லை; தக்க, பாதுகாப்புள்ள ஈட்டின் மீதுதான் கடன் தரும். இதனை 'வங்கி ஒன்றுமேயில்லாமல் பணத்தை உற்பத்தி செய்வதில்லை; மற்றவகைச் செல்வத்தைப் பணமாக மாற்றுகிறது. இடைக்காலத்து இரசவாதிகளும் ஒன்றுமில்லாமல் பொன்னை வரவழைக்க முனையவில்லை; ஈயத்தைப் பொன்னாக மாற்றவே பெரு விழைவு கொண்டனர்' என்று கிரௌதர் கூறுகின்றார். வங்கிகள் ஏற்றுக்கொண்டு கடன் தரக்கூடிய ஈடுகள் அதிகமாக இருக்குமானால், வங்கிகளால் மிகுதியாகக் கடன் அளவைக் கூட்டமுடியும். தக்க ஈடுகள் இல்லை என்றால் கடன் அளவைக் கூட்ட இயலாது.

ஏழாவதாக, சில நாடுகளில் சட்டத்தின்மூலம் வங்கிகள் அவற்றின் மூலதனத்தைப்போல எத்தனை மடங்குகள் பெருக்கலாமென்பதை வரையறுத்திருக்கின்றனர். இதனால், வங்கிகள் தங்களுடைய மூலதனத்தைப் பெருக்காமல் கடனின் அளவைப் பெருக்கிக்கொண்டு செல்ல முடியாது. இது வங்கியின் கடன் உற்பத்தி ஆற்றலை மறைமுகமாகக் கட்டுப்படுத்துகின்றது.

எட்டாவதாக, வணிக வங்கிகளின் கடன் உற்பத்தித் திறனைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் மைய வங்கியிடம் இருக்கின்றது. மைய வங்கி இருவகையான வழிமுறைகளைப் பின்பற்றிக் கடனைக் கட்டுப்படுத்துகின்றது. முதலாவதாக, வட்டிவீதத்தை உயர்த்துவதன் மூலமாகவோ, கடன் கொடுப்பதற்கு உச்சவரம்பை நிருணயிப்பதன் வாயிலாகவோ கடனின் அளவைக் கட்டுப்படுத்தலாம். இரண்டாவதாக, என்னென்ன இனங்களுக்காகக் கடன் கொடுக்கலாமென்ற கடன்தன்மைக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மைய வங்கி வகுத்துக் கொடுக்கலாம். இவையெல்லாம் வங்கிகளின் கடன் உற்பத்தி ஆற்றலைக் கட்டுப்படுத்தும்.

ஒன்பதாவதாக, சிறப்பாகச் செயல்படுகின்ற தீர்வகங்கள் உள்ள நாட்டில் வங்கிகளின் கடன் உற்பத்தித்திறன் அதிகமாக இருக்கும். ஏனென்றால், தீர்வகங்கள் உடனுக்குடன் ரொக்கமாகப் பணத்தைக் கைமாற்றாமல், வங்கிகள் தங்களுக்கிடையில் கணக்குகளைத் தீர்க்க வாய்ப்பளிக்கின்றன. இதனால் குறைந்த ரொக்கத்தை வைத்துக்கொண்டு மிகுதியாகக் கடன்கொடுக்க வங்கிகளால் முடிகின்றது

பத்தாவதாக, நன்கு விரிவான முறையில் அமைந்திருக்கின்ற பண அங்காடிக்கும் வங்கிகளின் கடன் உற்பத்தி ஆற்றலுக்கும் தொடர்பு இருக்கின்றது. நல்ல பண அங்காடி இருந்தால், மாற்று உண்டியல்களையும், பங்குப்பத்திரங்களையும் நினைத்த நேரத்தில் விற்கவோ, வாங்கவோ முடியும். இதனால் சொத்துகளின் ரொக்கத்தன்மை கூடுவதால், வங்கிகளால் ஓரளவு அதிகமாகக் கடன் கொடுக்க இயலும்.

## மதிப்பீடு

டாக்டர் வால்டர் லீப் (Dr. Walter Leaf), எட்வின் கேனன் (Edwin Cannan) ஆகியோர் வங்கிகளால் அவற்றின் முதன்மை வைப்பைப்போலப் பலமடங்கு கடன்களை உற்பத்தி செய்ய முடியும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. வங்கிகள், வைப்பாளர்கள் தங்களிடம் கொடுத்து வைத்திருக்கின்ற பணத்தை மட்டும்தான் கடன்கொடுக்கப் பயன்படுத்த முடியுமென்று இவர்கள் கருதுகின்றனர்.

இவர்களுடைய கருத்துப்படி, வங்கிகளின் முயற்சியால் கடன்கள் உருவாவதில்லை. சரியாகக் கூறவேண்டுமானால்,

வங்கிகளிடம் வைப்புகளை விட்டுவைக்கின்ற வாடிக்கையாளர்கள்தாம் பணத்தை உருவாக்கும் ஆற்றல் பெற்றிருக்கின்றனர். அவர்கள் போட்ட பணத்தைத் திரும்பப் பெற்றுவிட்டால் வங்கிகளால் கடன் கொடுக்க இயலாது. கடன் கொடுப்பவர்களையும், கடன் பெறுகின்றவர்களையும் இணைக்கின்ற பாலமாகத்தான் வங்கிகள் இருக்கின்றனவென்பது இவர்களுடைய கருத்தாகும்.

வங்கி வைப்பை உருவாக்குகின்றபொழுது வாடிக்கையாளர்கள் எப்பொழுது அதனைப் பெறுவார்கள் என்று கூற முடியாது. எப்பொழுதுவேண்டுமானாலும் அவர்கள் பணத்தைக் கேட்கலாம். வாடிக்கையாளர்கள் மொத்தமாக வைப்புகளைப் பெற்றாலோ, அல்லது வைப்புகளில் பகுதியைப் பணமாகப் பெற்றாலோ வங்கிகளிடம் இருக்கின்ற ரொக்கம் குறையும் வால்டர் லீப்பின் கருத்துப்படி, வாடிக்கையாளர் வங்கியில், தாம் பெற்ற கடனுக்காக உருவாக்கப்பெற்ற வைப்பை மற்றவர்களுக்குக் காசோலைகளாகக் கொடுத்து, மற்றவர்கள் அவர்களுடைய காசோலைகளை வேறு வங்கிகளில் கொடுத்தாலும், அந்த வங்கிகள் வைப்பை உருவாக்கிய வங்கியிடமிருந்து இறுதி நிலையில் பணத்தைப் பெறவே செய்யும். ஆதலால், வங்கி தன்னிடமுள்ள ரொக்கத்திற்குமேல் கடன் கொடுக்க இயலாதென வால்டர் லீப் வாதிடுகின்றார்.

எட்வின் கேனன், அவரது 'ஒரு பொருளாதாரவாதியின் மறுப்பு' (An Economist's Protest) என்னும் நூலில், வங்கி தனது ரொக்க இருப்புக்குமேல் கடன் கொடுக்க இயலாதென வாதிடுகின்றார். அவரது கருத்தை விளக்க, வங்கியைப் பயண மூட்டைகளை வைக்கும் அறைகளோடு (Cloak Room) ஒப்பிட்டு விளக்குகின்றார். இதனை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் தெளிவாக விளக்கலாம். ஓர் இசைக் கச்சேரிக்கு நூறு பேர்கள் வருகின்றார்களென்று வைத்துக்கொள்ளுவோம். அவர்கள் தாங்கள் கொண்டுவந்த குடைகளை, அவற்றை வைப்பதற்குரிய அறையில் ஒப்படைத்துவிட்டுக் கச்சேரிக்குச் செல்கிறார்களென்று வைத்துக்கொள்ளுவோம். அந்த அறையின் பொறுப்பாளர், அவரது முன்அனுபவத்திலிருந்து நிகழ்ச்சி நடைபெறுகின்றபொழுது 10 பேர்தாம் வெளியில் வந்து குடைகளை எடுத்துச் செல்வார்களென்று கண்டறிந்திருந்தால், இசை நடக்கும் நேரத்திற்கு மீதமுள்ள 90 குடைகளை வாடகைக்கு விடலாம். ஆனால், பொறுப்பாளரால் 90-க்கு மேல் குடைகளைக் கூட்ட முடியாது. இதனைப்போன்றுதான் வங்கியின் பணியும் அமைந்திருக்கின்றது என்றும், வங்கியால் அது முதன்மை வைப்பாகப்

பெற்ற பணத்திற்குமேல் கடன் கொடுக்க இயலாதென்றும் எட்வின் கேனன் கூறுகின்றார்.

வால்டர் லீப், எட்வின் கேனன் ஆகியோரின் கருத்துகள் மறுக்கப்படுகின்றன. இக் கருத்துகளைக் கருத்தியலின் (Theoretical) அடிப்படையிலும், நடைமுறையின் (Practical) அடிப்படையிலும் மறுக்கலாம்.

கருத்தியலின் அடிப்படையில் வங்கிகள் பணம் உற்பத்தி செய்ய இயலாதென்ற கருத்தை முதலில் ஆராய்வோம். தனி வங்கியைப் பொறுத்தவரை இக் கருத்து ஓரளவு உண்மையானதாக இருக்கலாம். ஒரு வங்கி கடனின் மூலமாக வைப்பு ஏற்படுத்த, கடன் பெற்றவர் வங்கியிலிருந்து ரொக்கத்தை எடுத்துவிட்டால், வங்கியின் கையிருப்புக் குறையும். இதனால் வழக்கமாக வைத்திருக்கின்ற ரொக்கவீதம் குறைய வங்கி நெருக்கடிக்கு ஆளாகும் நிலை ஏற்படலாம். ஆனால், வங்கி முறையை மொத்தமாக நோக்குகின்றபொழுது, இந்தக் கருத்து வலுவற்றதாகப் போகின்றது. வங்கிகள் 10 சதவிதம் ரொக்கம் வைத்திருப்பதே போதுமென்றால், ஒரு வங்கிக்கு 100 ரூபா அதிகமாகப் பணம் கிடைத்தால், மொத்த வைப்பு 1000 ரூபாவாக மாறுகின்றவரை கடன்களைக் கொடுத்துக்கொண்டே போவதைக் காணலாம். ஒரு வங்கியில் கடன் வாங்கிய வாடிக்கையாளர்கள், கடனில் ஒரு பகுதியை அதே வங்கியில் கணக்கு வைத்திருக்கின்ற வேறு வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்கலாம். அப்பொழுது தனிமனிதர்களின் பெயரில் இருக்கின்ற வைப்புகள் மாறலாம். ஆனால், வங்கியின் மொத்த வைப்புகளின் அளவு மாறுவதில்லை. கடன் பெற்ற வாடிக்கையாளர்கள் கடனில் ஒரு பகுதியை வேறு வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்கின்றதாக வைத்துக்கொள்வோம். எந்த வங்கியிலிருந்து பணம் கொடுக்க வேண்டுமோ, அந்த வங்கியின் வைப்புகளின் மொத்தத் தொகை குறையும். எந்த வங்கிக்குப் பணம் வரவேண்டுமோ, அதன் வைப்புத்தொகை கூடும். இதே வகையில், முதல் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு மற்ற வங்கியின் வாடிக்கையாளர்கள் காசோலை வழங்கினால், முதல் வங்கியின் வைப்புகள் கூட, இரண்டாம் வங்கியின் வைப்புகள் குறைவதைக் காணலாம்.

இப்படிப்பட்ட முறையினால் வங்கிகள் உருவாக்குகின்ற பணம் அவற்றிற்கிடையே கைமாறிக்கொண்டிருப்பதைக் காணலாம். ஆனால், வெளியிலிருந்து வந்த மூல வைப்பான

100 ரூபா, 10 சதவீத ரொக்கவீத அடிப்படையில் 1,000 ரூபா வரை கடன் கொடுக்கப் பயன்பட்டிருப்பதைக் காணலாம்.

இரண்டாவதாக, நடைமுறையின் அடிப்படையில் வங்கிகள் மூல வைப்பைப்போலப் பல மடங்கு கடன் உற்பத்தி செய்கின்றதென்ற கருத்தை உறுதிப்படுத்தலாம். வங்கி வைப்புகளின் அளவின் முக்கியத்துவத்தை, புழக்கத்திலுள்ள பணத்தின் அளவையும் வங்கிகளிடமுள்ள ரொக்க இருப்பையும் ஒப்பிட்டுப் பார்ப்பதன்மூலம் அறியலாம்.

1954 நவம்பரில், இங்கிலாந்திலிருந்த வணிக வங்கிகளின் மொத்த வைப்பு ஏறத்தாழ 6,500 மில்லியன் பவுன் ஆகும். ஆனால், புழக்கத்திலிருந்த பணத்தின் அளவு 1,647.7 மில்லியன் பவுன். அப்பொழுது வங்கிகளிடமிருந்த ரொக்க இருப்பு 237 மில்லியன் பவுன்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். வங்கிகள் தங்களிடமிருந்த ரொக்க இருப்பின் அளவிற்குத்தான் கடன் கொடுக்க இயலுமென்றால், 237 மில்லியன் பவுன் மட்டும்தான் கடன் கொடுத்திருக்க முடியும். ஆனால், அதிகமாக இருந்த 6,263 மில்லியன் பவுன் வைப்புத்தொகை வங்கிகள் உருவாக்கிய பணம் என்பது வெளிப்படை. இதிலிருந்து, வங்கி முறை மொத்தமாகச் செயல்படுகின்றபொழுது, வங்கிகள் கடன் உற்பத்தியாற்றல் பெற்றுத் திகழ்வது தெரிகின்றது.

இன்றைய வங்கி முறையில் ஒரு வங்கி மட்டும் தனியாக எந்தக் கொள்கையையும் பின்பற்ற இயலாது. மற்றைய வங்கிகள் எப்படிச் செயல்படுகின்றனவோ, அவற்றைப் போல்தான் ஒரு தனி வங்கியும் செயல்பட முடியும். எடுத்துக் காட்டாக, ஒரு வங்கி மற்றைய வங்கிகளைவிட அதிகமாகக் கடன் கொடுக்கின்றதென்று வைத்துக்கொள்ளுவோம். அதனுடைய ரொக்க இருப்பு மிகவும் குறையும். அதனால், அதன் வலிமை குறையும். ஆனால், அதனுடைய காசோலைகள் மற்றைய வங்கிகளுக்குப் போகின்றபொழுது அதன் வலிமை குறைந்தாலும், மற்றைய வங்கிகளின் காசோலைகள் வாடிக்கை யாளர்களின் மூலமாக அதற்குக் கிடைக்கின்றபொழுது அதனுடைய வலிமை கூடுவதாகக் காணலாம். மற்றைய வங்கிகளைப் போன்று மிகுதியாகக் கடன் கொடுக்காமல், குறை வான அளவிலேயே கடன் கொடுத்தால் அதனிடம் வருவாய் தராத ரொக்கம் மிகுதியாக இருக்கும். இது வங்கிக்கு நல்ல தன்று. ஆதலால், மற்றைய வங்கிகளைப் போன்றே ஒவ்வொரு வங்கியும் செயல்படுவதுதான் அதற்கு ஏற்றதாக இருக்கும்.

வங்கிகள் இணைந்து செயல்பட்டபோதிலும், அவற்றின் கடன் உற்பத்தி ஓர் அளவோடுதான் அமைய முடியும். வங்கிகள் மிகுதியாகக் கடனளிக்கின்றபொழுது நாட்டின் வாணிப, தொழில் நடவடிக்கைகள் விரிவடையும். இதனால் வாடிக்கை யாளர்கள் மிகுதியாக வங்கிகளிடமிருந்து ரொக்கமாகப் பணத் தைப் பெறுகின்ற சூழ்நிலை ஏற்படும். வங்கிகளின் ரொக்க இருப்புக் குறையக்குறைய வங்கிகள் கடன் உற்பத்தி செய்வதைக் கட்டுப்படுத்திக் கொள்ளும்.

மேலும் வங்கிகள் ஓரளவிற்கு ரொக்க இருப்பு வைத்துக் கொள்வதைப் பழக்கப்படுத்தியிருக்கும். மிகுதியாகக் கடன் கொடுக்கின்றபொழுது வங்கியின் இருப்புக் குறையுமாதலால், வங்கிகள் எச்சரிக்கையோடு நடந்துகொள்ளும். ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ரொக்கம் இருக்க வேண்டுமென்பதை, மைய வங்கியும் வலியுறுத்துகின்றது. ஆதலால், வங்கிகள் இயல்பாகவே கடன் கொடுப்பதை ஓரளவு நிறுத்திக்கொள்வது தேவையாகின்றது.

வங்கிகளின் வைப்புப் பணமாகப் பயன்படுகின்றது. ஆதலால், இது வாங்கும் சக்தியாக இருக்கின்றது. வங்கிகளின் வைப்புகளுக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. வங்கிக் கடன்கள் பல்வேறு பொருளா தாரத் துறைகளுக்கும் பணத்தைப் பகிர்ந்தளிக்கின்றன. நாட்டின் பொருளாதாரச் செழிப்பிற்கும் மந்தத்திற்கும், வங்கிகளின் கடன் விரிவாக்கத்திற்கும் சுருக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை வாணிபச் சுழல் விளக்குகின்றது.

## துணை நூல்கள்


1. Keynes, 'Treatise on Money'.
2. H. Withers, 'Meaning of Money'.
3. Manning Dacey, 'The British Banking Mechanism'. Chap. II & VIII.
4. Sayers, 'Modern Banking', Chap. 1.
5. Crowther, 'An Outline of Money', Chap. 2.
6. Cannan, 'Money'.
7. Walter Leaf, 'Banking'.
8. George N. Halm, 'Monetary Theory', Chap. 4.
9. Edwin Cannan, 'An Economist's Protest'.
10. F. A. Bradford, 'Money and Banking'.
11. Prof. C. A. Philips, 'Bank Credit'.

# 7. கடன் கருவிகள்

(Credit Instruments)

வணிக வங்கிகள் கடனில் வாணிபம் செய்கின்றன. வாடிக்கையாளர்களிடமிருந்து வங்கிகள் பெறுகின்ற வைப்புகள் வங்கிகள் வாடிக்கையாளர்களுக்குத் தரவேண்டிய கடனென்பது கவனிக்கத்தக்கதாகும். அதைப்போன்று வங்கிகள் வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்கின்ற கடன்கள் வைப்புகளாக மாறுகின்றன. வங்கிகள் தாங்கள் பெற்ற கடன்களுக்குக் குறைவாக வட்டி கொடுத்துத் தாங்கள் அளிக்கும் கடன்களுக்கு மிகுதியாக வட்டி பெற்று ஆதாயம் அடைகின்றன. ஆதலால், வங்கிகளின் பணிகளை நன்கு புரிந்துகொள்ளக் கடனைப்பற்றியும், கடனில் பயன்படுத்தப்பெறும் செலாவணிக் கருவிகளைப்பற்றியும் தெரிந்துகொள்வது தேவையாகின்றது.

## (அ) கடன் - சிறு விளக்கம்

இப்பொழுது பொருளையோ, பணத்தையோ பெற்றுக் கொண்டு, பின்னர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதனைத் திருப்பித் தருவதைக் கடன் என்று கூறுகின்றோம். இன்றைய வாணிபத்தில் கடன் பெரும் பங்கு பெறுகின்றது. கடன் கொடுப்பதும், பெறுவதும் வாங்கும் சக்தியை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றுகின்றன.

இன்றைய பொருளாதார அமைப்பில், தொழிலையும் வாணிபத்தையும் பேரளவில் நடத்த மிகுந்த அளவில் கடன் தேவைப்படுகின்றது. கூட்டுப்பங்கு நிறுவனங்களும் பொதுத் துறை நிறுவனங்களும் திரண்ட அளவில் கடன்பெற்று அவற்றின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துகின்றன. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கடன் பெரும் பங்கு பெறுகின்றது.

வாணிபத்தில் ரொக்க விற்பனையும் கடன் விற்பனையும் நடைபெறுகின்றன. பொருள்களைத் தேக்கமின்றி விற்பனை செய்யக் கடன் கொடுப்பது இன்றியமையாத வாணிபத் தேவையாகின்றது.

பொதுவாக, எல்லோருக்கும் கடன் கொடுக்கமாட்டார்கள். கடன் கொடுப்பவர்கள் மூன்று முக்கியமானவற்றைக் கவனிப் பார்கள். முதலாவதாக, கடன் வாங்குபவர் நல்ல நாணயம் (Character) உடையவராக இருக்க வேண்டும். அப்படிப் பட்டவர்களை நம்பித்தான் கடன் கொடுக்க விரும்புவார்கள். இரண்டாவதாக, கடன் பெறுபவரிடம் கடனைத் திருப்பிக் கொடுக்கும் திறன் (Capacity) இருக்கின்றதாவென்று கவனிக்க வேண்டும். வெறும் நாணயத்தை மட்டும் நம்பிக் கடன் கொடுக்கமாட்டார்கள். கடனைத் திருப்பிச் செலுத்தும் ஆற்றல் உள்ளவர்களுக்குக் கடன் கொடுத்தால்தான் கடன் திரும்பக் கிடைக்குமென்ற உறுதிப்பாடு இருக்கும். மூன்றாவதாக, கடன் வாங்குபவரின் மூலதனத்தையும் (Capital) கவனிப்பார்கள். கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் கடன் வாங்குபவரின் மூலதனத்தை ஒட்டி அமையும். மிகுதியாக மூலதனம் வைத்திருப் பவர்கள் எளிதாக அதிக அளவில் கடன் பெறுவதைக் காணலாம். கடனுக்கு அடித்தளமாக நம்பிக்கை அமைகின்றது.

கடன் கொடுக்கின்றவர்கள் வட்டி வருவாயை எதிர் பார்த்துக் கடன் தருகின்றார்கள். கடன் பெறுகின்றவர்கள் கொடுக்கின்ற வட்டியைவிடக் கடனைப் பயன்படுத்தி மிகுந்த நன்மையைப் பெறமுடியுமென்ற நம்பிக்கையில் கடன் வாங்கு கின்றனர். கடன் காலத்தை ஒட்டி வட்டிவீதம் அமையும்.

கடன் (Credit) என்பது கடனைப் பெறுபவர்கள் குறிப்பிட்ட காலத்தில் பணத்தைத் திருப்பிச் செலுத்துவதாகக் கொடுக் கின்ற வாக்குறுதியை (Promise) ஆதாரமாகக்கொண்டு அமை கின்றது. இந்த வாக்குறுதியை எழுத்தில் கொடுத்தால் அதனை நீதிமன்றத்தில் கடனுக்குச் சான்றாகப் பயன்படுத்தலாம். எழுத்திலிருக்கின்ற கடன் உறுதிகள் அவற்றை வைத்திருப்பவர் களுக்குச் சொத்தாகின்றன. இத்தகைய கடன் உறுதிகளைக் கடன் கருவிகள் (Credit Instruments) அல்லது கடன் பத்திரங்கள் என்று குறிப்பிடுகின்றோம்.

கடன் பத்திரங்களை அவற்றின் உரிமைத்தன்மையை ஒட்டிப் பொதுவாக இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பார்கள். முதல் வகையைச் செலாவணிப் பத்திரங்கள் (Negotiable Instruments) என்றும், இரண்டாம் வகையைச் செலாவணித் தன்மையற்ற பத்திரங்கள் (Non-Negotiable Instruments) என்றும் குறிப்பிடுகின்றனர்.

செலாவணிப் பத்திரங்கள் (Negotiable Instruments) அவற்றை வைத்திருக்கின்றவர்களுக்கு அவற்றின்மீது உரிமையைத் தருகின்றன. அவற்றைக் கைமாற்றிக் கொடுக்கின்றபொழுதே சட்டப்படி அவற்றின் உரிமைகளும் கைமாறுகின்றன. செலாவணிப் பத்திரம் கைமாறுகின்றபொழுது இடையிலுள்ளவர்கள் செய்கின்ற தவறுகள், இடையிலேற்பட்ட குறைகள் ஆகியவை அதனை வைத்திருப்பவரைப் பாதிக்காது. காசோலைகள், மாற்று உண்டியல்கள், வாக்குறுதிப் பத்திரங்கள் ஆகியவற்றைச் செலாவணிப் பத்திரங்களுக்குரிய எடுத்துக்காட்டாகச் சுட்டிக்காட்டலாம்.

செலாவணித் தன்மையற்ற பத்திரங்கள் (Non-Negotiable Instruments) வைத்திருப்பவர்களுக்கு நல்ல உரிமைகளைத் தருவதில்லை. அவர்கள் அவற்றைப் பெறுவதற்கு முன்னால் அவற்றில் ஏற்பட்ட குறைகளும் அவர்களைச் சாரும். ஆதலால் அவற்றைப் பெறுகின்றபொழுது, அவை குறைகளற்றவைதாமா என்பதைக் கவனமாகப் பார்த்துப் பெறவேண்டும். அவற்றைக் கைமாற்றிக் கொடுப்பதால் மட்டும் உரிமைகள் மாறுவதில்லை. இங்கிலாந்தில் பயன்படுத்தப்பெறுகின்ற ஐ. ஒ. யூ. (IOU—I owe you), அஞ்சல் ஆணைகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம்.

செலாவணிப் பத்திரங்களில் சில சிறப்புகள் இருக்கின்றன. வாணிபத்தில் அவை பணத்தைப்போலப் பயன்படுத்தப் பெறுகின்றன. அவற்றை எளிதாகக் கைமாற்றிக் கொடுக்கலாம். அதன் பின்னர், 'இன்னாருக்குக் கொடுக்க' என்று எழுதிக் கையெழுத்திட்டாலே உரிமைகளை மாற்றலாம். பத்திரங்களை வைத்திருப்பவர்களுக்குப் பணத்தைப் பெற்றுக்கொள்ள உரிமை இருக்கின்றது. ஏதாவது உரிமைபற்றிய சிக்கல் எழுமானால், இத்தகைய பத்திரங்கள் மீதுள்ள உரிமையை நீதிமன்றத்தில் எளிதாக நிலைநாட்டலாம்.

கடன்பத்திரங்களை மேலெழுத்தின் (Endorsement) மூலம் கைமாற்றலாம். செலாவணிப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டவருக்குச் சரியான உரிமை கிடைக்கவேண்டுமானால், அதில் கீழ்க்காண்பவை அடங்கியிருக்கவேண்டும்.

முதலாவதாக, கைமாற்றுதல் ஏதாவது மதிப்பைப் பெற்றுக் கொண்டதற்காக இருக்கவேண்டும்.

இரண்டாவதாக, செலாவணிப் பத்திரத்தை நல்ல நம்பிக்கையோடு கைமாற்றித் தரவேண்டும்.

மூன்றாவதாக, கடன் பத்திரம் ஒழுங்கான அமைப்பிலும், நிறைவானதாகவும் இருக்க வேண்டும்.

நான்காவதாக, அது கொடுக்கக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.

## (ஆ) வாக்குறுதிப் பத்திரம்
## (Promissory Note)

ஒருவர் கடன் பெறுகின்றபொழுது, கடனைக் கொடுப்பவருக்கு அந்தக் கடனைக் கேட்டவுடனேயோ, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகோ வட்டியுடன் திருப்பித்தருவதாக உறுதியளித்து எழுதிக் கொடுப்பது கடனுறுதிப் பத்திரமாகும். கடனைக் கொடுத்தவருக்கோ, அல்லது அவரது ஆணையைப் பெற்றவருக்கோ பணத்தைத் திருப்பித் தருவதாகக் கடனைப் பெற்றவர் பத்திரத்தின் மூலம் வாக்குறுதியளிக்கின்றார்.

கடன் வாக்குறுதிப் பத்திரங்களைப் பொதுவாக இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவது, கேட்ட உடனே பணம் தருவதாக உறுதியளித்து எழுதிக் கொடுக்கும் வாக்குறுதிப் பத்திரங்கள். இவற்றைக் 'கட்டளைப் பத்திரங்கள்' என்று கூறுவார்கள். இப் பத்திரங்களை மிகுந்த ரொக்கத்தன்மை உடையவைகளாகக் கருதலாம். இரண்டாவதாக, குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் கடனை வட்டியோடு திருப்பித்தருவதாக வாக்குறுதியளிக்கின்ற பத்திரங்கள் இருக்கின்றன. இவற்றைக் 'காலக் கடன் பத்திரங்கள்' என்று குறிப்பிடுகின்றனர்.

வாக்குறுதிக் கடன் பத்திரங்களில் எந்தவிதமான கட்டுப்பாடும் இருக்கக்கூடாது. கடன் கொடுத்த பணம் கேட்ட உடனேயோ, குறிப்பிட்ட காலத்தவணைக்குப் பின்னரோ கிடைக்கவேண்டும். வாக்குறுதிப் பத்திரத்தை ஒருவர் தனியாகவோ, அல்லது இருவருக்கு மேற்பட்டவர்கள் கூட்டாகவோ எழுதித்தரலாம்.

வாக்குறுதிப் பத்திரத்தில் இரண்டு தரப்பினர் பங்கு பெறுகின்றனர். அவர்களுள் ஒருவர் பணத்தைக் கடனாகப் பெற்றுக்கொண்டு, அதற்காக வாக்குறுதிப் பத்திரத்தை எழுதித் தருபவர். அவரை 'வரைபவர்' (Drawer) என்கின்றோம்.

மற்றவர் கடன் கொடுத்தவர். இவர் இனிக் கடனைத் திருப்பிப் பெறப்போகின்றார். இவரைப் 'பெறுபவர்' (Payee) என்று கூறுகின்றோம்.

மதுரையிலுள்ள முருகன் என்பவர் அதே நகரைச் சார்ந்த அழகப்பன் என்பவரிடம் ரூ. 500 பெற்றுக்கொண்டு கடனுறுதிப் பத்திரம் ஒன்று எழுதித் தருகின்றார் என்று வைத்துக் கொள்ளுவோம். இந்தக் கொடுக்கல் வாங்கலில் கடன் பெறுபவர் முருகன். கடன் கொடுப்பவர் அழகப்பன். கடன் பெறுபவரான முருகன் வரைபவராக, வாக்குறுதிப் பத்திரத்தை எழுதித்தரவேண்டும். அந்த வாக்குறுதிப் பத்திரம் கீழ்க்காணும் முறையில் அமையும்.

மதுரை,
10—7—71

மதுரை திருவள்ளுவர் தெருவிலுள்ள திரு. பரமசிவம் மகன் முருகனாகிய நான், மதுரை பாரதியார் தெருவிலுள்ள திரு. கன்னியப்பரின் மகனான திரு. அழகப்பன் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த வாக்குறுதிப் பத்திரம்.

திரு. அழகப்பன் அவர்களோ, அவரது ஆணையைப் பெற்றவரோ, கேட்கின்றபொழுது மதிப்புள்ள பொருள் பெற்றதற்காக ஐந்நூறு ரூபாக் கடனை, ஆண்டிற்கு 5 சதவீத வட்டியோடு சேர்த்துத் திருப்பிச் செலுத்துவதாக உறுதி கூறுகின்றேன்.

இப்பத்திரம் 1971ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 10ஆம் நாள் எழுதப்பெற்றது.

முருகன்

சாட்சிகள்: 1. கோபாலன், திரு. கோவிந்தசாமியின் மகன்.
2. சுப்பையா, திரு. அரங்கநாதரின் மகன்.

ஒரு கடன் பத்திரம் சட்டப்படி அமைந்தால்தான் நீதி மன்றத்தின்மூலம் அதன் உரிமைகளை நிலைநாட்ட முடியும். சட்டப்படி செல்லுபடியாகவேண்டிய கடன் பத்திரத்தில் எவையெல்லாம் இருக்க வேண்டுமென்பதைத் தொகுத்துக் கூறுவோம்.

முதலாவதாக, வாக்குறுதிப் பத்திரம் முத்திரைப் பத்திரத் திலோ அல்லது முத்திரையை ஒட்டிய பத்திரத்திலோ எழுதப்

பெறவேண்டும். எவ்வளவுக்கு முத்திரை ஒட்டவேண்டுமென்பதை முத்திரை வரி வரையறுக்கின்றது.

இரண்டாவதாக, கடன் பெற்றவர் முத்திரையின்மீது கையொப்பமிடவேண்டும். பாதிக் கையெழுத்து முத்திரைமீதும், பாதிக் கையெழுத்துப் பத்திரத்தின்மீதும் இருக்கவேண்டும்.

மூன்றாவதாக, முத்திரையின்மீது இடுகின்ற கையொப்பத் தின்கீழ், தேதி குறிப்பிடப்பெறல் தேவையாகும்.

நான்காவதாக, வாக்குறுதிப் பத்திரம் 'பொருள் பெற்றதற் காக' என்ற அடைமொழியோடு எழுதப்பெற்றிருக்க வேண்டும்.

ஐந்தாவதாக, என்ன வட்டி வீதத்தோடு கடனைத் திருப்பித் தரவேண்டும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும். வட்டிவீதம் குறிப்பிடப்பெறாத பத்திரம் செல்லுபடி யாகாது.

வாக்குறுதிப் பத்திரங்கள் மூன்றாண்டுக் காலத்திற்கு மட்டும் தான் செல்லுபடியாகும். காலம் குறிப்பிடப்பெறாத பத்திரம், அஃது எழுதப்பெற்ற நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்குச் செல்லுபடியாகும். காலம் குறிப்பிடப்பெற்றிருந்தால், அது முடியும் காலத்திலிருந்து மூன்றாண்டு காலத்திற்குப் பத்திரத் திற்கு உயிர் இருக்கும்.

## (இ) மாற்றுச்சீட்டு
### (Bill of Exchange)

வாணிபத்தில் கடனுக்குப் பொருள்களை விற்பது தேவையா கின்றது. கடனுக்குப் பொருள்களை விற்றவர், கடனுக்குப் பொருள்களை வாங்கியவரை அந்தப் பணத்தை மற்றொரு வருக்குக் கொடுக்கும்படி ஆணை பிறப்பிக்கின்ற வழிமுறையாக மாற்று உண்டியல் அமைகின்றது.

கடன் கொடுத்தவர் கடன் பெற்றவர்மீது குறிப்பிட்ட காலத்தில் எத்தகைய் கட்டுப்பாடும் இன்றி ஒருவருக்குத் தரும்படி எழுதுவது உண்டியலாகும். வாணிபக் கடனை உறுதிப்படுத்துவதற்கு இத்தகைய மாற்றுச்சீட்டுகள் பயன் படுகின்றன.

மாற்றுச்சீட்டில் மூன்றுபேர் பங்கு பெறுகின்றனர். கடனாகப் பொருள்களைக் கொடுத்தவர், கடன் பெற்றவரின்

மீது மாற்றுச்சீட்டை எழுதுகின்றார். அவரை 'வரைபவர்' (Drawer) என்கின்றோம். யார்மீது சீட்டு வரையப் பெறு கின்றதோ அவரைப் 'பெயரவர்' (Drawee) என்கின்றோம். யாருக்குப் பணம் தரும்படி மாற்றுச்சீட்டில் எழுதப் பெறுகின்றதோ அவரைப் 'பெறுவோர்' (Payee) என்று குறிப்பிடுகின்றோம்.

மாற்றுச்சீட்டு, பணந்தரும்படி கூறுகின்ற ஓர் ஆணைப் பத்திரமாகும். மாற்றுச்சீட்டை வைத்திருப்பவரோ, குறிப்பிடப் பெற்ற ஒருவரோ, அவரது ஆணையைப் பெற்றவரோ பணத்தைப் பெறுகின்ற உரிமையைப் பெறுகின்றார். மாற்றுச் சீட்டு எழுதப்பெற்ற பின்னர், அதில் பெயரவரின் 'ஒப்புதல்' (Acceptance) பெறவேண்டும்.

மாற்றுச்சீட்டை அவற்றிற்குப் பணம் கிடைக்கின்ற காலத்தை ஒட்டி இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். கேட்ட உடனே பணம் கிடைக்கின்ற வகையில் எழுதப்பெறுகின்ற உண்டியல் ஒரு வகை. இதனைக் 'கட்டளைச்சீட்டு' (Demand Bill) என்று குறிப்பிடுகின்றோம். இரண்டாவது வகை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர்ப் பணம் செலுத்த வேண்டிய தாகும். இதனைக் 'காலச் சீட்டு' (Time Bill or Usance Bill) என்று கூறுகின்றோம். தேதி குறிப்பிட்ட மாற்று உண்டியல் களுக்குப் பணம் செலுத்தக் குறிப்பிட்ட தேதிக்குமேல் மூன்று 'கருணை நாள்கள்' (Days of Grace) வழங்கப்படுகின்றன.

ஓர் உண்டியல், வரையப்படுவோரிடம் இரண்டு முறை காட்டப்பெறுகின்றது. முதல் தடவையில் வரையப்படுவோர், தமது ஒப்புதலை உண்டியலின்மீது எழுதித்தருகின்றார். இரண்டாம் தடவையாக அஃது உரிய காலத்தில் (Due date) பணம்பெற வரையப்படுவோரிடம் செல்கின்றது. உரிய காலத்தில் பணம் செலுத்தப்பெறாத சீட்டை 'மதிப்பிழந்த மாற்றுச்சீட்டு' (Dishonoured Bill) என்கின்றோம்.

மாற்றுச்சீட்டுகளை, அவை எழுதப்பெறுகின்ற நாட்டை ஒட்டி இருவகைகளாகப் பிரிக்கலாம். உள்நாட்டிலிருக்கும் ஒருவரால் மற்றொருவர்மீது எழுதப்பெறுகின்ற சீட்டு 'உள் நாட்டு மாற்றுச்சீட்டு' (Inland Bill) என்று கூறப்படுகின்றது. ஒரு நாட்டில் இருக்கின்ற ஒருவர் மற்றொரு நாட்டிலிருக்கின்ற வரின்மீது எழுதப்படுகின்ற சீட்டை 'அயல்நாட்டு மாற்றுச் சீட்டு' (Foreign Bill) என்கின்றோம்.

தேதி குறிப்பிடப்பெற்ற மாற்றுச்சீட்டை வங்கியில் கழிவு செய்து பணம் வாங்கலாம். உரியகாலத்தில் வங்கி பெயரவரிடமிருந்து பணம் பெறும்.

மதுரையிலிருக்கின்ற வேல்முருகன் புத்தக நிலையம் திருச்சியிலிருக்கின்ற மனமகிழ் நூல்நிலையத்திற்கு ரூ. 1,000-க்குப் புத்தகங்களை விற்கின்றதென்று வைத்துக்கொள்ளுவோம். வேல்முருகன் புத்தக நிலையம், அன்பு வளர் அச்சகத்திற்கு ஆயிரம் ரூபாத் தரவேண்டியிருக்கின்றதென்றால், அன்பு வளர் அச்சகத்திற்குக் குறிப்பிட்ட காலத் தவணையில் ரூபாத் தரும்படி ஆணையிட்டு ஒரு மாற்றுச்சீட்டை வழங்கலாம். அன்பு வளர் அச்சகம் அந்த மாற்றுச்சீட்டை மனமகிழ் நூல்நிலையத்திடம் காட்டி ஒப்புதல் பெறும். அத்தகைய உண்டியல் கீழுள்ளதைப் போல இருக்கும்.

ரூ. 1000/- 1-7-71

மூன்று மாதங்களில் மதுரை அன்புவளர் அச்சகத்திற்கோ, அவரது ஆணை பெற்றவருக்கோ, எங்களுடைய பொருள்களைப் பெற்றுக்கொண்ட வகைக்காக ஆயிரம் ரூபாய் செலுத்துங்கள்.

ஏற்றுக் கொள்ளப் பெறுகிறது 4-7-71 மனமகிழ் நூல் நிலையத்திற்காக

வேல்முருகன் புத்தக நிலையத்திற்காக

மனமகிழ் நூல் நிலையம், திருச்சி.

சிலவேளைகளில் பெயரவரின் பெயரோடுகூட வேறு ஒருவரின் பெயரையும் குறிப்பிட்டிருப்பார்கள். பெயரவர் ஒப்புதல் அளிக்க மறுத்தாலோ, உரிய காலத்தில் பணம் கொடுக்கத் தவறினாலோ, மாற்றாகக் குறிக்கப் பெற்றவர் மாற்றுச்சீட்டிற்கு ஒப்புதலையோ, பணத்தையோ வழங்குவார். இவரைத் 'தேவைக்கேற்ற துணைவர்' (Referee in case of need) என்று கூறுகின்றோம்.

மாற்றுச்சீட்டை உரிய காலம்வரை, பெறுபவரே வைத்திருக்க வேண்டுமென்பதில்லை. பணம் பெறுகின்ற உரிமையை அவர் மற்றவருக்கு 'மேலெழுத்து' (Endorsement) மூலம் மாற்றிக் கொடுக்கலாம். உண்டியலின் பின்னால் 'இன்னாருக்குப் பணம் தருக' என்று எழுதிக் கையெழுத்திட்டுத் தருவதுதான் மேல் எழுத்தாகும்.

வாணிபத்தில் மாற்றுச்சீட்டுகளைப் பயன்படுத்துகின்ற பொழுது வங்கிகளின் மூலமாக மாற்றுச்சீட்டிற்குப் பணத்தை வசூலிப்பதும் உண்டு. பொருள்களை விற்பனை செய்பவர் அவற்றை ரயில்மூலம் அனுப்பினால், மாற்றுச்சீட்டையும் பொருள்களுக்குரிய பட்டியலையும், ரயில்வே ரசீதையும் சேர்த்து ஒரு வங்கிக்கு அனுப்புவார்கள். இதனைப் 'பத்திரங்கள் சேர்ந்த சீட்டுகள்' (Documentary Bills) என்று குறிப்பிடுகின்றோம். மாற்றுச்சீட்டில் பொருள்களைப் பெறுபவர் ஒப்புதல் கையெழுத்திட்ட பின்னர்தான் வங்கியிலிருந்து ரயில்வே ரசீதைப் பெற்றுப் பணத்தைப்பெற இயலும்.

## (ஈ) காசோலை

(Cheque)

வங்கியிலிருந்து பணத்தைப்பெறக் காசோலை பயன்படுத்தப் படுகின்றது. சேமிப்புக் கணக்கிலும், நடப்புக் கணக்கிலும் பணம் வைத்திருப்பவர்களுக்கு வங்கி காசோலையை வழங்கு கின்றது. காசோலை ஒரு செலாவணிப் பத்திரமாகும்.

வங்கியின் வாடிக்கையாளர் தமது வங்கியைத் தாம் குறிப் பிடுகின்றவருக்குக் குறிப்பிட்ட தொகையைக் கொடுக்கும்படி ஆணையிடுவதாகக் காசோலை அமைந்திருக்கின்றது. காசோலை யிலும் மூன்றுபேர் பங்கு பெறுகின்றனர். காசோலையை எழுதித் தருகின்றவரை 'வரைபவர்' (Drawer) என்கின்றோம். எந்த வங்கிக்குக் காசோலை தரப்படுகின்றதோ, அதனைப் 'பெயரவர்' (Drawee) என்று கூறுகின்றோம். யாருக்குப் பணம் தரும்படி காசோலை எழுதப்பெற்றிருக்கின்றதோ அவரைப் 'பெறுபவர்' என்கின்றோம்.

ஒரு காசோலை கீழ்க்காணும் முறையில் இருக்கும்.

எண் 1875-3

**சொர்ணலட்சுமி வங்கி**

நாள் 15-7-71

திரு. மணிவண்ணனுக்கு அல்லது வைத்திருப்பவருக்கு ஆயிரம் ரூபாவைச் செலுத்துக.

**ரூ. 1,000**

குரு. தேமொழி

காசோலையில் சில குறிப்பிடத்தக்க பொதுவான இயல்புகள் உள்ளன. அவற்றைத் தொகுத்துக் கூறுவோம்:

முதலாவதாக, காசோலை, வங்கி வழங்கிய தாளில் எழுதப் பெறுகின்றது. பொதுவாகப் பேனாவில் எழுதுவதுதான் சிறந்ததாகும் :

இரண்டாவதாக, காசோலை ஓர் ஆணையாகும். வங்கியைப் பணம் தரும்படி வாடிக்கையாளர் ஆணையிடுகின்றார்.

மூன்றாவதாக, காசோலை ஏதாவது ஒரு வங்கியின்மீது தான் எழுதப் பெறவேண்டும். வேறு தனி மனிதர்களின்மீதோ, நிறுவனங்களின்மீதோ காசோலையை எழுதக்கூடாது.

நான்காவதாக, செலுத்தவேண்டிய பணம் எவ்வளவென் பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிடவேண்டும். தொகையை எண்ணிலும் எழுத்திலும் எழுதவேண்டும். எண்ணில் எழுதிய தொகையும் எழுத்தால் எழுதிய தொகையும் ஒன்றுபோல் இருந்தால்தான் வங்கி காசோலைக்குப் பணம் கொடுக்கும்.

ஐந்தாவதாக, ஒரு காசோலை, அதில் குறிப்பிடப்பெற்ற வருக்கோ, அவரது கட்டளை பெற்றவருக்கோ, அதனை வைத்திருப்பவருக்கோ பணம் செலுத்தும் வகையில் எழுதப் பெற்றிருக்கலாம். ஆளுக்கோ, தொழில், வாணிப நிறுவனத் திற்கோ, அலுவலகத்திற்கோ பணம் கொடுக்கும் வகையில் காசோலை அமையலாம்.

ஆறாவதாக, பணம் பெறவேண்டியவர், வந்து கேட்கின்ற பொழுதுதான் வங்கி பணத்தைத் தரவேண்டும். பணத்தை வங்கியே கொண்டுசென்று கொடாது.

ஏழாவதாக, காசோலையை வரைபவர், தமது வங்கியில் போதுமான அளவு பணத்தை வைத்துக்கொண்டுதான் காசோலையை வழங்கவேண்டும். இல்லையேல் அது ஏமாற்று வதாக அமையும்.

எட்டாவதாக, காசோலை வரையப்பெறுகின்ற தேதியைக் குறிப்பிடவேண்டும். அப்பொழுதுதான் அந்தக் காசோலை எவ்வளவு காலம் புழக்கத்திலிருக்கின்றது என்பதை அறிய இயலும். ஒரு காசோலையை எழுதிய நாளிலிருந்து, அஃது ஆறு மாதங்களுக்குச் செலாவணியாகும். அதற்குமேல் அதனைப்

'பழமையானதாகக்' (Stale) கருதுவார்கள். காசோலைகளில் இரண்டு வகையாகத் தேதி இடுவதுண்டு. முதலாவதாக, உண்மையில் எழுதிய தேதிக்குப் பின்னால் ஒரு தேதியைக் குறிப்பார்கள். இதனைப் 'பின் தேதியிட்ட காசோலை' (Post-dated Cheque) என்று கூறுவார்கள். அப்படிப்பட்ட காசோலையை அந்தத் தேதிக்குப் பின்னர்தான் வங்கியில் காட்டிப் பணம் பெறமுடியும். இரண்டாவதாக, காசோலையை எழுதுவதற்கு முந்திய நாளைக் குறிப்பிடலாம். இதனை 'முன் தேதியிட்ட காசோலை' (Anti-dated Cheque) என்று கூறுகின்றோம். இத்தகைய காசோலைகளை அவற்றில் குறிப்பிடப் பெற்ற தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் வங்கியில் கொடுத்துப் பணம் பெறவேண்டும்.

காசோலையை வரைபவர் எழுதிக்கொடுத்த பின்னர், அதில் எந்தவிதமான முக்கிய மாற்றங்களையும் (Material alterations) செய்யக்கூடாது. அப்படி மாற்றங்கள் செய்யப் பெற்ற காசோலை செல்லுபடியாகாது. தேதி, பணம் செலுத்து கின்ற இடம், செலுத்தக்கூடிய பணம் ஆகியவற்றை மாற்றுவதை முக்கியமான மாற்றங்கள் என்கின்றோம். இத்தகைய மாற்றங் களில் வரைபவரின் முழுக் கையெழுத்தும் இருக்கவேண்டும். இல்லையென்றால் வங்கி காசோலைக்குப் பணம் தர மறுக்கலாம்.

காசோலைக்குப் பணம் செலுத்துவதில் தவறு நேராமல் தவிர்க்கக் காசோலையைக் கோடிட்டுக் (Crossing) கொடுக்க லாம். காசோலையின் இடப்பக்கத்தின் மேலாக இரு கோடுகளை இணைகோடுகளாக (Parallel lines) வரைந்து இடையில் '& Co' என்று குறிப்பிடுவது உண்டு. அத்தகைய காசோலைக்குத் தனிமனிதரிடம் நேரடியாகப் பணம் செலுத்தமாட்டார்கள். ஏதாவது ஒரு வங்கியின் மூலமாகத்தான் கோடிட்ட காசோலைக்குப் பணம் பெறமுடியும். வங்கியில் கணக்கு இல்லாதவர்களுக்குக் கோடிட்ட காசோலைகள் கிடைத்தால் வங்கியில் கணக்கு வைத்திருப்பவர் யாராவது ஒருவர் மூலமாகத்தான் பணம் பெறமுடியும். இதனால் ஏமாற்றுகளுக்கு வழி இராது.

இத்தகைய கோடிடுதல் இரு வகைகளாக அமையலாம். முதல் வகை, 'பொதுவாகக் கோடிடுதல்' (General Crossing) எனப்படும். இதில் இரு இணைகோடுகள் மட்டும், அல்லது இணைகோடுகளும் அவற்றிற்கிடையில் '& Co' என்னும்

எழுத்துகளும் காணப்படும். இத்தகைய காசோலைகளுக்கு ஏதாவது ஒரு வங்கியின் மூலமாகத்தான் பணம் பெற இயலும். பொதுவாகக் கோடிடுதலுக்குக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டு களைக் கூறலாம்.

I II




இரண்டாவது வகைக் கோடிடுதலைச் 'சிறப்புக் கோடிடுதல்' (Special Crossing) என்கின்றோம். சிறப்புக் கோடிடுதலின் மூலமாக, பொதுக் கோடிடுதலில் இருப்பதோடுகூடப் பணம் செலுத்துவதில் வேறு நிபந்தனைகளும் விதிக்கப்படுகின்றன. சிறப்புக் கோடிடுதலும் பொதுவாக மூன்று வகைகளில் அமையலாம்.

(i) (ii) (iii)



(அ) இணை கோடுகளுக்கிடையில் 'A/C Payee' என்று எழுதிவிட்டால், அந்தக் காசோலைக்குப் பணத்தைக் காசோலையில் பெயர் குறிப்பிட்டிருப்பவரின் கணக்கில்தான் வரவு வைப்பார்கள். பெறுபவர் (Payee), புறக்குறிப்பு மூலம் வேறு யாருக்கும் காசோலையைக் கைமாற்றிக் கொடுக்க இயலாது.

(ஆ) இணைகோடுகளுக்கிடையில் ஏதாவது ஒரு வங்கியின் பெயர் குறிப்பிடப்பெற்றுவிட்டால், காசோலையை அந்த வங்கியின் மூலமாகத்தான் பணமாக மாற்ற முடியும். இதனால் ஏமாற்றுகள் குறையும்.

(இ) இணைகோடுகளுக்கிடையில் 'Not-Negotiable' என்று எழுதிவிட்டால், அந்தக் காசோலையின் செலாவணித் தன்மை அழிகின்றது. அதாவது, காசோலை கைமாறுவதில் ஏதாவது தவறு இருந்தால் அஃது அதனை வைத்திருப்பவரைப் பாதிக்கும். இந்த மூன்றுவகைச் சிறப்புக் கோடிடுதலும் கீழ்க்காணும் மாதிரி அமையும்.

ஒரு காசோலையை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்புகின்றபொழுது தொலைந்துவிட்டால், உடனே அதனை வங்கிக்குத் தெரிவித்து, அந்தக் காசோலைக்குப் பணம் தருவதை நிறுத்தும்படி வேண்டிக்கொள்ள வேண்டும். வரைபவர் வேறு காசோலை வழங்கினால் பணத்தைப் பெறமுடியும்.

பணம் செலுத்துகின்ற வங்கியின் சில குறிப்பிடத்தக்க பொறுப்புகளை இங்குத் தொகுத்துக் கூறலாம். வாடிக்கையாளர் தந்திருக்கின்ற காசோலைக்குப் பணம் தரவேண்டியது வங்கியின் பொறுப்பாகும். ஆனால், காசோலை சரியான முறையில் எழுதப்பெற்றிருந்து, காசோலை கொடுத்தவரது கணக்கில் போதுமான அளவில் பணமிருந்தால்தான் வங்கி காசோலைக்குப் பணம் தரும்.

காசோலைக்குப் பணம் தருவதற்கு முன்னால், அது சாதாரணக் காசோலையா, கோடிட்ட காசோலையா என்பதைப் பார்க்கவேண்டும். சாதாரணக் காசோலையாக இருந்தால், அதனை வைத்திருப்பவருக்குப் பணத்தை நேரடியாகக் கொடுக்கலாம். கோடிட்ட காசோலையாக இருந்தால், வங்கியின் மூலமாகத்தான் பணத்தைச் செலுத்தவேண்டும்.

மிகவும் காலம் கடந்து ஒரு காசோலை வருமானால், அதனை வரைந்தவர் அதற்குப் பணம் செலுத்தாமலிருக்க ஆணையிட்

டிருக்கின்றாரா என்பதைப் பார்க்க வேண்டும். பணத்தைக் கொடுப்பதற்கு முன்னால் காசோலை சரியான முறையில் எழுதப்பெற்றிருக்கின்றதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஒரு காசோலை எழுதப்பெற்று ஆறு மாதங்கள் கடந்து விட்டால், அதற்குப் பணம் செலுத்தக்கூடாது. வரைவோர், வேறு காசோலை வழங்கிய பின்னரோ, அல்லது இந்தக் காசோலையின் தேதியை மாற்றிய பின்னரோதான் பணம் செலுத்த வேண்டும். தொகை சரியாக எண்ணாலும் எழுத்தாலும் எழுதப்பெற்றிருக்கின்றதாவென்பதைக் கவனிக்க வேண்டும். மேல் எழுத்துகள் சரியானபடி எழுதிக் கையெழுத்திடப்பெற்றி ருக்கின்றதாவென்பதைக் கவனிக்க வேண்டும்.

காசோலை பொருளாதாரத் துறையில் மிகவும் முக்கியமான கருவியாகக் கருதப்படுகின்றது. பெரும்பாலான வாணிப, தொழில் நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்கள் காசோலை யின் மூலமாக நடைபெறுகின்றன. காசோலைகளை மிகுதியாகப் பயன்படுத்துகின்றபொழுது, சட்டமுறைப் பணத்தைப் பயன் படுத்துவதனைக் குறைத்துக்கொள்ளலாம்.

ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மிகக் குறைந்த செலவில் பணத்தை அனுப்புகின்ற வழிமுறையாகக் காசோலை இருக்கின்றது. தூரத்திலுள்ளவர்கள் வாணிபத்தில் பொருள் களை விற்கவும் வாங்கவும் காசோலை துணைசெய்கின்றது. வங்கிகள் கடன் உற்பத்தி செய்வதற்குக் காசோலைமுறை துணைசெய்கின்றது.

# 8. தீர்வகங்கள்

## (Clearing Houses)

### பொது விளக்கம்

வங்கிமுறை செம்மையாகச் செயல்படத் துணைநிற்பது காசோலையாகும். காசோலை ஒரு கடன் கருவியாகச் செயல் படுகின்றது. காசோலை செலாவணித் தன்மைபெற்ற கருவி யாதலால், எளிதாக அதனைக் கைமாற்ற முடிகின்றது. காசோலை முறையால் வங்கிகள் தங்களிடம் இருக்கின்ற ரொக்கத்திற்கும் அதிகமாக வைப்புகளை உருவாக்குகின்றன. மக்கள் வைப்புகளை எடுக்கவும் கைமாற்றிக் கொடுக்கவும் காசோலைகளைப் பயன்படுத்துகின்றனர்.

வங்கியில் கணக்கு வைத்திருக்கின்ற ஒருவர், தாம் மற்றவர் களுக்குக் கடன் கொடுக்க வேண்டியதற்கோ, பணம் செலுத்த வேண்டியதற்கோ காசோலைகளையே பயன்படுத்துகின்றார். இதைப்போலவே, அவர் கடன் கொடுத்ததைத் திருப்பிப் பெறு கின்றபொழுதோ அவருக்குப் பணம் வரவேண்டிய வேளையிலோ காசோலைகளைப் பெறுகின்றார். வாடிக்கையாளர் கொடுக் கின்ற காசோலைகள், அவர் கணக்கு வைத்திருக்கின்ற வங்கியின் மீது வரையப்பட்டனவாக இருக்கும். ஆனால், அவருக்கு வருகின்ற காசோலைகள் பல்வேறு வங்கிகளின்மீது வரையப் பெற்றனவாக இருக்கும். அவற்றிற்குரிய பணத்தை, அவர் ஒரே வங்கியிடமிருந்து பெறமுடியாது. எல்லா வங்கிகளுக்கும் நேரடி யாகச் சென்று பணத்தைப் பெறுவதும் தொல்லைமிகுந்த செயலாகும். ஆதலால் வாடிக்கையாளர், தமக்குக் கிடைக் கின்ற காசோலைகளுக்குப் பணம் பெறுகின்ற பணியைத் தமது வங்கியாளரிடம் ஒப்படைக்கின்றார்.

ஒவ்வொரு வங்கியும் வைப்புகளை வைத்திருக்கின்ற வாடிக்கையாளர்களுக்காக அவர்கள் கொடுக்கும் காசோலை களுக்குப் பணம் தருகின்றது. அதே நேரத்தில் வாடிக்கை யாளர்கள் கொடுக்கின்ற, வேறு வங்கிகளின்மீது வரையப்பெற்ற பல காசோலைகளை நாள்தோறும் வங்கி பெற்றுக்கொண்டிருக்

கின்றது. இந்தக் காசோலைகளுக்குப் பிற வங்கிகளிடமிருந்து பணம் பெறவேண்டியிருக்கும். இதைப்போன்றே, இந்த வங்கியின் வாடிக்கையாளர்கள் மற்றவர்களுக்குக் கொடுத்த காசோலைகள் மற்றைய வங்கிகளிடம் இருக்கும். மற்றைய வங்கிகளின் மீதுள்ள காசோலைகள் வங்கிக்கு வரவேண்டிய பணத்தைக் குறிக்கின்றது. மற்றைய வங்கிகளிடமிருக்கும் இந்த வங்கியின் மீதுள்ள காசோலைகள் வங்கி செலுத்தவேண்டிய பணத்தைக் குறிக்கும்.

ஒவ்வொரு வங்கியும் தனக்கு வரவேண்டிய பணத்தை எல்லாம் மற்றைய வங்கிகளுக்கு நேரடியாக ஆள்களை அனுப்பிப் பெறுவதென்றால், மிகவும் தொல்லையானதாகவும், அதிகச் செலவு உண்டாக்குவதாகவும் இருக்கும். ஒவ்வொரு வங்கியும் இத்தகைய தொல்லைகளுக்கு ஆளாவது இன்றியமையாததாக இருக்கும். அப்படியில்லாமல் வங்கிகள் தங்களுக்கிடையிலுள்ள காசோலைகளை எளிதாகவும் சிக்கனமாகவும் கைமாற்றிக் கொள்ளத் துணைசெய்கின்ற சிறந்த வழிமுறையாகத் தீர்வக முறை (Clearing House System) வளர்ச்சி பெற்றிருக்கின்றது.

நெருங்கிய நேரடித் தொடர்பு இல்லாத வங்கிகள், தங்களுக்குள் ஒருவருக்கொருவர் காசோலைகளுக்குப் பணம் கொடுக்கவும், பணம் செலுத்தவும் வேண்டியதைக் காசோலைகளைக் கொடுத்து மாற்றிக்கொள்ளுகின்ற ஒரு மைய இடமாகத் தீர்வகம் திகழ்கின்றது. பொதுவாக இத்தகைய தீர்வகங்களை மைய வங்கி அமைத்து, அவை செவ்வனே செயல்படுகின்றனவா வென்பதைக் கண்காணிக்கின்றது.

## செயல்படும் முறை

பல வங்கிகள் பணிபுரிகின்ற பெரிய நகரங்களில் தீர்வகங்கள் இன்றியமையாத தேவைகளாக இருக்கின்றன. எப்படித் தீர்வகம் செயல்படுகின்றதென்பதை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம்.

சென்னையில் எண்ணற்ற வங்கிகள் இருக்கின்றன. கானரா வங்கிக்குச் சென்னையிலுள்ள 30 வங்கிகளில் கொடுத்துப் பணம் பெறவேண்டிய 400 காசோலைகள் இருக்கின்றனவென்று வைத்துக்கொள்ளுவோம். இதைப்போலவே, கானரா வங்கியில் பணம் பெறவேண்டிய காசோலைகள் மற்றைய 30 வங்கிகளிடம் இருக்கும். குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் எல்லா

வங்கிகளின் பிரதிநிதிகளும் தாங்கள் பணம் பெறவேண்டிய காசோலைகளோடு வந்து சந்திப்பார்கள். கானரா வங்கியின் பிரதிநிதி மதுரை வங்கியிடமிருந்து பணம்பெற ரூ. 15,000-க்குக் காசோலைகள் கொண்டுவந்திருக்கின்றாரென்று வைத்துக் கொள்ளுவோம். மதுரை வங்கியின் பிரதிநிதி கானரா வங்கியிடமிருந்து பணம் பெறக்கூடிய காசோலைகளை ரூ. 10,000-க்குக் கொண்டு வந்திருக்கின்றாரென்று வைத்துக்கொள்ளுவோம். கானரா வங்கி, மதுரை வங்கியின் சார்பாளர்கள், தாங்கள் கொண்டுவந்த காசோலைகளைக் கைமாற்றிக் கொள்வார்கள். காசோலைகளின் மதிப்புக்குமேல் மதுரை வங்கி ரூ. 5,000 தர வேண்டும் என்பதை மட்டும் இருவங்கிகளும் கணக்கு வைத்துக் கொள்ளும். இப்படி, ஒவ்வொரு வங்கியின் சார்பாளரும் மற்றைய வங்கிகளின் சார்பாளர்களிடம் கொடுக்கவேண்டிய காசோலைகளைக் கொடுத்து, பெறவேண்டியவற்றைப் பெற்றுக் கணக்குகளைத் தீர்த்துக்கொள்ளத் தீர்வகங்கள் பெருந்துணை செய்கின்றன.

தீர்வகங்களின் மூலமாக வங்கிகள் ரொக்கமாகப் பணம் கொடுக்காமல் வரவேண்டிய கடன்களையும், தரவேண்டிய கடன்களையும் மாற்றிக்கொள்ள இயல்கின்றது. இதனைச் சேயர்ஸ், 'வங்கிகளுக்கிடையே நேர்கின்ற கடன்களைத் தீர்த்து வைப்பதே காசோலைத் தீர்வகத்தின் பணியாகும்' என்று கூறுகின்றார்.

பொதுவாகப் பல வங்கிகள் செயல்படுகின்ற ஒவ்வொரு நகரிலும் ஒரு தீர்வகம் நிறுவப்பெற்றிருக்கின்றது. நமது நாட்டில் தீர்வகங்களை அமைக்கும் பொறுப்பை ரிசர்வ் வங்கி ஏற்றுக் கொண்டிருக்கின்றது. ரிசர்வ் வங்கி, தன்னுடைய கிளைகள் உள்ள இடங்களில், கிளைகளில் தீர்வகங்கள் செயல்பட ஏற்பாடு செய்திருக்கின்றது. மற்றைய இடங்களில் ஸ்டேட் வங்கி, தன்னுடைய கிளைகளில் தீர்வகங்களை நிறுவியிருக்கின்றது. இவை தவிர தனி மன்றங்களும் தீர்வகங்களை அமைப்பதுண்டு. எடுத்துக்காட்டாகக் கல்கத்தாவைக் குறிப்பிடலாம். கல்கத்தாவில் இரண்டு தீர்வகங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒன்றைக் கல்கத்தா தீர்வக வங்கிகள் மன்றமும் (Calcutta Clearing Banks Association), மற்றொன்றை மெட்ரோபாலிடன் வங்கிமுறை மன்றமும் (Metropolitan Banking Association) நிறுவியுள்ளன.

ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் வங்கிகளின் பிரதிநிதிகள் தீர்வகத்திற்கு வந்து கூடுவார்கள். தீர்வகத்தில் ஒரு

பதிவேடு இருக்கும். அதில் ஒவ்வொரு வங்கியும் கொடுக்கின்ற பெற்றுக்கொள்கின்ற காசோலைகள் எல்லாவற்றையும் முதலில் எழுதுவார்கள். ஒவ்வொரு வங்கியின் சார்பாளரும் பிற வங்கிகளுக்குத் தாம் கொடுக்கின்ற காசோலைகளின் விரிவான பட்டியல் ஒன்றைத் தயாரிப்பார். அந்தப் பட்டியலில் ஒவ்வொரு காசோலையின் தொகையும், காசோலைகளின் எண்ணிக்கையும், மொத்தத் தொகையும் இருக்கும். இந்தப் பட்டியலுக்குக் 'கொடுக்கும் குறிப்பு' (Delivery Slip) என்று பெயர். தீர்வகத்தின் சார்பாளர் ஒவ்வொரு வங்கிக்கும் கொடுக்கவேண்டிய காசோலைகளை அவற்றின் தொகையைக் குறித்துக்கொண்டு, கொடுக்கும் குறிப்போடு கைமாற்றிக் கொடுக்கின்ற பணியைச் செய்கின்றார். இறுதியில் எந்தெந்த வங்கி, எந்தெந்த வங்கிக்கு அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கின்றதென்பதைக் கணக்குப் பார்த்துத் தெரிந்துகொள்வார்கள்.

காசோலைத் தீர்வகங்களினால் கிடைக்கக்கூடிய சில குறிப்பிடத்தக்க நன்மைகளைச் சுட்டிக் காட்டலாம். தீர்வகம் இல்லையென்றால், ஒவ்வொரு வங்கியும் மற்றைய வங்கிகளுக்குச் சென்று வரவேண்டிய பணத்தைப் பெற்றுவரத் தனியாக ஓர் ஆளை வைத்துக்கொள்ளவேண்டும். சென்னை, கல்கத்தா, பம்பாய் முதலிய நகரங்களில் ஓர் ஆளால் எல்லா வங்கிகளுக்கும் சென்று பணத்தைப் பெற்றுவர முடியாது. இத்தகைய பணி மிகவும் செலவினத்தை உண்டாக்கக் கூடியதாகவும் தொல்லையானதாகவும் இருக்கும். தீர்வகங்கள் இத்தகைய தொல்லையைத் தவிர்த்துவிட்டன. தீர்வகப் பணி மிகவும் சிக்கனமாக நடைபெறுவது கவனிக்கத்தக்கதாகும். தீர்வக முறையினால், ஒரு வங்கி தன்மீது எழுதப்பெற்ற எல்லாக் காசோலைகளுக்கும் ரொக்கமாகப் பணம் தரவேண்டியதும் இல்லை. ஒரு வங்கி மற்றைய வங்கிகளுக்குக் கொடுத்துப் பெறுகின்ற காசோலைகளின் தொகை வேறுபாட்டிற்கு மட்டும் ரொக்கமாகப் பணம் கொடுத்தால் போதும். இதனால் வங்கிகள் குறைந்த அளவில் ரொக்க இருப்பு வைத்துக்கொண்டு விரிந்த அளவில் பணிபுரிய முடிகின்றது. தீர்வகம் எல்லா வங்கிகளையும் இணைத்து வைக்கின்ற ஒரு பாலம்போல இருக்கின்றது. தீர்வகத்தின் மூலமாக வங்கிகள், ஒத்துழைத்துக் கூட்டுறவு மனப்பான்மையோடு செயல்படுகின்றன.

ஷா (Shaw), எல்கின் (Elkin) முதலிய பொருளியலறிஞர்கள் தீர்வகத்தை அமைப்பதை மைய வங்கியின் பல்வேறு பணிகளில்

ஒன்றாகக் கருதுகின்றனர். பெரும்பாலான நாடுகளில் மைய வங்கிகள் தாம் தீர்வகத்தை அமைத்துத் தந்திருக்கின்றன.

## இலண்டன் தீர்வகம்

தற்கால வங்கிமுறையின் தாயகமாக விளங்குகின்ற இங்கிலாந்திலுள்ள இலண்டன் தீர்வகம் செயல்படுகின்ற முறையை விளக்கமாகவும் விரிவாகவும் அறிந்துகொள்வது தேவையாகும்.

இலண்டன் தீர்வகம் (The London Clearing House) மூன்று பெரும் பிரிவுகளாகப் பணிபுரிகின்றது. இந்தப் பிரிவுகள் பணம் செலுத்துகின்ற வங்கிகள் அமைந்திருப்பதை ஒட்டி உருவாக்கப் பெற்றுள்ளன.

முதல் பகுதி, நகர்த் தீர்வகமாகும் (Town Clearing). இங்கிலாந்து வங்கியிலிருந்து நடக்கும் தூரத்தில் அமைந்திருக் கின்ற வங்கிகளின்மீது வரையப்பெற்றிருக்கின்ற காசோலை களும் உண்டியல்களும் நகரத் தீர்வகத்திற்கு வரும்.

இரண்டாம் பகுதி, மெட்ரோபாலிடன் தீர்வகமாகும் (Metropolitan Clearing). நகரத் தீர்வக எல்லைக்கு வெளியில், இலண்டன் அஞ்சல் மாவட்ட எல்லைக்குள் அமைந்திருக்கின்ற வங்கிகளின்மீது வரையப்பெற்றிருக்கும் உண்டியல்கள் காசோலைகள் எல்லாம் இந்தத் தீர்வகத்திற்கு வரும்.

மூன்றாவது, நாட்டுப்புறத் தீர்வகமாகும் (Country Clearing). நகர்த் தீர்வக, மெட்ரோபாலிடன் தீர்வக எல்லை களுக்கு வெளியிலுள்ள எல்லா வங்கிகளின்மீது எழுதப்பெற்ற உண்டியல்களும் இந்தப் பகுதிக்கு வரும்.

இலண்டன் தீர்வகத்திற்குக் காசோலைகள் வந்தவுடன், அவற்றை, அவை செல்லவேண்டிய பகுதியை ஒட்டி மூன்று பிரிவுகளாகப் பிரிப்பார்கள். பின்னர், நகரத் தீர்வகப் பகுதிக்குச் செல்லவேண்டியவற்றில் 'T' என்றும், மெட்ரோபாலிடன் தீர்வகத்திற்குச் செல்ல வேண்டியவற்றில் 'M' என்றும், நாட்டுப்புறத் தீர்வகத்திற்குச் செல்லவேண்டிய காசோலைகளில் 'C' என்றும் குறியிட்டு அந்தந்தப் பகுதிக்கு அவற்றை அனுப்பி வைப்பார்கள்.

முதலாவதாக, நகரத் தீர்வகம் எப்படிச் செயல்படுகின்ற தென்று விளக்கலாம். ஒவ்வொரு வங்கியும் தீர்வகத்திற்குத்

தன்து சார்பாளரை அனுப்புகின்றது. சார்பாளர் மற்றைய வங்கிகளிடமிருந்து பணம் பெறவேண்டிய காசோலைகளையும் உண்டியல்களையும் கொண்டுவருவார். தீர்வகத்தில் அவற்றை எல்லாம் குறித்துக்கொண்டு, அவற்றிற்கு எந்த வங்கிகளிட மிருந்து பணம் வாங்க வேண்டுமோ, அந்த வங்கிகளின் சார்பாளர்களிடம் அவற்றைக் கொடுத்தனுப்புவார்கள். சார்பாளர்கள் அவற்றைத் தங்களுடைய வங்கிகளுக்கு எடுத்துச் செல்வார்கள். அவற்றை வங்கிகள் சரிபார்த்து, அவை பணம் செலுத்துவதற்குத் தகுதியுடையவைதாமா என்பதை உறுதிப் படுத்தும். அவை திரும்பவும் தீர்வகங்களுக்கு அனுப்பப்பெறும். தீர்வகம் அவற்றை எல்லாம் தொகுத்து, ஒவ்வொரு வங்கியும் மற்றைய வங்கிகளுக்குக் கொடுக்கவேண்டியவற்றைப் பற்றியும், மற்றைய வங்கிகளிடமிருந்து வாங்க வேண்டியவற்றைப் பற்றியும், தனித்தனியாக அறிக்கையைத் தயாரிப்பார்கள். எல்லாத் தொகைகளையும் மொத்தமாகக் குறித்து மற்றொரு பொதுவான அறிக்கையையும் எழுதுவார்கள். அந்தப் பொதுவான அறிக்கையில் ஒரு வங்கி இறுதிநிலையில் மொத்தத் தில் மற்றைய வங்கிகளுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டியிருக் கின்றது; அல்லது, மொத்தத்தில் எவ்வளவு பெறவேண்டியிருக் கின்றது என்பதும் திட்டவட்டமாகத் தெரியும்.

ஒவ்வொரு வங்கியும் இங்கிலாந்து வங்கியில் கணக்கு வைத் திருக்கும். ஆதலால், வங்கி கொடுக்கவேண்டியதை அதன் கணக்கிலிருந்து மற்றைய கணக்கிற்கு மாற்றுவார்கள். அதைப் போன்றே மற்றைய வங்கிகளுக்கு வரவேண்டியதை அவற்றின் கணக்கில் வரவு வைப்பார்கள்.

மெட்ரோபாலிடன் தீர்வக எல்லைக்குள்ளிருக்கின்ற வங்கிகளின்மீது எழுதப்பெற்ற காசோலைகளை இலண்டன் தலைமைத் தீர்வகத்தில் முதலில் தனித்தனியாகப் பிரிப்பார்கள். பிரித்தவற்றைத் தனி ஆள்களின்மூலம் பணம் செலுத்த வேண்டிய கிளைகளுக்கு அனுப்புவார்கள். அங்கு அவற்றிற்குப் பணம் கிடைக்கும்.

ஏதாவது ஒரு காசோலைக்குப் பணம் கிடைக்காமலிருந்தால், அது தலைமை அலுவலகத்திற்குத் திருப்பியனுப்பப்படும். உடனே அதனைப் பெற்றுப் பணம் வாங்க அனுப்பிய வங்கிக்குத் தெரிவிப்பார்கள். மற்றைய வழிமுறைகளெல்லாம் நகரத் தீர்வகத்தில் இருப்பதைப்போன்றே இருக்கும்.

நாட்டுப்புறத் தீர்வக எல்லைக்குள்ளிருக்கும் வங்கிகளிடம் பணம் பெறவேண்டிய காசோலைகளை நாட்டுப்புற வங்கிகளின் சார்பாளர்கள் மூலமாக அனுப்புவார்கள். அவற்றைப் பிரித்து எந்தெந்த வங்கியிடமிருந்து பணம் பெறவேண்டுமோ அவற்றிற்குக் காசோலைகளை அனுப்பிவைப்பார்கள். வங்கிகள் அவற்றைச் சரிபார்த்து, எவற்றிற்குப் பணம் தரலாம் என்பதையும், எவை மறுக்கப் பெற்றிருக்கின்றன என்பதையும் அன்றே தெரிவிக்கும். மறுநாள் இந்தத் தொகைகளை இலண்டன் தீர்வகத்தில் கணக்கில் எழுதுவார்கள்.

தீர்வகங்கள் வளர்ச்சி பெற்றதன் விளைவாக வங்கிகள் விரைவாகவும், சிக்கனமாகவும், திறமையாகவும் பணியாற்று கின்றன.

## இந்தியத் தீர்வகங்கள்

நமது நாட்டில் 1921ஆம் ஆண்டுக்கு முன்னால் பம்பாய், கராச்சி, கல்கத்தா ஆகிய மூன்று நகரங்களில்தாம் குறிப்பிடத் தக்க முறையில் தீர்வகங்கள் செயல்பட்டன. பின்னால் சென்னையிலும் கான்பூரிலும் தீர்வகங்களைத் தொடங்கினர்.

1921ஆம் ஆண்டில் மூன்று மாநில வங்கிகளையும் ஒருங் கிணைத்தபொழுது தீர்வகங்களை நடத்துகின்ற பொறுப்பை இம்பீரியல் வங்கி ஏற்றுக்கொண்டது. 1935ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கியை நிறுவினர். அதன்பிறகு படிப்படியாகத் தீர்வகங்களை நடத்துகின்ற பணியை இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொண்டது.

இப்பொழுது நமது நாட்டில் 99 தீர்வகங்கள் உள்ளன. இவற்றில் பெங்களூர், பம்பாய், கல்கத்தா, ஐதராபாத், கான்பூர், சென்னை, நாக்பூர், புதுடில்லி, பாட்னா ஆகிய ஒன்பது இடங்களில் இந்திய ரிசர்வ் வங்கி நேரடியாக வங்கிகளை நிருணயிக்கின்றது. இந்திய ஸ்டேட் வங்கி 72 இடங்களிலுள்ள தீர்வகங்களை நடத்துகின்றது. இந்திய ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளால் மற்றைய 18 தீர்வகங்கள் நிருணயிக்கப் பெறுகின்றன.

இந்தியத் தீர்வகங்கள் நமது நாட்டில் வங்கிமுறை வளரப் பெரிதும் துணைபுரிகின்றன.

# 9. இந்திய வணிக வங்கிமுறை

## வரலாற்றுப் பின்புலம்

நமது நாட்டில் கடந்த நூற்றாண்டு முதல்தான் தற்கால வங்கிமுறை வளர்ந்து வருகின்றது. ஆனால், வங்கிமுறை இந்தியாவிற்குப் புதிதன்று என்பதை வரலாறு காட்டுகின்றது.

கி.மு. 2000 முதல் 1400 வரையுள்ள காலத்தைச் சேர்ந்த வேதகால இலக்கியங்களில் வங்கித்தொழில் இருந்ததற்கான குறிப்புகள் காணப்படுகின்றன. கடன் கொடுக்கின்ற தொழிலில் சிலர் ஈடுபட்டிருந்தனர். கி.மு. 500-க்குப் பின்னர் நமது நாட்டில் சிறந்த வங்கிமுறை இருந்ததென்பதை ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

பனன்திகர் (S. G. Panandikar), அவரது 'இந்தியாவின் வங்கிமுறை' (Banking in India) என்னும் நூலில் 'இந்தியாவின் தேவைகளை வியத்தகு முறையில் நிறைவு செய்கின்ற வங்கி முறை இருந்தது. இன்றைய மேற்கத்திய வங்கிமுறையின் முறைகளிலிருந்து அவை மாறுபட்டிருந்தபோதிலும், அவை நாட்டிற்கு நலம் பயப்பனவாக இருந்தன' என்று குறிப்பிடுகின்றார்.

புத்த சமய இலக்கியங்களிலும் வங்கியாளர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. நாட்டின் முக்கிய நகரங்களில் எல்லாம் வங்கியாளர்கள் இருந்தனர். அவர்களுடைய செல்வாக்குச் சமுதாயத்தில் பரவி இருந்ததைப் புத்த சமய ஜாதகக் கதைகள் (Jatakas) கூறுகின்றன. வங்கியாளர்களின் பணிகளைச் செய்து கொண்டிருந்தவர்கள் வணிகர்கள் அவர்கள் வெளிவாணிபத்தில் ஈடுபட்டவர்கள், அரசர்கள் ஆகியோர்களுக்குக் கடன் கொடுத்தனர்; பெரும்பாலும் தனிப்பட்டவர்களின் பொறுப்புகள்மீதும் சொத்துகள்மீதும் கடன் கொடுத்தனர்.

முற்காலத்தில் தனிப்பட்டவர்களும் சில தொழில், வாணிபக் கழகங்களும் (Guilds) வெளியிட்ட கடன் பத்திரங்கள் புழக்கத்தில் இருந்தன. கௌதமர் முதலிய சமயத்தலைவர்கள் மிகுதியாக வட்டி வாங்குவது பாவமென்று எடுத்துரைத்துள்ளனர். அர்த்த

சாத்திரமும், அறநூல்களும் எந்தெந்தக் கொள்கைகளின் அடிப்படையில் கடன் தரவேண்டுமென்றும், எப்படி வட்டி வசூலிக்க வேண்டுமென்றும் வழிகளையும் விதிமுறைகளையும் வரையறுத்துக் கூறுகின்றன. கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தில் அரசு, எந்த அளவுவரை சட்டத்தின் அடிப்படையில் வட்டி வாங்க அனுமதிக்கலாமென்பதைப் பற்றிய குறிப்பு இருக்கின்றது. பாதுகாப்பான ஈடுள்ள கடன்களுக்கு 15 சதவீதமும், ஈடற்ற கடன்களுக்கு 60 சதவீதமும் வட்டி வாங்கலாமென்று கௌடில்யர் கூறுகின்றார். கடன் கொடுப்பதில் இடர்ப்பாடு மிகவும் இருக்கு மானால், 240 சதவீதம்வரை வட்டி வாங்க அனுமதிக்கலா மென்கின்றார். கடன் பெற்றவர்களைப் பாதுகாக்கக்கூடிய சட்டங்கள் இருந்ததற்கும் சான்றுகள் உள்ளன.

முகம்மதிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் மேலும் வங்கித் தொழில் வளர்ந்திருந்தது. முஸ்லிம் வரலாற்று ஆசிரியர்களின் குறிப்புகளிலிருந்தும் பிற வெளிநாட்டினர் நமது நாட்டில் சுற்றுப் பயணம் செய்து எழுதிவைத்திருக்கின்ற குறிப்புகளிலிருந்தும் நாட்டு வங்கியர்கள் (Indigenous Bankers) கடன் கொடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தமை தெரிகின்றது. அவர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபத்திற்குக் கடன் கொடுத்தனர். ஆட்சியாளர் களுக்குக் குறிப்பாகப் போர்க்காலங்களில் நிதியுதவி அளித்து வந்தனர். இதனால் இவர்களுடைய செல்வாக்கு அரசியல் வட்டாரங்களிலும் மேலோங்கியிருந்தது. பதினேழு, பதினெட் டாம் நூற்றாண்டுகளில் 'உலக வங்கியாளர்கள்' (Jaget Seths) என்று பெயர்பெற்றுத் திகழ்ந்த சில லேவாதேவிக்காரர்கள் இருந்தனர். பிளாசி யுத்தம், சிப்பாய்க்கலகம் முதலியன நடந்த வேளைகளில் அமி சந்த் சேட் (Seth Ami Chand), பான்சிலால் அபை சந்த் சேட் (Seth Bansi Lal Abhai Chand) முதலிய வங்கியாளர்கள் அரசுக்குக் கடன் கொடுத்து உதவியதை வரலாற்றின் ஏடுகள் காட்டுகின்றன. அரசின் நிதி நிருவாகத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும் புகழ்பெற்ற வங்கியாளர் ஒருவர் தொடர்புகொண்டிருந்ததை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடு கின்றனர். 'ஜெகத் சேட்டுகளின்' பணிகள் இங்கிலாந்து வங்கியின் பணிகளைப் போன்று விரிவான வகையில் அமைந்திருந்தன வெனப் பர்க் (Burke) கூறியிருக்கின்றார்.

## நாட்டு வங்கியர்கள்

பழைய பல சேட்டுகளின் குடும்பங்கள் இப்பொழுது மறைந்துவிட்டன. இப்பொழுது முல்தானியர்கள் (Multanis),

செட்டியார்கள் (Chettis), சாகுகார்கள் (Sahukars), நானாவதிகள் (Nanavatis), மார்வாடிகள் (Marwaris), ஷராப்புகள் (Shroffs) முதலியவர்கள் உள்நாட்டு வங்கியாளர்களின் பணிகளைச் செய்கின்றனர். உள்நாட்டு வாணிபத்தின் நிதித் தேவையில் பெரும்பகுதியை இவர்களே நிறைவுசெய்வது குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் லேவாதேவிக்காரர்களாகவும், பணத்தைக் கைமாற்றித் தருபவர்களாகவும், தங்கத்தை வாங்கி விற்பவர்களாகவும், நிதித் தரகர்களாகவும் பணியாற்றுகின்றனர். இது ஒரு குடும்பத் தொழிலாகக் கருதப்பெறுகின்றது. சில இனத்தவர்கள் இந்தத் தொழிலில் சிறப்புத் தேர்ச்சி பெற்று, மரபுவழியில் இதனைச் செய்துகொண்டிருக்கின்றனர்.

நாட்டு வங்கியர்களிடம் பணத்தைத் தேடுவதிலும், கட்டிக் காப்பதிலும், மிகுதியாக வட்டி கிடைக்கும் வகையில் கடன் கொடுப்பதிலும், கொடுத்த கடனைக் காலம் கண்டு வட்டியுடன் வாங்குவதிலும் தனித்திறமைகள் இயல்பாகவே அமைந்திருக்கின்றன. பொதுவாக, இவர்கள் 18 சதவீதம் முதல் 36 சதவீதம்வரை வட்டி வாங்குகின்றனர். பெரும்பாலும் நகரங்களில் வாங்குகின்ற வட்டிவீதத்தைவிடக் கிராமங்களில் வாங்குகின்ற வட்டிவீதம் அதிகமாக இருக்கின்றது.

பம்பாய் மாநில வங்கி விசாரணைக் குழுவின் (Bombay Provincial Banking Enquiry Committee) அறிக்கை நமது நாட்டுப் பொருளாதாரத்தில் நாட்டு வங்கியர்கள் மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுவதைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றது. அந்தக் குழு, 'இன்று இருக்கின்ற வகையில், உள்நாட்டு வங்கிமுறை, அதுவே ஒரு நிறுவனமாகக் காட்சி தருகின்றது. மரியாதைக்குரியதாகவும், நல்ல வளம் படைத்ததாகவும் திகழ்கின்றது. நாட்டு வங்கியர் அவரது நேர்மையாலும், மரபுவழித் தொடர்புகளாலும், வாடிக்கையாளர்களோடு கொண்டிருக்கின்ற நெருங்கிய தொடர்புகளாலும், எளிய, சிறப்பான வேலை முறையாலும் செல்வாக்குப்பெற்று விளங்குகின்றார். கடன் கொடுக்கின்ற நிறுவனம் என்ற முறையில், அது நூற்றாண்டுகளின் சோதனைகளைத் தாக்குப் பிடித்திருக்கின்றது. அரசின் மாற்றங்களாலும், புரட்சிகளாலும், ஆட்சியாளர்களின் பரம்பரை மாறுதல்களாலும் உள்நாட்டு வங்கிமுறை பாதிக்கப்படவில்லை. அதனுடைய பணிகளின் அளவாலும், சமுதாயத்தில் அதன் பணிகளுக்கு இருந்த முக்கியத்துவத்தாலும் அது வியத்தகு இடத்தைப்

பெற்றுத் திகழ்கின்றது. அதனுடைய வளர்ச்சி இயல்பாக மக்களின் வாணிப, நிதி அறிவாற்றல், அவர்களின் உள்நாட்டுத் தேவைகள், பழக்கவழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றைச் சார்ந்து அமைந்திருக்கின்றது. ஆகையால், அது மேற்கத்திய வங்கிமுறையில் அமைந்த நாட்டின் தற்கால வங்கி நிறுவனங்களைப்போல நிறுவப் பெறவில்லை' என்று குறிப்பிடுகின்றது.

நாட்டு வங்கியர்களை அவர்களுடைய பணிகளின் இயல்பை ஒட்டி மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது பிரிவினர், கடன் கொடுத்து வாங்குகின்ற வங்கித்தொழிலை மட்டும் மேற்கொண்டிருக்கின்றனர். இரண்டாவது பிரிவினர், வங்கித் தொழிலையும் வாணிபத்தையும் சேர்த்துச் செய்துவருகின்றனர். அவர்கள் பருத்தி, தானிய மாவு, பிற விளைபொருள்கள் ஆகியவற்றில் வாணிபம் செய்கின்றனர். அவர்கள் 'கமிஷன் ஏஜென்டு'களாகவும் (Commission Agents) செயல்படுகின்றனர். மூன்றாவது பிரிவினர், வாணிபத்தைத் தங்களுடைய முக்கியத் தொழிலாகக் கொண்டவர்கள். இவர்கள் தங்களிடம் எச்சமாக இருக்கின்ற பணத்தை வங்கித்தொழிலில் ஈடுபடுத்துகின்றனர். உள்நாட்டு உண்டியல்களைக் (Hundis) கழிவுசெய்து பணம் கொடுக்கின்ற பணியை நகரங்களில் இருக்கின்ற உள்நாட்டு வங்கியாளர்கள் மேற்கொள்கின்றனர். நாட்டின் முக்கியமான நகரங்களில் எல்லாம் உள்நாட்டு வங்கியாளர்கள் அவர்களுடைய நலன்களைக் காப்பதற்கு மன்றங்களை அமைத்திருக்கின்றனர்.

1835ஆம் ஆண்டிற்குப் பின்னர் உள்நாட்டு வங்கியாளர்களின் செல்வாக்குக் குறையத் தொடங்கியது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. அதற்கு முன்னர், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் பல வகையான பணம் பயன்படுத்தப் பெற்றது. 1835-ல் இந்தியாவெங்கும் ஒரே வகையான பணத்தை ஆங்கிலேய அரசு புழக்கத்திற்குக் கொண்டுவந்தது. அதுவரை உள்நாட்டு வங்கியாளர்கள் பணத்தை மாற்றிக் கொடுக்கின்ற பணியிலும் ஈடுபட்டிருந்தார்கள். நாடெங்கும் ஒரே வகையான பணம் புழக்கத்திற்கு வந்த பிறகு பணத்தை மாற்றிக்கொடுக்கின்ற வாணிபம் நின்றுவிட்டது. இருப்புப் பாதைகளை அமைத்தவுடன் போக்குவரத்து மிகுந்தது. நாட்டுப்புற மக்களுக்கு நகர்ப்புறங்களோடு தொடர்பு அதிகரித்தது. இதனால் கிராம மக்கள் அதிக வட்டி கொடுப்பதை உணர்ந்தனர். தற்கால வங்கிகள், அஞ்சல்துறை, அரசின் கருவூலங்கள் ஆகியவற்றை அமைத்தமை உள்நாட்டு வங்கித் தொழிலைப் பாதித்தது. கூட்டுப்பங்கு நிறுவனங்களோடு

போட்டியிடுகின்ற ஆற்றல் உள்நாட்டு வங்கியாளர்களுக்கு அதிக மாக இல்லை. கூட்டுறவு வங்கி நிறுவப்பெற்றதும் உள்நாட்டு வங்கித்தொழில் குறையத் தொடங்கியது.

இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of India) நிறுவப்பெற்ற பின்னர், நாட்டுப்புற வங்கியாளர்களை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ரிசர்வ் வங்கி பலவகையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது. நாட்டுப்புற வங்கியாளர்கள் கழிவு வாணிபத்தை கைவிட்டுத் தற்கால முறையில் கணக்குகளை வைத்துக்கொண்டு, அவற்றை ரிசர்வ் வங்கிக்குக் குறிப்பிட்ட காலத்தில் அனுப்பி வந்தால் பட்டியலில் சேர்க்கப்பெற்ற வங்கி களுக்கு (Scheduled Banks) அளிக்கின்ற சலுகைகள் எல்லாம் வழங்குவதாக ரிசர்வ் வங்கி கூறியிருக்கின்றது. ஆனால், சில நாட்டுப்புற வங்கியாளர்கள்தாம் இந்தச் சலுகைகளை எல்லாம் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். பெரும்பாலான நாட்டுப் புற வங்கியாளர்கள் ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை. இந்தியப் பணச் சந்தை (Indian Money Market) சரியான முறையில் அமையாததற்கு இஃது ஒரு காரணமாகும்.

## பதிலாள் இல்லங்கள்
(Agency Houses)

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் முதன்முதலில் வங்கித் தொழிலை ஏற்றுக்கொண்டவை 'ஏஜன்ஸி ஹவுஸஸ்' என்று கூறப்பெற்ற 'பதிலாள் இல்லங்களா'கும். இத்தகைய நிறுவனங் கள் உருவாகி வளர்ச்சிபெறக் கிழக்கிந்திய நிறுவனம் பெருந் துணை புரிந்தது. இந்த நிறுவனங்கள் ஐரோப்பிய வணிகர் களுக்கு உதவும் நோக்கில் செயல்பட்டன. கல்கத்தாவிலும் பம்பாயிலும் வாணிபத்தோடு வங்கித் தொழிலையும் மேற் கொண்டு, ஐரோப்பிய வணிகர்களுக்குத் துணை செய்து கொண்டிருந்த பதிலாள் நிறுவனங்கள் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் பம்பாயில் ஏறத்தாழப் பன்னிரண்டு பதிலாள் நிறுவனங்கள் பணிபுரிந்தன. அவை கிழக்கிந்திய நிறுவனத்தின் இராணுவத் தேவைகளுக்காக நிதியளித்தன.

கல்கத்தாவில் பதிலாள் நிறுவனங்கள் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந்தன. இவை காகிதப் பணத்தை வெளியிட்டன. தானியங்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லத் தேவையான நிதியை வழங்கின. இவை யாவும்

தங்களுடைய சொந்த முதலை வைத்துக்கொண்டு வங்கித் தொழிலை நடத்தவில்லை. பெரும்பாலும் வைப்புகளைச் சார்ந்தே இவற்றின் தொழில் நடந்துகொண்டிருந்தது. வங்காளத்தின் அவுரிச் சாகுபடிக்கு (Indigo Plantation) இவை பெரிதும் முதலீடு செய்தன. பொதுவாக இவை ஆண்டு அடிப்படையில் கடன் வாங்குபவரின் வாழ்க்கையைக் காப்பீடு செய்யும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தன. சில வேளைகளில் தொழிற்சாலைகளை அடமானமாக வைத்துக்கொண்டு கடன் வழங்கின. அவை கடனுக்கு 10 முதல் 12 சதவீதம் வட்டி வசூலித்தன. முன்பணத்திற்கு வட்டியோடுகூட 2½ சதவீதம் கழிவும், 2 சதவீதம் விற்பனைக் கழிவும் பெற்றுவந்தன. 1829-க்குப் பின்னர்ப் பெரும்பாலான பதிலாள் நிறுவனங்கள் மறையத் தொடங்கின.

## தற்கால வங்கிமுறை

இந்தியாவின் தற்கால வங்கிமுறையின் தொடக்கமாக மாநில வங்கிகளை (Presidency Banks) நிறுவியமை அமைந்தது. மாநில வங்கிகள் நிறுவப்பெற்ற பின்னர், இந்தியாவில் வங்கிகள் கட்டுக்கோப்பான நிறுவனங்களின் அடிப்படையில் செயல்படத் தொடங்கின.

முதலாவது, மாநில வங்கியாக வங்காள வங்கியை (The Bank of Bengal) 1806-ல் கல்கத்தாவில் நிறுவினார்கள். இதற்குரிய சாசனம் (Charter) 1809ஆம் ஆண்டில் வழங்கப்பெற்றது. கிழக்கிந்திய நிறுவனத்திற்கு நிதி வழங்குவதற்காகவும், மதிப்புக் குறைந்த பணத்தின் மதிப்பை உயர்த்துவதற்காகவும் இதனை நிறுவினர். 1823-ல் காகிதப் பணத்தை வெளியிடுகின்ற உரிமையை இதற்கு வழங்கினர். 1839-ல் இது பல கிளைகளைத் தொடங்கியது.

இரண்டாவது மாநில வங்கியான பம்பாய் வங்கி (The Bank of Bombay) 1840-ல் அமைக்கப்பெற்றது. 1843-ல் மூன்றாவது மாநில வங்கியான சென்னை வங்கியை (The Bank of Madras) நிறுவினர். இந்த இரண்டு வங்கிகளுக்கும் குறிப்பிட்ட ஒரு தொகைவரை காகிதப்பணம் வெளியிடுகின்ற உரிமை அளிக்கப்பெற்றது.

இந்த மூன்று வங்கிகளிலும் பங்குகளை வைத்திருந்தவர்கள் பெரும்பாலும் ஐரோப்பியர்களே. அரசும் இவற்றிற்கு ஓரளவு

முதல் வழங்கியிருந்தது. இவை யாவும் அரசுக்காகச் செயல்படுகின்ற முற்றுரிமையைப் பெற்றுத் திகழ்ந்தன. இவற்றில் செயலாளர்களாகவும் பொருளாளர்களாகவும் ஐ.சி.எஸ். (I.C.S.) நிலையிலிருந்தவர்களே பணியாற்றினார்கள். ஆதலால் இவை திறமையாகச் செயல்பட்டன.

1862-ல் வங்கிகளிடமிருந்து காகிதப்பணம் வெளியிடுகின்ற உரிமையை அரசு எடுத்துக்கொண்டது. ஆனால், அரசுக்காகக் காகிதப்பண நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற உரிமை இவற்றிற்கு வழங்கப்பெற்றது.

மாநில வங்கிகளில் பொதுமக்களும் அரசும் தங்களுடைய வைப்புகளை வைத்திருந்தனர். வைப்புகளுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் மாநில வங்கிகளின் சட்டம் (The Presidency Banks Act) நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டம் மாநில வங்கிகள் செயல்படுவதில் சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தது. இந்த வங்கிகள் ஆறுமாதக் காலத்திற்குமேல் கடன் கொடுக்கக்கூடாது. நகராத சொத்துகளை ஈடாக வைத்துக்கொண்டு கடன் கொடுப்பதை இந்தச் சட்டம் தடை செய்தது. இவை அயல்நாட்டு உண்டியல்களைக் கழிவுசெய்து பணம் தருகின்ற பணியை மேற்கொள்ளக்கூடாது. இவை வெளி நாடுகளிலிருந்து கடன் பெறக்கூடாது.

மாநில வங்கிகள் முக்கிய வாணிப நகரங்களில் எல்லாம் கிளைகளைத் தொடங்கிப் பணிபுரிந்தன. இருந்தாலும் அவற்றின் கொள்கைகளில் இணைப்புத்தன்மை இல்லையென்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். 1921-ல் மூன்று மாநில வங்கிகளையும் இணைத்து இந்திய இம்பீரியல் வங்கியை (The Imperial Bank of India) உருவாக்கினர்.

## கூட்டுப் பங்கு வங்கிகள்
## (Joint Stock Banks)

கூட்டுப் பங்கு நிறுவன அமைப்பின் அடிப்படையில் முதல் கூட்டுப் பங்கு வங்கி 1770-ல் கல்கத்தாவில் நிறுவப்பெற்றது. இதன் பெயர் 'ஹிந்துஸ்தான் வங்கி' (The Bank of Hindustan) என்பதாகும். இதன் பொறுப்புகள் வரையறுக்கப்படவில்லை (Unlimited Liability). இந்த வங்கி 1832-ல் மூடப்பெற்றது. வரையறுக்கப்பட்ட பொறுப்போடு (Limited Liability) முதல் வங்கி 1786-ல் அமைக்கப்பட்டது. இதன் பெயர் இந்தியாவின்

பொது வங்கி (The General Bank of India) என்பதாகும். இந்த வங்கி 1793-ல் கலைக்கப்பட்டது.

கூட்டுப்பங்கு வங்கிகளை நெறிப்படுத்த 1860-ல் ஒரு சட்டத்தை இயற்றினர். இந்தச் சட்டத்தின்படி வரையறுக்கப் பட்ட பொறுப்புகளோடு கூட்டுப்பங்கு வங்கிகளை அமைக்க வாய்ப்புக் கிடைத்தது. இதனால் சில பெரிய வங்கிகள் நிறுவப் பட்டன. சென்ற நூற்றாண்டின் இறுதியில் 9 கூட்டுப்பங்கு வங்கிகள் செயல்பட்டன. அவற்றின் முதலும் ஒதுக்குநிதியும் ஐந்து இலட்ச ரூபாவுக்கு மேல் இருந்தன.

கூட்டுப்பங்கு வங்கிகளின் விரைவான வளர்ச்சி 1960-ல் தொடங்கியது. காந்தியடிகள் சுதேசி இயக்கத்தை நடத்தியது வங்கிகளின் வளர்ச்சிக்கு ஒரு தூண்டுதலை வழங்கியது. இந்தியர் களின் முதலோடும் நிருவாகத்தோடும் பல வங்கிகள் அமைக்கப் பெற்றன. முதல் உலகப்போருக்கு முன்னால் 18 பெரிய வங்கி களும் பல சிறிய வங்கிகளும் இருந்தன.

இந்த வங்கிகளின் வளர்ச்சி வரலாற்றில் குறிப்பிடத்தக்க இயல்பாகக் காணப்படுவது வங்கிகளின் முறிவாகும். 1913 முதல் 1917 வரை நான்கு ஆண்டுகளில் மட்டும் 87 வங்கிகள் தோல்வியடைந்தன. இவற்றின் முதல் மொத்தம் 1·75 கோடி ரூபாவாகும். முறிவடைந்த வங்கிகளின் விவரங்களைத் தொகுத்துக் கூறினால் அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். 1922 முதல் வங்கிகளின் தோல்விகள் அதிகரித்தன. 1922 முதல் 1936 வரை 373 வங்கிகள் முறிவடைந்தன. 1913 முதல் 1936 வரை தோல்வியடைந்த வங்கிகளில், பஞ்சாபில் 89 வங்கிகளும், உத்தரப் பிரதேசத்தில் 64 வங்கிகளும், பம்பாயில் 57 வங்கிகளும் முறிவுற்றன. 1936-ல் மேலும் வங்கிகளின் தோல்வி தொடர்ந்தது. 1936-ல் திருவாங்கூரில் 40 வங்கிகள் முறிவடைந்தன. 1937 முதல் 1948 வரை 620 வங்கிகள் கலைக்கப்பெற்றன. 1960-ல் பலாய் மைய வங்கி (Palai Central Bank) தோல்வியடைந்தது. இது பொதுமக்களின் உள்ளத்தில் வங்கிகளின்மீதிருந்த நம்பிக்கை யைத் தேயச் செய்யக்கூடியதாக இருந்தது.

வங்கிகளின் தோல்விக்கான காரணங்களைத் தொகுத்துக் கூறலாம். இந்தக் கூட்டுப் பங்கு வங்கிகளுக்கிடையில் கடுமை யான போட்டி இருந்தது. ஒவ்வொரு வங்கியும் போட்டியிட்டுக் கொண்டு, தனது வாணிபத்தைப் பெருக்குவதில் மிகவும்

தீவிரமாக ஈடுபட்டது. இந்தப் போட்டியில் வங்கியின் விதி முறைகள் புறக்கணிக்கப்பெற்றன. வங்கிகளின் சராசரி ரொக்க இருப்புவிகிதம் சராசரியாக 10 முதல் 11 சதவிகிதமாக இருந்தது. ஆதலால் மிகுதியாகப் பணத்தை எடுத்தபொழுது, வங்கிகள் தோல்வியடைந்தன. இதனால் மக்களின் நம்பிக்கை குறையத் தொடங்கியது. வைப்புகளைக் கவர்ந்து இழுக்கும் நோக்கில் வங்கிகள் கொடுக்கின்ற வட்டிவிகிதத்தைக் கூட்டின. பல வங்கிகள் செலுத்தவேண்டிய முதலைக்கூடப் பொதுமக்களிட மிருந்து பெறவில்லை. இதனால் சொத்துகளின் நீர்மைத் தன்மை குறைவானதாக இருந்தது. பெரும்பாலான வங்கிகள், அவற்றின் முதலில் பெரும்பகுதியை ஊக வாணிபத்தில் ஈடுபடுத்தின. இதனால் வங்கித்தொழில் முடங்கும் நிலை ஏற்பட்டது.

வங்கிகள் கிளைகளைத் தொடங்குவதில் சரியான கொள்கையைப் பின்பற்றவில்லை; தங்களுடைய நிதி வசதி களைப்பற்றிக் கவலைப்படாமல் மேலும் மேலும் கிளைகளைத் தொடங்கின. கிளைகளை நடத்துவதற்குப் பயிற்சியும் அனுபவமும் பெற்ற மேலாளர்கள் கிடைக்கவில்லை. இயக்குநர் களால் கிளைகளைச் சரியான முறையில் மேற்பார்க்க இயல வில்லை. பெரும்பாலான இயக்குநர்கள் வங்கித் தொழிலின் அடிப்படைக் கோட்பாடுகளைப் புரிந்துகொள்ளாதவர்களா கவும், திறமையற்றவர்களாகவும் இருந்தனர்.

சிறுசிறு வங்கிகளை நாடெங்கும் நிறுவினர். சிறிய வங்கிகள் மிகவும் குறைந்த முதலோடு செயல்பட்டன. சின்னஞ்சிறு வங்கிகளுக்குத் தொழிலில் இலாபம் கிடைக்கவில்லை. இழப்பு ஏற்பட்டபோதிலும், அவை தங்களுடைய முதலிலிருந்து பங்கு தாரர்களுக்குப் பங்கு இலாபம் (Dividend) செலுத்திக்கொண் டிருந்தன. இப்படி அவற்றால் தொடர்ந்து வங்கித் தொழிலில் ஈடுபட இயலவில்லை. கையில் ரொக்கம் குறைவாக இருந் தமையால், எதிர்பாராத நெருக்கடிகளைச் சமாளிக்க இயல வில்லை. பல வங்கிகளில் நிருவாகம் செம்மையாக நடைபெற வில்லை. இயக்குநர்களுக்கும் அவர்களுடைய உற்றார் உறவினர் களுக்கும் மிகுதியாகக் கடன் கொடுத்திருந்தனர். அத்தகைய கடன்கள் உரிய காலத்தில் திரும்பி வரவில்லை. தணிக்கை யாளர்களைச் சரிக்கட்டிக் கொண்டு நேர்மைக் குறைவான, ஏமாற்றான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போக்குக் காணப் பட்டது.

வங்கிகளை நெறிப்படுத்தக்கூடிய சரியான சட்டம் எதுவும் இருக்கவில்லை. 1913ஆம் ஆண்டின் இந்திய நிறுவனங்களின் சட்டம் (Indian Companies Act) வங்கிகளைக் கட்டுப்படுத்தக் கூடியதாக அமைந்திருக்கவில்லை. எல்லா வங்கிகளையும் இணைத்து, கட்டிக்காத்து வழிநடத்துகின்ற எந்த மைய நிறுவனமும் செயல்படவில்லை. இம்பீரியல் வங்கியும் மற்றைய வங்கிகளோடு போட்டியிடுகின்ற நிறுவனமாகவே செயல் பட்டுக்கொண்டிருந்தது. மைய வங்கி இல்லாத குறை 1935-ல் இந்திய ரிசர்வ் வங்கி நிறுவப்பெற்ற பிறகுதான் தீர்ந்தது.

இந்திய வங்கிகள் தோல்வியடைந்தபோதிலும் சில வங்கிகள் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந்தன. அவற்றில் 'ஐம்பெரும் வங்கிகள்' (The Big Five) என்று கூறப்படுகின்ற அலகாபாத் வங்கி (Allahabad), பஞ்சாப் தேசிய வங்கி (Punjab National Bank), இந்திய வங்கி (Bank of India), பரோடா வங்கி (Bank of Baroda), இந்திய மைய வங்கி (Central Bank of India) ஆகிய ஐந்து வங்கிகளும் பேரளவில் செயல்பட்டன. இவை சிறப்பாகத் தங்களுடைய தொழிலில் வெற்றியும் பெற்றன.

## அந்நியச் செலவாணி வங்கிகள்
## (Foreign Exchange Banks)

அந்நியச் செலவாணியில் சிறப்பாக ஈடுபடும் வங்கிகளும் நிறுவப்பெற்றன. இவை மற்றைய வங்கிகளைப்போன்று கடன் வழங்குதல், வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல் முதலிய பணி களையும் மேற்கொண்டிருந்தன. ஆனால், அந்நியச் செலவாணி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதுதான் இவற்றின் குறிப்பிடத்தக்க பணியாக இருந்தது. வெளிநாட்டு வாணிபத் திற்கு நிதியுதவி தருகின்ற முற்றுரிமை இவற்றின் கையிலிருந்தது. அயல்நாட்டு மாற்று உண்டியலை விற்பது, அயல்நாட்டுக் கடன் கடிதங்களை (Foreign Letters of Credit) வழங்குவது, கப்பலில் அனுப்பிய பொருள்களுக்குரிய பத்திரங்களின்மீது முன்பணம் தருவது முதலிய பணிகளை இவை மேற்கொள்ளுகின்றன. இந்த வங்கிகள் திறமையான நிருவாகத்திற்குப் பெயர் பெற்றிருக் கின்றன. போதுமான அளவு இவற்றிடம் முதல் இருப்பதால் பெரும்பாலான ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான வங்கிப் பணிகளை இவை ஏற்க முடிகின்றது.

நமது நாட்டில் அந்நியச் செலாவணி வங்கிகள் சிறப்பாகப் பணிபுரிந்த போதிலும் இந்திய வணிகர்கள் அவற்றின்மீது

சில குறைகளைக் கூறுகின்றனர். அவற்றைத் தொகுத்துக் கூறலாம்.

முதலாவதாக, இந்த வங்கிகள் இந்தியக் காப்பீட்டு நிறுவனங்களுக்கும் அயல்நாட்டுக் காப்பீட்டு நிறுவனங்களுக்கும் இடையில் வேறுபாட்டை ஏற்படுத்துகின்றது. இந்திய ஏற்றுமதியாளர்களை வெளிநாட்டுக் காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்துகொள்ளக் கட்டாயப்படுத்துகின்றனர். இத்தகைய போக்கின் காரணமாக ஆண்டுதோறும் இரண்டு கோடி முதல் மூன்று கோடி ரூபா வரை வெளிநாட்டுக் காப்பீட்டு நிறுவனங்களுக்குச் செல்கின்றதென்று கூறப்படுகின்றது.

இரண்டாவதாக, இந்திய ஏற்றுமதியாளர்கள் பொருள்களை அனுப்புகின்றபொழுது, வெளிநாட்டு இறக்குமதியாளர்கள் உண்டியல்களை ஏற்றுக்கொண்டவுடன் சரக்குகளைப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குரிய பணத்தை ஆறு அல்லது ஒன்பது மாதங்களில் செலுத்தலாம். ஆனால், இந்திய இறக்குமதியாளர்களுக்கு இத்தகைய சலுகை கிடைப்பதில்லை. அவர்கள் செலாவணி மாற்று ஒப்பந்தப்படி எல்லாம் செய்யவேண்டும். அதிலிருந்து தவறினால் அபராதப்பணம் அதிகமாகச் செலுத்த வேண்டும்.

மூன்றாவதாக, செலாவணி மாற்று வங்கிகள் மன்றம் (Exchange Bank's Association) அடிக்கடி விருப்பம்போல் தனது விதிகளை மாற்றிக்கொள்கின்றது. இதனால் இந்திய வணிகர்கள் பலவகையான தொல்லைகளுக்கு ஆளாகவேண்டியிருக்கின்றது.

நான்காவதாக, நமது நாட்டில் பெரும்பாலும் வாணிப மாற்றுச்சீட்டுகள் பவுனில் (£) எழுதப்பெற்றனவாகவே இருக்கின்றன. இவற்றை மாற்றச் செலாவணி வங்கிகளுக்கு இந்திய ஏற்றுமதியாளர்கள் பல தடவைகள் அலையவேண்டியிருக்கின்றது.

ஐந்தாவதாக, வெளிநாட்டு வணிகர்கள் நமது நாட்டுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்கின்றபொழுது இங்குள்ள வணிகர்களைப்பற்றிய விவரங்களைக் கேட்கின்றனர். ஆனால், அந்நியச் செலாவணி வங்கிகள் பெரும்பாலும் மனநிறைவு அளிக்கக்கூடிய குறிப்புகளை அனுப்புவதில்லை. இதனால், இந்திய வணிகர்களைப்பற்றி வெளிநாட்டு வணிகர்களிடம் நல்லபெயர் கிடைப்பதில்லை. இந்திய வணிகர்களுக்கு, வெளிநாட்டு வணிகர்களுக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகளும் சலுகைகளும் கிடைப்பதில்லை.

ஆறாவதாக, கல்கத்தாவிலுள்ள ஐரோப்பிய நிறுவனங்கள் குறைந்த அளவில் இந்த வங்கிகளிடம் வைப்பாகச் செலுத்தி மதிப்புக் கடிதம் (Letter of Credit) பெறலாம். ஆனால், இந்திய நிறுவனங்கள் எவ்வளவு நல்ல பெயர் (Good-will) பெற்றிருந்தாலும், இறக்குமதி செய்கின்ற சரக்குகளின் மதிப்பில் பத்துச் சதவிகிதம் வைப்பாகச் செலுத்தாவிட்டால் மதிப்புக் கடிதத்தைப் பெறமுடியாது.

ஏழாவதாக, அந்நியச் செலாவணி வங்கிகள் நமது நாட்டிலிருந்து ஏராளமாக இலாபம் பெறுகின்றன. இருந்தபோதிலும் இந்தியர்களுக்குத் தங்களுடைய வங்கிகளில் பெரிய உத்தியோகம் கொடுக்கவோ, தக்க பயிற்சி கொடுக்கவோ இவை முன்வருவதில்லையென்பதை சுட்டிக்காட்டுகின்றனர்.

அந்நியச் செலாவணி வங்கிகள் இந்திய வணிகர்களின் நன்மைகளைப் புறக்கணிப்பதை இதுவரை தக்க நடவடிக்கைகளின் மூலம் தடுக்க இயலவில்லை. இவற்றோடு இந்திய வங்கிகள் போட்டிபோடுகின்ற நிலையில் இல்லை.

1939ஆம் ஆண்டின் இந்திய வங்கி நிறுவனங்களின் சட்டம் (Indian Banking Companies Act) அந்நியச் செலாவணி வங்கிகளின்மீது பல தடைகளை விதித்திருக்கின்றது. இந்தச் சட்டத்தின் பதினோராவது பிரிவின்படி வெளிநாடுகளில் பதிவு செய்துகொண்டிருக்கின்ற எல்லா வங்கிகளும் 15 இலட்ச ரூபா இருப்பாக ரிசர்வ் வங்கியிடம் வைத்திருக்கவேண்டும். பம்பாயிலும், கல்கத்தாவிலும் அலுவலகங்கள் வைத்திருக்கின்ற வங்கிகள் இருபது இலட்ச ரூபா இருப்பு வைத்திருக்க வேண்டும். சட்டத்தின் 22ஆம் பிரிவை இவை நல்ல நிதி நிலையோடு செயல்படவேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது. 25ஆம் பிரிவைக் காலாண்டின் இறுதி வேலைநாளில் அவற்றின் சொத்துகள் பொறுப்புகளோடு ஒப்பிடுகின்றபொழுது 75 சதவிகிதத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும். 29ஆம் பிரிவு, ஆண்டுதோறும் இந்த வங்கிகள் தங்களுடைய இருப்புநிலைக் குறிப்பு, இலாப நட்டக் கணக்கு ஆகியவற்றை ரிசர்வ் வங்கிக்கும் அளிக்கவேண்டும். 33ஆம் பிரிவின்படி இலாப நட்டக் கணக்கையும், தணிக்கை அறிக்கையையும் தங்களுடைய அலுவலங்களில் பிறர் பார்க்கும்படி வெளியிட வேண்டும். இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் அந்நியச் செலாவணி வங்கிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தப் பெரிதும் துணை செய்திருக்கின்றன. ஆனால், வெளிநாட்டு வாணிபத்திற்கு நிதியளிப்பதில் இலற்றிற்

கிருந்த முற்றுரிமை இந்தச் சட்டப் பிரிவுகளின் மூலமாக எந்த வகையிலும் குறையவில்லை.

## வங்கிச் சட்டங்கள்
## (Banking Acts)

இந்தியாவில் வங்கிகளின் தோல்வி மிகுதியாக இருந்ததால், அவற்றை நெறிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்தது. வங்கிகளை எல்லாம் கட்டுப்படுத்தி நெறிப்படுத்து கின்ற ஒரு முழுமையான சட்டத்தை அரசு இயற்றவில்லை. ஆனால், வங்கிகளின் சில பணிகளை மட்டும் ஒழுங்குபடுத்துகின்ற சின்னஞ்சிறு சட்டங்களை அவ்வப்போது அரசு வெளியிட்டுக் கொண்டு இருந்தது.

மைய வங்கி விசாரணைக்குழு (The Central Banking Enquiry Committee), தனியாக வங்கிச் சட்டம் ஒன்றை இயற்றும்படி பரிந்துரைத்தது. ஆனால், அரசு தனியாகச் சட்டம் இயற்றாமல் 1936-ல் இந்திய நிறுவனங்களின் சட்டத்தில் (Indian Companies Act, 1913) நிறுவனங்களுக்குரிய சில விதிமுறைகளைச் சேர்த்துக் கொண்டது. இதனால் எதிர்பார்த்த பலன்கள் ஏற்படவில்லை. புதிதாகச் சேர்த்த விதிமுறைகள் வங்கித் தொழிலை நெறிப் படுத்தப் போதுமானவையாக இருக்கவில்லை. அவற்றைச் செயல்படுத்துவதிலும் பல சிக்கல்கள் எழுந்தன.

1939-ல் இந்திய ரிசர்வ் வங்கி, வங்கித் தொழிலுக்கான தனிச்சட்டம் கொண்டுவர ஒரு மசோதாவைத் தயாரித்து இந்திய அரசுக்கு அளித்தது. இந்திய அரசு அப்பொழுதும் தனிச் சட்டத்தை இயற்றவில்லை. மாறாக 1942ஆம் ஆண்டிலும், 1944ஆம் ஆண்டிலும் சில சட்டத்திருத்தங்களைக் கொண்டு வந்தது. இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்களால் இந்திய வங்கித் தொழிலில் காணப்பெற்ற குறைகளைப் போக்க முடியவில்லை. வங்கிகளின் உள்ளார்ந்த குறைகள் பெருகத்தொடங்கின.

1946 ஜனவரியில் வங்கி நிறுவனங்களின் (சோதனைச்) சட்டத்தையும் [The Banking Companies (Inspection) Ordinance], 1946 நவம்பரில், வங்கி நிறுவனங்களின் (கிளைகள் கட்டுப்பாடு) சட்டத்தையும் [The Banking Companies (Restriction of Branches) Act] நிறைவேற்றினர். 1948-ல் வங்கி நிறுவனங்களின் மசோதா (The Banking Companies Bill) சட்ட மாவதற்குச் சிறிது காலதாமதம் ஆகியது. இதனால், வங்கி

நிறுவனங்களின் (கட்டுப்பாடு) சட்டத்தை [The Banking Companies (Control) Ordinance] நிறைவேற்றினர். நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பெற்ற, முழுமையான உருவம் பெற்ற, வங்கி நிறுவனங்களின் சட்டம் (The Banking Companies Act) 1949ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் நிறைவேற்றப்பெற்றது. இந்தச் சட்டம் 1949 மார்ச்சுத் திங்கள் 16ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. திருத்தங்களோடு கூடிய இந்தச் சட்டத்தின் முழுப்பெயர் 'வங்கி ஒழுங்காற்றுச் சட்டம்' (Banking Regulation Act) என்பதாகும்.

இந்தச் சட்டம் சில முக்கியமான நோக்கங்களோடு உருவாக்கப் பெற்றது. வணிக வங்கிகள் செயல்படுவதிலிருந்த சில தவிர்க்கக்கூடிய குறைகளைப் போக்குவதே இதன் முதல் நோக்கமாகும். இரண்டாவதாக, வங்கிகளைச் சரியான வங்கிக் கொள்கைகளை நடைமுறையில் பின்பற்றச் செய்ய வேண்டுமென்று கருதினார்கள். எதிர்காலத்தில் வங்கிகள் நல்ல முறையில் அமையத்தக்க அடிப்படையை அமைத்துத் தருவதை மூன்றாம் நோக்கமாகக் கொண்டிருந்தது.

1949ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்காற்றுச் சட்டத்தின் முக்கியப் பகுதிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் பிரிவு பாதுகாப்புக் கருதி ஏற்படுத்திய பகுதிகளைக் கொண்டிருக்கின்றது. இரண்டாம் பகுதி, இந்திய ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளைப் பொறுத்தவரை மேற்கொள்ளவேண்டிய பொறுப்புகளையும் பணிகளையும், அதற்காக அதற்குக் கொடுக்கப்பெற்றிருக்கின்ற அதிகாரங்களையும்பற்றிய பகுதிகளையும் கொண்டவைகளாகும்.

வங்கி நிறுவனத்தின் அமைப்பு, நிருவாகம், பணிகள் ஆகியவைபற்றிய பகுதிகளைத் தொகுத்துக் கூறலாம். அமைப்பைப் பொறுத்தவரை இந்தச் சட்டம் 'வங்கி' என்பதற்கு விளக்கம் கொடுத்து, வங்கித் தொழிலை மட்டுமே—வாணி பத்தைச் சேர்க்காமல்—வங்கி நிறுவனம் மேற்கொள்ள வேண்டுமென்று கூறியது. இந்தச் சட்டத்தின் 5 (b), 6ஆம் பகுதிகளின்படி வங்கிகள் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ளலாம்.

(அ) முதன்மையான பணிகள் (Primary Functions):

1. வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்;

2. ஈட்டின் பேரிலோ ஈடின்றியோ கடன் தருதல்;

3. கடன் வாங்குதல்;
4. முதலீடு செய்தல்.

(ஆ) பதிலாள் பணிகள் (Agency Functions):

1. காசோலைகள், மாற்று உண்டியல்கள் முதலிய பிற கடன்கருவிகள் ஆகியவற்றிற்குப் பணத்தைச் செலுத்துதல், வசூலித்தல்;
2. பத்திரங்கள், பங்குகள் ஆகியவற்றை வாங்குதல், விற்றல்;
3. பணத்தை அனுப்புதல், செலுத்துதல்;
4. பொருள்களை அனுப்புதல், பணம் வசூலித்தல் முதலிய பதிலாள் (Agency) பணிகளை மேற்கொள்ளுதல்;
5. பொறுப்பாண்மையாளர்களாக (Trustees) பண்ணைகள், சொத்துகள் ஆகியவற்றை நிருவகிக்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ளல்;

(இ) பொதுப் பயன்பாட்டுப் பணிகள் (General Utility Functions):

1. பல்வேறு வகையான மதிப்புக் கடிதங்களை (Letters of Credit) வழங்குதல்;
2. தங்கக் கட்டிகளை வாங்குதல், விற்றல்;
3. அந்நியச் செலாவணியை வாங்குதல், விற்றல்;
4. பாதுகாப்பாகப் பொருள்களை வாங்க வைத்தல்;
5. பாதுகாப்புப் பெட்டிகளை வைத்துக் காத்தல்;
6. கழிவுசெய்து பத்திரங்களைப் பெறுதல்;
7. கடனுக்கு உறுதியளித்தல்;
8. காப்பீடாகச் சொத்துகளைப் பெற்று நிருவகித்தல் என்பனவாம்.

சட்டத்தின் 6ஆம் பிரிவு வங்கி வேறுவகையான வாணிபத்தில் ஈடுபடுவதைத் தடைசெய்கின்றது. 8ஆம் பிரிவு மிகத் தெளிவாக வங்கி, பொருள்களை வாங்கி விற்கின்ற பணியை மேற்கொள்ளக்கூடாதெனக் கூறுகின்றது.

வங்கி, தனது பணிகளைத் தவறான வழியில் பயன்படுத்துவதைத் தடுக்க 9ஆம் பிரிவு, வங்கி எத்தகைய சொத்துகளை வைத்துக்கொள்ளலாமென்பதை வரையறுக்கின்றது. சொந்தப் பயன்பாட்டிற்குத் தவிர அசையாச் சொத்துகளை 7 ஆண்டுகளுக்குமேல் வைத்திருக்கக்கூடாது. ரிசர்வ் வங்கியின் அனுமதி பெற்று மேலும் 5 ஆண்டுகளுக்கு வைத்திருக்கலாம்.

ஒரு வங்கியின் நிறுவனம், வேறு துணை நிறுவனங்களைத் தொடங்குவதை 19ஆம் பிரிவு தடைசெய்கின்றது. 11ஆம் பிரிவு ஒரு வங்கியின் நிறுவனம், வங்கித்தொழிலைத் தொடங்குவதற்கு முன்னால் எவ்வளவு செலுத்தப்பெற்ற முதலும் ஒதுக்கு நிதிகளும் வைத்திருக்கவேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது. வங்கி, அதனுடைய செலவுகளை எல்லாம் ஈடுசெய்த பின்னர் இலாபத்தில் 20 சதவிகிதத்தை ஒதுக்கு நிதிக்கு அளித்தது போக, மீதியைத்தான் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கலாமென்று சட்டம் வரையறுத்தது. ரிசர்வ் வங்கியின் ஒப்புதல் பெற்றுத்தான், ஒரு வங்கி, தனது பெயரை மாற்றிக்கொள்ள முடியும்.

வங்கியின் நிருவாகத்தை ஒட்டியும் சில பாதுகாப்புகளைச் சட்டம் ஏற்படுத்தியது. எந்த ஒரு வங்கியையும் நிருவாகப் பதிலாளிகள் (Managing Agents) நடத்தக்கூடாது. கடனைத் தீர்க்கமுடியாமல் நொடிப்புற்றவரையோ (Insolvent), குற்றவாளியாகத் தண்டனை பெற்றவரையோ வேலைக்கு அமர்த்தக்கூடாது. வேலை செய்கின்றவர்களுக்குக் கழிவுத் தொகையாகவோ (Commission) இலாபத்தின் ஒரு பகுதியாகவோ ஊதியம் கொடுக்கக்கூடாது. ஒரு வங்கி நிறுவனத்தை, வேறு நிறுவனத்தின் இயக்குநராக இருப்பவரோ, வேறு தொழில் செய்கின்றவரோ நிருவகிக்கக்கூடாது. வேறு வங்கி நிறுவனத்தின் இயக்குநராக இருப்பவர் ஒரு வங்கியின் இயக்குநராக இருக்கக்கூடாது. எந்தப் பங்குதாரருக்கும் மொத்தப் பங்கில் ஒரு சதவீதத்திற்குமேல் அளிப்பதைச் சட்டம் தடைசெய்தது.

வங்கிப் பணிகளை ஒட்டியும் சட்டம் சில பாதுகாப்பு விதிமுறைகளை வகுத்தது. ரொக்கமாக ஒவ்வொரு வங்கியும் எவ்வளவு பணம் வைத்திருக்க வேண்டுமென்பதை வரையறுத்தது. எப்படி ஈட்டின்மீதும், ஈடின்றியும் கடன் கொடுப்பதென்பதையும் சட்டம் வரையறுத்துக் கொடுத்தது.

## தற்கால நிலை

இரண்டாம் உலகப்போர்க் காலத்திலும் அதற்குப் பின்னாலும் இந்திய வங்கிகள் வேகமாக வளர்ச்சி பெற்றன. போர்க் காலத்தில் ஏற்பட்ட பணவீக்கமும், அரசு பின்பற்றிய மலிவுப் பணக் கொள்கையும் (Cheap Money Policy) வங்கிகளின் வளர்ச்சிக்கு ஆக்கம் தேடித்தந்தன. 1949ஆம் ஆண்டின் வங்கி நிறுவனங்களின் சட்டம், வங்கிகள் மிகவும் திறமையாகச் செயல்பட வழிவகுத்துத் தந்தது. ரிசர்வ் வங்கிக்கு மிகுந்த அதிகாரங்கள் வழங்கப்பெற்றன. பட்டியலில் சேர்ந்த (Scheduled) வங்கிகள் எல்லாம் ரிசர்வ் வங்கியின் கட்டுப் பாட்டிற்குள் அடங்கிச் செயல்பட்டன. ரிசர்வ் வங்கியின் அனுமதி பெற்றுத்தான் வணிக வங்கிகள் கிளைகளைத் தொடங்க முடியுமென்ற நிலை வணிக வங்கிகளின் திறமையை வளர்க்கத் துணைசெய்தது. கிளைகளின் எண்ணிக்கை குறைந்து வந்திருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பட்டியலில் சேர்க்கப்பெற்ற வங்கிகளின் நிதிநிலைமையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகின்றது. 1961ஆம் ஆண்டில் வங்கிகள் என்ன நிலையில் இருந்தன என்பதைப் பின்வந்த ஆண்டுகளோடு ஒப்பிட்டால், வங்கிகளின் வளர்ச்சி நிலையை நன்கு புரிந்து கொள்ளலாம். கீழ்க்கண்ட புள்ளிவிவரங்கள் வங்கிகளின் வளர்ச்சி நிலையை விளக்குகின்றன.

பட்டியலில் சேர்க்கப்பெற்ற வங்கிகளின் விவரங்கள்

(ரூபா கோடியில்)

| — | 1961 | 1964 | 1968 | 1971 | 1982 டிசம்பர் |
|---|---|---|---|---|---|
| தேவை வைப்புகள் (Demand Deposits) ... | 835·82 | 1,176·23 | 3,969·1 | 2,725·1 | |
| கால வைப்புகள் (Time Deposits) ... | 1,143·11 | 1,345·37 | | 3,280 | 40,873 |
| வங்கிக் கடன் (Bank Credit) | 1,285·28 | 1,811 59 | 3,182·9 | 4,684 | 33,920 |
| அரசுப் பத்திரங்களில் முதலீடு (Investment in Government Securities) ... | 579·94 | 764·91 | 1,160·7 | 1,798·9 | 11,134 |
| வங்கியின் கிளைகள் ... | — | 5 446 | 8,862 (ஜூன் 1969) | 11,845 | — |

வங்கிகள் உழவர்களுக்கு வழங்கிய கடனின் அளவு கூடியிருக்கின்றது. 1968 ஜூனில், உழவர்களுக்கு 14·31 கோடி ரூபா வணிக வங்கிகள் நேரடியாகக் கடன் கொடுத்திருந்தன. 1971 மார்ச்சில், உழவர்களுக்கு வழங்கிய நேரடிக் கடனின் அளவு 235 கோடி ரூபா. 1981 ஜூனில் நேரடிக் கடன் 3043·29 கோடியாக உயர்ந்தது.

வங்கிகளின் வளர்ச்சிப் போக்கினை பின்வரும் சில குறிப்பிடத்தக்க புள்ளிவிவரங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

| எண் | விவரம் | ஜூன் 1969 | ஜூன் 1972 | டிசம்பர் 1973 | டிசம்பர் 1982 |
|---|---|---|---|---|---|
| 1 | வணிக வங்கிகளின் எண்ணிக்கை | 89 | 83 | 80 | |
| | (i) பட்டியலில் சேர்க்கப்பெற்ற வங்கிகள் ... | 73 | 74 | 73 | |
| | (ii) பட்டியலில் சேர்க்கப் பெறாதவை ... | 16 | 9 | 7 | |
| 2 | இந்தியாவிலுள்ள அலுவலகங்கள் | 8,262 | 13,620 | 16,503 | 39,177 |
| 3 | ஓர் அலுவலகத்தில் பணிபுரியும் மக்கள் ... | 65,000 | 42,000 | 35,000 | |
| 4 | பட்டியலில் சேர்க்கப்பெற்ற வங்கிகளின் மொத்த வைப்பு (ரூபா கோடியில்) ... | 4,646 | 7,596 | 10,063 | |
| 5 | பட்டியலில் சேர்க்கப்பெற்ற வங்கிகளின் மொத்தக் கடன் ... | 3,599 | 5,466 | 7,042 | |
| 6 | நாட்டின் வருவாயில் வைப்புகளின் சதவீதம் ... | 15.3 | 19.6 | — | |

வங்கிகள் நாட்டுப்புறங்களில் மிகுதியாகக் கிளைகளைத் தொடங்கியிருக்கின்றன. 1969 ஜூனில், நாட்டுப்புறங்களில் 1,832 கிளைகள்தாம் இருந்தன. 1973-ல் நாட்டுப்புறங்களிலிருந்த கிளைகளின் எண்ணிக்கை 4,526ஆக உயர்ந்துள்ளது. இக் கிளைகள் 1982 டிசம்பரில் 20,394 ஆகக் கூடின. நாட்டுடைமைக்கு முன்னால் நமது நாட்டில் மொத்தம் 8,262 கிளைகள் இருந்தன. 1973-ல் 16,503 கிளைகளாக வளர்ந்தன. 1982 டிசம்பரில் இக் கிளைகள் 39,177 ஆக கூடியுள்ளன.

1969 ஜூனில் ஒரு வங்கி அலுவலகம் 65,000 மக்களுக்குச் சராசரியாகச் சேவை செய்தது. 1973-ல் ஒரு வங்கி அலுவலகம்

35,000 பேர்களுக்குச் சேவை செய்துள்ளது. இதிலிருந்து வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந் திருப்பதை அறிந்துகொள்ளலாம். 1983 அக்டோபரில் பட்டியலில் சேர்க்கப்பட்ட வங்கிகளில் வைப்பு 56271 கோடி யாகக் கூடியது.

சமதர்ம சமுதாயத்தை அமைப்பதை இலட்சியமாகக் கொண்ட இந்திய அரசு, வங்கிச் சட்டங்களின் (திருத்த) மசோதா [Banking Laws (Amendment) Bill] மூலம் சமுதாயக் கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தது. 1969 பிப்பிரவரித் திங்கள் முதல் சமுதாயக் கட்டுப்பாடு செயல்படுத்தப்பட்டது. 1969 ஜூலை 19-ல், 14 பெரிய வங்கிகளையும், 1980-ல் 6 பெரிய வங்கிளையும் நாட்டுடைமையாக்கிய பின்னர் வங்கிகளின் வளர்ச்சிப் போக்கில் புதிய வேகம் பிறந்திருக்கின்றது.

## வைப்புக் காப்பீட்டு நிறுவனம்
## (Deposit Insurance Corporation)

சிறிய வங்கிகளில் வைப்புகளை வைத்திருக்கின்றவர்களுக்கு வங்கிகளால் பணம் கொடுக்க முடியாத இடர்ப்பாடு எழுமானால் அவர்கள் மிகவும் அல்லற்பட வேண்டியிருக்கும். இத்தகைய இடர்ப்பாட்டிலிருந்து வாடிக்கையாளர்களைக் காப்பதற்காக 1962ஆம் ஆண்டு ஜனவரி ஒன்றில் வைப்புக் காப்பீட்டு நிறுவனத்தை அமைத்தார்கள்.

நமது நாட்டிலுள்ள எல்லா வங்கிகளும் காப்பீடு செய்த வங்கிகளாகப் பதிவு செய்யப்பெற்றன. ஏதாவது ஒரு வங்கி முறியுமானால் அதில் வைப்புகளைப் போட்டு வைத்திருப்பவர் களுக்கு ரூ. 1,500 கிடைக்கும். இந்த நன்மையைப் பெற வாடிக்கையாளர் எந்த வகையான கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. ஒவ்வொரு வங்கியும் அதனுடைய வைப்பில் நூற்றுக்கு ஐந்து பைசா வீதம் கட்டணம் செலுத்தவேண்டும்.

வைப்புக் காப்பீட்டு நிறுவனம் ஒருகோடி ரூபா செலுத்தப் பட்ட முதலோடு செயல்படத் தொடங்கியது. இந்தப் பணத்தை இந்திய ரிசர்வ் வங்கி வழங்கியுள்ளது. இந்தப் பணம் மத்திய அரசின் பத்திரங்களில் முதலீடு செய்யப்பெற்றிருக்கின்றது. நிறுவனத்தின் நிருவாகச் செலவை முதலீடு செய்த பத்திரங் களிலிருந்து வரும் வருவாயைக்கொண்டு சமாளிக்கின்றனர். பதிவு செய்யப்பட்ட வங்கிகளிடமிருந்து கிடைக்கின்ற தொகை

யையும் வட்டி வருவாயையும் பயன்படுத்தி வைப்புகளுக்குச் செலுத்தவேண்டிய பணத்தைக் கொடுக்கின்றனர்.

இதனுடைய நிருவாகம், இயக்குநர் குழுவிடம் (Board of Directors) இருக்கின்றது. இதன் தலைவராக ரிசர்வ் வங்கியின் ஆளுநர் (Governor) இருக்கின்றார். ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநரும், மத்திய அரசால் நியமிக்கப்பெறுகின்ற ஓர் அலுவலரும், ரிசர்வ் வங்கியை கலந்தாலோசித்து மத்திய அரசு நியமிக்கின்ற அலுவலகத் தொடர்பற்ற இருவரும் இந்த இயக்குநர் குழுவில் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

1965 டிசம்பர் 31-ல் இந்த வைப்புக் காப்பீட்டு நிறுவனத்தில் நிதியாக ரூ. 2·3 கோடி இருந்தது. இந்த நிறுவனம் அமைந்த பிறகு, சிறிய சேமிப்பாளர்கள் வங்கிகளின்மீது கொண்டிருந்த நம்பிக்கை வளர்ந்திருக்கின்றது.

**நிறைவுரை :** இந்திய ரிசர்வ் வங்கி, வணிக வங்கிகள் மேலும் திறமையாகவும் செம்மையாகவும் பணியாற்றப் பல பரிந்துரை களைக் கூறியுள்ளது. வங்கிகள் கடன் கொடுப்பதில் மேலும் கவனமாக நடந்துகொள்ளவேண்டும். கடன் கொடுப்பதற்கு முன்னால் கடன் வாங்குவோரின் கடன்-மதிப்பு நிலையைச் சரியாக அறிந்துகொள்வது தேவையானதாகும்.

நிருவாகத்தின் திறமையையும் கூட்டவேண்டும். இயக்கு நர்கள், வங்கியின் பணிகளைத் தக்க வகையில் கண்காணிக்க வேண்டும். பயிற்சியும் அனுபவமும் கொண்ட நல்ல ஊழியர் களை, இனங்கண்டு வேலைக்கு அமர்த்தவேண்டும். தலைமை அலுவலகம் கிளை வங்கிகள் எப்படிச் செயல்படுகின்றன வென்பதைச் சரியான வகையில் மேற்பார்ப்பது தேவையாகும்.

வங்கிகள் தங்களுடைய பங்குதாரர்களுக்கு இலாபத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கு முன்னால், கைக்குக் கிடைக்காமல் போகக்கூடிய சொத்துகள் இருக்கின்றனவாவென்பதைக் கவனித்து, இலாபத்திலிருந்து அவற்றை ஈடுகட்டவேண்டும். வங்கி நிறுவனங்களின் சட்டத்தின் 17ஆம் பிரிவின்படி நிகர இலாபத்தில் 20 சதவிகிதத்தை ஒதுக்கு நிதியில் சேர்க்கவேண்டும். செலுத்திய முதலுக்குச் சமமாக ஒதுக்கு நிதி சேர்ந்துவிட்டால், அதன் பின்னர் நிகர இலாபத்தை நிறுவனம் எண்ணம்போலப் பகிர்ந்து கொடுக்கலாம்.

முதலீட்டிலும் தக்க கொள்கையைச் சரியான முறையில் பின்பற்றுவது தேவையாகும். இயக்குநர்கள் நேரடியாக ஈடுபாடு

கொண்டிருக்கின்ற நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்யக் கூடாது. அரசின் பத்திரங்களில் மிகுதியாக முதலீடு செய்வது வரவேற்கத்தக்கதாகும்.

இந்திய வணிக வங்கிகளுக்கு நல்ல எதிர்காலம் இருக்கின்றதென்று கூறலாம். நாடு ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் முன்னேறுகின்றபொழுது, வங்கிகளுக்கான வளர்ச்சி வாய்ப்புகளும் அதிகரித்துக்கொண்டே போவதைக் காணலாம்.

## துணை நூல்கள்

1. M. M. Gubbay, 'Indigenous Banking in India'.
2. Dr. S. K. Basu, 'A Survey of Contemporary Banking Trends'.
3. Panandikar, 'Banking in India', Chap. 7.
4. M. L. Tannan, 'Banking Law and Practice in India'.
5. B. T. Thakur, 'Organisation of Indian Banking'.
6. S. K. Muranjan, 'Modern Banking in India', Chap. 1, 6 and 9.
7. A. K. Basu, 'Fundamentals of Banking Theory and Practice', Chap. 8.
8. Donald, D. Hester, 'Indian Banks, Their Portfolios, Profits and Policies'.
9. S. R. Dawar, 'Law and Practice of Banking', Chap. 1, 15 and 18.
10. B. R. Rau, 'Present - Day Banking in India', Chap. 1, 4, 6, 8 and 12.
11. Findlay Shirras, 'Indian Finance and Banking', Chap. 12.

# 10. இந்தியக் கூட்டுறவு வங்கிமுறை

## பின்புலம்

இந்தியாவின் முதுகெலும்பாக வேளாண்மை இருக்கின்றது. பெரும்பாலான மக்கள் தங்களுடைய வாழ்விற்கு வேளாண்மைத் தொழிலையே நம்பியிருக்கின்றனர் இந்திய உழவர்களின் வறுமை உலகெல்லாம் பேசப்படுகின்றது. 'கடனில் பிறந்து, கடனில் வாழ்ந்து, கடனில் சாகின்ற' இந்திய உழவர் லேவாதேவிக்காரர்களின் கைப்பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றனர். பல வகையான காரணங்களினால் வணிக வங்கிகள் வேளாண்மைக் கடனில் தீவிரமாக ஈடுபட இயலவில்லை. வேளாண்மையின் தனித்தன்மைகளையும், உழவர்களின் கடன் தேவைகளையும் மனத்தில் கொண்ட அரசு, கூட்டுறவு இயக்கத்தைத் தோற்றுவித்தது.

1904-ல் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சட்டம் (The Co-operative Credit Societies Act) இயற்றப்பெற்றது. இந்தச் சட்டத்திலிருந்த குறைகளைப் போக்கிக் கூட்டுறவுச் சங்கங்கள் திறமையாகச் செயல்பட வழிவகுக்கின்ற வகையில் 1912ஆம் ஆண்டிலும் 1919ஆம் ஆண்டிலும் கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்தியுள்ளது.

மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக் காலத்தில், நமது நாட்டில் 21 மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் (State Co-operative Banks), 372 மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் (Central Co-operative Banks), 15 தொழில் கூட்டுறவு வங்கிகளும் (Industrial Co-operative Banks), 18 மத்திய நிலவள வங்கிகளும் (Land Mortgage Banks), 13,323 வேளாண்மை தவிர பிற கடன் சங்கங்களும் (Non-Agricultural Credit Societies), 1,75,947 வேளாண்மைக் கடன் சங்கங்களும் (Agricultural Credit Societies), 5,898 தானிய வங்கிகளும் (Grain Banks), 583 அடிப்படை நிலவள வங்கிகளும் (Primary Land Mortgage Banks) செயல்பட்டுக் கொண்டிருந்தன.

பொதுவாகக் கூட்டுறவு வங்கிகள் குறுகிய காலக் கடன்களை வழங்குகின்றன. நிலவள வங்கிகள் வேளாண்மை வளர்ச்சிக்கான நீண்ட காலக் கடனைத் தருகின்றன.

## அமைப்பு

கூட்டுறவு வங்கிமுறை மூன்றடுக்குகளாகச் (Three-Tier) செயல்படுகின்றன. கூட்டுறவு அமைப்பு முறையின் அடித் தளமாகக் கிராமங்களிலும் நகரங்களிலும் இருக்கின்ற பல்வேறு வகையான அடிப்படைச் சங்கங்கள் (Primary Societies) இருக்கின்றன. மாவட்டத்திலுள்ள சங்கங்களை எல்லாம் இணைத்துக் கொண்டு மாவட்ட நிலையில் மத்திய வங்கிகள் (Central Banks) செயல்படுகின்றன. மத்திய வங்கிகளின் இணைந்த அமைப்பாக மாநில அளவில் மாநிலக் கூட்டுறவு வங்கி (State Co-operative Bank) செயல்படுகின்றது.

மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ரிசர்வ் வங்கி, ஸ்டேட் வங்கி (State Bank), மாநில அரசு ஆகியவற்றிடமிருந்து கடன் பெற்று மாவட்ட நிலையிலுள்ள மைய வங்கிகளுக்கு வழங்குகின்றன. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் கிராம நிலையிலுள்ள வேளாண் மைக் கடன் சங்கங்களுக்குக் கடன் தருகின்றன. அடிப்படைக் கடன் சங்கங்கள் உழவர்களுக்கு நேரடியாகக் கடன் தருகின்றன.

மாநில வங்கிகள் மைய வங்கிகளுக்கும், கிராமநிலைக்கடன் வங்கிகளுக்கும் வேண்டிய பணத்தை வழங்கியபோதிலும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய அதிகாரம் பெற்றிருக்கவில்லை. 1966 மார்ச்சுக்கு முன்னால், ரிசர்வ் வங்கியிடமும் இத்தகைய அதிகாரம் இருந்ததில்லை. மாநில அரசின் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் (Registrar) கண்காணிப்பில் கூட்டுறவு வங்கிகள் இயங்குகின்றன. கூட்டுறவு வங்கிகளின்மீது மாநில அரசுகள் செலுத்துகின்ற அதிகாரத்தை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லாமையால், ரிசர்வ் வங்கியால் கூட்டுறவு வங்கிகளை முழுமையாகக் கட்டுப்படுத்த இயல வில்லை.

## அடிப்படைச் சங்கங்கள்
(Primary Societies)

கிராமம் அல்லது நகர நிலையில் கடன் வாங்குவோராலும் மற்றவர்களாலும், ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக் காகவும் இணைந்து செயல்படுகின்ற கூட்டுறவு மனப்பான்மையில்

அடிப்படைச் சங்கங்கள் நிறுவப்பெறுகின்றன. இத்தகைய சங்கங்களை ஊதியம் பெறாத தலைவர்களும் செயலாளர்களும் இயக்குநர் குழுவின் கருத்துகளின்படி செயல்படுத்துகின்றனர்.

கிராம-நகரநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நுழைவுக் கட்டணம் (Entrance Fees), பங்கு முதல் (Share Capital), உறுப்பினரல்லாதவர்கள், மைய, மாநில வங்கிகள், அரசு ஆகியவற்றிடமிருந்து பெறுகின்ற கடன்கள் ஆகியவற்றிலிருந்து கூட்டுறவுச் சங்கம் தனக்கு வேண்டிய நிதியைப் பெறுகின்றது. வைப்புகளின் மூலமாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மிகுதியாகப் பணம் கிடைக்க வாய்ப்பு இல்லை. இவை பெரும்பாலும் சொந்தப் பொறுப்பின்மீது குறுகிய காலக் கடன்களை வழங்கு கின்றன. தற்காலத்தில் வேளாண்மை விளைபொருள்களைச் சங்கங்களின் கிட்டங்கியில் வைத்துக்கொண்டு, அவற்றின்மீது முன்பணம் தருகின்ற போக்கு மிகுந்து வருகின்றது.

## மத்திய வங்கிகள்
## (Central Banks)

ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில்—பெரும்பாலும் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை இணைத்து மத்திய வங்கிகள் அமைக்கப்படுகின்றன. இப்பொழுது தனிப்பட்டவர் களையும் மத்திய வங்கியில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளுகின்றனர். இவற்றின் நிருவாகத்தை இயக்குநர்கள் குழு கவனிக்கின்றது. இயக்குநர் குழுவில் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர்களும் கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாளர் களும் இருக்கின்றனர்.

ஒவ்வொரு மைய வங்கியும் பங்குத் தொகைகள், ஒதுக்கு நிதிகள், நடப்புக் கால வைப்புகள், சேமிப்புகள், தொடர் வைப்புகள் முதலியவற்றின் மூலமாகவும், மாநில வங்கிகள், பிற வணிக வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து பெறுகின்ற கடன் களின் வாயிலாகவும் தேவையான நிதியைப் பெறுகின்றது. அடிப்படைச் சங்கங்கள் தங்களிடம் எச்சமாக இருக்கின்ற பணத்தை மைய வங்கியிடம் வைப்புக் கணக்கில் போட்டு வைக்கலாம்.

மத்திய வங்கியின் தலையாய பணி, கிராமநிலைக்கடன் சங்கங்களுக்கு வேண்டிய நிதியை அளிப்பதாகும். சில கூட்டுறவுச் சங்கங்களில் எச்சமாக இருக்கின்ற பணத்தைப்

பெற்றுத் தேவையானவற்றிற்குக் கடன் தருகின்றது. நகரங்களில் இருக்கின்ற சேமிப்பைத் திரட்டிக் கிராமங்களில் வேளாண்மை வளர்ச்சிக்காக அதனைத் தருகின்றது. பெரும்பாலான மாநிலங் களில் மைய வங்கிகள் வங்கித் தொழிலை மேற்கொள்வ தில்லை ஆனால், பம்பாயிலும் சென்னையிலும் மைய வங்கிகள் வங்கித் தொழிலை ஏற்று நடத்துகின்றன. பொதுவாக மைய வங்கிகள் தனிப்பட்டவர்களுக்குக் கடன் கொடுப்பதில்லை. தற்காலத்தில் மைய வங்கிகளின் வைப்புகள் மிகுந்துள்ளன. இருக்கின்ற பணத்தை எல்லாம் கூட்டுறவுத் துறையிலேயே முதலீடு செய்யமுடியாத மைய வங்கிகள் அரசின் பத்திரங்களில் முதலீடு செய்துள்ளன.

## மாநிலக் கூட்டுறவு வங்கிகள்
## (State Co-operative Banks)

கூட்டுறவு அடுக்குகளின் மேல்மாடியாக மாநிலக் கூட்டுறவு வங்கி இருக்கின்றது. நகரங்களில் செல்வத்தில் மேல்மட்டத் திலுள்ளவர்களின் சேமிப்பைக் கிராமங்களில் பயன்படுத்த வழிவகுக்கும் நோக்கத்தோடு மாநிலக் கூட்டுறவு வங்கிகள் நிறுவப்பெற்றன. கூட்டுப் பங்கு வங்கிகளுக்கும் கூட்டுறவு இயக்கத்திற்கும் ஓர் இணைப்புப் பாலமாக இந்த வங்கி திகழ்கின்றது.

மாநிலக் கூட்டுறவு வங்கியில் மத்திய வங்கிகளின் சார்பாளர்களும் தனிப்பட்ட பங்குதாரர்களும் உறுப்பினர்களாக இருக்கின்றனர். மாநிலக் கூட்டுறவு வங்கிகள் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் மூலமாகக் கிராமநிலைக் கடன் சங்கங் களுக்கு நிதியளிக்கின்றன. மாநிலக் கூட்டுறவு வங்கி, தனக்கு வேண்டிய நிதியைப் பங்குத்தொகைகள், ஒதுக்கு நிதிகள், பொதுமக்களிடமிருந்து பெறுகின்ற வைப்புகள், ஸ்டேட் வங்கியிடமிருந்து கிடைக்கின்ற கடன்கள், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வைப்புகள் ஆகியவற்றின் மூலமாகப் பெறுகின்றது. இது தனிப்பட்டவர்களுக்குக் கடன் கொடுக்கக்கூடாது.

### வளர்ச்சி

*1951-52*-ல் *1,85,630* கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. *1962-63*-ல் இவற்றின் எண்ணிக்கை *3,46,174* ஆக உயர்ந்தது. *1962-63*-ல் *386* மத்தியக் கூட்டுறவு வங்கிகள் இருந்தன. இவற்றில் *3,99,299* உறுப்பினர்கள் இருந்தனர். இவற்றின்

நடைமுறை முதல் 400.12 கோடி ரூபாவாக இருந்தது. இவை 440.56 கோடி ரூபா கடன் கொடுத்திருந்தன. 1951-52-ல் 16 மாநிலக் கூட்டுறவு வங்கிகள் இருந்தன. 1962-63-ல் மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை 21ஆக உயர்ந்தது. இவற்றின் பங்குமுதல் 13.18 கோடி ரூபாவாக இருந்தது. இவை 294.82 கோடி ரூபா கடன் கொடுத்திருந்தன.

இந்திய ரிசர்வ் வங்கி நியமித்த அகில இந்தியக் கிராமக் கடன் விசாரணைக் குழுவின் (All India Rural Credit Survey Committee) அறிக்கை 1954-ல் வெளிவந்தது. அக் குழு, கூட்டுறவு இயக்கம் மேலும் எப்படித் திறமையாகப் பணியாற்ற வேண்டுமென்பதற்கான பரிந்துரைகளைக் கூறியுள்ளது.

இந்தியக் கூட்டுறவுத்துறையில் தற்காலத்தில் குறிப்பிடத் தக்க அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதனை அடிப்படை வேளாண்மைக் கடன் சங்கங்களைப்பற்றிய விவரங்களிலிருந்து அறியலாம்.

| விவரம் | 1951-52 | 1961-62 | 1971-72 | 1972-73 |
|---|---|---|---|---|
| சங்கங்களின் எண்ணிக்கை | 1,07,925 | 2,15,081 | 1,57,454 | 1,57,775 |
| உறுப்பினர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 47.77 | 195.72 | 220.09 | 344.23 |
| பங்கு மூலதனம் (ரூபா கோடியில்) | 8.92 | 68.61 | 224.83 | 237.08 |
| வைப்புகள் (ரூபா கோடியில்) | 4.39 | 17.64 | 74.78 | 76.82 |
| செயல் மூலதனம் (ரூபா கோடியில்) | 45.22 | 325.33 | 1,276.17 | 1,225.72 |
| கொடுத்த மொத்தக் கடன் (ரூபா கோடியில்) | 24.21 | 228.31 | 614.53 | 685.56 |
| ஒரு சங்கத்தின் சராசரி உறுப்பினர்கள் | 44 | 91 | 203 | 253 |

கூட்டுறவுச் சங்கங்களின், கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சிக்கு உதவி செய்யும் நோக்கில் 1956-ல் இந்திய ரிசர்வ் வங்கி, தேசிய வேளாண்மைக் கடன் (நீண்டகால நடவடிக்கைகள்) நிதி [The National Agricultural Credit (Long Term Operations) Fund] என்றும், தேசிய வேளாண்மைக் கடன் (நிலைப்படுத்துதல்) நிதி

[The National Agricultural Credit (Stabilization) Fund] என்றும் இரு நிதிகளை உருவாக்கி இருக்கின்றது.

1959 ஜூலையில் மாநிலக் கூட்டுறவு அமைச்சர்களின் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டின் பரிந்துரையின்படி கூட்டுறவுக் கடன் குழு (Committee on Co-operative Credit) ஒன்றினை வி. எல். மேத்தா (V. L. Mehta) என்பவரின் தலைமையில் அமைத்தனர். இந்தக் குழு எப்படி வேளாண்மைக் கடனை விரிவடையச் செய்வது என்பது குறித்து ஆராய்ந்தது. இக் குழு தனது அறிக்கையை 1960 மே மாதத்தில் அளித்தது. 1960 ஜூனில், ஸ்ரீநகரில் நடைபெற்ற கூட்டுறவு மாநில அமைச்சர்களின் மாநாட்டில் மேத்தா குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்தனர்.

கூட்டுறவு மாநில அமைச்சர்களின் மாநாட்டை ஒட்டி மத்திய அரசு, கூட்டுறவுத் துறையில் மாநில அரசுகள் பின்பற்ற வேண்டிய கொள்கைகளைப் புதிதாக வரையறுத்துக் கொடுத்திருக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கின்றபொழுது, அவை சிக்கனமாகச் செயல்படுவதற்கு வேண்டிய பரப்பளவைக் கொண்டிருக்கின்றனவாவென்பதைக் கவனிக்கவேண்டும். சின்னஞ்சிறு கிராமங்களை இணைக்க வேண்டும். உச்ச அளவில் ஒரு கூட்டுறவுச் சங்கம் 3,000 மக்களுக்குப் பணி புரிவதாக அமையலாம். மாநில அரசுகள் அடிப்படை வேளாண்மைக் கடன் சங்கங்களை அமைப்பதில் நேரடியாகப் பங்கு பெறலாம். அவற்றிற்கு வேண்டிய மூலதனத்தில் ஒரு பகுதியை 5 முதல் 8 ஆண்டுக் காலத்திற்குக் கொடுக்கலாம். அரசு நேரடியாகக் கிராமக் கடன் சங்கங்களுக்கு முந்திய ஆண்டு அவை கடன் கொடுத்ததில் 8 சதவீதம் கொடுக்கலாம்.

## நில (அடைமான) வள வங்கிகள்
## (Land Mortgage Banks)

வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் நீண்டகாலக் கடன் தேவையை நிறைவு செய்யும் வகையில் கூட்டுறவு அடிப்படையில் நிலவள வங்கிகள் நிறுவப்பெற்றுள்ளன.

முதல் நிலவள வங்கி 1920-ல் ஜாங் (Jhang) என்னுமிடத்தில் நிறுவப்பெற்றது. 1928-ல் இந்திய வேளாண்மை பற்றிய அரசின் குழுவும் (Royal Commission on Indian Agriculture), 1929-30-ல் மத்திய வங்கி விசாரணைக் குழுவும் (The Central

Banking Enquiry Committee) கூட்டுறவு அடிப்படையில் நிலவள வங்கிகளை அமைக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்திக் கூறின. நிலவள வங்கிக்கான அடித்தளத்தை 1920ஆம் ஆண்டிலேயே அமைத்தபோதிலும் 1929-ல் சென்னையில் ஒரு மத்திய நிலவள வங்கி (Central Land Mortgage Bank) அமைக்கப் பெற்ற பிறகுதான், நிலவள வங்கியின் முன்னேற்றம் குறிப்பிடத் தக்க அளவில் அமைந்தது.

நிலவள வங்கி உழவருக்கு 400 ரூபாவுக்குக் குறையாமலும் 15,000 ரூபாவுக்கு மேற்போகாமலும், நிலத்தையும் அதோடு தொடர்புடைய சொத்துகளையும் ஈடாகப் பெற்றுக்கொண்டு கடன் தருகின்றது. சொத்துகளின் மதிப்பைக் கணித்து, பத்திரங்களைச் சரிபார்த்துக் கடன் தருவதைப்பற்றி முடிவு செய்யத் தனித்திறமை வாய்ந்த ஊழியர்கள் உள்ளனர். 4 முதல் 6 சதவீத வட்டியில் கடன் தரப்படுகின்றது. கடனை உழவர்கள் ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

நிலவள வங்கிகளை இணைத்து மத்திய நிலவள வங்கிகள் (Central Land Mortgage Banks) அமைக்கப்பெற்றுள்ளன. மத்திய நிலவள வங்கிகள் அவற்றிற்கு வேண்டிய நிதியில் பெரும் பகுதியைக் கடன் பத்திரங்களின் மூலமாகப் பெறுகின்றது. இத்தகைய கடன்களுக்கு மாநில அரசுகள் உறுதியளிக்கின்றன.

*1962-63-ல் 571* அடிப்படை நிலவள வங்கிகள் (Primary Land Mortgage Banks) இருந்தன. அவற்றில், *65* சதவீத வங்கிகள் ஆந்திரா, மைசூர், சென்னை மாநிலங்களில் இருந்தன. இவற்றின் நடைமுறை முதல் *55.02* கோடி ரூபாவாக இருந்தது. இவற்றில் *10,51,165* உறுப்பினர்கள் இருந்தனர்.

*1962-63-ல் 16* மத்திய நிலவள வங்கிகள் இருந்தன. அவற்றில் *3,72,631* உறுப்பினர்கள் இருந்தனர். அவை *85.85* கோடி ரூபா நடைமுதலோடு செயல்பட்டன.

நமது நாட்டில் நிலவள வங்கிகள் மிகவும் மெதுவாக வளர்ச்சி அடைந்துள்ளன. இதற்குப் பலவகையான காரணங்கள் உள்ளன. நமது நாட்டு உழவர்களில் பெரும்பாலானோர் படிக்காதவர்கள். அவர்களால் நிலவள வங்கிகளின் செயல் முறையைப் புரிந்துகொண்டு அவற்றைப் பயன்படுத்த முடிய

வில்லை. நிலவள வங்கிகளால் போதுமான அளவு நிதியைச் சேகரிக்க முடியவில்லை. அரசு நிலவள வங்கிகள் செயல்படுவதில் மிகுந்த கவனம் செலுத்தவில்லை. கூட்டுறவுத்துறை மாநில அரசுகளின் கையில் இருக்கின்றது. ஆதலால், ரிசர்வ் வங்கியால் நிலவள வங்கியின் வளர்ச்சிக்கு எதுவும் செய்ய இயலவில்லை. நிலவள வங்கிகள் இன்னும் பரந்து விரிந்த அளவில் செயல்பட மிகுதியாக வாய்ப்புகள் உள்ளன.

**நிறைவுரை :** இந்தியாவில் கூட்டுறவு வங்கிகள் போதுமான அளவு திறமையோடு செயல்படுகின்றனவென்று கூறமுடியாது. எதிர்காலத்தில் கூட்டுறவு வங்கிகள் மேலும் வளர்ச்சியடைய மிகுதியாக வாய்ப்புகள் உள்ளன.

## துணை நூல்கள்

1. Findlay Shirras, 'Indian Finance and Banking'.
2. 'Reserve Bank of India Land Mortgage Banks, Report of the Rural Credit Survey Committee (1954)'.
3. 'Report of the Central Banking Enquiry Committee'.
4. S. K. Muranjan, 'Modern Banking in India'.

# 11. இந்திய ஸ்டேட் வங்கி

## (State Bank of India)

1955ஆம் ஆண்டு ஜூலை முதல் தேதி முதல், இந்திய ஸ்டேட் வங்கி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுவும் ஒரு சாதாரண வணிக வங்கியைப் போன்றிருந்தபோதிலும், இந்திய வங்கிகளுக்கிடையில் இது பல்வேறு காரணங்களினால் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது.

இந்திய ஸ்டேட் வங்கியின் அமைப்பும் பணிகளும் ஒரு தனிச் சட்டத்தின்படி அமைந்துள்ளன. மற்றைய வணிக வங்கிகளைப்போன்று, இது இந்திய நிறுவனங்களின் சட்டத்தின் கட்டுப்பாட்டிற்குள் இல்லை. இந்த வங்கியைத் தொடங்கிய நாள் முதல் இது அரசோடு தொடர்புடைய வங்கியாக இருந்திருக்கின்றது. இது, முன்னர் அரசின் வைப்புகளை வைத்திருந்தது. மைய வங்கியின் சில பணிகளை இது மேற்கொண்டிருந்தது. இந்த வங்கியின் நிருவாகக் குழுவிலுள்ள பெரும்பாலான இயக்குநர்கள் மத்திய அரசால் நியமிக்கப் பெற்றவர்கள். எங்கெல்லாம் இந்திய ரிசர்வ் வங்கி கிளைகளைத் தொடங்கவில்லையோ, அங்கெல்லாம் ஸ்டேட் வங்கி ரிசர்வ் வங்கியின் கிளைபோன்று செயல்படுகின்றது. இதனால் இதனுடைய செல்வாக்கு மிகுந்துள்ளது. இஃது இந்தியா விலேயே பெரிய வாணிப வங்கி என்பதும் குறிப்பிடத்தக்க தாகும். பட்டியலில் சேர்க்கப்பெற்ற எல்லா வங்கிகளின் மொத்த வைப்பில் ஏறத்தாழ 26 சதவீதம் இந்த வங்கியிடம் இருக்கின்றது. பிற வங்கிகள், அவற்றிற்குப் பணத்தேவை நேர்கின்றபொழுதெல்லாம் ஸ்டேட் வங்கியிடம் பெறு கின்றன.

### பின்புலம்

இந்திய இம்பீரியல் வங்கியைத்தான் (Imperial Bank of India) இந்திய ஸ்டேட் வங்கியாக மாற்றினார்கள். இத்தகைய மாறுதல் ஏன், எப்படி ஏற்பட்டதென்பதைப் புரிந்துகொண்டால்

தான், ஸ்டேட் வங்கியின் பணிகளையும் முக்கியத்துவத்தையும் அறிந்துகொள்ள இயலும்.

*1921*ஆம் ஆண்டில் வங்காளம், பம்பாய், சென்னை மாநில வங்கிகளை (மூன்றினை) இணைத்து இந்திய இம்பீரியல் வங்கியை உருவாக்கினார்கள். *1935*ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கியை நிறுவுகின்றவரை, இம்பீரியல் வங்கி ஒரு நாட்டின் மத்திய வங்கி செய்யவேண்டிய சில பணிகளையும் செய்துகொண்டிருந்தது. இம்பீரியல் வங்கியைத் தொடங்கிய பொழுது, அது ஒரு மத்திய வங்கியாக வளர்ச்சிபெற வேண்டு மென்றுதான் கருதினார்கள். ஆனால், இம்பீரியல் வங்கி தொடர்ந்து வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தால் அதனால் நாட்டின் மைய வங்கியாக மாற முடியவில்லை.

இம்பீரியல் வங்கி மைய வங்கியின் பணிகளைச் செய்ததில் இருந்த குறைகள் நீங்கிய வகையில் ரிசர்வ் வங்கியை உருவாக்கினார்கள். கிராமங்களில் இருக்கின்ற கடன்முறையை மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியத்தைப் பல அறிஞர்கள் சுட்டிக்காட்டினர். நாடு விடுதலை பெற்ற பிறகு, இந்தத் தேவை மிகுதியும் உணரப் பெற்றது. இந்தத் தேவையை நிறைவு செய்கின்ற வகையில்தான் ஸ்டேட் வங்கியை நிறுவினார்கள்.

*1948*ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்களில் அரசு இம்பீரியல் வங்கியை நாட்டுடைமையாக்கப்போவதாக அறிவித்தது. இம்பீரியல் வங்கி இந்தியாவிற்கு வெளியில் பர்மா, சிலோன், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலும் கிளைகளை வைத்திருந்தது. இதனால் நாட்டுடைமையாக்குவதில் சில சிக்கல்கள் எழுந்தன. அவற்றைப்பற்றி அரசு ஆராய்ந்தது. இம்பீரியல் வங்கியை நாட்டுடைமையாக்கத் தீர்மானித்தபொழுது, மற்றைய வாணிப வங்கிகளை நாட்டுடைமையாக்கப் போவதில்லை என்றும் கூறியது.

இம்பீரியல் வங்கியின் மத்திய இயக்குநர் குழு (Central Board of Directors) அரசுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தது. அதில் நாட்டுடைமையாக்குவதற்கு எதிராக இருந்த காரணங் களைத் தொகுத்துக் கூறியது. இம்பீரியல் வங்கி சிக்கனமாகவும் திறமையாகவும் செயல்பட்டதைச் சுட்டிக் காட்டினர். பாகிஸ்தான், சிலோன், பர்மா ஆகிய நாடுகளில் இருந்த இந்த வங்கியின் கிளைகள் மிகவும் இலாபகரமான முறையில் செயல் பட்டுக் கொண்டிருந்தன. இந்த வங்கி பாகிஸ்தானில் 28 கிளை

களையும் 55 துணை அலுவலகங்களையும் அமைத்திருந்தது. பர்மாவில், ஆறு கிளைகளும் ஒரு துணை அலுவலகமும் இருந்தன. சிலோனில் ஒரு கிளை இருந்தது. இந்த மூன்று நாடுகளோடும் இந்தியாவிற்கு இருக்கின்ற வாணிபத் தொடர்புகள் திறமையாக நடைபெற இம்பீரியல் வங்கி தேவையென வாதிட்டனர்.

1949ஆம் ஆண்டில் கிராம வங்கி விசாரணைக் குழு (Rural Banking Enquiry Committee), இம்பீரியல் வங்கி எங்கெல்லாம் அரசின் கருவூலங்கள் பணப்பணியை மேற்கொள்கின்றனவோ அங்கெல்லாம் இம்பீரியல் வங்கி 270 கிளைகளைத் தொடங்க வேண்டுமென்று பரிந்துரைத்தது. இம்பீரியல் வங்கியின் அமைப்பு முறையில் பொதுநல, தேசிய இயல்பை இணைக்கின்ற முறையில் மாற்றி அமைக்கவேண்டுமென்றும் விசாரணைக் குழு கருதியது.

1951 ஆகஸ்டில் நிறுவப்பெற்ற அகில இந்தியக் கிராமக் கடன் விசாரணைக் குழு, அதனுடைய அறிக்கையை 1954 டிசம்பரில் அளித்தது. இக் குழு, இம்பீரியல் வங்கி பின்பற்றிய கொள்கையைக் கடுமையாகக் கண்டித்தது. இம்பீரியல் வங்கி, 1951 ஜூலை முதல் ஐந்து ஆண்டுக் காலத்தில் 114 புதிய கிளை களைத் தொடங்குவதற்குத் திட்டமிட்டிருந்தது. இது கிராம வங்கி விசாரணைக்குழுவின் பரிந்துரையில் பாதியாக இருப் பதனைச் சுட்டிக் காட்டுகின்றது. கிராமப்புறங்களும், நகரமாக மாறிக்கொண்டிருக்கும் கிராமங்களும் வளர்ச்சி பெறப் பல கிளை களைத் தொடங்க வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறியது. கிராமக் கடன் விசாரணைக்குழுவின் ஆய்வின்படி உழவர்கள் தங்களுக்குத் தேவையான கடனில் 96 சதவீதத்தை லேவா தேவிக்காரர்கள், வணிகர்கள், நிலக்கிழார்கள் ஆகியவர்களிட மிருந்தே பெறுகின்றனர். ஆதலால், உழவர்களை இவர் களுடைய பிடியிலிருந்து மீட்பது அவசியமென்று கருதப்பெற்றது. நாட்டு உணர்வோடு கிராமக் கடன், கூட்டுறவு வளர்ச்சி ஆகிய வற்றில் ஈடுபடக்கூடிய வங்கி வேண்டுமென்ற கருத்து மேலோங்கி நின்றது. இதற்காக, அரசு முன்பே நேரடியாகவோ மறைமுக மாகவோ தொடர்புகொண்டிருக்கின்ற எல்லா வங்கிகளையும் இணைத்து, இந்திய ஸ்டேட் வங்கியை உருவாக்கவேண்டுமென்று இக் குழுக் கருதியது.

கிராமக் கடன் விசாரணைக் குழு இம்பீரியல் வங்கியை அதன் பங்குமுதலைக் கூட்டியும், மற்றைய அரசு பங்கு கொண்டிருந்த நிறுவனங்களோடு இணைத்தும் விரிவடையச் செய்ய வேண்டு

மென்று பரிந்துரைத்தது. ஆனால், இம்பீரியல் வங்கி முழுமையாக அரசுக்கே சொந்தமானதாகவும், அரசின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கக்கூடியதாகவும் இருக்கவேண்டுமென்று எந்த இடத்திலும் கூறவில்லை.

கிராம வங்கி விசாரணைக் குழுவும், இம்பீரியல் வங்கியின் குறைகளைச் சுட்டிக்காட்டி, அவற்றைப் போக்கும் வழிமுறைகளைக் கூறியதே தவிர, அதனை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று கூறவில்லை.

இந்திய அரசு கிராமக் கடன் விசாரணைக் குழுவின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டது. 1955 ஏப்ரிலில், இந்திய ஸ்டேட் வங்கி மசோதா (State Bank of India Bill) பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பெற்றது. மே மாதம் எட்டாம் தேதி இந்தச் சட்டத்திற்கு இந்தியக் குடியரசு தலைவரின் ஒப்புதல் கிடைத்தது.

முதல்: ஸ்டேட் வங்கியின் ஏற்றுக்கொள்ளப்பெற்ற முதல் 20 கோடி ரூபாவாகும். வங்கி வெளியிட்ட முதல் 5.62 கோடி ரூபா. இது ரிசர்வ் வங்கிக்கு ஒதுக்கப்பெற்றது. ஸ்டேட் வங்கியில் ஏற்றுக்கொள்ளப்பெற்ற 20 கோடி ரூபா முதலும் நூறு ரூபா மதிப்புள்ள இரண்டு இலட்சம் முழுவதும் செலுத்தப்பெற்ற பங்குகளாகப் பகுக்கப்பெற்றது. இம்பீரியல் வங்கியின் பங்குதாரர்களுக்குப் பங்குக்கு 1765.62 ரூபா வீதம் முழுவதும் செலுத்தப்பெற்ற பங்குகளுக்குப் பணம் வழங்கினர். பகுதி செலுத்தப்பெற்ற பங்குகளுக்கு இந்தத் தொகையில் 25 சதவீதம் அளித்தனர். இழப்பீட்டுத் தொகையில் பத்தாயிரம் ரூபா வரை ரொக்கமாகக் கொடுக்கப்பெற்றது. அதற்குமேல் 1965ஆம் ஆண்டில் திரும்பச் செலுத்தக்கூடிய $3\frac{1}{2}$ சதவீதம் வட்டி கொண்ட இந்திய அரசின் கடன்பத்திரங்களாகக் கொடுத்தனர் பங்குதாரர்கள் அவர்களுடைய விருப்பம்போல் இழப்பீட்டுத் தொகையைப் பெறவோ, ஸ்டேட் வங்கியில் பங்குகள் பெறவோ முடிவு செய்துகொள்ள வாய்ப்பளிக்கப்பெற்றது.

ஒருவர் தனியாகவோ கூட்டாகவோ 200 பங்குகளுக்குமேல் வைத்திருக்கக்கூடாது. இந்த வரையறைக்கு ரிசர்வ் வங்கி, கூட்டுறவு நிறுவனம், ஆயுள் காப்பீட்டு நிறுவனம், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கு விதிவிலக்கு வழங்கப்பெற்றது. மத்திய இயக்குநர் குழு வெளியிட்ட மூலதனத்தின் அளவைக் கூட்டலாம். ஆனால், எந்த நிலையிலும் மொத்தத்தில் ரிசர்வ் வங்கியின் கையில் இருக்கும் பங்குகளின் மதிப்பு 55 சதவீதத்

திற்குக் குறையாமல் இருக்கவேண்டும். ஆனால், 12.5 கோடி ரூபாவுக்குமேல் ஸ்டேட் வங்கியின் முதலைக் கூட்டுகின்ற பொழுது இந்திய அரசின் அனுமதி பெறவேண்டும்.

## நிருவாகம்

ஸ்டேட் வங்கியின் நிருவாகம் மத்திய இயக்குநர் குழுவிடம் (Central Board of Directors) இருக்கின்றது. மத்திய அரசு இக் குழுவின் தலைவரையும் துணைத் தலைவரையும் ரிசர்வ் வங்கியின் ஆலோசனையைக் கேட்டு நியமிக்கின்றது. மத்திய அரசின் ஒப்புதலோடு மத்தியக் குழு இரண்டு நிருவாக இயக்குநர் களை (Managing Directors) நியமிக்கலாம். பங்குதாரர்கள் 6 இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். மத்திய அரசு எல்லாப் பகுதிகளுக்கும் நிருவாகத்தில் பங்கு தருகின்ற முறையில், ரிசர்வ் வங்கியின் ஆலோசனையைக் கேட்டு எட்டு இயக்குநர் களை நியமிக்கலாம். மத்திய அரசு ஓர் இயக்குநரையும், ரிசர்வ் வங்கி ஓர் இயக்குநரையும் நியமிக்கின்றன.

இயக்குநர் குழுவின் தலைவர், துணைத் தலைவர், நிருவாக இயக்குநர்கள் ஆகியோர்களின் பதவிக் காலம் ஐந்து ஆண்டு களுக்குமேல் போகக்கூடாது. இவர்களைப் பதவியில் நியமிக் கின்றபொழுதே மத்திய அரசு, பதவிக் காலத்தையும் குறிப்பிடும். பதவிக்காலம் முடிந்த பின்னர் ஒருவரை மறுபடியும் நியமிக்கும். பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற இயக்குநர்களும், பல வட்டாரங்களின் பொருளாதார நலனைக் காக்க மத்திய அரசால் நியமிக்கப்பெற்ற இயக்குநர்களும் நான்கு ஆண்டு களுக்குப் பதவியில் இருப்பார்கள். மற்றைய இயக்குநர்கள் அவர்களை நியமித்தவர்கள் அனுமதிக்கின்றவரை இயக்குநர் களாக இருப்பார்கள்.

ஸ்டேட் வங்கியின் தலைமை அலுவலகம் பம்பாயில் இருக்கின்றது. பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங் களில் உள்ளூர்த் தலைமை அலுவலகங்கள் இருக்கின்றன. இம்பீரியல் வங்கியிடமிருந்து எடுத்துக்கொண்ட எல்லாக் கிளைகளையும் இது ஏற்று நடத்தவேண்டும். இது தவிர, நாட்டுடைமையாக்கப்பெற்ற ஐந்தாண்டுக் காலத்தில் ஸ்டேட் வங்கி, ரிசர்வ் வங்கியின் ஆலோசனையின்படி மத்திய அரசு திட்டிக் கொடுக்கின்ற திட்டப்படி 400 கிளைகளைத் தொடங்க வேண்டும். வெளிநாடுகளிலும் கிளைகளை அமைக்க ஸ்டேட் வங்கிக்கு அனுமதி அளித்திருக்கின்றனர்.

## பணிகள்

ஸ்டேட் வங்கியைச் சில பணிகளைச் செய்ய அனுமதிக்கின்றனர். ரிசர்வ் வங்கிக்கு எங்கெல்லாம் கிளைகள் இல்லையோ, அங்கெல்லாம் ஸ்டேட் வங்கி, ரிசர்வ் வங்கியின் சார்பாளராகப் பணியாற்றுகின்றது; ஈட்டின்மீது முன்பணமோ கடனோ வழங்குகின்றது. ஸ்டேட் வங்கி எத்தகைய பத்திரங்களின்மீது கடன் கொடுக்கலாமென்பதைச் சட்டம் வரையறுத்திருக்கின்றது. இது அசைகின்ற, அசையாத எல்லாவகையான சொத்துகளையும் வாங்கி விற்கலாம். தனது பணத்தைச் சில குறிப்பிட்ட பத்திரங்களில் முதலீடு செய்யலாம். தங்கத்தை வாங்கலாம்; விற்கலாம். வைப்புகளைப் பெற்றுக் கணக்கு வைத்துக்கொள்ளலாம். மாற்று உண்டியல்களை வரையலாம்; ஏற்றுக்கொள்ளலாம்; கழிவு செய்யலாம்; விற்கலாம். பேற்றுரிமைச் சீட்டுகளை (Demand drafts) வழங்குதல், தந்தி மூலமாகவோ வேறு வழிகளிலோ ஓரிடத்திலிருந்து மற்றைய இடங்களுக்குப் பணத்தை அனுப்பலாம். எத்தகைய பணிகளை ஸ்டேட் வங்கி மேற்கொள்ளக் கூடாதென்பதையும் சட்டம் வரையறுத்திருக்கின்றது.

சட்டப்படி ஸ்டேட் வங்கி 'இணைப்பு, வளர்ச்சி நிதி' (Integration and Development Fund) ஒன்றை ஏற்படுத்த வேண்டும். இந்த நிதியை ரிசர்வ் வங்கியின் கையிலிருக்கும் பங்குகளுக்குக் கிடைக்கின்ற வருவாயிலிருந்தும், ரிசர்வ் வங்கி அல்லது மத்திய அரசு அவ்வப்போது கொடுக்கின்ற பணத்திலிருந்தும் உருவாக்குகின்றனர். புதிய கிளைகளைத் தொடங்குவதால் ஏற்படக்கூடிய இழப்பையும், ரிசர்வ் வங்கியின் ஆலோசனையின் பேரில் மத்திய அரசு ஏற்றுக்கொள்கின்ற செலவையும் இந்த நிதியிலிருந்து எடுத்துக்கொள்ளலாம்.

## சட்டங்கள்

1957ஆம் ஆண்டில் நாட்டின் தொழில்வளர்ச்சிக்கு உதவும் வகையில், தொழில்களுக்கு இடைக்காலக் கடன் கொடுக்கத் தக்க வகையில் 1955ஆம் ஆண்டின் இந்திய ஸ்டேட் வங்கிச் சட்டத்தைத் (The State Bank of India Act) திருத்தினர். முன்னைய சட்டப்படி ஆறு மாதங்களுக்குமேல் ஸ்டேட் வங்கி கடன் கொடுக்க இயலாது. புதிய திருத்தத்தின்படி சில தொழில்களுக்கு ஸ்டேட் வங்கி ஏழு ஆண்டுக் காலம்வரை கடன் கொடுக்கலாம். அதோடுகூட, வேறு நிதி நிறுவனங்களின்

பங்குகளையும், கடன் பத்திரங்களையும் மத்தியக் குழுவின் கருத்துப்படி பெற்று வைத்திருக்கலாம். வீடு கட்டுகின்ற திட்டத்திற்கு நிதியளிப்பதைச் செயல்படுத்த மத்திய மாநில அரசுகளின் சார்பாளராகச் செயல்படலாம். தவணை முறைகளில் வாங்குவதற்கு நிதி வழங்குகின்ற நிறுவனங்களுக்கு நிதி வழங்கச் சட்டத்திருத்தம் வழிவகுத்தது. சட்டத்திருத்தத்தின் மூலம் தொழில்வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க அளவில் நிதி வழங்கும் நிறுவனமாக ஸ்டேட் வங்கி மாறியது.

1959ஆம் ஆண்டில் மறுபடியும் இந்திய ஸ்டேட் வங்கிச் சட்டம் திருத்தப்பெற்றது. ஏதாவது ஒரு வங்கி நிறுவனம் நடைபெறாமல்போகும் நிலையில், அதனை ஸ்டேட் வங்கி ஏற்று நடத்த முதல் சட்டத்திலேயே வழி இருந்தது. ஆனால், அதற்குப் பின்பற்றவேண்டிய வழிமுறைகள் அதிக காலதாமதத்தை ஏற்படுத்தக்கூடியனவாக இருந்தன. புதிய சட்டத் திருத்தம் உடனடியாக அத்தகைய நிதி நிறுவனத்தை ஏற்றுக்கொள்ள வழிவகுத்திருந்தது.

1959ஆம் ஆண்டில் 'ஸ்டேட் வங்கி (துணை வங்கிகள்) சட்டம்' [State Bank (Subsidiary Banks) Act] நிறைவேற்றப் பட்டது. 1955-ல் இம்பீரியல் வங்கியை நாட்டுடைமையாக்கி, ஸ்டேட் வங்கியை உருவாக்கியபொழுது, அரசு தொடர்பு கொண்டிருந்த சில சிறிய பெரிய வாணிப வங்கிகளை, ஸ்டேட் வங்கியோடு இணைக்க முடிவு செய்திருந்தனர். இந்த இணைப்புப் பணி முழுமையடையவில்லை. அவற்றை எல்லாம் ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளாக மாற்றியிருந்தனர். புதிய சட்டத் திற்கும் மாநில அரசுகளுக்கும் ஸ்டேட் வங்கிக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தைச் செயல்படுத்த வழிவகுத்தது. சட்டத் திருத்தம் துணை வங்கிகள் பின்பற்ற வேண்டிய அமைப்பு முறையையும், அவை மேற்கொள்ள வேண்டிய பணிகளையும் விளக்கியது.

1964ஆம் ஆண்டில் கான்பூர், அகமதாபாத், ஐதராபாத், ஆகிய மூன்று இடங்களிலும் உள்ளூர்த் தலைமை அலுவலகங்களை அமைக்க வழிவகுக்கும் வகையில் இந்திய ஸ்டேட் வங்கியின் சட்டத்தை இருமுறை திருத்தினார்கள். மத்திய இயக்குநர் குழுவின் அமைப்பு முறையிலும் சில தேவையான மாறுதல்கள் செய்யப்பெற்றன.

## செயல்முறை

ஸ்டேட் வங்கி குறிப்பிடத்தக்க வகையில் தனது பணிகளை விரிவடையச் செய்துகொண்டிருக்கின்றது. 1964ஆம் ஆண்டில் ஸ்டேட் வங்கி, 373·4 கோடி ரூபா கடனளித்திருந்தது. 1965ஆம் ஆண்டின் இறுதியில் ஸ்டேட் வங்கி வழங்கிய கடன் அளவு 474·4 கோடியாக உயர்ந்தது. இது முந்திய ஆண்டின் கடனளவைவிட 27 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இதனுடைய வைப்புகளின் அளவும் கூடிக்கொண்டிருக்கின்றது. 1965 ஆகஸ்டு 27-ல் ஸ்டேட் வங்கியில் 697·6 கோடி ரூபா வைப்புகள் இருந்தன.

ஸ்டேட் வங்கி நாட்டுப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் வைப்புகளைப் பெருக்கப் பல்வேறு வகையான முறைகளைப் பின்பற்றுகின்றன. ஆண்டு வைப்புத் தனி வசதித் திட்டம் (Annuity Deposit Special Facility Scheme), பரிசுத் திட்டம் (Gift Scheme) போன்றவற்றின் மூலம் வாடிக்கையாளர்கள் மிகுதியாக வைப்புகளை ஸ்டேட் வங்கியில் வைத்திருக்க வழிசெய்துள்ளனர்.

ஸ்டேட் வங்கி ரிசர்வ் வங்கியிடம் கடன் பெறுகின்றது. இதனுடைய முதலீட்டின் அளவு ஆண்டுதோறும் கூடிவருகின்றது.

ஸ்டேட் வங்கியின் பணிகளில் மிகவும் முக்கியமானது, அது மிகுதியாகக் கிராமக்கடன் வழங்குவதாகும். இந்திய வேளாண்மையின் வளர்ச்சிக்குக் கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் கடன் தருகின்றது. அரசின் பத்திரங்களின்மீது குறைந்த வட்டியில் கடன் கொடுக்கின்றது. மாநிலக் கூட்டுறவு வங்கி மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு எந்தவிதமான கட்டணமும் இன்றி ஸ்டேட் வங்கியின் கிளைகளின் மூலமாகப் பணத்தை அனுப்பலாம். ஸ்டேட் வங்கியும் கூட்டுறவு வங்கிகளும் எந்த வகையான போட்டியுணர்வுமின்றி இணைந்து செயல்படுவது குறிப்பிடத்தக்கதாகும். கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஸ்டேட் வங்கி அளிக்கின்ற கடன் ஆண்டுதோறும் கூடிவருகின்றது.

1956 முதல் ஸ்டேட் வங்கி சிறு தொழில்களின் வளர்ச்சிக்குக் கடன் தந்து உதவி வருகின்றது. முதலில் 9 குறிப்பிட்ட இடங்களில் மட்டும் இந்தக் கடன் வசதியை ஏற்படுத்தினர். இப்பொழுது பெரும்பாலும் எல்லா இடங்களுக்கும் சிறுதொழில் கடன் விரிவாக்கம் பெற்றிருக்கின்றது. சிறிய அளவு கடனுக்குரிய விண்ணப்பங்களைத் தொழில் இயக்குநர் (Director of Industries) பெறுகின்றார். நடைமுறை முதலுக்கு வேண்டிய

கடன் கூட்டுறவு நிறுவனங்களின் மூலமாக வழங்கப்பெறுகின்றது. இடைக்கால, நீண்டகாலக் கடன்களை மாநில நிதிக் கழகங்கள் (State Financial Corporations) அளித்துக்கொண்டிருக்கின்றன.

பயணிகளின் போக்குவரத்திற்கு உதவ 'ரூபா பயணிகள் காசோலைகளை' (Rupee Travellers' Cheques) ஸ்டேட் வங்கி விற்பனை செய்கின்றது. இதனுடைய முக்கியமான கிளைகளில் எல்லாம் அந்தக் காசோலைகள் கிடைக்கின்றன. வெளிநாடுகளிலும்கூட ஸ்டேட் வங்கியின் காசோலைகள் விற்கப்பெறுகின்றன.

ஸ்டேட் வங்கி 'கிளைகள் விரிவாக்கத் திட்டம்' (Branch Expansion Programme) வகுத்துக்கொண்டு அதன்படி செயல் பட்டுக் கொண்டிருக்கின்றது. குறிப்பிட்ட காலத்தில் இவ்வளவு கிளைகளை இங்கெல்லாம் அமைக்கவேண்டுமென்ற செயல் திட்டத்தோடு கடந்த காலத்தில் செயல்பட்டதால் நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் ஸ்டேட் வங்கியின் கிளைகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருக்கின்றன. ஸ்டேட் வங்கிக்குக் கிளைகள் இல்லாத வட்டாரம் எதுவும் இல்லையென்று கூறுகின்ற அளவிற்கு ஸ்டேட் வங்கியின் கிளைகள் பரந்து, விரிந்து வளர்ந்துள்ளன.

இந்திய ஸ்டேட் வங்கி முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக் காலத்தில் நிறுவப்பெற்றது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் முதல் தொடர்ந்து வந்த திட்டங்களை எல்லாம் செயல் படுத்துவதில் இது ரிசர்வ் வங்கிக்குப் பெருந்துணையாக இருந்து வருகின்றது. அரசின் கொள்கைகளைச் செயல்படுத்துவதில் முன்னணியில் நிற்கின்ற ஸ்டேட் வங்கி, வாணிப நடவடிக்கைகளை மேற்கொள்வதில் எந்த வங்கிக்கும் பின்தங்கி நிற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப விரிவாக்கம் பெற்றுக் கொண்டிருக்கின்ற ஸ்டேட் வங்கி மேலும் வளர்ச்சி பெற்று, நாட்டின் விரைந்த பொருளாதார முன்னேற்றத்திற்குத் துணை செய்யும் என்று எதிர்பார்க்கலாம்.

## துணை வங்கிகள்

*1959*ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் இந்திய ஸ்டேட் வங்கிச் (துணை வங்கிகள்) சட்டங்கள் [The State Bank of India (Subsidiary Banks) Acts 1959] நிறைவேற்றப்பெற்றன.

இவற்றின்படி அரசின் அல்லது அரசு பெருமளவில் பங்கு பெறுகின்ற வங்கிகளை இந்திய ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளாக அமைத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

இப்பொழுது இந்த முறையில் கீழ்க்காணும் ஏழு வங்கிகள் உள்ளன :

1. பிகானீர், ஜெய்ப்பூர் ஸ்டேட் வங்கி
   (The State Bank of Bikaner and Jaipur)
2. ஐதராபாத் ஸ்டேட் வங்கி
   (The State Bank of Hyderabad)
3. இந்தூர் ஸ்டேட் வங்கி
   (The State Bank of Indore)
4. மைசூர் ஸ்டேட் வங்கி
   (The State Bank of Mysore)
5. பாட்டியாலா ஸ்டேட் வங்கி
   (The State Bank of Patiala)
6. சௌராஷ்டிரா ஸ்டேட் வங்கி
   (The State Bank of Saurashtra)
7. திருவாங்கூர் ஸ்டேட் வங்கி
   (The State Bank of Travancore)

இந்தத் துணை வங்கிகளின் மூலதனத்தில் 55 சதவீதத்திற்குக் குறையாமல் இந்திய ஸ்டேட் வங்கி முதலீடு செய்திருக்கின்றது.

31-12-1969-ல் துணை வங்கிகளின் பணிகளும் நிலையும் எப்படி இருந்ததென்பதைக் பின்காணும் அட்டவணையின் மூலம் தெரிந்துகொள்ளலாம் :

| எண் | பெயர் | அலுவலகங்களின் எண்ணிக்கை | மொத்த வைப்புகள் (கோடி ரூபாயில்) | கடன் (கோடி ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1. | பிகானிர் ஜெய்ப்பூர் ஸ்டேட் வங்கி | 242 | 55 | 57 |
| 2. | ஐதராபாத் ஸ்டேட் வங்கி | 182 | 51 | 48 |
| 3. | இந்தூர் ஸ்டேட் வங்கி | 57 | 24 | 17 |
| 4. | மைசூர் ஸ்டேட் வங்கி | 125 | 45 | 38 |
| 5. | பாட்டியாலா ஸ்டேட் வங்கி | 94 | 39 | 36 |
| 6. | சௌராஷ்டிரா ஸ்டேட் வங்கி | 94 | 33 | 30 |
| 7. | திருவாங்கூர் ஸ்டேட் வங்கி | 153 | 48 | 41 |
| | | 947 | 295 | 267 |

துணை வங்கிகள் நாட்டுப்புறங்களில் கிளைகளைத் தொடங்குவதிலும் சிறு தொழில்களுக்கும் வேளாண்மைக்கும் கடன் கொடுப்பதிலும் ஆர்வத்தோடு ஈடுபடுகின்றன.

## துணை நூல்கள்


1. S. G Panandikar, 'Banking in India', Chap. 10.
2. S. R. K. Rao, 'The Indian Money Market', Chap. 3.
3. S. K. Basu, 'A Survey of Contemporary Banking Trends', Part II Chap. 5.
4. 'Reserve Bank, Trends and Progress of Banking in India'.
5. 'State Bank of India Act, 1955'.

# 12. பொருளாதார வளர்ச்சியும் சிறப்பு வங்கிகளும்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எல்லாவகையான வங்கிகளும் துணை செய்கின்றன. இருந்தாலும், மரபுவழியில் பணியாற்றுகின்ற வங்கிகளால் சிலவகையான பொருளாதாரப் பணிகளுக்குத் தேவையான அளவிலும், முறையிலும் கடன் கொடுக்க இயல்வதில்லை. இந்தக் குறையை நிறைவு செய்யும் வகையில் தற்காலத்தில் வளர்ச்சி வங்கிகள் (Development Banks) எனப்பெறும் தனிவகைச் சிறப்புப் பணிகளைச் செய்யும் வங்கிகள் தோன்றி வளர்ந்து வருகின்றன. இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு பல நாடுகளில் இத்தகைய வங்கிகள் தோன்றிக் குறிப்பிடத் தக்க முறையில் பணியாற்றி வருகின்றன. நமது நாட்டிலும் வளர்ச்சி வங்கிமுறை வளர்ந்திருக்கின்றது.

வளர்ச்சி வங்கி: குறிப்பாகத் தனியார் துறைக்கும், தேவை யானால் பொதுத்துறைக்கும் வளர்ச்சிக்கு வேண்டிய மூலதனத் தைக் கடனாகக் கொடுத்துதவ வளர்ச்சி வங்கிகள் அமைக்கப் பெறுகின்றன. இவை பெரும்பாலும் நீண்டகால, இடைக்கால (Medium) கடன்களை வழங்குகின்றன. இந்த அமைப்புகளின் தனிச்சிறப்பு இவை தொழில்களின் வளர்ச்சிக்கான தொடர் புடைய எல்லாப் பணிகளிலும் ஈடுபடுவதில் அடங்கியிருக் கின்றது.

எத்தகைய தொழில்களை எங்குத் தொடங்கலாம், எவ்வளவு முதலீடு செய்யலாம் என்பது போன்ற தொழில்முயற்சிகளைத் தூண்டக்கூடிய அறிக்கைகளை வெளியிடுகின்றன. புதிய தொழில்களைத் தொடங்குகின்றவர்களுக்கு தொழில்நுணுக்க அறிவுரைகளை வழங்கியும், நிருவாகம் செம்மையாக நடைபெற வேண்டிய பணிகளைச் செய்தும் நாட்டில் தொழில்கள் வளரவும் பெருகவும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்றன.

நமது நாட்டில் 1948ஆம் ஆண்டிற்குப் பிறகு பல வளர்ச்சி வங்கி அமைப்புகள் உருவாகி, வெவ்வேறு துறைகளில்

திட்டவட்டமான நோக்கங்களோடு செயல்பட்டு வருகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கவற்றைப்பற்றித் தனித்தனியாக இங்குத் தெரிந்துகொள்ளலாம்.

## I. இந்தியத் தொழில்நிதிக் கழகம்

[The Industrial Finance Corporation of India (IFCI)]

இந்தியத் தொழில்நிதிக் கழகம் (IFCI) நாடாளுமன்றத்தின் சட்டப்படி 1948-ல் நிறுவப்பெற்றது. இதனுடைய பங்கு மூலதனத்தில் (Share Capital) 50 சதவீதத்தை இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி (Industrial Development Bank of India) வழங்கியுள்ளது. இதனால் இந்தியத் தொழில்நிதிக் கழகம் இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கியின் துணை நிறுவனம் போலச் செயல்படுகின்றது.

இந்தியத் தொழில்நிதிக் கழகத்தை நமது நாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு வேண்டிய இடைக்கால, நீண்டகாலக் கடன்களை வழங்கும் நிறுவனமாகச் செயல்படும் நோக்கத்தில் அமைத்தனர். இது தொடக்கத்தில் தனியார் துறையிலுள்ள வரையறுக்கப்பெற்ற பொறுப்புள்ள பொது நிறுவனங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன் வழங்கியது. இப்பொழுது பொதுத்துறை நிறுவனங்களுக்கும் கடன் தருகின்றது.

தொழில் நிறுவனங்களுக்குக் கடனுதவி செய்வதோடுகூட, அவற்றின் அலுவலர்களுக்குத் தற்கால புதிய நிருவாக முறைகளில் பயிற்சியளிக்கின்றது.

இந்த நிறுவனம் இது தொடங்கப்பட்ட 1948ஆம் ஆண்டு முதல் 1974ஆம் ஆண்டு மார்ச்சு 31ஆம் நாள் வரை 468.20 கோடி ரூபா கடன்கள் அனுமதித்திருக்கின்றது. இதில் 393.75 கோடி ரூபா தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. 1981-82-ல் இது வழங்கிய கடன் ரூ. 169 கோடியாகும்.

குறிப்பாகச் சர்க்கரை, துணி, சணல், இரசாயனம், காகிதம், இரப்பர் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற தொழில் நிறுவனங்களே மிகுதியாகக் கடன் பெற்றிருக்கின்றன.

## II. இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி

**(The Industrial Development Bank of India)**

1964ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியை (I. D. B. I.) நிறுவினார்கள். இது முழுக்க முழுக்க இந்திய ரிசர்வ் வங்கிக்குச் சொந்தமான, அதன் துணை வங்கியாகும்.

இந்த நிறுவனம் தொழில்வளர்ச்சிக்கு வேண்டிய கடனுதவி அளிக்கின்றது. தொழில்வளர்ச்சியோடு தொடர்புடைய வேறு உதவிகளையும் செய்கின்றது. வங்கிகள் உட்பட மற்றைய நிதி நிறுவனங்களின் பணிகளை இணைக்கின்றது. முக்கியமான தொழில்களின் வளர்ச்சிக்குத் திட்டமிடத் துணை செய்கின்றது. எதிர்காலத் தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் முதன்மையாகச் செய்ய வேண்டிய பணிகளைக் கவனிக்கின்றது. மொத்தத்தில் வளர்ச்சி வங்கிகளின் மேல்நிலை வங்கிபோலச் செயல்படுகின்றது.

இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கியை நிருவகித்து வழி காட்டுகின்ற பொறுப்பை இந்திய ரிசர்வ் வங்கி ஏற்றுக் கொண்டிருக்கின்றது. பொதுவாக மற்றைய வங்கிகள் கடன் கொடுக்காத தொழில் திட்டங்களுக்காக மத்திய அரசின் அனுமதியோடு கடன்தர 1965-ல் 'வளர்ச்சி உதவி நிதி' (Development Assistance Fund) ஒன்றை உருவாக்கியுள்ளார்கள்.

இந்த நிறுவனத்தின் ஒப்புக்கொள்ளப்பெற்ற மூலதனம் 50 கோடி ரூபா. மத்திய அரசின் ஒப்புதலோடு மூலதனத்தை ரூ. 100 கோடியாகக் கூட்டலாம். இதனுடைய மூலதனத்தை முழுக்க இந்திய ரிசர்வ் வங்கியே கொடுத்திருக்கின்றது. இது தவிர, தேவையை ஒட்டி மத்திய அரசிடம் கடன் பெற்றுக் கொள்ளலாம்.

இது 1964-ல் 'தொழில்கள் மறுநிதி நிறுவனத்தை' (The Refinance Corporation of Industries) தன்னோடு இணைத்துக் கொண்டது. இப்பொழுது அதனுடைய பணிகளையும் சேர்த்துக் கவனித்து வருகின்றது.

இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி 1970ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கியோடும், மற்றைய நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்போடும் ஒரு தொழில்வாய்ப்பு மதிப்பீட்டை நடத்தியது. பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் வளங் களையும், தேவை நிலைகளையும், வளர்ச்சி வாய்ப்புகளையும்

பற்றிய விரிவான புள்ளிவிவரங்களைச் சேகரித்து, எப்படிப் பட்ட தொழில்களை எங்கெங்குத் தொடங்கலாமென்பதை வெளியிட்டது. பின்தங்கிய எல்லா மாநிலங்களிலும் இத்தகைய தொழில் வாய்ப்பு மதிப்பீடு நடைபெற்றுவிட்டதென்பது குறிப்பிடத்தக்கதாகும். 1973 டிசம்பர் வரை செயல்படுத்தக் கூடிய 336 திட்டங்களைப் பரிந்துரைத்துள்ளார்கள்.

இந்த நிறுவனம் தொழில்களின் வளர்ச்சிக்காக நேரடியாகக் கடன் கொடுக்கின்றது; தொழில் நிறுவனங்களின் பங்குகளையும், கடன் பத்திரங்களையும் வாங்கி உதவுகின்றது. பொதுவாக நீண்டகாலக் கடன் தேவைகளையே இது கவனிக்கின்றது; ஏற்றுமதிக்காகக் கடன் தருகின்றது; பின்தங்கிய பகுதிகளில் தொழில்களை வளர்ப்பதற்காகச் சலுகை முறைகளில் கடன் தருகின்றது.

1974 மார்ச்சு 31 வரை இந்த நிறுவனம் 909·5 கோடி ரூபா கடன் அனுமதித்து, அதில் 672 கோடி ரூபா கடன் வழங்கி யிருக்கின்றது. 1981-82-ல் இது ரூபா 1470 கோடி அனுமதித்து 897 கோடி ரூபா வழங்கியது.

## III. மாநில நிதிக் கழகங்கள்
## (The State Financial Corporations)

1952-ல் நிறைவேற்றப்பெற்ற மாநில நிதிக் கழகச் சட்டம் மாநில அரசுகள் தங்களுடைய பகுதிகளிலுள்ள நடுத்தர, சிறு தொழில்களின் நிதித் தேவையை நிறைவு செய்யத் தனி நிறுவனங்கள் அமைக்க வழிவகுத்துக் கொடுத்தது. எல்லா மாநிலங்களிலும் மாநில நிதிக் கழகம் (S.F.C.) இருக்கின்றது. தமிழ்நாட்டில் இந்த நிறுவனம் 'தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்' (Tamil Nadu Industrial Investment Corporation) என்னும் பெயரில் நிறுவப்பெற்றுள்ளது. நமது நாட்டில் மொத்தம் பதினெட்டு மாநில நிதி நிறுவனங்கள் உள்ளன.

மாநில நிதிக் கழகங்கள் தங்களுக்கு வேண்டிய நிதியைப் பல வழிகளில் பெறுகின்றன. பங்குகளைக் கொடுத்துப் பெற்ற மூலதனமும், கொடுத்த கடன்களில் வசூலானதும், கடன் பத்திரங்களை விற்றுப் பெற்றதும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய ரிசர்வ் வங்கி ஆகியவை அளித்துள்ள கடனும் சேர்ந்து மாநில நிதிக் கழகங்களுக்கு வேண்டிய அளவில் நிதியாகக் கிடைக்கின்றது.

நடுத்தர, சிறிய தொழில் நிறுவனங்களுக்கு நேரடியாகக் கடன் கொடுத்தும், அவற்றின் பங்குகள், கடன் பத்திரங்களைப் பெற்றும், இந்தியாவிற்குள் எந்திரங்கள் போன்ற மூலதனப் பொருள்களை வாங்கத் துணை செய்தும் சிறு தொழில்கள் வளர இவை பணிசெய்கின்றன.

1972–73ஆம் ஆண்டில் 77·8 கோடி ரூபாவும், 1973–74ஆம் ஆண்டில் 99·7 கோடி ரூபாவும், 1981–82-ல் 315 கோடி ரூபாவும் மாநில நிதிக் கழகங்கள் கடன் வழங்கியுள்ளன. 1974 மார்ச்சு 31-ல் மாநில நிதிக் கழகங்கள் வசூல் செய்யவேண்டிய கடன் 21·52 கோடி ரூபா. கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவதில் ஏற்படுகின்ற காலதாமதம் இவற்றின் முன்னேற்றத்தைப் பாதிக்கின்றது.

1972-ல் மாநில நிதிக் கழகங்களின் சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்து, மாநில அரசிடமிருந்தும் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்தும் தனிவகைப் பங்குகளை வெளியிட்டு நிதி திரட்ட மாநில நிதிக் கழகங்களுக்கு வாய்ப்பளித்திருக்கின்றனர். இப்படிக் கிடைக்கின்ற மூலதனத்தை ரிசர்வ் வங்கியும் மாநில அரசுகளும் குறிப்பிடுகின்ற வகையில்தான் பயன்படுத்த வேண்டும்.

பன்னாட்டு வளர்ச்சி மன்றம் (The International Development Association) சிறு, நடுத்தரத் தொழில்களின் அன்னியச் செலாவணித் தேவைக்காக 2·5 கோடி டாலர் கடன் கொடுத்திருக்கின்றது. இந்தப் பணத்தின் உதவியால் சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யத் தேவையான நிதியை மாநில நிதிக் கழகங்கள் வழங்குகின்றன. 1974 மார்ச்சு வரை இந்த வகையில் 129 கடன் விண்ணப்பங்களுக்கு இவை 7·39 கோடி ரூபா கடன் அளித்திருக்கின்றன.

மாநில நிதிக் கழகங்கள் பணியாற்ற நிறைய வாய்ப்புகள் உள்ளன.

## IV. இந்தியத் தொழில் கடன் முதலீட்டுக் கழகம்
### (The Industrial Credit and Investment Corporation of India)

தனியாரின் முதலீட்டைத் தூண்டுவதற்காகத் தனியார் நிறுவனமாக இந்தியத் தொழில் கடன் முதலீட்டுக் கழகத்தை

(I.C.I.C.I.) 1955ஆம் ஆண்டில் நிறுவினர். தனியார் நிறுவனங்களை அமைப்பதையும், வளர்ப்பதையும், நவீனப்படுத்துவதையும், முதலீடு செய்வதில் தனியாரை ஈடுபடுத்துவதையும், தனியார் முதலீட்டு வாய்ப்புகளைப் பெருக்குவதையும் இந்த நிறுவனம் நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றது.

இந்த நிறுவனம் தனியார் நிறுவனங்களுக்கு நேரடியாக நீண்டகால, இடைக்காலக் கடன்கள் கொடுத்தும், அவற்றின் பங்குகளையும், கடன் பத்திரங்களையும் வாங்கியும், வேறு வழிகளிலும் துணை செய்கின்றது.

1973ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் 69·02 கோடி ரூபா கடன் அனுமதித்து, அதில் 41·61 கோடி ரூபா கொடுத்திருக்கின்றது. இந்த நிறுவனம் தொடங்கிய காலத்திலிருந்து 1973 டிசம்பர் வரை 445·38 கோடி ரூபா கடன் அனுமதித்து அதில் 308·80 கோடி ரூபா கொடுத்திருக்கின்றது. 1981–82-ல் இது 307 கோடி ரூபாவை அனுமதித்து 268 கோடி ரூபா வழங்கியது.

தொழில் முதலீட்டில் தனியார்க்கு மிகுந்த வாய்ப்பை அளிக்கும் வகையில் இது பணியாற்றுகின்றது.

## V. தேசியத் தொழில்வளர்ச்சிக் கழகம்
## (The National Industrial Development Corporation)

தனியார் நிறுவனமாக ஒரு கோடி ரூபா முதலோடு 1954ஆம் ஆண்டில் தேசியத் தொழில்வளர்ச்சிக் கழகத்தை (N.I.D.C.) நிறுவினார்கள். தொழிலில் தனியார் துறையும் பொதுத்துறையும் இணைந்து வளரவேண்டுமென்ற நோக்குடன் இது செயல்படுகின்றது.

துணித் தொழிலிலும் சணல் தொழிலிலும் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு மறுவாழ்வு கொடுக்கவும், நவீனப்படுத்தவும் எந்திரத் தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்தவும் இது பணியாற்றுகின்றது. இது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொறியியல் தொடர்பான ஆலோசனைகளை வழங்குகின்றது.

இந்த நிறுவனம் பணியாற்றுவதைப்பற்றி ஆராய்ந்த குழு இதனைக் கடுமையாகக் குறை கூறியுள்ளது. கடந்த ஆண்டுகளில் இது எதற்காகத் தோன்றியதோ அந்தக் குறிக்கோளை நிறை

வேற்றவில்லை என்று கூறப்படுகின்றது. வெறும் ஆலோசனை கூறுகின்ற நிறுவனமாக இது மாறியிருப்பது சரியன்றென்று கூறுகின்றனர். சணல், பஞ்சாலைகளுக்குக் கொடுத்த கடனில் பெரும்பகுதி வசூலாகாமலிருப்பதனைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

1973 மார்ச்சு வரை இந்த நிறுவனம் 48·05 இலட்ச ரூபா அந்நியச் செலாவணி தேடியிருக்கின்றது.

## VI. தேசியச் சிறுதொழில்கள் கழகம்
### (National Small Industries Corporation)

இந்திய அரசு 1955ஆம் ஆண்டில் தேசிய சிறுதொழில்கள் கழகத்தை (N.S.I.C.) அமைத்தது. இந்த நிறுவனம் நேரடியாக சிறு தொழில்களுக்குப் பணவசதி செய்து கொடுப்பதில்லை. ஆனால், தவணை முறையில் எந்திரங்கள் வாங்க ஆவண செய்கின்றது.

மின்சக்தியைப் பயன்படுத்திக்கொண்டு 50 பேர் வேலை செய்கின்ற நிறுவனமோ, மின்சக்தியைப் பயன்படுத்தாவிட்டால் 100 பேர் வேலை செய்கின்ற நிறுவனமோ அல்லது இருபது இலட்சத்திற்குள் முதலீடு செய்திருந்தால் தேசியச் சிறு தொழில்கள் கழகத்திடமிருந்து உதவிகள் பெறலாம்.

அரசின் தேவைகளை உற்பத்திசெய்து கொடுக்கும் வாய்ப்பு களை இந்த நிறுவனம் ஒப்பந்தங்களின் மூலம் பெற்றுத் தருகின்றது. பொருளுற்பத்தியில் ஏற்படக்கூடிய தொழில் நுணுக்கச் சிக்கல்களைத் தீர்க்கத் துணை செய்கின்றது. பெரும் தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்குமிடையில் ஓர் இணைப்பை ஏற்படுத்த முயல்கின்றது.

சிறு தொழில்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய ஆவன செய்கின்றது.

ஓர் இயக்குநர் குழு தேசியச் சிறுதொழில்கள் கழகத்தை நிருவகிக்கின்றது.

## VII. வேளாண்மை மறுநிதிக் கழகம்
### (The Agricultural Refinance Corporation)

வேளாண்மை மறுநிதிக் கழகத்தை (A.R.C.) 1963ஆம் ஆண்டில் நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் அமைத்தார்கள்.

இதன் அங்கீகரிக்கப்பெற்ற மூலதனம் 25 கோடி ரூபா; செலுத்தப்பெற்ற மூலதனம் 5 கோடி ரூபா. வேளாண்மை வளர்ச்சிக்காகச் சில குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு இடைக்கால நீண்டகாலக் கடனை இந்த நிறுவனம் வழங்குகின்றது. இந்த நிறுவனத்திடமிருந்து மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மைய நில வள வங்கிகள், வணிக வங்கிகள் ஆகியவை நிதியுதவி பெறுகின்றன.

## VIII. இந்திய யூனிட் டிரஸ்ட்
## (Unit Trust of India)

சமுதாயத்திலுள்ள சிறு சேமிப்புகளை ஒன்று திரட்டவும், நடுத்தர வருவாய் பெறுகின்றவர்களுக்கு முதலீட்டு வாய்ப்பை வழங்கவும் 1964ஆம் ஆண்டில் இந்திய யூனிட் டிரஸ்டை நிறுவினார்கள். இது ஒரு பொதுத்துறை முதலீட்டு நிறுவனமாகும்.

குறைந்த வருவாயுள்ளவர்களிடமிருக்கும் சிறிய அளவு சேமிப்புகளை இந்திய யூனிட் டிரஸ்டின் (U.T.I.) பத்திரங்களில் முதலீடு செய்யலாம். பத்து ரூபாவிலிருந்து எவ்வளவு ரூபா வேண்டுமானாலும் முதலீடு செய்யலாம். இந்த நிறுவனம் இப்படித் தொகுக்கின்ற பணத்தைத் தக்க முறையில் தொழில்களில் முதலீடு செய்கின்றது.

இந்த நிறுவனத்தின் பணிகளினால் சிறிய அளவில் சேமிப்பவர்கள்கூடப் பெரிய தொழில்களில் முதலீடுசெய்து வருவாய்பெற முடிகின்றது. அதே நேரத்தில் நாட்டின் தொழில்வளர்ச்சி விரைந்து நடைபெற சிறு சேமிப்புகளைத் திரட்டிப் பெரும் முதலாகக் கொடுக்க முடிகின்றது.

1974 மார்ச்சில் இந்த நிறுவனம் 5,34,000 பேரிடம் 146 கோடி ரூபாவுக்கு யூனிட்டுகள் விற்பனை செய்திருந்தது. இவற்றில் முதலீடு செய்தவர்களுக்குச் சராசரி 8·5 சதவீதம் வருவாய் கிடைத்தது. 1977 ஜூன் வரை நிகர விற்பனை 25·70 கோடி ரூபாவாகும். இது ஈட்டிய இலாபம் 9% ஆகும். L.I.C.-யோடு இணைந்து 1977-ல் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி 3,200 உறுப்பினர்களைத் திரட்டி 2·92 கோடி ரூபா இத் திட்டத்தில் சேர்த்துள்ளது.

## IX. முன்னோடி வங்கித் திட்டம்
### (Lead Bank Scheme)

'பகுதிவாரி வங்கி முறை'யைப் (Area Banking) போல ஏற்படுத்தப்பட்டதே 'முன்னோடி வங்கித் திட்ட'மாகும். இத் திட்டத்தைப் பேராசிரியர் காட்கில் (Gadgil) என்பவரின் பரிந்துரைக்கிணங்க 1969ஆம் ஆண்டு தொடங்கினார்கள். இத் திட்டத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட ஒவ்வொரு வங்கியும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அல்லது பல்வேறு மாவட்டங் களிலும் முன்னோடி வங்கியாக அமைந்து பணியாற்றும்.

இம் முன்னோடி வங்கியின் மூன்று பணிகளை முறைப் படுத்திக் கூறலாம்:

1. எந்த மாவட்டத்தில் அந்த வங்கி முன்னோடி வங்கி யாகத் திகழ்கின்றதோ அந்த மாவட்டத்தின் பொருளாதார அமைப்பினைப் பல்வேறு அளவுகோல்களைக் கொண்டு ஆராய்வது.

2. தொழில், வேளாண்மை மற்றும் இதரப் பணிகளுக்காக இதுவரை இவ் வங்கியும், பிற வங்கிகளும் கொடுத்திருக்கின்ற கடனின் அளவைக் கணிப்பது: கொடுத்திருக்கும் கடன் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டப் போதுமான அளவில் இல்லை எனக் கருதினால், அதிக அளவு கடன்தரப் பிற வங்கி களைத் தூண்டுவதோடு தானும் அளிக்க முன்வருவது.

3. அம் மாவட்டத்திலுள்ள பிற வங்கிகளைக் கட்டுப் படுத்தி அம் மாவட்டத்திற்கெனத் தகுந்த கடன் கொள்கையை உருவாக்கிக் கொடுப்பது.

ஆரம்ப காலத்தில் இந்திய ஸ்டேட் வங்கியும் அதன் ஏழு துணை வங்கிகளும், முதல் நிலையில் நாட்டுடைமையாக்கப்பட்ட பதினான்கு வங்கிகளும், இரண்டு நாட்டுடைமையாக்கப்பெறாத வங்கிகளும் முன்னோடி வங்கிகளாக இருந்தன. 1980-ல் நாட்டுடைமையாக்கப்பட்ட ஆறு வங்கிகளும் இப்பொழுது முன்னோடி வங்கிகளாகியுள்ளன.

## X. வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி

(National Bank for Agriculture and Rural Development)

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியை 'NABARD' என்று சுருக்கமாக ஆங்கிலத்தில் கூறுகின்றோம். இதனை 1982ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 12ஆம் நாள் பாரதத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி புது தில்லியில் தொடக்கிவைத்தார்.

இதன் பெயர் சுட்டிக்காட்டுவதைப் போல இது வேளாண்மை வளர்ச்சிக்கும் கிராமப்புற வளர்ச்சிக்கும் துணை செய்கின்றது.

பரந்து விரிந்த பாரதம் பழங்காலந்தொட்டே வேளாண்மையை அடிப்படைத் தொழிலாகக் கொண்டுள்ளது. பல்வேறு நிறுவனங்கள் உழவர்களுக்குக் கடன் கொடுக்கின்றன. ஆனால், அவைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு இல்லை. பழமையான சாகுபடி முறைகளை இந்திய உழவர்கள் பின்பற்றி வருகின்றனர். இதனால் மிகுதியான பலன் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. இப்படி அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை வேளாண்மை தேசியக்குழு (National Commission on Agriculture) 1976-ல் தன் அறிக்கையில் குறிப்பிட்டதோடு தேசிய அளவில் வேளாண்மைக் கடனைக் கட்டுப்படுத்த—நெறிப்படுத்த ஒரு வலுவான அமைப்பு முறையுள்ள வங்கி தேவை எனவும் வலியுறுத்தியது. இதன் விளைவாகவே இவ் வங்கி தோன்றியது.

இவ் வங்கி தோன்று முன்பு வேளாண்மைக் கடனைக் கட்டுப்படுத்த மேல்மட்டத்தில் 'வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகம்' (Agricultural Refinance and Development Corporation) பொறுப்பேற்றிருந்தது. இக் கழகம் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒரு துணை அமைப்பாகவே செயல்பட்டு வந்தது.

நடைமுறைக்கு வந்த வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான இவ் வங்கி 'வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழக'த்தை அகற்றியதோடு இந்திய ரிசர்வ் வங்கியோடு பணியாற்றிக்கொண்டிருந்த 'வேளாண்மைக் கடன் துறை' (Agricultural Credit Department) '*ஊரகத் திட்டம் மற்றும் கட்டுப்படுத்தும் துறை*' (Rural Planning and Control Cell) ஆகியவற்றின் பணிகளையும் தான் ஏற்றுக்கொண்டது.

ஆரம்ப காலத்தில் இதன் செலுத்தப்பட்ட மூலதனம் (Paid-up Capital) ரூ. 100 கோடியாக இருந்தது. இதில் 50%-ஐ மத்திய அரசும், 50%-ஐ இந்திய ரிசர்வ் வங்கியும் அளித்தன. வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் நிதிவளமும், தேசிய வேளாண்மை நிதியும், தேசிய வேளாண்மைக் கடன் (நிலைநிறுத்தும்) நிதியும் இவ் வங்கியைச் சேர்ந்தன. கடைசியாகக் குறிப்பிட்ட இரு நிதிகளும் முறையே தேசியக் கிராமியக் கடன் (நீண்டகாலம்) தேசியக் கிராமியக் கடன் (நிலைநிறுத்தும்) நிதி எனவும் வழங்கலாயிற்று.

இது தற்போது நிலவள வங்கி, கூட்டுறவு நிதி நிறுவனங்கள், பிராந்தியக் கிராமப்புற வங்கிகள் (Regional Rural Banks) மற்றும் கிராமப்புறங்களில் பணியாற்றும் வணிக வங்கிகள் அனைத்தையும் தன்கீழ்க் கொணர்ந்து கட்டுப்படுத்தி—ஒருங்கிணைத்து வேளாண்மைக்கு வேண்டிய அளவில் கடன் கொடுத்து உதவி வருகின்றது.

# 13. வங்கிகளை நாட்டுடைமையாக்கல்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வங்கிகளின் பணி தலையாய இடத்தைப் பெறுகின்றது. வங்கிகளிடம் மிகுந்த ஆற்றல் தேங்கிக்கிடப்பதை நமது காலஞ்சென்ற பெருமதிப்பிற்குரிய தலைமையமைச்சர், பண்டித ஜவஹர்லால் நேரு, 'தொழில் முதலாளியின் ஆதிக்கக் காலம் போய்விட்டது. இன்று வங்கிக்காரர்கள்தாம் தொழில்துறை, வேளாண்மைத் துறை, இரயில்வே போக்குவரத்துத் துறைகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி வருகின்றார்கள். ஓரளவுக்கு அவர்கள் அரசு உட்பட எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி வருகின்றார்கள்' என்று எடுத்துக் கூறினார். இத்தகைய ஆற்றல்மிக்க வங்கிப் பணிகளை நெறிப்படுத்த வேண்டியதன் தேவையை எல்லா அரசுகளும் உணர்ந்து செயல்பட்டு வந்திருக்கின்றன.

## (அ) அரசின் கட்டுப்பாடு

**அரசும் வங்கிகளும்**

உலக நாடுகளில் எல்லாம் வங்கிமுறை ஒன்றுபோல் அமைய வில்லை. ஒவ்வொரு நாட்டிலும் அந்த நாட்டின் அரசியல் பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கேற்ப வங்கிமுறைகள் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. காலப்போக்கில் தங்கள் விருப்பம்போல் செயல்பட்ட வங்கிகளின் நடவடிக்கைகளில் குறைகளைக் கண்ட அரசுகள் வங்கிகளின் பணிகளை நெறிப்படுத்தத் தேவையான சட்டங்களை நிறைவேற்றி இருக்கின்றன.

வணிக வங்கிகளை முறைப்படுத்தி வழிநடத்துகின்ற பொறுப்புப் பெரும்பாலான நாடுகளில் மைய வங்கிகளிடம் இருக்கின்றது. மைய வங்கியின் கையில் இந்தப் பொறுப்பைக் கொடுத்துவிட்டு எந்த அரசும் பேசாமல் இருப்பதில்லை. தேவை யான நேரங்களில் எல்லாம் வங்கிகளைக் கட்டுப்படுத்த அரசு முயல்கின்றது. இன்றுள்ள நிலையில் எந்த நாட்டிலும் எந்த அரசாலும் பொருளாதாரத்துறையில் தலையிடாக்

கொள்கையை முழுக்கப் பின்பற்ற இயல்வதில்லை. இத்தகைய சூழ்நிலையில் வங்கிகளைக் கட்டுப்படுத்த அரசு மேற்கொள்கின்ற நடவடிக்கையைப் புதுமையானதாகக் கருத இயலாது.

வங்கித் தொழிலுக்கும் மற்றைய தொழில்களுக்கும் இடையிலுள்ள ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாட்டைச் சுட்டிக்காட்டலாம். சணல் தொழில், இரும்புத் தொழில், மரத் தொழில் போன்ற ஏதாவதொரு தொழில் பாதிக்கப்பட்டால், அதனால் நாட்டுப் பொருளாதாரத்தில் அந்தத் தொழிலோடு தொடர்புடைய பகுதி மட்டுந்தான் பாதிக்கப்படும். ஆனால், வங்கித்தொழில் நாட்டுப் பொருளாதாரத்தின் நாடி நரம்புகள் எல்லாவற்றோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றது. வங்கித் தொழிலோடு தொடர்புகொள்ளாத எந்தப் பொருளாதாரத் துறையும் இல்லையென்று கூறலாம். ஆதலால், வங்கித் தொழில் பாதிக்கப்பட்டால் நாட்டின் பல்வேறு பொருளாதாரத் துறைகளும் பாதிக்கப்படுகின்றன. இதனால் வங்கித் தொழிலை நெறிப்படுத்துவதிலும், கட்டுப்படுத்துவதிலும் அரசு, தனிக் கவனம் செலுத்துவது இன்றியமையாத தேவையாகிறது.

## வங்கிகளின் முறிவுகள்

வங்கிகள் இலாப நோக்கில் செயல்படுகின்ற நிறுவனங்களாகும். அவற்றிற்கு ரொக்கத்தன்மையைக் காப்பாற்றிக் கொண்டு வைப்பாளர்கள் கேட்கின்றபொழுது (காசோலைகளைத் தருகின்றபொழுது) பணம் தரவேண்டிய பொறுப்பு இருக்கின்றது. ஆனால், சில வங்கிகள் மிகுதியாக இலாபம் பெறவேண்டுமென்ற நோக்கில் வரம்புகடந்து கடன் கொடுத்து விடுகின்றன. இது தவிர வேறு பல காரணங்களினாலும் நடைமுறையில் வங்கிகள் அவற்றின் அடிப்படைக் கொள்கைகளைவிட்டு விலக நேரிடலாம். வங்கிகள் வங்கித் தொழிலின் அடிப்படைக் கோட்பாடுகளைவிட்டு விலகிச் செல்கின்ற பொழுது இடர்ப்பாடுகள் ஏற்பட வழியுண்டு. இத்தகைய இடர்ப்பாடுகளினால் வங்கிகள் முறிவடைவதைக் காணலாம்.

வங்கிகள் தங்களுடைய உள்ளார்ந்த குறைபாடுகளினால் முறிவடைவதைப் போன்றே நாட்டின், உலகத்தின் பொருளாதாரச் சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களாலும் முறிவடையலாம். இதற்கு எடுத்துக்காட்டாக, உலகப் பெருமந்தத்தின்போது உலகில் பல்வேறு நாடுகளிலும் எண்ணற்ற வங்கிகள் முறிவடைந்ததைச் சுட்டிக்காட்டலாம்.

பொதுவாக எந்தத் தொழிலிலும் தோல்வி ஏற்படுவது இயல்பானதே. மற்றைய தொழில்களில் ஏதாவது ஒரு தொழில் நிறுவனம் தோல்வியடையுமானால், அந்தத் தோல்வி மற்றைய நிறுவனங்களைப் பற்றிப் படரும் என்று கூற முடியாது. ஆனால், வங்கித் தொழிலின் நிலை வேறுவகையில் அமைந் திருக்கின்றது. வங்கித் தொழில் மக்களின் நம்பிக்கை என்ற அச்சாணியின்மீது இயங்குகின்றது. ஏதாவது ஒரு வங்கி வீழ்ச்சியடைந்தாலும் மக்களுக்கு வங்கிகளின் மீதிருக்கின்ற பொதுநம்பிக்கை தகர்கின்றது. இதனால் வங்கித் தொழில் முழுமையாக முடங்குகின்ற நிலை ஏற்படக்கூடும்.

எடுத்துக்காட்டாக, நமது நாட்டில் பலாய் மைய வங்கி (Palai Central Bank) தோல்வியடைந்ததைக் குறிப்பிடலாம். பெரிய வங்கிகளில் ஒன்றான பலாய் மைய வங்கி முறிந்தவுடன் அதில் மிகுதியாக வைப்புகளை வைத்திருந்த தனி மனிதர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதனைக் கண்ட பொது மக்களுக்கு வங்கித் தொழிலின்மீது பொதுவான ஐயப்பாடு தோன்றியது. பலாய் மைய வங்கியைப் போன்றுதான் சீர்கெட்ட நிதி நிலைமையோடு மற்றைய வங்கிகளும் செயல் படுகின்றனவோ என்று மக்கள் கருதினர். இதனை ஒட்டி நாடெங்கும் பலவகையான வதந்திகள் பரப்பப்பட்டன. இவற்றின் விளைவாக மற்றைய வங்கிகளுக்கும் நெருக்கடியான சூழ்நிலை உருவாயிற்று. இதிலிருந்து ஏதாவது ஒரு வங்கி முறிகின்றபொழுது அதனுடைய விளைவுகள் எப்படி வங்கித் தொழிலை முழுமையாகப் பாதிக்கின்றனவென்பதை அறிந்து கொள்ளலாம்.

வங்கிகள் வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள் நாட்டிற்கு நாடு அங்குள்ள சூழ்நிலைகளை ஒட்டி வேறுபட்டு அமைகின்றன. இத்தகைய காரணங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவதாக, நாட்டின் பொதுப் பொருளாதாரச் சூழ்நிலையில் ஏற்படுகின்ற ஏற்றத் தாழ்வுகளினால் வங்கிகள் முறிவடைவதற் கான காரணங்கள் தோன்றுகின்றன. இரண்டாவதாக, வங்கிகளின் அமைப்பு முறைகளிலுள்ள உள்ளார்ந்த குறை களினால் வங்கிகள் வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள் எழுகின்றன. மூன்றாவதாக, வேலைநிறுத்தங்கள் முதலிய எதிர்பாராத சிக்கல்களை ஒட்டிய காரணங்களினாலும் வங்கிகள் தோல்வியடைகின்றன.

நமது நாட்டில் 1947 முதல் 1950 வரை 200 வங்கிகள் வீழ்ச்சியடைந்தன. 1951 முதல் 1960 வரை 300 வங்கிகள் முறிந்திருக்கின்றன. நமது நாட்டு வங்கிகளின் முறிவிற்கு, இரண்டாம் உலகப்போருக்குப்பின் வைப்புகளைக் குறைத்தது; நமது நாட்டிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தது; தொடக்க காலத்தில் வங்கிச் சட்டம் சரியான முறையில் அமையாமை; மைய வங்கி இல்லாமை; பல வங்கிகளிடமிருந்த குறைந்த முதல்; வைப்பு களைப் பெறப் போட்டியிட்டுக்கொண்டு அதிக வட்டியைக் கொடுத்தது; ஊக வாணிபத்தில் ஈடுபட்டது; திறமையற்ற நிருவாகம்; இயக்குநர்களுக்கும் அவர்களுடைய சுற்றத் தினருக்கும் அளித்த வேண்டாத சலுகைகள்; நீண்ட காலத் தொழில் கடன்களை வழங்கியது; இயக்குநர்களின் நேர்மைக் குறைவு; மக்களின் அறியாமை; கிளைகளைப் பெருக்கியது; வதந்திகள் பரவியது என்று பல காரணங்கள் கூறப்படுகின்றன.

வங்கிகள் முறிவடைந்து வங்கித் தொழிலில் மக்களின் நம்பிக்கை குறைகின்றபொழுது, மக்களிடம் இழந்த நம்பிக்கையை மறுமலர்ச்சி பெறச்செய்ய அரசு தலையிட்டுச் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது தேவையாகின்றது. எடுத்துக்காட்டாக நமது நாட்டைக் கூறலாம். நமது நாட்டில் வங்கிகள் மிகுதியான எண்ணிக்கையில் தோல்வியடைந்த பொழுது, அரசு அவற்றை மிகுந்த விழிப்போடு கண்காணிக்கத் தொடங்கியது. வங்கிகளின் பணிகளை நெறிப்படுத்த 1949ஆம் ஆண்டில் இந்திய வங்கி நிறுவனங்களின் சட்டம் (Indian Banking Companies Act) இயற்றப்பட்டது. இதன்படி வணிக வங்கிகளை ரிசர்வ் வங்கி சோதனையிடுகின்றது. எந்த நிறுவனம் செம்மை யாகச் செயல்படவில்லையோ, எவற்றின் நிதி நிலைமை சரியானபடி அமையவில்லையோ அவற்றை மூடுவதற்கு ரிசர்வ் வங்கி நடவடிக்கை எடுக்கின்றது.

1959ஆம் ஆண்டுச் சட்டம் ரிசர்வ் வங்கிக்கு அதிக அதிகாரங் களை வழங்கியிருக்கின்றது. 1960ஆம் ஆண்டுச் சட்டம் 250 ரூபாவுக்குக் குறைவாகச் சேமிப்புக் கணக்கில் வைத்திருப் பவர்களுக்கு வங்கி முறிந்தால் முழுப்பணத்தையும் திருப்பிப்பெற வழிவகுத்திருக்கின்றது. 1961ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வைப்புக் காப்பீட்டுக் கழகச் சட்டம் (Deposit Insurance Corporation Act) வைப்புக் காப்பீட்டுக் கழகத்தைத் தோற்று வித்திருக்கின்றது. இக் கழகம் 1962 ஜனவரி முதல் செயல்படு வதால் பொதுமக்களுக்கு வங்கிகள் மீதுள்ள நம்பிக்கை வளர்ந்துள்ளது.

## (ஆ) நாட்டுடைமையாக்கல்
## (Nationalisation)

மக்கள் நலனை முதன்மையாக வைத்து நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் அமையவேண்டுமென்ற கருத்து உலகெங்கும் வளர்ந்து வருகின்றது. வங்கிகளின் நடவடிக்கை களுக்கும் நாட்டின் பொருளாதார வாழ்விற்கும் வளத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதனைக் காண்கின்றோம். இத்தகைய ஆற்றல்மிக்க வங்கித் தொழிலைத் தனியார் கையில் விட்டுவைப்பதால் பல குறைகள் ஏற்படுகின்றதென்ற கருத்துப் பொதுவாகக் காணப்படுகின்றது. வாணிப வங்கிகள் இலாப நோக்கில் நாட்டின் பொது நலனுக்கு மாறுபட்ட வகையிலும் செயல்படுவதால், வங்கிகளை நாட்டுடைமையாக்குதல் தவிர்க்க முடியாத ஒன்றென்ற கருத்து வலியுறுத்தப்பெற்று வருகின்றது.

இரண்டாம் உலகப்போரின் இறுதியில் உலகில் பல நாடுகளில் மைய வங்கிகளை நாட்டுடைமையாக்கினார்கள். போர்க் காலத்தில் அரசின் நிதித்தேவை மிகுந்தது. நாட்டின் நெருக்கடி நிலைமையைக் கருதி, மைய வங்கி அரசின் தேவைகளுக்கேற்பச் செயல்பட வேண்டியதாயிற்று. இதனால் அரசுக்கும் மைய வங்கிக்கும் நடுவிலிருந்த தூரம் குறைந்தது.

போருக்குப் பின்னால் எல்லா நாடுகளும் வளமிக்க வாழ்விற் குத் திட்டமிட்டு முன்னேறத் தொடங்கின. நாட்டுமக்களின் நல்வாழ்வில் மிகுதியாகக் கவனம் செலுத்தினர். நாட்டின் இயற்கை வளங்களையும், மனித சக்தியையும் முழுமையாகப் பயன்படுத்துவது பல நாட்டு அரசுகளின் கொள்கையாயிற்று. இதற்கேற்ற வகையில் நாட்டின் பணக்கொள்கையை அரசுகள் வகுக்க முற்பட்டன. இதற்கெல்லாம் வங்கிகளை நெறிப்படுத்தி, அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப அவற்றைச் செயல்படச் செய்வது தவிர்க்க முடியாத தேவையாயிற்று.

*1940*-க்குப் பின்னர்ப் பல நாடுகளில் அவற்றின் மைய வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பெற்றன. மைய வங்கிகளை நாட்டுடைமையாக்குவது தேவைதானா என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பெற்றது. அதே நேரத்தில் வணிக வங்கி களை நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கருத்தைப் புதிய வலுவோடு கூறத்தொடங்கினார்கள்.

வாணிப வங்கிகளை நாட்டுடைமையாக்குவதைப்பற்றிக் கருத்து வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. பேராசிரியர் சேயர்ஸ், (1) பணத்தை உருவாக்குதல், (2) இணைப்பு, (3) சமதர்மம், (4) திறமை ஆகியவற்றின் அடிப்படையில் நாட்டுடைமையாக்குதலைப்பற்றி ஆராய்கின்றார்.

முதலாவதாக, பணத்தின் அடிப்படையில் நாட்டுடைமையாக்குதலைப்பற்றி ஆராய்வோம். பணத்தை வெளியிடுகின்ற உரிமை அரசிடம் இருக்கவேண்டும். இதனால்தான் காகிதப் பணத்தை வெளியிடுகின்ற முற்றுரிமை அரசிடம் இருக்கின்றது. அரசின் சார்பில் மையவங்கி பணத்தை வெளியிடுகின்றது. வங்கிகளின் வைப்புகளும் பணமாகப் பயன்படுகின்றன. வங்கிகள் வைப்புகளை உருவாக்குவதன் மூலமாகப் பணத்தை உருவாக்கி நாட்டின் பண அளவைக் கூட்டுகின்றது. இதனால் வங்கிப் பணத்தை உருவாக்குகின்ற உரிமையும் அரசிடம் இருக்கவேண்டுமென்று வாதிடப்படுகின்றது. இந்த உரிமை அரசுக்குவர வங்கிகளை நாட்டுடைமையாக்குவது தேவையாகின்றது. இப்பொழுது தனிப்பட்ட வங்கிகளிடம் இந்த உரிமை இருப்பதால், அவர்கள் கணக்குகளை வைத்துக்கொள்கின்ற பணியைச் செய்தே கணக்கின்றி இலாபத்தைக் குவிக்க முடிகின்றது. விதைக்காத இடத்தில் அறுவடை செய்வதைப்போல, வங்கித்தொழிலில் இலாபம் கிடைக்கின்றது. இது நாட்டின் நலனுக்குப் பயன்படாமல் தனியார் நலனுக்குப் பயன்படுவதைத் தடுக்க நாட்டுடைமையாக்குதலைத் தவிர வேறு வழியில்லையென்று கூறப்படுகின்றது.

இரண்டாவதாக, மையவங்கியை நாட்டுடைமையாக்கிய நிலையில் மைய வங்கிக்கும் வணிக வங்கிகளுக்கும் இடையில் நெருங்கிய இணைப்பை ஏற்படுத்த வணிக வங்கிகளையும் நாட்டுடைமையாக்கவேண்டுமென்று வாதிடுகின்றனர். ஆனால், நாட்டுடைமையாக்காமலேயே மைய வங்கியும், வணிக வங்கிகளும் இணைந்து செயல்பட வேறு வழிமுறைகள் இல்லையா என்று கேட்கப்படுகின்றது. இப்பொழுது மைய வங்கிக்கு வங்கிகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அதிகாரம் வழங்கப்பெற்று இருக்கின்றது. மைய வங்கி தக்க வகையில் கட்டளைகளைப் பிறப்பிப்பதன் மூலம் வணிக வங்கிகளின் பணிகளை நெறிப்படுத்தலாம். ஆதலால், நாட்டுடைமையாக்காமலேயே தேவையான சட்டங்களின் மூலமாக மைய வங்கியையும் வணிக வங்கிகளையும் இணைந்து செயல்படச் செய்யலாமென்று கூறப்படுகின்றது.

மூன்றாவதாக, சமதர்மக் (Socialism) கொள்கையின் அடிப் படையில் வங்கிகளை நாட்டுடைமையாக்குவது வலியுறுத்தப் படுகின்றது. இப்பொழுது அநேக நாடுகள் சமதர்மத்தைத் தங்களுடைய அரசியல், பொருளாதார, சமுதாயக் கோட் பாடாக ஏற்றுக்கொண்டிருக்கின்றன. சமதர்ம சமுதாயத்தை அமைக்க உற்பத்திச் சாதனங்கள் எல்லாம் அரசின் கையில் இருப்பது தேவையாகின்றது. பணமும் ஓர் உற்பத்திச் சாதனமாக இருப்பதால் பணத்தைப் படைக்கின்ற வங்கிகளை நாட்டுடைமை யாக்க வேண்டுமென்று கூறுகின்றார்.

நான்காவதாக, நாட்டுடைமையாக்குவதன் மூலம் வங்கி களின் திறமை கூடுமென்று கூறப்படுகின்றது. இப்பொழுது வணிக வங்கிகள் கடன் தருவதில் திறமையாகச் செயல்பட வில்லை என்ற கருத்தின் அடிப்படையில் இந்த விவாதம் அமைந் திருக்கின்றது.

ஐந்தாவதாக, இன்றிருக்கின்ற சமுதாயத்தை மாற்றிப் புதிய சமுதாயத்தை உருவாக்க வங்கிகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று கூறுகின்றனர். தனியார் துறையிலிருக்கும் வங்கிகள் பொதுத்துறையிலுள்ள தொழில்களுக்குத் தேவையான அளவில் பண உதவி செய்யாது, வங்கிகளை நாட்டுடைமையாக்கி விட்டால் வங்கிப் பணம் பொதுத்துறைத் தொழில்களுக்குப் பெரிதும் பயன்படும்.

ஆறாவதாக, நாடு திட்டமிட்டு முன்னேற வங்கிகளை நாட்டுடைமையாக்குவது தேவையென்று கூறுகின்றனர். திட்டத்தைச் செயல்படுத்த அரசுக்கு மிகுதியாக முதல் தேவைப் படுகின்றது. இப்பொழுது அரசு வங்கிகளிடமிருந்து கடன் பெறு கின்றது. பின்னர் வட்டியோடு சேர்த்துக் கடனைக் கொடுக் கின்றது. வங்கிகளை நாட்டுடைமையாக்கிவிட்டால் வட்டி கொடுக்காமலேயே அரசுக்கு வேண்டிய பணம் கிடைக்கும்.

நாட்டுடைமையாக்குவதால் கிடைக்குமென்று கூறப் படுகின்ற நன்மைகளை எல்லாரும் ஏற்றுக்கொள்வதில்லை. நாட்டுடைமை தேவையற்றதென்று கருதுகின்றவர்கள் சில கருத்துகளைக் கூறுகின்றனர்.

முதலாவதாக, வங்கிகளில் 'சிவப்பு நாடா' முறை தோன்று மென்று கூறப்படுகின்றது. அரசின் அலுவலகங்களைப் போன்று வங்கிகளும் மாறிவிடுமாதலால் செயல்கள் மிக மெதுவாகவே

நடைபெறும். இரண்டாவதாக, நாட்டுடைமை ஆக்குவதால் திறமை குறையுமென்று கூறப்படுகின்றது. தனியார் வங்கியில் இலாப நோக்கில் வங்கியாளர்கள் மிகவும் திறமையாகச் செயல் படுவார்கள். இத்தகைய திறமையான பணியை நாட்டுடைமை யாக்கப்பெற்ற வங்கிகளிடம் எதிர்பார்க்க இயலாது. மூன்றாவ தாக, நாட்டுடைமையாக்காமலேயே மைய வங்கிக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் இப்பொழுது வணிக வங்கிகளிடமுள்ள குறை களைக் களைந்துவிடலாமென்று கூறப்படுகின்றது.

வங்கிகளை நாட்டுடைமையாக்குவதில் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையான போக்குக் காணப்படுகின்றது. அமெரிக்காவில் எந்த வங்கியும் நாட்டுடைமையாக்கப் பெற வில்லை. அங்குள்ள மைய வங்கிகள் எல்லாம் கூட்டரசு ரிசர்வ் கழகம் (Federal Reserve Board) என்னும் ஆளுநர்கள் கழகத்தால் கட்டுப்படுத்தி நிருவகிக்கப்படுகின்றன. இந்தக் கழகம் அமெரிக்கா வில் உள்ள எல்லா வங்கிகளையும் கட்டுப்படுத்துகின்றது.

இங்கிலாந்தில் மைய வங்கியான இங்கிலாந்து வங்கி மட்டுந் தான் நாட்டுடைமையாக்கப் பெற்றிருக்கின்றது. மற்றைய வணிக வங்கிகளை எல்லாம் கட்டுப்படுத்தப் போதுமான அளவு அதிகாரம் இங்கிலாந்து வங்கிக்கு அளிக்கப்பெற்றுள்ளது.

ஃபிரான்சில் மைய வங்கியை நாட்டுடைமையாக்கியதோடு நின்றுவிடாமல் *1945*-ல் அங்கிருந்த ஆறு பெரிய வைப்பு வங்கி களில் நான்கை நாட்டுடைமையாக்கினர். மொத்த வங்கிகளில் நான்கை மட்டும் தேர்ந்தெடுத்து நாட்டுடைமை ஆக்கியதற்குக் காரணங்கள் இருந்தன. இந்த நான்கு வங்கிகளில் ஒவ்வொன்றும் நாடு முழுவதும் கிளைகளை அமைத்திருந்தது. மொத்த வைப்பு களில் *55* சதவீதம் இவற்றின் கையில் இருந்தது. இவற்றின் நிதியில் பெரும்பகுதி கருவூலத்தின் வைப்பில் இருந்தது. மற்றைய வங்கிகளை நாட்டுடைமையாக்காமல் இருந்ததால், நாட் டுடைமையான வங்கிகளுக்கும் மற்றைய வங்கிகளுக்கும் இடையில் போட்டி இருந்ததால் வங்கிகள் திறம்பட இயங்கின.

ஆஸ்திரேலியாவில் தொழிலாளர் அரசு (Labour Government) *1945*, *1947*ஆம் ஆண்டுகளில் வங்கிகளை நாட்டுடைமை யாக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றி பெறவில்லை. நீதிமன்றத்தின் தீர்ப்பு மாறாக அமைந்துவிட்டது.

## (இ) இந்தியாவில் வங்கிகளை நாட்டுடைமையாக்கல்

நமது நாட்டில் சமதர்ம சமுதாயத்தை அமைக்கவேண்டு மென்ற இலட்சியம் வளர்ந்து வருகின்றது. இந்த இலட்சியத்தைக் கொண்டவர்கள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த எல்லாத் துறைகளையும் அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று கருதுகின்றார்கள். இந்த அடிப்படையில் வங்கித் தொழிலையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கருத்து வலிமைபெற்று வருகின்றது. நமது நாட்டில் நாடு தழுவிய நிலையில் வளர்ச்சி பெற்றிருந்த ஆயுள் காப்பீட்டுக் கழகத்தையும், இம்பீரியல் வங்கியையும் அரசு நாட்டுடைமை ஆக்கியது. இதனால் விளைந்திருக்கின்ற நன்மைகளை மக்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர். இதன் காரணமாகவும் பொன்முட்டை இடுகின்ற வாத்தைப் போன்று மிகுதியாக இலாபம் கிடைக்கின்ற துறையாக இருக்கும் வங்கித் தொழிலைத் தனியாரின் கையில் விட்டுவைத்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றவர்கள் இருக்கின்றனர். நாட்டில் வங்கிகளை நாட்டுடைமையாக்குவதற்கு ஆதரவாகப் பொது மக்களின் கருத்தை உருவாக்குவதில் சமதர்மக் கொள்கையைக் கொண்ட அரசியல் கட்சிகள் வெற்றிபெற்றுள்ளன.

### சமுதாயக் கட்டுப்பாடு (Social Control)

இந்திய அரசு, ஜனநாயக சோசலிச சமுதாயத்தை அமைப்பதை இலட்சியமாகக் கொண்டிருக்கின்றது. இந்த இலட்சியத்தைச் செயல்படுத்த வங்கிகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கருத்தை ஆளும் கட்சியில் ஒரு பகுதியினர் வலியுறுத்தினர்.

1966ஆம் ஆண்டில் எர்ணாகுளத்தில் இந்திய அரசின் ஆளும் கட்சியாக இருந்த காங்கிரசுக் கட்சியின் மாநாடு நடைபெற்றது. அப்பொழுது வங்கிகளை நாட்டுடைமையாக்குவதைப்பற்றி விவாதித்தனர். கட்சியில் சில தலைவர்கள் வங்கிகளை நாட்டுடைமையாக்குவதற்கு ஏற்ற சூழ்நிலையும், காலமும் இன்னும் தோன்றவில்லையென்று கூறினர். இதே சிக்கலை 1967-ல் ஜபல்பூரில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரசுக் கட்சி மாநாட்டிலும் ஆலோசித்தனர். உடனடியாக வங்கிகளை நாட்டுடைமையாக்குவதற்கு எல்லாரும் உடன்பட்டுவராததால், அதற்கு முதற்படியாக வங்கிகளின்மீது 'சமுதாயக் கட்டுப்பாட்டைக்' (Social Control) கொண்டுவருவதென்று தீர்மானித்தனர். இந்தத் தீர்மானத்தின்படி 'வங்கிச் சட்டங்கள் (திருத்த) மசோதா' [Banking Laws (Amendment) Bill] ஒன்றைப் பாராளு

மன்றம் நிறைவேற்றியது. இந்த மசோதாவின் அடிப்படையில் 1969ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் சமுதாயக் கட்டுப்பாடு செயல்படுத்தப்பெற்றது.

சமுதாயக் கட்டுப்பாட்டில் வங்கிகள் தொடர்ந்து தனியாரின் உடைமையாகவே இருக்கும். அதனுடைய அமைப்பு முறையிலும், இயக்குநர் குழுவைப் பங்குதாரர்கள் தேர்ந்தெடுப்பதிலும் தேவையான மாற்றங்களையும் கட்டுப்பாடுகளையும் கொண்டு வந்தனர். இயக்குநர் குழுவில் அரசின் சார்பாளராக ஒருவர் இருப்பார். அவர் வங்கியின் நடவடிக்கைகள் அரசின் கொள்கைக்கு ஏற்றனவாகவும், சமுதாய நோக்கோடும் அமை கின்றனவாவென்பதைக் கண்காணிப்பார். இயக்குநர் குழுவைத் தேர்ந்தெடுப்பதிலும் தேவையென்று கருதிய சில கட்டுப்பாடு களைக் கொண்டுவந்தனர். இயக்குநர் குழுவைப் புதிய முறை யில் மாற்றியமைக்க மசோதா வழிசெய்தது. ஒவ்வொரு நிருவாகக் குழுவிலும் மொத்தத்தில் 51 சதவீதத்திற்கு மேற் பட்டவர்கள் கணக்கு, வங்கித்தொழில், வேளாண்மை, கூட்டுறவு, சட்டம், நிதி, சிறுதொழில் ஆகிய துறைகளில் சிறப்பறிவு பெற்றவர்களாக இருக்கவேண்டும். இயக்குநர்களில் பொருளியலறிஞர் ஒருவரும், தேர்ச்சிபெற்ற கணக்கர் ஒருவரும் இருக்கவேண்டும் என்று கூறப்பெற்றது.

இயக்குநர்களைப்பற்றிச் சில வரையறைகளை விதித்தனர். மிகப்பெரிய தொழில் முதலாளிகள் வங்கியில் இயக்குநர்களாக இருக்கக்கூடாதென மசோதா வலியுறுத்தியது. வங்கிகளில் நெடுங்காலப் பயிற்சியுடையவர்களே வங்கிகளின் தலைவர்களாக இருக்கவேண்டும். இந்த அடிப்படையில் வங்கியின் தலைவர் நியமிக்கப்படவில்லையென்றால், தக்க தலைவரைத் தெரிந் தெடுத்து நியமிக்க ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் வழங்கப்பெற்றது.

சமுதாயக் கட்டுப்பாட்டின்கீழ் வெளிநாட்டு நாணயமாற்று வங்கிகளும் கொண்டுவரப்பெற்றன. இந்த வங்கிகளின் தலைவர்கள் அனுபவம் மிக்கவர்களாகவும், இந்தியர்களாகவும் இருக்கவேண்டுமென்று மசோதா கூறியது. இவற்றின் இயக்குநர் குழுக்கள் வெளிநாடுகளில் இருக்கின்றன. இந்தியக் கிளைகள் ஒவ்வொன்றிலும் ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பெற வேண்டும். இந்த ஆலோசனைக் குழுவில் பெரும்பாலானவர்கள் இந்தியர்களாக இருக்கவேண்டும். நாணயமாற்று வங்கிகள் பெரும்பாலும் வெளிநாட்டினருக்கே சாதகமாகச் செயல்படுவ தாகக் கருதியதால் இத்தகைய கட்டுப்பாடுகளை அரசு கொண்டு வந்தது.

தனியார் வங்கிகள் கடன் கொடுப்பதில் சரியான முறையில் நடந்துகொள்வதில்லையென்றும், வங்கிப்பணம் இயக்குநர்களின் செல்வத்தைப் பெருக்கவே பெரிதும் பயன்பட்டதென்றும் கூறப் பெற்ற குறைகளை நீக்கக்கருதி, சமுதாயக் கட்டுப்பாட்டின்கீழ் வங்கிகள் கடன் கொடுப்பதில் சில கட்டுப்பாட்டு விதிமுறைகளைக் கொண்டுவந்தனர். இவற்றின்படி இயக்குநர்களுக்குப் புதிதாகக் கடன் கொடுக்கக்கூடாது. இயக்குநர்களுக்கு முன்னரே கொடுத்துள்ள கடனை மூன்றாண்டுகளுக்குள் திரும்பப் பெறவேண்டும். சில குறிப்பிட்ட துறைகளுக்குக் கடன் கொடுப்பதற்கு முக்கியத்துவம் வழங்கப்பெற்றது. வங்கிகள் கடன் கொடுப்பதை நெறிப் படுத்த ரிசர்வ் வங்கிக்கு அதிக அதிகாரம் வழங்கப்பெற்றது.

கடன் வழங்குவதை நெறிப்படுத்தவும், வங்கிப்பணத்தை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தக்கமுறையில் பயன் படுத்துவதைப்பற்றி ஆராயவும் தேசியக் கடன் மன்றம் (National Credit Council) ஒன்றை அமைத்தனர். தேசியக் கடன் அவையில் 25 உறுப்பினர்கள் இருப்பார்கள். இவர்கள் எல்லாம் பல்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுநர்களாக இருப்பார்கள். மத்திய அரசின் நிதியமைச்சர் இக் குழுவின் தலைவராக இருப்பார். ரிசர்வ் வங்கியின் ஆளுநர் இந்த மன்றத்தின் துணைத்தலைவராக இருப்பார். திட்டக் குழுவின் துணைத்தலைவர், நிதியமைச்சரவையின் செயலாளர், மறுநிதிக் கழகத்தின் தலைவர் ஆகிய இருவரும் இதன் நிலையான உறுப் பினர்கள். பிற இயக்குநர்களெல்லாம் பல்வேறு துறைகளின் வல்லுநர்களாக இருப்பார்கள். இவர்களை மூன்றாண்டுக் காலத் திற்கு அரசு நியமிக்கின்றது. தேசியக் கடன் மன்றம், ஆண்டில் இருமுறைகளாவது கூடி, வங்கிகள் கடன் வழங்குவது குறித்துத் தேவையான முடிவுகளைச் செய்யவேண்டும்.

சமுதாயக் காப்பீட்டை முதலில் எல்லா வங்கிகளின்மீதும் கொண்டுவரவில்லை. 25 கோடி ரூபாவுக்குமேல் வைப்புகளைப் பெற்றிருக்கின்ற வங்கிகளை மட்டுந்தான் முதன்முதலில் சமுதாயக் காப்பீட்டின்கீழ்க் கொண்டுவந்தனர். ரிசர்வ் வங்கிக்கு வங்கிகளைக் கட்டுப்படுத்த மிகுதியான அளவில் அதிகாரங்களை வழங்கினர்.

## நாட்டுடைமையாக்கல்

சமுதாயக் கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தபொழுது, அதன் மூலம் எதிர்பார்க்கின்ற விளைவுகள் விரைவில் கிடைக்கவில்லை யென்றால், அரசு வங்கிகளை நாட்டுடைமையாக்கும் நடவடிக்

கையை மேற்கொள்ளுமென்று கூறியிருந்தனர். சமுதாயக் கட்டுப் பாட்டால் பயன்கள் மெதுவாகக் கிடைப்பதாகக் கூறிய மத்திய அரசு 1969ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 19ஆம் நாள் 50 கோடி ரூபாவுக்குமேல் மூலதனம் வைத்திருக்கின்ற 14 வங்கிகளை நாட்டுடைமையாக்கி அவசர ஆணை பிறப்பித்தது.

அரசின் ஆணைப்படி கீழ்க்காணும் பதினான்கு வங்கிகளும் நாட்டுடைமையாயின:

1. Central Bank of India Ltd.,
2. Bank of India Ltd.,
3. Punjab National Bank Ltd.,
4. Bank of Baroda Ltd.,
5. United Commercial Bank Ltd.,
6. Canara Bank Ltd.,
7. United Bank of India Ltd.,
8. Dena Bank Ltd.,
9. Syndicate Bank Ltd.,
10. Union Bank of India Ltd.,
11. Allahabad Bank Ltd.,
12. Indian Bank Ltd.,
13. Bank of Maharashtra Ltd.,
14. Indian Overseas Bank Ltd.

இந்தப் பதினான்கு வங்கிகளும் மிக ஆற்றல்மிக்கவைகளாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தன. நமது நாட்டு வங்கிகளிடமிருந்த மொத்த வைப்புகளில் இந்தப் பதினான்கு வங்கிகளிடம் மட்டும் 57 சதவீதமும், மொத்த வங்கி அலுவலகங்களில் 49 சதவீத மும், மொத்த வங்கிக்கடனில் 55 சதவீதமும் இருந்தன என்பது கவனிக்கத்தக்கதாகும்.

இந்திய ஸ்டேட் வங்கியோடு நாட்டுடைமையாக்கப் பெற்றுள்ள பதினான்கு வங்கிகளையும் சேர்த்துக்கொண்டால், பொதுத்துறையில் (Public Sector) இந்திய வங்கி அலுவலகங் களில் ஏறத்தாழ 81 சதவீதமும், வங்கி வைப்புகளில் 84 சத வீதமும், வங்கிக்கடனில் 83 சதவீதமும் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1980 ஏப்பிரல் 15ஆம் நாள் மத்திய அரசு ரூ. 200 கோடிக்கு மேல் மூலதனமுள்ள ஆறு வங்கிகளை நாட்டுடைமையாக்கியது. அவையாவன :

1. Andhra Bank.
2. Corporation Bank.
3. New Bank of India.
4. Oriental Bank of Commerce.
5. Vijaya Bank.
6. Punjab and Sind Bank.

நமது நாட்டில் வங்கிகளை நாட்டுடைமையாக்குவதற்குக் கூறப்பெற்ற காரணங்களைத் தொகுத்துக் கூறுவோம்.

முதலாவதாக, தனியார் வங்கிகளிலுள்ள நிருவாகக் குறைகளைச் சுட்டிக்காட்டுகின்றனர். பெரும்பாலான தனியார் வங்கிகளை நடத்துகின்றவர்கள் மிகவும் நேர்மையான முறையில் நிருவாகத்தைக் கவனிப்பதில்லை. வாடிக்கையாளர்கள் வைப்பாளர்கள் நலனைவிட இயக்குநருகளின் நலனுக்கே முதலிடம் கொடுக்கின்ற போக்குக் காணப்படுகின்றது. நிருவாகத்தில் ஏற்படுகின்ற குறைகளையும் ஊழல்களையும் வெளியில் வராமல் நிருவாகிகளால் மறைத்துவிட இயலுகின்றது. இதனாலேயே கடந்த காலத்தில் நமது நாட்டில் வங்கிகளின் முறிவு மிகுதியாக இருந்ததாகக் கூறப்படுகின்றது. நமது நாட்டில் விடுதலைக்குப் பின்னர், ஆண்டுதோறும் சராசரி 42 வங்கிகள் முறிவடைந்ததை இதற்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டுகின்றனர். பல வங்கிகளின் நிதிநிலை சரியாக இல்லாமலிருப்பதையும் கவனிக்க வேண்டும். இக் குறைகளை எல்லாம் அரசு, வங்கிகளை ஏற்று நடத்துகின்றபொழுது களைந்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டாவதாக, வணிக வங்கிகள், சிலரின் கையில் அவர்களுடைய தனியுடைமையாக இருந்திருக்கின்றன. கூட்டுப்பங்கு நிறுவனத்தின் அடிப்படையில் அமைந்த வங்கிகளில் எண்ணற்ற பங்குதாரர்கள் இருக்கின்றனர். இருந்தாலும், இவர்களில் சிலரிடம்தான் மொத்தத்தில் மிகுதியான பங்குகள் உள்ளன. இயக்குநர் தேர்தலில் வாக்குரிமை, பங்குகளின் அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றது. இதனால் அதிகப் பங்குகளை உடையவர்களே இயக்குநர்களாக வரமுடிகின்றது. செல்வம்

மிக்க இயக்குநர்கள் மேலும் மேலும் செல்வத்தைப் பெருக்கிக் குவிக்க வங்கிகளைக் கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இத்தகைய அமைப்பு முறையினால் சமுதாயத்தில் இருக்கின்ற பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் காலப்போக்கில் மேலும் அதிகரிக்கின்றன. இத்தகைய நிலைக்கு எடுத்துக்காட்டாகக் கமர்ஷியல் வங்கி பிர்லாக்களிடமும், பரோடா வங்கி வால்சந்த் (Walchant) குழுவிடமும், பஞ்சாப் தேசிய வங்கி டால்மியா ஜெயின் குழுவிடமும் இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

மூன்றாவதாக, வங்கிகள் தங்களுடைய சொந்த முதலைக் கொண்டு தொழில் நடத்துவதில்லையென்று கூறப்படுகின்றது. வங்கிகள் வாடிக்கையாளர்களின் வைப்புகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு கடன் உற்பத்திசெய்து மிகுதியாக இலாபத்தைப் பெறுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக, நமது நாட்டிலிருந்த நிலையைச் சுட்டிக்காட்டலாம். 1968ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31-ல் இந்திய வங்கிகளிடமிருந்த மொத்த வைப்புகள் 2,750 கோடி ரூபா. இதில் வங்கிகளின் செலுத்தப் பெற்ற முதல் 28.5 கோடி ரூபாதான் என்பது கவனிக்கத்தக்கதாகும். ஒரு சதவீதத்திற்குச் சற்றுக் கூடுதலான சொந்த முதலை வைத்துக்கொண்டு பொதுமக்கள் பணத்தில் வங்கிகள் தங்களுடைய சொத்துகளையும் அதிகாரங்களையும் தொடர்ந்து பெருக்கிக்கொண்டு போவதை அரசு தடை செய்யவேண்டுமென்று கூறப்படுகின்றது.

நான்காவதாக, பொதுமக்களின் பணம் சிலரின் நலனுக்காக மட்டும் பயன்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றனர். பெரும்பாலும் தனியார் வங்கிகள் கடன் கொடுப்பதில் நேர்மையாக நடந்து கொள்வதில்லை. இயக்குநர்களுக்கும், அவர்கள் தொடர்பு கொண்டிருக்கும் நிறுவனங்களுக்கும் அவர்களுடைய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் மிகுதியாகக் கடன் தரப்படுகின்றது. செல்வாக்கற்றவர்களால் தனியார் வங்கிகளில் எளிதாகக் கடன்பெற முடிவதில்லை. இத்தகைய சூழலினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கந்தரும் துறைகளுக்கு வங்கிப் பணம் கிடைக்காமல் போகின்ற நிலை ஏற்படுகின்றது.

ஐந்தாவதாக, பெரும்பாலான வங்கிகளின் உரிமையாளர்கள் பெரிய தொழிலதிபர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் வங்கிப் பணத்தைத் தங்களுடைய சொந்தத் தொழில் நிறுவனங்களைப் பெருக்குவதற்குப் பயன்படுத்துகின்றனர். இவர்களுடைய

தொழில்கள் பேரளவுத் தொழில்களாக, சில துறைகளில் முற்றுரிமை பெற்றவைகளாக வளர முடிகின்றது. இவற்றோடு சிறிய தொழில் நிறுவனங்களால் போட்டியிட முடியாது. ஒரு துறையில் திரண்ட செல்வத்தையும், அதிகாரத்தையும் பெற்றவர்களால், பிற துறைகளிலும் செல்வாக்குப் பெற்றுத் திகழமுடியும். அரசியல், சமுதாயத் துறைகளிலும் இவர்களுடைய கை மேலோங்கி இருப்பதை அன்றாட நடைமுறை வாழ்க்கையில் காணலாம்.

ஆறாவதாக, தனியார் வங்கிகள் நாட்டில் எல்லாத் தரப்புகளிலும் இருக்கின்ற சேமிப்புகளை ஒன்றுதிரட்டி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துமென்று கூறமுடியாது. நமது நாட்டில் மூலதனப் பற்றாக்குறை, வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக இருப்பதனைக் காண்கின்றோம். நாட்டின் மொத்த மூலதனத்தைப் பெருக்க, நாட்டின் நகரங்களில் இருக்கின்ற சேமிப்பைத் திரட்டுவதைப் போன்றே, கிராமங்களில் சிறிய அளவுகளில் சிதறிய நிலையில் இருக்கின்ற சேமிப்புகளைத் திரட்டுவது இன்றியமையாத் தேவையாகும். ஆனால், இலாப நோக்கில் செயல்படுகின்ற தனியார் வங்கிகள் நாட்டுப்புறங்களில் கிளைகளைத் தொடங்கத் தயங்குகின்றன. வாணிப நடவடிக்கைகள் பேரளவு இருக்கின்ற நகரங்களில் கிளைகளைத் தொடங்குவதால், இலாபம் மிகுதியாகக் கிடைப்பதால் நகரங்களில் கிளைகளைத் தொடங்குவதில் காட்டுகின்ற ஈடுபாடு கிராமங்களில் கிளைகளைத் தொடங்குவதில் இருப்பதில்லை. நமது நாட்டிலுள்ள 5,75,000 கிராமங்களில் 5,000 கிராமங்களிலேயே வங்கிகள் இருக்கின்றனவென்று கூறப்படுகின்றது. வங்கிகள் நாட்டுடைமையாக்கப் பெற்றால் நாட்டின் முன்னேற்றம் கருதி, கிராமங்களிலும் கிளைகளைத் தொடங்கிச் சிறிய சேமிப்புகளை ஒன்றுதிரட்டத் தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏழாவதாக, வங்கியின் பணம் நாட்டின் பொது நலனுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுகின்றது. ஊக வாணிபத்தில் ஈடுபடுகின்றவர்கள் பெரும்பாலும் வங்கிப் பணத்தைக் கொண்டே தொழில் நடத்துகின்றனர். உணவுத் தானியங்களை வாங்கி இருப்பு வைப்பதாலும், நெருக்கடிக் காலங்களில் மூலப்பொருள்களைப் பதுக்கி வைப்பதாலும் நாட்டில் விலைகள் கூடுகின்றன. பணவீக்கம் ஏற்பட ஊக வாணிபத்தில் ஈடுபடுகின்றவர்களே முதன்மையான காரணகர்த்தாக்களாக இருப்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.

எட்டாவதாக, நமது நாட்டிலுள்ள வெளிநாட்டுச் செலாவணி மாற்று வங்கிகள் தொடக்க காலம் முதலே இந்திய நலனைக் காப்பதில் கவனம் செலுத்தவில்லை. அவற்றின் நடவடிக்கைகள் எல்லாம் பெரும்பாலும் வெளிநாட்டினருக்குச் சாதகமாக இருக்கின்றதென்று இந்திய வணிகர்கள் தொடர்ந்து குறைகூறிக்கொண்டு வந்திருந்ததை நினைவுபடுத்தலாம். ஆதலால், நாட்டின் நலனைப் பாதுகாக்க அவற்றையும் நாட்டுடைமையாக்குவது தேவையென்று கூறுகின்றனர்.

ஒன்பதாவதாக, தனியார் வங்கிகளில் இருக்கின்ற வாடிக்கைக்காரர்களின் வைப்புகளுக்கெல்லாம் முழுமையான பாதுகாப்பு இல்லை. வங்கிகள் நாட்டுடைமையாக்கப் பெற்றால், வாடிக்கையாளரின் வைப்புகள் பாதுகாப்பாக இருக்கும். வங்கிகள் முறிவடையுமென்று அஞ்ச வேண்டிய தில்லை. இதனால் நாட்டில் வங்கிப் பழக்கம் வளர்கின்ற சூழ் நிலை அமையும்.

பத்தாவதாக, நமது நாட்டில் சமதர்மச் சமுதாயத்தை உருவாக்க அரசு ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்துவதில் தீவிரமாக இருக்கின்றது. கடந்த காலத்தில் தனியார் வங்கிகள் திட்டங்களின் நோக்கங்களைப் புரிந்து கொண்டு, அவை கொடுக்கின்ற முக்கியத்துவத்திற்கு ஏற்பக் கடன் வழங்கி உதவவில்லையென்று சுட்டிக்காட்டப்படுகின்றது. வங்கிகள் நாட்டுடைமையாக்கப் பெற்றால் ஐந்தாண்டுத் திட்டங்கள் இப்பொழுது பெற்றிருப்பதைவிட அதிக வெற்றி களைப் பெற வாய்ப்பு உண்டு.

பதினொன்றாவதாக, கடந்த காலத்தில் வங்கிகள் சிறு தொழில்களுக்குப் போதுமான அளவில் நிதியளித்து உதவ வில்லையென்று கூறப்படுகின்றது. தனியார் வங்கிகள் பெருந் தொழில்களுக்குக் கடன் கொடுப்பதில்தான் மிகவும் ஆர்வமாக ஈடுபடுகின்றன. சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடன் கொடுப் பதை ஓரளவு புறக்கணித்துவிட்டதால், சிறு தொழில்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுவிட்டதென்பதைச் சுட்டிக்காட்டு கின்றனர்.

பன்னிரண்டாவதாக, பல்வேறு காரணங்களைக் காட்டி வாணிப வங்கிகள் உழவர்களுக்குக் கடன் கொடுப்பதைத் தட்டிக் கழிக்கும் போக்குப் பொதுவாகக் காணப்படுகின்றது. உழவர்கள் கொடுக்கின்ற ஈடுகள் சரியானவைகளாகவும்

நீர்மைத் தன்மையுடையனவாகவும் இல்லையென்று கருது கின்றனர். அவர்களுடைய வருவாய் நிலையின்றி இருப்பதால் கொடுத்த கடனை உழவர்களால் உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த முடியாதென எண்ணுகின்றனர். 1951ஆம் ஆண்டுப் புள்ளிவிவரங்களின்படி இந்திய வங்கிகள் கொடுத்த மொத்தக் கடனில், அவை வேளாண்மைக்குக் கொடுத்த கடன் 2·2 சதவீதமாக இருந்தது. இது 1967-ல் 0·3 சதவீதமாகக் குறைந்திருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றனர். ஐந்தாண்டுத் திட்டங்களின்படி வேளாண்மை வளர்ச்சியடையாததற்குத் தனியார் வங்கிகள் அரசோடு ஒத்துழைக்காமல் வேளாண் மையைப் புறக்கணித்ததே காரணமென்று கருதப்படுகின்றது.

பதின்மூன்றாவதாக, வங்கிகளை நாட்டுடைமையாக் கினால், வங்கிகளிடம் குவிந்திருக்கின்ற பணத்தை நாட்டின் முன்னேற்றத்திற்குச் சரியான முறையில் பயன்படுத்தலாம் என்று கூறப்படுகின்றது. சமதர்ம நோக்கத்தைக் கொண்டிருக் கின்ற நாட்டில் வங்கிகளை நாட்டுடைமையாக்குவது தவிர்க்க முடியாததாகும்.

பதினான்காவதாக, வங்கிகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்பதற்குச் சாதகமாகப் பிற நாடுகளின் அனுபவங் களையும் சுட்டிக்காட்டுகின்றனர். முதலாளித்துவ நாடுகளிலும் கூடச் சூழ்நிலையை ஒட்டி வங்கிகளை நாட்டுடைமையாக்கி யிருப்பதைச் சான்றாகக் கூறுகின்றனர். 1969ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 29ஆம் நாளில் இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் பாராளுமன்றத்தில், 'உண்மையில் முதன்மையாக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பே உள்ள சில நாடுகள்கூட வங்கிகளைத் தேசிய உடைமையாக்கிவிட்டிருக்கின்றன. அல்லது வங்கிகள்மீது மிகவும் கண்டிப்பான கண்காணிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. ஃபிரான்சு, அதன் முக்கிய வங்கிகளில் நான்கை நாட்டுடைமை யாக்குவது அவசியமென்று கருதி அவ்வாறு செய்திருக்கின்றது. எஞ்சி விட்டுவைக்கப்பட்ட இரு வங்கிகளும் சேர்ந்து கூட்டாக அந் நாட்டின் மொத்த வங்கிச் சொத்துகளில் $\frac{1}{15}$ பங்குதான் இருந்தது. இதைப்போல், இத்தாலியிலும் முக்கியமான ஐந்து வங்கிகளில் நான்கு, அரசு தரப்பிலேயே இருக்கின்றது. ஸ்விடன் நாட்டில் இரு வங்கிகளின் மூலதனத்தை அரசு மேற் கொண்டுவிட்டது. அந்த வங்கிகள் 1950-ல் ஒன்றுசேர்க்கப் பட்டன' என்று கூறியுள்ளதைக் கவனிக்கலாம்.

இந்தியாவில் 20 பெரிய வங்கிகளை நாட்டுடைமை யாக்கியதால், இதுவரை புறக்கணிக்கப்பட்ட துறைகளுக்குக் கடன் வசதி விரிவுபடுத்தப்படுவதால், கீழ்க்கண்ட நன்மைகள் விளையுமென்று இந்தியத் தலைமையமைச்சர் கூறியுள்ளார் :

1. சிலரின் ஆதிக்கம் நீங்குதல்;

2. வேளாண்மை, சிறு தொழில், ஏற்றுமதி ஆகிய துறைகளுக்குப் போதுமான கடன் வசதியளித்தல்;

3. வங்கி நிருவாகத்திற்குத் தொழில் திறமையளித்தல்;

4. புதுவகைத் தொழில் முயல்வோர்களை ஊக்குவித்தல்;

5. வங்கி ஊழியர்களுக்குத் தக்க பயிற்சியும், பணிக்கேற்ற பலனும் கிடைக்கச் செய்தல் ஆகியன.

நாட்டுடைமையாக்குவது இன்றைய நிலையில் தேவையற்ற தென்று வாதிடுகின்றவர்கள் கூறுகின்ற கருத்துகளையும் தொகுத்துக் கூறுவோம் :

முதலாவதாக, சமுதாயக் கட்டுப்பாட்டின் மூலமே வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுவதால் கிடைக்கக்கூடிய நன்மைகளைப் பெற்றுவிடலாமென்று கூறுகின்றனர். வங்கிகள் அரசியல் கருவியாகவும், சந்திரம் போலவும் செயல்படுகின்ற ஆபத்து, சமுதாயக் கட்டுப்பாட்டிலேயே உள்ளதென்று கருதுகின்றனர். இந்தக் குறைகள் நேராமல் தவிர்க்கப்பட்டு விட்டால், சமுதாயக் கட்டுப்பாட்டின்மூலம் எதையும் சாதிக்க இயலுமென்று கூறுகின்றனர். சமுதாயக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைச் செவ்வனே செயல்படுத்தினால் நாட்டுடைமை யாக்கும் தேவை ஏற்படாதென்று கருதுகின்றனர்.

இரண்டாவதாக, தனியார் வங்கிகளின்மீது கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகளில் பெரும்பாலானவை சரியானவை அல்லவென்று வாதிடுகின்றனர். சிலரின் கையில் செல்வமும் அதிகாரமும் குவிவதற்கு வங்கிகள் மட்டும் காரணமல்ல வென்றும், இன்றைய இந்தியப் பொருளாதார அமைப்பும், அரசு பின்பற்றுகின்ற தொழில் கொள்கைகளும்தாம் தலையாய காரணங்களென்றும் கூறப்படுகின்றது. வங்கிகள் இயக்குநர் களுக்கும் அவர்கள் தொடர்பு கொண்ட நிறுவனங்களுக்கும் கொடுத்த கடன் குறிப்பிடத்தக்க அளவில் இல்லையென்று கூறுகின்றனர். இதற்குச் சான்றாக 1966ஆம் ஆண்டில்

வங்கிகள் கொடுத்த மொத்தக் கடனில் இயக்குநர்களுக்குக் கொடுத்தது 3.4 சதவீதம்; அவர்களோடு தொடர்புடைய நிறுவனங்களுக்குக் கொடுத்தது 6.7 சதவீதம்; மற்றவர்களுக்குக் கொடுத்தது 89.9 சதவீதம் என்னும் புள்ளி விவரங்களைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

சிறு தொழில்கள் புறக்கணிக்கப்படவில்லையென்பதைச் சிறு தொழில்களுக்குக் கொடுத்த கடனின் அளவு கூடியிருப்பதைக் கொண்டு கூறுகின்றனர். 1960ஆம் ஆண்டில் சிறுதொழில் களுக்கு 28 கோடி ரூபாக் கடன் தரப்பெற்றது. இது 1966-ல் 91 கோடி ரூபாவாகக் கூடியுள்ளது.

சிறு சேமிப்புகளைத் திரட்டும் பணியில் வாணிப வங்கிகள் ஈடுபட வேண்டுமென்று கூறுவதே தவறாகுமென்று வாதிடுகின்றனர். கூட்டுறவு நிறுவனங்களும் அஞ்சலகங்களும் கிராமச் சேமிப்புகளைத் திரட்டும் நோக்கத்தோடு, அதற்கு ஏற்ற வகையில் அமைந்திருக்கின்றனவென்று கூறுகின்றனர்.

மூன்றாவதாக, வாணிப வங்கிகள் வேளாண்மையைப் புறக்கணித்துவிட்டதென்று கூறும் குற்றச்சாட்டை மறுக் கின்றனர். தனியார் வங்கிகளைக் குறை கூறுபவர்கள், 1967ஆம் ஆண்டில் வங்கிகள் வேளாண்மைக்கு 9.53 கோடி ரூபாவும், தொழில்களுக்கு 1,741.96 கோடி ரூபாவும் கடனாகக் கொடுத்திருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர். இதனை வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுவதை எதிர்ப்பவர்கள் மறுக்கவில்லை. ஆனால் அவர்கள், வங்கிகள் சர்க்கரை ஆலைகளுக்கும், பருத்தி அரைவைத் தொழிற்சாலைகளுக்கும், உரத் தொழிற்சாலை களுக்கும், வேளாண்மைக் கருவிகளை உற்பத்திசெய்யும் நிறுவனங்களுக்கும் தருகின்ற கடன்கள் எல்லாம் மறைமுகமாக வேளாண்மை வளர்ச்சிக்குத் தருகின்ற கடன்களென்று வாதிடு கின்றனர். மேலும், வேளாண்மைக் கடனைக் கவனிப்பதற்காகக் கூட்டுறவுத்துறை வளர்க்கப்பெறுகின்றபொழுது, வணிக வங்கி களிடமிருந்து மிகுதியாக எதிர்பார்ப்பது சரியன்றென்றும் கூறுகின்றனர்.

நான்காவதாக, தனியார் வங்கிகள் கடன் கொடுப்பதில் அரசு வங்கிகளைவிடக் கவனமாக இருக்குமென்று கருதப்படு கின்றது. வங்கிகள் தங்களிடம் வைப்புகள் வைத்திருப்பவர்களின் நலனைப் புறக்கணித்து, முதல் பாதிக்கப்படும் வகையில் தொழில் துறைகளுக்கு நீண்ட காலக் கடன் கொடுப்பது சரியான

தன்றென்றும் கூறப்படுகின்றது. கிரௌதர், 'வங்கிக்குத் தொழிலைப் பேணவேண்டிய எந்தத் தனிப்பொறுப்பும் இல்லை. அவர்களுடைய முதல் கடமை, வைப்பாளிகளின் நம்பிக்கையைப் பாதுகாப்பதே. நாட்டிற்கு ஒரு நல்ல பொருளாதார நிலைமை உண்டுபண்ணும் கடமை அரசைச் சார்ந்தது' என்று கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

ஐந்தாவதாக, வங்கிகளை நாட்டுடைமையாக்குவதால் வங்கிகளின் திறமை கூடுவதைவிடக் குறைவதற்கே அதிக வாய்ப்புகள் உள்ளனவெனக் கூறுகின்றனர். பொதுத்துறையில் நடைபெறுகின்ற தொழில்கள், பெரும்பாலும் தனியார் துறையில் நடைபெறுகின்ற தொழில்களைப்போன்று மிகுதியாக இலாபம் பெறாமையைச் சுட்டிக்காட்டுகின்றனர். அரசின் அலுவலகங்களில் இருப்பதைப்போலச் 'சிவப்பு நாடா முறை' போன்ற குறைகள் நுழைந்தால் வங்கித்தொழில் பெரிதும் பாதிக்கப்படும். அரசின் அலுவலர்களுக்கு வங்கித்தொழிலில் பயிற்சி இல்லாததும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆறாவதாக, தனியார் வங்கிகளைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கியிடம் போதுமான அதிகாரம் இருக்கின்றது. வங்கிகளை நாட்டுடைமையாக்குவதால் வங்கிகளை அரசால் எவ்வளவு கட்டுப்படுத்த இயலுமோ, அந்த அளவிற்கு ரிசர்வ் வங்கியால் வங்கிகளைக் கட்டுப்படுத்த முடியுமென்று கூறப்படுகின்றது.

ஏழாவதாக, வங்கிகள் தனியார் துறையில் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர். 1951ஆம் ஆண்டு முதல் 1967ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் வங்கி வைப்புகள் 436 சதவீதமும், கடன்கள் 438 சதவீதமும், வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 168 சதவீதமும் வளர்ந்துள்ளன.

எட்டாவதாக, வேறு சில காரணங்களினாலும் வங்கித் தொழிலை நாட்டுடைமையாக்குவதை எதிர்க்கின்றனர். நன்கு நடைபெறுகின்ற வங்கித் தொழிலை அரசு ஏற்று நடத்துவதை விட வேறு பொருளாதார நடவடிக்கைகளில் அரசு கவனம் செலுத்தலாமென்று கூறுகின்றனர். மேலும் அரசு கொடுக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையைச் சுட்டிக்காட்டி, இது மிகவும் செலவாகும் திட்டமென்று கருதுகின்றனர். அரசு பின்பற்றுகின்ற கூட்டுப் பொருளாதாரக் கொள்கைக்கு (Mixed Economy) வங்கிகளை நாட்டுடைமையாக்குவது முரண்பட்ட செயலென்றும் வாதிடுகின்றனர்.

வங்கிகளை நாட்டுடைமையாக்குவதற்குக் கூறுகின்ற காரணங்களையும், அதனை எதிர்ப்போர் கூறுவனவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது சில உண்மைகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. வங்கிகள் தனியார்துறையில் இருந்ததால் சில நன்மைகள் கிடைத்திருப்பதை மறுக்க முடியாது. ஆனால், அந்த நன்மைகளோடு சில குறிப்பிடத்தக்க குறைகளும் கலந்திருக்கின்றன. வங்கிகள் மேலும் பல பணிகளைச் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம். அவற்றை எல்லாம் தனியார் வங்கிகள் மேற்கொள்ளுமென்று கருத இயலாது.

கிரௌதர், 'பொதுமக்கள் நன்மைக்கான ஒரு தொழிலை அரசு தன் ஆளுகையின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்னும் வாதம் நியாயமானதாகவே தோன்றுகிறது. ஆனால், அரசு வங்கிகளை நாட்டுடைமையாக்க வேண்டுமா என்பதும், எந்த அளவிற்கு அரசின் சரிநுட்பமான கட்டுப்பாடு வங்கிகளின்மீது இருக்கவேண்டுமென்பதும் விருப்பத்தின்பாற்பட்டதே யொழியக் கோட்பாட்டின்பாற்பட்டதன்று. வங்கிகளை எப்போதும் தனியார் உடைமையாக வைத்திருக்கத் தெய்விகச் சட்டம் ஒன்றும் இருக்கவில்லை. அவைகளை நாட்டுடைமை ஆக்குதல் கவனமுடன் சிந்திக்கப்பட்டு நிதானமாகக் கொண்டு வரப்பட்டால், தீங்கு ஒன்றும் நேராது. ஆனால், நாட்டுடைமையாக்கப்படுதலானது, வங்கிகளைப் பத்திரமானவைகளாகவும் மலிவானவைகளாகவும் ஆக்காவிட்டால் (இவ்விரண்டு விளைவுகளும் உடனடியாக நேரிடா), அது சற்றேனும் நன்மை தராது. இச் சிக்கலை ஆராய்வது பொருளாதார நிபுணருக்கோ பண முறையைப்பற்றிய மேல் விவரங்களையல்லாது அடிப்படைகளை அறிய விரும்புபவருக்கோ யாதொரு பயனையும் தராது. எனவே, இதனை அரசியல் சிந்தனையாளர்களுக்கு விட்டு விடுவோம்' என்று கூறுகின்றார்.

பேராசிரியர் ஜி. டி. ஹெச். கோல் (Prof. G. D. H. Cole), 'தனியார் பொருளாதாரத்தைச் சமதர்மப் பொருளாதாரமாக மாற்ற வங்கிகளைச் சமுதாய உடைமையாக்குவது தேவையாகும்' என்று கூறுகின்றார்.

## நாட்டுடைமையான வங்கிகளின் வளர்ச்சி

1969 ஜூலை 19-ல் நாட்டுடைமையாக்கப்பெற்ற 14 வங்கிகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. மிகுந்த நிதிவளமுடைய இந்த வங்கிகள் அரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்ததால் நாட்டின் பல்வேறு தரப்பினரும் நன்மைகளை

அடைய முடிந்திருக்கின்றது. நாட்டுடைமையால் கிடைத்த நன்மைகளைத் தொகுத்துக் கூறலாம் :

**1. கிளைப்பெருக்கம்:** *1969*-ல் நாட்டுடைமையாக்கப் பெற்றபொழுது எல்லா வணிக வங்கிகளும் மொத்தம் *8,262* கிளைகள் வைத்திருந்தன. *1976* ஜூனில் மொத்தக் கிளைகளின் எண்ணிக்கை *21,220*. அதாவது ஏழு ஆண்டுகளில் *12,958* புதிய கிளைகள் தொடங்கப்பெற்றிருக்கின்றன. உலக வங்கியின் வரலாற்றிலேயே இஃது இணையற்ற சாதனையாகும். இந்தக் காலத்தில் நாட்டுடைமையான 14 வங்கிகளின் கிளைகள் *(1969 ஜூனில்) 4,133*-லிருந்து *(1976 ஜூனில்) 11,010* ஆக உயர்ந்திருக்கின்றன. *1981* ஜூனில் கிளைகளின் எண்ணிக்கை *35,706* ஆக உயர்ந்தது. மொத்தத்தில் நாள் ஒன்றுக்கு ஆறு கிளைகள் தொடங்கப்பெற்றுள்ளன. புதிதாகத் தொடங்கப் பெற்றனவற்றுள் பாதிக்குமேல் *(53·07%)* நாட்டுடைமை யாக்கப்பெற்றவற்றினுடையவையாகும். இவற்றில் *47%* கிளைகள் முன்பு வங்கிகள் இல்லாத இடங்களில் தொடங்கப் பெற்றனவென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**2. கிராமப்புறக் கிளைகளின் வளர்ச்சி:** வங்கிகளை நாட்டுடைமையாக்கிய பிறகு மொத்தத்தில் கிராமப்புற வங்கிகளின் எண்ணிக்கை நான்கு மடங்குக்குமேல் கூடியுள்ளது. இதனைக் கீழ்க்காணும் அட்டவணையின் மூலம் அறிந்துகொள்ளலாம் :

**வங்கிக் கிளைகளின் பகுப்பு**

| எண் | விவரம் | 1969 ஜூன் | | 1981 ஜூன் | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. | கிராமப்புறம் (Rural) | 1832 | 22.4 | 17652 | 49.4 |
| 2. | ஓரளவு நகர்ப்புறம் (Semi Urban) | 3322 | 40.1 | 8423 | 23.6 |
| 3. | நகர்ப்புறம் (Urban) | 1447 | 17.5 | 5126 | 14.4 |
| 4. | பெருநகர்ப்புறம் (Metropolitan Towns) | 1661 | 20.0 | 4505 | 12.6 |
| | மொத்தம் | 8262 | 100·0 | 35706 | 100·0 |

Source: Southern Economist, April 15, 1982

1969 ஜூனில் மொத்தத்தில் 22·4 சதவீதமாக இருந்த கிராமப்புற வங்கிகளின் எண்ணிக்கை 1981 ஜூனில் 49 4 ஆகக் கூடியுள்ளது. 1969 ஜூனில் நாட்டுடைமையாக்கப்பெற்ற வங்கிகள் அவற்றின் கிளைகளில் 16·6% கிராமப்புறங்களிலும், 35·1% ஓரளவு நகர்ப்புறங்களிலும், 22·3% நகரங்களிலும், 26% பெருநகரங்களிலும் இருந்தன. ஆனால், 1981 ஜூனில் இவற்றின் கிளைகளில் 49% கிராமங்களிலும், 24% ஓரளவு நகர்ப்புறங்களிலும், 14% நகர்ப்புறங்களிலும், 13% பெருநகரங் களிலும் இருந்தன. இதிலிருந்து நாட்டுடைமையாக்கப்பெற்ற வங்கிகள் கிராமப்புற வங்கி வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்துவதை அறிந்துகொள்ளலாம்.

**3. பணியாற்றும் மக்களின் எண்ணிக்கை:** 1969 ஜூனில் சராசரி 65,000 மக்களுக்கு ஒரு வங்கி அலுவலகம் பணிபுரிந்தது. 1981 ஜூனில் ஒரு வங்கி அலுவலகம் பணிபுரிய வேண்டிய சராசரி மக்களின் எண்ணிக்கை 25,000 ஆகக் குறைந்திருக் கின்றது. இது நாட்டுடைமையாக்கப்பெற்ற வங்கிகள் நிறையக் கிளைகளைத் தொடங்கியதன் விளைவேயாகும்.

**4. வைப்புத்தொகை வளர்ச்சி:** நாட்டுடைமையான வங்கி களின் மொத்த வைப்பு 1970 மே-ல் 4,317·2 கோடி ரூபாவாக இருந்தது. இது 1974 மே-ல் 10,454 கோடியாகவும் 1977-ல் 21,193 கோடியாகவும், 1980-ல் 28,633 கோடியாகவும் கூடியுள்ளது. நாட்டுடைமையாவதற்கு முன்பு ஓராண்டில் கூடிய வைப்புத்தொகையின் அளவு 541·2 கோடி ரூபா. நாட்டுடைமை யான முதலாண்டில் ரூ. 588·6 கோடியும் (1·25%) இரண்டா மாண்டில் ரூ. 773·9 கோடியும் (17·9%) கூடியிருப்பது கவனிக்கத்தக்கது.

**5. வேளாண்மைக் கடன்:** நாட்டுடைமையாவதற்கு முன்பு இந்த வங்கிகள் வேளாண்மைத் துறைக்கு 27 கோடி ரூபா வழங்கியிருந்தன. 1975ஆம் ஆண்டில் நேர்முகமாக 430 கோடி ரூபாவும் மறைமுகமாக 193 கோடி ரூபாவும் கடன் வழங்கி யுள்ளன. 1977-ல் இவை முறையே 1053·83 கோடி, 337·35 கோடியாக உயர்ந்தன. 1981-ல் மொத்தத் தொகை ரூ. 3573 கோடியாயிற்று.

**6. சிறுதொழில் வளர்ச்சி:** 1969-க்கு முன்னால் நாட் டுடைமையாக்கப்பெற்ற இந்த வங்கிகள் சிறு தொழில்களுக்காக 148 கோடி ரூபாதான் வழங்கியிருந்தன. 1975-ல் சிறுதொழில்

வளர்ச்சிக்காக இவை 625 கோடி ரூபா கடன் வழங்கியிருந்தன. 1977-ல் இத் தொகை 1403·35 கோடி ரூபாவாகவும், 1981-ல் ரூ. 3230 கோடியாகவும் உயர்ந்தது.

**7. சமுதாயத்தில் பின்தங்கியவர்களுக்கு உதவி:** நாட்டுடைமையாக்கப்பெற்ற வங்கிகள் சமுதாயத்தில் பின்தங்கியவர்களின் நலனில் கவனம் செலுத்திக் கடனுதவி செய்கின்றன. 1977-ல் காரோட்டிகள் 290 கோடி ரூபாவும், சிறு வணிகர்கள் 203 கோடி ரூபாவும், சுய வேலைவாய்ப்பை வழங்கிக்கொள்கின்றவர்கள் 78 கோடி ரூபாவும், மாணவர்கள் 6 கோடி ரூபாவும் கடனாகப் பெற்றார்கள்.

**8. இலாபம்:** முதலில் நாட்டுடைமையான 14 வங்கிகளும் 1969ஆம் ஆண்டில் 5·98 கோடி ரூபா நிகர இலாபமாகப் பெற்றன. 1975ஆம் ஆண்டில் ஊழியர்களுக்கு ஊதியம், போனஸ், படி எல்லாம் அளித்த பிறகு 15 25 கோடி ரூபா இலாபம் பெற்றிருக்கின்றன. 1980-ல் இலாபம் ரூ. 52 கோடியாக உயர்ந்தது.

**9. தொழிலாளர் நலம்:** 1968-ல் தொழிலாளர்களுக்குப் போனசாக 2·19 கோடி ரூபாவும், ஊதியம், படி, காப்புத் தொகையாக 67·4 கோடி ரூபாவும் வழங்கிய இந்த வங்கிகள் 1975-ல் ஊதியம், படி, காப்பீட்டுத் தொகை, போனஸ் என்ற வகையில் மொத்தமாக 261·20 கோடி ரூபா வழங்கியுள்ளன. இஃது ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

## பொதுத்துறை வங்கிகள்

இப்பொழுது நமது நாட்டில் பொதுத்துறையில் 28 வங்கிகள் உள்ளன. இந்திய ஸ்டேட் வங்கியும், அதன் 7 துணை வங்கிகளும், நாட்டுடைமையாக்கப்பெற்ற 20 வங்கிகளும் சேர்ந்து மொத்தம் 28 வங்கிகள். நமது நாட்டு வங்கிகளிடமிருக்கும் மொத்த வைப்பில் 83 சதவீதம் பொதுத்துறை வங்கிகளிடமிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெரிய வங்கிகளைப் பொதுத்துறையின்கீழ்க் கொண்டு வந்ததன் தலையாய நோக்கங்களில் ஒன்று இதுவரை வங்கிகளின் பணிகளால் பயனடையாத நாட்டுப்புற மக்களுக்கும் வங்கிகளின் சேவை கிடைக்கவேண்டுமென்பதே. இந்த வகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகின்றது.

1969 ஜூன் மாதத்தில் 14,739 வங்கி அலுவலகங்கள் இந்தியாவில் இருந்தன. 1972 டிசம்பரில் வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 16,503 ஆக உயர்ந்தது.

வங்கிகளின் எண்ணிக்கை கூடியதால் ஒவ்வொரு வங்கியும் பணிபுரிய வேண்டிய மக்களின் சராசரி எண்ணிக்கை பெருமளவில் குறைந்திருக்கின்றது. 1969ஆம் ஆண்டில் 65,000 பேருக்கு ஒரு வங்கி அலுவலகம் வீதம் செயல்பட்டது. 1972 டிசம்பரில் 37,000 மக்களுக்கு ஒரு வங்கி அலுவலகம் வீதம் வங்கிமுறை வளர்ச்சி பெற்றிருந்தது.

வங்கிகள் நாட்டுடைமையானபின் சில துறைகளுக்குக் கடனுதவி செய்வதில் தனிக்கவனம் செலுத்தப்பெறுகின்றது. வேளாண்மை, சிறு தொழில்கள், சிறிய தொழில்முயல்வோர் களின் பணிகள் ஆகியவற்றிற்கு நிதி உதவி செய்வதை முதன்மை யானதாகக் கருதுகின்றனர். ஆதலால், இத் துறைகளுக்குக் கடன் கொடுப்பதிலிருந்த கட்டுப்பாடான நெறிமுறைகளைத் தளர்த்தியிருக்கின்றனர். இந்த முதன்மையான துறைகளுக்குக் கடன் கொடுப்பதில் போற்றத்தக்க அளவில் முன்னேற்றம் காணப்படுகின்றது. வேளாண்மை, சிறு தொழில்களுக்காக 1969-ல் வங்கிகள் 439 கோடி ரூபா கடன் கொடுத்திருந்தன. இது வங்கிகள் கொடுத்த மொத்தக் கடனில் 14.9 சதவீதமாகும். 1972 செப்டம்பரில் வங்கிகள் இந்தத் துறைக்குக் கொடுத்த கடனளவு 1,080 கோடி ரூபாவாகக் கூடியிருந்தது. இது மொத்தக் கடனில் 25.1 சதவீதமென்பது கவனிக்கத்தக்கதாகும்.

வங்கிகளை நாட்டுடைமையாக்குவது தேவையென்ற முடிவுக்கு நம்முடைய விவாதம் நம்மை இழுத்துச் செல்வதை உணர்கிறோம். ஆனால், வங்கிகளை நாட்டுடைமையாக்கு வதால் மட்டும் எதிர்பார்க்கின்ற பலன்கள் விளைந்துவிடுமென்று கூறமுடியாது. வங்கிகளை நாட்டுடைமையாக்குவது ஒரு புது யுகத்தின் தொடக்கமாக இருக்கும். ஆனால், இதனைத் தொடர்ந்து மேலும் பலவகையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தனியார் வங்கியிலுள்ள குறைகள் எதுவுமின்றி நாட்டுடைமையாக்கப்பெற்ற வங்கிகள் செயல்படும் வகையில் அவற்றை இயக்கவேண்டும். அப்பொழுதுதான் சமதர்மச் சமுதாயத்தை அமைப்பதற்கு நாட்டுடைமையான வங்கிகள் துணையாக நிற்கும்.

## துணை நூல்கள்

1. S. K. Muranjan, 'Modern Banking in India'.
2. R. S. Sayers, 'Modern Banking'.
3. Prof. G. D. H. Cole, 'What Every Man Wants to Know about Money', Chap. XI.
4. Crowther, 'An Outline of Money', Chap. 2.
5. S. K Basu, 'A Survey of Contemporary Banking Trends'.
6 'Report of the Monopolistic Enquiry Commission, 1965'.

# 14. மைய வங்கியின் அமைப்பும் பணிகளும்

## தோற்றம்

மைய வங்கி ஒரு நாட்டின் தலைமை வங்கியாக இன்று திகழ்கின்றது. மைய வங்கி இன்றிருக்கின்ற நிலையை அடைய நீண்டகாலம் ஆகியிருக்கின்றது. வங்கியின் வரலாற்றைக் கவனித்தால், ஒவ்வொரு நாட்டிலும் ஏதாவது ஒரு வங்கி சூழ்நிலையை ஒட்டித் தலைமை வங்கியாக வளர்ச்சிபெற்றதைக் காண்கிறோம். பொதுவாக முதன்முதலில் பணத்தை வெளியிடுகின்ற உரிமையையும் அரசுக்காக வங்கிப் பணியை மேற்கொள்கின்ற வாய்ப்பையும் பெற்ற வங்கி காலப்போக்கில் மைய வங்கியின் பிற பணிகளையும் ஏற்று வளர்ந்திருக்கின்றது.

வில் ராஜர்ஸ் (Will Rogers), 'ஆதிக் காலம் முதல் மூன்று பெரிய கண்டுபிடிப்புகள் தோன்றியுள்ளன. அவை தீ, சக்கரம், மைய வங்கிமுறை' என்று கூறுகிறார்.

1609ஆம் ஆண்டில் டென்மார்க்கில் அமைக்கப்பெற்ற ஆம்ஸ்டர்டாம் வங்கியைச் சிலர் உலகின் முதல் வங்கியென்று கூறுகின்றனர்.

ஆனால், பொதுவாகப் பலராலும் 1656ஆம் ஆண்டில் ஸ்வீடனில் அமைக்கப்பெற்ற ரிக்ஸ் வங்கி (Riks Bank), உலகின் முதல் வங்கியாகக் கருதப்படுகின்றது. 1694ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற இங்கிலாந்து வங்கிதான் (Bank of England) மைய வங்கிக் கொள்கைகளை உருவாக்கத்தக்க அளவில் சிறப்பாகப் பணியாற்றியது. ஏறத்தாழ எல்லா நாடுகளிலும் மைய வங்கிகள் உருவாக்கப்பெற்றுள்ளன. மைய வங்கி இப்பொழுது முழுமையான வளர்ச்சி பெற்றிருக்கின்றது. ஆதலால், டி காக் (De Kock), 'மைய வங்கித் தொழில் அறிவியலாக' (The Science of Central Banking) வளர்ந்திருப்பதாகக் கருதுகின்றார்.

விளக்கம்

மைய வங்கியைப் பல பொருளியலறிஞர்களும் பல்வேறு வகைகளில் விளக்க முயல்கின்றனர். பொதுவாக மைய வங்கியின் ஏதாவது ஒரு பணியை வைத்துக்கொண்டு அதனை விளக்க முயல்கின்ற போக்குக் காணப்படுகின்றது.

வீரா ஸ்மித் (Vera Smith), 'வங்கி முறையில் ஒரு தனி வங்கி முழுமையாக, அல்லது எச்சமாகப் பணம் வெளியிடுகின்ற உரிமையைப் பெற்றிருப்பதுதான் மைய வங்கித் தொழிலுக்கான அடிப்படை விளக்கமாகும்......... இந்தப் பணம் வெளியிடுகின்ற முற்றுரிமைகளிலிருந்துதான், நமது தற்கால மைய வங்கியின் இரண்டாம் வகைப் பணிகளும் இயல்புகளும் பெறப் பெற்றிருக்கின்றன' என்று கூறுகின்றார்.

'அரசின் பொதுப் பணக்கொள்கையை உருவாக்கும் வகையில் வாணிப வங்கியைக் கட்டுப்படுத்துவதுதான், வாணிப வங்கியிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்ற மைய வங்கியின் பணியாகும்' என்று சேயர்ஸ் குறிப்பிடுகின்றார்.

டி காக், மைய வங்கியை 'ஒரு நாட்டின் பண, வங்கி அமைப்பின் உச்சியாக இருப்பது' என்று விளக்குகின்றார்.

ஹெச். வி. ஆர். ஐயங்கார், 'எல்லா நாடுகளின் மைய வங்கிகளுக்கும் பொதுவான சில இயல்புகள் இருந்தபோதிலும், ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு குறிப்பிட்ட பொருளாதாரச் சூழலில் பணியாற்ற வேண்டியதை ஒட்டியும், அதன் அடிப்படையில் பின்பற்றுகின்ற வழிமுறைகளையும், பணிகளின் அளவை ஒட்டியும் தனித்தன்மை வாய்ந்ததாகத் திகழ்கின்றது' என்று கூறியிருக்கின்றார்.

## தனித்தன்மை

மற்றைய வங்கிகளிலிருந்து மைய வங்கி அடிப்படையிலேயே வேறுபடுகின்றது. இதனைச் சேயர்ஸ், 'மைய வங்கி அரசின் ஓர் அங்கமாகும்' என்று குறிப்பிடுகின்றார். மற்றைய வங்கிகள் எல்லாம் தங்களுடைய விருப்பம்போலச் செயல்படுகின்ற பொழுது மைய வங்கி மட்டும் அரசின் கொள்கைகளுக்கேற்பச் செயல்படுகின்றது என்பதையே அது காட்டுகின்றது.

டி. காக், 'இலாபத்தை முதன்மை நோக்கமாகக் கருதாமல் நாட்டின் மொத்த நலனுக்காகவும், பொதுமக்களின் வசதிக் காகவும் பணியாற்ற வேண்டுமென்பதே மைய வங்கியின் வழி காட்டும் கொள்கை' என்கிறார்.

மைய வங்கியின் பணிகள் எல்லாம் தனித்தன்மை வாய்ந்தவைகளாக இருக்கின்றன. அவை வணிக வங்கியின் பணிகளிலிருந்து பெரிதும் மாறுபட்டிருப்பது கவனிக்கத்தக்க தாகும். இத்தகைய அடிப்படை வேறுபாடுகளைச் சேயர்ஸ், 'முதலாவதாக மைய வங்கி வேறு அங்காடிகளோடு பெருமளவில் அன்றிச் சிறு அளவில் தொடர்புடையவர்களால் நிருவகிக்கப் படுகின்றது. இரண்டாவதாக, இயன்ற அளவில் அதிகமான இலாபம் சம்பாதிப்பதே வணிக வங்கியின் முக்கிய நோக்க மாகும். ஆனால், மைய வங்கிக்கு இலாபம் தேடவேண்டும் என்ற நோக்கமே கிடையாது என்று கூறலாம். மூன்றாவதாக, மைய வங்கிக்கும் வணிக வங்கிகளுக்கும் இடையே ஒரு சிறப்பான உறவு நிலவுகின்றது' என்று குறிப்பிடுகின்றார்.

இப்பொழுது மைய வங்கியின் பொறுப்புகள் மிகுந்துள்ளன. பணத்தின் உள்நாட்டு, வெளிநாட்டு மதிப்புகள் மாறி, பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் பணத்தை நிருவகிக்கும் பொறுப்பு மைய வங்கியிடம் இருக்கின்றது. வணிக வங்கிகளுக்கு வழிகாட்டியாகவும் காவலனாகவும் மைய வங்கி விளங்குகின்றது. கால மாறுதல் களுக்கேற்ப மைய வங்கியின் பணிகள் விரிவடைந்து வந்திருக் கின்றன.

இஃது அரசின் வங்கியாக இருந்தபோதிலும் அரசின் தலையீடின்றிச் சுயேச்சையாகவும் செயல்படுகின்றது மைய வங்கியின் கையில் பண வெளியீட்டு முற்றுரிமை இருப்பதால் இது முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கின்றது.

### தேவை

நாட்டின் பணமுறையைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்து வதற்கு மைய வங்கி தேவையானதென்பதை வளர்ச்சிபெற்ற நாடுகள் எல்லாம் ஏற்றுக்கொள்ளுகின்றன. உலகில் மைய வங்கிகளுக்கு முன்னோடியாகத் திகழ்கின்ற இங்கிலாந்து மைய வங்கி கடந்த இருநூறு ஆண்டுகளாகத்தான் வளர்ச்சி பெற்றிருக்கின்றது. பெரும்பாலான நாடுகளில் இருபதாம்

நூற்றாண்டில்தான் மைய வங்கி உருவாகியுள்ளது. இதனால் நாட்டின் பண முறையை நெறிப்படுத்துவதற்கென்று தனியாக ஒரு மைய வங்கி தேவைதானா என்ற கேள்வி எழுகின்றது.

முன்னர்ப் பணமுறையைக் கட்டுப்படுத்துவதே தேவையில்லையென்று வாதிடுகின்ற பொருளியலறிஞர்கள் சிலர் இருந்தனர். அவர்கள் பணமுறை எந்த வகையான தலையீடு மின்றிச் செவ்வனே நடைபெறுமென்றும், மைய வங்கி ஏற்பட்டால்தான் பண முறையில் குழப்பங்கள் கூடுமென்றும் கருதினர்.

இதைப்போன்று, பொருளாதாரத்தில் தலையிடாக் கொள்கையை ஆதரித்தவர்களும் வங்கித் தொழிலைக் கட்டுப் படுத்துகின்ற மைய வங்கிமுறை வேண்டாவென்றே கருதினர்.

ஆனால், நடைமுறை வேறுவகையாக அமைந்துவிட்டது. பணம் தானே இயங்கும் (Automaticity) என்னும் நம்பிக்கை ஆட்டம் காணத் தொடங்கியது. பணத்தின் மதிப்பு அகப் புறக் காரணங்களினால் அடிக்கடி மாறியது. இது நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்தது. இதனால் நாட்டின் பணக்கொள்கையை நெறிப்படுத்துவது தேவையென்றும் அதற்குத் தனி நிறுவனம் தேவையென்றும் உணரத் தொடங்கினர்.

இப்பொழுது நாட்டின் நிதித் தொடர்புகள் மிகவும் சிக்கலான முறைகளில் அமைந்திருக்கின்றன. பணம் என்பது இந்த உருவத்தில், இப்படி இருக்குமென்று கூறமுடியாத நிலை உருவாகியிருக்கின்றது. பல வகையான நிதி நிறுவனங்கள் தோன்றியிருக்கின்றன. கடன் தருகின்ற நிறுவனங்கள் தங்களுடைய போக்கில் பணத்தை உருவாக்குகின்றன.

ஆதலால், பணத்தின் அளவைக் கட்டுப்படுத்துவதென்பது சட்டமுறைப் பணத்தை மட்டும் குறிப்பதாக இல்லை. எல்லா வகையான பணத்தையும் கட்டுப்படுத்துவதும் நெறிப்படுத்து வதும் மிகவும் சிக்கலான பணியாகும். இதனைத் தக்க தகுதி பெற்ற தனிவகை நிறுவனத்தால்தான் மேற்கொள்ள முடியும். அத்தகைய தனிவகை நிறுவனமாகத்தான் மைய வங்கி இருக்கின்றது. ஆதலால், மைய வங்கி இன்றைய பண, நிதி அமைப்பு முறையில் இன்றியமையாத தேவையாக இருக்கின்றது.

## அமைப்பு

முன்னர், மைய வங்கிகள் தனியார் வங்கிகளாக நிறுவப் பெற்றன. தொடக்க காலத்தில் அரசு தனக்கு வேண்டிய நிதியைக் கடனாகப் பெற மைய வங்கியைத் தோற்றுவித்தது. இப்படி உருவாக்கப்பெற்றவைதாம் ஸ்விடன், இங்கிலாந்து மைய வங்கிகள் ஆகும்.

முன்னர் அரசின் தலையிடின்றி மைய வங்கி செயல்பட வேண்டுமென்று கருதினர். இதனால் அதனைத் தனியார் நடத்துவதே சிறந்ததென்று எண்ணினர். 1936ஆம் ஆண்டிற்கு முன்னால் ஒன்பது மைய வங்கிகளே நாட்டுடைமையாக்கப் பெற்றிருந்தன. உலகப் பெருமந்தம் ஏற்பட்ட பின்னர்ப் பல அரசுகளின் கருத்தில் மாற்றம் ஏற்பட்டது. நெறிப்படுத்தாத பொருளாதாரம் நீர்க்குமிழிகளைப் போன்று வெடிக்கு மென்பதை உணர்ந்தனர். பொன்திட்டம் செயல்பட்டவரை பண நிருவாகத்தின்மீது அதிகக் கவனம் செலுத்தவில்லை. பொன்திட்டத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் உள்நாட்டு, வெளிநாட்டு செலாவணி நிருவாகத்தை மைய வங்கி முழுக்க ஏற்றுக்கொள்வது இன்றியமையாத தேவையாயிற்று. மைய வங்கியின் முக்கியத் துவம் கூடக்கூட அதனை நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கருத்தும் வளர்ந்தது. இவற்றின் விளைவாகப் பல நாடுகளி லிருந்த பழைய மைய வங்கிகளை அரசு ஏற்று நடத்தத் தொடங்கியது. மைய வங்கிகள் இல்லாத நாடுகளில் அரசே மைய வங்கியை நிறுவியது.

மைய வங்கிகள் இப்பொழுது பல வகைகளில் அமைந்திருக் கின்றன. சில நாடுகளில் முதலில் தனியாரால் கூட்டுப்பங்கு வங்கிகளாகத் தோற்றுவிக்கப்பெற்ற மைய வங்கிகள், பின்னர் நாட்டுடைமையாக்கப்பெற்றன. இதற்கு எடுத்துக்காட்டுகளாக இங்கிலாந்து, இந்தியா, ஃபிரான்சு ஆகியவற்றின் மைய வங்கி களைக் கூறலாம். சில நாடுகளில் மைய வங்கிகளை அரசே தொடங்கி, அரசே நடத்துகின்றது. இத்தகைய மைய வங்கி களுக்குச் சான்றாக இலங்கை, பர்மா ஆகிய நாடுகளின் மைய வங்கிகளைக் கூறலாம். வேறு சில நாடுகளில் தனியாரால் தொடங்கப்பெற்றுத் தனியாரின் நிருவாகத்திலேயே இப் பொழுதும் இருக்கின்ற மைய வங்கிகள் உள்ளன. இத்தாலி, அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள வங்கிகள் இத் தன்மை யானவைகளே. அரசும் தனியாரும் கூட்டாகச் சேர்ந்து நடத்துகின்ற மைய வங்கிகளும் உள்ளன. இப்படிப்பட்ட மைய

வங்கிகளுக்கு ஜப்பான், பாகிஸ்தானிலுள்ள மைய வங்கிகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

மைய வங்கிகளின் நிருவாக அமைப்புமுறை நாட்டிற்கு நாடு சிறிய வேறுபாடுகளோடு அமைந்துள்ளது. மைய வங்கிகளைத் தனியார் நடத்தினால் அவற்றின் நிருவாகத்தில் அரசு பங்கு பெறுவதைக் காணலாம். அரசு ஏற்று நடத்துகின்ற எல்லா வங்கிகளிலும் உயர்மட்ட நிருவாகிகளை ஒன்றுபோல் நியமிக்கின்றார்களென்று கூறமுடியாது. ஜனாதிபதி நிருவாகக் குழுவின் தலைவரை நியமிக்கின்ற வழிமுறை சில நாடுகளில் இருக்கின்றது. வேறு சில நாடுகளில் அமைச்சரவையின் கையில் இதற்கான அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கின்றது. பொதுவாகப் பெரும்பாலான நாடுகளில் மைய வங்கியின் நிருவாகப் பொறுப்பு ஆளுநர்களின் (Governors) கையிலிருக்கின்றது. எடுத்துக்காட்டாக, நமது நாட்டில் ரிசர்வ் வங்கியின் நிருவாகத்தை ஆளுநர் கவனிக்கின்றார். இவர் இயக்குநர் குழுவின் (Board of Directors) கருத்துகளின்படி செயல்படுகின்றார் என்பது கவனிக்கத்தக்கதாகும்.

மைய வங்கியின் தூய கோட்பாட்டின்படி அதன் நிருவாகத்தில் அரசு தலையிடக்கூடாது. ஆனால், நடைமுறையில் எல்லா நாடுகளிலும் ஓரளவு அரசின் தலையீடு இருப்பது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. நிதி அமைச்சர் நிருவாகத்தில் பெரும்பங்கு பெற்று, அரசின் கொள்கைகளுக்கேற்ப மைய வங்கியை இயக்குகின்ற நாடுகள் இருக்கின்றன. இப்பொழுது அரசும் மைய வங்கியும் இணைந்து செயல்பட்டு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்க வேண்டுமென்ற கருத்து வளர்ந்து வருகின்றது. ஆதலால், இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் அரசு நேரடியாகவோ மறைமுகமாகவோ நிருவாகத்தில் பெரும்பங்கேற்பது தவிர்க்க முடியாததாக மாறிவிட்டது.

## பொருளாதார, சமுதாய நோக்கங்கள்

மைய வங்கி, சில பொருளாதாரச் சமுதாய நோக்கங்களோடு செயல்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய நோக்கங்களில் முக்கியமான மூன்றினைச் சுட்டிக்காட்டலாம். முதலாவதாக, பணத்தை நிலைப்படுத்துகின்ற நோக்கத்தோடு மையவங்கி செயல்படவேண்டும். இஃது ஒரு பொதுவான பொருளாதாரப் பணியாகும். இதில் உள்நாட்டு

விலைகளை ஒருநிலைப்படுத்துதலும் அடங்குகின்றது. அதோடு கூடப் பணத்தின் பன்னாட்டு மதிப்பினைக் கட்டிக் காக்கின்ற பொறுப்பும் மைய வங்கிக்கு இருக்கின்றது. இரண்டாவதாக, உயர்ந்தநிலையில் வேலை வாய்ப்புகளையும் வருவாயையும் அமைத்துக் கொடுக்கும் நோக்கத்தோடு மைய வங்கி செயல்பட வேண்டும். மூன்றாவதாக, நாட்டின் பொதுப் பொருளாதார வளர்ச்சியிலும், மக்கள் நலனிலும் கவனம் செலுத்தவேண்டும்.

சமீப காலத்தில் மைய வங்கிகளை அமைத்துக் கொண்டிருக்கின்ற நாடுகளின் சட்டங்களிலேயே ஏதாவது ஒரு நோக்கத்தை மைய வங்கி பின்பற்ற வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறியுள்ளனர். எடுத்துக்காட்டாக, ஆஸ்திரேலியாவில் சட்டம், முழு நிறை வேலைவாய்ப்பையும், வளத்தையும், மக்கள் நலத்தையும் மேம்படுத்துவதற்கான பண, வங்கிக் கொள்கையை மைய வங்கி பின்பற்ற வேண்டுமென்று கூறுகின்றது. இலங்கையில் உற்பத்தி, வேலைவாய்ப்பு, உண்மை வருவாய் ஆகியவற்றை உயர்ந்த நிலையில் வைத்திருக்கவும், உற்பத்திச் சாதனங்களை முழு வளர்ச்சி பெறச் செய்யவும் தேவையான கொள்கைகளை மைய வங்கி பின்பற்ற வேண்டுமென்று சட்டம் கூறுகின்றது.

இந்திய ரிசர்வ் வங்கியின் சட்டத்தின் அறிமுக உரையில், 'வங்கிப் பண வெளியீட்டை முறைப்படுத்தவும், இந்தியாவில் பணத்தை நிலைப்படுத்தும் நோக்கில் இருப்புகளை வைத்திருக்கவும், பொதுவாக நாட்டின் பண, கடன் முறையை அதனுடைய நன்மைக்கேற்பச் செயல்படுத்தவும் இந்திய ரிசர்வ் வங்கியை அமைப்பது அவசரத் தேவையாகின்றது' என்று கூறியுள்ளனர். இதன்படி பணத்தின் மதிப்பை நிலைநாட்டுவது நமது மைய வங்கியின் தலையாய நோக்கமென்பது தெளிவாகின்றது.

## பணிகள்

ஒவ்வொரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலைக்கேற்ப, அந்தந்த நாட்டு மைய வங்கி பல்வேறு வகையான பணிகளை மேற்கொண்டிருப்பதைக் காண்கின்றோம். மைய வங்கியின் பணிகளைத் தொகுத்துக் கூறுவதிலும், அவற்றில் எது மிகவும் முக்கியமானதென்று வலியுறுத்திக் கூறுவதிலும் பொருளியல் அறிஞர்களுக்கிடையில் சிறிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

சாமுவேல்சன் (Samuelson), 'ஒவ்வொரு மைய வங்கிக்கும் ஒரு முதன்மையான பணி இருக்கின்றது. அது பொருளாதாரத்தின் பணம், கடன் ஆகியவற்றின் அளிப்பைக் கட்டுப்படுத்தும் வகையில் செயல்படுகின்றது' என்று குறிப்பிடுகின்றார். ஹாட்ரீ (Hawtrey), மைய வங்கியின் பணிகளில் முதன்மையானது இறுதி நிலைக் கடன் ஈவோனாகச் (Lender of the last resort) செயல் படுவதாகும் என்று கருதுகின்றார்.

ஷா (Shaw), 'மைய வங்கியின் ஓர் உண்மையான, அதே நேரத்தில் எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பணி கடனைக் கட்டுப்படுத்துவதாகும்' என்று கூறுகின்றார்.

'பண அளவையின் தரத்தை நிலைப்படுத்துவதுதான் மைய வங்கியின் இன்றியமையாத பணி' என்று கிஷ் (Kisch), எல்கின் (Elkin) என்பவர்கள் குறிப்பிடுகின்றனர்.

டி காக் (De Kock), நாட்டின் பொருளாதார நலன் கருதி மைய வங்கி கீழ்க்காணும் பணிகளைச் செய்யவேண்டுமென்று பட்டியல் போட்டுத் தருகின்றார் :

1. வாணிபத்தின், பொதுமக்களின் தேவைக்கேற்பப் பணத்தை நெறிப்படுத்துதல்; இதற்காகப் பண வெளியீட்டின் முற்றுரிமையோ, குறைந்த அளவு முற்றுரிமையில் ஒரு பகுதியோ மைய வங்கிக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

2. அரசுக்காகப் பொது வங்கிப் பணிகளையும், பதிலாள் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

3. வாணிப வங்கிகளின் ரொக்க இருப்பின் பாதுகாவலராக இருத்தல்.

4. நாட்டின் பன்னாட்டுப் பண இருப்பிற்குப் பாதுகாவல ராக இருந்து நிருவகித்தல்.

5. வாணிப வங்கிகள், உண்டியல் தரகர்கள், வணிகர்கள், பிற நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு மறு கழிவுப் (Rediscount), பத்திர முன்பணம் முதலிய வழிமுறைகளின் மூலமாகக் கடன் வசதியளித்தல். வங்கிகளின் இறுதிநிலைக் கடன் ஈவோனாகப் பொறுப்பேற்றுக்கொள்ளல்.

6. வங்கிகளுக்கிடையில் இருக்கின்ற பாக்கிகளைத் தீர்த்து வைத்தல்.

7. வாணிபத்தின் தேவைகளுக்கேற்பவும், அரசு பின்பற்றுகின்ற விரிவான பணக்கொள்கையைச் செயல்படுத்தும் நோக்கத்திலும் கடனைக் கட்டுப்படுத்துதல்.

டி காக், மேலும், நாட்டின் பண வங்கிக் கொள்கைக்கு ஏற்ற அளவில் மட்டுந்தான், மைய வங்கி பொதுமக்களோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளவேண்டுமென்று குறிப்பிடுகின்றார்.

பேராசிரியர் ஸ்பிராக் (Professor Sprague), 'மைய வங்கிகளின் சிறப்புப் பணிகளை மூன்று தலைப்புகளில் பிரிக்கலாம். அவை, அரசுகளின் நிதிப் பதிலாளிகளாகப் (Fiscal Agents) பணியாற்றுகின்றன ஏறத்தாழப் பண வெளியீட்டில் முற்றுரிமை பெற்றிருப்பதன் மூலம் பணத்தைக் கட்டுப்படுத்த, அவை மிகுதியான அதிகாரங்களைப் பெற்றிருக்கின்றன. இறுதியாக, அவை மற்றைய வங்கிகளின் இருப்புகளில் பெரும்பகுதியை வைத்திருப்பதால் கடனின் முழு அமைப்பிற்குமான அடிப்படையை அமைக்கின்ற பொறுப்பு நேரடியாக அவற்றிடம் இருக்கின்றது' என்று கூறுகின்றார்.

மைய வங்கியின் பணிகளில் எது முதன்மையானது என்ற கேள்வி அடிக்கடி எழுப்பப்படுகின்றது நடைமுறையில் மைய வங்கியின் பணிகளில் எந்த ஒன்றையும் தனியாகப் பிரித்து, இது தான் மைய வங்கியின் தலையாய பணியென்று கூறமுடியாது. ஏனென்றால், மைய வங்கியின் பணிகள் எல்லாம் இணைந்தவைகளாகவும், ஒன்றுக்கொன்று துணைசெய்கின்றவைகளாகவும் இருக்கின்றன. மொத்தத்தில் இலாப நோக்கமின்றி, நாட்டின் பொதுநலனை முன்வைத்து மைய வங்கிகள் செயல்பட வேண்டுமென்று கூறலாம். மைய வங்கியின் பொதுவான பணிகளை வகைப்படுத்தி விளக்கிக் கூறலாம்.

1. **பண வெளியீடு:** மைய வங்கியின் முக்கியமான பணிகளில் பணத்தை வெளியிடுவதும் ஒன்றாகும். பெரும்பாலும் இது மைய வங்கியின் முற்றுரிமையாக இருக்கின்றது மைய வங்கியின் வளர்ச்சியோடு, பணத்தை வெளியிடுகின்ற பணியும் இணைந்தே வந்திருப்பது கவனிக்கத்தக்க ஒன்றாகும். நாட்டிலும் பன்னாட்டுத் தொடர்பிலும் பணத்தின் மதிப்பைக் காப்பது மைய வங்கியின் பொறுப்பாக இருக்கின்றது. இந்தப் பொறுப்பைத் திறமையாக நிறைவேற்ற பணம் வெளியிடுகின்ற உரிமை மைய வங்கியிடம் இருப்பது தேவையாகின்றது நாட்டின் பண அளவையும் வணிக வங்கிகளின் கடன் உற்பத்தி ஆற்றலையும் மைய

வங்கி பண வெளியீட்டு உரிமையின் மூலமாகவே கட்டுப்படுத்து கின்றது.

முன்னர்ச் சில நாடுகளில் காகிதப்பணத்தை அரசே வெளி யிட்டது. ஆனால், பணத்தின் மதிப்புக் குறைந்தபொழுது, மக்களுக்கு அரசின் மீதிருக்கின்ற நம்பிக்கையும் குறையத் தொடங்கியது. இதனால் அரசு, பணம் வெளியிடுகின்ற உரிமையை முன்னர்ப் பணியாற்றிக்கொண்டிருந்த வங்கிகளின் கையில் விடவோ, அல்லது காகிதப்பணத்தை வெளியிடவோ, தனியாக வங்கிகளை நிறுவவோ வேண்டியதாயிற்று. சில நாடு களில் பல வங்கிகளிடம் இந்தப் பணியை ஒப்படைத்திருந்தனர். இதன் விளைவாகப் பல வகையான காகிதப்பணம் புழக்கத்திற்கு வந்தது. மக்கள் பெருங்குழப்பத்திற்குள்ளாகும் நிலை ஏற்பட்டது.

காகிதப்பண வெளியீட்டை நெறிப்படுத்துவதற்காகவும், ஒரே வகையான பணத்தைப் புழக்கத்திற்குக் கொண்டுவரவும் பல நாடுகளில் சட்டங்கள் இயற்றியுள்ளார்கள். இதற்கு எடுத்துக் காட்டுகளைக் கூறலாம். 1814-ல் ஹாலந்திலும், 1844-ல் இங்கிலாந்திலும், 1897-ல் ஸ்வீடனிலும், 1914-ல் அமெரிக்கா விலும், 1923-ல் கொலம்பியாவிலும், 1924-ல் ஆஸ்திரேலியா விலும், 1926-ல் இத்தாலியிலும், 1935-ல் கானடாவிலும் காகிதப்பணத்தை வெளியிடுவதை நெறிப்படுத்தும் சட்டம் இயற்றப்பட்டது.

1844ஆம் ஆண்டின் இங்கிலாந்து வங்கிச் சட்டம் (The Bank Act of England) மற்றைய வங்கிகளுக்கும் சில கட்டுப்பாடு களுக்கு உட்பட்டுக் காகிதப் பணத்தை வெளியிடுகின்ற உரிமையை வழங்கி இருந்தது. ஆனால், 1920ஆம் ஆண்டுச் சட்டம் மற்றைய வங்கிகள் பணத்தை வெளியிடுவதைத் தடை செய்தது. இங்கிலாந்து வங்கிக்கே பண வெளியீட்டில் முற்றுரிமை வழங்கப்பட்டது.

ஜெர்மனியில் 1875ஆம் ஆண்டில் காகிதப்பணம் வெளியிடு கின்ற உரிமையை 33 வங்கிகள் பெற்றிருந்தன. அப்பொழுது ஜெர்மனியின் மைய வங்கி (Reichs Bank) நிறுவப்பெற்றது. அரசு வங்கிகள் பணத்தை வெளியிடுவதில் பல கட்டுப்பாடுகளை விதித்தன. கட்டுப்பாடுகளின் காரணமாக வங்கிகள் பணம் வெளியிடுகின்ற உரிமையை ஒவ்வொன்றாக மைய வங்கியிடம் ஒப்படைத்தன. 1935-ல் பணம் வெளியிடுகின்ற முற்றுரிமை மைய வங்கியின் கைக்கு வந்துவிட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

சட்டப்படி பார்த்தால் பணம் வெளியிடுகின்ற உரிமை அரசினுடையதாகும். இதனை இப்பொழுது பெரும்பாலான அரசுகள் மைய வங்கிகளுக்கு வழங்கியுள்ளன. ஒரு காலத்தில் பண வெளியீட்டு உரிமை வாணிப வங்கிகளுக்கும் அளிக்கப் பெற்றிருந்தன. ஆனால், வாணிப வங்கிகள் இந்த உரிமையைத் தக்கவகையில் பயன்படுத்தவில்லை. தகுதியான தங்கக் காப்பின்றிப் பல வங்கிகள் பணத்தை வெளியிட்டன. இதனால் வரம்பின்றிப் பண அளவு கூடியது. பொதுமக்கள் காகிதப் பணத்திற்குத் தங்கம் கேட்டபொழுது பல வங்கிகளால் கொடுக்க இயலவில்லை. இதனால் பணத்தின்மீதும், அதனை வெளியிட்ட வங்கியின்மீதும் இருந்த மக்கள் நம்பிக்கை ஆட்டம் கண்டது. பல வங்கிகள் பலவகையான பணத்தாள்களை வெளியிட்டதும் ஒரு தனிச் சிக்கலாக இருந்தது.

அரசு நேரடியாகத் தானே பணத்தை வெளியிடுமானால், அது தேவையானபொழுதெல்லாம் வரம்பின்றிக் காகிதப் பணத்தைப் பெருக்கிக்கொண்டே போகின்ற நிலை ஏற்படலாம் என்று கருதப்பட்டது. ஆதலால், பண வெளியீட்டு உரிமையை மைய வங்கி போன்று ஒரு தனி நிறுவனத்திடம் விட்டுவைப்பதே சிறந்ததென்று கூறப்படுகின்றது.

டி காக், காகிதப் பண வெளியீட்டுரிமை, மைய வங்கியின் கையில் மட்டும் இருக்கவேண்டுமென்பதற்கு நான்கு முக்கிய மான காரணங்களைக் கூறுகின்றார்.

முதலாவதாக, ஒரே வகையான பணம் வெளியிடப்பெறும். ஒரே வகையான பணம் புழக்கத்திலிருந்தால், அரசு அதனைத் திறமையாகக் கட்டுப்படுத்தும்.

இரண்டாவதாக, வங்கிகளின் கடன் அளவைக் கட்டுப் படுத்த முடிகின்றது. அடிப்படையில் ஓரளவு ரொக்கத்தை வைத்துக் கொண்டுதான் வங்கிகள் கடன்களை உற்பத்திசெய்ய முடியும். ஆதலால், ரொக்க வெளியீட்டை நெறிப்படுத்துவதன் மூலம் வங்கிகளின் கடன் உற்பத்தி ஆற்றலைக் கட்டுப்படுத்துவது எளிதாகின்றது.

மூன்றாவதாக, காகிதப்பணம் வெளியிடுகின்ற உரிமை இருப்பதால், மைய வங்கிக்குத் தனிச் செல்வாக்கு இருக் கின்றது. மைய வங்கி வெளியிடுகின்ற பணம் சட்டமுறைப் பணமாகும். அரசின் ஆதரவில் பணத்தை வெளியிடுவதாலேயே

மைய வங்கியின்மீது பொதுமக்களுக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்படுகின்றது. இத்தகைய நம்பிக்கை நெருக்கடி காலங்களில் வங்கி முறையின் வெற்றிக்குப் பெருந்துணையாக இருக்கின்றது.

நான்காவதாக, பண வெளியீட்டில் கிடைக்கின்ற இலாபம் அரசுக்குக் கிடைக்கின்றது. பல வங்கிகளைப் பணத்தை வெளியிட அனுமதித்து, அவற்றின்மீது வரி விதித்து அரசு வருவாயைப் பெறலாம். ஆனால், அப்படிப்பட்ட நிலையில் பண வெளியீட்டைத் திறமையாகக் கட்டுப்படுத்த இயலாது. மைய வங்கி மட்டும் பணத்தை வெளியிடுகின்றபொழுது, பண அளவைக் கட்டுப்படுத்துவதும் எளிதாக இருக்கின்றது.

மைய வங்கி மட்டும் பணத்தை வெளியிடுகின்றபொழுது, ஒரே வகையான (Uniformity) பணம் புழக்கத்தில் இருப்பதோடு கூடப் பண அளவில் நெகிழ்வுத்தன்மை (Elasticity) இருப்பதும், பாதுகாப்புத்தன்மை (Security) இருப்பதும் சுட்டிக் காட்டப் படுகின்றது.

காகிதப்பண வெளியீட்டைப்பற்றி இருவகையான கொள்கைகள் இருக்கின்றன. ஒன்று ஓவர்ஸ்டோன் பிரபு (Lord Overstone), சர் ராபர்ட் பீல் (Sir Robert Peel) ஆகியவர்களால் விளக்கப்பெற்ற நாணயக்கொள்கை (Currency Principle) ஆகும். மற்றொன்று டேவிட் ரிக்கார்டோ (David Ricardo) முதலியவர் களின் ஆதரவைப்பெற்ற வங்கிக்கொள்கை (Banking Principle) ஆகும். இங்கிலாந்தில் *1844*ஆம் ஆண்டின் வங்கிச் சாசனச் சட்டத்தை (Bank Charter Act) இயற்றுவதற்கு முன்னால் கருத்தியலடிப்படையில் பண வெளியீட்டைப்பற்றித் தோன்றிய, மோதுகின்ற இந்த இரண்டு கொள்கைகளும் இன்றும் சில மாறு பட்ட கருத்துகளோடு பேசப்படுகின்றனவென்பதைக் கவனிக்க வேண்டும்.

நாணயக் கொள்கையின் ஆதரவாளர்களின் கருத்திற் கிணங்க, காகிதப் பணத்தின்மீது பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படவேண்டுமானால், காகிதப்பண வெளியீட்டு அளவிற்கு நூற்றுக்கு நூறு சதவீதம் தங்கமோ, வெள்ளியோ மைய வங்கியின் கையிருப்பில் வைத்துக்கொள்ளவேண்டும். காகிதப் பணத்தை பொதுமக்கள் விரும்புகின்ற வேளையில், தங்க மாகவோ வெள்ளியாகவோ மாற்றுகின்ற உரிமை மக்களுக்கு இருக்கவேண்டும். இந்த முறையில் பொன், வெள்ளிக்காசுகள் புழக்கத்தில் இருக்காதென்றாலும், இது மற்றைய வகைகளில் பொன் மாற்றுத்திட்டம் போன்றே செயல்படக் கூடியதாகும்.

வங்கிக் கொள்கையை வலியுறுத்துகின்றவர்கள் காகிதப் பணத்திற்குப் பின்புலமாக நூற்றுக்கு நூறு உலோகத்தைத் தேவையற்றதென்று கருதுகின்றனர். உள்நாட்டுப் புழக்கத்திற்குக் காகிதப் பணத்தைத் தங்கமாகவோ, வெள்ளியாகவோ மாற்றுவது தேவை இல்லை ஆதலால், வெளியிடுகின்ற காகிதப் பணத்தின் மதிப்பில் ஒரு பகுதிக்கு மட்டும் உலோகக் கையிருப்பு வைத்திருந்தால் போதும். இந்தக் கருத்து வாணிப வங்கிகள் குறைந்த கையிருப்பை வைத்துக்கொண்டு கூடிய அளவில் கடன் கொடுக்கின்ற வங்கி நடைமுறையிலிருந்து தோன்றியதாகும்.

நாணயக் கொள்கைப் பாதுகாப்பை (safety) நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. இக் கொள்கையைப் பின்பற்றினால் வரம்பு கடந்து பணத்தை வெளியிடும் நிலை ஏற்படாது. வங்கிக் கொள்கை புழக்கப்பண அளவில் நெகிழ்வுத் தன்மையை (elasticity) ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. அரசு, நாணயக் கொள்கையைப் பின்பற்றினால், அதன் விருப்பம் போலக் காகிதப்பணத்தைப் பெருக்கிக்கொண்டு போகமுடியாது. இதன் காரணமாக, நூற்றுக்கு நூறு உலோக இருப்பை வைத்துக் கொண்டு பணம் வெளியிடுகின்ற இம் முறையை எந்த நாடும் விரும்புவதில்லை. பொதுமக்களுக்குக் காகிதப்பணத்தைத் தங்கமாகவோ வெள்ளியாகவோ மாற்றும் வாய்ப்பு இருந்தால்தான் பொதுமக்களுக்குக் காகிதப் பணத்தின்மீது நம்பிக்கை ஏற்படுமென்று கூறமுடியாது. காகிதப் பணத்தின்மீது ஏற்படுகின்ற நம்பிக்கை அரசின்மீதுள்ள நம்பிக்கையை ஒட்டி எழுகின்றது. வங்கிக் கொள்கை காகிதப் பணத்தைச் சிக்கனமாக வெளியிட வாய்ப்பளிக்கின்றது. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கேற்ப பணத்தின் அளவைக் கூட்டவோ, குறைக்கவோ செய்யலாம். இந்த முறையின் வெற்றி, பண ஆட்சியாளர்களின் திறமையை ஒட்டி அமைகின்றது. பண ஆட்சியாளர்கள் பணத்தைத் திறமையாக நிருவகிப்பதன்மூலம் அவர்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளலாம். இதனால், இப்பொழுது எல்லா நாடுகளும் காகிதப் பண வெளியீட்டில் வங்கிக் கொள்கையைப் பின்பற்றுகின்றன.

மைய வங்கி, காகிதப் பணத்தை வெளியிடுகின்றபொழுது பல முறைகளைப் பின்பற்றுகின்றது. அவற்றைத் தொகுத்துக் கூறுவோம் :

முதலாவது முறை, உச்ச வரம்பு நம்பிக்கைத் திட்டம் (Maximum Fiduciary System) எனப்படுவதாகும். இம் முறையில்

மைய வங்கிக்கு ஓரளவுவரை தங்க ஈடு இல்லாமல் காகிதப் பணத்தை வெளியிடுகின்ற உரிமையை அரசு அளிக்கின்றது. இந்த உச்ச வரம்பின் அளவை நாட்டின் தேவைக்கேற்ப அரசு மாற்றலாம். இந்தக் குறிப்பிடப்பட்ட உச்ச வரம்பின் அளவிற்கு மேல் காகிதப் பணத்தை வெளியிடுகின்றபொழுது, மைய வங்கி அதற்கு ஈடாகத் தங்கமோ வெள்ளியோ வைத்திருக்கவேண்டும். இதனால், ஒரு குறிப்பிட்ட அளவுவரை நெகிழ்வுத் தன்மை இருக்கின்றது மைய வங்கியால் ஒரு வரையறைக்கு உட்பட்டுத் தான் பண அளவைக் கூட்டவோ, குறைக்கவோ முடியுமென்ப தைக் கவனிக்கலாம். ஆனால், அதே நேரத்தில் பண வெளியீடு அளவு கடந்து (Over issue) போய்விடாமலும் இந்த முறை தடை செய்கின்றது. இதனால் பணவீக்கம் ஏற்படுவதை ஓரளவு தடை செய்ய முடிகின்றது. அரசு, உச்ச வரம்பின் அளவை மேன்மேலும் கூட்டிக்கொண்டே சென்றால், இந்தத் திட்டத்திலும் பணவீக்கம் ஏற்பட வழி இருக்கின்றது. 1939ஆம் ஆண்டில் காகிதப் பண வெளியீட்டில் இங்கிலாந்து, இந்த முறையைப் பின்பற்றியது. இங்கிலாந்தைத் தொடர்ந்து வேறு பல நாடுகளிலும் இந்த முறையில் காகிதப் பணத்தை வெளியிட்டதை வங்கிகளின் வரலாறு காட்டுகின்றது.

இரண்டாவது, வரையறை செய்த நம்பிக்கைத் திட்டமாகும் (Fixed Fiduciary System). இந்தத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஓர் அளவுவரை, பொன்னைக் காப்பாக வைத்துக்கொள்ளாமல் அதற்குப் பதிலாக அரசாங்கக் கடன் பத்திரங்களை (Securities) ஈடாக வைத்துக்கொண்டு காகிதப்பணத்தை வெளியிட மைய வங்கிக்கு உரிமை வழங்கப்படுகின்றது. வரையறை செய்த நம்பிக்கை அளவிற்குமேல் வெளியிடுகின்ற பண அளவிற்குச் சமமாகத் தங்கம் வைத்திருக்க வேண்டும்.

இந்தத் திட்டத்தைப் பின்பற்றுகின்றபொழுது, மைய வங்கியால் அளவுக்கதிகமாகக் காகிதப்பணத்தை வெளியிடமுடியாது. இதனால் நாட்டில் பண வீக்கம் ஏற்படாது. இதில் வெளியிடுகின்ற பணத்திற்குப் பின்புலமாகக் கடன் பத்திரங்களும் தங்கமும் இருக்கின்றன. இதனால், இத் திட்டத்தைப் பொதுமக்கள் மிகவும் நம்புவார்கள். ஆனால், நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கேற்ப பணத்தின் அளவைக் கூட்டமுடியாதது இத் திட்டத்திலுள்ள குறையாகும்.

இம் முறையை 1844முதல் 1928வரை இங்கிலாந்து பின்பற்றியது. நமது நாட்டில் 1861ஆம் ஆண்டுச் சட்டம் இம் முறையைப் புகுத்தியது.

மூன்றாவது பண வெளியீட்டுமுறை, வீத அளவுக்காப்பு முறை (Proportional Reserve System) ஆகும். இந்த முறையில் வெளியிடுகின்ற பணத்தின் அளவில் எத்தனை சதவீதம் பொன்னோ வெள்ளியோ வைத்திருக்கவேண்டும் என்பதை அரசு குறிப்பிடுகின்றது. இதற்குமேல் கடன் பத்திரங்களை வைத்திருக்கலாம். எடுத்துக்காட்டாக, 25 சதவீதம் உலோகக் காப்பு இருக்கவேண்டுமென்று அரசு விதித்திருக்கின்றதென்று வைத்துக் கொள்வோம். மைய வங்கி நூறு கோடி ரூபா காகிதப் பணத்தை வெளியிடவேண்டுமானால், 25 கோடி ரூபாய் மதிப்புள்ள பொன்னையோ, வெள்ளியையோ வைத்திருக்க வேண்டும். இந்த வீதம் நாட்டிற்கு நாடு, அந்தந்த நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்ப மாறுபடும். ஒரே நாட்டில் தேவையை ஒட்டிக் குறிப்பிடப்பட்ட மாற்று விகிதத்தை அரசு மாற்றி நிருணயிக்கலாம். இத் திட்டம் மிகவும் நெகிழ்ச்சித் தன்மையுடையதாக இருக்கின்றது. நாட்டின் தேவையை ஒட்டிப் பணத்தின் அளவைக் கூட்டவோ குறைக்கவோ முடிகின்றது. ஆனால், இந்தத் திட்டத்தில், பணம் வெளியிடுவதற்குக் குறைந்த அளவில் எவ்வளவு இருக்கவேண்டுமோ அந்த அளவிற்கும் கீழே விகித அளவைக் குறைக்க வழியுண்டு.

மேலும், நாட்டிலிருந்து சிறிய அளவுத் தங்கம் வெளியேறினாலும் மிகுதியான அளவில் புழக்கத்திலுள்ள காகிதப்பணத்தின் அளவைக் குறைக்க வேண்டியதாகின்றது. இது நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கும். நமது நாட்டில் 1934ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தைப் பின்பற்றினார்கள். இந்த முறையை அமெரிக்கா இப்பொழுது பின்பற்றுகின்றது.

நான்காவது, குறைந்த அளவுக் காப்புமுறை (Minimum Reserve System) என்பதாகும். இந்த முறையில் மைய வங்கி சட்டத்தால் குறிப்பிடப்பட்ட ஓர் அளவிற்குக் காப்பாகத் தங்கத்தை வைத்துக்கொண்டு எந்த அளவு வேண்டுமானாலும் காகிதப்பணத்தை வெளியிடலாம். காப்பாகத் தங்கத்தோடு கடன் பத்திரங்களையும் வைத்துக்கொள்ளச் சட்டம் வழிசெய்யலாம். இம் முறை, பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டி ஆக்கப் பணிகளில் ஈடுபடுகின்ற நாடுகளுக்கு மிகவும் ஏற்ற முறையாகும். தேவைக்கேற்ப பண வெளியீட்டை உயர்த்திக் கொள்ளலாம். இது முற்றிலும் நெகிழ்ச்சியுடைய முறையாகும். ஆனால், அரசின் தேவைக்கேற்ப காகிதப்பணத்தை அளவு கடந்து வெளியிட வேண்டியதும் நேரிடலாம். இதனால், பண

வீக்கம் ஏற்படும். இப்பொழுது நமது நாடு இந்த முறையைப் பின்பற்றுகின்றது.

ஐந்தாவது, மிகையூதிய வைப்புமுறை (Bonus Deposit System) என்பதாகும். இந்த முறையில் குறிப்பிடப்பெற்ற காப்பிற்கு, அரசினது கருவூல உண்டிகளை (Treasury Bills) வைத்துக்கொள்ளலாம். இந்த முறை இதுவரை பரவலாகப் புழக்கத்திற்கு வரவில்லை. சில நாடுகள் மட்டும் சில வேலைகளில் சூழ்நிலையை ஒட்டி இந்த முறையைப் பின்பற்றியிருக்கின்றன. அமெரிக்காவில் 1913ஆம் ஆண்டுக்கு முன்னால் இம் முறைப்படி வங்கிப்பணம் வெளியிடப்பட்டது.

காகிதப்பண வெளியீட்டு முறைகளில் எது சிறந்ததென்று வரையறுத்துக் கூறமுடியாது. காலச் சூழ்நிலைக்கேற்ப ஒவ்வொருமுறை ஒவ்வொரு நாட்டிற்கு ஏற்றதாக இருக்கலாம். எந்த முறையைப் பின்பற்றினாலும் பண அளிப்பில் பாதுகாப்பும் நெகிழ்வுத்தன்மையும் இருக்கின்ற தன்மையிலேயே இருக்கும் படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

**2. அரசின் வங்கி:** சேயர்ஸ், 'மைய வங்கி அரசின் ஓர் அங்கமாகும்' என்று கூறுகின்றார். இதனை, மைய வங்கி பல வகைகளிலும் அரசின் வங்கியாகப் பணியாற்றுவதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். எல்லா நாடுகளிலும் மைய வங்கிகள், அரசின் ஆலோசகராகவும், பதிலாளாகவும், வங்கியாளராகவும் பணியாற்றுகின்றன.

ஒரு வணிக வங்கி, அதன் வாடிக்கையாளருக்குச் செய்கின்ற பணிகளை எல்லாம் அரசுக்கு மைய வங்கி செய்கின்றது. அரசின் வங்கி (Bank of the State) என்ற முறையில் அரசின் பல்வேறு துறைகளுக்கும் நிறுவனங்களுக்கும் வேண்டிய கணக்குகளை வைத்துக்கொள்கின்றது; அரசுக்காகப் பணம் பெறுகின்றது. அரசு தரவேண்டிய பணத்திற்காக ரொக்கம் தருதல், வங்கி வசதிகளை ஏற்படுத்தித் தருதல் முதலிய பணிகளையும் செய்கின்றது. அரசின் வரி வருவாயை எதிர்நோக்கி இருக்கும் வேளையில், அரசின் செலவுகளுக்கு முன்பணம் வழங்குகின்றது. பொதுமக்களிடம் அரசுக்காகக் கடன் வசூலித்துத் தருகின்றது. போர்க்காலத்திலும் நெருக்கடிச் சூழ்நிலைகளிலும் தேவையான பணத்தை அளிக்கின்றது.

மைய வங்கி, அரசுக்கு வேண்டிய அந்நியச் செலாவணியைத் தேடித் தருகின்றது. அயல்நாடுகளில் அரசுக்கு வேண்டிய

பொருள்களை வாங்கித் தருகின்றது. அரசின் பல்வேறு நிதி நடவடிக்கைகள் பண அங்காடி நிலைகளையும், மாற்று விகிதத்தையும், மைய வங்கியின் கடன் கொள்கைகளையும் பாதிப்பதால் அரசின் வங்கி நடவடிக்கைகளை எல்லாம் மைய வங்கியே மேற்கொள்வது சிறப்பாக இருக்கின்றது.

அரசுக்கு வேண்டிய குறுகிய காலக் கடனை வழங்குவதில் மைய வங்கி முக்கியப் பணி புரிகின்றது. அரசின் கருவூலச்சீட்டு களைத் (Treasury Bills) கழிவு செய்து முன்பணம் அளிக்கின்றது. மைய வங்கி கருவூல உண்டியல்களின்மீதோ, அரசின் பத்திரங் களின் மீதோ கடன் கொடுக்கின்றபொழுது, அரசு பணத்தைப் பெற்றுச் செலவிடுகின்றது. இதனால், பணம் பெறுகின்றவர்கள் மறுபடியும் இந்தப் பணத்தை வணிக வங்கிகளில் செலுத்து வார்கள். இத்தகைய பணத்தின் அடிப்படையில் வாணிப வங்கிகள் மேலும் கடன்களை விரிவுபடுத்துகின்றன. இதனால் பணவீக்கம் ஏற்படலாம். இதைக் கருதித்தான் மைய வங்கி சுயேச்சையாக இயங்கவேண்டுமென்று கூறுகின்றனர்.

அரசின் சார்பில் அரசின் பணக்கொள்கையைச் செயல் படுத்துகின்ற பணி மைய வங்கியிடம் இருக்கின்றது. தேவை யானவற்றில் எல்லாம் மைய வங்கியின் ஆலோசனையின்படி அரசு செயல்படுகின்றது.

**3. வங்கிகளின் வங்கி:** நாட்டிலிருக்கும் எல்லா வங்கி களுக்கும் தலைமை வங்கியாக மைய வங்கி செயல்படுகின்றது. வணிக வங்கிகளுக்குப் பல வழிகளில் வழிகாட்டியாகவும் தோன்றாத் துணையாகவும் மைய வங்கி இருக்கின்றது. இதனால் வணிக வங்கிகள் மைய வங்கியைத் தங்களுடைய தலைமையாக ஏற்றுக்கொள்கின்றன. மைய வங்கி வாணிப நோக்கோடு செயல்படாமையால், அது மற்ற வங்கிகளோடு போட்டியிடுவதில்லை. இதனால் மைய வங்கியின்மீது வாணிப வங்கிகள் கொண்டிருக்கின்ற நம்பிக்கை வளர்கின்றது. வணிக வங்கிகளைக் கட்டுப்படுத்துகின்ற மைய வங்கி, அவை இடர்ப் பாட்டுக்குள்ளாகின்ற காலங்களில் அவற்றிக்குக் கைகொடுத்து உதவி செய்கின்றது. நாட்டின் பணக்கொள்கையைச் செயல் படுத்துகின்ற பொறுப்பு மைய வங்கியிடம் உள்ளது. இந்தப் பணியைத் திறம்படச் செய்ய வணிக வங்கிகளின் ஒத்துழைப்புத் தேவைப்படுகின்றது.

மைய வங்கி (i) வணிக வங்கிகளின் ரொக்க இருப்புப் பாது காவலனாகவும், (ii) வங்கிகளின் தீர்வகமாகவும், (iii) இறுதி நிலைக்கடன் ஈவோனாகவும் பணியாற்றுகின்றது. இவற்றைத் தனித்தனியாக விளக்குவோம்.

முதலாவதாக, வங்கிகளின் வங்கி என்ற முறையில் வாணிப வங்கிகளின் ரொக்க இருப்பில் ஒரு பகுதியை ஏற்று வைத்திருக் கின்றது. வழக்கத்தின் காரணமாகவோ, சட்டம் வலியுறுத்துவ தாலோ வணிக வங்கிகள் தங்களுடைய ரொக்க இருப்பில் ஒரு பகுதியை மைய வங்கியிடம் கொடுத்து வைக்கின்றன. இம் முறையை முதன்முதலில் சட்டத்தின் அடிப்படையில் அமெரிக்கா 1936ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் ஏற்படுத்தி யது. இதனைப் பின்பற்றிப் புதிதாக அமைந்த பல மைய வங்கிகளில் இந்நிலையை ஏற்படுத்தியிருக்கின்றனர். நமது நாட்டிலும், இம் முறை ஏற்பட்டிருக்கின்றது. இது, நாட்டின் பணப் பொருளாதாரச் சூழ்நிலை செவ்வனே அமைவதற்கு, வணிக வங்கிகளிடம் இருக்கின்ற இருப்புகளில் ஒரு பகுதி மொத்தமாக மைய வங்கியிடம் இருப்பதற்குத் துணை செய்கின்றது. வணிக வங்கிகளிடம் சிதறிய நிலையில் ரொக்க இருப்பு இருப்பதைவிட, ரொக்க இருப்புகளைக் குவிதலான நிலையில் மைய வங்கியிடம் வைத்திருப்பதால், நாட்டின் கடன் அமைப்பு முறை பெரிய அளவிலும் நெகிழ்வுடையதாகவும் அமைகின்றது. வணிக வங்கிகளின் ரொக்க இருப்பெல்லாம் மைய வங்கியிடம் இருப்பதால் கீழ்க்காணும் நன்மைகள் கிடைக் கின்றன :

1. வணிக வங்கிகள் மைய வங்கியிடம் இருப்பு வைத்திருப் பதை அறிகின்ற பொதுமக்களின் நம்பிக்கை மேன்மேலும் வங்கி களின்மீது வளர்கின்றது.

2. மொத்தமாக ஒன்றுசேர்த்த நிலையில் ரொக்க இருப்பு வைத்திருப்பதால், நெருக்கடி நேரங்களில் உரியமுறையில் அதனை மைய வங்கியால் பயன்படுத்த முடிகின்றது.

3. எந்த வங்கிக்கு மிகுதியாக நிதி உதவி தேவையோ, அந்த வங்கிக்கு மொத்தமாக இருக்கும் ரொக்க இருப்பிலிருந்து நிதி உதவி செய்யப்படுகின்றது.

4. நாட்டின் கடன் அமைப்புக்கு விரிந்த அடித்தளம் அமைத்துக் கொடுத்துக் கடன் அளவில் நெகிழ்வுத்தன்மையை ஏற்படுத்துகின்றது.

5. வணிக வங்கிகளின் ரொக்கத்தன்மை மிகுதிப்படுகின்றது.

6. மைய வங்கி, வணிக வங்கிகளின் கடனளவைக் கட்டுப்படுத்த ரொக்க இருப்பு ஒரு கருவியாகப் பயன்படுகின்றது. ரொக்க இருப்பு வீதத்தை மாற்றி வணிக வங்கிகள் வழங்குகின்ற கடன் அளவைக் கட்டுப்படுத்தலாம்.

இரண்டாவதாக, மைய வங்கி, வணிக வங்கிகளின் தீர்வகமாகச் செயல்படுகின்றது. எல்லா வங்கிகளும் மைய வங்கியிடம் ரொக்க இருப்பு வைத்திருக்கின்றன. இதனால் வங்கிகள் தங்களுக்கிடையில் தரவேண்டிய கடனை ரொக்கமாகத் தர வேண்டும் என்பதில்லை. அவை மைய வங்கியின் மீது காசோலைகளைக் கொடுத்துக் கடனைத் தீர்த்துக் கொள்ளலாம். இதனால் பணத்தைப் பயன்படுத்தாமலேயே வங்கிகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுகின்றன. மைய வங்கி நாடெங்கும் தீர்வகங்களை அமைத்துத் தருகின்றது. இந்தத் தீர்வகங்களில் வங்கிகளின் சார்பாளர்கள்கூடி, ஒரு வங்கி மற்றைய வங்கிகளிடமிருந்து பணம் பெறவேண்டிய காசோலைகளைக் கொடுத்தும், பணம் தரவேண்டிய காசோலைகளைப் பெற்றும் கணக்கைக் தீர்த்துக்கொள்ள வழி இருக்கின்றது. மைய வங்கி தீர்வக வசதியளிப்பதால் வணிக வங்கிகளால் குறைந்த அளவு ரொக்கத்தை வைத்துக்கொண்டு மிகவும் சிக்கனமாகச் செயல்பட முடிகின்றது.

இந்த முறையால் மொத்தத்தில் ரொக்கப்பணத்தைக் குறைவான அளவில் பயன்படுத்த முடிகின்றது. இது வங்கி முறையை வலிமைப்படுத்துகின்றது. நெருக்கடி நேரங்களில் அதிகமாகப் பணத்தை வெளியில் எடுக்காமல் இருக்க இம்முறை துணை செய்கின்றது. மைய வங்கியிடம் வணிக வங்கிகள் ரொக்கத்தை வைத்திருப்பதிலிருந்து வணிக வங்கிகளின் ரொக்க நிலைமையை மைய வங்கி அறிந்துகொள்ள முடிகின்றது.

மூன்றாவதாக, மைய வங்கி, வணிக வங்கிகளின் இறுதி நிலைக் கடன் ஈவோனாகச் (Lender of the last resort) செயல்படுகின்றது. வணிக வங்கிகள், தங்களுடைய நிதி எல்லாவற்றையும் செலவிட்ட நிலையில், வெளியிலிருந்து நிதியுதவி கிடைக்காதபோது, மைய வங்கி நிதியுதவி செய்து நெருக்கடி நிலைமை தோன்றாமல் வணிக வங்கிகளைக் காக்கின்றது. பொதுவாக, வணிக வங்கிகள் கழிவுசெய்து வைத்திருக்கின்ற

பத்திரங்களை மறுகழிவு செய்வதன் மூலமாக வணிக வங்கிகளுக்குப் பணம் கிடைக்கச் செய்கின்றது. இதனால்தான் ஹாட்ரி (Hawtrey), 'போட்டியிடுகின்ற வங்கிகளுக்கிடையில் ரொக்கப் பற்றாக்குறை ஏற்படுகின்றபொழுது, அதனை ஈடுகட்ட இறுதிநிலைக் கடன் ஈவோனாகப் பணிபுரிவது மைய வங்கியின் முக்கியக் கடமையாகும்' என்று கூறுகின்றார்.

கடன் பத்திரங்களை மறுகழிவு செய்து கொடுப்பது பொருளாதார அடிப்படையில் மிகவும் முக்கியமான பணியாகும். மறுகழிவு செய்வதென்பது குறுகிய பொருளில் முதல் நிலைக் கடன் பத்திரங்களைக் கழிவுசெய்து மைய வங்கி பணம் கொடுப்பதைக் குறிக்கும். ஆனால், இப்பொழுது மிகவும் விரிவான முறையில் செயல்படுத்தப்படுகின்றது. நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ வணிக வங்கிகளின் கடனை மைய வங்கியின் கடனாக மாற்றுவதை மறுகழிவு என்று கூறுகின்றோம்.

மறுகழிவு செய்கின்ற பணி, மைய வங்கி காகிதப்பணத்தை வெளியிடுவதோடும், வணிக வங்கிகளின் ரொக்க இருப்பில் ஒரு பகுதியை வைத்திருப்பதோடும் மிக நெருங்கிய தொடர்புடையதாக இருக்கின்றது. மைய வங்கி, காகிதப்பணத்தை வெளியிடும் முற்றுரிமை பெற்றிருப்பதால், நெருக்கடி நேரங்களில் வாணிப வங்கிகளின் தேவைக்கேற்பப் பணத்தைக் கொடுக்க முடியும். மேலும் வங்கிகளின் ரொக்க இருப்பு மைய வங்கியிடம் இருப்பதால், அதனால் அதிகமாகக் கடன் கொடுக்க இயல்கின்றது. மறுகழிவு செய்கின்ற வாய்ப்பை வணிக வங்கிகள் தவறாகப் பயன்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நெருக்கடிச் சமயங்களில்தான் இந்த வாய்ப்பு அவற்றிற்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். நெருக்கடி நேரங்களில் தாராளமாக உதவுகின்ற மைய வங்கி சாதாரணச் சமயங்களில் மிகவும் கட்டுப்பாட்டோடு நடந்துகொள்ள வேண்டும். நெடுக்கடி காலத்தில் வணிக வங்கிகளுக்கு உதவ மைய வங்கி இருக்கின்றதென்ற உண்மை பொதுமக்களுக்கு வணிக வங்கிகளிடம் அதிக நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

**4. கடன் கட்டுப்பாடு:** நாட்டின் பண அளவைக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பு மைய வங்கியிடம் இருக்கின்றது. வணிக வங்கிகள் கடன் உற்பத்தி செய்யும் ஆற்றல் பெற்றிருக்கின்றன. வங்கிகளின் கடன் நாட்டில் பணமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதனால், வங்கிகளின் கடனளவு கூடுவதற்கேற்ப நாட்டின் பண அளவும் கூடுகின்றது. அளவுக்கதிக

மாக வங்கிப்பணம் கூடுவதால் நாட்டில் பணவீக்கம் ஏற்படும் சூழ்நிலை உருவாகும். வங்கிகள் கடன் அளவைக் குறைக்கின்ற பொழுது, நாட்டில் பணப்புழக்கம் குறையப் பணவாட்டம் தோன்றலாம். வங்கிகள் இலாப நோக்கத்தோடு செயல் படுவதால், வரம்பு கடந்த கடன் அளவைப் பெருக்கிக்கொண்டு போகலாம். இப்படிக் கடனைப் பெருக்குவதால் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கின்ற நிலை ஏற்படாமல் இருக்க மைய வங்கி, வங்கிகளின் கடன் உற்பத்தியைக் கட்டுப் படுத்துவது தேவையாகின்றது. டி காக்கின் கருத்துப்படி வணிக வங்கிகளின் கடனளவைக் கட்டுப்படுத்துவதே மைய வங்கியின் தலையாய பணியாகும். மைய வங்கி வட்டி வீதத்தை மாற்றுவது, வெளி அங்காடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது, கடன் கொள்கையை வகுப்பது, ஆலோசனை கூறுவது முதலிய பல்வேறு முறைகளைப் பின்பற்றுவதன்மூலம் இந்தப் பணியைத் திறம்படச் செய்கின்றது.

**5. அந்நியச் செலாவணியின் பாதுகாவலன்:** இந்தப் பணி பணத்தின் வெளிமாற்று மதிப்பையும் மைய வங்கி காக்க வேண்டிய பொறுப்பிலிருந்து உருவானதாகும். மைய வங்கி இரண்டு நோக்கங்களுக்காகத் தங்கத்தையும் அந்நியச் செலாவணியையும் இருப்பு வைக்க வேண்டியிருக்கின்றது. முதலாவதாக, நாட்டுப் பணத்தின் மதிப்பைக் காக்கவோ, மாற்று மதிப்பை நிலைநாட்டவோ இது தேவைப்படுகின்றது. இரண்டாவதாக, அந்நியச் செலாவணி செலுத்து நிலையில் பாதகமான சூழ்நிலை ஏற்படுமானால், அதனைத் தவிர்க்க அந்நியச் செலாவணி இருப்புத் தேவைப்படுகின்றது. காகிதப் பணம் வெளியிடுவதற்கு ஈடாக வைத்திருக்கின்ற தங்கத் தையோ அந்நியச் செலாவணியையோ வெளிநாட்டுக் கடனைத் தீர்க்க மைய வங்கி பயன்படுத்த இயலாதென்பதைக் கவனிக்கவேண்டும். பொன் திட்டத்தைக் கைவிட்ட பின்னர், உலகில் பல மைய வங்கிகள் அந்நியச் செலாவணி வங்கிகளைப் போன்றே செயல்படுவது கவனிக்கத்தக்கதாகும்.

**6. பிற பணிகள்:** மைய வங்கிகள், அந்தந்த நாட்டுச் சூழ் நிலைக்கேற்ப வேறுபல துணைப் பணிகளையும் மேற்கொள் கின்றன. இந்தியா முதலிய பின்தங்கிய நாடுகளில் வேளாண்மைத் துறை வளர்ச்சிக்கும், திட்டமிடுவதன் மூலமாக அடைய விரும்பும் பொதுப் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளுக்கும், மைய வங்கி உதவி செய்கின்றது. நாட்டின் முக்கியப் பொரு ளாதாரப் புள்ளிவிவரங்களைச் சேகரித்து வெளியிடுகின்ற

பணியையும் மேற்கொள்கின்றது. பன்னாட்டுப் பணநிதி, உலக வங்கி ஆகியவற்றின் பதிலாளாக நாட்டளவில் மைய வங்கி செயல்படுவதைக் காண்கின்றோம்.

## துணை நூல்கள்


1. De Kock, 'Central Banking'.
2. J. M. Keynes, 'A Treatise on Money', Vol. II.
3. R. S Sayers, 'Modern Banking', Chap. 4 and 5.
4. R. S. Sayers, 'Central Banking After Bagehof'.
5. S. K Basu, 'A Survey of Contemporary Banking Trends'.
6. Vira Smith, 'Rationals of Central Banking'.
7. Krisch and Elkin, 'Central Banks'.
8. Crowther, 'An Outline of Money', Chap. 2.

# 15. மைய வங்கியின் கடன் கட்டுப்பாட்டு முறைகள்

## பொது விளக்கம்

கடனளவைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் பொருளியலறிஞர்கள் எல்லாம் வலியுறுத்துகின்றனர். விலைகளில் ஏற்படுகின்ற ஏற்றத்தாழ்வைத் தவிர்க்கவும், நாட்டுப் பொருளாதார அமைப்பில் ஏற்படக்கூடிய சீர்கேடுகளைச் செம்மைப்படுத்தவும் கடனளவைக் கட்டுப்படுத்துவது தேவையாகின்றது. மாற்று விகிதத்தை நிலைப்படுத்துதல், விலையை நிலைப்படுத்துதல், பொருளாதார நடவடிக்கைகளை நிலைப்படுத்துதல், வேலைவாய்ப்புகளை நிலைப்படுத்துதல் ஆகிய வற்றைக் கடனைக் கட்டுப்படுத்துவதற்கான நோக்கங்களாகக் கூறுவார்கள்.

1875முதல் 1931வரை கடனைக் கட்டுப்படுத்தியதற்கான தலையாய நோக்கம், மாற்று விகிதத்தை நிலைப்படுத்த வேண்டும் என்பதே. இதற்காகவே பொன் திட்டத்தைப் பல்வேறு வகைகளிலும் முறைகளிலும் செயல்படுத்தினார்கள். உற்பத்தி நிலைகள், வாணிபம், விலைகள் ஆகியவற்றை இந்தத் தலையாய நோக்கத்திற்குத் துணையான நோக்கங்களாகவே கருதினர். பொன் திட்டத்தைக் கைவிட்ட பின்னர், விலையை நிலைப்படுத்துவதை முதன்மையான நோக்கமாகக் கொண்டனர். முதலாளி-தொழிலாளி, உற்பத்தியாளர்-நுகர்வோர், கடன் கொடுத்தவர்-கடன் பெற்றவர் ஆகியோர்களுக்கிடையில் இருக்கின்ற பொருளாதாரத் தொடர்புகள் செவ்வனே அமையவேண்டுமானால் விலைகளை நிலைப்படுத்துவது தேவையாகின்றது. கடனளவைக் கட்டுப்படுத்தாமல் விலைகளை நிலைப்படுத்த இயலாதென்பது கவனிக்கத்தக்கதாகும்.

டி காக், 'கடனைக் கட்டுப்படுத்துவதையும், சீராக்குவதையும் மைய வங்கியின் முதன்மைப் பணியெனப் பெரும்பாலான பொருளியலறிஞர்களும், வங்கியாளர்களும் ஏற்றுக்கொள்

கின்றனர். இந்தப் பணி மைய வங்கியின் கொள்கைபற்றிய மிகவும் முக்கியமான கேள்வியை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. இதன் மூலமாகத்தான் செயல்முறையில் மற்றைய எல்லாப் பணிகளும் இணைக்கப்படுகின்றன. இதன் மூலமாகவே பொதுநோக்கிற்குப் பணி செய்ய இயல்கின்றது' என்று கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

பணத்தின் உள்நாட்டு, வெளிநாட்டு மதிப்பை நிலைநிறுத்துவது வங்கியின் முதன்மையான பொறுப்பாக இருக்கின்றது. இதற்கு நாட்டில் புழக்கத்தில் இருக்கின்ற பணத்தின் அளவைக் கட்டுப்படுத்துகின்ற பணியை மேற்கொள்வது தேவையாகின்றது. நாட்டில் சட்டமுறைப் பணத்தோடு வங்கிப் பணமும் புழக்கத்திலிருக்கின்றது. வங்கிகளின் வங்கி என்ற முறையிலும், நாட்டின் நலம் பேணும் அரசின் வங்கி என்ற முறையிலும் கடனளவைக் கட்டுப்படுத்த வங்கிக் கடனைக் கட்டுப்படுத்துவது மைய வங்கியின் பொறுப்பாக இருக்கின்றது.

வணிக வங்கிகளின் கடனளவைக் கட்டுப்படுத்த மைய வங்கி இருவகை முறைகளைப் பின்பற்றுகின்றது. ஒருவகை முறைகளைக் கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகள் (Quantitative Credit Control Methods) என்கின்றோம். மற்றொரு வகைக் கட்டுப்பாட்டு முறைகளைக் கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் (Qualitative Credit Control Methods) என்கின்றோம்.

கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகள் வங்கிகள் தருகின்ற மொத்தக் கடனின் அளவைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன. இம் முறைகளின் மூலம் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை ஒட்டி எழுகின்ற தேவைக்கேற்ப கடனளவைக் கட்டுப்படுத்த முடியும். இம் முறைகள் கடனைப் பெற்று என்ன நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகின்றார்கள் என்பதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகளில் கீழ்க்காண்பவை அடங்குகின்றன :

I. வங்கிவீதம் அல்லது கழிவுவீதக் கொள்கை,

II. வெளி அங்காடி நடவடிக்கைகள்,

III. ரொக்க இருப்புவீத மாறுதல்

என்பன அவை.

கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் வங்கிகளின் மொத்தக் கடனளவைப்பற்றிக் கவலைப்படாமல், என்ன

நோக்கங்களுக்காகக் கடன்களைப் பெற்று, எந்தெந்தத் துறைகளில் செலவிடுகின்றார்களென்பதைக் கண்டு, அவற்றில் எவற்றையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டுமோ, அவற்றையெல்லாம் கட்டுப்படுத்தப் பின்பற்றுகின்ற முறைகளாகும்.

இவற்றைக் 'குறிப்பிட்ட' (Particular), 'தெரிந்தெடுத்த' (Selective) கடன் கட்டுப்பாட்டு முறைகள் என்றும் கூறுவார்கள். இவற்றில் கீழ்க்காணும் முறைகள் உள்ளடங்கி உள்ளன. அவை,

I. வரம்புத் தேவைகளைக் குறித்தல்,

II. நுகர்வோர் கடனை நெறிப்படுத்துதல்,

III. ஆணைகளின் மூலம் கட்டுப்பாடு,

IV. நேரடி நடவடிக்கை,

V. அறிவுறுத்தல்,

VI. கடன் பங்கீடு

என்பன.

## (அ) கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகள்
## (Quantitative Credit Control Methods)

நாட்டில் புழக்கத்திலுள்ள கடனின் மொத்த அளவைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன. அங்காடியில் கிடைக்கின்ற பணத்தின் அளவைக் கட்டுப்படுத்திப் பண அங்காடியின் நடவடிக்கைகளை நெறிப்படுத்த இம் முறைகள் துணை செய்கின்றன. குறிப்பிட்ட இந்தத் துறைக்குத்தான் கடன் செல்ல வேண்டும் என்ற நோக்கம் இன்றிக் கடனின் விலையைக் (அல்லது செலவை) கூட்டியோ குறைத்தோ கடனின் அளவில் விரும்புகின்ற மாற்றங்களைக் கொண்டுவர இவை முயல்கின்றன.

ஆதலால், இம் முறைகள் குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை நிறைவேற்றவோ, விரும்புகின்ற சில விளைவுகளை ஏற்படுத்தவோ பின்பற்றப்படாமல் பொதுவாகவே பின்பற்றப்படுகின்றன.

பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் பெறுகின்ற கடனை நல்ல வழியிலும் பயன்படுத்தலாம்; தவறான வழியிலும் ஈடுபடுத்தலாம். கடனளவுக் கட்டுப்

பாட்டு முறைகள் ஆக்கப் பணிகளுக்கு வாங்குகின்ற கடனைக் கட்டுப்படுத்துபவைகளாகவும் அமையலாம். ஊக வாணிபம் முதலியவற்றிற்கான கடன்களைக் கட்டுப்படுத்தாமலும் இருக் கலாம். இதனால்தான் கடன் தன்மைக் காட்டுப்பாட்டு முறைகளும் பின்பற்றப்படுகின்றன.

கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகளைக் கீழ்க்காணும் எடுகோள்களின் அடிப்படையில் பின்பற்றுகின்றனர்:

1. மைய வங்கிக்கு விலையை நிலைப்படுத்துகின்ற ஆற்றல் இருக்கின்றது. கடன் கொள்கைக்கு வழிகாட்டத் தக்க வகையில் விலைக் குறியீட்டு எண்களைத் (Price Indexes) தயாரிக்கக் கூடிய சூழ்நிலைகள் இருக்கவேண்டும்.

2. பணத்தின் அளவிற்கும் விலைமட்டத்திற்கும் நேரடி யான நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும்.

3. மைய வங்கியால் எப்போதும் விருப்பம்போல் பண அளிப்பைக் கூட்டவோ குறைக்கவோ இயலவேண்டும்.

இந்த எடுகோள்களெல்லாம் சரியாக அமைந்தால்தான் கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகளை மைய வங்கியால் திறமை யாகக் கையாண்டு வெற்றி காணமுடியும்.

## 1. வங்கிவிகித (அல்லது கழிவுவிகிதக்) கொள்கை
## (Bank Rate or Discount Rate Policy)

மைய வங்கி பயன்படுத்துகின்ற கடன் கட்டுப்பாட்டு முறை களில் மிகவும் பழமையானது வங்கிவிகிதக் கொள்கையாகும். இந்த முறையை முதன்முதலில் இங்கிலாந்தில் 1837ஆம் ஆண்டில் பயன்படுத்தினார்கள். உலகில் பல நாடுகளிலும் இம் முறை பல்வேறு காலக் கட்டங்களிலும் சூழ்நிலைகளிலும் பின் பற்றப்பட்டு உள்ளது. இம் முறையின் ஆற்றலிலும் விளைவு களிலும் ஐயப்பாடுகள் தோன்றியபோதிலும் இம் முறை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

வணிக வங்கிகளின் இறுதிநிலைக் கடன் ஈவோனாக மைய வங்கி இருக்கின்றது. எப்பொழுதெல்லாம் வணிக வங்கி களுக்குப் பணத் தட்டுப்பாடு ஏற்படுகின்றதோ அப்பொழு தெல்லாம் அவை பணத்திற்கு மைய வங்கியை நாடுகின்றன.

வங்கி (வட்டி) விகிதம் (Bank Rate) என்பது, மைய வங்கி என்ன விகிதத்தில் தகுதியான மாற்று உண்டியல்களைக் கழிவு செய்து கொண்டோ, தக்க கடன் பத்திரங்களின்மீது முன் பண மாகவோ கொடுக்கின்றதென்பதைக் குறிக்கின்றது. இந்த வங்கி விகிதம் அலுவலக அடிப்படையில் மிகவும் குறைந்த விகிதமாக இருக்கும். இதற்கும் குறைந்த விகிதத்தில் வணிக வங்கிகளால் வேறு இடங்களில் பணம் பெற முடியாது. வங்கி விகிதத்தைக் 'கழிவு விகிதம்' (Discount Rate) என்றும் கூறுவார்கள்.

வங்கி விகிதத்தை மாற்றுவதன் மூலம் மைய வங்கி எந்த வட்டி வீதத்தில் வங்கிகள் அதனிடமிருந்து பண வசதியைப் பெறலாமென்பதைத் தீர்மானிக்கின்றது. வங்கி விகிதம் கூடு கின்றபொழுது வணிக வங்கிகள் அதிகச் செலவில் கடன் பெற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் பண அங்காடியிலும் வட்டி வீதம் கூடுகின்றது. இதனால் கடனளவு கட்டுப் படுவதையும் காணலாம். வங்கி விகிதம் குறைகின்றபொழுது இதற்கு எதிர்மாறான சூழ்நிலை ஏற்படும்.

வட்டி வீத அமைப்பின் அச்சாணியாக வங்கி விகிதம் இருக் கின்றது. நன்கு வளர்ச்சிப்பெற்ற பண அங்காடி இருக்கின்ற நாடுகளில் வங்கி விகிதத்திற்கும் பண அங்காடியில் நிலவுகின்ற வைப்பு வீதம் (Deposit Rate), அழைப்பு வீதம் (Call Rate), கடன் வீதம் (Loan Rate), அங்காடிக் கழிவு வீதம் (Market Discount Rate) ஆகிய பல்வேறு வட்டி வீதங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. இந்த வட்டி வீதங்கள் வங்கி விகிதத்தின் ஏற்றத்தாழ்வைச் சார்ந்து கூடவோ குறையவோ செய்கின்றன. வங்கி விகிதம் திறமையாகச் செயல் படுவது, வங்கி விகிதம் மாறுகின்றபொழுது எந்த அளவிற்கு மற்றைய வட்டி வீதங்கள் மாறுதல் அடைகின்றனவென்பதை ஒட்டி அமைகின்றது.

வங்கி வீதம் 'தண்டனை வீதமாகவோ' (Penal Rate), 'வசதி வீதமாகவோ' (Accommodate Rate) இருக்கலாம். அங்காடியில் நிலவுகின்ற வட்டி வீதத்தை விட, வங்கி வீதம் அதிகமாக இருக்குமானால், அது தண்டனை வீதமாகக் கருதப்படுகின்றது. எடுத்துக்காட்டாக இங்கிலாந்தைக் கூறலாம். இங்கிலாந்தில் வங்கி வீதம் அங்காடிக் கழிவு வீதத்தைவிட அதிகமாக இருக் கின்றது. மாற்று உண்டியல்களைக் கழிவகங்களிலோ (Discount House) வாணிப வங்கிகளிலோ கழிவுசெய்து பணம் பெறுகின்ற

வீதத்தைவிட, இங்கிலாந்து வங்கியில் கழிவு செய்கின்ற வீதம் அதிகமாக இருக்கின்றது. ஆதலால், வங்கிகள் இங்கிலாந்து வங்கியில் உண்டியல்களைக் கழிவுசெய்து பணம் பெறுவதற்குத் தண்டனைபோல அதிக வட்டி கொடுக்கவேண்டியிருக்கின்றது. வசதி வீதம் என்பது அங்காடியில் நிலவுகின்ற வட்டி வீதத்தை விடக் குறைவானதாக இருக்கும். இதற்கு எடுத்துக்காட்டாக நமது நாட்டைக் கூறலாம். இங்கு வங்கி வீதம் அங்காடி வீதத்தை விடக் குறைவானதாக இருக்கின்றது. பட்டியலிலுள்ள வங்கிகள் தகுதியான மாற்று உண்டியல்களைக் குறைந்த வட்டி வீதத்தில் ரிசர்வ் வங்கியிடம் கழிவுசெய்து கொள்ளலாம். வங்கி வீதம் ஒரு மரபுவழிக் கடன் கட்டுப்பாட்டுக் கருவியாகும். வங்கி வீதத்தில் மாற்றம் ஏற்படுகின்றபொழுது இருவகையான விளைவுகள் ஏற்படுகின்றன. முதலாவதாக, ஒரு நாட்டின் செலுத்துநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவருகின்றது. இரண்டாவதாக, நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. ஆதலால், ஒரு நாட்டின் செலுத்துநிலையிலோ, பொருளாதார நடவடிக்கைகளிலோ மாற்றங்களை ஏற்படுத்த விரும்புகின்றபொழுது வங்கி வீதத்தை மாற்றுகின்றார்கள்.

**நோக்கங்கள்** : வங்கி வீதத்தில் மாறுதல்களைப் பல நோக்கங்களோடு மைய வங்கி ஏற்படுத்துகின்றது. என்ன நோக்கங்களுக்காக மைய வங்கி வட்டி வீதத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதைத் தொகுத்துக் கூறுவோம்.

முதலாவதாக, வங்கிகளின் கடன் உற்பத்தி அளவைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் வங்கி வீதம் உயர்த்தப்படுகின்றது. மைய வங்கி கடன் தருகின்ற வட்டி வீதம் அதிகமானதாக இருந்தால், வணிக வங்கிகளும் உயர்ந்த வட்டி வீதத்தில்தான் கடன் தரும். இதனால் கடனளவு குறையும்.

இரண்டாவதாக, நாட்டின் முதலீட்டைக் கூட்டவும் குறைக்கவும் வட்டி வீத மாறுதல் துணை செய்கின்றது. வங்கி வீதம் குறைவாக இருந்த வங்கிகளும் குறைந்த வட்டி வீதத்தில் கடன் தரும். இதனால் வங்கிகளில் அதிகமாகக் கடன் வாங்கி முதலீடு செய்வார்கள். வங்கி வீதம் கூடுகின்றபொழுது வணிக வங்கிகள் உயர்ந்த வட்டி விகிதத்தில் கடன் கொடுக்கும். இதனால் முதலீட்டாளர்கள் வாங்குகின்ற கடனளவையும், முதலீட்டையும் குறைத்துக்கொள்வார்கள்.

மூன்றாவதாக, வங்கி வீத மாறுதல்கள்மூலம் விலைகள், வருவாய் ஆகியவற்றில் மாறுதல்களைக் கொண்டுவரலாம்.

நான்காவதாக, தங்கத்தின் ஏற்றுமதி, இறக்குமதி அளவு களைக் கட்டுப்படுத்துகின்ற கருவியாக வங்கி வீதத்தைப் பயன் படுத்தலாம்.

ஐந்தாவதாக, அந்நியச் செலாவணியின் தேவை அளிப்பில் சமன்பாட்டை ஏற்படுத்த வங்கி வீதம் உதவுகின்றது.

**செயல்படுதல்:** வங்கி வீதம் நடைமுறையில் எப்படிச் செயல் படுமென்பதில் கருத்துவேறுபாடுகள் காணப்படுகின்றன. வங்கி வீதம் எப்படிப் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதித்து, பொருளாதாரத்தில் விளைவுகளை ஏற்படுத்துகின்றதென்பதைப் பற்றிக் கீழ்க்காணும் மூன்று முக்கியமான கருத்துகள் காணப் படுகின்றன:

(i) முதலாவது, மரபுவழிக் கருத்தாகும் (Traditional Version). இதன்படி வங்கி வீதம் தங்க ஏற்றுமதி இறக்குமதிகளை நெறிப்படுத்துவதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கின்றது.

(ii) இரண்டாவது ஹாட்ரியின் (Hawtrey) கருத்தாகும். அவரது கருத்துப்படி வங்கி வீதம் முதலீட்டில் மாறுதல்களைக் கொண்டு வருவதன்மூலம் பொருளாதார நடவடிக்கைகளை மாற்றுகின்றது.

(iii) மூன்றாவதாக, கீன்ஸ் (Keynes) நீண்ட கால வட்டி வீதத்தை மாற்றி அதன் மூலம் பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்று கருதுகின்றார்.

**1. மரபுவழிக் கருத்து:** பொன் திட்டம் செயல்படுகின்ற சூழலில், வங்கி வீதம் எப்படி மாறுதல்களைக் கொண்டுவருகின்ற தென்று மரபுவழிக் கருத்துக் கூறுகின்றது. பொன் திட்டமுள்ள நாட்டில் வங்கி வீதம் தங்கத்தின் அளவைக் கூட்டியோ குறைத்தோ பணத்தின் அக—புற மதிப்பை நிலைநாட்டுகின்றது.

ஒரு நாட்டின் வங்கி வீதம் உயர்த்தப்படுகிறபொழுது, நாட்டிலுள்ள எல்லா வட்டி வீதங்களும் உயர்கின்றன. இதனால் மற்றைய நாடுகளிலுள்ள வட்டி வீதத்தைவிட இந்த நாட்டின் வட்டி வீதம் உயர்வானதாக இருக்கும். இதனால் அயல்நாடு

களிலிருந்து குறுகிய காலக் கடன்கள் இந்த நாட்டிற்குள் வரும். இதனால் அந்நியச் செலாவணி நிலையில் சாதகமான நிலை உருவாகும்.

வங்கி வீதம் கூடுகின்றபொழுது, நாட்டில் சேமிப்புக் கூடும்; நுகர்வு குறைகின்ற போக்குக் காணப்படும். பொருள்களின் நுகர்வு குறைவதால், அவற்றின் தேவையும் குறையும். ஆதலால், இந்த நாட்டிலிருந்து பொருள்களை வாங்கவே பிற நாட்டினர் விரும்புவார்கள். இதனால் ஏற்றுமதி கூட, இறக்குமதி குறையும். இந்த வகையில் அயல்நாட்டு வாணிபம் சாதகமாக மாற, அந்நியச் செலாவணியிலும் சாதக நிலை தோன்றும்.

பொன் திட்டம் செயல்படுகின்றவரை வங்கி வீதம் வாணிப நிலையைச் சமன் செய்யப் பெரிதும் உதவியது. பொன் திட்டத்தைக் கைவிட்ட பின்னர் வெளி முதல் வருவதையும் போவதையும் வங்கி வீதத்தால் கட்டுப்படுத்த இயலவில்லை. ஆனால், இப்பொழுது அயல்நாட்டுக் கொடுக்கல் நிலையைச் சரிசெய்ய, அந்நியச் செலாவணி மாற்று வீதத்தை நிலை நிறுத்த, பொருளாதாரக் கட்டுக்கோப்பிலுள்ள ஏற்றத்தாழ்வு களைப் போக்க வங்கி வீதம் உதவுகின்றது.

**2. ஹாட்ரியின் கருத்து:** ஹாட்ரி, வங்கிவீத மாறுதல் எப்படிச் செயல்படுமென்பதை விளக்கியுள்ளார். வங்கி வீதம் கூடுகின்றபொழுது, மற்றைய குறுகிய கால வட்டி வீதங்களும் கூடும். வணிக வங்கிகள் கூடிய வட்டி வீதத்தில்தான் மைய வங்கியிடமிருந்து கடன்பெற முடியுமாதலால், அதிக வட்டி வீதத்தில்தான் அவற்றால் கடன்கொடுக்க இயலும். இதனால், வங்கிகளிடம் கடன் வாங்கிப் பொருள்களை இருப்பு வைக்கின்ற வணிகர்கள், பொருள்களை இருப்பு வைக்க அதிகப் பணம் செலவாவதை உணர்வார்கள். ஆகையால், தங்களிடம் இருக்கின்ற பொருள்களின் அளவைக் குறைத்துக்கொள்ள முயல் வார்கள். இருப்பைக் குறைக்கக் குறைந்த அளவில் பொருள்களை வாங்குவார்கள்; அல்லது, புதிதாகப் பொருள்கள் வாங்குவதை நிறுத்திக்கொள்வார்கள். அதே சமயத்தில் தங்களிடமுள்ள பொருள்களை விரைவாக விற்றுவிட முயல்வார்கள்.

வணிகர்கள் குறைவாகப் பொருள்களை வாங்கத் தொடங் கியவுடன், உற்பத்தியாளர்கள் தங்களுடைய பொருள்களுக் குரிய தேவை குறைந்து வருவதை உணர்வார்கள். இதனால் விலைகளைக் குறைப்பார்கள். உற்பத்தியின் அளவும் குறையும்.

உற்பத்தியாளர்கள் விலைகளைக் குறைத்துவிட்டதால் வணிகர்களும் பொருள்களைக் குறைந்த விலைக்கு விற்பார்கள். விலை குறைவதாலும் விற்பனை கூடுமென்று எதிர்பார்க்க முடியாது. ஹாட்ரியின் கருத்துப்படி, வணிகர்கள் பொருள்களின் இருப்பின் அளவையும், உற்பத்தியாளர்கள் உற்பத்தி அளவையும் குறைக்கின்றபொழுது வணிகர்களும் உற்பத்தியாளர்களும், வங்கியில் வாங்கியிருக்கின்ற கடனின் அளவும் குறையும். வங்கிக் கடனின் அளவு குறைகின்ற அளவிற்கு மக்களின் வாங்கும் ஆற்றலும் குறையும். இதனால் விலை குறைந்தும் மக்களால் அதிகமாகப் பொருள்களை வாங்க இயலாது. வட்டி வீதத்தைக் கூட்டுவதோ இதற்கு எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தும்.

வங்கி வீதம் வணிகர்களிடமுள்ள பொருள்களின் இருப்பைப் பாதித்துப் பொருளாதாரத்தில் ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டு வருமென்பதைக் கீன்ஸ் வன்மையாகக் குறைகூறுகின்றார். இதனை, அவர் ஒரு குறையுடைய கருத்தென்று எண்ணுகின்றார். கீன்சின் கருத்துப்படி, வணிகர்கள் பொருள்களை இருப்பு வைப்பதற்கு ஆகின்ற செலவுகளில் வட்டி வீதம் ஒன்றாக இருந்தபோதிலும், இஃது ஒரு முக்கியமான செலவு இல்லை. கிட்டங்கிச் செலவு, காப்பீட்டுக் கட்டணம், அழிமானம் முதலிய இருப்பை ஒட்டி ஏற்படும் செலவினங்கள் வட்டி வீதத்தைவிட முக்கியமானவைகளாகும் என்பது கீன்சின் கருத்தாகும். ஆதலால், வணிகர்கள் பொருள்களின் கையிருப்பை வங்கி வீத மாறுதல்களுக்கேற்ப மாற்றாமல் மற்றைய செலவுகளை ஒட்டியே மாற்றுவார்கள்.

**3. கீன்சின் விளக்கம்:** கீன்சின் வங்கி வீதம் பற்றிய விளக்கம், வங்கி வீதம் எப்படி முதலீட்டின் எதிர்பார்க்கும் இலாபத்தை நீண்டகால வட்டி வீதத்தில் மாறுதல்களைக் கொண்டுவருவதன் மூலம் மாற்றுகின்றது என்பதன் அடிப்படையில் அமைந்திருக்கின்றது.

கீன்சின் கருத்துப்படி, வங்கி வீத மாறுதல் நீண்டகால வட்டி வீதத்திலும் அதே வகையான மாற்றத்தைக் கொண்டு வரும். வங்கி வீதம் உயர்கின்றபொழுது வணிக வங்கிகளின் கடன் வாங்குகின்ற செலவு கூடுகின்றது. இதனால் வங்கிகள் வட்டி வீதத்தைக் கூட்ட, அதனைத் தொடர்ந்து மற்றைய குறுகியகால வட்டி வீதங்களும் கூடும். குறுகியகால வட்டி வீதம் கூடுவதால் குறுகியகாலப் பத்திரங்களின் மீதிருக்கின்ற

கவர்ச்சி அதிகரிக்கும். பண அங்காடியிலுள்ளவர்கள் நீண்ட காலக் கடனுக்கான வட்டி வீதத்தைவிடக் குறுகியகாலக் கடன் வட்டி வீதம் அதிகமாக இருப்பதை அறிந்து, நீண்டகாலக் கடன் பத்திரங்களைக் கொடுத்துவிட்டு அவற்றிற்குப் பதிலாகக் குறுகிய காலக் கடன் பத்திரங்களைப் பெறுவதில் அக்கறை காட்டு வார்கள். இதனால் நீண்டகாலக் கடன் பத்திரங்களின் விலைகள் குறையும். இந் நிலையை மிகுதிப்படுத்தும் வகையில், வட்டிவீதம் அதிகமாக இருப்பதால், பொதுமக்கள் வங்கிகளிடமிருந்து அதிக மாகக் கடன் வாங்காமல், தங்களுடைய பணத்தேவையை ஈடுசெய்யப் பத்திரங்களை விற்பனை செய்வார்கள். குறுகிய காலப் பத்திரங்களையும், நீண்டகாலப் பத்திரங்களையும் வைத்திருப்பவர்கள், முதலில் நீண்டகாலப் பத்திரங்களையே விற்பனை செய்வார்கள். வங்கிகளும் தங்களுடைய ரொக்கத் தன்மையை மிகுதிப்படுத்த நீண்டகாலப் பத்திரங்களை விற்பனை செய்யும்.

மிகுதியாகப் பல தரப்புகளிலிருந்தும் நீண்டகாலக் கடன் பத்திரங்களை விற்பனை செய்வதால், நீண்டகாலப் பத்திரங் களின் விலை குறையும். நீண்டகாலப் பத்திரங்களின் விலை குறைகின்றபொழுது அவற்றிலிருந்து கிடைக்கின்ற வருவாய் அதிகமாவதைக் காணலாம். இந்த வகையில், வங்கி வீதம் தொடக்கத்தில் குறுகியகால வட்டிவீதத்தை மாற்றி, பின்னர்க் காலப்போக்கில் நீண்டகால வட்டிவீதத்தையும் மாற்றும்.

நீண்டகால வட்டி வீதம் மாறுகின்றபொழுது, அது தொழில்முயல்வோர்களின் முதலீட்டுத் தீர்மானத்தைப் பெரிதும் பாதிக்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்காலத் தில் பெரும்பாலான தொழில்முயல்வோர்கள் கடன் வாங்கியே முதலீடு செய்கின்றார்கள். ஆதலால், அவர்கள் முதலீடு செய் கின்றபொழுது, முதலீட்டினால் எதிர்பார்க்கின்ற இலாபத்தை யும் வட்டி வீதத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். எதிர் நோக்குகின்ற இலாபத்தைவிட வட்டி வீதம் அதிகமாக இருக்கு மானால் முதலீட்டின் அளவைக் குறைத்துக்கொள்ளுவார்கள்.

முதலீடு குறைகின்றபொழுது, நாட்டில் வேலைவாய்ப்புக் குறையும். வேலைவாய்ப்புக் குறைவதால் உற்பத்தியும் குறையும். அதனைத் தொடர்ந்து விலையும் குறையும். இந்த வகையில் வட்டி வீதம் கூடுவதும் விலை குறைவதில் வந்து நிற்பதும் கவனிக்கத்தக்கனவாகும். வட்டி வீதம் குறைகின்ற

பொழுது நேர் எதிர்மாறான விளைவுகள் ஏற்படுவதைக் காணலாம்.

**வரையறைகள்**

வங்கி வீதத்தில் மாறுதல்களை ஏற்படுத்துவதன் மூலமாக எதிர்பார்க்கின்ற விளைவுகள் எல்லாக் காலங்களிலும் ஏற்படு மென்று கூற முடியாது. வங்கி வீதம் ஆற்றலுடன் செயல்படு வதற்கான சூழ்நிலைகள் இருந்தால் மட்டுந்தான் எதிர்பார்க் கின்ற விளைவுகள் கிடைக்கும். எத்தகைய சூழ்நிலைகளில் வங்கி வீதம் ஆற்றலற்றிருக்கும் என்பதைத் தொகுத்துக் கூறுவோம்.

முதலாவதாக, வணிக வங்கிகளிடம் மிகுதியாக வசதிகள் இருந்தால், வட்டி வீத மாற்றத்தால் எதிர்பார்க்கின்ற பலன் விளையாது. கழிவு வீதத்தின் ஆற்றல், வணிக வங்கிகளிடமிருக் கின்ற ரொக்க இருப்புநிலையை ஒட்டி அமைகின்றது. வணிக வங்கிகளிடம் மிகுதியாக ரொக்கம் இருக்குமானால், அவை பணத்திற்காக மைய வங்கியை நாடவேண்டிய நிலை இராது. இந் நிலையில் வங்கி வீதத்தைக் கூட்டுவதால், வங்கிகளின் கடன் உற்பத்தியளவு பாதிக்கப்போவதில்லை. பற்றாக்குறை நிதி யாக்கத்தைப் பின்பற்றுகின்ற நாடுகளில், மைய வங்கியின் உதவி யின்றியே வணிக வங்கிகளிடம் அதிக ரொக்கம் வந்துசேரும். இந் நிலையில் வங்கிவீத மாற்றத்தால் பலன் விளையாது.

இரண்டாவதாக, வங்கி வீதம் மற்றைய வட்டி வீதங்களைப் பாதிக்காத நிலையிலிருந்தாலும் எதிர்பார்க்கின்ற பலன்கள் விளையா. வங்கி வீதம் உடனடியாகப் பிற வட்டி வீதங்களைப் பாதிக்குமா, பாதிக்காதாவென்பது வணிக வங்கிகள் மைய வங்கியிடம் உதவிக்குச் செல்கின்ற நிலையில் இருக்கின்றனவா, இல்லையாவென்பதை ஒட்டி அமைகின்றது. வேறு வகையில் வங்கிகளால் ரொக்கத்தைப் பெற முடியுமானால், அவை மைய வங்கியிடம் உதவிநாடிச் செல்லா. நமது நாட்டில் வங்கிகள் மிகுதியாக ரொக்கம் வைத்திருக்கின்றன. இதனால், அவை மைய வங்கியிடம் செல்வதில்லை. இங்கு வங்கி வீதம் ஆற்றலற்றதாக இருப்பதற்கு இதுவே காரணம்.

மூன்றாவதாக, தகுதியான (Eligible) பத்திரங்கள் இல்லா விட்டாலும் வங்கி வீதத்தால் எதிர்பார்க்கும் பலன் விளையாது. மைய வங்கி எல்லா வகையான பத்திரங்களுக்கும் மறுகழிவு செய்து பணம் கொடுப்பதில்லை. தகுதியானவை என்று

குறிப்பிடப்பெற்ற பத்திரங்களுக்கு மட்டுந்தான் மைய வங்கி பணம் தரும். இத்தகைய தகுதியான பத்திரங்கள் மிகுதியாகப் புழக்கத்தில் இல்லாவிட்டால், வட்டி வீதத்தைத் திறமையாகப் பயன்படுத்த முடியாது.

நான்காவதாக, வட்டி வீத மாறுதல்களால் ஒரு நாட்டின் சேமிப்பு-முதலீடு பாதிக்கப்படுகின்ற நிலையிலிருந்தால்தான், வங்கி வீதம் பலனளிக்கும். நல்ல இலாபம் கிடைக்கின்ற சூழ் நிலை இருந்தால், வங்கி வீதம் உயர்ந்தாலுங்கூட முதலீட்டைக் குறைக்க மாட்டார்கள். வணிகர்கள் பொருள்களை இருப்பு வைப்பதை வட்டி வீதத்தின் அளவைக்கொண்டு முடிவு செய்வதில்லை; எதிர்கால வாணிக நிலையை ஒட்டியே முடிவு செய்கின்றனர். இந்தக் கருத்தை ரேட்கிளிஃப் குழுவின் (Radcliffe Committee) அறிக்கை உறுதிப்படுத்துகின்றது.

ஐந்தாவதாக, நாட்டிலுள்ள செழிப்பை (பணவீக்கத்தை) வட்டி வீதத்தைக் கூட்டிக் கடனளவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தடுத்து நிறுத்தலாம். ஆனால், வட்டி வீதத்தைக் குறைப்பதன் மூலம் எளிதாகப் பண வாட்டத்திலிருந்து பொருளாதாரத்தை மீட்சியுறச் செய்ய முடியாது. பண வாட்டமோ, செழிப்போ தொடக்க நிலையில் இருந்தால், வட்டி வீதம் பலனளிக்கின்றது. இவை கட்டுக்கடங்காமல் செல்லும் பொழுது வட்டி வீதம் செயலற்றுவிடுகின்றது.

ஆறாவதாக, வணிக வங்கிகள் தங்களிடமுள்ள தகுதியான பத்திரங்களை மைய வங்கியிடம் கொடுத்து மறுகழிவு செய்யும் பழக்கம் இருந்தால் மட்டுந்தான், வங்கி வீதம் நாட்டுப் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கின்ற விளைவுகளைத் தோற்று விக்கும்.

ஏழாவதாக, பண அங்காடி சிறப்பாகச் செயல்படும் நாடு களில் மட்டுமே, பிற துறைகளிலுள்ள வட்டி வீதங்கள் வங்கி வட்டி வீதத்திற்கேற்ப மாறுதலடையும்.

எட்டாவதாக, எந்த அளவிற்கு வணிக வங்கிகள் மைய வங்கியின் கொள்கைகளைச் செயல்படுத்துவதில் ஒத்துழைக் கின்றதென்பதை ஒட்டியே வங்கி வீதத்தின் வெற்றி இருக் கின்றது.

### வங்கி வீத முக்கியத்துவம் குறைதல்

இரண்டு உலகப் போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் கடன் கட்டுப்பாட்டுக் கருவி என்ற முறையில் வங்கி வீதத்திற்கு இருந்த முக்கியத்துவம் குறைந்தது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. பொருளாதார முறைகள் மிகவும் கட்டுக்கோப்பாக வளர்ந்ததும், பணக்கொள்கையின் நோக்கங்களில் ஏற்பட்ட மாறுதல்களும் வங்கி வீதத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்தன. தொழிற்சங்கங்கள் வலிமையிலும் முக்கியத்துவத்திலும் வளர்ச்சி பெற்றன. இதனால் கூலி விகிதத்தைக் குறைக்க முடியாத சூழ்நிலை பெரும்பாலான நாடுகளில் உருவாகியது. எளிதாக மாற்றமுடியாத பொருளாதார அமைப்புகள் ஏற்பட்டதன் காரணமாக வங்கி வீதத்தின் வலிமை குறைந்தது.

பொருளாதாரக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. முழு வேலைவாய்ப்பை அடைவது பொருளாதாரத்தின் தலையாய நோக்கமாக மாறியது. கீன்ஸ் வேலைவாய்ப்பில் முழுநிறைவைப் பெறுவதற்கு முன்னரே பொருளாதார அமைப்புகளில் சமநிலை ஏற்பட முடியுமென்பதைச் சுட்டிக்காட்டினார். முழுநிறைவு வேலைவாய்ப்பை அடைய மலிவுப் பணக்கொள்கையைப் பின்பற்றும்படி அவர் கூறினார். வட்டி வீதம் குறைந்தால் முதலீட்டின் அளவு கூடுமென்று அவர் கருதினார். அவரது கருத்துகளின் செல்வாக்கின் காரணமாக வட்டி வீதம் மிகவும் குறைந்த அளவிற்குக் குறைக்கப்பட்டது. இந் நிலை 1951 வரை நீடித்தது. வங்கி வீதத்தின் முக்கியத்துவம் குறைவதற்கான மற்றைய காரணங்களையும் தொகுத்துக் கூறுவோம்.

முதலாவதாக, உள்நாட்டு வெளிநாட்டு மாற்று உண்டியல்களின் முக்கியத்துவம் குறைந்து, உள்நாட்டு வாணிப உண்டியல்களுக்குப் பதிலாக நடப்புக் கணக்குமுறை பின்பற்றப் படுகின்றது. வெளிநாட்டு உண்டியல்களுக்குப் பதிலாகத் தந்திமூலம் பணம் அனுப்புகின்றமுறை பழக்கத்திற்கு வந்திருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் உண்டியல்களைக் கழிவு செய்வது, மறுகழிவு செய்வது முதலிய நடவடிக்கைகளின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது. இலண்டன் கழிவகம் (London Discount Houses) கூட இப்பொழுது மாற்று உண்டியல்களுக்குப் பதிலாகக் கருவூல உண்டியல்களில் (Treasury Bills) கவனம் செலுத்துகின்றதென்று கூறப்படுகின்றது.

இரண்டாவதாக, வங்கி வீதம் செயல்படுவதிலுள்ள அடிப்படைக் குறைகளை உணரலானார்கள். வங்கி வீதத்திலுள்ள

குறைகளைச் செம்மைப்படுத்துவதற்காகக் கடன் கட்டுப்பாட்டிற்குரிய மாற்று வழிகளைப்பற்றி ஆராய்கின்றனர். சேயர்ஸ் குறிப்பிடுவது போல, வங்கி வீதம், செயல்நயமற்ற விலங்காற்றல் கொண்டதாக இருக்கின்றது. வங்கி வீதம் கூடுகின்றபொழுது எல்லா வகையான தொழில்களும், பொருளாதார நடவடிக்கைகளும் பாதிக்கப்படுகின்றன. ஆதலால், இதற்குப் பதிலாகத் தெரிந்தெடுத்த கடன் கட்டுப்பாட்டு முறையையே மைய வங்கி பின்பற்ற விரும்புகின்றது.

மூன்றாவதாக, வங்கி வீதத்தைவிட வெளி அங்காடி நடவடிக்கைகள், ரொக்க இருப்பு விகிதங்களை மாற்றுதல் ஆகிய முறைகள் மிகவும் ஆற்றல் உடையனவாக இருக்கின்றனவெனக் கருதப்படுகின்றது. ஆதலால், வங்கி வீதத்தின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது.

நான்காவதாக, பணக்கொள்கை எந்த அளவிற்குச் செயலாக்கத் திறனுடையதாக இருக்கின்றது என்பதைப்பற்றி ஐயப்பாடு இருக்கின்றது. ரேட்கிளிஃப் குழு, நிதிக்கொள்கை சாதிப்பதைவிட அதிகமாகப் பணக்கொள்கை சாதித்துவிடாதென்று கருதுகின்றது. பலவகையான கடன் நிறுவனங்கள் தோன்றிய பின்னர், பணக்கொள்கையின் ஆற்றல் குறைந்து விட்டது. ஆதலால், வங்கி முறையும் செல்வாக்கிழந்து நிற்கின்றது.

ஐந்தாவதாக, பின்தங்கிய நாடுகளில் கட்டுக்கோப்பான பண அங்காடி இருப்பதில்லை. இதனால் வங்கி வீதத்தால் மற்றைய வட்டி வீதங்களை மாற்ற முடிவதில்லை. இதன் விளைவாகத் திறமையாக வங்கி வீதத்தைச் செயல்படுத்த இயலவில்லை.

ஆறாவதாக, அரசின் நிதிக்கொள்கை மிகுந்த பண வீக்கத்தைத் தோற்றுவிப்பதால் வங்கி வீதம் செயலற்றதாக இருக்கின்றது.

ஏழாவதாக, அரசின் வரி விதிப்புமுறை வங்கி வீதத்தின் சக்தியைக் குறைக்கின்றது.

### எதிர்காலம்

வங்கி வீதத்தின் முக்கியத்துவம் குறைந்தபோதிலும், இது முற்றிலும் கைவிடப்படவில்லை என்பது கவனிக்கத்தக்க ஒன்றாகும். இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர், பண

வீக்கத்தைக் கட்டுப்படுத்த மற்றைய கட்டுப்பாட்டுக் கருவி களோடு சேர்த்து வங்கி பயன்படுத்தப்படுகின்றது. 1951ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் வங்கி வீதத்தை 2½ சதவீதம் உயர்த் தினர். இந்தியாவும் வேறு சில நாடுகளும் இங்கிலாந்தைப் பின்பற்றின.

கின்ஸ், வங்கிவீதத்தின் காலம் முடிவடைந்து விட்ட தென்றும், அதன் இடத்தை வெளி அங்காடி நடவடிக்கை பிடித்துக்கொண்டுவிட்டதென்றும் கருதுகின்றார். பேராசிரியர் இராபர்ட்சன் மறுபடியும் வங்கி வீதக் கொள்கைக்கு முக்கியத் துவம் கொடுக்கவேண்டிய சூழ்நிலை தோன்றியிருக்கின்றதென்று கூறுகின்றார்.

வங்கி வீதத்தைத் தனியாகப் பின்பற்றுவதைவிட, மற்றைய கடன் கட்டுப்பாட்டு முறைகளோடு சேர்த்துப் பயன்படுத்து கின்றபொழுது எதிர்பார்க்கின்ற விளைவுகள் ஏற்படலாம்.

## 2. வெளிச்சந்தை நடவடிக்கைகள்
(Open Market Operations)

வங்கி வீதத்தில் சில முக்கியமான குறைகள் இருப்பதனை ஆராய்ந்து கண்டோம். வங்கி வீதம் தானே இயங்குகின்ற கருவியாக (autonomous weapon) இல்லையென்பது சுட்டிக் காட்டப்படுகின்றது. அதனுடைய பலவகையான வரையறை களை ஒட்டி அமைகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக வங்கிவீத மாறுதல்களுக்கேற்ப மற்றைய வட்டி வீதங்களும் மாறினால் தான் வங்கி வீதத்தால் பலன் கிடைக்கும். ஆதலால், மைய வங்கியின் வங்கி வீத நடவடிக்கைக்கேற்ப பண அங்காடியையும் செயல்படச் செய்யக்கூடிய வேறு முறைகளையும் பின்பற்ற வேண்டியது தேவையாயிற்று.

முதன் முதலில் வெளி அங்காடி நடவடிக்கையை, வங்கி வீதத்தைச் செயல்படுத்தக்கூடிய ஒரு துணைக் கருவியாகவே கருதினார்கள். பின்னர், வெளி அங்காடி நடவடிக்கையை வங்கி வீதத்தோடு தொடர்புபடுத்தாமலும், வங்கி வீதத்திற்கு மாற்றாகவும் பயன்படுத்தலாம் என்பதைக் கண்டுகொண் டார்கள்.

எஸ். என். சென் (S. N. Sen), 'அங்காடியைக் கட்டுப் படுத்துவதற்குரிய மிகவும் பழமையான, மிகவும் முக்கியமான

முறையாக வெளி அங்காடி நடவடிக்கைகள் இருக்கின்றன' என்று கூறுகின்றார். நேரடியாக வணிக வங்கிகளின் கடன் அளவைக் கட்டுப்படுத்தும் கருவியாக வெளி அங்காடி நடவடிக்கைகள் இருக்கின்றன. போர்க் காலத்திலும், அதற்குப் பின்னரும் அரசின் கடன் பத்திரங்களும் பிற முதல்வகை உண்டியல்களும் அளவில் கூடியிருக்கின்றன. இதனால், வெளி அங்காடி நடவடிக்கைகளின் முக்கியத்துவம் வளர்ந்திருக்கின்றது.

### விளக்கம்

'விரிவான பொருளில், வெளி அங்காடி நடவடிக்கைகள் என்றால் அரசின் பத்திரங்களாகவோ, வங்கிகளின் ஒப்பந்தங்களாகவோ, பொதுவாக அந்நியச் செலாவணியாகவோ இருக்கும் எந்தவகைப் பத்திரத்தையாவது, மைய வங்கி விற்பதைக் குறிக்கும்' என்று டி காக் கூறுகின்றார். மைய வங்கி, பத்திரங்களை வாங்கி விற்பதன் மூலம் வணிக வங்கிகளின் ரொக்க இருப்பைக் கூட்டவோ குறைக்கவோ முடிகின்றது. இதனால் வங்கிக் கடனளவு கூடவோ குறையவோ செய்கின்றது. இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் வெளி அங்காடி நடவடிக்கைகள் என்பது, அரசினுடைய குறுகிய கால, நீண்டகாலப் பத்திரங்களை வாங்கி விற்பதையே குறிக்கின்றது.

### செயல்படும் முறை

வெளி அங்காடி நடவடிக்கைகளை இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, வெளி அங்காடி விற்பனை (Open Market Sale) நடவடிக்கை. மற்றொன்று வெளி அங்காடி வாங்குதல் (Open Market Purchase) நடவடிக்கை என்பன அவை.

வெளி அங்காடி விற்பனை நடவடிக்கை நடைமுறைப் போக்குக்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்தும் நோக்கத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. பொருளாதார நடவடிக்கைகள் விரும்பத்தகாத அளவிற்கு விரிவடைந்துகொண்டு செல்லும் பொழுது, அவற்றைக் கட்டுப்படுத்தி, அவற்றால் விளையக்கூடிய சீர்கேடுகளைத் தடுத்து நிறுத்த, இத்தகைய நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

வெளி அங்காடி வாங்குதல் நடவடிக்கையை நாட்டுப் பொருளாதாரம் மந்தநிலையில் இருக்கின்றபொழுது பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டிவிடவும், பொருளாதாரத்தில் ஒரு மேம்பட்ட நிலையை அடையவும் பின்பற்றுகின்றன.

மைய வங்கி, வாங்குதல் நடவடிக்கையை மேற்கொள்கின்றபொழுது, வாங்குகின்ற பத்திரங்களுக்குப் பணம் கொடுக்கின்றது. அல்லது, அதன்மீது வரையப்பெற்ற காசோலையைக் கொடுக்கலாம். பத்திரங்களை விற்பவர்கள் விற்பனையின் மூலம் கிடைத்த பணத்தையோ, காசோலையையோ வணிக வங்கிகளிடம் செலுத்துகின்றனர். ரொக்கமாகப் பணம் கிடைத்தால் வணிக வங்கிகளின் ரொக்க இருப்புக் கூடும். வணிக வங்கிகள் மைய வங்கியின்மீது எழுதப்பெற்ற காசோலைகளைப் பெற்றால், மைய வங்கியிலுள்ள வணிக வங்கிகளின் இருப்புக் கூடும். வணிக வங்கிகளின் ரொக்க இருப்புக் கூடினாலும், அல்லது மைய வங்கியிடம் இருக்கின்ற இருப்புக் கூடினாலும், பொதுமக்களுக்குக் கடன் தருகின்ற ஆற்றல் வணிக வங்கிகளுக்குக் கூடிவிடுவதைக் காணலாம். வங்கிகளின் மொத்தக் கடனளவு கூடுகின்றபொழுது, அந்த அளவிற்குப் பொதுமக்களின் கையில் புழங்குகின்ற பணத்தின் அளவு கூடுவதையும் காணலாம். இதனால் சமுதாயத்தின் பொருளாதார நடவடிக்கைகள் இந்த அளவிற்குக் கூடும்.

மைய வங்கி விற்பனை நடவடிக்கை மேற்கொள்கின்ற பொழுது, வாங்குதல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நேர் எதிர்மாறான விளைவுகள் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும். மைய வங்கி பத்திரங்களை விற்கின்றபொழுது, பொதுமக்கள் அவற்றை வாங்குவார்கள். பத்திரங்களின் மதிப்புக்கு அவர்கள் தங்களுடைய வணிக வங்கிகளின்மீது காசோலைகளை எழுதித் தருவார்கள். மைய வங்கி இத்தகைய காசோலைகளைப் பெறுகின்றபொழுது, அதனிடமுள்ள வணிக வங்கிகளின் இருப்பில் இந்தப் பணத்தைக் கழித்துவிடுகின்றது. வணிக வங்கிகள் மைய வங்கியிலுள்ள தங்களுடைய இருப்புக் குறைந்தவுடன், கடன் கொடுக்கின்ற அளவைக் கட்டுப்படுத்தும். அல்லது முன்னரே கொடுத்திருக்கின்ற கடனைத் திருப்பிப் பெறுகின்ற நிலையும் ஏற்படலாம். இதனால் சமுதாயத்திலுள்ள பணத்தின் அளவு குறையும். பண அளவு குறைகின்ற பொழுது முதலீடும் வேலைவாய்ப்பும் குறைந்து வருவதனைக் காணலாம்.

வெளி அங்காடி நடவடிக்கைகள் சமுதாயத்தில் புழக்கத்திலுள்ள பண அளவைக் கூட்டுவதையோ குறைப்பதையோ போன்று பத்திரங்களின் விலைகளைப் பாதித்து, அதன் வழியாக வட்டி வீதத்தையும் பாதிப்பதைக் காணலாம்.

வங்கி வீதத்தைத் திறைமையாகச் செயல்படுத்துவதற்கும், மைய வங்கி வெளி அங்காடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. மைய வங்கி வட்டி வீதத்தை உயர்த்துகின்றபொழுது, வணிக வங்கிகளும் வட்டி வீதத்தை உயர்த்த வேண்டும். வணிக வங்கிகள் வட்டி வீதத்தை உயர்த்தினவாவென்பதை உறுதிப் படுத்த, மைய வங்கி பத்திரங்களை விற்பனை செய்கின்றது. அப்பொழுது வணிக வங்கிகளிடம் பொதுமக்கள் மிகுதியாகக் கடன் கேட்பார்கள். வணிக வங்கிகளின் இருப்புக் குறையக் குறைய வணிக வங்கிகள் தருகின்ற கடன்களைக் கட்டுப் படுத்தும். கடன்களின் தேவைகள் பெருகுகின்றபொழுது, வங்கிகள் தங்களுடைய வட்டி வீதத்தை உயர்த்திவிடுகின்றன. இதேபோன்று, வங்கி வீதத்தைக் குறைக்கின்றபொழுது, மைய வங்கி வணிக வங்கிகளும் வட்டி வீதத்தைக் குறைத்து விட்டனவாவென்பதை உறுதிப்படுத்த வெளி அங்காடி நட வடிக்கைகளில் ஈடுபடுகின்றது. மைய வங்கி பத்திரங்களை விலைக்கு வாங்குகின்றது. இதனால் வணிக வங்கிகளின் இருப்புக் கூட, அவற்றால் அதிகக் கடன்கள் கொடுக்க இயலும். பொது மக்களை மிகுதியாகக் கடன்பெறத் தூண்டுவதற்கு வங்கிகள் வட்டி வீதத்தைக் குறைக்கின்றன.

வெளி அங்காடி நடவடிக்கைகளின் மூலமாக அங்காடியின் வட்டி வீதத்தையும் மாற்றலாம். வணிக வங்கிகள் மிகுதியாக மைய வங்கிக்குக் கடன்படாத நிலையில் வங்கி வீத மாறுதல் களுக்கேற்ப வணிக வங்கிகள் தங்களுடைய வட்டி வீதத்தை உயர்த்தா. இத்தகைய சூழ்நிலையில், மைய வங்கி மிகுதியாக அரசின் பத்திரங்களை விலைக்கு விற்குமானால் பத்திரங்களின் விலை குறையும். இதனால் கடன் பத்திரங்களின் வட்டி வீதம் கூடும். இதனை ஒட்டி அங்காடியின் வட்டி வீதம் உயர்வதைக் காணலாம்.

## சிறப்பியல்புகள்

வெளி அங்காடி நடவடிக்கைகளில் சில குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகள் இருக்கின்றன. அவற்றைத் தொகுத்துக் கூறுவோம்:

முதலாவதாக, வெளி அங்காடி நடவடிக்கைகள் நேரடி யாகப் பண அளிப்பையும் கடன் அளவையும் மாற்றுவதன் மூலம் வட்டி வீதத்தைப் பாதிக்கின்றன. வங்கி வீதம் முதலில் குறுகிய கால வட்டி வீதத்தை மாற்றுகின்றது. பின்னர் அதன்

வழியாக நீண்ட கால வட்டி வீதம் மாறுகின்றது. ஆனால், வெளி அங்காடி நடவடிக்கைகள் நேரடியாக நீண்ட காலப் பத்திரங்களின் விலையையும், அதன்வழி நீண்ட கால வட்டி வீதத்தையும் மாற்றுகின்றன.

இரண்டாவதாக, வெளி அங்காடி நடவடிக்கைகளை மைய வங்கி தானே மேற்கொண்டு, பண அளவைக் கட்டுப் படுத்தலாம். வணிக வங்கிகளின் ஒத்துழைப்புக் கிடைத் தாலும், கிடைக்காவிட்டாலும் மைய வங்கியால் வெளி அங்காடி நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும். இதன்மூலம் கடன் அளவைக் கட்டுப்படுத்தலாம். ஆனால், வங்கி வீதம் செயல்பட வேண்டுமானால் வங்கிகளின் ஒத்துழைப்பு மிகவும் தேவையான தாக இருக்கும்.

மூன்றாவதாக, வெளி அங்காடி நடவடிக்கைகள் வங்கி வீதத்திற்குத் துணையாக இருக்கின்றன. வங்கி வீத மாறுதலால் எதிர்பார்க்கும் பலன் கிடைக்க வெளி அங்காடி நடவடிக்கைகள் துணை செய்கின்றன. மலிவுப் பணக் கொள்கையைப் பின்பற்றி வட்டி வீதத்தைக் குறைப்பதோடு, பத்திரங்களை விலைக்கு வாங்கி நாட்டில் உள்ள பணத்தின் அளவைக் கூட்டலாம்.

நான்காவதாக, வெளி அங்காடி நடவடிக்கைகள் அரசின் கடனுக்கு ஆதரவாக அமைகின்றன. அரசு, கடன் பத்திரங்களை வெளியிடுகின்றபொழுது மைய வங்கி வேண்டிய வகையில் உதவுகின்றது. கடன் பத்திரங்களின் விலை வெளி அங்காடியில் குறைகின்றபொழுது, மைய வங்கி பெருமளவில் கடன் பத்திரங் களை விலைக்கு வாங்குகின்றது. இதனால் அவற்றின் விலை மேலும் குறைவது தடுக்கப்படுகின்றது. இதைப்போன்றே அரசின் கடன் பத்திரங்களின் விலை ஓர் அளவைக் கடந்து கூடுகின்றபொழுது, மைய வங்கி தன்னிடமிருக்கின்ற கடன் பத்திரங்களை விற்கின்றது. இதனால், கடன் பத்திரங்களின் விலை கூடுவது தவிர்க்கப்படுகின்றது. கடன் பத்திரங்களின் விலையில் மிகுதியும் ஏற்றத்தாழ்வு ஏற்படாமல்; அவற்றின் விலை நிலைப்பட்டிருக்க வெளி அங்காடி நடவடிக்கைகள் பெரிதும் துணை செய்கின்றன.

ஐந்தாவதாக, விலைகளையும் அந்நியச் செலாவணியையும் கட்டுப்படுத்த வெளி அங்காடி நடவடிக்கைகள் துணை செய்கின்றன. வெளி அங்காடி நடவடிக்கைகள் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் சில விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

நாட்டுப் பண அளவைக் குறைக்க மைய வங்கி பத்திரங்களை விற்கின்றபொழுது, வணிக வங்கிகளின் கடனளவு குறைய, பொருள்களின் விலைகள் கூலிகள் வீழ, ஏற்றுமதி கூட, அந்நியச் செலாவணி நிலை சாதகமாக மாறும்.

ஆறாவதாக, பருவகால ஏற்றத்தாழ்வுகளைத் தவிர்க்க வெளி அங்காடி நடவடிக்கைகள் உதவுகின்றன. பொதுவாக மந்த காலத்தில் மிகுதியாகப் பணமும், செழிப்புக் காலத்தில் பணப் பற்றாக்குறையும் வங்கிகளிடம் காணப்படும். மைய வங்கி, வங்கிகளிடமுள்ள மிகுதிப் பணத்தைப் பத்திரங்களை விற்பதன்மூலம் பெறுகின்றது; பணப் பற்றாக்குறையைப் பத்திரங்களை வாங்குவதன்மூலம் நிறைவு செய்கின்றது.

## வரையறைகள்

கீழ்க்காணும் சூழ்நிலைகள் இருந்தால்தான் வெளி அங்காடி நடவடிக்கைகள் எதிர்பார்க்கின்ற வகையில் பலனளிக்கும் :

முதலாவதாக, மைய வங்கி, வாங்கி விற்கும் பத்திரங்களுக்குப் பரந்து விரிந்த அளவில் அங்காடி இருக்க வேண்டும். குறுகிய கால, நீண்ட காலப் பத்திரங்களை மிகுந்த அளவில் வாங்கி விற்கக்கூடிய அங்காடி இருந்தால்தான் வெளி அங்காடி நடவடிக்கைகள் எதிர்நோக்கும் விளைவுகளை ஏற்படுத்தும்.

இரண்டாவதாக, வெளி அங்காடி நடவடிக்கைகளைத் திறமையாக மேற்கொள்ள மைய வங்கியிடம் போதுமான அளவில் ரொக்கமும் பத்திரங்களும் இருக்க வேண்டும். ஒரே வகையான பத்திரங்களை மட்டும் வாங்கவோ, விற்கவோ செய்யாமல் பல வகையான பத்திரங்களையும் வாங்கி, விற்கின்ற பொழுது மிகுந்த பலன் ஏற்படும்.

மூன்றாவதாக, மைய வங்கியின் வெளி அங்காடி நடவடிக்கைகளால் நேரடியாகச் சமுதாயத்திலுள்ள பணத்தின் மொத்த அளவும், வங்கிகளின் ரொக்கமும் மாறவேண்டும். அப்படி இல்லாமல் மைய வங்கி கூட்டுகின்ற பணம் வெளியேறி விட்டாலோ, குறைக்கின்ற பணம் வேறுவழியில் ஈடு செய்யப் பட்டுவிட்டாலோ, வெளி அங்காடி நடவடிக்கைகளால் நலம் பயக்கத்தக்க விளைவுகள் இரா.

நான்காவதாக, வெளி அங்காடி நடவடிக்கைகளால் பலன் விளைய வேண்டுமென்றால், வணிக வங்கிகள் தங்களுடைய

ரொக்க இருப்புக் கூடுகின்றபொழுது கடனளவைக் கூட்ட வேண்டும். அதைப்போன்று, தங்களுடைய ரொக்கம் குறை கின்றபொழுது கடனளவைக் குறைக்கவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் வெளி அங்காடி நடவடிக்கைகள் விழைகின்ற பயனைக் கொடா.

ஐந்தாவதாக, மைய வங்கி வணிக வங்கிகளுக்கு நேரடி யாகக் கடன் கொடுக்கவோ, அவற்றிடமிருந்து பணம் பெறவோ கூடாது. அப்பொழுதுதான் வெளி அங்காடி நடவடிக்கைகளால் சரியான விளைவுகள் கிடைக்கும்.

ஆறாவதாக, வெளி அங்காடி நடவடிக்கைகளில் பத்தி ரங்கள் விற்றலைவிட, வாங்குதல் எளிதாக இருக்கின்றது. பத்தி ரங்களை வாங்குகின்றபொழுது, பத்திரங்களின் விலையைச் சிறிது கூட்டினாலும் பத்திரங்களை எளிதாக வாங்கலாம். பணத்தேவையுள்ள வங்கிகள் இத்தகைய நடவடிக்கைகளை அதிகரிக்கும். ஆனால், மைய வங்கி பத்திரங்களை விற்பனை செய்கின்றபொழுது, பொதுமக்களும் வங்கிகளும் உறுதியாக எல்லாவற்றையும் வாங்குவார்களென்று கூறமுடியாது. பத்தி ரங்களின் விற்பனை, வங்கிகள்-பொதுமக்களின் விருப்பத்தையும் பிற சூழ்நிலைகளையும் ஒட்டி அமைகின்றது.

**நிறைவுரை**

வெளி அங்காடி நடவடிக்கை, பண அளவைக் கட்டுப் படுத்துவதில் பெரிதும் பயன்பட்டாலும், இது ஒரு குறைகளற்ற வழிமுறை என்று கூற முடியாது. இது சில குறிப்பிடத்தக்க சூழ்நிலைகளிலேயே திறமையாகப் பயன்படுத்தப்படுவதால், இதனுடைய ஆற்றல் ஓரளவு குறைவானதாகவே இருக்கின்றது. அதே நேரத்தில் இதனுடைய பயன்பாட்டைப் புறக்கணித்துவிட முடியாது. வங்கி வீதத்திற்கு இது துணை செய்கின்ற வழிமுறையாக இருக்கின்றது. இது ஒரு நேரடி நடவடிக்கையாக இருப்பதால், எப்பொழுதெல்லாம் திட்டவட்டமான விரைவான விளைவுகளை எதிர்பார்க்கின்றார்களோ அப்பொழுதெல்லாம் வெளி அங்காடி நடவடிக்கைகளை மைய வங்கி மேற் கொள்ளலாம்.

அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் இந்த முறையை வெற்றிகரமாக அடிக்கடி பயன்படுத்தியிருக் கின்றார்கள். ஆனால், பின்தங்கிய நாடுகளில் வெளி அங்காடி

நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்கான சூழ்நிலைகள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. ஆதலால், இங்கெல்லாம் இந்த முறைகள் எதிர்பார்க்கின்ற விளைவுகளைத் தருமென்று கூற முடியாது. இதனால் பின்தங்கிய நாடுகளில் இம் முறைகளைப் பின்பற்றவே முடியாதென்றும் கூறமுடியாது. குறிப்பிட்ட அளவில் இம் முறைகளைப் பின்பற்றலாம். வளர்ச்சியில் பின் தங்கியிருக்கின்ற நாடுகளிலும்கூட, இப்பொழுது அரசின் பத்திரங்களுக்கான அங்காடி விரிவடைந்து வருகின்றது. ஆதலால், இம் முறைகளின் முக்கியத்துவம் கூடுமென்று எதிர் பார்க்கலாம்.

பருவகாலங்களில் பணப் பற்றாக்குறைகள் ஏற்படுகின்ற பொழுது இம் முறைகள் பெரிதும் பயன்படுகின்றன. வேளாண்மை நாடுகளில், வேளாண்மை நடவடிக்கைகள் கூடுகின்றபொழுதெல்லாம் பணப் பற்றாக்குறை ஏற்படலாம். அப்பொழுதெல்லாம் வெளி அங்காடி நடவடிக்கைகள் பெருந் துணை புரிகின்றன.

பேராசிரியர் கீன்ஸ், வெளி அங்காடி நடவடிக்கைகளைத் திறமையாகப் பயன்படுத்தினால் வங்கி வீத மாறுதலின்றியே எதிர்நோக்கிய விளைவுகளை ஏற்படுத்த முடியுமென்று கூறு கின்றார். ஆனால், பெரும்பாலான பொருளியலறிஞர்கள் வங்கி வீதத்திற்கு உதவியாக வெளி அங்காடி நடவடிக்கைகள் அமையும்பொழுது எதிர்பார்க்கும் விளைவுகளை உறுதியாக ஏற்படுத்தலாமென்று கூறுகின்றனர்.

## 3. ரொக்க இருப்பு வீத மாறுதல்
(Variation of Cash Reserve Ratio)

மரபுவழிக் கடன் கட்டுப்பாட்டு முறைகளான வங்கிவீதக் கொள்கையிலும், வெளி அங்காடி நடவடிக்கைகளிலும் சில உள்ளார்ந்த குறைகளிருந்தால், வங்கிகளின் ரொக்க இருப்பு வீத மாறுதல்களின்மூலம் அவற்றின் கடன் அளவைக் கட்டுப் படுத்துகின்ற புதிய முறை பின்பற்றப்படுகின்றது. இந்த முறையை ஒரு கோட்பாடாக உருவாக்கி வழங்கிய பெருமை கீன்சைச் சாரும். ஆனால், இம் முறை முதன்முதலில் அமெரிக்காவில் வெற்றிகரமாகப் பின்பற்றப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ரொக்க இருப்பு வீத மாறுதல் முறையைப் பின் பற்றுவதற்கான தேவையை முதலில் விளக்கிக் கூறலாம். சில வலிமை வாய்ந்த வங்கிகள் தேவைக்கு அதிகமாகவே ரொக்க இருப்பு வைத்திருக்கின்றன. இத்தகைய வங்கிகளை வங்கி வீதமோ, வெளி அங்காடி நடவடிக்கைகளோ பாதிப்பதில்லை. இப்பொழுது அரசின் பொதுக் கடன் அளவு கூடியிருக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் மரபுவழிமுறைகள் வலுவிழந்து இருக்கின்றன. பின்தங்கிய நாடுகளில் சரியான பத்திர அங்காடி இல்லாமையால் புதிய முறையைப் பின்பற்றுவது தேவையாகின்றது. வணிக வங்கிகளின் ரொக்க இருப்பு வீதத்தை மாற்றுகின்ற அதிகாரம் மைய வங்கிக்குச் சட்டத்தின் மூலம் தரப்பட்டிருக்கின்றது. இந்த அதிகாரத்தைப் பயன் படுத்திக் கொண்டு கடனளவைக் கட்டுப்படுத்துகின்ற முறையாக ரொக்க இருப்பு வீத மாறுதல்முறை பின்பற்றப்படுகின்றது.

### செயல்படல்

வணிக வங்கிகள், அவற்றின் வைப்புகளில் ஒரு பகுதியை மைய வங்கி இருப்பாக வைத்திருக்க வேண்டுமென்று சட்டம் வலியுறுத்துகின்றது. இத்தகைய ரொக்க இருப்பை முதலில் ஏற்படுத்தியதன் நோக்கம், வங்கிகளின் ரொக்கத் தன்மையைக் காப்பாற்ற வேண்டும் என்பதாகவே இருந்தது. இதனால் மைய வங்கிக்குப் பணம் கிடைத்தது. பின்னர், இந்த ரொக்க இருப்பு வீதத்தில் மாறுதல்களை ஏற்படுத்துவதன் மூலம், மைய வங்கி மற்ற வங்கிகளின் கடனளிக்கும் சக்தியைக் கட்டுப்படுத்தத் தொடங்கியது.

ரொக்க இருப்பு வீதம் நடப்பு வைப்புக்கும், கால வைப் புக்கும் வேறுபடலாம். எடுத்துக்காட்டாக அமெரிக்காவைக் கூறலாம். அங்குக் கூட்டரசு காப்பு முறையின் (Federal Reserve System) ஆளுநர் குழு (Board of Governors) வங்கிகளின் இருப்பு வீதத்தில் மாறுதல் செய்கின்ற அதிகாரம் பெற்றிருக் கின்றது. அங்குக் கால வைப்பில் 3 முதல் 6 சதவீதமும், நடப்பு வைப்பில் வங்கிகள் அமைந்திருக்கின்ற இடங்களின் சூழ்நிலைகளை ஒட்டி 7 முதல் 14 சதவீதமும், 10 முதல் 20 சத வீதமும், 13 முதல் 26 சதவீதமும் மாற்றலாம்.

சில நாடுகளில் நடப்பு வைப்பிற்கும் கால வைப்பிற்கும் சேர்த்து மொத்தத்தில் எவ்வளவு சதவீதம் இருப்பு வைக்க வேண்டுமென்று குறிப்பிடலாம். இதற்கு எடுத்துக்காட்டாக நமது நாட்டைக் குறிப்பிடலாம். இம் முறையை விளக்குவோம்:

வணிக வங்கிகள் 100 ரூபா வைப்புக்கு 5 ரூபா (அதாவது 5 சதவீதம்) ரொக்கம் வைத்திருக்க வேண்டுமென்றால், அதனிடம் நூறு ரூபா ரொக்கம் இருந்தால், வங்கி இரண்டாயிரம் ரூபா வைப்புகளை ($\frac{100}{5} \times 100 = 2,000$) உருவாக்க முடியும். ரொக்க இருப்பு வீதத்தை 10 சதவீதமாக, நூறு ரூபா ரொக்கத்தை வைத்துக் கொண்டு ($\frac{100}{10} \times 100$) ஆயிரம் ரூபா வைப்புகளை மட்டுமே உருவாக்க இயலும். ரொக்க இருப்பு வீதத்தை 2 சத வீதமாகக் குறைத்தால், 100 ரூபா ரொக்கம் வைத்திருக்கும் வங்கியால் ($\frac{100}{2} \times 100$) ஐயாயிரம் ரூபாவுக்கு வைப்புகளை உரு வாக்க முடியும். ஆதலால், வணிக வங்கிகளால் நூறு ரூபா ரொக்கத்தை வைத்துக்கொண்டு ரூ. 2,000, அல்லது ரூ. 1,000, அல்லது ரூ. 5,000 வைப்புகளை உருவாக்குவது மைய வங்கி குறிப்பிடும் ரொக்க இருப்பு வீதத்தை ஒட்டி அமைகின்றது.

மைய வங்கி, ரொக்க இருப்பு வீதத்தைக் குறைக்கின்ற பொழுது, வங்கிகளின் கடனளவு கூடும். இருக்கின்ற ரொக்க இருப்பைப் பயன்படுத்தியே வங்கிகள் அதிக அளவில் கடன் கொடுக்கும் ஆற்றல் பெற்றிருக்கும். மைய வங்கி, கடனளவைக் குறைக்க விரும்புகின்றபொழுது ரொக்க இருப்பு வீதத்தைக் கூட்டும்.

### சிறப்புகள்

மற்றைய கடன் கட்டுப்பாட்டு முறைகளைவிட ரொக்க இருப்புவீத மாறுதல்முறை சிலவற்றில் சிறந்ததாக விளங்கு கின்றது. அத்தகைய சிறப்புகளைத் தொகுத்துக் கூறுவோம்:

முதலாவதாக, ரொக்க இருப்புவீத மாற்றம், உடனடியாகப் பலனளிக்கக்கூடிய முறையாகும். மைய வங்கி ரொக்க இருப்பு வீதத்தைக் கூட்டியவுடன் வங்கிகள் தங்களுடைய கடன் அளவைக் குறைக்க வேண்டியுள்ளது. மற்றைய கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகளைப்போல இது வேறு புறச் சூழ்நிலை களைச் சார்ந்திருக்கவில்லை. ஆதலால், நேரடியாக விளைவுகள் ஏற்படுகின்றன. மற்றைய முறைகளின் வெற்றிக்கு இது மிகவும் உதவியாக இருக்கின்றது.

இரண்டாவதாக, வெளி அங்காடி நடவடிக்கைகளைப் பின் பற்ற வேண்டுமானால் நல்ல பங்கு அங்காடி (Stock Exchange

Market) அமைந்திருக்க வேண்டும். பல நாடுகளில் பங்கு அங்காடி தக்க முறையில் வளர்ச்சி பெறாததால், அவற்றில், வெளி அங்காடி நடவடிக்கைகளைத் திறமையாகப் பின்பற்ற இயலவதில்லை. ஆனால், பங்கு அங்காடி தக்க முறையில் வளர்ச்சி பெறாத பின்தங்கிய நாடுகளிலும் ரொக்க இருப்பு வீதத்தை மாற்றிக் கடனைக் கட்டுப்படுத்த இயலும்.

மூன்றாவதாக, வெளி அங்காடி நடவடிக்கைகளில் பத்திரங்களை வாங்கி விற்பதில் சில வேளைகளில் மைய வங்கி நட்டத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கும். ஆனால், ரொக்க இருப்புவீத மாறுதலில் எந்தச் சூழ்நிலையிலும் இழப்பு ஏற்பட வழியில்லை. மாறாக ரொக்க இருப்பு வீதத்தைக் கூட்டுகின்றபொழுது மைய வங்கியிடம் ரொக்கம் கூடும்.

நான்காவதாக, இந்த முறையில் மைய வங்கியின் சொத்தில் எந்த வகையான மாறுதலும் ஏற்படுவதில்லை. வெளி அங்காடி நடவடிக்கையில் பத்திரங்களை விற்கின்றபொழுது, மைய வங்கியின் வருவாய் தரும் சொத்துகள் (Earning Assets) குறையும். மைய வங்கி பத்திரங்களை வாங்கி விற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றபொழுது வணிக வங்கிகளின் சொத்துகளிலும் மாறுதல் ஏற்படுகின்றது. ஆனால், ரொக்க இருப்புவீத மாறுதல் வணிக வங்கிகளின் ரொக்கத்தில் ஒரு பகுதியை மைய வங்கிக்கு மாற்றுகின்றதே தவிர, வேறு சொத்துகளின் நிலையைப் பாதிப்பதில்லை.

ஐந்தாவதாக, ரொக்க இருப்புவீத மாறுதல்முறை எந்தச் சூழலிலும் பலன் தரக்கூடிய முறையாகும். வணிக வங்கிகளிடம் அதிகமாக ரொக்கம் இருந்தாலும், ரொக்க வீதத்தை மிகவும் உயர்த்திக் கடனளவைக் கட்டுப்படுத்தலாம்.

ஆறாவதாக, இம் முறை வேறு துறைகளைப் பாதிக்காது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மற்றைய முறைகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பண அங்காடி, பங்குச் சந்தை முதலிய துறைகளைப் பாதிக்கின்றன. ஆனால் இம் முறை வேறு துறைகளைப் பாதிப்பதில்லை.

### வரையறைகள்

ரொக்க இருப்பு வீதத்தை மாற்றிக் கடனளவைக் கட்டுப்படுத்துகின்ற முறையிலும் சில குறைகள் இருக்கின்றன. அவற்றைத் தொகுத்துக் கூறுவோம் :

முதலாவதாக, மைய வங்கி ரொக்க இருப்பு வீதத்தை மாற்றுகின்றபொழுது, ஓரளவு வணிக வங்கிகள் எப்படி நடந்துகொள்கின்றன வென்பதை ஒட்டியே விளைவுகள் இருக்கும். பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த மைய வங்கி ரொக்க வீதத்தைக் கூட்டுகின்றதென்று வைத்துக்கொள் வோம். ஆனால், வணிக வங்கிகள் மைய வங்கியிடம் சட்டப்படி ரொக்க இருப்பை வைத்துக்கொண்டு, தங்களிடமுள்ள இருப்பை வழக்கத்தைவிடக் குறைத்துவிடலாம். பணவாட்டக் காலத்தில் மைய வங்கி கடனளவைக் கூட்டக் கருதி, ரொக்க இருப்பு வீதத்தைக் குறைக்கலாம். அப்பொழுது வணிக வங்கிகள் வழக்கத்தைவிட அதிகமாகத் தங்களிடம் ரொக்கத்தை வைத்துக்கொள்ளலாம். இதனால், மைய வங்கி எதிர்பார்த்த விளைவுகள் ஏற்படாமல் போகலாம்.

இரண்டாவதாக, இந்த முறையை அடிக்கடி பயன்படுத்த முடியாது. இந்த முறையில் அடிக்கடி மாறுதல்கள் செய்ய வேண்டி ஏற்படும். இதனை வணிக வங்கிகள் விரும்புவதில்லை. ஆதலால், எப்பொழுதாவது பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவதற்கே இஃது ஏற்ற முறையாக இருக்கும்.

மூன்றாவதாக, மைய வங்கி, மற்றைய வங்கிகள் தன்னிடம் வைத்திருக்கின்ற ரொக்க இருப்புக்கு வட்டி கொடுப்பதில்லை. வணிக வங்கிகள் இதில் இழக்கும் நட்டத்தை ஈடுசெய்ய, அவை அளிக்கும் கடனுக்கு வட்டியைக் கூட்ட வேண்டிய தாகின்றது. இது சரியான முறையன்று என்கின்றனர். ஆனால், வணிக வங்கிகளின் ரொக்கத் தன்மையையும் பாது காப்பையும் கவனிக்க இம் முறை தேவையானதென்பதை மறுக்க முடியாது.

நான்காவதாக, இம் முறை கடனளவில் ஒரு நெகிழ்வற்ற தன்மையைக் கொண்டுவருகின்றது. வணிக வங்கிகளின் கடன் பெருக்கச் சுதந்தரம் குறைகின்றது. மேலும் ரொக்க இருப்பு வீதம் உயருமென்று எதிர்பார்த்தால் வங்கிகள் தேவையைவிட அதிகமாகவே ரொக்கத்தை வைத்திருக்க வேண்டியிருக்கும்.

ஐந்தாவதாக, இம் முறை எல்லா வங்கிகளையும் ஒன்றுபோல் பாதிக்குமென்று கூறமுடியாது. இது ஒவ்வொரு வங்கியையும் ஒவ்வொரு வகையில் பாதிக்கும். அதிகம் ரொக்கம் வைத்திருக் கின்ற பெரிய வங்கிகளை இம் முறை அதிகமாகப் பாதிக்காது. ஆனால் சிறிய வங்கிகள் இம் முறையால் பெரிதும் பாதிக்கப்படும்.

பொது நிறைவுரை

கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகள் சில பொது வரையறை களுக்கு உட்பட்டே பலன் தருகின்றனவென்பது குறிப்பிடத் தக்கதாகும். அவற்றிற்குரிய சூழ்நிலைகள் செவ்வனே அமைந்திருந்தால் மட்டுந்தான் கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகள் வெற்றியடையும். மைய வங்கியோடு வணிக வங்கிகள் நன்கு இணைந்து ஒத்துழைக்க வேண்டும். அப்பொழுது தான் எதிர்பார்க்கின்ற பலன்கள் விளையும். மைய வங்கிக்குத் தேவையான அளவு அதிகாரங்களைச் சட்டம் வழங்கியிருக்க வேண்டும். அத்தகைய சூழ்நிலையில்தான் மைய வங்கியால் வணிக வங்கிகளை நன்றாகக் கட்டுப்படுத்த இயலும்.

மைய வங்கி வணிக வங்கிகளைக் கட்டுப்படுத்துவதால் மட்டும் நாட்டின் மொத்தக் கடனளவைக் கட்டுப்படுத்த முடியாது. ஏனென்றால், வணிக வங்கிகள் தவிர சேமிப்பு வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் முதலியவைகளும் கடன் தருகின்ற பணியில் ஈடுபடு கின்றன. மைய வங்கி கடனளவைக் கட்டுப்படுத்த மேற்கொள் கின்ற முறைகள் இந்த நிறுவனங்களைப் பாதியா. மேலும், இவற்றைக் கட்டுப்படுத்த மைய வங்கிக்குத் தனி அதிகாரங்கள் தரப்பெறுவதில்லை. பொதுப் பொருளாதார நிலையைக் கட்டுப் படுத்தாமல் மைய வங்கி பின்பற்றுகின்ற கடனளவுக் கட்டுப்பாடு களால் முட்டும் விரும்பும் விளைவுகளை ஏற்படுத்த இயலாது.

## (ஆ) கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள்
## (Qualitative Credit Control Methods)

கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகளில் சில உள்ளார்ந்த குறைகள் இருப்பதனை முன்னரே சுட்டிக்காட்டினோம். கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள் வணிக வங்கிகளின் மொத்தக் கடனைக் கட்டுப்படுத்துகின்றன. இதனால் நாட்டின் நலனுக்குத் தேவையான சில துறைகள் பாதிக்கப்படுவதைக் காணலாம். ஆதலால், எந்தெந்தத் துறைகள் அல்லது தொழில்களுக்குக் கொடுக்கின்ற கடன்களால் நாட்டில் பணவீக்கம் ஏற்படு கின்றதோ, அவற்றை மட்டும் இனங்கண்டு, அந்தத் துறை களுக்குக் கடன் செல்லாமல் தடுக்கக் கடன் தன்மைக் கட்டுப் பாட்டு முறைகளை மையவங்கி பின்பற்றுவது தேவையாகின்றது. இந்த முறைகளால் மொத்தக் கடனைக் கட்டுப்படுத்தியோ,

கட்டுப்படுத்தாமலோ விழைகின்ற விளைவுகளை நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படுத்த இயலும்.

அமெரிக்காதான் முதன்முதலாக 1930ஆம் ஆண்டில் கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறையைப் பின்பற்றியது. அப்பொழுது அமெரிக்காவில் மொத்தக் கடனைக் கட்டுப்படுத்துவதோடுகூட, குறிப்பாகப் பங்கு அங்காடிக்கு (Stock Market) மிகுதியாகப் பணம் செல்வதைத் தடுக்கவேண்டியது இன்றியமையாத பொருளாதாரத் தேவையாக இருந்தது. அமெரிக்கா இம் முறையைப் பின்பற்றிய பின்னர், பல நாடுகள் கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளின்மீது தங்களுடைய கவனத்தைச் செலுத்தின. வங்கி வீதத்தைச் சார்ந்திருந்த மரபுவழிக் கடன் கட்டுப்பாட்டு முறைகளில் காணப்பெற்ற குறைகள், புதிய கடன்தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளைப்பற்றி உலக நாடுகளைச் சிந்திக்கச் செய்தன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ச் சில துறைகளுக்குச் செல்கின்ற கடன்களை மட்டும் கட்டுப்படுத்தவேண்டிய தேவை அதிகரித்ததால், அமெரிக்காவும் வேறுபல நாடுகளும் கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளை மிகுதியாகப் பின்பற்றத் தொடங்கின. ஊக வாணிபத்திற்காகவும், நீண்ட காலம் பயன் படக்கூடிய நுகர்பொருள்களை வாங்கி இருப்பு வைப்பதற்காகவும் பெறுகின்ற கடன்களால்தாம் வாணிபச் சுழல் அதிகப் படுகின்றதென்பதை நடைமுறையில் கண்டார்கள். ஆதலால் அமெரிக்காவில் இத்தகைய கடன்களை மட்டும் கட்டுப்படுத்தக் கூடிய தனிச் சட்டங்களை உருவாக்கினார்கள். அமெரிக்காவைப் போன்றே ஆஸ்திரேலியாவிலும் மைய வங்கிக்குக் கடன்தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றப் போதுமான அதிகாரங்களை வழங்கக்கூடிய சட்டங்களை நிறைவேற்றினர். 1949ஆம் ஆண்டு முதல் நம் நாட்டிலும் இம் முறைகளைப் பின்பற்றுகின்றனர்.

**சிறப்புகள்:** கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகளோடு ஒப்பிடுகின்றபொழுது கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளில் சில குறிப்பிடத்தக்க சிறப்புகள் உள்ளன. அவற்றைச் சுட்டிக் காட்டலாம்:

முதலாவதாக, கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் கடனைப் பயன்படுத்துகின்ற துறைகளைப் பகுத்துப்பார்க்கின்றன. தேவையான துறைகளுக்குக் கொடுக்கின்ற கடன்களைப்

பாதிக்காமல், முக்கியமற்ற துறைகளை மட்டும் தனித்துப் பிரித்துக் கட்டுப்படுத்துகின்றன.

இரண்டாவதாக, நாட்டு நலனுக்கு எதிராகச் செயல்படுகின்ற ஊக வணிகர்கள் முதலியோரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடிகின்றது.

மூன்றாவதாக, கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகள் கடன் அளிக்கும் வங்கிகளை மட்டும் கட்டுப்படுத்துகின்றன. இந்த முறைகள் கடன் கொடுப்பவர்களையும், கடன் பெறுபவர்களையும் பாதிக்கின்றன.

நான்காவதாக, திட்டமிட்ட பொருளாதார அமைப்பில், எந்தத் துறையின் நடவடிக்கையால் பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்படுமென்று ஊகிக்கக்கூடிய நிலையில் கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் மிகவும் ஏற்றவையாக இருக்கின்றன.

**நோக்கங்கள்**

கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளை மைய வங்கி பல வகையான நோக்கங்களோடு பின்பற்றுகின்றது. அந்த நோக்கங்களைத் தொகுத்துக் கூறலாம் :

முதலாவதாக, சில தேவையற்ற துறைகளுக்குக் கடன் கொடுப்பதால் நாட்டின் மொத்தக் கடனளவு அதிகமாக இருக்கின்றது. தேவையற்ற கடன்களை மட்டும் குறைப்பதன்மூலம் மொத்தக் கடனின் அளவைக் குறைக்கலாம்.

இரண்டாவதாக, தவணைக் கடன்முறை முதலியவற்றால் நாட்டில் நுகர்வோர் கடனளவு அளவு கடந்து கூடலாம். இதனால் நுகர்வோரின் தேவை வரம்புகடந்து பெருக, பண வீக்கம் மிகுதிப்படும். இதனைத் தடுக்கக் கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றலாம்.

மூன்றாவதாக, வேண்டாத தொழில், வாணிபத் துறைகளில் மேலும் மேலும் முதலீடு செய்வதைக் கட்டுப்படுத்த இம் முறைகளைப் பின்பற்றுகின்றனர்.

நான்காவதாக, இறக்குமதியைக் குறைத்து, ஏற்றுமதியைக் கூட்டுவதன் மூலம் அந்நியச் செலவாணி கொடுத்தல் நிலையைச் சீர்ப்படுத்தவும் இம் முறை பின்பற்றப்படுகின்றது.

ஐந்தாவதாக, வங்கிக் கடனோடு வேறுவகை நிதி நிறுவனங்கள் தருகின்ற கடன்களையும் கட்டுப்படுத்த இம் முறைகளைக் கைக்கொள்ளலாம்.

முறைகள்

கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளைத் தற்காலத்தில் மைய வங்கிகள் பரந்த அளவில் பின்பற்றுகின்றன. சேயர்ஸ், 'கடன் தன்மைக் கட்டுப்பாடுகள் அண்மைக் காலத்திலேயே தோன்றியுள்ளன என்று கூறிவிட முடியாது. இவை நெடுங் காலமாக மைய வங்கிகளுக்குப் பழக்கமானவையேயாகும். எனினும், நெடுங்காலமாக இவற்றை மைய வங்கி பயன்படுத்தி வருவதை நாம் விளக்கமாக மைய வங்கியின் வரலாற்றினின்றும் அறிய முடிவதில்லை. ஆனால் இதை நாம் குறிப்பாக உணரலாம். கடந்த இருபது ஆண்டுகளில் கடன் தன்மைக் கட்டுப்பாடுகள் பெரிதும் வளர்ச்சியுற்றுள்ளன' என்று கூறுகின்றார். கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளில் வரம்புத் தேவை, நுகர் வோர் கடன் நெறிப்படுத்துதல், ஆணைகள் பிறப்பித்தல், அறிவுறுத்தல், கடன் பங்கீடு, நேரடி நடவடிக்கை ஆகியவை அடங்குகின்றன. இந்த முறைகளை ஒவ்வொன்றாக விளக்கலாம்.

## 1. வரம்புத் தேவைகளைக் குறித்தல் (Margin Requirements)

பங்குச் சந்தையில் ஊக வாணிபம் அளவு கடந்து செல்வதைத் தடுக்க இம் முறை பின்பற்றப்படுகின்றது. பங்குச் சந்தையில் ஈடுபடுகின்றவர்கள் மேலும் பங்குகளை வாங்கப் பணம் தேவைப் படுகின்றபொழுது தங்களிடமுள்ள பங்குகளை வணிக வங்கி களிடம் ஈடாகக் கொடுத்துப் பணம் பெறுகின்றனர். பங்குகளின் மீது எந்த அளவு வரம்பு (margin) கட்டிக்கொண்டு வங்கிகள் கடன் கொடுக்க வேண்டுமென்பதை மைய வங்கி வரையறுக் கின்றது. இதன் மூலமாக மைய வங்கி வங்கிகளின் கடனளவைக் கட்டுப்படுத்த முடிகின்றது.

முதன்முதலாக இம் முறையை அமெரிக்கா பின்பற்றியது. 1934ஆம் ஆண்டில் 'பத்திரங்கள் மாற்றுச் சட்டம்' (Securities Exchange Act) நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டம் அமெரிக்க மைய வங்கியின் ஆளுநர் குழுவிற்குப் பத்திரங்களுக்குக் கடன் வரம்புகளைக் குறிப்பிடும் அதிகாரத்தை வழங்கியிருக்கின்றது.

வரம்பு 10 சதவீதம் என்றால், வணிக வங்கி 100 ரூபா மதிப்புள்ள பத்திர ஈட்டின்மீது 90 ரூபா வரைதான் கடன்

தரலாம். வரம்பின் அளவை 30 சதவீதமாக உயர்த்தினால் 70 ரூபாதான் கடன் தரமுடியும். வரம்பை ஏதாவது ஒரு குறிப்பிட்ட வகைப் பத்திரத்திற்கு 100 சதவீதம் என்று உயர்த்தி விட்டால், அந்தப் பத்திரத்தை வைத்து வங்கியில் கடன் வாங்க இயலாது. வணிக வங்கிகளின் கடனளவைக் கூட்ட நினைக்கின்ற பொழுது மையவங்கி வரம்பின் அளவைக் குறைக்கும். ஒரு குறிப்பிட்ட வகைக் கடன்களைக் குறைக்க அதற்குரிய வரம்பை உயர்த்தும்.

வரம்பை உயர்த்துவதோ, குறைப்பதோ பங்குச் சந்தையில் ஈடுபட்டிருப்போரின் இலாபத்தைப் பாதிக்கும். இதனை விளக்கிக் கூறலாம். தேவை வரம்பு 10 சதவீதமாக இருக்கின்றதென்று வைத்துக்கொள்வோம். ஒருவரிடம் 1,000 ரூபா இருந்தால், அவர் அதற்கு நூறு ரூபா மதிப்புள்ள 10 பங்குகள் வாங்கலாம். பின்னர் அவற்றை ஈடுவைத்து 900 ரூபா வாங்கி, அதற்கு மேலும் ஒன்பது பங்குகள் வாங்கலாம். அவற்றை ஈடுவைத்து மேலும் எட்டுப் பங்குகள் வாங்கலாம். இப்படி அவர் பங்குகளின்மீது செய்கின்ற முதலீட்டை வங்கிக் கடன்மூலம் பெருக்கிக்கொண்டே போகலாம்.

ஆனால், வரம்பு 50 சதவீதமாக உயர்த்தப்படுகின்றதென்று வைத்துக்கொள்வோம். முதலில் 1,000 ரூபாவுக்கு வாங்கிப் பத்திரங்களை ஈடுவைத்தால் அவருக்கு 500 ரூபாக்கள் தாம் கிடைக்கும். அதை வைத்து ஐந்து பத்திரங்கள் வாங்கலாம். அதற்கு அடுத்த நிலையில் அவரால் இரண்டு பத்திரங்களும், பின்னர் ஒரு பத்திரமும்தான் வாங்கமுடியும். இதனால் பங்குகளில் வாணிபம் செய்பவரின் இலாபம் குறையும்.

வரம்பளவு மிகவும் அதிகமாக இருக்குமானால் பணத் தேவை ஏற்படுகின்றபொழுது ஈடுவைத்துப் பணம் பெறுவதை விட, அவற்றை விற்றுவிடவே பங்கு வணிகர்கள் விரும்புவார்கள். இதனால் பங்குகளின் விலையேற்றம் தடுக்கப்படும். இந்த வகைக் கடன் கட்டுப்பாடு, ஊக வாணிபத்தை ஓரளவு கட்டுப்படுத்தித் தொழில்துறையில் முதலீடு செய்யத் தூண்டுகின்றது. அமெரிக்காவில் பங்கு வாணிபத்தைக் கட்டுப்படுத்த இம் முறை மிகவும் பயன்பட்டிருக்கின்றது.

## 2. நுகர்வோர் கடனை நெறிப்படுத்துதல் (Regulation of Consumers' Credit)

வணிக வங்கிகள் நுகர்வோருக்குப் பல பொருள்களை வாங்கக் கடன் கொடுக்கின்றது. இத்தகைய கடன்கள் அளவு

கடந்து பெருகுமானால், அந்த அளவிற்குப் பொருளுற்பத்தி வேகமாக நடைபெறாத நிலையில் பணவீக்கம் ஏற்பட்டு விலைகள் கூடிக்கொண்டே செல்வதைக் காணலாம். இத்தகைய கடன்கள் பொதுவாகத் தவணை முறையில் பொருள்களை வாங்கப் பயன்படுகின்றன.

நுகர்வோருக்கு வழங்கப்படுகின்ற கடன்களால் பணவீக்கம் ஏற்படுகின்றபொழுது, அதனைக் கட்டுப்படுத்த, மைய வங்கி எத்தகைய பொருள்களை வாங்குவதற்கு மட்டும் வங்கிகள் கடன் கொடுக்கலாமென்பதை வரையறுக்கலாம்.

தவணை முறையில் கடனுக்குப் பொருள்களை வாங்குகின்ற பொழுது, முதலில் ஓரளவு ரொக்கப் பணம் கட்டவேண்டும். இந்த அளவைக் கூட்டினால், அந்த அளவு பணம் கட்டமுடியாத வர்கள் எல்லாம் தவணை முறையில் கடன் பெறமாட்டார்கள். இதனால் நுகர்வோர் கடன் ஓரளவு கட்டுப்படுத்தப்படுகின்றது.

நுகர்வோர் கடனை வாங்குகின்றவர்கள் தவணைகளில் கடனைத் திருப்பிச் செலுத்துகின்றார்கள். எவ்வளவு காலத் திற்குள் எத்தனை தவணைகளில் பணம் கட்டவேண்டுமென் பதைக் குறிப்பார்கள். கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய காலத்தைக் குறைத்துத் தவணைகளின் எண்ணிக்கையையும் குறைத்துவிட்டால், தவணைக் கடனில் பொருள்களை வாங்கு பவர்கள் தயங்குவார்கள். தவணைக் கடன் தொகைக்கான உச்ச அளவையும் வரையறுக்கலாம். இதனாலும் கடனளவு குறையும்.

மந்த காலத்தில் கடன் காலத்தையும், தவணைகளின் எண்ணிக்கையையும், கடனளவையும் கூட்ட நேர் எதிர்மாறான விளைவுகள் ஏற்படுவதைக் காணலாம்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இம் முறையை அமெரிக்கா 1941ஆம் ஆண்டில் கைக்கொண்டது. 1941ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 9ஆம் நாள், அமெரிக்கக் குடியரசு தலைவர் அமெரிக்க மைய வங்கியின் ஆளுநர் குழுவிற்கு, இதற்கு வேண்டிய அதிகாரங்களை வழங்கினார். பாதுகாப்புப் பணிகளோடு தொடர்புடைய பொருள்களுக்கு இந்தக் கட்டுப் பாட்டை முதன்முதலில் பயன்படுத்தினர். பின்னர் இந்தக் கட்டுப்பாட்டை வானொலிப் பெட்டிகள், சலவை எந்திரங்கள், படகுகள், குளிர்பதனச் சாதனங்கள், தையல் எந்திரங்கள்

ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தினர். 1942ஆம் ஆண்டில் இந்தக் கட்டுப்பாட்டுப் பொருள்களின் பட்டியலோடு மேலும் சில புதிய பொருள்களைச் சேர்த்துக்கொண்டனர். 1952ஆம் ஆண்டு மேத் திங்களில் இந்தக் கட்டுப்பாடுகளை இறுதியாக நீக்கினர்.

நுகர்வோர் கடன் கட்டுப்பாட்டு முறைகளை பெல்ஜியம், ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகளும் பின்பற்றின. இங்கிலாந்து இம் முறையை 1952ஆம் ஆண்டு மே மாதத்திலும், கனடா இதனை 1954ஆம் ஆண்டு மே மாதத்திலும் நீக்கின.

பொருளாதாரச் சூழலில் ஏற்படக்கூடிய வாணிபச் சுழற்சியைக் கட்டுப்படுத்தவும், இம் முறை ஏற்றதாக இருக்கின்றது.

## 3. ஆணைகளின் மூலம் கட்டுப்பாடு

வணிக வங்கிகளின் கடனை நேரடியாக ஆணைகளை அனுப்பக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரத்தைச் சட்டம் மைய வங்கிக்கு வழங்கலாம். 1949ஆம் ஆண்டில் இந்திய வங்கி நிறுவனங்களின் சட்டம் ரிசர்வ் வங்கிக்கு இத்தகைய அதிகாரத்தை அளித்தது. மைய வங்கி, அடிக்கடி எத்தகைய கடன்களை எந்த அளவிற்குக் கொடுக்கலாமென்பதை ஆணைகளின்மூலம் அறிவித்துக் கட்டுப்படுத்தலாம்.

ஆணைகளின்மூலம் கட்டுப்படுத்துகின்ற முறையின் வெற்றி, மைய வங்கிக்கு இருக்கின்ற செல்வாக்கை ஒட்டி அமைகின்றது. நாட்டில் வங்கிகளின் எண்ணிக்கை மிகுதியாக இருந்தால், மைய வங்கியால், வணிக வங்கிகள் தனது ஆணைகளை ஒழுங்காக நிறைவேற்றுகின்றனவா என்பதைக் கவனிக்க முடியாது. பொதுவாக, மைய வங்கிக்கும் வணிக வங்கிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றபொழுது தான் இம் முறை மிகுந்த பயனைத் தரும்.

## 4. நேரடி நடவடிக்கை
(Direct Action)

நேரடி நடவடிக்கை என்பது ஒரு தனிமுறை என்பதைவிட எல்லா வகையான கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளையும் உள்ளடக்கிய ஒன்றென்று கூறுவது பொருத்தமாக இருக்கும். மைய வங்கி நேரடியாக வணிக வங்கிகள் சிலவற்றிற்குக் கடன்

கொடுப்பதைத் தடுத்து நிறுத்துகின்றது. ஏதாவது ஒரு வங்கி கட்டுப்பாடின்றி அளிக்கின்ற கடன் ஊக வாணிபத்திற்கு மிகுதியாகப் பயன்பட்டால், நேரடியாக அந்த வங்கியின்மீது மைய வங்கி நடவடிக்கை எடுக்கின்றது.

மைய வங்கியின் ஆணைகளை மீறிக் கடன் கொடுக்கின்ற வணிக வங்கிகள் நெருக்கடிக் காலத்தில் மைய வங்கியிடம் கடன் பெற வந்தால், மைய வங்கி கடனுக்கு அந்த வங்கிகளுக்கு மட்டும் அதிக வட்டி விதிக்கலாம்; சில வேளைகளில் அப்படிப் பட்ட வணிக வங்கிகள் கொண்டுவரும் கடன் பத்திரங்களுக்கு மறுகழிவு செய்து பணம் தர மறுக்கலாம்.

இந்த முறையிலுள்ள சில குறைகளையும் சுட்டிக்காட்டலாம். நேரடி நடவடிக்கை வணிக வங்கிகளை வலிந்து மைய வங்கியின் ஆணைகளை மேற்கொள்ளச் செய்கின்றது. சில வேளைகளில், ஒரு நோக்கத்திற்காகக் கடன் வாங்கிய வாடிக்கைக்காரர்கள் அதனை வேறு எதற்கும் பயன்படுத்தலாம். இதற்கு வணிக வங்கியைத் தண்டிப்பது சரியாகாதென்று வங்கியாளர்களின் சார்பில் கூறப்படுகின்றது. இந்த முறையில் மைய வங்கிக்கும் வணிக வங்கிகளுக்கும் இடையில் பொறுப்புகள் பிரிக்கப் படுகின்றன. இதனால் மைய வங்கி நடவடிக்கை எடுக்கின்ற வரை வணிக வங்கிகள் தம் போக்கில் செயல்பட்டுக் கொண்டிருக்கலாம்.

## 5. அறிவுறுத்தல்
(Moral Suasion)

மைய வங்கி வணிக வங்கிகளை நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்ற பணக்கொள்கையைப் பின்பற்றும்படி வேண்டுதல்களின் மூலம் தூண்டலாம். பணவீக்கக் காலத்தில் கடனளவைக் கட்டுப்படுத்தும்படியும், பணவாட்டக் காலத்தில் கடனளவைக் கூட்டும்படியும் வணிக வங்கிகளுக்கு ஆலோசனை கூறலாம்.

மைய வங்கி மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தால் இந்த முறையால் எதிர்பார்க்கின்ற பலன்களை விளையச் செய்யலாம். இம் முறையின் வெற்றி மைய வங்கிக்கும் வணிக வங்கிகளுக்கும் இடையிலுள்ள தொடர்பை ஒட்டியே அமையும். இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இம்முறை நல்ல பலனை அளித் திருக்கின்றது.

அறிவுறுத்தலினால் விளைவுகள் ஏற்படுமாவென்பதைப் பற்றிச் சிலர் ஐயப்படுகின்றனர். இது பல்லில்லாமல் கடித்து விடுவதாக எச்சரிப்பதைப் போன்றதென்று கிளார்க் (Clark) கூறுகின்றார். ஆனால், எச்சரிக்கையோ அச்சுறுத்தலோ இல்லாமையால், உளவியல் அடிப்படையில் இஃது ஒரு சிறந்த முறையாகக் கருதப்படுகின்றது.

## 6. கடன் பங்கீடு
## (Rationing of Credit)

கடன் தரப்படுகின்ற நோக்கத்தையோ கடனளவையோ கட்டுப்படுத்தி நெறிப்படுத்தக் கடன் பங்கீட்டு முறையை மைய வங்கி பின்பற்றுகின்றது. நாட்டுப் பொருளாதாரத்தில் எந்தெந்தத் துறைக்குக் கடன் கிடைக்க வேண்டுமோ, அதற் கேற்றாற்போலக் கடனை மைய வங்கி நெறிப்படுத்துகின்றது.

இம் முறையைக் கீழ்க்காணும் இரண்டு முறைகளில் மேற் கொள்ளலாம்:

முதலாவதாக, ஒவ்வொரு வங்கியும் எந்தெந்தத் துறைக்கு எவ்வளவு கடன் கொடுக்கலாமென்றும் மொத்தக் கடனளவு எவ்வளவாக இருக்கலாமென்றும் வரையறுப்பதை 'மாறும் துறை உச்ச வரம்புகள்' (Variable Portfolio Ceilings) என்கின்றனர்.

இரண்டாவதாக, வணிக வங்கிகளின் சொத்துகளுக்கும் மூலதனத்திற்கும் இருக்கவேண்டிய தொடர்பை வரையறுக் கலாம். வங்கிகள் அளிக்கின்ற கடனுக்கும், அவற்றின் மூலதனத்திற்கும் ஒரு விகிதத்தைக் குறிப்பிடுவதன் மூலம் வங்கி களின் மொத்தக் கடனளவைக் கட்டுப்படுத்தலாம். இதற்கு 'மாறும் மூலதனச் சொத்துகள் விகிதம்' (Variable Capital Assets Ratio) என்று பெயர்.

கடன் பங்கீட்டின் மூலம் கடனளவையும் கடன் தன்மை யையும் கட்டுப்படுத்த முடிகின்றது. திட்டமிட்ட பொருளா தாரத்தில் திட்டத்தின் நோக்கங்களுக்கேற்பக் கடனை முக்கிய மான துறைகளுக்கு வழங்க உதவுகின்றது. ஆனால், இம்முறை வணிக வங்கிகளின் கடன் கொடுக்கும் சுதந்தரத்தைப் பறிக்கின்றது. இறுதிநிலைக் கடன் ஈவோனாக மைய வங்கி ஆற்றவேண்டிய பணிக்கு இது முரண்பட்டதென்று சிலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

**கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறையிலுள்ள குறைகள்**

கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளில் பொதுவான சில குறைகள் இருக்கின்றன. அவற்றைத் தொகுத்துக் கூறுவோம்:

முதலாவதாக, சில துறைகளுக்குக் கடன் செல்வதை முற்றிலும் தடுக்க முடியாது. வணிக வங்கிகளிடம் கடன் பெறுகின்றவர்கள் எந்த நோக்கத்திற்காகக் கடன் பெற்றார்களோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடுகின்றார்களா என்பதைக் கண்காணித்து அறிவது நடைமுறையில் நடக்கக் கூடிய செயலன்று.

இரண்டாவதாக, கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறையில் குறிப்பிட்ட துறைகளில் முதலீடு செய்யவே கடன் தரப்படுகின்றது. கடன் பெறுகின்றவர் முதலில் பெற்ற கடனை எதற்காக வாங்கினாரோ அதற்காகவே செலவு செய்யலாம். ஆனால், அதிலிருந்து வருகின்ற பணத்தையும் அவரை அதே துறையில் தான் செலவிட வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. வேறு துறைகளிலும் அதிலிருந்து வருகின்ற வருவாயை முதலீடு செய்யலாம். இதனால் கடன் தன்மைக் கட்டுப்பாட்டின் நோக்கங்கள் நிறைவேறாமல் போகலாம்.

மூன்றாவதாக, ஆயுள் காப்பீட்டுக் கழகம் முதலிய நிதி நிறுவனங்கள் பரந்த அளவில் கடன் கொடுக்கலாம். இத்தகைய சூழ்நிலையில் வணிக வங்கிகளின் கடனை மட்டும் நெறிப் படுத்துவதால் எதிர்நோக்கும் விளைவுகள் ஏற்படுமென்று கூறமுடியாது.

நான்காவதாக, வணிக வங்கிகள் இலாப நோக்கில் செயல் படுகின்றன. ஆதலால், அவற்றில் சில மைய வங்கியின் ஆணைகளை மீறலாம். வங்கிகள் தங்களுடைய கணக்கில் ஒரு நோக்கத்திற்குத் தருவதாகக் குறித்துக்கொண்டு, வேறு உபயோகத்திற்குக் கடன் கொடுக்கலாம். இத்தகைய செயல்களை மைய வங்கியால் கண்டுபிடிக்க முடியாது.

ஐந்தாவதாக, இம் முறைகள் வங்கிகளின் சுதந்தரத்தைப் பாதிக்கின்றன. மைய வங்கி அடிக்கடி வணிக வங்கிகளின் நடவடிக்கைகளில் தலையிட்டுக் கொண்டிருந்தால், வங்கிகளால் திறமையாகப் பணியாற்ற முடியாது. இதனால் மொத்தத்தில் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படலாம்.

ஆறாவதாக, கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் கடனின் மொத்த அளவைக் குறைக்கத் துணை செய்கின்றன. ஆனால், இவற்றின் மூலம் வங்கிகளின் மொத்தக் கடனைக் கூட்ட முடியாது.

**நிறைவுரை**

பல்வேறு வகையான கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளிலிருந்து ஒவ்வொரு நாடும் அதனுடைய பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கேற்ப பணக் கொள்கையைப் பின்பற்றத்தக்க புதிய முறையைக் கண்டுபிடிக்க முயல்கின்றதென்பதை அறிகின்றோம். சில நாடுகளில் பண, வங்கி முறைகள் வளர்ச்சி அடையவில்லை. இத்தகைய நாடுகளில் கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகளைத் திறமையாகப் பின்பற்ற இயல்வதில்லை. அங்கெல்லாம் கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் நல்ல பயன்களை விளைவிக்கின்றன. நிதி முறைகளை நன்கு நிருவகிக்கின்றபொழுதுதான், நாட்டில் சமன்பட்ட வளர்ச்சி இருக்குமென்பதைக் காண்கின்றோம். இதற்குக் கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் பெரிதும் துணை செய்கின்றன.

நன்கு வளர்ச்சிபெற்ற பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளில், சில தெரிந்தெடுத்த நேரடியான கடன் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்ற வேண்டிய தேவைகள் எழுகின்றன.

கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளையும், கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகளையும் தனித்தனியாகப் பின்பற்றுவதைவிட, இரண்டு முறைகளையும் சேர்த்துப் பயன்படுத்தினால் மிகுந்த பயன் கிடைக்கும்.

## துணை நூல்கள்


1. De Kock, 'Central Banking'.
2. A. C. L Day, 'Outline of Monetory Economics'.
3. R. S Sayers, 'Modern Banking'.
4. R. S. Sayers, 'Central Banking after Bagehot'.
5. S. K. Basu, 'A Survey of Contemporary Banking Trends'.
6. Cecil Kisch and Elkin, 'Central Banks'.
7. H. P. Willis, 'The Theory and Practice of Central Banking'.
8. C. Whitney, 'Experiments in Credit Control'.
9. L. V. Chandler, 'The Economics of Money and Banking'.

# 16. பணச் சந்தை

## (Money Market)

### (அ) அமைப்பு, வகை, வளர்ச்சி

'பணச் சந்தை' என்னும் சொற்றொடர் பணத்தில் வாணிபம் நடக்கும் எந்தக் குறிப்பிட்ட இடத்தையும் சுட்டிக் காட்டுவதில்லை. பொதுப் பொருளியலில் 'சந்தை' என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றபொழுது, என்ன பொருளில் பயன்படுத்துகின்றார்களோ அதே பொருளில்தான் இங்கும் பயன்படுத்துகின்றார்கள்.

'சந்தை' என்னும் சொல், தொடர்பு கொள்கின்ற எல்லா வாங்குபவர்களையும் விற்பவர்களையும் உள்ளடக்கியிருக்கும் வட்டாரத்தைக் குறிக்கின்றது. பணச் சந்தையில் சட்ட முறைப் பணத்தை வாங்கி விற்கின்ற வாணிபம் நடப்பதில்லை. பணத்தோடு நெருங்கி வருகின்ற மிகுந்த ரொக்கத் தன்மை யுடைய வாணிப மாற்றுச் சீட்டுகள், வாக்குறுதிப் பத்திரங்கள், அரசாங்கப் பத்திரங்கள் முதலியவற்றைக் கொண்டு வாணிபம் நடத்தப்படுகின்றது. குறுகிய காலத்தில் பணமாகக்கூடிய பத்திரங்களை 'நெருங்கிய பணம்' (Near-Money) என்கின்றோம்.

கிரௌதர், 'பல தரப்பட்ட நெருங்கிய பணத்தில் பேரம் நிகழ்த்தும் பல்வேறு நிறுவனங்களுக்கும் நிலையங்களுக்கும் பொதுவாகப் பணச் சந்தை என்று பெயர்' என்று கூறுகின்றார். மேடனும் நாட்லரும் (Madden and Naddler), 'பணச் சந்தை என்பது குறுகிய கால நிதிகளைக் கடனாகக் கொடுக்கின்ற-பெறுகின்ற செயலமைப்பு ஏற்பாடாகும். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட நாட்டின் அல்லது உலகத்தின் பண நடவடிக்கைகளில் பெரும்பகுதி நடைபெறுகின்றது' என்று குறிப்பிடுகின்றனர்.

மற்றைய சந்தைகளில் இருப்பதைப் போன்றே பணச் சந்தையிலும் பணத்திற்குத் தேவையும் அளிப்பும் இருக் கின்றன. கடன் வாங்குகின்றவர்களான வணிகர்கள்,

தரகர்கள், உற்பத்தியாளர்கள், ஊக வணிகர்கள், அரசினர், பிற நிறுவனத்தினர் ஆகியோர் பணத்திற்குத் தேவையை ஏற்படுத்துகின்றனர். கடன் கொடுப்பவைகளான வணிக வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்பீட்டுக் கழகங்கள், மைய வங்கி ஆகியவை பணத்தின் அளிப்பை உருவாக்குகின்றன. தேவை-அளிப்பை ஒட்டிப் பணத்திற்குக் கொடுக்கப்படும் விலை யாக வட்டிவீதம் அமைகின்றது.

பணச் சந்தையை இருவகைகளாகப் பிரிக்கலாம்: ஒன்று, 'குறுகிய காலப் பணச் சந்தை'; மற்றொன்று, 'நீண்டகாலப் பணச் சந்தை'. பணச் சந்தை என்னும் சொல் குறுகிய காலப் பணச் சந்தையைத்தான் குறிக்கின்றது. இந்தச் சந்தையில் வாணியம், தொழில் ஆகியவற்றை நடத்துவதற்கு வேண்டிய குறுகிய காலக் கடனைக் கொடுத்து வாங்குகின்றனர். இதனை 'உள் சந்தை' என்றும் கூறுவதுண்டு. நீண்டகாலப் பணச் சந்தை யில் மூலதனத்திற்கு வேண்டிய நீண்டகாலக் கடன் கொடுத்து வாங்கப்படுகின்றது. ஆதலால் இதனை 'மூலதனச் சந்தை' (Capital Market) என்றும் கூறுவார்கள்.

**அமைப்பு**

பணச் சந்தையில் பல துணைச் சந்தைகள் (Sub-Markets) அமைந்திருக்கின்றன. இத்தகைய துணைச் சந்தை நாட்டிற்கு நாடு அங்குள்ள பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கேற்ப உருவாகி உள்ளன. ஆதலால், அவற்றிற்கிடையில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. பணச் சந்தை என்னும் தொகுப்புக்குள் பொதுவாக விளங்குகின்ற துணைச் சந்தைகளைப் பற்றிக் குறிப்பிடலாம்:

முதலாவது, 'அழைப்புப் பணச் சந்தை' (Call-Money Market). ஒருநாள் முதல் ஏழு நாள் வரை மிகவும் குறுகிய காலத்திற்குக் கடனளிக்கின்ற பகுதியாக இது அமைந்திருக் கின்றது. இதில் வணிக வங்கிகள் ஈடுபடுகின்றன. கேட்டவுடன் பணம் கிடைக்குமாகையால், இத்தகைய கடனில் வணிக வங்கிகள் ரொக்கத் தன்மையைக் காப்பாற்றிக்கொள்வதோடு சிறிய அளவில் இலாபமும் பெறுகின்றன.

இரண்டாவது, ஏற்புச் சந்தை (Acceptance Market). வாணிப உண்டியல்களைப் பெறுகின்ற வணிகர்கள் அவற்றிற் குரிய காலம் முடிந்து பணம் கிடைக்கின்றவரை காத்திருப்ப தில்லை. உடனடியாகப் பணம் பெற விரும்புகின்றார்கள். ஏற்பு

அங்காடியில் வங்கிகள் வாணிப உண்டியல்களுக்குப் பணம் தர ஒப்புக்கொண்டு உரிய காலத்தில் கடன் கொடுத்து வாங்கு கின்றன. இலண்டன் பண அங்காடியில் இதற்கெனத் தனியாக 'ஏற்பகங்கள்' (Accepting Houses) இருக்கின்றன.

மூன்றாவதாக, 'மாற்றுச் சீட்டுச் சந்தை' (Bill Market) அல்லது 'கழிவுச் சந்தை' (Discount Market) இருக்கின்றது. இதில் குறுகிய கால உள்நாட்டு, வெளிநாட்டு மாற்று உண்டியல் களை விற்கின்ற, வாங்குகின்ற பணிகள் நடைபெறுகின்றன.

நான்காவதாக, 'கருவூலச் சீட்டுச் சந்தை' (Treasury Bill Market) அல்லது 'அரசுப் பத்திரச் சந்தை' (Security Market) செயல்படுகின்றது. இதில் அரசுப் பத்திரங்களை வாங்கி விற்கின்றனர். பல நாடுகளில் பொதுக் கடனின் அளவு அதிக மாகிக்கொண்டு வருவதால் இந்தத் துணை அங்காடியின் முக்கியத் துவமும் கூடியிருக்கின்றது.

ஐந்தாவதாக, 'அந்நியச் செலாவணிச் சந்தை' (Foreign Exchange Market) இருக்கின்றது. இந்தச் சந்தையில் அயல் நாட்டுச் செலாவணியில் வாணிபம் செய்கின்றனர்.

பணச் சந்தையின் நடவடிக்கைகளில் சில நிறுவனங்கள் பங்கு பெறுகின்றன. இவற்றில் முதன்மையானதாகவும் தலைமை யானதாகவும் திகழ்வது மைய வங்கியாகும். பணச் சந்தையில் ஈடுபடுகின்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்தத் தேவையான அதிகாரம் மைய வங்கிக்கு இருக்கின்றது. பணச் சந்தையை வழிகாட்டி நடத்துகின்ற பொறுப்பும் மைய வங்கிக்கு உண்டு.

பணச் சந்தையில் பெரும்பங்கு பெறுபவை வணிக வங்கி களாகும். இவை வாணிபம், தொழில் ஆகியவற்றிற்கு வேண்டிய குறுகிய காலக் கடன்களைப் பல வழிகளில் தருகின்றன. சில நாடுகளில் ஏற்பகங்களும், மாற்றுச்சீட்டுத் தரகர்களும் பணச் சந்தையில் உறுப்புகளாக அமைந்திருப்பதைக் காணலாம். பல வகையான பணச் சந்தைகள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டிருப்பதால், எல்லா நிறுவனங்களும் ஒன்றை மற்றொன்று சார்ந்த நிலையில் இயங்குவதைக் காணலாம்.

தேவை: நாட்டின் விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு நன்கு அமைந்திருக்கின்ற பணச் சந்தை தேவைப்படுகின்றது. சிறப்பாக வளர்ச்சி பெற்ற பணச் சந்தையில் சில குறிப்பிடத் தக்க இயல்புகள் இருப்பதைக் காணலாம்:

முதலாவதாக, செவ்வனே அமைந்த பணச் சந்தையில் மாற்று வீதங்களும், வட்டி வீதங்களும் போட்டியின் அடிப்படையில் நிருணயிக்கப்படுகின்றன. இவற்றை இரகசியமாக நிருணயிக்கின்ற போக்கு இராது.

இரண்டாவதாக, பணச் சந்தை போதுமான அளவிற்கு விரிவாக்கம் பெற்றதாகவும், ரொக்கத் தன்மையுடையதாகவும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் பல்வேறு வகையான நிறுவனங்களும், அவற்றின் இயல்புகளுக்கும் மேற்கொள்கின்ற பணிகளுக்கும் ஏற்ப, பணச் சந்தையில் ஈடுபட இயலும்.

மூன்றாவதாக, மூலதனம் மிகுதியாக உள்ளே வருவதைவிட அதிகமாக வெளியேறிச் செல்லவேண்டும். கடன் கொடுப்பவர், கடன் வாங்குபவர் இருவருக்குமுள்ள தொடர்பு வளர்ந்து கொண்டேயிருக்க வேண்டும்.

இன்றைய சிக்கல் நிறைந்த பொருளாதார அமைப்புமுறை செவ்வனே செயல்படப் பணச் சந்தை பல வழிகளில் துணை செய்கின்றது. அவற்றை எல்லாம் தொகுத்துக் கூறுவோம்:

முதலாவதாக, பணச் சந்தை மைய வங்கியின் வெற்றிக்குத் துணை செய்கின்றது. மைய வங்கி பொதுவாகத் தனது பணிகளைத் திறம்படச் செய்யவும், குறிப்பாக வணிக வங்கிகளின் கடனளவைக் கட்டுப்படுத்தவும் பணச் சந்தை உதவுகின்றது. பணச் சந்தையுள்ள நாடுகளில்தாம் வட்டி வீதமும் வெளி அங்காடி நடவடிக்கைகளும் எதிர்பார்க்கின்ற விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

இரண்டாவதாக, வாணிபம், தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கின்ற நிறுவனங்கள் திறமையாகச் செயல்பட நடைமுதல் (Working Capital) தேவைப்படுகின்றது. மாற்று உண்டியல் முதலிய கடன் பத்திரங்களைப் பயன்படுத்திக் குறுகிய காலப் பண உதவியைப் பணச் சந்தையுள்ள நாடுகளில் தொழில், வாணிப நிறுவனங்கள் எளிதாகப் பெறுகின்றன. குறிப்பாக, வெளிநாட்டு வாணிபத்திற்குப் பணச் சந்தை பெருந்துணை புரிகின்றது.

மூன்றாவதாக, பணச் சந்தை வணிக வங்கிகளின் முதலீட்டு வாய்ப்பைப் பெருக்குகின்றது. வணிக வங்கிகள் ரொக்கத் தன்மையை அதிகம் இழக்காமல் முதலீடு செய்து வட்டியாக வருவாய் பெறப் பணச் சந்தை உதவுகின்றது.

பலவகையான பணத் துணைச் சந்தைகள் வணிக வங்கிகள் தங்களுடைய சொத்துகளைக் குறுகிய கால முதலீடு செய்ய வாய்ப்புகளை வழங்குகின்றன.

நான்காவதாக, அரசுக்கு உதவியாகப் பணச் சந்தை இருக்கின்றது. பணச் சந்தை இருந்தால் அரசு கருவூலச் சீட்டுகளை வெளியிட்டுத் தனக்கு வேண்டிய குறுகிய கால நிதியைப் பெறலாம். இந்த முறையால் நாட்டில் ஏற்படும் பண வீக்கத்தை ஓரளவு தடுக்கலாம். நீண்ட காலக் கடன்களைப் பெறவும் பணச் சந்தை துணை செய்கின்றது.

**பொது இயல்புகள்**

பல நாடுகளிலுள்ள பணச் சந்தைகள் வளர்ச்சியில் வேறு பட்ட நிலைகளில் இருக்கின்றன. நன்கு வளர்ச்சி பெற்ற பணச் சந்தையில் சில குறிப்பிடத்தக்க இயல்புகள் உள்ளன. இவற்றைப் பேராசிரியர் எஸ். என். சென் அவரது 'வளராத பணச் சந்தைகளில் மைய வங்கி' (Central Banking in Undeveloped Money Market) என்னும் நூலில் சிறப்பான முறையில் குறிப்பிட்டிருக்கின்றார். அவற்றைத் தொகுத்துக் கூறுவது பணச் சந்தையைப் புரிந்துகொள்ளப் பெரிதும் துணை செய்யும்.

முதலாவதாக, வளர்ச்சி பெற்ற பணச் சந்தையுள்ள நாடு களில் நன்கமைந்த வணிக வங்கிமுறை இருக்கும். வளராத பணச் சந்தையுள்ள நாடுகளில் வங்கி முறையும் வளர்ச்சி பெறாமல் இருப்பதனைக் காணலாம். வணிக வங்கிகள் பணச் சந்தை என்ற கட்டடத்தின் தூண்களாக விளங்குகின்றன. குறுகிய கால நிதியளிப்பு அவற்றின் கையிலிருக்கின்றது.

இரண்டாவதாக, பணச் சந்தைக்குத் தேவையான பொழுது கடன் கொடுத்து உதவவும், வழிகாட்டவும், கட்டுப் படுத்தவும் மைய வங்கி தேவை. மைய வங்கியின் உதவியின்றி வணிக வங்கிகள் துணிச்சலாகத் தங்களுடைய ரொக்கத்தை முதலீடு செய்ய முடியாது. ஆதலால், பணச் சந்தையின் வளர்ச்சிக்குத் தோன்றாத் துணையாக மைய வங்கி இருப்பதைக் காண்கிறோம்.

மூன்றாவதாக, பணச் சந்தை சிறப்பாகச் செயல்பட, தக்க கடன் கருவிகள் இருக்க வேண்டும். மாற்றுச்சீட்டுகள், அரசின் பத்திரங்கள் முதலிய தக்க குறுகிய காலக் கடன் கருவிகள் போதிய அளவில் புழக்கத்தில் இருந்தால்தான் பணச் சந்தை

சுறுசுறுப்பாகச் செயல்படும். இத்தகைய பத்திரங்களில் வாணிபம் செய்யக்கூடிய தரகர்களும் நிறுவனங்களும் இருப் பதை ஒட்டியே பணச் சந்தையின் வளர்ச்சி அமைகின்றது.

நான்காவதாக, பணச் சந்தையில் பல வகையான துணை அங்காடிகள் இருந்தால், அது விரிவாக்கம் பெற்று விரைந்து வளரும். 'துணைச் சந்தைகள் எண்ணிக்கையில் மிகுதியாக இருந்தால் பணச் சந்தையின் கட்டமைப்பு விரிவானதாகவும் வளர்ச்சி பெற்றதாகவும் இருக்கும்' என்று பேராசிரியர் எஸ். என். சென் குறிப்பிடுகின்றார்.

ஐந்தாவதாக, பணச் சந்தை வளர்ச்சி பெற அதனிடம் போதுமான நிதி புழக்கத்திலிருக்க வேண்டும். இலண்டன், நியூயார்க் முதலிய வளர்ச்சி பெற்ற பண அங்காடிகளில் உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் நிதி வந்து புழங்குவதைக் காணலாம். பின்தங்கிய பணச் சந்தைகள் நிதிப் பற்றாக்குறை யால் வளர்ச்சி குன்றியிருக்கின்றன.

ஆறாவதாக, பணச் சந்தை வளர்ச்சிபெற வேண்டுமானால், தொழில், உள்நாட்டு, பன்னாட்டு வாணிப வளர்ச்சி, அமைதி யான அரசியல் சூழ்நிலை, பங்குச் சந்தை முதலியவை தேவையாகும்.

வளர்ச்சிபெற்ற பணச் சந்தைக்கு இலண்டன் பணச் சந்தையையும், வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கும் பணச் சந்தைக்கு நமது நாட்டுப் பண அங்காடியையும் எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.

**பணிகள்:** பணச் சந்தை இரண்டு முக்கியமான பணிகளைச் செய்கின்றன:

முதலாவதாக, சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் தேவையான பணத்தைப் பணச் சந்தை வழங்குகின்றது. சமுதாயம் இந்தப் பணத்தை ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்து கின்றது. இதனால் நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படு கின்றது; மக்களின் வருவாய் கூடுகின்றது.

இரண்டாவதாக, வாணிப, தொழில் துறையில் மிகுதியும் பயன்படுகின்ற பணத்தை அளிக்கின்றது. இதனைச் சரியான முறையில் நெறிப்படுத்துவதன் மூலம் பண அலகிற்கு ஒரு நிலையான மதிப்பை ஏற்படுத்தலாம்.

**பணச் சந்தையின் கருவிகள்:** பணச் சந்தையில் பொதுவாக ஆறுவகையான கடன் கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். அவற்றைத் தொகுத்துக் கூறுவோம்:

முதலாவதாக, வாணிபத் தாள்களைப் (Commercial Papers) பயன்படுத்துகின்றனர். இவற்றில் வாணிப உண்டியல்களும் (Trade Bills), வாக்குறுதிப் பத்திரங்களும் (Promissory Notes) அடங்குகின்றன. இவற்றை வெளிச் சந்தைகளில் விற்பனை செய்ய இயலும்.

இரண்டாவது வகை, கருவூலச் சீட்டுகளும் (Treasury Bills) கருவூல வைப்பு ரசீதுகளும் (Treasury Deposit Receipts) ஆகும்.

மூன்றாவதாக, பங்குகளும் (Shares) கடன் பத்திரங்களும் (Debentures) இருக்கின்றன. இவற்றை எளிதாக விற்பனை செய்யலாம்.

நான்காவதாக, வங்கிகளின் ஏற்புகள் (Bankers' Acceptances) உள்ளன. உரிய காலத்தில் பணம் தர வங்கிகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

ஐந்தாவதாக, பங்கு மாற்றுக் கடன் பத்திரங்கள் (Stock Exchange Collateral Loans) பயன்படுத்தப்படுகின்றன.

ஆறாவதாக, அரசோடு தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்களின் குறுகிய காலப் பத்திரங்களையும் (Short term Papers of Semi-Government Institutions) பயன்படுத்துகின்றனர்.

## 2. இலண்டன் பணச் சந்தை
(London Money Market)

இலண்டன் பணச் சந்தையின் அமைப்புத் தனி வகையானது. இது மிகவும் தொன்மையானது. குறுகிய கால நிதிகளுக்கான இந்தப் பணச் சந்தை நன்கு வளர்ச்சி பெறுகின்றது. இலண்டன் பணச் சந்தையைக் 'கழிவுச் சந்தை' (Discount Market) என்றும் கூறுவதுண்டு.

இலண்டன் பணச் சந்தையில் எண்ணற்ற சிறிய நிறுவனங்கள் அடங்கியிருக்கின்றன. இந்த நிறுவனங்கள் கூட்டுப் பங்கு வங்கிகளோடும் இங்கிலாந்து வங்கியோடும் இணைந்து செயல்

படுகின்றன. இவை வணிக வங்கிகளிடம் எச்சமாக இருக்கின்ற பணத்தைப் பெற்று அதில் வாணிபம் செய்கின்றன.

அமெரிக்காவிலும் வேறு பல நாடுகளிலும், வணிக வங்கிகளுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டால், அவை அவற்றிடமிருக்கும் மாற்றுச்சீட்டுகளை மைய வங்கியிடம் கழிவு செய்து பணம் பெறுகின்றன. ஆனால், இலண்டனிலிருக்கின்ற வங்கிகள் நேரடியாக நிதியுதவி கேட்டுச் செல்வதில்லை. அவை கழிவு அங்காடி நிறுவனங்களுக்குக் கொடுத்த கடனைத் திரும்பப் பெறுகின்றன. கழிவுச் சந்தையில் பணப் பற்றாக்குறை ஏற்பட்டால், அது பண வசதியை நாடி மைய வங்கியான இங்கிலாந்து வங்கியிடம் செல்கின்றது. இங்கிலாந்தில் கழிவுச் சந்தை இங்கிலாந்து வங்கிக்கும் வாணிப வங்கிகளுக்கும் இடையில் இணைப்புப் பாலமாகப் பணி புரிகின்றது. இது மேலும் மாற்றுச்சீட்டுகளை விற்பவர்களுக்கும் வங்கிகளுக்கும் இடையில் இருக்கின்ற ஒன்றாகவும் செயல்படுகின்றது.

பணச் சந்தை அமைப்பு, வங்கிமுறை மிகுந்த ரொக்கத் தன்மையோடு செயல்படத் துணை செய்கின்றது. குறுகிய கால நிதியில் இத்தகைய வளர்ச்சிபெற்ற அங்காடி வேறு எந்த நாட்டிலும் இல்லையென்று கூறலாம்.

**அமைப்பு முறை :** இலண்டன் பணச் சந்தையில் மூன்று வகையான நிறுவனங்கள் உள்ளன.

முதலாவதாக, பல வகையான வங்கிகள் பங்கு பெறுகின்றன. இறுதிநிலைக் கடன் ஈவோனாக இருக்கின்ற இங்கிலாந்து வங்கிக் கூட்டுப் பங்கு வங்கிகள், இலண்டன் பதிலாளிகள் (Agents), சில வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் ஆகியவை இலண்டன் பணச் சந்தையில் இருக்கின்றன.

இரண்டாவதாக, ஏற்பகங்கள் (Acceptance Houses) செயல்படுகின்றன. ஏற்பகங்கள் கூட்டாளிகள் (Partnership) நிறுவனங்களாகவோ கூட்டுப் பங்கு தனியார் நிறுவனங்களாகவோ அமைந்திருக்கின்றன. இவற்றை 'வணிக வங்கியாளர்கள்' (Merchant Bankers) என்றும் அழைக்கின்றனர். தொடக்க காலத்தில் இப்பொழுது இருப்பதைப் போல எண்ணற்ற சிறிய நிறுவனங்கள் இல்லை. சில பெரிய நிறுவனங்கள் மற்றவர்களுக்காக உண்டியல்களில் ஒப்புதல் கையெழுத்திட்டன. இதற்காகச் சிறிய அளவில் கட்டணம் வசூலித்தன. இப்படித்

தான் இங்கிலாந்தில் ஏற்பகங்கள் நடைமுறையில் உருவாயின. இலண்டன், உலகப் பணச் சந்தையின் மையமாக மாறியதால் ஏற்புப் பணிகளைச் செய்துகொண்டிருந்த வணிகர்களும் நிதி நிறுவனங்களும் இலண்டனில் வந்து ஏற்பகங்களை நிறுவினார்கள்.

இலண்டன் பணச் சந்தை செவ்வனே செயல்பட ஏற்பகங்கள் பெரிதும் துணை செய்கின்றன. இவை இங்கிலாந்து வங்கி யோடும் பிற வங்கிகளோடும் கணக்கு வைத்திருக்கின்றன. இவை வணிக வங்கிகளிடம் குறுகிய காலக் கடன் பெற்று, அதனைப் பணச் சந்தையில் பயன்படுத்துகின்றன. பெரும் பாலும் ஏற்பகங்கள் மூன்று முக்கியப் பணிகளைச் செய்கின்றன. முதலாவதாக, அந்நியச் செலாவணி மாற்றுப் பணியில் ஈடுபடுகின்றன. இரண்டாவதாக, வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புகளைப் பெறுகின்றன. மூன்றாவதாக, உண்டியல்களை ஏற்கின்றன. இவற்றில் சில தங்கக் கட்டிகளை வாங்கி விற்கும் பணியையும் மேற்கொள்கின்றன.

ஏற்பகங்கள் மற்றவர்களுக்காக மாற்றுச்சீட்டில் ஒப்புதல் கையெழுத்து இடுவதன் மூலம் உரிய காலத்தில் மாற்றுச்சீட்டு களுக்குப் பணம் கிடைக்குமென்று உறுதியளிக்கின்றன. இந்தப் பணியைச் சரிவரச் செய்ய ஏற்பகங்களிடம் போதுமான அளவு நிதி இருக்கவேண்டும்.

மூன்றாவதாக, கழிவகங்களும் (Discount Houses) மாற்றுச் சீட்டுத் தரகர்களும் (Bill Brokers) இருக்கின்றனர். இப்பொழுது கழிவகங்களாகப் பணியாற்ற ஏறத்தாழ பன்னிரண்டு நிறு வனங்கள் இருக்கின்றன. இவற்றில் ஒன்பது வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள பொது நிறுவனங்கள் (Public Limited Companies). இவை மொத்தக் கழிவு வாணிபத்தில் 90 சத வீதத்தை நடத்துகின்றன. இங்கிலாந்தில் இருப்பதைப் போன்று வேறு எந்த நாட்டிலும் கழிவகங்கள், இலண்டன் கழிவகங்களைப்போன்று, சிறப்பாகப் பணி செய்யவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும். கழிவகங்கள் வணிக வங்கி களிடமும் பிற நிதி நிறுவனங்களிடமும் கடன் பெறுகின்றன. இந்தப் பணத்தைக்கொண்டு மாற்றுச் சீட்டுகளுக்குக் கழிவு செய்து பணம் தருகின்றன. கழிவகங்களுக்குக் கடன் தர இங்கிலாந்தில் வணிக வங்கிகள் உட்பட ஏறத்தாழ 90 நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த நிறுவனங்கள் 'கேட்டவுடன் கிடைக்கின்ற பணமாக'க் (Money at Call) கழிவகங்களுக்குக்

கடன் தருகின்றன. எப்பொழுது பணம் தேவையோ, அப்பொழுது கழிவகங்களிடமிருந்து கேட்டுப் பெற்றுக்கொள்கின்றன. இத்தகைய கடன்களுக்கு மிகவும் குறைந்த விதத்திலேயே வட்டி வாங்குகின்றனர். வணிக வங்கிகள் பணத்தைத் திருப்பிப் பெற்ற பின்னர், பணத்தேவையை ஈடு செய்ய, இவை இங்கிலாந்து வங்கியிடம் சென்று உண்டியல்களைக் கழிவு செய்து பணம் பெறுகின்றன.

கழிவகங்களின் தலையாய பணி வணிக வங்கிகளிடமிருந்து பெற்ற நிதியின் உதவியால் உண்டியல்களைக் கழிவு செய்து பணம் கொடுப்பதாகும். வங்கிகள் தங்களிடமிருக்கின்ற எச்சப் பணத்தைக் குறுகிய காலக் கடனாகக் குறைந்த வட்டிக்குக் கொடுக்கின்றன. ஏற்பகங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாணிப மாற்றுச் சீட்டுகள் செலாவணிப் பத்திரங்களாகின்றன. ஏற்கப்பட்ட மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்து கழிவகங்கள் பணம் தருகின்றன. சிறிது காலம் அவற்றை வைத்திருந்து, பின்னர் வங்கிகளுக்கு விற்றுவிடுவதும் உண்டு.

கழிவகங்கள் வங்கிகளுக்குத் துணை செய்கின்றன. வங்கிகள் எண்ணற்ற சிறிய மாற்றுச் சீட்டுகளை வாங்குவதற்கு விரும்பவில்லை. கழிவகங்கள் சிறிய மாற்றுச் சீட்டுகளாக வாங்கி, அவற்றைத் தொகுத்து விரும்புகின்ற வணிக வங்கிகளுக்கு விற்கின்றன. பெரும்பாலும் உரிய காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்ற மாற்றுச் சீட்டுகளைத்தாம் வணிக வங்கிகள் விலைக்கு வாங்குகின்றன. மேலும் கேட்டவுடன் திருப்பிச் செலுத்துகின்ற கடன்களாகக் கழிவகங்கள் வங்கிகளிடமிருந்து பணம் பெறுவதால் ரொக்கத்தன்மையை இழக்காமலேயே வங்கிகள் சிறிது வருவாயும் பெற முடிகின்றதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பொழுது வாணிப மாற்றுச் சீட்டுகளைவிட மிகுதியாகக் கருவூலச் சீட்டுகளைக் (Treasury Bills) கழிவு செய்வதிலேயே கழிவகங்கள் மிகவும் அக்கறை காட்டுகின்றன. கருவூலச் சீட்டுகள் என்பவை இங்கிலாந்து அரசின் உறுதிப் பத்திரங்களாகும். இவற்றிற்கு உரிய காலத்தில் உறுதியாகப் பணம் கிடைத்துவிடும். இங்கிலாந்து வங்கி கருவூலச் சீட்டுகளை வாங்கி விற்பதன் மூலம் பணச் சந்தையைக் கட்டுப்படுத்துகின்றனவென்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இன்றைய நிலை: முதல் உலகப்போருக்குப் பின்னர், இங்கிலாந்துப் பணச் சந்தையின் வாணிபத்தின் இயல்பு பெருமளவு மாறிவிட்டது. போருக்கு முன்னர்ப் பெரும்பாலும் மாற்றுச் சீட்டுகளைத்தாம் கழிவு செய்துகொண்டிருந்தனர். போருக்குப் பின்னர் வங்கியின் பேற்றுரிமைச் சீட்டுகளும் (Bank Drafts), தந்தி மூலம் பணம் அனுப்புதலும் (Telegraphic Transfers) முக்கியத்துவம் பெற்றன. 1931ஆம் ஆண்டுக்குப் பின்னர் வணிகச் சீட்டுகளின் அளவும் குறைந்தது. மேலும் நியூயார்க் பணச் சந்தையின் செல்வாக்கும் வளர்ந்தது. இவையெல்லாம் இங்கிலாந்துப் பண அங்காடியில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின.

1930-க்குப் பின்னர், கருவூலச் சீட்டுகளின் முக்கியத்துவம் கூடியது. அரசு நாட்டின் பொருளாதார மேம்பாட்டுப் பணிகளுக்காகவும், இராணுவ பலத்தைக் கூட்டவும் பொதுமக்களிடமிருந்து அதிக அளவில் கடன் வாங்கத் தொடங்கியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரும் முழுநிறைவு வேலை வாய்ப்பை ஏற்படுத்த அரசு கடன் வாங்கியது. 1910ஆம் ஆண்டில் 36 மில்லியன் பவுன் மதிப்புள்ள கருவூல உண்டியல்களை அரசு வெளியிட்டிருந்தது. இது 1955ஆம் ஆண்டில் 6,000 மில்லியன் பவுனாகக் கூடியது குறிப்பிடத்தக்கதாகும். வணிக வங்கிகள் கழிவு செய்கின்ற மாற்றுச் சீட்டுகளில் 90 சதவீதம் கருவூலச் சீட்டுகளாக உள்ளன. கருவூலச் சீட்டுகளை நேரடியாகவே வங்கிகள் கழிவு செய்து பணம் தருவதால், கழிவகங்களுக்குக் கிடைக்கின்ற வருவாயில் ஒரு பகுதி குறைந்து விட்டது.

மாற்றுச் சீட்டுகள் கழிவு வாணிபம் குறைந்துவிட்டதால் கழிவகங்கள் அரசின் குறுகிய காலக் கடன் பத்திர அங்காடியில் ஈடுபடுகின்றன. அரசின் கடன் பத்திரங்கள் இரண்டு, மூன்று, ஐந்து ஆண்டுக் காலத்தில் திரும்பப் பணம் கிடைக்கக்கூடியவைகளாக இருக்கின்றன. பணம் பெறக்கூடிய காலம் நெருங்குகின்ற பொழுது அவற்றைக் கழிவகங்கள் வாங்குகின்றன.

கழிவகங்கள் தொடர்ந்து செயல்படவேண்டும் என்பதில் மற்றைய நிறுவனங்கள் ஈடுபாடு காட்டுகின்றன. குறிப்பாக, வணிக வங்கிகள் கழிவகங்கள் இருப்பதால் கிடைக்கின்ற நன்மைகள் கருதி அவை தொடர்ந்து செயல்படத் துணை செய்கின்றன. ஆனால், ஏற்பகங்களுக்குச் சரியான எதிர்காலம் இருக்கின்றதென்று கருத இடமில்லை.

## 3. நியூயார்க் பணச் சந்தை
(New York Money Market)

இன்று உலகப் பணச் சந்தையாக வளர்ந்துள்ள நியூயார்க் பணச் சந்தை சில தனி இயல்புகளோடு காணப்படுகின்றது. இது இலண்டன் பணச் சந்தையோடு ஒப்பிடுகின்றபொழுது சமீப காலத்தில்தான் வளர்ச்சிபெற்றது. முதல் உலகப்போர் வரை உலகத் தலைமைக்கு இது இலண்டன் பணச் சந்தையோடு போட்டியிட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், உலகத் தலைமை நியூயார்க் பணச் சந்தைக்குக் கிடைத்து விட்டது.

வேறுபாடு: இலண்டன் பணச் சந்தைக்கும் நியூயார்க் பணச் சந்தைக்கும் இடையில் சில குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. அவற்றைத் தொகுத்துக் கூறுவோம்:

முதலாவதாக, இங்கிலாந்தில் கிளை வங்கி முறை செழித்து வளர்ந்திருக்கின்றது. அங்குள்ள ஐந்து பெரிய வங்கிகள் நாட்டின் பெரும்பாலான வங்கிப் பணிகளைச் செய்கின்றன. அமெரிக்காவில் இப்பொழுதும் தனி வங்கி முறையே (Union Banking System) வளர்ச்சி பெற்றிருக்கின்றது. தனி வங்கிகள் இணைந்து செயல்படுகின்றன.

இரண்டாவதாக, நியூயார்க்கில் வங்கிகள் தங்களிட மிருக்கும் எச்சப் பணத்திற்குப் பங்குமாற்று (Stock-Exchange), வாணிபப் பத்திரங்கள் (Commercial Papers), கருவூலச் சான் றிதழ்கள் (Treasury Certificates), மாற்றுச் சீட்டுகள் (Bills of Exchange) ஆகிய நான்கு வகையான சொத்துகளைப் பெறு கின்றன. வாணிபப் பத்திரங்கள் அமெரிக்காவில் மட்டும் இருக்கின்ற தனி வகையான பத்திரங்களாகும். இவற்றை மைய வங்கியிடம் கழிவு செய்வதில்லையென்றாலும், அமெரிக்க வங்கிகள் இவற்றைப் பெறுகின்றன. பங்குகளில் முதலீடு செய்வது இங்கிலாந்திலும் காணப்படுகின்றது. ஆனால், அமெரிக்காவில் உள்ள அளவிற்கு இங்கிலாந்தில் பங்குகளின் மீது கடன் கொடுப்பதில்லை.

மூன்றாவதாக, அமெரிக்காவில் வணிக வங்கிகள் மாற்றுச் சீட்டுகளை ஏற்கின்ற (Acceptance) பணியையும் செய்கின்றன. இங்கிலாந்தில் இருப்பதைப்போல அமெரிக்காவில் தனியாக ஏற்பகங்கள் (Acceptance House) இல்லை.

நான்காவதாக, நியூயார்க்கில் இலண்டனிலிருப்பதைப் போன்று கேட்டவுடன் கிடைக்கின்ற கடன்களில் வங்கிகள் தங்களுடைய ரொக்கத்தை ஈடுபடுத்த முடியாது. வங்கிகளுக்கு அதிகப் பணம் தேவைப்பட்டால், அவை நேரடியாக மைய வங்கியிடம் சென்று வங்கி ஏற்புகளைக் (Bank Acceptances) கழிவு செய்தோ, கடனாகவோதான் பணத்தைப் பெறவேண்டும். இலண்டனில் வணிக வங்கிகள் பணம் தேவைப்படுகின்ற பொழுது கழிவகங்களுக்குக் கொடுத்த கடனைத் திருப்பிப் பெறுகின்றன.

ஐந்தாவதாக, இங்கிலாந்தில் ஒரு மைய வங்கி இருக்கின்றது. அமெரிக்காவில் 12 கூட்டாட்சி ரிசர்வ் வங்கிகள் (Federal Reserve Banks) சேர்ந்து மைய வங்கியாகப் பணிபுரிகின்றன. இங்கிலாந்து மைய வங்கி 1694ஆம் ஆண்டிலேயே நிறுவப்பட்டுவிட்டது. அமெரிக்க மைய வங்கிமுறை 1913ஆம் ஆண்டில்தான் உருவாயிற்று.

ஆறாவதாக, இங்கிலாந்தோடு ஒப்பிட்டால், அமெரிக்க வணிக வங்கிகள் அதிகமாக ரொக்கம் வைத்திருக்கின்றன. ரொக்கத்தன்மையை, அவை வேறு குறுகிய காலக் கடன் கொடுத்துக்கொண்டு காக்க முடியாதவைகளாக இருக்கின்றன.

பிரிவுகள்: நியூயார்க் பணச் சந்தையில் குறிப்பிடத்தக்க கீழ்க்காணும் ஐந்து பிரிவுகள் உள்ளன:

முதலாவதாக, வாணிப மாற்றுச் சீட்டுச் சந்தை இருக்கின்றது. வாக்குறுதிப் பத்திரங்களைப்போன்ற வாணிப மாற்றுச் சீட்டுகள் அமெரிக்காவில் புழக்கத்திலிருக்கின்றன. இவை மூன்று மாதம் முதல் ஆறு மாதத்திற்குள் பணம் பெறத்தக்கவை. இவற்றை வாணிப மாற்றுச் சீட்டு நிலையங்கள் கழிவு செய்து வாங்கித் தம் வங்கிகளுக்கு விற்கின்றன. இந்த அங்காடி நீண்ட காலமாகப் பணிபுரிந்து வருகின்றது.

இரண்டாவதாக, ஏற்பு அங்காடி செயல்படுகின்றது. அமெரிக்காவில் 'வங்கியாளர் சீட்டுகள்' (Bankers' Bills) புழக்கத்திலிருக்கின்றன. இவை மாற்றுச் சீட்டுகளைப் போன்றவை. ஆனால், வங்கிகளின்மீது எழுதப்பட்டவை. அமெரிக்காவில் தனியாக ஏற்பகங்கள் இல்லாமையால், சீட்டுகளை ஏற்கின்ற பணியை வங்கிகள் செய்கின்றன. இத்தகைய மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்து பணம் பெறுகின்றன.

மூன்றாவதாக, துணைக்கடன் சந்தை (Collateral Loan Market) இருக்கின்றது. பணச் சந்தையில் ஈடுபட்டிருக்கும் தரகர்களுக்கும் வணிகர்களுக்கும் மிகவும் குறுகிய காலக் கடனாக—அழைப்புக் கடனாக—வணிக வங்கிகள் பத்திரங்களின் மீது கடன் தருகின்றன. இத்தகைய கடனைத் 'தரகர் கடன்' என்றும் கூறுவதுண்டு. இந்த வகைக் கடனைச் சட்டம் பெரு மளவில் கட்டுப்படுத்துகின்றது.

நான்காவதாக, கூட்டு நிதிச் சந்தை (Federal Funds Market) பணிபுரிகின்றது. அமெரிக்காவில் வங்கிகள் மைய வங்கிகளான கூட்டரசுக் காப்பு வங்கிகளில் (Federal Reserve Banks) ரொக் கத்தின் ஒரு பகுதியை வைத்துள்ளன. இப்படி வைத்திருக்கும் ரொக்கம் சட்டப்படி வைத்திருக்க வேண்டியதைவிட அதிகமாக இருந்தால், அதனை ஒரு வங்கி மற்றொரு வங்கிக்குக் கடனாகத் தருகின்றது. இதற்கு வாங்கும் வட்டி வீதம் குறைவாக இருப் பதால், மைய வங்கியிடம் வங்கிகள் கடன் வாங்குவதைவிட மற்ற வங்கிகளிடமிருந்து பெறவே விரும்புகின்றன.

ஐந்தாவதாக, கருவூலச் சீட்டுச் சந்தை இருக்கின்றது. அமெரிக்க அரசின் கருவூலம் வெளியிடுகின்ற உண்டியல்களுக்குத் தனிச் சந்தை இருக்கின்றது. இவை 90 அல்லது 92 நாள் களுக்குள் பணம் பெறக்கூடியவை. இவற்றில் பாதுகாப்பு, ரொக்கத்தன்மை இருப்பதால் வங்கிகள் இவற்றை விரும்பு கின்றன.

**வளர்ச்சி:** நியூயார்க் பணச் சந்தை உலகப் பண நிலைய மாக வளர்ந்திருப்பதற்குச் சில காரணங்கள் உள்ளன. 1613ஆம் ஆண்டில் நிறுவப்பெற்ற கூட்டரசுக் காப்பு வங்கிகள் நிதி நிறு வனங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்துள்ளன. பல ஐரோப்பியப் பண அங்காடிகளின் வீழ்ச்சி, இதன் செல்வாக்கை உயர்த்தியிருக்கின்றது. அமெரிக்காவில் தங்க இருப்புக் கூடிய தால் டாலரின் மதிப்புக் கூடியது. அமெரிக்கா தொழில்வளர்ச்சி பெற்று உலக நாடுகளுக்குக் கடன் கொடுத்துக் கொண்டிருக் கின்றது. இதனால் அதன் பணச் சந்தை உலகத்தில் முக்கியத் துவம் பெற்றுத் திகழ்கின்றது. அமெரிக்காவில் திரண்ட அளவில் மூலதனம் இருப்பது மற்றொரு காரணமாகும்.

## 4. இந்தியப் பணச் சந்தை
## (Indian Money Market)

நமது நாட்டிலிருக்கின்ற பணச் சந்தை இன்னும் முழு வளர்ச்சி பெறாமல் இருக்கின்றது. நமது பணச் சந்தை வளர்ச்சி பெறாத நிலையில் இருப்பதற்குச் சில குறிப்பிடத்தக்க காரணங்கள் உள்ளன. இந்தக் காரணங்களை அகக் (Internal) காரணங்கள் என்றும் புறக் (External) காரணங்கள் என்றும் பிரிக்கலாம். நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலையை ஒட்டித்தான் அங்காடி அமைய முடியும். நமது நாட்டில் அகக் காரணமாக, போதுமான அளவு பொருளாதார வளர்ச்சி ஏற்படாததைக் குறிப்பிட்டுக் கூறலாம். இங்கு வாணிபம், தொழில் ஆகியவை தற்கால முறையில் வளர்ந்துகொண்டிருக்கின்றன. இப்பொழுதும் நமது நாட்டில் வேளாண்மையே தலையாய தொழிலாக இருக்கின்றது.

புறக் காரணமாக நீண்ட காலம் நமது நாடு அயலாரின் ஆட்சியில் கட்டுண்டு கிடந்ததைக் குறிப்பிடலாம். இலண்டன் பணச் சந்தையைச் சார்ந்து இந்தியப் பணச் சந்தை இருந்தது. நாடு விடுதலை பெற்ற பின்னர்தான் தனிப் பொருளாதாரத் தொழில்வளர்ச்சிக் கொள்கையை வளர்த்துக்கொண்டு முன்னேறுகின்றோம். இந்திய ரிசர்வ் வங்கி தொடங்கப்பெற்ற காலத்திலிருந்து இந்தியப் பணச் சந்தை கட்டுக்கோப்பான முறையில் வளர்ந்துவருகின்றது.

இரு பிரிவுகள்: இந்தியப் பணச் சந்தையை இரு பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம். ஒன்று, 'ஒருமுகப்படுத்தப்பெற்ற' அல்லது 'அமைப்புள்ள' பணச் சந்தை (Original Money Market); மற்றொன்று 'ஒருமுகப்படுத்தப் பெறாத' அல்லது 'அமைப்பற்ற' பணச் சந்தை (Unorganised Money Market).

முதலாவதாக, அமைப்புள்ள பணச் சந்தைப் பிரிவில் இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ஸ்டேட் வங்கி, அந்நியச் செலாவணி வங்கிகள், வணிக வங்கிகள் ஆகியவை அடங்குகின்றன. மையமாக 'வங்கிகளின் அழைப்புப் பணச் சந்தை' (Inter-Bank Call Money Market) அமைந்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கி பணச் சந்தையின் தலைமை நிறுவனமாக விளங்குகின்றது.

இரண்டாவதாக, இருக்கின்ற 'அமைப்பற்ற பணச் சந்தை' யில் நாட்டு வங்கியர்களும் (Indigenous Banker), லேவாதேவிக்

காரர்களும் அடங்குவார்கள். நமது நாட்டில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வோர் இனத்தைச் சார்ந்தவர்கள் லேவாதேவித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்கள் எல்லாம் மரபு வழியில் சூழ்நிலைக்கேற்பக் கடன் கொடுக்கும் பணியைச் செய்கின்றனர். இவர்களுக்கிடையில் இணைப்போ, கட்டுக்கோப்பான அமைப்போ இல்லை. அமைப்புள்ள, அமைப்பற்ற சந்தைகளுக்கிடையில் கூட்டுறவு வங்கிகள் பணிபுரிகின்றன.

**இயல்புகள்:** இந்தியப் பணச்சந்தையில் சில தனிவகையான இயல்புகள் காணப்பெறுகின்றன. இவை ஒருவகையில் வளர்ச்சிபெறாத பணச் சந்தையின் இயல்புகளைக் காட்டுகின்றனவாக இருக்கின்றன. நமது பணச் சந்தையின் இயல்புகளே அவற்றின் குறைகளாகவும் இருப்பது கவனிக்கத்தக்கது. இந்தியப் பணச் சந்தையின் இயல்புகளைத் தொகுத்துக் கூறுவோம்:

முதலாவதாக, இந்தியப் பணச் சந்தையின் பெரும்பகுதி அமைப்பற்றதாக இருக்கின்றது. நமது பணச் சந்தையின் வலுவற்ற பகுதியாக அமைப்பற்ற பிரிவு இருக்கின்றது. நாட்டு வங்கியர்களும், கடன் கொடுக்கும் தொழில் புரிபவர்களும் நமது நாட்டுப் பணச் சந்தையில் பெரும்பகுதியைத் தங்களுடைய கைக்குள் வைத்திருக்கின்றனர். இவர்கள் வங்கி முறையைச் சார்ந்திருப்பதில்லை. இவர்கள் உதவி நாடி மைய வங்கியான ரிசர்வ் வங்கியிடம் செல்வதில்லை. ஆதலால், இவற்றைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ரிசர்வ் வங்கி எடுத்துக்கொண்ட முயற்சிகள் பெரும்பாலும் வெற்றி பெறவில்லை. தென்னிந்திய நாட்டு வங்கியர்கள் இந்திய ஸ்டேட் வங்கியிடம் கடன் வாங்குகின்றனர். மரபுவழி வங்கியாளர்கள் தங்களுடைய நிறுவனத்தை வணிக வங்கிகளாக மாற்ற முயல்கின்றனர். நாட்டு வங்கியர்களையும் ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருமளவிற்குச் சட்டம் ரிசர்வ் வங்கியின் அதிகாரத்தைக் கூட்டியுள்ளது. இதனால் காலப்போக்கில் இந்தியப் பணச் சந்தை எல்லாம் ஒரு கட்டுக்கோப்பான அமைப்புக்குள் வருமென்று எதிர்பார்க்கலாம்.

இரண்டாவதாக, இந்தியப் பணச் சந்தையில் பல்வேறு உறுப்புகளுக்கிடையில் இணைப்பற்ற நிலை காணப்படுகின்றது. இந்தியப் பண அங்காடி நீண்ட காலமாகப் பல துண்டுகளாகச் செயல்பட்டது. ஸ்டேட் வங்கியாக இப்பொழுது மாறியிருக்கின்ற இம்பீரியல் வங்கி, வணிக வங்கிகள், அந்நியச் செலாவணி வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், நாட்டுப்புறக் கடன்

கொடுக்கும் நிறுவனங்கள் ஆகியவை தங்களுடைய விருப்பப்படி ஏதாவது ஒரு துறையில் ஈடுபட்டிருந்தன. இவற்றிற்கு இடையில் தக்கவகையில் இணைப்பு இருக்கவில்லை. ஒன்றோடு மற்றொன்று பொறாமை கொண்டு போட்டியிட்டன. 1935ஆம் ஆண்டில் ரிசர்வ் வங்கி நிறுவப்பெற்ற பின்னர்ப் பண அங்காடியை நெறிப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பெற்றன. இருந்தாலும் அமைப்புக்குள்ளிருக்கும் பிரிவுக்கும், அமைப் புக்குள் வராத பணச் சந்தைப் பிரிவுக்குமிடையில் இப் பொழுதும் இணைப்பு இல்லை. அமைப்புக்குள்ளிருக்கும் பணச் சந்தை உறுப்புகளைக் கட்டுப்படுத்துவதைப்போல, அமைப் புக்குள் வராத நாட்டு வங்கியர்களை ரிசர்வ் வங்கியால் கட்டுப் படுத்த முடியவில்லை. நாட்டு வங்கியர்கள் பல்வேறுபட்ட முறைகளில் கடன் கொடுத்து வாங்குகின்றனர்.

மூன்றாவதாக, இந்தியாவில் போதுமான அளவு வங்கி முறை வளர்ச்சி பெறவில்லை. பெரும்பாலும் நகரங்களிலேயே வங்கிகள் அமைந்துள்ளன. மக்களுக்குத் தங்களுடைய சேமிப்புகளை வங்கிகளில் போட்டு வைத்திருக்கும் பழக்கம் ஏற்படவில்லை. மாறாக, நகைகள் செய்வதில் சேமிப்பை முதலீடு செய்கின்றனர். இதனால் பணச் சந்தையின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது.

நான்காவதாக, இந்தியாவில் பருவகாலப் பணப் பற்றாக் குறை இருக்கின்றது. இந்தியா ஒரு வேளாண்மை நாடாக இருப்பதால், ஆண்டுதோறும் நவம்பர் முதல் ஜூன் வரை மிகுதியாகப் பணம் தேவைப்படுகின்றது. ஆதலால், இந்தக் காலத்தில் வட்டி வீதம் அதிகமாக இருக்கும். மற்றக் காலங் களில் வட்டி வீதம் குறைவாக இருக்கின்றது. அழைப்புக் கடன் அங்காடியில் வட்டி வீதம் ஒரே ஆண்டில் பருவகாலங்களுக் கேற்ப ½ சதவீதம் முதல் மூன்று சதவீதம் வரை மாறுபடு கின்றது.

ஐந்தாவதாக, பணச் சந்தை செவ்வனே செயல்பட இலண்டனில் அமைந்திருப்பதைப்போலக் கழிவுச் சந்தை இருக்கவேண்டும். அப்பொழுதுதான் பணச் சந்தையில் ஈடு படுபவர்களுக்கிடையில் இணைப்பு ஏற்படும். ரிசர்வ் வங்கியால் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தவும் இயலும். ஆனால், நமது நாட்டில் வங்கிகள் மிகுதியாக ரொக்கம் வைத்திருப்பதாலும் மாற்றுச் சீட்டுகளை மறுகழிவு செய்வதைவிட நேரடியாகக் கடன்பெற விரும்புவதாலும், ஒரே வகையான வாணிப

மாற்றுச் சீட்டுகள் புழக்கத்தில் இல்லாததாலும், வேளாண் மையின் காரணமாக வேண்டிய கடன் அளவு பருவ காலத்திற் கேற்ப மாறுபடுவதாலும், கிட்டங்கிகள் சரியாக நிறுவப்படாத தாலும், அயல்நாட்டு வாணிபத்திற்கு வேண்டிய பணத்தை வெளிநாட்டுச் செலாவணி வங்கிகள் வழங்குவதாலும், மாற்றுச் சீட்டுச் சந்தை (Bill Market) அமையவில்லை. 1952ஆம் ஆண்டில் மாற்றுச் சீட்டுச் சந்தையைத் தோற்றுவிக்க ரிசர்வ் வங்கி வகுத்த திட்டம் இதுவரை செயல்படவில்லை.

ஆறாவதாக, இந்தியப் பணச் சந்தையில் பல உட்பகுதிகள் இருப்பதனால், பல வகையான வட்டி வீதங்கள் நடைமுறையில் இருக்கின்றன. இவை ரிசர்வ் வங்கியின் வட்டி வீதத்தை ஒட்டி அமைவதில்லை. அழைப்புக் கடன் வட்டி வீதத்திற்கும், வங்கி வட்டி வீதத்திற்கும், சிறு வணிகர்களின் கடைத்தெரு வட்டி வீதத்திற்கும் (Bazaar Rate) இடையில் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்குக் கடன் பணம் தங்குதடையின்றிப் போகாததே இதற்குக் காரண மாகும்.

ஏழாவதாக, இந்தியாவில் எல்லா இடங்களிலும் வட்டி வீதங்கள் ஒன்றுபோல் இருப்பதில்லை. அதனை வங்கிமுறை விசாரணைக் குழு (Banking Enquiry Committee) சுட்டிக் காட்டி யுள்ளது. பம்பாய், கல்கத்தா அங்காடிகளுக்கிடையில் இப் பொழுதும் வட்டி வீத வேறுபாடு இருப்பதனைக் காணலாம். இக் குறையை முற்றிலும் போக்க ரிசர்வ் வங்கியால் இயலவில்லை.

எட்டாவதாக, இந்தியப் பணச்சந்தையில் தக்க துணை அங்காடிகள் வளர்ச்சிபெறவில்லை. இங்கு அழைப்புப் பணச் சந்தை மட்டும் ஓரளவு வளர்ந்துள்ளது. ஆனால் ஏற்புச் சந்தை, வாணிப மாற்றுச் சீட்டுச் சந்தை முதலியவை ஏற்படவில்லை. இதனால் இந்தியப் பணச்சந்தை விரைந்து வளரவில்லை.

ஒன்பதாவதாக, வெளிநாட்டு மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்யும் பணியில் நமது நாட்டு வாணிப வங்கிகள் ஈடுபடுவ தில்லை. இந்தப் பணியை அயல்நாட்டுச் செலாவணி வங்கிகள் செய்கின்றன. இதனால் வங்கிகளிடம் ரிசர்வ் வங்கியில் மறு கழிவு செய்யத்தக்க பத்திரங்கள் இருப்பதில்லை. இது பணச் சந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கிறது.

பத்தாவதாக, கணக்கில் காட்டாமல் வரி கொடுக்க அஞ்சிய செல்வர்கள் சேர்த்து வைக்கின்ற கறுப்புப் பணத்தின் அளவு மிகுதியாகின்றதென்று கூறப்படுகின்றது. இத்தகைய கறுப்புப் பணம், பணச் சந்தையில் மறைமுகமாக நுழைந்து, ரிசர்வ் வங்கியின் கடன் குறைப்புத் திட்டத்தைச் செயல்படாமல் தடுக்கின்றது.

பதினொன்றாவதாக, இந்தியப் பணச் சந்தையின் தலைமை நிறுவனமாக ரிசர்வ் வங்கி இருக்கின்றது. சட்டப்படி வங்கிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ரிசர்வ் வங்கிக்கு உண்டு. ஆனால், மத்திய அரசின் நிதித்துறை பணச்சந்தையில் தலையிடுகிறது. இதனால் பணச்சந்தையினால் சிறப்பாகப் பணியாற்ற முடிய வில்லை.

பன்னிரண்டாவதாக, சரியான பணச்சந்தை இல்லாததால் வணிக வங்கிகள் ரொக்கம் வைத்துக்கொள்வது தேவையா கின்றது. வேளாண்மை நடவடிக்கைகள் குறைவாக இருக்கும் காலத்தில் வணிக வங்கிகளிடம் மிகுதியாக ரொக்கம் இருக்கும். இது, வங்கிகளுக்கு இலாபம் இல்லை. ஏற்றமும் குறுகியதுமான கால முதலீட்டு வாய்ப்புகள் இன்மையால், அவற்றால் இலாபம் பெற முடிவதில்லை.

## பணச் சந்தையின் பிரிவுகள்

இலண்டனில் இருப்பதைப்போன்று பணச் சந்தைக்குத் துணைச் சந்தைகள் நமது நாட்டில் வளர்ச்சிபெறவில்லை. இருந் தாலும் இருக்கின்ற துணைப் பணச் சந்தைகளைக் கீழ்க்காணும் நான்கு பிரிவுகளாகப் பகுக்கலாம்:

முதலாவதாக, அழைப்புப் பணச் சந்தை—இந்தியப் பணச் சந்தையின் மையமாகத் திகழ்வது அழைப்புப் பணச் சந்தை ஆகும். கடன் கொடுத்தவர் கேட்கும்பொழுது திருப்பிச் செலுத்தும் கடனாக வணிக வங்கிகள் அவற்றிற்கிடையே கடன் கொடுத்து வாங்குகின்றன. சில தனியார் நிதி நிறுவனங்களும் இந்தச் சந்தையில் பங்குபெறுகின்றன. பொதுவாக, மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்யவோ, சட்டப்படி வைத்திருக்க வேண்டிய ரொக்கம் குறைகின்றபொழுதோ வங்கிகள் கடன் வாங்குகின்றன. இத்தகைய கடன்களை ஏற்பாடு செய்யத் தரகர்கள் உள்ளனர். வட்டி வீதம் $1\frac{1}{2}$ முதல் 3 சதவீதம்வரை இருக்கிறது.

இரண்டாவதாக, குறுகியகால அரசு பத்திரங்களின் சந்தை அரசின் குறுகியகாலக் கடன் பத்திரங்களை நினைத்த நேரத்தில் ரொக்கமாக மாற்றலாமென்பதால் அவற்றை வங்கிகள் விரும்புகின்றன. இந்தியாவில் இப்பொழுது மத்திய மாநில அரசுகளின் கடன் பத்திரங்களை எல்லா வங்கிகளும் வாங்குகின்றன. இதனால் அவற்றின் ரொக்கத் தன்மை காப்பாற்றப்படுவதோடு இலாபமும் கிடைக்கின்றது.

மூன்றாவதாக, துணைப் பிணைக் (Collateral) கடன் சந்தை இருக்கின்றது. தங்கம், வெள்ளி, அரசின் கடன் பத்திரங்கள், சிலவகை நிறுவனங்களின் பங்குப் பத்திரங்கள் ஆகியவற்றை ஈடாக வைத்துக்கொண்டு வணிக வங்கிகள் மிகைப்பற்றுக் கடனோ, ரொக்கக் கடனோ தருகின்றன. பங்குச் சந்தையில் ஈடுபடும் தரகர்கள் இப்படிப்பட்ட கடன்களை மிகுதியாகப் பெறுகின்றனர்.

நான்காவதாக, மாற்றுச் சீட்டுச் சந்தை—இந்தியாவில் மாற்றுச் சீட்டுச் சந்தை செம்மையாக அமையவில்லை. ஆனால் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒரு மாற்றுச் சீட்டுச் சந்தையை உருவாக்க ரிசர்வ் வங்கி திட்டமிட்டு முயன்று வருகின்றது.

## இந்திய மாற்றுச் சீட்டுச் சந்தை

பணச் சந்தை சிறப்பாகச் செயல்பட நல்ல மாற்றுச் சீட்டுச் சந்தை அமைந்திருக்க வேண்டும். இதில் வாணிபச் சீட்டு களான மாற்றுச் சீட்டுகள், வாக்குறுதிப் பத்திரங்கள் முதலிய நிதிச் சீட்டுகள், மூன்று மாதங்களுக்கு உட்பட்ட காலத்தில் பணம் பெறக் கழிவு செய்யப்படுகின்றன. ஏற்பகங்கள், கழி வகங்கள் உள்ள இலண்டனில், மாற்றுச் சீட்டுச் சந்தை நன்கு வளர்ச்சி பெற்றிருக்கின்றது. வணிக வங்கிகள் வங்கிகளிடமுள்ள உபரிப் பணத்தை மாற்றுச் சீட்டுகளில் முதலீடு செய்வதால் வருவாய் பெறுகின்றன. பணந்தேவை ஏற்படுகின்றபொழுது கழிவு செய்து பணம் பெறுகின்றன. இதனால், வணிக வங்கிகள் மாற்றுச் சீட்டுச் சந்தையை விரும்புகின்றன.

நமது நாட்டில் மாற்றுச் சீட்டுகள் பரந்த அளவில் புழக் கத்தில் இல்லாமையால் கட்டுக்கோப்பான மாற்றுச் சீட்டுச் சந்தை வளர்ச்சி பெறவில்லை. இதற்குக் பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன :

முதலாவதாக, நமது நாட்டில் அரசு பத்திரங்களில் முதலீடு செய்வதில் மிகுதியாக இலாபம் கிடைக்கின்றது. மேலும் அவை பாதுகாப்பானவையாகவும், அதிக ரொக்கத் தன்மை உடையனவாகவும் இருக்கின்றன. ஆதலால், வணிக வங்கிகள் மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்வதைவிட, அரசு பத்திரங்களை வாங்கவே விரும்புகின்றன.

இரண்டாவதாக, வணிக வங்கிகள் அரசாங்கப் பத்திரங்கள் முதலியவற்றை ஈடுவைத்துக் கடன் பெறுகின்றன. ரிசர்வ் வங்கி எல்லா வகை மாற்றுச் சீட்டுகளையும் மறு கழிவு செய்யாமையாலும், கடன் வட்டி வீதம் கழிவு வீதத்தைவிட அதிகமாக இல்லாமையாலும் கடன் பெறவே விரும்புகின்றன.

மூன்றாவதாக, இந்தியாவில் போதுமான அளவில் மாற்றுச் சீட்டுகள் புழக்கத்தில் இல்லாதது ஒரு குறையாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

நான்காவதாக, மாற்றுச் சீட்டுகளில் ஒட்டவேண்டிய முத்திரைகளின் (Stamps) செலவுகள் அதிகமாக இருக்கின்றன. இதனால் மிகுதியாக மாற்றுச் சீட்டுகள் புழக்கத்திற்கு வரவில்லை.

ஐந்தாவதாக, பொதுவாக வெளிநாட்டு மாற்றுச் சீட்டு களைக் கழிவுசெய்யும் பணியில், அயலகச் செலாவணி வங்கிகள் ஈடுபடுகின்றன. இவை இத்தகைய மாற்றுச் சீட்டுகளை வெளி நாட்டுப் பணச் சந்தைகளில் மறுகழிவு செய்வதால், இந்தியப் பணச் சந்தை வளர்ச்சி பெறவில்லை.

ஆறாவதாக, வணிகர்களிடையே மாற்றுச் சீட்டுகள் வரை கின்ற பழக்கம் மிகவும் குறைவாக இருக்கின்றது. பொதுவாக வங்கிகளிடம் பொருள்களை ஈடுவைத்து ரொக்கக் கடன் வாங்கும் வழக்கமே வணிகர்களிடம் வளர்ந்துள்ளது.

ஏழாவதாக, ரிசர்வ் வங்கியிடம் மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்தால், அந்த வங்கியின் நிதிநிலை வலுவற்றிருப்பதாகப் பொதுமக்கள் கருதுவார்களென்று வணிக வங்கிகள் மாற்றுச் சீட்டுகளை மறுகழிவு செய்யத் தயங்குகின்றன. இதனால் வணிக வங்கிகள், கழிவு செய்யும் மாற்றுச் சீட்டுகள் உரிய காலம் வரும்வரை அவற்றிடம் முடங்கிக் கிடக்கின்றன.

எட்டாவதாக, நமது நாட்டில் தக்க ஏற்பகங்களும் கழிவகங்களும் அமையாமையால் மாற்றுச் சந்தை ஓங்கி வளரவில்லை.

ஒன்பதாவதாக, நமது நாட்டு உண்டியல்கள் (Hundis) மாநிலத்திற்கு மாநிலம் எழுதப்படும் மொழியாலும், முறைகளாலும், வகைகளாலும் வேறுபடுகின்றன. ஆதலால் ஓர் ஒருங்கிணைந்த மாற்றுச் சீட்டுச் சந்தை உருவாகவில்லை.

**ரிசர்வ் வங்கியின் மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டம்**

நமது நாட்டில் ஒரு மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டத்தைத் தோற்றுவிக்க வேண்டியதன் அவசியத்தை இந்திய அரசு முன்னரே உணர்ந்திருந்தது. இதனால் ரிசர்வ் வங்கியை அமைப்பதற்கு முன்னர், இம்பீரியல் வங்கிக்கு அரசின் வெளியீட்டுத் துறையிடம் 12 கோடி ரூபாவரை மறுகழிவு செய்ய உரிமை வழங்கி மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டத்தை உருவாக்க முயன்றனர். இதனை ஒரு முன்னோடித் திட்டமாகக் கருதலாம். ஆனால், ஒரு முழு அளவான திட்டத்தை இந்திய ரிசர்வ் வங்கி 1952ஆம் ஆண்டு ஜனவரியில் வெளியிட்டது.

இந்த மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டப்படி (Bill Market Scheme) பணம் தேவைப்படும் வங்கிகள், ரிசர்வ் வங்கியிடம் ஒரு வாக்குறுதிப் பத்திரம் அளித்து, அதற்கு ஈடாக மாற்றுச் சீட்டுகளைக் கொடுத்துக் கடன் பெறலாம். இதனால் வணிக வங்கிகள் வாடிக்கைக்காரர்களுக்கு மாற்றுச்சீட்டுகளைக் கழிவு செய்து பணம் கொடுக்கலாம். அத்தகைய சீட்டுகளை ஈடாக வைத்து ரிசர்வ் வங்கியிடம் பணம் பெறலாம். இதற்குரிய வட்டி வீதம் வங்கி வீதத்தைவிட ½ சதவீதம் குறைவாக இருக்கும். முத்திரைச் செலவில் பாதியை ரிசர்வ் வங்கி ஏற்றுக்கொண்டது. முதலில் இத் திட்டம் சோதனை அடிப்படையில் நான்காண்டுகளுக்குச் செயல்படுத்தப்பட்டது. 10 கோடி ரூபாவுக்குமேல் முதலுள்ள வங்கிகள் ஓர் இலட்ச ரூபாவுக்குக் குறையாத தனி மாற்றுச் சீட்டுகளின் மூலம் 25 இலட்ச ரூபாவுக்குக் குறையாமல் கடன் பெறலாம். பின்னர், செராப் குழுவின் (Shroff Committee) பரிந்துரையின்படி, வணிக வங்கிகள் அவற்றின் வைப்புகளைப் பற்றிய கணக்கின்றிக் குறைந்தது. ரூ. 50,000 சீட்டுகளாக ரூ. 10 இலட்சத்திற்குக் குறையாத அளவில் கடன் பெறலாம்.

மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டம் ஓரளவு செல்வாக்குப் பெற்று வருகின்றது. வேளாண்மையின் பருவகாலத் தேவைக்கேற்பக் குறிப்பிட்ட காலங்களில் கடன் தேவை மிகுகின்ற பொழுது வணிக வங்கிகள் இத் திட்டத்தின்கீழ்க் கடன்

பெறுகின்றன. இத் திட்டத்தின்கீழ் ரிசர்வ் வங்கி கொடுத்துள்ள கடன் அளவு :

| ஆண்டு | ரூபா |
|---|---|
| 1951—52 | 29 கோடிகள் |
| 1955—56 | 228 ,, |
| 1960—61 | 255 ,, |
| 1966—67 | 418 ,, |
| 1967—68 | 368 ,, |

மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டத்தை ரிசர்வ் வங்கி விரிவு படுத்திக்கொண்டு வருகின்றது. 1957ஆம் ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் ஏற்றுமதி மாற்றுச் சீட்டுகள் சேர்க்கப்பெற்றன. 1961ஆம் ஆண்டு ஜனவரியில் தனி மாற்றுச் சீட்டின் குறைந்த அளவை ரூ. 5,000 ஆகவும், கடனில் குறைந்த அளவை ரூ. 10,000 ஆகவும் ரிசர்வ் வங்கி குறைத்தது. 1963ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் 'ஏற்றுமதி மாற்றுச் சீட்டுக் கடன் திட்டம்' (Export Bill Credit Scheme) செயல்படுத்தப்பட்டது.

## புதிய உண்டியலங்காடித் திட்டம்
(New Bill Market Scheme)

1970 பிப்பிரவரியில் இந்திய உண்டியல் அங்காடியைச் சரியான முறையில் உருவாக்கும் நோக்கில் மாற்று உண்டியல்களை விரிவாகப் பயன்படுத்துவதைப் பற்றி ஆராய எம். நரசிம்மன் தலைமையில் ஒரு குழுவை நியமித்தனர். அக் குழு 1970 ஜூனில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ரிசர்வ் வங்கி 1970 நவம்பரில் புதிய உண்டியல் அங்காடித் திட்டத்தை அறிவித்தது. இத் திட்டம் 1970 நவம்பர் முதல் தேதி முதல் செயல்படத் தொடங்கியது. இத் திட்டத்தின் முக்கிய இயல்புகளைத் தொகுத்துக் கூறலாம் :

1. எல்லா வணிக வங்கிகளும் (பொதுத்துறை வங்கிகள் உட்பட) மாற்று உண்டியல்களை ரிசர்வ் வங்கியிடம் மறுகழிவு செய்யலாம்.

2. பொருள்களின் விற்பனை விவரத்தைக் குறித்திருக்கும் உண்மையான வாணிப உண்டியல்கள் மட்டுமே இத் திட்டத்தில் சேரும்.

3. உண்டியல்களுக்குப் பணம் பெறும் காலம் பொதுவாக 90 நாள்களுக்குமேல் போகக்கூடாது. ஆனால், விதிவிலக்காக 120 நாள்கள் உண்டியல்களையும் பெறலாம். ஆனால் அவற்றை ரிசர்வ் வங்கியில் கொடுக்கின்றபொழுது அவை 90 நாள்களில் பணம் கிடைக்கும் நிலையில் இருக்கவேண்டும்.

4. உண்டியல்களுக்கு மறுகழிவு செய்யும் வசதிகள் ரிசர்வ் வங்கியின் பம்பாய், கல்கத்தா, சென்னை, புதுடில்லி ஆகிய அலுவலகங்களில் கிடைக்கும்.

5. மறுகழிவு செய்யும் தனி உண்டியல் 5,000 ரூபாவுக்குக் குறையாமல் இருக்கவேண்டும். ஒரு சமயத்தில் ரூ. 5,000-க்குக் குறையாமல் உண்டியல்களைக் கழிவு செய்யவேண்டும்.

இந்தியாவில் மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டம், வங்கிகள் கடன் பெறுவதற்குரிய வாய்ப்புகளை மிகுதிப்படுத்தியிருக்கின்றதே தவிர, ஓர் உண்மையான மாற்றுச் சீட்டுச் சந்தையை உருவாக்குவதில் வெற்றிபெறவில்லை. இதற்கு, இது ஒரு செயற்கையான திட்டமாகச் சிக்கல் நிறைந்ததாக இருப்பதும், ரிசர்வ் வங்கி கொடுத்த சலுகைகளில் சில காலப்போக்கில் நிறுத்தப்பட்டதும், இங்குள்ள வாணிபச் சூழ்நிலைகளும் காரணங்களாகக் கூறப்படுகின்றன.

### எதிர்காலம்

நமது நாட்டில் மாற்றுச் சீட்டுச் சந்தை நன்றாக அமைய, சில நடவடிக்கைகளை ரிசர்வ் வங்கி, அரசின் துணையோடு மேற்கொள்ளவேண்டும். நாட்டு வங்கியர்கள், ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டிற்குள் வரவேண்டும். சில தகுதியான உள்நாட்டு மாற்றுச் சீட்டுகள் பரந்த அளவில் ஒருமைப்பாடான முறையில் நாடெங்கும் புழக்கத்திற்கு வரவேண்டும். நாட்டுப்புறங்களில் கிட்டங்கிகளை அமைத்து வேளாண்மைப் பொருள்களை ஈடு வைத்துப் பணம்பெற ஆவன செய்தல் வேண்டும். நமது நாட்டின் பொருளாதாரத் துறைகள் எந்த அளவிற்குக் கட்டுக்

கோப்பான அமைப்பின்கீழ் வருகின்றனவோ அந்த அளவிற்கே மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டம் வெற்றிபெறும்.

உறுப்புகள்: இந்தியப் பணச் சந்தையின் உறுப்புகளில் தலைமையானது இந்திய ரிசர்வ் வங்கி என்ற முறையில் கடன் துறைகளின் பணிகளை நெறிப்படுத்த முயல்கின்றது. நாட்டுப் பொருளாதாரக் காவலன் என்ற அடிப்படையில் பணச் சந்தையை விரிவுபடுத்த மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டம் முதலியவற்றைத் தீட்டி ஆக்கப் பணிகளில் ஈடுபடுகின்றது.

நமது பணச் சந்தையில் இரண்டாவது இடத்தைப் பெறுவது இந்திய ஸ்டேட் வங்கியாகும். இம்பீரியல் வங்கியாக இருந்தது, 1955ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நாட்டுடைமையாக்கப் பெற்று, இந்திய ஸ்டேட் வங்கி என்னும் பெயரில் செயல் படுகின்றது. இது மிகவும் விரைவாக வளர்ச்சி பெற்றுள்ளது. 1955ஆம் ஆண்டில் இதனிடமிருந்த வைப்புத்தொகை 222 கோடி ரூபா. இது அளித்த கடன் 103 கோடி ரூபா. 1967ஆம் ஆண்டில் இதன் வைப்புத் தொகை 959 கோடி ரூபாவாகவும், கடனளிப்பு 583 கோடி ரூபாவாகவும் உயர்ந் துள்ளது. இதன் கிளைகளின் எண்ணிக்கை 1956ஆம் ஆண்டில் 497 ஆக இருந்தது. 1965ஆம் ஆண்டிலிருந்த மொத்தக் கிளைகள் 1,276. கூட்டுறவு, சிறுதொழில்கள் வளர்ச்சிக்கு இது உதவுகின்றது. 1964-65ஆம் ஆண்டில் சிறு தொழில் களுக்கு 34 கோடி ரூபாவும், கூட்டுறவுத் துறைக்கு 45 கோடி ரூபாவும் வழங்கியுள்ளது. ஆனால், ஸ்டேட் வங்கி எதிர் நோக்கியதுபோலச் சிறு தொழில்கள், வேளாண்மை முதலிய வற்றின் வளர்ச்சிக்கு உதவுவதில் முன்னேறவில்லையென்று கூறப்படுகின்றது.

மூன்றாவதாக, கூட்டுப் பங்கு வங்கிமுறை, இந்தியப் பணச் சந்தையில் பங்கு பெறுகின்றது. கூட்டுப்பங்கு வங்கிகள் நாடு முழுவதும் பணி செய்கின்றனவென்று கூறமுடியாது. 1968ஆம் ஆண்டில் ஏறத்தாழ 900 நகரங்களில் வங்கிகள் அமையவில்லை யென்பது சுட்டிக் காட்டப்பட்டது. எண்ணற்ற கிராமங்களில் இனிமேல்தான் வங்கிப் பணிகள் பரவவேண்டும். இந்திய வங்கிகள் பெருந்தொழில்களின் முன்னேற்றத்திற்குக் குறிப் பிடத்தக்க அளவில் கடன் தருகின்றன. 1964ஆம் ஆண்டில் வங்கிக் கடன்களில் 55 சதவீதம் தொழில் துறைக்குக் கொடுக்கப் பட்டது. வேளாண்மைத் துறையை வங்கிகள் புறக்கணித்து விட்டதாகக் குறைகூறுகின்றனர். 1969ஆம் ஆண்டில்

14 பெரிய வங்கிகளையும், 1980-ல் 6 பெரிய வங்கிகளையும் நாட்டுடைமையாக்கிய பின்னர், வணிக வங்கிகளில் பெரும்பகுதி அரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளன. இனி, வங்கிகள் நாட்டின் பொதுநலன் கருதிப் பல புதிய பணிகளை மேற் கொள்ளுமென்று எதிர்பார்க்கலாம்.

நான்காவதாக, அந்நியச் செலாவணி வங்கிகள் (Exchange Banks) உள்ளன. ஆங்கிலேயர்களின் ஆட்சியில் அவர்கள் ஆதரவு பெற்று வெளிநாட்டு மூலதனத்தோடு வளர்ந்தவை அந்நியச் செலாவணி வங்கிகள். இப்பொழுது இத்தகைய வங்கிகள் ஏறத்தாழ 12 இருக்கின்றன. இவை, வணிக வங்கி களின் பணிகளை எல்லாம் மேற்கொண்டபோதிலும், முதன்மை யாக வெளிநாட்டு வாணிபத்திற்கு நிதியளிப்பதிலேயே கவனம் செலுத்துகின்றன. 1967-68-ல் இவை 400 கோடி ரூபா வைப்புகளைப் பெற்றிருந்தன. இவை அளித்த கடன் 350 கோடி ரூபாவாகும்.

ஐந்தாவதாக, மேற்கத்திய வங்கி முறையிலிருந்து மாறு பட்ட நாட்டுப்புற வங்கியாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களை ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் காணலாம். இவர்கள் பெரும்பாலும் தங்களுடைய சொந்த முதலை வைத்துக் கொண்டு, எல்லா வகையான ஈட்டின் மீதும் கடன் தருகின்றனர். இப்பொழுது இவர்கள் வேளாண்மைக் கடனில் ஏறத்தாழ 90 சதவீதமும், உள்நாட்டு வாணிபக் கடனில் 50 சதவீதமும் வழங்குகின்றனர்.

**மூலதனச் சந்தை (Capital Market)**

பொதுவாகப் பணச் சந்தை குறுகிய காலக் கடன் கொடுத்து வாங்குவதையே உள்ளடக்கியிருக்கின்றது. ஆனால் வேளாண்மை, தொழில் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு நீண்ட காலக் கடன் தேவைப்படுகின்றது. இதனைப் பெரும்பாலும் வணிக வங்கிகள் வழங்குவதில்லை. ஆதலால், நீண்ட காலக் கடனை அளிப்பதற்கெனத் தனி நிறுவனங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. இவை எல்லாம் சேர்ந்து தனிச் சந்தையாகும்.

கிராமத் தொழில்களுக்கும் சிற்றளவுத் தொழில்களுக்கும் நிதி அளிப்பதற்காக நாடெங்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. மாநில அரசுகள் தொழில்களுக்கு உதவும் மாநிலச் சட்டத்தின்படி (State Aid to Industries Act) நிதி உதவியளிக்கின்றன. சிறுதொழில் வளர்ச்சிக்காக நிறுவப்

பட்ட அகில இந்தியக் கதர், கிராமக் கைத்தொழில் கழகம் முதலிய நிறுவனங்களும், தேசிய சிறுதொழில்கள் கழகமும் (National Small Industries Corporation) இத் துறையில் ஈடுபட்டுள்ளன.

பெருந்தொழில்கள் அவற்றிற்கு வேண்டிய மூலதனத்தைப் பங்குகளையும், கடன் பத்திரங்களையும் விற்பதன் மூலமாகவும், நிருவாகப் பதிலாள்கள் (Managing Agents) வழியாகவும், சில இடங்களில் பொதுமக்கள் வைப்புகள், வங்கிக் கடன்கள் ஆகிய வற்றின் வாயிலாகவும் பெறுகின்றன. ஆயுள் காப்பீட்டுக் கழகமும், பிற காப்பீட்டுக் கழகங்களும் தொழில் முதலீடு செய்கின்றன.

தொழில்களுக்கு நீண்ட காலக் கடன் கொடுப்பதற்காகப் பல புதிய நிறுவனங்கள் தோற்றுவிக்கப் பெற்றுள்ளன. இந்தியத் தொழில் கடன் முதலீட்டுக் கழகம் (Industrial Credit and Investment Corporation) ஐந்து கோடி ரூபா மூல தனத்தோடு 1955ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. தேசியத் தொழில் வளர்ச்சிக் கழகம் (National Industrial Development Corporation) ஒரு கோடி ரூபா மூலதனத்தோடு அமைக்கப் பெற்றது. 1948ஆம் ஆண்டு ஜூலையில் தொழில் நிதிக் கழகத்தை (Industrial Finance Corporation) நிறுவினர். இதன் ஒப்புக்கொள்ளப்பெற்ற முதல் பத்துக் கோடி ரூபா. ஐந்து கோடி ரூபா செலுத்தப்பெற்ற மூலதனத்தோடு தொடங்கப்பட்ட இது, தொடங்கியது முதல் 1967ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை 239 கோடி ரூபா நிதி உதவி அளித்திருக்கின்றது.

1951ஆம் ஆண்டில் 'மாநில நிதிக் கழகங்களின் சட்டம்' (State Financial Corporation Act) நிறைவேற்றப்பட்டது. இதன்படி ஜம்மு, காஷ்மீர் தவிர எல்லா மாநிலங்களிலும் நிதிக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்திய மறுநிதிக் கழகம் (Refinance Corporation of India) தொழில்களுக்கும் கடன் தருகின்றது. 1964ஆம் ஆண்டு ஜூலையில் தொழில்வளர்ச்சி வங்கி (Industrial Development Bank) நிறுவப்பட்டது. 1964ஆம் ஆண்டு பிப்பிரவரியில் அமைக்கப்பட்ட 'யூனிட் டிரஸ்ட்' (Unit Trust) நிறுவனம் நடுத்தர இனத்தினரும் தொழில்களில் முதலீடு செய்ய வாய்ப்பளிக்கின்றது. 1966-67ஆம் ஆண்டில் இந்தப் புதிய நிறுவனங்கள் தொழில்களின் வளர்ச்சிக்காக 130.2 கோடி ரூபா கடனளித்துள்ளன.

## துணை நூல்கள்

1. S. R. K. Rao, 'The Indian Money Market', Chap. I, III, IV and XI.
2. Madden and Nadler, 'International Money Market'.
3. B. R. Rau, 'Present Day Banking in India', Chap. I.
4. S. G. Panandikar, 'Banking in India', Chap. II.
5. Sayers 'Modern Banking', Chap. 3, 8, and 10.
6. S. G. Kuchhal, 'Corporation Finance'.
7. S. L. N. Sinha, 'The Capital Market in India'.
8. S K. Muranjan, 'Modern Banking in India', Chap. II.
9. N. K. Roy, 'Indian Banking and Money Market', Chap. VII.
10. G. N. Joshi, 'Money and Money Market in India'.
11. V. R. Cirvante, 'The Indian Capital Market'.

# 17. இந்திய ரிசர்வ் வங்கி
## (Reserve Bank of India)

### பின்புலம்

இந்திய ரிசர்வ் வங்கி 1935ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் நாள் நிறுவப்பட்டது. இருந்தாலும் இந்தியாவுக்கு ஒரு மைய வங்கி தேவை என்ற கருத்து பதினெட்டாம் நூற்றாண்டிலேயே முளைவிடத் தொடங்கிவிட்டது. ஆதலால், இந்திய ரிசர்வ் வங்கிக்கு ஒரு நீண்ட வரலாற்றுப் பின்புலம் அமைந்திருப்பதைக் காண்கின்றோம்.

*1773*ஆம் ஆண்டில் ஜனவரி *29*ஆம் தேதியிட்ட கடிதத்தில் வாரன் ஹேஸ்டிங்ஸ், 'வங்காளத்திற்கும் பீகாருக்கும் பொது வங்கி' (General Bank in Bengal and Bihar) என்ற திட்டத்தை வருவாய்த்துறைக் கழகத்திடம்(Board of Revenue)கொடுத்தார். இதன்படி அரசின் ஆதரவு பெற்ற தனியார் வங்கி ஒன்று சில பொதுவான வங்கிப் பணிகளை மேற்கொள்ளத் தொடங்கப்பட வேண்டும். ஆனால், இங்கிலாந்திலுள்ள இயக்குநர் மன்றம் இத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாததால் இந்தப் பொது வங்கி நீண்ட காலத்திற்குச் செயல்படவில்லை.

*1808*ஆம் ஆண்டில் பம்பாய் அரசின் உறுப்பினராக இருந்த இராபர்ட் ரிக்கார்ட்ஸ் (Robert Rickards) என்பவர், 'இந்தியாவிற்குப் பொது வங்கி' (General Bank for India) நிறுவ ஒரு திட்டம் தீட்டினார். இது முன்னைய திட்டத்தைவிட விரிவானதாக அமைந்திருந்தது. இந்த வங்கி மைய வங்கியின் பணிகளில் பலவற்றை ஏற்று நடத்த வேண்டுமென்று கருதப்பெற்றது. ஆனால், இந்தத் திட்டத்தையும் கிழக்கிந்திய நிறுவனத்தின் இயக்குநர் குழு மிகவும் சிக்கலான திட்டமென்று கூறி ஒதுக்கிவிட்டது.

*1836*ஆம் ஆண்டில் பல பெரிய வணிகர்கள் சேர்ந்து 'ஆங்கிலேய இந்தியாவிற்குப் பெரிய வங்கி நிறுவனம்' (Great Banking Establishment for British India) என்னும் திட்டத்தை

வழங்கினர். இதனையும் முன்னைய திட்டத்தைப் போன்றே இயக்குநர் குழு ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.

1859ஆம் ஆண்டில் ஜேம்ஸ் வில்சன் (James Willson) 'இந்திய வங்கி' (Bank of India) ஒன்றை நிறுவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். 1866ஆம் ஆண்டில் சர் பார்ட்லே ஃபிரேரே (Sir Bartle Frere) என்பவர் வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய இடங்களிலிருந்த மாநில வங்கிகளை இணைத்துப் 'பெரிய பொது வங்கி' (Great General Bank) ஒன்றை உருவாக்க வேண்டுமென்று கூறினார். 1870ஆம் ஆண்டில் ஃபிரஞ்சு வங்கியைப்போல 'இந்திய ஸ்டேட் வங்கி' (State Bank of India) ஒன்றை நிறுவ வேண்டுமென எல்லிஸ் கூறினார். 1884ஆம் ஆண்டில் நெதர்லாந்து வங்கியைப் பின்பற்றி 'வெளியீட்டு மைய வங்கி' (Central Bank of Issue) ஒன்றை அமைக்க வேண்டுமென்று கூறப்பட்டது. ஆனால், இந்தத் திட்டங்களில் எதுவும் செயலுருவம் பெறவில்லை.

கர்ஸன் பிரபுவும் (Lord Curzon), சர் இ. ஹெச். ஹோல்டனும் (E. H. Holden) நமது நாட்டில் மைய வங்கி ஒன்று அமைக்க வேண்டுமென்ற திட்டத்தை ஆதரித்தனர். 1913ஆம் ஆண்டில் ஜே. எம். கீன்சும் (J. M. Keynes), சர் ஏர்னஸ்ட் கேபிளும் (Sir Ernest Cable) சேர்ந்து சேம்பர்லின் குழுவிடம் (Chamberlin Commission) இந்திய அரசு வங்கி ஒன்றை நிறுவுவதற்கான திட்டத்தை வழங்கினர். ஆனால், இவையும் நடைமுறைக்கு வரவில்லை.

1921ஆம் ஆண்டில் மூன்று மாநில வங்கிகளை (Presidency Banks) இணைத்து இந்திய இம்பீரியல் வங்கியை (Imperial Bank of India) நிறுவியபொழுது மைய வங்கியின் தேவை மிகுதியாக உணரப்பெற்றது. ஆனால், இதனுடைய பணிகள் வணிகர்களுக்கு முழு மனநிறைவை அளிக்கவில்லை. 'இந்தியப் பணம் நிதி பற்றிய அரசு குழு' பொதுவாக 'ஹில்டன்-எங் குழு' (Hilton Young Commission) எனப் பெயர் பெற்றது, மைய வங்கி நிறுவுவதன் அவசியத்தை சுட்டிக்காட்டியது. இக் குழு கடன் கட்டுப்பாடும் பண வெளியீடும் ஒரே நிருவாகத்தின்கீழ் இருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. 1927ஆம் ஆண்டில் ஜனவரியில் இந்தியச் சட்டமன்றத்தில் மைய வங்கியை நிறுவக் கொண்டுவந்த மசோதா பின்னர்க் கைவிடப்பட்டது.

1931ஆம் ஆண்டில் இந்திய மைய வங்கி விசாரணைக் குழு வங்கி முறை வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் மைய வங்கி தேவையென்று வலியுறுத்தியது. 1933ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'வெள்ளை அறிக்கை'யும் (White Paper) மைய வங்கியை நிறுவவேண்டுமென்று கூறியது.

1933ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் எட்டாம் நாள் இந்தியச் சட்டமன்றத்தில் (Indian Legislative Assembly) ஒரு புதிய மசோதா கொண்டுவரப்பட்டது. 1934ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் ஆறாம் நாள் தலைமை ஆளுநரின் (Governor General) ஒப்புதல் பெற்று 'இந்திய ரிசர்வ் வங்கிச் சட்ட'மாக (Reserve Bank of India Act) மாறியது. 1935ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி முதல் இந்திய ரிசர்வ் வங்கி செயல்படத் தொடங்கியது.

## நாட்டுடைமையாக்கல்

உலகப் பெருமந்தத்திற்குப் பின்னர் அரசின் பணம், பொருளாதாரம், நிதி ஆகியவைபற்றிய கொள்கைகளுக் கிடையில் நெருங்கிய இணைப்பு இருக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. மைய வங்கியை நாட்டுடைமையாக்குவது குறித்துக் கருத்து வளர்ந்தது. சமதர்மக் கருத்துகளைப் பின்பற்றுகின்ற நாடுகளில், அவற்றின் கோட்பாட்டின்படி மைய வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. முதலாளித்துவ நாடுகளிலும் பொது நன்மை கருதி மைய வங்கியை அரசே நடத்துவதற்கான கருத்து வளர்ந்தது. இங்கிலாந்து, கனடா, நியூஜிலாந்து, இத்தாலி, அமெரிக்கா முதலிய நாடுகளில் மைய வங்கி பொதுத்துறையில் இயங்குகின்றது.

நமது நாடு விடுதலையடைந்த பின்னர், மைய வங்கியை நாட்டுடைமையாக்குவதற்கான சூழ்நிலை அதிகமாயிற்று. இந்திய அரசு விரைந்து முன்னேறத் திட்டமிட்ட பொருளாதாரத்தைப் பின்பற்ற முடிவு செய்தது. மைய வங்கியை நாட்டின் உடைமையாக்க வேண்டுமென்று கருதுபவர்கள் கூறிய காரணங்களில் இரண்டு குறிப்பிடத் தக்கவையாகும்.

முதலாவதாக, ரிசர்வ் வங்கியின் பங்குகள் சில தனியாரிடம் குவிந்திருந்ததைக் குறிப்பிட்டு, அந் நிலை நீடித்தால் ரிசர்வ் வங்கி பொதுநல நோக்கோடு செயல்படாதென்று கூறப்பட்டது.

இரண்டாவதாக, எண்ணுகின்றபடி திட்டம் செயல்பட வேண்டுமானால் மைய வங்கியும் அரசும் இணைந்து பணி

ஆற்றுவது தேவை என்று கருதப்பட்டது. இதற்கு மைய வங்கியை நாட்டுடைமையாக்குவது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது.

1948ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் 'ரிசர்வ் வங்கி (பொதுத்துறை உடைமைக்கு மாற்றும்) சட்டம்' [Reserve Bank (Transfer to Public Ownership) Act] நிறைவேற்றப்பட்டது. இதன்படி 1949ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து இந்திய ரிசர்வ் வங்கி நாட்டுடைமையாயிற்று.

## தேவை

இந்திய ரிசர்வ் வங்கியை நிறுவியதற்குச் சில முக்கியமான தேவைகள் இருந்தன:

முதலாவதாக, ரூபாவின் உள்நாட்டு, வெளிநாட்டு மதிப்பை நிலைநிறுத்த ஒரு மைய வங்கி தேவைப்பட்டது.

இரண்டாவதாக, மற்றைய வங்கிகளின் அமைப்பு முறையிலும், அவை பணி செய்வதிலும் சில குறைகள் இருந்தன. அவற்றை ரிசர்வ் வங்கி நீக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது.

மூன்றாவதாக, நாட்டில் சரியான கடன் முறையைச் செயற்படுத்த ரிசர்வ் வங்கி துணை செய்யுமென்று கருதப்பட்டது.

நான்காவதாக, வங்கிகள், பணச் சந்தைகள் பற்றிய சரியான புள்ளிவிவரங்களைச் சேகரித்து ரிசர்வ் வங்கி வெளியிடுமென்று எதிர்பார்த்தனர்.

ஐந்தாவதாக, அரசுக்கு நிதித்துறையில் பதிலாளாகச் (Agent) செயல்பட ஒரு வங்கி தேவைப்பட்டது. ரிசர்வ் வங்கி இந்தப் பணியைத் திறமையாகச் செய்யுமென்று கருதினர்.

ஆறாவதாக, அதுவரை வேளாண்மைக் கடன் வசதிகளை மற்ற வங்கிகள் புறக்கணித்துவிட்டன. ரிசர்வ் வங்கி வேளாண்மைக் கடன் வசதிகளைப் பெருக்குமென்று எதிர்பார்த்தனர்.

## அமைப்பு

முதலாவதாக, இந்திய ரிசர்வ் வங்கி ஒரு பங்குதாரர்கள் வங்கியாக (Shareholders' Bank) நிறுவப்பெற்றது. இதனுடைய முதல் ஐந்து கோடி ரூபா. இது நூறு ரூபா மதிப்புள்ள ஐந்து

இலட்சம் பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பங்குக்கும் முழுவதும் பணம் செலுத்தவேண்டும். இந்திய அரசுக்கு ரூ. 2,20,000 மதிப்புள்ள பங்குகள் ஒதுக்கப்பட்டன. வெளிநாட்டில் பதிவு செய்துகொண்ட எந்த நிறுவனமும் ரிசர்வ் வங்கியின் பங்கை வாங்கக்கூடாது. தனிப்பட்ட மனிதர்கள் ஐந்து பங்குகளுக்குமேல் வாங்குவதைத் தடை செய்தனர். 1940ஆம் ஆண்டுச் சட்டப்படி ஒருவர் பெயரிலோ, மற்றவரோடு கூட்டாகச் சேர்ந்தோ ரூ. 20,000 மதிப்புக்குமேல் பங்குகள் வைத்திருக்கக் கூடாதென்று உச்சவரம்பை விதித்தனர். ஐந்து பங்குகளுக்கு ஒரு வாக்கு வீதம் வாக்களிக்கும் உரிமை வழங்கப் பட்டது. ஒருவர் பத்து வாக்குகளுக்குமேல் போடக்கூடா தென்றும் வரையறுத்தனர்.

1949ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கியை நாட்டு உடைமையாக்கியபொழுது நூறு ரூபாய் பங்குக்கு ரூ. 118-10-0 (ரூ. 118.62) கொடுக்கப்பெற்றது. கொடுக்கவேண்டிய பணம் சரியாக நூறால் பெருக்கக் கூடியதாக இருந்ததால் ரொக்கமாக அளித்தனர். மற்றவற்றை மூன்று சதவீத அரசின் உறுதிப் பத்திரங்களாக வழங்கினர். இவற்றிற்குரிய பணம் 1975ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் தேதிக்குப் பின்னர் வழங்கப் படும். மூன்று மாத முன்னறிவிப்புக் கொடுத்தால் 1970 அக்டோபர் 15ஆம் தேதி முதல் பணம் செலுத்தப்பெறுமென்று கூறப்பட்டது.

## நிருவாகம்

ரிசர்வ் வங்கியின் நிருவாகம் மைய (Central), வட்டாரக் குழுக்களின் (Local Boards) கையிலிருக்கிறது.

மையக் குழுவில் (Central Board Directors) மத்திய அரசு நியமிக்கின்ற ஓர் ஆளுநரும், நான்கு துணை ஆளுநர்களும், நான்கு வட்டாரக் குழுக்களிலிருந்து நான்கு இயக்குநர்களும், வேறு ஒன்பது இயக்குநர்களும், ஓர் அரசின் அலுவலரும் ஆக மொத்தம் 19 உறுப்பினர்கள் உள்ளனர். ஆளுநர், துணை ஆளுநர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். இயக்குநர்கள் நான்கு ஆண்டுகள் பதவியிலிருக்கின்றனர்.

வட்டாரக் குழுவில் மத்திய அரசால் நியமிக்கப்பெற்ற ஐந்து உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுள் ஒருவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இவர்களுடைய பதவிக்காலமும்

நான்கு ஆண்டுகள். வட்டாரக் குழுக்கள் மையக் குழுவிற்கு ஆலோசனை கூறுகின்றன.

இப்பொழுது ரிசர்வ் வங்கியின் கிளைகள் பம்பாய், சென்னை, கல்கத்தா, டில்லி, பெங்களூர், நாக்பூர், கான்பூர் ஆகிய இடங்களில் இருக்கின்றன. வெளிநாட்டுக் கிளையாக இலண்டனில் ஒரு கிளை அமைக்கப்பட்டுள்ளது.

## துறைகள்

இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமை அலுவலகம் பம்பாயில் இருக்கின்றது. அங்கு ரிசர்வ் வங்கியின் பல்வேறு துறைகள் பணியாற்றுகின்றன. இவற்றில் முக்கியமானவற்றையும் அவற்றின் பணிகளையும் தொகுத்துக் கூறுவோம்:

முதலாவது, வெளியீட்டுத் துறையாகும் (Issue Department). இது அச்சடித்த பணத்தை நாசிக்கிலுள்ள இந்தியப் பாதுகாப்பு அச்சகத்திலிருந்து (India Security Press) பெறுகின்றது. பின்னர், அதனைப் பணப் பாதுகாப்புப் பெட்டிகள் வைத்திருக்கின்ற கருவூலங்களுக்கும், துணைக் கருவூலங்களுக்கும், பிற தொடர்புடைய நிறுவனங்களுக்கும் பகிர்ந்தளிக்கிறது. பண வெளியீட்டிற்கு நாட்டை ஏழு வட்டங்களாகப் பிரித்திருக்கின்றனர். அவற்றில், அலுவலகங்களை அமைத்திருக்கின்றனர். ஒவ்வொரு கிளையிலும் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒன்று பொதுத்துறை (General Department). இது நாசிக் அச்சகத்திலிருந்து பணம் பெறுகின்ற பணியைச் செய்கின்றது; பெற்ற பணத்தைப் பிறவற்றிற்கு இது பகிர்ந்தளிக்கிறது. இரண்டாவது, பணத் துறையாகும் (Cash Department). இது பண நடவடிக்கைகளைக் கவனிக்கின்றது; வங்கிகளுக்கும் மற்றவற்றிற்கும் பணம் செலுத்துகின்றது.

இரண்டாவதாக, வங்கித்துறை (Banking Department) செயல்படுகின்றது. ரிசர்வ் வங்கி இந்திய அரசின் வங்கியாகவும், வங்கிகளின் வங்கியாகவும் செய்யவேண்டிய பணிகளை எல்லாம் இந்தத் துறை கவனிக்கின்றது. இதனை நான்கு பிரிவுகளாகப் பகுத்துள்ளனர். அவை: பொதுக்கடன், பொதுக் கணக்குகள், வைப்புக் கணக்குகள், பத்திரங்கள் ஆகிய பிரிவுகளாகும். ரிசர்வ் வங்கியின் கிளைகள் உள்ள ஏழு இடங்களிலும் இதற்கு அலுவலகங்கள் உள்ளன. இவை தவிர உத்தரப் பிரதேச அரசு வெளியிட்ட ஈட்டுக் கடன் பத்திரங்கள்

(Compensation Bonds) தொடர்பான பணியைக் கவனிக்க லக்னோவில் ஓர் அலுவலகம் இருக்கின்றது.

மூன்றாவதாக குறிப்பிடத்தக்க துறை வேளாண்மைக் கடன் துறையாகும் (Agricultural Credit Department). இந்தத் துறை 1935ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் நிறுவப்பெற்றது. வேளாண்மைக் கடன் தொடர்பான சிக்கல்களை ஆராயக்கூடிய திறமையான அலுவலர்கள் இப் பிரிவில் பணியாற்றுகின்றனர். வேளாண்மைக் கடனில் ஈடுபட்டிருக்கிற மாநிலக் கூட்டுறவு வங்கிகள், பிற நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பணிகளை கிராமக் கடன் பணியுடன் ரிசர்வ் வங்கியின் இணைக்கின்ற பொறுப்பு இதனுடையதாகும். இதில் நான்கு பிரிவுகள் உள்ளன. அவை, நிதி சோதனை (Finance and Inspection), திட்டமும் மறு அமைப்பும் (Planning and Re-organisation), கூட்டுறவுப் பயிற்சியும் வெளியீடும் (Co-operative Training and Publication), கைத்தறி நிதி (Handloom Finance) ஆகியவை யாகும். இந்தத் துறையின் மண்டல அலுவலகங்கள் பம்பாய், புதுடில்லி, கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன. 1956ஆம் ஆண்டில் 'வேளாண்மை உற்பத்திக் (வளர்ச்சி, கிட்டங்கி) கழகச் சட்ட'த்தை [Agricultural Produce (Development and Warehousing) Corporation Act] நிறை வேற்றிய பின் நாடு முழுவதிலும் கிட்டங்கிகளை அமைக்கின்ற பணியில் மத்திய, மாநில அரசுகளோடு இந்தப் பிரிவும் ஈடுபடுகிறது.

நான்காவதாக, செலாவணி மாற்றுக் கட்டுப்பாட்டுத் துறை (Exchange Control Department). இந்தப் பிரிவு 1939ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் நிறுவப்பெற்றது. இரண்டாம் உலகப்போர் தொடங்கிய பின்னர், அந்நியச் செலாவணி மாற்றில் தேவையான கட்டுப்பாடுகளைக் கொண்டுவருகின்ற பணியை இந்தப் பிரிவு மேற்கொண்டது. 1947ஆம் ஆண்டில் 'அந்நியச் செலாவணி நெறிப்படுத்தும் சட்டம்' (Foreign Exchange Regulation Act) அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டு நிருவாகத்தை ரிசர்வ் வங்கி மேற்கொள்ளத் தேவையான அளவு அதிகாரங்களை வழங்கியிருக்கின்றது. புதுடில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை, கான்பூர் ஆகிய இடங்களில் இதற்குக் கிளை அலுவலகங்கள் அமைந்திருக்கின்றன.

ஐந்தாவதாக, பரிசோதனைத் துறை (Inspection Department) இருக்கின்றது. இது குறிப்பிட்ட காலங்களில் ரிசர்வ்

வங்கியின் பல்வேறு துறைகளையும் மேற்பார்வை செய்கின்றது. இதனுடைய தணிக்கை அறிக்கை தலைமைக் கணக்குகளுக்கு அளிக்கப்படுகின்றது.

ஆறாவதாக, வங்கி வளர்ச்சித் துறையாகும் (Department of Banking Development). கிராம வங்கி விசாரணைக் குழுவின் (Rural Banking Enquiry Committee) பரிந்துரையின்படி, கிராமச் சேமிப்புகளைத் திரட்டவும், கிராமப் பகுதிகளுக்கான கடன் வசதிகளைப் பெருக்கவும், இத் துறை தொடங்கப் பெற்றது. இது இந்திய ஸ்டேட் வங்கியோடும், ஐதராபாத் ஸ்டேட் வங்கியோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றது; அரசோடு தொடர்புடைய வங்கிகளின் எதிர்கால அமைப்புகளின்மீது கவனம் செலுத்துகின்றது. சிறுசேமிப்புக் கழகத்திற்கும் (Small Savings Board) ரிசர்வ் வங்கிக்கும் இடையில் இது ஓர் இணைப்புப் பாலமாக இருக்கின்றது. வணிக வங்கிகளின் வளர்ச்சியிலும் இது கவனம் செலுத்துகின்றது.

ஏழாவதாக, ஆராய்ச்சி, புள்ளிவிவரத்துறை (Department of Research and Statistics) செயல்படுகின்றது. ரிசர்வ் வங்கி அதனுடைய பொருளாதார, நிதிக் கொள்கைகளை உருவாக்கத் துணை செய்வதே இந்தப் பிரிவின் தலையாய பணியாகும். பொருளாதாரம், நிதித் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வுகாண மத்திய மாநில அரசுகளுக்குத் தக்க ஆலோசனைகளைக் கூறுகின்றது. இதில் வங்கி ஆராய்ச்சி (Banking Research), புள்ளி விவரங்கள் (Statistics), பண ஆராய்ச்சி (Monetary Research), கிராமப் பொருளாதாரம், (Rural Economics), பன்னாட்டு நிதி (International Finance) ஆகிய ஐந்து பிரிவுகளை உலகப் பொருளாதார நிதி வளர்ச்சி தொடர்பானவற்றோடு நெருங்கிய தொடர்புகொண்டிருக்கின்றன.

எட்டாவதாக, வங்கிச் செயல்களின் பிரிவு (Department of Banking Operations). இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டமும், வங்கி நிறுவனங்களின் சட்டமும் மற்றைய வங்கிகளைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கிக்கு அதிக அளவில் அதிகாரங்களை வழங்கியிருக்கின்றன. நாட்டிலுள்ள எல்லா வங்கிகளையும் கண்காணிப்பது இந்தப் பிரிவின் பணியாகும். குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை வங்கிகளை மேற்பார்வை செய்வது, வங்கிகளின் கடன் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வது, வங்கித் தொழிலைத் தொடங்க, தொடர வருகின்ற விண்ணப்பங்களைக் கவனித்தல், மூலதனம் கேட்டு வருகின்ற விண்ணப்பங்களைச் சரிபார்த்தல்

ஆகியவை இந்தத் துறையின் பணிகளோடு சேரும். இதன் கிளை அலுவலகங்கள் புதுடில்லி, கல்கத்தா, சென்னை, நாக்பூர், திருவனந்தபுரம், கான்பூர் ஆகிய இடங்களில் அமைந்திருக்கின்றது.

ஒன்பதாவதாக, தொழில்நிதித் துறை (Department of Industrial Finance) இயங்குகின்றது. இத் துறை 1957ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் முதல் செயல்படுகின்றது. இத் துறை மாநில நிதிக் கழகங்கள், தொழில்வளர்ச்சி வங்கி ஆகிய தொழில்களுக்கு நிதியுதவி தருகின்ற நிறுவனங்களின் பணிகளைக் கண்காணிக்கின்றது.

பத்தாவதாக, சட்டத்துறை (Legal Devision). பல்வேறு துறைகளின் சட்ட நுணுக்கங்களைப்பற்றி ஆராய இந்தத் துறை உருவாக்கப் பெற்றிருக்கின்றது. வங்கிகளோடு தொடர்புடைய சட்டங்களுக்கு விளக்கம் கூறுவது, புதிய சட்டங்களை, சட்டத் திருத்தங்களை வரைந்து கொடுப்பது ஆகிய பணிகளை இப் பிரிவு கவனிக்கின்றது.

### ரிசர்வ் வங்கியின் பணிகள்

இந்திய ரிசர்வ் வங்கி பல்வேறு வகையான பணிகளைச் செய்கின்றது. இவற்றை மைய வங்கிப் பணிகள் (Central Banking Functions) என்றும், சாதாரண வங்கிப் பணிகள் (Ordinary Banking Functions) என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பகுத்து ஆராயலாம்.

### மைய வங்கிப் பணிகள்

உலகில் பிற நாடுகளிலுள்ள மைய வங்கிகள் என்னென்ன பணிகளை மேற்கொள்கின்றனவோ அத்தனை பணிகளையும் இந்திய ரிசர்வ் வங்கி ஏற்றுச் செய்கின்றது. அவற்றை ஒவ்வொன்றாகக் குறிப்பிடலாம்:

1. **பணம் வெளியிடுதல்:** 1934ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கியின் சட்டத்தின் 22(1)ஆம் பிரிவின்படி பண வெளியீட்டு முற்றுரிமை இந்திய ரிசர்வ் வங்கிக்கு வழங்கப் பட்டிருக்கின்றது. இந்திய ரிசர்வ் வங்கியில் வெளியீட்டுத்துறை (Issue Department), வங்கித்துறை (Banking Department) என்னும் தனிப் பிரிவுகள் உள்ளன. வெளியீட்டுத் துறை பண வெளியீட்டைக் கவனிக்கின்றது.

இந்திய அரசு வெளியிடுகின்ற ஒரு ரூபா தவிர, மற்றைய காகிதப் பணம் எல்லாவற்றையும் இந்திய ரிசர்வ் வங்கிதான் வெளியிடுகின்றது. தக்க சொத்துகளை ஈடு வைத்துக்கொண்டு வெளியீட்டுத்துறை பணத்தை வெளியிடுகின்றது. பணத்தைப் பொதுமக்களுக்குக் கொடுத்து வாங்கும் பணியை வங்கித்துறை கவனிக்கின்றது.

1934ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டப்படி பண வெளியீட்டில் வீத அளவுக் காப்புமுறை (Proportional Reserve System) பின்பற்றப்பட்டது. இதன்படி மொத்தம் வெளியிட்டுள்ள காகிதப் பணத்தில் 40 சதவீதம் தங்கக் காசுகளாகவும், தங்கக் கட்டிகளாகவும், ஸ்டெர்லிங் பத்திரங்களாகவும் இருப்பு வைத்திருக்கவேண்டும். இவற்றில் 40 கோடி ரூபாவுக்குக் குறையாமல் தங்கக் காசுகளும் தங்கக் கட்டிகளும் இருக்க வேண்டும். ஒரு தோலா தங்கத்தின் மதிப்பு ரூ. 21-3-8 (ரூ. 21.24) என்று குறிப்பிடப்பட்டது. மீதி 60 சதவீதம் ரூபாப் பத்திரங்களாகவும், ரூபா நாணயங்களாகவும், குறிப்பிடப்பட்ட மாற்று உண்டியல்களாகவும், வாக்குறுதிச் சீட்டு களாகவும் இருக்கலாம். இவற்றில் ரூபாப் பத்திரங்களின் மதிப்பு 50 கோடி ரூபா அல்லது மொத்தத்தில் நான்கில் ஒரு பகுதிக்குக் கூடாமல் இருக்கவேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு அரசுக்கு மிகுதியாகப் பணம் தேவைப்பட்டது. ஆதலால், பண வெளியீட்டில் நெகிழ்வுத் தன்மையைக் கொண்டுவர 1956ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தைத் திருத்தினர். இதன்படி குறைந்த அளவுக் காப்பு முறை (Minimum Reserve System) நடைமுறைக்கு வந்தது. இதன்படி 400 கோடி ரூபாவுக்கு அயல்நாட்டுப் பத்திரங்களும், 115 கோடி ரூபாவுக்குத் தங்கமும் ஆக மொத்தம் 515 கோடி ரூபாவுக்குக் காப்பீடு இருக்கவேண்டும். பன்னாட்டுப் பண நிதியிடம் ஒப்புக்கொண்டபடி ஒரு தோலா தங்கத்தின் மதிப்பு ரூ. 62.50 ஆயிற்று.

அந்நியச் செலாவணியில் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால், 1957ஆம் ஆண்டில் ரிசர்வ் வங்கிச் சட்டத்தை மறுபடியும் திருத்திக் காப்புத் தொகையை 20 கோடி ரூபாவாகக் குறைத்தனர். இதில் 115 கோடி ரூபாவுக்குக் குறையாமல் தங்கக் காசுகளும் தங்கக் கட்டிகளும் இருக்கவேண்டும்.

இந்தியாவில் பணவெளியீடு மிகவும் கூடியிருப்பது குறிப்பிடத் தக்கது. 1950-51ஆம் ஆண்டில் இந்தியாவில் 1,238½ கோடி

ரூபாவுக்குக் காகிதப் பணம் புழக்கத்திலிருந்தது. இது 1967-68ஆம் ஆண்டில் 3,150 கோடி ரூபாவாகவும், 1970-71-ல் 4371 கோடியாகவும், 1982 டிசம்பரில் 15,750 கோடியாகவும் உயர்ந்தது.

இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட பணத்தின் அளவைக் கீழ்க்காணும் அட்டவணை காட்டுகின்றது :

**இந்திய ரிசர்வ் வங்கியின் பண வெளியீடு**

*(இலட்ச ரூபாவில்)*

| ஆண்டு | வங்கித் துறையில் கையிருப்புப் பணம் | புழக்கத்திலுள்ள பணம் | மொத்தப் பொறுப்பு (வெளியிட்ட மொத்தப் பணம்) |
|---|---|---|---|
| 1970-71 | 9,59 | 4,211,77 | 4,221,36 |
| 1971-72 | 18,13 | 4,637,18 | 4,654,31 |
| 1972-73 | 18,75 | 5,253,45 | 5,272,20 |

ரிசர்வ் வங்கி வெளியிடும் பணத்தின் அளவு தொடர்ந்து கூடிக்கொண்டே வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

நமது நாட்டிலுள்ள பணவீக்கத்திற்கு இது ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது.

**2. வங்கிகளின் வங்கி :** இந்திய ரிசர்வ் வங்கி, வங்கிகளின் வங்கியாகச் செயல்படுகின்றது. 1934ஆம் ஆண்டின் ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 42ஆம் பிரிவின்படி, ஒவ்வொரு பட்டியலில் சேர்க்கப்பட்ட வங்கியும் அதனுடைய கால வைப்பில் இரண்டு சதவீதமும், தேவை வைப்பில் 5 சதவீதமும் ரிசர்வ் வங்கியிடம் இருப்பாக வைத்திருக்கவேண்டும். 1956ஆம் ஆண்டில் கொண்டுவந்த சட்டத் திருத்தம், கால வைப்பிற்கு எட்டுச் சதவீதமாகவும், தேவை வைப்பிற்கு 20 சதவீதமாகவும் உயர்த்தியது.

1962ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கிச் (திருத்தச்) சட்டம் [Reserve Bank of India (Amendment) Act] நிறைவேற்றப்பட்டது. இதன்படி வங்கியிலுள்ள கால, தேவை வைப்புகளின் மொத்தப் பொறுப்பில் மூன்று சதவீதம் ரிசர்வ் வங்கியிடம் வைத்திருக்கவேண்டும். இதற்கு முன்னர் 90 நாள்

களுக்கு உட்பட்ட அயல்நாட்டு உண்டியல்களைத்தாம் மறு கழிவு செய்தோ ஈடாக வைத்துக்கொண்டோ ரிசர்வ் வங்கி பணம் கொடுத்தது. சட்டத்திருத்தத்தின்படி 180 நாள்கள் வரையுள்ள அயல்நாட்டு உண்டியல்களுக்கு ரிசர்வ் வங்கி பணம் கொடுக்கலாம்.

1949ஆம் ஆண்டின் வங்கி நிறுவனங்களின் சட்டம் (Banking Companies Act) வங்கிகளைக் கட்டுப்படுத்த மிகுதியாக அதிகாரம் வழங்கியிருக்கின்றது. இந்தச் சட்டத்தின் 23ஆம் பிரிவின்படி வெளிநாடுகளிலோ இந்தியாவிலோ கிளைகளைத் தொடங்க வங்கிகள் ரிசர்வ் வங்கியிடம் முன்கூட்டியே அனுமதி பெறவேண்டும். வங்கிகள் தங்களுடைய பணிபுரியும் இடங்களை மாற்றவும் முன் அனுமதி பெறவேண்டும். இந்தச் சட்டத்தின் 35ஆம் பிரிவின்படி ரிசர்வ் வங்கி வங்கிகளை எந்த நேரத்திலும் பரிசோதனை செய்யலாம். 1950ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் எல்லா வங்கி நிறுவனங்களையும் அடிக்கடி குறிப்பிட்ட கால இடைவெளிகளின்படி பரிசோதிக்க நிலையான ஒரு நிருவாக அமைப்பை ஏற்படுத்தினர். சட்டத்தின் 36-(1) (d) (v) பிரிவின் படி, ரிசர்வ் வங்கி தேவையென்று கருதினால் எந்த வங்கியின் நிருவாகத்திலும் மாறுதலைச் செய்யலாம்.

1962ஆம் ஆண்டின் வங்கி நிறுவனங்களின் (திருத்தச்) சட்டம் [Banking Companies (Amendment) Act 1962], பட்டியலில் சேர்க்கப்படாத வங்கிகளும் அவற்றிடம் இருக்கின்ற கால, தேவை வைப்புகளின் மொத்த மதிப்பில் மூன்று சதவீதத்தை ரிசர்வ் வங்கியிடம் வைத்திருக்க வேண்டுமென்று கூறியது.

**3. கடன் கட்டுப்பாடு:** வங்கிகளின் கடனளவில் ஏற்படு கின்ற ஏற்றத்தாழ்வுகள் மக்களின் வாங்கும் சக்தியை மாற்றி, நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற் படுத்துகின்றன. ஆதலால், வங்கிகளின் கடனளவைக் கட்டுப் படுத்த வேண்டியது மைய வங்கியின் அவசியமான பணியா கின்றது. அந்நியச் செலாவணி மாற்று வீதத்தை நிலைப் படுத்துதல், விலைகளை நிலைப்படுத்துதல், பொருளாதாரத்தை நிலைப்படுத்துதல் ஆகிய மூன்று முக்கியமான நோக்கங்களோடு மைய வங்கி கடன் கட்டுப்பாட்டுப் பணியை மேற் கொள்கின்றது.

இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், வங்கி நிறுவனங்களின் சட்டம் ஆகியவை அளித்திருக்கின்ற அதி காரங்களைப் பயன்படுத்தி வணிக வங்கிகளின் கடனளவைக்

கட்டுப்படுத்துகின்றது. இதற்காக (i) வங்கி வீதங்களை மாற்றுவது; (ii) வெளி அங்காடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது; (iii) வணிக வங்கிகள் வைத்திருக்க வேண்டிய இருப்பு வீதங்களை மாற்றுவது; (iv) தெரிந்தெடுத்த, நேரடிக் கட்டுப்பாட்டு முறை ஆகியவற்றைப் பின்பற்றுகின்றது. இந்த முறைகளை ரிசர்வ் வங்கி கடந்த காலத்தில் எப்படிப் பின்பற்றி வந்திருக்கின்றது என்பதைத் தனித்தனியாக விளக்கலாம்:

(i) **வங்கி வீதம்:** ரிசர்வ் வங்கி மலிவுப் பணக் கொள்கையைப் பின்பற்றியதால், **1935ஆம் ஆண்டு முதல் 1951ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் தேதிவரை**, வங்கி வீதம் தொடர்ந்து மூன்று சதவீதமாக இருந்துவந்தது. நமது நாட்டில் வங்கிகள் பண உதவி கேட்டு ரிசர்வ் வங்கியிடம் போகின்ற பழக்கத்தை வளர்த்துக்கொள்ளவில்லை. **1938-39** ஆம் ஆண்டில் பட்டியலில் சேர்க்கப்பட்ட வங்கிகளுக்கும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும் சேர்த்து ரிசர்வ் வங்கி இரண்டு இலட்ச ரூபா கடன் கொடுத்திருந்தது. **1947-48**ஆம் ஆண்டில் இந்தத் தொகை 21 இலட்ச ரூபாவாகத்தான் கூடியிருந்தது.

இந்திய வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கியிடம் அதிகமாக உதவி வேண்டிச் செல்லாததற்குக் கீழ்க்காணும் இரு காரணங்கள் கூறப்படுகின்றன:

முதலாவதாக, வணிக வங்கிகள் உதவி நாடி ரிசர்வ் வங்கியிடம் செல்ல விரும்பவில்லை. அப்படிச் செல்வது வங்கிகளின் வலிமைக் குறைவாகக் கருதப்பட்டது.

இரண்டாவதாக, போர்க் காலத்திலும் அதனைத் தொடர்ந்தும் வங்கிகளுக்கு எளிதாக, மிகுதியாகப் பணம் கிடைத்தது. அரசின் கடன் பத்திரங்களை வங்கிகள் அதிகமாகப் பெற்று இருப்பு வைத்திருந்தன. அதோடு ரொக்கப் பணமும் அதிகமாக இருந்தது. போருக்குப் பின்னர்ப் பணத்தேவை ஏற்பட்டபொழுது உண்டியல்களைக் கழிவுசெய்து பணம் பெறுவதைவிட எளிதாக அரசுப் பத்திரங்களை விற்று பணம் பெற முடிந்தது.

நாடு விடுதலை பெற்ற பின்னர்ப் பொருளாதார நடவடிக்கைகள் மிகுதிப்பட்டதாலும், ஆக்கப்பணிகள் அதிகமானதாலும் நாட்டில் பணத்தேவை கூடியது. வங்கிகள் கடன்

பெறவும், முன்பணம் கேட்டும், மறுகழிவு செய்யவும் ரிசர்வ் வங்கியை நாடிச்சென்றன. 1949ஆம் ஆண்டில் ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்குக் கடனாகவும் முன்பணமாகவும் 334 இலட்ச ரூபாவும், மறுகழிவு செய்து 29 இலட்ச ரூபாவும் கொடுத்தது. 1950ஆம் ஆண்டில் கடனாகவும் முன்பணமாகவும் 839 இலட்ச ரூபாவும், மறுகழிவு வகையில் 53 இலட்ச ரூபாவும் கொடுத்திருந்தது.

1951ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 15ஆம் நாள் கடன் விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்தக் கருதி, வட்டி வீதத்தை $3\frac{1}{2}$ சத வீதமாகக் கூட்டினர். இதனை ஒட்டி நாட்டின் வட்டி வீதமும் உயர்ந்தது. கடன் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டது. வட்டி வீத மாற்றத்தின் மூலமாக ரிசர்வ் வங்கியால் வணிக வங்கிகளை மேலும் கட்டுப்படுத்த முடிந்தது. வணிக வங்கிகள் கொடுத்த கடனின் அளவு குறைந்தது. 1950-51ஆம் ஆண்டில் மிகுதி யாகப் பொருளாதார நடவடிக்கைகள் இருந்த பருவ காலத்தில் வங்கிகள் 182 கோடி ரூபா கடன் கொடுத்திருந்தன. 1951-52ஆம் ஆண்டில் இதே பருவகாலத்தில் வங்கிக் கடன் 62 கோடி ரூபா வரைதான் கூடியிருந்ததென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அடுத்து 1957ஆம் ஆண்டு மேத் திங்கள் 15ஆம் நாள் வட்டி வீதத்தை நான்கு சதவீதமாக உயர்த்தினர். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் செயல்படப் போவதை ஒட்டி இந்த மாற்றம் செய்தனர். நாட்டில் பணவீக்கப் போக்குக் காணப் பட்டதால் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது தேவை யாயிற்று. இதற்காக ரிசர்வ் வங்கி கடனளவைக் கட்டுப் படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1960ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 11ஆம் தேதி முதல் வங்கிகள் அவற்றின் கூடிய வைப்புகளில் 25 சதவீதம் ரிசர்வ் வங்கியிடம் வைக்கவேண்டுமென்று கூறப்பட்டது. இதனை மே மாதம் ஆறாம் தேதி 50 சதவீதமாக உயர்த்தினர். ஆனால் வங்கிகளின் கடன் குறையவில்லை.

ஆதலால், 1960ஆம் ஆண்டு அக்டோபர் முதல், புதிய 'மூன்றடுக்கு முறை' (Three Tier System) பின்பற்றப்பட்டது. இதன்படி ஒவ்வொரு வங்கியும் எவ்வளவு கடன் வாங்கலா மென்று குறிக்கப்பட்டது. முதலாவதாக, கடனளவுப் பங்கு (Quota) சராசரிச் சட்ட இருப்பில் (Statutory Reserve) 50 சத வீதம் ஆகும். இரண்டாவதாக, இதற்கு 100 சதவீதம்வரை

கடன் பெற்றால், அதற்கு வங்கி வட்டி வீதத்திற்குமேல் ஒரு சத வீதம் தண்ட (Penal) வட்டி விதிக்கப்படும். மூன்றாவதாக, அதற்கு மேலும் வணிக வங்கி ரிசர்வ் வங்கியிடம் கடன் வாங்கினால் 2 சதவீதம் தண்ட வட்டி கொடுக்கவேண்டும்.

1963ஆம் ஆண்டில் வட்டி வீதத்தை 4½ சதவீதமாக உயர்த்தினார்கள். 1964ஆம் ஆண்டில் மூன்றடுக்கு முறைக்குப் பதிலாக இரண்டடுக்கு முறை புகுத்தப்பட்டது. இதன்படி சட்ட இருப்பில் 50 சதவீதத்திற்குக் குறைந்ததற்கு 4½ சதவீத வட்டியும், அதற்கு மேற்பட்டதற்கு 6 சதவீத வட்டியும் விதிக்கப் பட்டது.

பங்கு முறை 1964ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் மறைந்தது. அப்பொழுது நான்காவது தடவையாக வட்டி வீதம் 5 சதவீதமாக உயர்த்தப்பட்டது. வங்கிகளின் ரொக்க வீதத்தை ஒட்டிக் கடனுக்கு வட்டி விதிக்கப்பட்டது. ரொக்க வீதம் 28 சதவீதத்திற்குக் குறைந்ததால் வட்டி வீதம் உயர்த்துப் பட்டது. 1965ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்களில் வட்டி வீதம் 6 சதவீதமாகவும், ரொக்க வீதம் 30 சதவீதமாகவும் உயர்த்தப் பட்டது. நமது நாட்டில் பண அங்காடி நன்றாக அமையாத தாலும், உண்டியலங்காடி இல்லாமையாலும் வங்கி வீதத்தால் எதிர்பாக்கின்ற பலன்கள் விளைவதில்லை. 1982 டிசம்பரில் வங்கி வீதம் 10% ஆக இருந்தது.

மற்றைய நாட்டு மைய வங்கிகள், வங்கி வீதத்தை மாற்றியதோடு ஒப்பிட்டால், நமது நாட்டில் வங்கி வீதத்தை மாற்றியது மிகவும் குறைந்த தடவைகளேயாகும். நமது நாட்டில் வங்கி தொடங்கி, முதல் முப்பது ஆண்டுகளில் (1935-65) ஆறு தடவைகள் வங்கி வீதம் மாற்றப்பட்டது. 1922ஆம் ஆண்டுக்கும் 1949ஆம் ஆண்டுக்கும் இடையில் நியூஜிலாந்தில் 8 தடவைகளும், தென்னாப்பிரிக்காவில் 13 தடவைகளும் மாற்றப்பட்டன. 1844ஆம் ஆண்டு முதல் 1900ஆம் ஆண்டுவரை ஃபிரான்ஸ் வங்கி வட்டி வீதத்தை 111 தடவைகளும், இங்கிலாந்து வங்கி 400 தடவைகளும் மாற்றி இருக்கின்றன.

(ii) **வெளிச் சந்தை நடவடிக்கைகள்**: பணச் சந்தையிலுள்ள கடன் சூழ்நிலைகளை மாற்றுவதற்காக ரிசர்வ் வங்கி வெளி அங்காடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. இந்திய ரிசர்வ் வங்கியின் சட்டத்தின் 17ஆம் பிரிவில் 8, 8(A) பகுதிகளில்

வெளி அங்காடித் தொடர்பான கீழ்க்காணும் நடவடிக்கைகளில் ஈடுபடலாமென்று கூறப்படுகிறது:

முதலாவதாக, மத்திய மாநில அரசுகளின் கடன் பத்திரங்களை வாங்கி விற்கலாம். மத்திய மாநில அரசுகளின் உறுதி பெற்ற பல்வேறு நிறுவனங்களின் பத்திரங்களையும் வாங்கி விற்கலாம்.

இரண்டாவதாக, இந்திய ஸ்டேட் வங்கி, மத்திய அரசு குறிக்கின்ற பிற வங்கிகள் ஆகியவற்றின் பங்குகளை வாங்கி விற்கலாம்.

1951ஆம் ஆண்டில் ரிசர்வ் வங்கி அரசு பத்திரங்களை வாங்கி விற்பதைக் கைவிட்டது. 1962-63ஆம் ஆண்டில் ரிசர்வ் வங்கி 10.6 கோடி ரூபாய் பத்திரங்களை விற்றிருந்தது. இந்த அளவு 1963-64ஆம் ஆண்டில் 44.7 கோடியாக உயர்ந்தது. 1980 வரை வணிக வங்கிகள் 8,462 கோடியளவிற்கு அரசு பத்திரங்களில் முதலீடு செய்திருந்தன.

நமது நாட்டில் வெளிச்சந்தை நடவடிக்கைகளைப் பரந்த அளவில் கையாண்டு, எதிர்பார்க்கும் விளைவுகளைப் பெற முடியாததற்குச் சில காரணங்கள் உள்ளன.

முதலாவதாக, இந்தியப் பணச் சந்தையை இதுவரை சரியாக அமைக்கவில்லை.

இரண்டாவதாக, ரிசர்வ் வங்கி வாங்கி விற்கக்கூடிய பத்திரங்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.

மூன்றாவதாக, வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கியோடு முழு அளவில் ஒத்துழைப்பதில்லை.

நான்காவதாக, அரசு அடிக்கடி பொதுக் கடன் திரட்டுவதால், ரிசர்வ் வங்கியின் வெளி அங்காடி நடவடிக்கைகள் வலுவற்றுப்போகின்றன.

(iii) இருப்பு வீதம்: இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 42 (1) பிரிவின்படி பட்டியலில் சேர்க்கப்பெற்ற எல்லா வங்கிகளும் அவற்றின் வைப்புகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ரிசர்வ் வங்கியில் வைத்திருக்கவேண்டும். இது முதலில் கால வைப்பில் 2 சதவீதமாகவும், தேவை வைப்பில் 5 சதவீதமாகவும் இருந்தது. இப்பொழுது இதனை எல்லா வகையான வைப்புகளுக்கும் சேர்த்து மொத்தத்தில் 3 சதவீதமாக மாற்றி உள்ளனர்.

(iv) தேர்ந்தெடுக்கப்பெற்ற கடன் கட்டுப்பாடு: கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளையும், இந்திய ரிசர்வ் வங்கி பின்பற்றுகின்றது. 1956ஆம் ஆண்டில் வங்கிக் கடனில் பெரும் பகுதி வேளாண்மைப் பொருள்களை இருப்புவைத்து ஊக வாணிபம் செய்யப் பயன்படுத்தப்பட்டது. இதனால் குறிப்பிட்ட பத்திரங்களின்மீது வங்கிகள் எவ்வளவு கடன் கொடுத்தன என்பதற்கு மாதம் இரு முறை அறிக்கை அளிக்க வேண்டுமென்று ரிசர்வ் வங்கி அறிவித்தது. 1956ஆம் ஆண்டு மே மாதத்தில் நெல்லின்மீதும் அரிசியின்மீதும் கொடுக்கின்ற கடனைக் கட்டுப் படுத்தினர். செப்டம்பரில் பிற தானியங்களின்மீதும் கட்டுப் பாட்டை விரிவுபடுத்தினர். நோக்கம் நிறைவேறிய பின்னர் தடைகளை நீக்கினர்.

1957ஆம் ஆண்டில் ரிசர்வ் வங்கி மற்ற வங்கிகளுக்கு உணவு தானியங்களின்மீது கடன் கொடுக்கின்றபொழுது 40 சதவீதத் திற்குக் குறையாமல் வரம்பு (Margin) கட்டிக்கொள்ள வேண்டுமென்று கூறியது. இதனால் நல்ல பலன் விளைந்தது. 1959ஆம் ஆண்டில் கடலைக்கு, 45 சதவீதம் வரம்பு கட்டிக் கொள்ள வேண்டுமென்று ரிசர்வ் வங்கி ஆணையிட்டது.

உணவு மண்டலங்களை அமைத்த பின்னர், நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலை சாதகமாக மாறியது. ஆதலால், 1960ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் நெல்லுக்கும் அரிசிக்கும் குறிப்பிடப்பட்டிருந்த வரம்பு வீதத்தை 25 ஆகக் குறைத்தனர்.

1960ஆம் ஆண்டில் சணல் பொருள்களின் விலை வெகு வேக மாகக் கூடியது. இதனால், 1960ஆம் ஆண்டு ஜனவரி 12-ல் மூலச் சணலின்மீது கடன் கொடுக்கின்றபொழுது குறைந்தது 25 சதவீத வரம்பும், சணல் பொருள்களில் 40 சதவீத வரம்பும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று ரிசர்வ் வங்கி குறிப்பிட்டது. 1961ஆம் ஆண்டில் பிப்பிரவரி 24-ல் சணல் பொருள்களின் ஏற்றுமதிக்கு நிதியுதவும்பொருட்டு, கப்பல் நிறுவனங்களுக்கு வரம்புத் தொகையை 40 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகக் குறைத்தனர். 1961ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 29-ல் வரம்புத் தேவை விதிகளை எல்லாம் திரும்பப் பெற்றனர்.

1964ஆம் ஆண்டில் மறுபடியும் உணவுத் தானியங்கள், கடலை, காய்கறி, எண்ணெய் ஆகியவற்றின்மீது கடன்

கொடுக்கின்றபொழுது வங்கிகள் வைத்துக்கொள்ள வேண்டிய வரம்புத் தொகையை 45 சதவிதத்திலிருந்து 50 சதவிதமாக உயர்த்தினர். இத்தகைய தெரிந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப் பாட்டு முறைகள் மொத்தக் கடனளவைக் குறைக்கப் பெரிதும் பயன் பட்டுள்ளன.

**5. அரசின் வங்கி:** ரிசர்வ் வங்கி மத்திய, மாநில அரசுகளின் வங்கியாகவும் பணியாற்றுகின்றது. இதற்காக அவற்றோடு தனி ஒப்பந்தங்கள் செய்துகொண்டுள்ளது; அரசுக் காகப் பணம் வாங்குதல், செலுத்துதல், பொதுக்கடனை நிருவகித்தல் ஆகிய பணிகளைச் செய்கின்றது. அரசு மைய வங்கியிடம் வைப்புக் கணக்கு வைத்திருக்கின்றது. மத்திய, மாநில அரசுகளுக்குப் பணம் தேவைப்பட்டால் 90 நாள்களில் திருப்பிச் செலுத்தும் வகையில் வழிவகைக் (Ways and Means) கடன்கள் தருகின்றது. அரசுக்கான வங்கிப் பணிகளைப் பொதுக் கணக்குத் துறை (Public Accounts Department) கவனிக் கின்றது. ரிசர்வ் வங்கிக்குக் கிளைகள் இல்லாத இடங்களில் ஸ்டேட் வங்கியின் கிளைகள் இப் பணியைக் கவனிக்கின்றன. அரசின் நிதி ஆலோசகராகவும் ரிசர்வ் வங்கி திகழ்கின்றது.

**6. அந்நியச் செலாவணிக் காப்பு:** அந்நியச் செலாவணி மாற்று வீதத்தை நிலைபெறச் செய்யும் பொறுப்பு மைய வங்கியினுடையது. 1934ஆம் ஆண்டுச் சட்டம் ரிசர்வ் வங்கி ஒரு ரூபாவுக்கு 1 ஷில்லிங் $5\frac{49}{64}$ பென்னிக்குக் குறையாமலும், 1 ஷில்லிங் $6\frac{3}{16}$ பென்னிக்குக் கூடாமலும் ஸ்டெர்லிங்கை வாங்கி விற்க வேண்டுமென்று கூறியது. 1947ஆம் ஆண்டில் பன்னாட்டுப் பண நிதியில் இந்தியா உறுப்பினரான பின்னர், ஸ்டெர்லிங்கை வாங்கி விற்கும் பணியை அது செய்ய வேண்டியதில்லை. எல்லா நாடுகளின் செலாவணிகளையும் மத்திய அரசு குறிப்பிடும் மாற்று வீதத்தில் வாங்கி விற்கின்ற பணியை ரிசர்வ் வங்கி செய்துவருகின்றது. இப் பணிகளைச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் துறை (Exchange Control Department) கவனிக்கிறது.

**7. வேளாண்மைக் கடன்:** வேளாண்மை முன்னேற்றத்திற் காகக் கடன் தருவது ரிசர்வ் வங்கியின் பணிகளில் ஒன்று. இதற்காக வேளாண்மைக் கடன்துறை (Agricultural Credit Department) நிறுவப்பெற்றுள்ளது. இத்துறை இரண்டு முக்கிய மான பணிகளைச் செய்கின்றது.

முதலாவதாக, இந்தத் துறை வேளாண்மைக் கடன்பற்றி ஆராய்கின்றது. அரசுகளுக்கும், கூட்டுறவு, மற்றைய வங்கிகளுக்கும் கிராமக் கடன் குறித்து ஆலோசனைகள் கூறுகின்றது.

இரண்டாவதாக, ரிசர்வ் வங்கியின் வேளாண்மைக் கடன் பணிகளையும், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், பிற வங்கிகளின் கடன் பணிகளையும் இணைக்கின்றது.

வேளாண்மைக் கடனுக்குச் சில சலுகைகள் வழங்கப்பெற்றுள்ளன. வேளாண்மை நடவடிக்கைகளுக்காகப் பெற்ற கடனுக்குரிய மாற்று உண்டியல்களுக்கு 9 மாதங்களுக்குப் பதிலாக 15 மாதங்களில் பணம் தரலாம். வங்கி வட்டி வீதம் எதுவாக இருந்தாலும், கூட்டுறவு நிறுவனங்களுக்கு $1\frac{1}{2}$ சதவீத வட்டிக்குக் கடன் தருகின்றது. 1951ஆம் ஆண்டுச் சட்டம் ரிசர்வ் வங்கியின் கிராமக்கடன் பணிகளை மேலும் விரிவாக்கியுள்ளது. 1948ஆம் ஆண்டில் நில அடைமான வங்கிகள் வெளியிடும் கடன் பத்திரங்களில் 10 சதவீதம் ரிசர்வ் வங்கி வாங்குவதாக ஒப்புக்கொண்டது. இந்த அளவை 1950ஆம் ஆண்டில் 20 சதவீதமாக உயர்த்தினர்.

1955ஆம் ஆண்டில் ரிசர்வ் வங்கிச் சட்டத்திருத்தப்படி ரிசர்வ் வங்கி, 'தேசிய வேளாண்மைக் கடன் (நீண்ட கால நடவடிக்கைகள்) நிதியையும்' [National Agricultural Credit (Long-Term Operations) Fund], தேசிய வேளாண்மைக் கடன் (நிலைநிறுத்தும்) நிதியையும் அமைத்துள்ளது. நீண்ட கால நடவடிக்கைகள் நிதி 10 கோடி ரூபா மூலதனத்தோடு தொடங்கப்பெற்று ஆண்டுதோறும் 5 கோடி ரூபா பெற்று, அதன் பணிகளைச் செய்கின்றது. நிலைநிறுத்தும் நிதிக்கு ஒவ்வோர் ஆண்டும் ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பெறுகின்றது.

8. பிற மைய வங்கிப் பணிகள்: மைய வங்கியாக ரிசர்வ் வங்கி தீர்வகங்களை (Clearing Houses) நிருவகிக்கின்றது. நாடு திட்டங்களைத் திட்டிச் செயல்படுத்தத் தொடங்கிய பின்னர்ப் பல வளர்ச்சிப் பணிகளையும் ரிசர்வ் வங்கி மேற்கொள்கின்றது. ரிசர்வ் வங்கி குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கூட்டுப்பங்கு நிறுவனங்களையும், கூட்டுறவு வங்கி நிறுவனங்களையும் பற்றிய புள்ளிவிவரங்களை வெளியிடுகின்றது. இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து இவற்றின் நிதிநிலையை அறிந்துகொள்ளலாம். இது பல குறிப்பிடத்தக்க அறிக்கைகளையும் ஏடுகளையும் வெளியிட்டிருக்கின்றது. அவற்றில் (i) பணம், நிதி பற்றிய அறிக்கை (The

Report on Currency and Finance), (ii) இந்திய வங்கிகளின் போக்கும் வளர்ச்சியும் பற்றிய அறிக்கை (The Report on the Trend and Progress of Banking in India), (iii) இயக்குநர்களின் மையக் குழுவின் அறிக்கை (The Report of the Control Board of Directors), (iv) கூட்டுறவு இயக்கத்தின் மதிப்பீடு (The Review of the Co-operative Movement) ஆகியவை முக்கியமானவை யாகும். இவற்றில் முதல் மூன்றும் ஆண்டறிக்கைகள். நான்காவது ஆண்டிற்கு இருமுறை வெளியிடப்படுகின்றது. மாதம் ஓர் இதழ் (Monthly Bulletin) ஒன்றையும் நடத்து கின்றது.

## சாதாரண வங்கிப் பணிகள்

மைய வங்கியாகப் பணி புரிகின்ற ரிசர்வ் வங்கி, பல சாதாரண வங்கிப் பணிகளையும் மேற்கொள்ளலாம். அவற்றைத் தொகுத்துக் கூறுவோம்:

முதலாவதாக, யாரிடமிருந்தும்—மத்திய, மாநில அரசுகள், உள்ளாட்சி மன்றங்கள் முதலியவற்றிடமிருந்தும்—வட்டி கொடுக்காமல் வைப்புகளைப் பெற்று வைத்திருக்கலாம்.

இரண்டாவதாக, ஓர் இலட்ச ரூபாவுக்குக் குறையாமல் பட்டியலில் சேர்க்கப்பெற்ற வங்கிகளுக்கு ஸ்டெர்லிங்கை வாங்கி விற்கலாம்.

மூன்றாவதாக, மத்திய, மாநில அரசுகளின் கடன் பத்தி ரங்களை வாங்கவும் விற்கவும் செய்யலாம்.

நான்காவதாக, பேற்றுரிமைச் சீட்டுகளை (Drafts) வழங்கலாம்.

ஐந்தாவதாக, தங்க நாணயங்களையும் தங்கக் கட்டிகளை யும் விருப்பம்போல் வாங்கலாம், விற்கலாம்.

ஆறாவதாக, பணத்தையும் மதிப்புள்ள பத்திரங்களையும் பாதுகாப்பாகப் பெற்று வைத்திருக்கலாம்.

ஏழாவதாக, மாற்று உண்டியல்களை வாங்கலாம்; விற்கலாம்; மறுகழிவு செய்யலாம்.

எட்டாவதாக, பட்டியலில் சேர்க்கப்பெற்ற வங்கியிட மிருந்தோ, அல்லது வெளிநாடுகளில் பணம் வெளியிடுகின்ற

வங்கியிடமிருந்தோ ஒரு மாதத்திற்குள் திருப்பிச் செலுத்துவதாகக் கடன் பெறலாம். இப்படி வாங்குகின்ற கடன் அதன் பங்குமுதலைவிட அதிகமாக இருக்கக்கூடாது.

ஒன்பதாவதாக, வெளிநாடுகளில் பணம் வெளியிடுகின்ற அதிகாரம் பெற்ற வங்கியிடமோ, அல்லது அத்தகைய வங்கிகள் இணைந்து உருவாக்கும் பன்னாட்டு வங்கியோடோ கணக்கு வைத்துக்கொள்ளலாம்.

பத்தாவதாக, மாநில அரசுகளுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும், வங்கிகளுக்கும் கடன் தரலாம்.

## இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்துறைகள்

இந்திய ரிசர்வ் வங்கியில் 18 முக்கியமான துறைகள் உள்ளன. பல்வேறு பணிகளையும் மேற்கொள்ளச் செயல்படுகின்ற அந்தத் துறைகளின் கீழ்க்காணும் பட்டியலிலிருந்து ரிசர்வ் வங்கி மேற்கொள்ளும் விரிவான பணிகளை அறிந்துகொள்ளலாம்:

1. பணம் வெளியீட்டுத் துறை
2. பொதுக் கணக்குத் துறை
3. பொதுக் கடன் துறை
4. பத்திரங்கள் (Securities) துறை
5. அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் துறை
6. நிருவாகத் துறை
7. பணிகள் (Services) துறை
8. கணக்குகள், செலவுத் துறை
9. வங்கிப் பணிகள் வளர்ச்சித் துறை
10. தொழில்நிதித் துறை
11. செயலாளர் துறை
12. வங்கிப் பணிகளற்ற நிறுவனங்களின் (Non-Banking Companies) துறை
13. சட்ட நுணுக்கத் துறை
14. ஆய்வுத் துறை
15. கட்டடத் துறை (நிர்மாணம்)

16. சுட்டட நிருவாகத் துறை
17. பொருளாதாரத் துறை
18. புள்ளிவிவரத் துறை.

## மதிப்பீடு

இந்திய ரிசர்வ் வங்கி பல்வேறு வகையான பணிகளைச் செய்கின்றது; பண அங்காடியிலுள்ள உறுப்பினர்களின் பணிகளைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துகின்றது. இந்தியாவில் செம்மையான வங்கிமுறை அமையத்தக்க அடிப்படையை ரிசர்வ் வங்கி அமைத்திருக்கின்றது.

இந்திய ரிசர்வ் வங்கி சில துறைகளில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றுள்ளது. நாட்டில் வட்டி வீதம் குறைவதற்கு ரிசர்வ் வங்கி எடுத்துக்கொண்ட முயற்சிகள் வெற்றி பெற்றுள்ளன. குறைந்த செலவில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பணத்தை அனுப்ப முடிகின்றது. வணிக வங்கிகளைக் கட்டுப்படுத்தி வழிகாட்டுவதிலும், நாட்டின் கடனளவை நெறிப்படுத்துவதிலும், அரசுக்காகப் பொதுக்கடனை நிருவகிப்பதிலும் ரிசர்வ் வங்கி திறமையோடு நடந்துகொள்கிறது.

வேளாண்மைக்குப் பெருமளவில் ரிசர்வ் வங்கி கடன் வழங்குகின்றது. 1950-51ஆம் ஆண்டில் வேளாண்மைக்கு ரிசர்வ் வங்கி அளித்த குறுகிய கால கடன் 7·6 கோடி ரூபா. 1967-68ஆம் ஆண்டில் ரிசர்வ் வங்கி அளித்த கடனின் அளவு 380 கோடி ரூபா. இதிலிருந்து வேளாண்மைக் கடன் துறையில் ரிசர்வ் வங்கியின் சாதனையைத் தெரிந்துகொள்ளலாம்.

1969ஆம் ஆண்டில் இந்தியாவிலுள்ள பதினான்கு பெரிய வங்கிகளையும் 1980-ல் ஆறு பெரிய வங்கிகளையும் நாட்டுடைமையாக்கிய பின்னர், ரிசர்வ் வங்கியின் பொறுப்பு மிகுந்திருக்கின்றது.

இந்திய ரிசர்வ் வங்கியின்மீது சில குறைகளும் கூறப்படுகின்றன. இந்தியாவிலுள்ள எல்லாக் கடன் நிறுவனங்களையும் திறமையாக இணைக்காமலிருப்பது ரிசர்வ் வங்கியின் குறையாகக் கூறப்படுகின்றது. பண அங்காடியில் பல்வேறு வட்டி வீதங்கள் நிலவுவதையும், அவற்றிற்கிடையில் வேறுபாடுகள் காணப்படுவதையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

சிலர், ரிசர்வ் வங்கி, மைய வங்கியின் பணிகளோடுகூடப் பல்வேறு வகையான இதரப் பணிகளையும் செய்யவேண்டி

யிருப்பதால், மைய வங்கிப் பணிகள் பின்புலத்திற்குச் சென்று விடுகின்றனவென்று கூறுகின்றனர். ரிசர்வ் வங்கி மைய வங்கிப் பணிகளிலேயே மிகுதியாகக் கவனம் செலுத்த வேண்டு மென்று கூறப்படுகின்றது.

மிகவும் வலுவான உண்டியலங்காடியைத் தக்க முறையில் அமைக்க ரிசர்வ் வங்கி தீவிரமாக முயலவேண்டுமென்று கூறப் படுகின்றது. வேளாண்மைக் கடன் முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று சிலர் கூறுகின்றனர்.

ஆர். எஸ். சேயர்ஸ் சிறிய நாட்டிற்கு ஒரு மைய வங்கி போதுமென்றும், இந்தியா முதலிய பெரிய நாட்டிற்கு அமெரிக்க மைய வங்கி முறைதான் ஏற்றதென்றும் கூறுகின்றார். மைய வங்கியைப் பல மண்டல வங்கிகளாகப் பிரித்து, அவற்றின் பணிகளை ஒரு 'மைய நிதிக் கழகத்தின்' (Central Monetary Board) மூலம் இணைக்கலாமென்று கூறப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வங்கிமுறை துணை செய்யும் வகையில் இயங்க மைய வங்கியான ரிசர்வ் வங்கி திறமையாகப் பணிபுரிவது இன்றியமையாத் தேவையாகும்.

## துணை நூல்கள்


1. 'The Reserve Bank of India—Functions and Working'.
2. Dr. S. K. Basu, 'A Survey of Contemporary Banking Trends'.
3. K. N. Raj, 'The Monetary Policy of Reserve Bank of India'.
4. R. G. Thomas, 'Our Modern Banking and Monetary System'.
5. Beckhart, 'Banking Systems'.
6. R. S. Sayers, 'Modern Banking'.
7. B. Rama Rau, 'Evolution of Central Banking in India'.
8. K. S. Rao, 'The Role of the Reserve Bank of India in the Scheme of Agricultural Credit' (R. B. I. Bulletin—August, 1947).
9. K. N. Raj, 'The Monetary Policy of the Reserve Bank of India'.
10. C. D. Deshmukh, 'Central Banking in India, A Retrospect'.
11. S. K. Muranjan, 'Modern Banking in India'.

# 18. இங்கிலாந்து வங்கி
## (Bank of England)

### பின்புலம்

உலகத்து மைய வங்கிகளுக்கும் நடைமுறையில் முன்னோடியாக விளங்குவது இங்கிலாந்து வங்கியாகும். இது 1694ஆம் ஆண்டில் அரசின் சாசனத்தின் மூலம் நிறுவப்பட்டது.

இங்கிலாந்து வங்கியின் இயல்பை அறிந்துகொள்ள அது அமைந்த வரலாற்றுச் சூழ்நிலையை அறிந்துகொள்வது தேவையாகும்.

1640ஆம் ஆண்டுவரை இலண்டனிலுள்ள பெரும் வணிகர்கள் தங்களிடமிருந்த எச்சப் பணத்தைப் பாதுகாப்புக் கருதி இலண்டன் கோபுரத்திலிருந்த தங்கசாலையில் கொடுத்து வைத்தனர். நிதி நெருக்கடியின் காரணமாக முதலாம் சார்லஸ் மன்னர், கோபுரத்திலிருந்த 1,30,000 பவுன் மதிப்புள்ள தங்கத்தைக் கைப்பற்றிப் பயன்படுத்திவிட்டார். இதன் பின்னர், வணிகர்கள் பொற்கொல்லர்களிடம் தங்களுடைய பணத்தைக் கொடுத்து வைத்தனர்.

காலப்போக்கில் வைப்புகளைப் பெற்றுக்கொண்டிருந்த பொற்கொல்லர்களின் எண்ணிக்கை கூடியது. அவர்கள் மிகுதியாகத் தங்கம் வைத்திருந்தனர். அவர்களிடமிருந்த செல்வத்தின் காரணமாக, அவர்கள் தேவைப்படுகின்றபொழுதெல்லாம் அரசின் வங்கியாளர்களாகவும் பணியாற்றினர். அவர்களிடமிருந்து அரசு 13,00,000 பவுன் கடன் பெற்றிருந்தது. இதனை அரசினால் திருப்பிச் செலுத்த இயலவில்லை. இது வங்கித் தொழிலில் பெருஞ்சிக்கலை ஏற்படுத்தியது. இருந்தபோதிலும், பொற்கொல்லர்கள் ஒரு வகையாக இச்சிக்கலைச் சமாளித்தனர். இது முதல் இங்கிலாந்துக்கு ஒரு மைய வங்கி வேண்டுமென்ற உணர்வு தோன்றி வளர்ந்தது.

மூன்றாம் வில்லியம் மன்னருக்கு ஃபிரெஞ்சுப் போரை நடத்தப் பெரும் பொருள் தேவைப்பட்டது. மக்களுக்கு மன்னனிடம் கடன் கொடுக்குமளவிற்கு நம்பிக்கை இல்லை.

ஆதலால், அரசன் வேறுவழியைப் பின்பற்றிக் கடன் பெற முயன்றான். அந்த முயற்சியின் விளைவாக ஸ்காட்லாந்துக் காரரான வில்லியம் பேடர்ஸனின் (William Paterson) திட்டப்படி 1694-ல் இங்கிலாந்து வங்கியை நிறுவ அரசு ஒரு சாசனம் (Charter) வழங்கியது.

இங்கிலாந்து வங்கி தனியார் சிலரின் கூட்டு நிறுவனமாக அரசின் சாசனப்படி இயங்கியது. இஃது அரசுக்கு 8 சதவீத வட்டிக்குப் பன்னிரண்டு இலட்சம் பவுன்கள் கடன் கொடுத்தது. கடனின் அளவிற்குக் காகிதப் பணம் (Notes) அச்சிட வங்கி உரிமை பெற்றது. அரசு ஆண்டிற்கு 4,000 பவுன்கள் நிருவாகச் செலவிற்கு மானியமாகத் தர ஒப்புக்கொண்டது. ஆண்டிற்கு வட்டியும் நிருவாக மானியமும் ஓர் இலட்சம் பவுன் வருமானம் வரும் ஏற்பாட்டுடன் இங்கிலாந்து வங்கி பணியாற்றத் தொடங்கியது. இங்கிலாந்து வங்கிக்கு முதலில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கப்பெற்ற சாசனம், உரிய காலங்களில் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டது.

## வளர்ச்சி

1708ஆம் ஆண்டுச் சட்டம் ஆறு பேருக்கு மேல் பங்காளிகளைக் கொண்ட வேறு எந்த நிறுவனமும் காகிதப் பணம் வெளியிடுவதைத் தடை செய்தது. இதனால், காகிதப்பணம் வெளியிடுகின்ற முற்றுரிமை இங்கிலாந்து வங்கிக்குக் கிடைத்தது. 1751ஆம் ஆண்டில், பொதுக்கடனை நிருவகிக்கும் பொறுப்பை அரசு இங்கிலாந்து வங்கிக்கு வழங்கியது. பொற்கொல்லர்களும் வணிகர்களும் இங்கிலாந்து வங்கியோடு போட்டியிட்ட போதிலும், இங்கிலாந்து வங்கி விரைந்து வளர்ந்தது. 1773ஆம் ஆண்டில் தீர்வகங்கள் நிறுவப்பட்டன. சிறிய வங்கிகளுக்கு நிதி நெருக்கடி வந்தபொழுது, இங்கிலாந்து வங்கி வேண்டிய உதவி செய்து, 'வங்கிகளின் வங்கி' (Bankers Bank) என்ற நிலைக்கு உயர்ந்தது.

1823ஆம் ஆண்டில் அரசு இங்கிலாந்து வங்கியின் சாசனத்தைப் புதுப்பிக்கின்றபொழுது, புதிய திட்டம் ஒன்றைக் கொடுத்தது. அதன்படி இலண்டனிலும் அதன் சுற்றுவட்டமான 65 மைல்களுக்குள்ளும் நோட்டுகள் வெளியிடும் முற்றுரிமை இங்கிலாந்து வங்கிக்கு உண்டு. அந்த வட்டத்தின் புறப்பகுதிகளில் கூட்டுப்பங்கு வங்கிகள் காகிதப் பணத்தை வெளியிடும் உரிமையோடு இயங்கலாமென்பதே திட்டம். ஆனால்,

உடனடியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை. ஊக வாணிபப் பெருக்கமும், மிகுதியாகக் காகிதப் பணத்தை வெளியிட்டதும், 1825ஆம் ஆண்டில் ஒரு நெருக்கடி நிலையைத் தோற்றுவித்தன. ஆறு வார காலத்திற்குள் எழுபதுக்கு மேற்பட்ட வங்கிகள் முறிந்தமையால் அரசு தலையிட்டது.

இங்கிலாந்து வங்கியும், பெரிய கூட்டுப்பங்கு வங்கிகளும் போட்டியிட்டுக்கொண்டு காகிதப் பணத்தை வெளியிட்டதால் காகிதப் பணத்தின் அளவு மிகவும் கூடியது. இதனால் நோட்டுகளின் அளவைக் கட்டுப்படுத்த வேண்டிய சிக்கல் தோன்றியது. இதுபற்றிய கருத்துகள் வெளியிட்டவர்களைச் 'செலாவணி முறைக் கருத்தாளர்கள்' (Currency School), 'வங்கி முறைக் கருத்தாளர்கள்' (Banking School) என்று இரு வகைகளாகப் பிரிக்கலாம். செலாவணிமுறைக் கருத்தாளர்கள் முழுத் தங்க இருப்போடு, எப்பொழுதும் தங்கமாக மாற்றும் வகையிலேயே காகிதப்பணத்தை அச்சிட வேண்டுமென்று கூறினர். இவர்கள் பாதகமான அந்நியச் செலாவணிச் சூழலில் தங்க இருப்பின்றிக் காகிதப் பணத்தை வெளியிட்டால், தங்கம் நாட்டை விட்டு வெளியேறுமென்று கருதினர்.

வங்கி முறைக் கருத்தாளர்களோ வாணிபத்தின் தேவைக்கேற்ப, தங்கமாக மாற்றக் கூடியவரை தங்க இருப்பின்றியே காகிதப் பணத்தை வெளியிடலாமென்று கூறினர். வங்கிமுறைக் கருத்தைவிடச் செலாவணி முறைக் கருத்தைப் பின்பற்றுவது பாதுகாப்பானதென்று கருதியமையால், தலைமை அமைச்சராக இருந்த சர் இராபர்ட் பீல் செலாவணி முறையையே ஆதரித்தார். காகிதப் பணங்களை வெளியிடும் கோட்பாடுகளை வரையறுக்கும் வகையில் 1844ஆம் ஆண்டின் வங்கிச் சாசனச் சட்டம் (Bank Charter Act) நிறைவேற்றப்பட்டது.

1844ஆம் ஆண்டின் வங்கிச் சாசனச் சட்டப்படி, இங்கிலாந்து வங்கி வெளியீட்டுத் துறை (Issue Department), வங்கித் துறை (Banking Department) என இரண்டு துறைகளாகப் பிரிக்கப்பட்டது. வெளியீட்டுத் துறை காகிதப் பணம் வெளியிடும் பணியைக் கவனித்தது. 140 இலட்சம் பவுன் மதிப்புள்ள காகிதப் பணத்தைப் பத்திரங்களை மட்டும் ஈடாக வைத்துக்கொண்டு வெளியிடச் சட்டம் அனுமதி வழங்கியது. அதற்குமேல் வெளியிடுகின்ற காகிதப் பணத்திற்குப் பொன்னை ஈடாக இருப்புவைக்க வேண்டுமென்று சட்டம் வரையறுத்தது. வங்கித்துறை அன்றாட வங்கிப் பணிகளான கொடுக்கல் வாங்கலைக் கவனிக்கும்.

இருப்புத் தங்கத்தையும் வெளியிட்டுள்ள காகிதப் பணத்தின் மதிப்பையும் குறித்து, வாரந்தோறும் இங்கிலாந்து வங்கி ஓர் அறிக்கையை வெளியிட்டது.

1844ஆம் ஆண்டுச் சட்டத்தின் நோக்கத்தின்படி சிறிது சிறிதாகக் காகிதப் பணத்தை வெளியிடும் உரிமை இங்கிலாந்து வங்கிக்கு வந்தது. 1921ஆம் ஆண்டில் பத்திரங்களை ஈடாக வைத்துக்கொண்டு 1875 இலட்சம் பவுன் மதிப்புள்ள காகிதப் பணத்தை வெளியிடும் உரிமை இங்கிலாந்து வங்கிக்குக் கிடைத்தது. அரசின் நிதிக்கொள்கையை உருவாக்குவதிலும் இதற்குப் பங்கிருந்தது.

முதல் உலகப் போர்க்காலத்திலும், போருக்குப் பின்னரும், இரண்டாம் உலகப் போர்க்காலத்திலும் தேவையை ஒட்டி, இங்கிலாந்து வங்கி பலவகையான மாற்றங்களைப் பெற்று வளர்ந்தது. 1946ஆம் ஆண்டு மார்ச்சு முதல் நாள் தொழிற் கட்சி அரசால், இங்கிலாந்து வங்கி நாட்டுடைமையாக்கப் பட்டது.

## அமைப்பு

இங்கிலாந்து வங்கியை நாட்டுடைமையாக்குகின்றவரை, அது பங்குதாரர்கள் வங்கியாகவே இருந்தது. வங்கியின் நிருவாகத்தில் அரசுக்கு எந்த வகையான பங்கும் இல்லை. ஆனால், அரசின் கருவூலத்தோடு இங்கிலாந்து வங்கி இணைந்து பணிபுரிந்தது. அரசின் கொள்கைகளைச் செயற்படுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. அரசின் கொள்கைகளை உருவாக்கத் தேவையான ஆலோசனை கூறியது. வங்கியின் நிருவாகம் ஒரு மன்றத்தின் (Court) கையிலிருந்தது.

நிருவாக மன்றத்தில் ஓர் ஆளுநர் (Governor), ஒரு துணை ஆளுநர், 24 இயக்குநர்கள் இருந்தனர். எல்லாரும் ஓராண்டுக் காலத்திற்குப் பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் மறுபடியும் தேர்தலுக்கு நிற்கும் உரிமை பெற்றிருந் தனர். ஆளுநர் இரண்டு ஆண்டுக் காலத்திற்கு மட்டுமே பணிபுரிவாரென்று ஒரு மரபு ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இம் மரபுக்கு விதிவிலக்காக மான்டேகு நார்மன் (Montagu Norman) 1920 முதல் பல ஆண்டுகள் ஆளுநராகப் பணிபுரிந்தார்.

1946ஆம் ஆண்டு மார்ச்சு முதல் தேதியிலிருந்து இங்கிலாந்து வங்கிச் சட்டத்தின்படி இங்கிலாந்து வங்கி நாட்டுடைமையான

பின்னர், முழுவதும் அரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டது. இருந்தாலும், இங்கிலாந்து வங்கியின் அமைப்பில் பெரிய மாற்றம் எதுவும் நிகழவில்லை. பங்குதாரர்களுக்குப் பங்குத் தொகை முழுவதும் அரசின் உறுதிபெற்ற பங்குப் பத்திரங்களாக விளங்கப் பெற்றன. ஒவ்வொரு பங்குதாரரும் 100 பவுன் மூல மதிப்புள்ள பங்குக்கு 3 சதவித வட்டியுள்ள 400 பவுன் மதிப்புள்ள பத்திரங்களைப் பெற்றார். இந்தப் பத்திரங்களுக்கு இருபது ஆண்டுகள் கழித்து 1966ஆம் ஆண்டில் பணம் கிடைக்குமென்று கூறப்பட்டது.

வங்கி இப்பொழுதும் சுதந்தரமாகச் செயல்படலாம். இயக்குநர் மன்றத்தில் (Court of Directors) சில மாற்றங்களைச் செய்தனர். 24ஆக இருந்த இயக்குநர்களின் எண்ணிக்கை 16ஆகக் குறைக்கப்பட்டது. இவர்களைத் தவிர, ஓர் ஆளுநரும், ஒரு துணை ஆளுநரும் இருக்கின்றனர். இயக்குநர்கள் நான்கு ஆண்டுக் காலத்திற்குப் பதவியிலிருப்பார்கள். தொடக்கத்தில் இயக்குநர்கள் ஓராண்டு முதல் நான்காண்டுகள் வரை வேறுபட்ட காலத்திற்கும் பதவியில் நியமிக்கப்பட்டனர். இப்பொழுது ஆண்டுதோறும் நான்கில் ஒரு பங்கு இயக்குநர்கள் பதவியில் இருந்து வெளியேற, புதிய இயக்குநர்கள் பதவிக்கு வருகின்றனர். இயக்குநரும் துணை இயக்குநரும் ஐந்து ஆண்டுக் காலத்திற்குப் பதவியில் இருக்கின்றனர்.

வங்கிச் சட்டப்படி இங்கிலாந்து வங்கியை நெறிப்படுத்த மிகுதியான அளவிற்கு அதிகாரம் கருவூலத்திற்குத் தரப்பெற்றுள்ளது. கருவூலம், எப்படி இங்கிலாந்து வங்கி செயல்பட வேண்டுமென்ற முறைகளை வகுத்துத் தருகின்றது.

1946ஆம் ஆண்டுச் சட்டப்படி மற்றைய வங்கிகளைக் கட்டுப்படுத்தப் போதுமான அதிகாரம் இங்கிலாந்து வங்கிக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இங்கிலாந்து வங்கி, மற்ற வங்கிகளிடமிருந்து தேவையான விவரங்களைப் பெறலாம். வங்கிகள் இப்படி நடைபெற வேண்டுமென அறிவுறுத்தலாம். ஆனால், இவற்றை எல்லாம் கருவூலத்தின் ஒப்புதலோடுதான் செய்ய வேண்டும்.

## பணிகள்

இங்கிலாந்து வங்கி அமைப்பின் அச்சாணியாக, இங்கிலாந்து வங்கி இருக்கின்றது. தொடக்க காலத்திலிருந்தே அரசின் சாசனங்களின் மூலம் உரிமைகளையும், அதிகாரங்

களையும் பெற்று வளர்ந்ததால் அது ஈடு இணையற்று வளர்ந்திருக்கின்றது.

இங்கிலாந்து வங்கி, காகிதப் பணம் வெளியிடுவதில் முற்றுரிமை பெற்று விளங்குகின்றது. 1844ஆம் ஆண்டின் வங்கிச் சாசனச் சட்டம், காகிதப் பணம் வெளியிடுவதை நெறிப்படுத்தியது. பத்திரங்களைப் பின்னணியாகக் கொண்டு காகிதப்பணம் வெளியிடுவதை 'நம்பிக்கை வெளியீடு' (Fiduciary Issue) என்று கூறுகின்றார்கள். 1939ஆம் ஆண்டின் 'நாணய, வங்கிக் காகிதப் பணச் சட்டம்' (Currency and Bank Notes Act) நம்பிக்கை வரம்பை 300 மில்லியன் பவுனாக்கியது. ஆனால், போர்க்காலத்தில் இந்தத் தொகை வேகமாகக் கூடியது. அவசரக் காலச் சட்டங்கள் இதற்கு வழிவகுத்தன. 1953ஆம் ஆண்டில் நம்பிக்கை வரம்பை 1,575 மில்லியனாக உயர்த்தச் சட்டம் இயற்றினர். பண வெளியீட்டில் கிடைக்கின்ற ஆதாயத்தை 'மாற்றுச் சமன்பாட்டுக் கணக்கிற்குக்' (Exchange Equalisation Account) கொண்டு வந்தனர். இப்பொழுது 4,00,000 பவுன் மதிப்புள்ள தங்கம்தான் இங்கிலாந்து வங்கியிடம் பண வெளியீட்டிற்கு ஈடாக இருக்கின்றதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கிலாந்து வங்கி, அரசின் வங்கியாகப் பணியாற்றுகின்றது; அரசுக்காகப் பணம் பெறுதல், பணம் செலுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றது. நாடு முழுவதும் வரி வசூலாகப் பெறுகின்ற பணம் இங்கிலாந்து வங்கியின் கிளைகளின் மூலம் நிதியமைச்சகத்திற்கு அனுப்பப்படுகின்றது. அரசின் புதிய கடன் பத்திரங்களை நிருவகிக்கின்ற பொறுப்பும் இங்கிலாந்து வங்கியிடமே பெறுகின்றது.

இங்கிலாந்து வங்கி, வங்கிகளின் வங்கியாகவும் திறமையாகப் பணியாற்றுகின்றது. உலகின் நிதிநிலையங்களில் ஒன்றாக இலண்டனும் இருப்பதால் இங்கிலாந்திலுள்ள வங்கிகள் மட்டும் அன்றிப் பல வெளிநாட்டு வங்கிகளும் இங்கிலாந்து வங்கியிடம் ஓரளவு வைப்புக் கணக்கில் பணம் வைத்திருக்கின்றன. வங்கிகளுக்கிடையில் பணம் கொடுக்கல் வாங்கல் இருப்பதைத் தீர்த்துக்கொள்ள இங்கிலாந்து வங்கி துணை செய்கின்றது. இது மற்றைய வங்கிகளோடு பண அங்காடியில் போட்டியிடுவதில்லை. இதனிடமிருக்கும் வைப்புகளுக்கு இது வட்டி தருவதில்லை. வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்கின்ற கடனுக்கு அதிக வட்டி வாங்குகின்றது. இது வங்கிகளின் இறுதிநிலைக் கடன் ஈவோனாகவும் பணி புரிகின்றது.

அரசின் பண, நிதிக் கொள்கைகளை உருவாக்குவதில் துணை நிற்கின்றது. இது நாட்டின் இருப்புகளுக்குப் பாதுகாவலனாகப் பணிபுரிகின்றது. அந்நியச் செலாவணி மாற்றுக் கொள்கையை உருவாக்கிச் செயல்படுத்துவதில் இது பெரும்பங்கு பெறுகின்றது. பணமதிப்பை நிலைநாட்டுகின்ற பொறுப்பும் இதனிடம்தான் இருக்கின்றது.

இங்கிலாந்து வங்கி, பொதுமக்களுக்காகச் சில சாதாரண வங்கிப் பணிகளையும் மேற்கொள்கின்றது. யார் வேண்டுமானா லும் இங்கிலாந்து வங்கியில் கணக்கு வைத்துக்கொள்ளலாம். பணத்தை அனுப்ப, உண்டியல்களைக் கழிவு செய்யவேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கின்றது.

இங்கிலாந்து வங்கி தனது பணிகளை எல்லாம் திறம்படச் செய்வதற்குப் போதுமான அதிகாரங்களைப் பெற்றிருக்கின்றது. வணிக வங்கிகளை இரண்டு வரையறைகட்கு உட்பட்டுத்தான் இங்கிலாந்து வங்கி கட்டுப்படுத்தலாம். முதலாவதாக, கருவூலத் தின் ஆதரவோடு மட்டுமே கட்டுப்பாட்டு அதிகாரங்களைப் பயன்படுத்தலாம். இரண்டாவதாக, வணிக வங்கிகளின் முழு வாணிபத்தையோ, ஒரு வங்கியின் மொத்த வாணிபத்தையோ கட்டுப்படுத்தலாமே தவிர, எந்த ஒரு தனி வாடிக்கையாளரோடு கொண்ட தனிப்பட்ட வாணிபத் தொடர்பைக் கட்டுப்படுத்த முடியாது.

## கடன் கட்டுப்பாட்டு முறைகள்

வங்கிகளின் கடனளவைக் கட்டுப்படுத்த இங்கிலாந்து வங்கி கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகளையும், கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளையும் கையாள்கின்றது. கடனளவு அங்காடி கட்டுப்பாட்டு முறைகளான வங்கி வீதமும், வெளி நடவடிக்கைகளும் விரிவாகப் பயன்படுத்தப்படுகின்றன. இயக்குநர் குழு ஒவ்வொரு வியாழக்கிழமையும் இங்கிலாந்து வங்கி எந்த வீதத்தில் முதல்நிலை மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்யுமென்பதை அறிவிக்கின்றது.

வணிக வங்கிகள் பொதுவாக வைப்புக்குரிய வட்டிவீதத்தை வங்கி வீதத்தைவிட இரண்டு சதவீதம் குறைவாகவும், கடனுக்கு ½ சதவீதம் அதிகமாகவும் நிருணயிக்கின்றன. 1932ஆம் ஆண்டு முதல் 1951ஆம் ஆண்டுவரை 2 சதவீதமாக இருந்த வங்கி வீதம் 1951ஆம் ஆண்டில் 2½ சதவீதமாக

உயர்த்தப்பட்டது. 1957ஆம் ஆண்டில் ஏழு சதவீதமாக உயர்ந்த வங்கி வீதம் 1963ஆம் ஆண்டில் $4\frac{1}{2}$ சதவீதமாகக் குறைக்கப்பட்டது. வங்கி வீத முறைக்குத் துணையாக வெளி அங்காடி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

இங்கிலாந்து வங்கி, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தச் 'சிறப்பு வைப்புகள்' (Special Deposits) முறையைப் புதிதாகப் புகுத்தியிருக்கின்றது. இதன்படி, வணிக வங்கிகள் இங்கிலாந்து வங்கியிடம் வழக்கமாக வைத்திருக்கும் எட்டுச் சதவீத ரொக்கத்திற்கு மேல் பணத்தை வைப்பாக வைக்கலாம். இதற்கு 1/16 சத வீதம் வட்டி தரப்படுகின்றது இங்கிலாந்து வங்கி அவ்வப்போது அறிவுரைகள் கூறி வணிக வங்கிகளின் கடனை நெறிப்படுத்திக் கட்டுப்படுத்துகின்றது. இங்கிலாந்தில் இங்கிலாந்து வங்கிக்கும் வணிக வங்கிகளுக்கும் இடையில் நல்ல தொடர்பு இருப்பதால், இங்கிலாந்து வங்கியால் அவற்றை எளிதாகக் கட்டுப்படுத்த முடிகின்றது.

## துணை நூல்கள்


1. Sri J. Claphan, 'The Bank of England'.
2. J. Sykes, 'Amalgamation Movement in English Banking'.
3. J. E. Wadsworth, 'Banking Funds and Government Policy in Britain'.
4. R. S. Sayers, 'Modern Banking'.
5. G. Crowther, 'An Outline of Money'.
6. B. H. Beckhart, 'Banking Systems'.

# 19. அமெரிக்கக் கூட்டரசு ரிசர்வ் முறை

(The Federal Reserve System of the U. S. A.)

## வரலாற்றுப் பின்புலம்

அமெரிக்கா விடுதலை பெற்றவுடன் நிதி நிலையைச் சீர் திருத்த அரசு நடவடிக்கைகள் எடுத்தது. கருவூலச் செயலாளரான (Secretary of the Treasury) ஹாமில்டன் (Hamilton), இங்கி லாந்து வங்கியைப்போல, ஆனால் சில மாறுதல்களுடன் ஒரு தேசிய வங்கியை ஏற்படுத்தி இருபதாண்டுகள் நடத்த 1791ஆம் ஆண்டில் சாசனம் அளித்தார். இதன்படி ஐக்கிய மாநிலங் களின் முதல் வங்கி (First Bank of United States) நிறுவப் பட்டது. இந்த வங்கி 1811ஆம் ஆண்டுவரை சிறப்பாகச் செயல்பட்டது. ஆனால், இதனைத் தொடர்ந்து இயங்கச் செய்வதற்கு எதிர்ப்பு இருந்தமையால் இதற்குரிய சாசனம் புதுப்பிக்கப்படவில்லை.

காகிதப் பணத்தின் அளவு மிகவும் கூடியதால், அதனை நெறிப்படுத்த 1816ஆம் ஆண்டில் இரண்டாவது ஐக்கிய மாநிலங்களின் வங்கியைத் தொடங்கி 20 ஆண்டுகள் நடத்தச் சாசனம் அளித்தனர். முதல் வங்கியைப் போன்றே இரண்டாம் வங்கியின் அமைப்பு முறையும் இருந்தது. அரசின் கொள்கையின் காரணமாக 1836ஆம் ஆண்டில் அதன் சாசனக் காலம் முடிவதற்கு முன்னரே இரண்டாம் மைய வங்கி வலுவிழந்தது.

## கூட்டரசு ரிசர்வ் முறை

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே ஒரு மைய வங்கியை அமைக்க அமெரிக்கா முயன்ற போதிலும், 1913ஆம் ஆண்டின் கூட்டரசு ரிசர்வ் முறைச் சட்டத்தின் (Federal Reserve System Act) மூலமாகத்தான் ஒரு தனிவகை மைய வங்கி முறையை உருவாக்கியுள்ளனர். 1913ஆம் ஆண்டுச் சட்டம் பின்காணும் நடைமுறைகளை ஏற்படுத்தியது:

முதலாவதாக, நாட்டைப் பன்னிரண்டு மாவட்டங்களாகப் பிரித்தனர். ஒவ்வொரு மாவட்டத்தின் ஒரு முக்கிய நகரிலும் கூட்டரசு ரிசர்வ் வங்கி (Federal Reserve Bank) ஒன்றை அமைத்தனர். இப்படிப் பன்னிரண்டு மைய வங்கிகளை ஏற்படுத்திய தற்குச் சில காரணங்கள் இருந்தன. அமெரிக்காவில் தனி வங்கிமுறை வளர்ந்திருந்தது. இதனால் அங்கு ஏராளமான வங்கிகள் இருந்தன. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஏற்றாற் போல் வங்கிக் கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்று கருதினர். அமெரிக்கர்கள் பணச்சக்தி ஓரிடத்திலேயே குவிவதை விரும்பவில்லை. ஆதலால், ஒரு மைய வங்கிக்குப் பதிலாகப் பன்னிரண்டு வங்கிகளை நிறுவினர்.

இரண்டாவதாக, ஒவ்வொரு தேசிய வங்கியும் கூட்டரசு ரிசர்வ் வங்கியின் தனது மூலதனத்தில் ஆறு சதவீதத்தை வைப்பு நிதியாக அளித்து உறுப்பினராகவேண்டும். மற்றைய வங்கிகள் விரும்பினால் உறுப்பினராகலாம்.

மூன்றாவதாக, ஒன்பது உறுப்பினர்களைக்கொண்ட குழு ஒவ்வொரு மாவட்ட வங்கியையும் நிருவகிக்கும். ஒன்பது உறுப்பினர்களில் ஆறுபேர்களை உறுப்பினர் வங்கிகள் தேர்ந்தெடுக்கும். மூன்று பேர்களைக் கூட்டரசு ரிசர்வ் கழகம் (Federal Reserve Board) நியமிக்கும்.

நான்காவதாக, இந்த முறையை முழுக்கச் செயல்படுத்த எட்டு உறுப்பினர்களைக்கொண்ட ஒரு கூட்டரசு ரிசர்வ் கழகம் நிறுவப்பட்டது. கருவூலச் செயலாளரும், செலாவணிமுறைத் தணிக்கையாளரும் இந்தக் கழகத்தின் உறுப்பினர்களாக இருப்பார்கள். மீதி ஆறு பேர்களைக் குடியரசு தலைவர் நியமிப்பார்.

ஐந்தாவதாக, இந்தக் கழகத்திற்கு ஆலோசனை கூற ஒவ்வொரு மாவட்ட வங்கியிலிருந்தும் ஒரு சார்பாளராகப் பன்னிரண்டு பேரைக்கொண்ட கூட்டரசு ஆலோசனைக் குழுவை (Federal Advisory Council) அமைத்தனர்.

ஆறாவதாக, ரிசர்வ் வங்கிகள், அரசின் வங்கிகளாகச் செயல்பட்டதால் சுதந்தரக் கருவூலமுறை கைவிடப்பெற்றது.

## அமைப்பு

இன்றுள்ள கூட்டரசு ரிசர்வ் முறையின் அமைப்பை விளக்கலாம்.

12 கூட்டரசு ரிசர்வ் வங்கிகளின் பணிகளையும் இணைக்க வாஷிங்டனிலுள்ள தலைமையகத்தில் ஆளுநர் குழு (Board of Governors) ஒன்று செயல்படுகின்றது. இதுதான் அமெரிக்க மைய வங்கியின் நிருவாகக் குழுவாகும். இதில் ஏழு உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களை அமெரிக்கக் குடியரசு தலைவர் சட்டமன்றத்தின் (Senate) ஒப்புதலின்மீது 14 ஆண்டுக் காலத்திற்கு நியமிக்கின்றார். இரண்டு ஆண்டுக் காலத்தில் ஒன்றுக்கு மேற்படாத இயக்குநர்கள் ஓய்வுபெறும் வகையில் பதவிக் காலத்தை நிருணயித்துள்ளனர். இதனால் நிருவாகத்தில் ஒரு தொடர்பை ஏற்படுத்த இயல்கின்றது. எப்பொழுதும் ஏழு ஆளுநர்களில் ஆறு பேர் நிருவாகப் பயிற்சியுடையவர்களாகவே இருப்பார்கள். ஒருவரின் பதவிக்காலம் முடிந்த பின்னர், அவரை மறுபடியும் இயக்குநராக நியமிப்பதில்லை. ஆளுநர் குழுவில் ஒருவரைத் தலைவராகவும், மற்றொருவரைத் துணைத் தலைவராகவும் அமெரிக்கக் குடியரசு தலைவர் நியமிக்கின்றார். ஆளுநர்கள் ஆண்டு ஊதியம் பெறுகின்றனர்.

உறுப்பினர்களைத் தெரிந்தெடுக்கின்றபொழுது நிதி, தொழில், வேளாண்மை, வாணிபம் ஆகிய பல்வேறு துறைகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும்படியும், நாட்டின் எல்லாப் பகுதிகளையும் திருப்திசெய்யும்படியும், உறுப்பினர்களைத் தெளிவுசெய்ய முயல்கின்றனர். எந்தக் கூட்டரசு ரிசர்வ் மாவட்டத்திலிருந்தும் இரண்டு ஆளுநர்களைக் தெரிந்தெடுக்காமல் பார்த்துக்கொள்கின்றனர்.

ஒவ்வொரு கூட்டரசு ரிசர்வ் வங்கியையும் ஓர் இயக்குநர் குழு கண்காணித்து நடத்துகின்றது. இதில் ஒன்பது உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் மூன்றாண்டு காலத்திற்குப் பதவியிலிருக்கின்றனர். இந்த இயக்குநர்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் மூன்று இயக்குநர்களை உறுப்பினர் வங்கிகள் தேர்ந்தெடுக்கின்றன. இரண்டாவது மூன்று இயக்குநர்கள், அந்த மாவட்டத்தின் வாணிபத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பிரதிநிதிகளாக இருக்கின்றனர். மூன்றாவது பிரிவான மூன்று இயக்குநர்கள் கூட்டுறவு ரிசர்வ் முறையின் ஆளுநர் குழுவால் நியமிக்கப்படுகின்றனர். இயக்குநர் குழுவால் ஒரு தலைவர் நியமிக்கப்படுகின்றார். இவரது நியமனத்தை ஆளுநர் குழு ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்தத் தலைவர், கூட்டரசு ரிசர்வ் வங்கியின் தலைமை நிருவாக அலுவலராக (Chief Executive Officer) ஐந்தாண்டுக் காலத்திற்குப் பணிபுரிகின்றார்.

**உறுப்பினர்கள்:** எல்லாத் தேசிய வங்கிகளும் கூட்டரசு ரிசர்வ் முறையில் உறுப்பினர்களாகச் சேரவேண்டியது அவசிய மாகும். மற்றைய மாநில வங்கிகளும் டிரஸ்ட் நிறுவனங்களும் (Trust Companies) சில நியதிகளை நிறைவேற்றினால் உறுப் பினர்களாகலாம். தனியார் வங்கிகள் உறுப்பினர்களாக முடியாது. ஆளுநர் குழு ஒரு வங்கியை உறுப்பினராகச் சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் அதன் நிதி நிலைமை, நிருவாக அமைப்பு முறை, அதன் பணிகள் ஆகியவை எல்லாம் சட்டப்படி அமைந்திருக்கின்றனவாவென்பதைக் கவனித்தே சேர்த்துக் கொள்கின்றது. குறிப்பிட்ட அளவு பங்கு மூலதனம் செலுத்தி வங்கிகள் உறுப்பினர்களாகின்றன.

**கூட்டரசு வைப்புக் காப்பீட்டு முறை (Federal Deposit Insurance System)**

1933ஆம் ஆண்டில் ஜூன் 16ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட சட்டம் கூட்டரசு வைப்புக் காப்பீட்டு முறையைத் தொடங்கி யிருக்கின்றது. 1934ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து ஒவ்வொரு தனிப்பட்ட கணக்கையும் 2,500 டாலர்வரை காப்பீடு செய்கின்ற முறை தோற்றுவிக்கப்பட்டது. முதலில் இது தாற்காலிகமாக ஓராண்டுக்கு மட்டும் பின்பற்றப்பட்டது. 1935ஆம் ஆண்டின் வங்கிச் சட்டம் காப்பீடு செய்கின்ற தனிக் கணக்கின் தொகையை 5,000 டாலராக உயர்த்தியது. 1950ஆம் ஆண்டில் செப்டம்பர்த் திங்கள் இருபத்தோராம் நாளில் கூட்டரசு வைப்புக் காப்பீட்டுச் சட்டத்தை நிறை வேற்றினர். இதன்படி காப்பீடு செய்துகொள்ளக்கூடிய தொகையை 10,000 டாலராக உயர்த்தியது. இதன்படி 10,000 டாலர்வரை இருக்கின்ற வைப்புக் கணக்குப் பாதுகாப்பு இருக்கின்றது.

1933ஆம் ஆண்டின் வங்கிச் சட்டம் இந்தத் திட்டத்தை நிருவகிக்கக் கூட்டரசு வைப்புக் காப்பீட்டுக் கழகத்தை (Federal Deposit Insurance Corporation) உருவாக்கியது. இக் கழகத்தை மூன்று இயக்குநர்களைக்கொண்ட குழு நிருவகிக்கின்றது. இதனுடைய உறுப்பினர்கள் ஆறு ஆண்டுக் காலத்திற்குப் பதவியிலிருக்கின்றனர்.

**கூட்டரசு வெளிச் சந்தைக் குழு (Federal Open Market Committee)**

பன்னிரண்டு கூட்டரசு ரிசர்வ் வங்கிகளும் தனித்தனியாக வெளிச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இவற்றின்

நடவடிக்கைகளை எல்லாம் இணைக்க வேண்டியதன் தேவை உணரப்பட்டது. இதன் தொடக்கமாக 1922ஆம் ஆண்டில் ரிசர்வ் வங்கிகளின் நான்கு ஆளுநர்களைக்கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. இதற்கு வெளிச்சந்தை முதலீட்டுக் குழு (Open Market Investment Committee) என்று பெயர். 1930ஆம் ஆண்டில், கூட்டரசு ரிசர்வ் வங்கிகளின் எல்லா இயக்குநர்களையும் சேர்த்து வெளிச் சந்தைக் கொள்கை மாநாடு (Open Market Policy Conference) நடத்தினர்.

1933ஆம் ஆண்டின் வங்கிச் சட்டப்படி கூட்டரசு வெளிச் சந்தைக் குழு (Federal Open Market Committee) ஒன்றை அமைத்தனர். இதில் ஒவ்வொரு கூட்டரசு ரிசர்வ் வங்கியின் சார்பாளரும் இக் குழுவில் இடம்பெற்றார். 1935ஆம் ஆண்டின் வங்கிகளின் சட்டம் இக் குழுவில் ஆளுநர்கள் குழுவைச் சேர்த்துக் கொண்டு ரிசர்வ் வங்கிகளின் சார்பாளர்கள் எண்ணிக்கையை ஐந்தாகக் குறைத்தது.

## பணிகள்

கூட்டரசு ரிசர்வ் வங்கிகள் ஆறு முக்கியமான பணிகளை மேற்கொள்கின்றன. அவை:

1 உறுப்பினர் வங்கிகளின் சட்டமுறை இருப்புகளையும் தங்கச் சான்றிதழ்களின் இருப்புகளையும் வைத்திருக்கின்றன.

2. இருப்புகளின்மீது உறுப்பினர்களுக்குக் கடன் தருகின்றன.

3. வெளிச்சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

4. கூட்டரசு ரிசர்வின் காகிதப் பணத்தை அளிக்கின்ற மைய அளிப்பு நிறுவனங்களாகப் பணிபுரிகின்றன.

5. காசோலைகளின் தீர்வகங்களாகவும் பணம் அனுப்புகின்ற நிறுவனங்களாகவும் செயல்படுகின்றன.

6. அமெரிக்க அரசுக்காக நிதித்துறைப் பணிகளை மேற்கொள்கின்றன.

### வங்கிக் காப்புகள்

எல்லா உறுப்பினர் வங்கிகளும் ரிசர்வ் வங்கிகளிடம் தங்களுடைய கணக்கில் வைப்புத் தொகையை வைத்திருக்கின்றன. ஒவ்வொரு வங்கியும் குறைந்த அளவிலும் உச்ச அளவிலும்

எவ்வளவு தொகை வைத்திருக்க வேண்டுமென்பதைச் சட்டம் வரையறுக்கின்றது. அதுதவிர, கூட்டரசு ரிசர்வ் வங்கிகள் அவற்றின் வைப்புத் தொகையிலும் கூட்டரசு ரிசர்வ் காகிதப் பொறுப்புகளிலும் சட்டப்படி 25 சதவீதம் தங்கச் சான்றிதழ்களாக வைத்திருக்கவேண்டும். பொதுவாக அமெரிக்க மைய வங்கிகளிடம் சட்டப்படி இருக்கவேண்டியதைவிட அதிகமாகவே இருப்புப் பணம் இருக்கின்றது.

### கழிவு செய்தலும் முன்பணம் தருதலும்

ரிசர்வ் வங்கிகளிடமிருந்து உறுப்பினர் வங்கிகள் தேவைக்கும் நெருக்கடி காலங்களிலும் பணம் பெறுகின்றன. வங்கிகள் தாங்கள் கழிவுசெய்து வாடிக்கையாளர்களுக்குப் பணம் கொடுத்த கடன் கருவிகளை மறுகழிவு செய்து பணம் பெறுகின்றன. வங்கிகள் தங்கள்மீதே எழுதிய வாக்குறுதிப் பத்திரங்களை ரிசர்வ் வங்கியிடம் கொடுத்து அவற்றின்மீது முன் பணம் பெறவும் செய்யலாம். இது கடன் வாங்குவதைப் போன்ற பணியேயாகும். மறுகழிவு செய்கின்ற பத்திரங்கள் 90 நாள்களுக்குள் பணம் பெறக்கூடியனவாக இருக்கவேண்டும். முன்பணம் பெற வங்கிகள் தங்கள்மீதே எழுதித் தருகின்ற வாக்குறுதிப் பத்திரங்களும் 90 நாள்களுக்குட்பட்ட காலத்திற்கு எழுதப்பெற்றதாக இருக்கவேண்டும். நடைமுறையிலுள்ள வட்டி வீதத்தைவிடக் கழிவு செய்கின்றவற்றிற்கு ½ சதவீதம் அதிக வட்டி விதிக்கப்படுகின்றது.

### வெளிச் சந்தை நடவடிக்கைகள்

கூட்டரசு ரிசர்வ் வங்கிகளின் வெளி அங்காடி நடவடிக்கைகளைக் கூட்டரசு வெளி அங்காடிக் குழு கவனிக்கின்றது. கூட்டரசு ரிசர்வ் வங்கிகளின் கடன் முறையின் மிகவும் முக்கியமான பகுதியாக வெளிச் சந்தை நடவடிக்கை அமைகின்றது. அமெரிக்க அரசின் பத்திரங்களை வெளி அங்காடியில் வாங்குவதன்மூலம் ரிசர்வ் வங்கிகள் பணச் சந்தைக்குத் தேவையான பணத்தை அளிக்கின்றன. அரசின் பத்திரங்களை விற்பதன் மூலம் பணச் சந்தையிலிருந்து பணத்தைப் பெறுகின்றன. நாட்டின் கடனளவைக் கூட்டவோ குறைக்கவோ இஃது ஒரு சக்திவாய்ந்த வழிமுறையாக இருக்கின்றது.

### பண வெளியீடு

நாட்டில் மிகுதியாகப் பணம் தேவைப்படுகின்றபொழுது வங்கிகள் ரிசர்வ் வங்கிகளிடமிருந்து தங்களுடைய வைப்புகளைப்

பெறுகின்றன. வங்கிகள் எச்சமாக வைப்புகளை வைத்திருந்தால், அவற்றை எடுத்துப் பயன்படுத்தலாம். அப்படியில்லையென்றால், அவை கடன் வாங்குவது தேவையாகின்றது. நாட்டில் பணம், தேவையைவிட மிகுதியாக இருந்தால், பொது மக்கள் அவற்றை வங்கிகளில் செலுத்துவார்கள். வங்கிகள் ரிசர்வ் வங்கியிலுள்ள தங்களுடைய வைப்புகளைப் பெருக்க இந்தப் பணத்தைப் பயன்படுத்தும்.

நாட்டில் புழங்குகின்ற பணத்தில் ஏறத்தாழ 85 சதவீதம் ரிசர்வ் வங்கிகள் வெளியிட்ட பணமென்று குறிப்பிடத்தக்க தாகும். ரிசர்வ் வங்கி வெளியிடுகின்ற பணத்திற்கு 25 சத வீதம் தங்கச் சான்றிதழ்கள் ஈடாக இருக்கவேண்டும். இதனால் ரிசர்வ் வங்கிகளிடம் இருக்கின்ற தங்கச் சான்றிதழ் களைப்போன்று நான்கு மடங்குப் பணம் புழக்கத்திலிருக்கலாம்.

ஆளுநர்குழு விரும்பினால் காப்பீட்டுத் தேவையைக் குறைத்துக் காகிதப் பணத்தை நான்கு மடங்குக்கு மேலும் மிகுதிப்படுத்தலாம். ஆனால், காப்பீட்டுத் தேவை அளவை விடக் குறைவதற்கு வளர்வீதத்தில் வரி செலுத்தவேண்டும். காப்பீட்டளவு 20 சதவீதம்வரை குறைந்தால், ஆண்டிற்கு ஒரு சதவீதத்திற்குமேற் போகாமல் வரி செலுத்தவேண்டும். காப்பளவு 20 சதவீதத்திற்கும் குறைந்தால் $1\frac{1}{2}$ சதவீதம் முதல் $2\frac{1}{2}$ சதவீதம்வரை வரி செலுத்தவேண்டும். கூட்டரசு ரிசர்வ் வங்கிகள் இந்த வரியைச் செலுத்தவேண்டும். ஆனால், இது கழிவு வீதத்தில் (Discount rate) சேர்த்துக்கொள்ளப்படு மென்பது கவனிக்கத்தக்கதாகும்.

ரிசர்வ் வங்கிகள் வெளியிடுகின்ற பணத்திற்கு நூறு சத வீதம் தங்கச் சான்றிதழ்களும், தகுதியான கடன் பத்திரங் களும் அரசு பத்திரங்களும் காப்பீடாக இருக்கின்றனவென்பது குறிப்பிடத்தக்கதாகும். கூட்டரசு ரிசர்வ் வங்கிப் பணம் மிகவும் நெகிழ்ச்சி உடையதாக அமைந்திருக்கின்றது. நாட்டின் தேவையை ஒட்டி ரிசர்வ் வங்கிகள் இவற்றைக் கூட்டவோ குறைக்கவோ செய்கின்றன.

### அரசுக்காக நிதிப் பணிகள்

ரிசர்வ் வங்கிகள் அரசுக்காகப் பல்வேறு வகையான நிதிப் பணிகளை மேற்கொள்கின்றன. கூட்டரசு ரிசர்வ் சட்டப்படி, கருவூலச் செயலாளரின் (Secretary of the Treasury) வேண்டு

தலின்படி ரிசர்வ் வங்கிகள் அரசுக்காக வரிகளைப் பெறுதல், காசோலைகளின்மூலம் பிரித்துக் கொடுத்தல், அரசுக்காக நிதிப் பதிலாளராகச் செயல்படுதல் ஆகிய பணிகளைச் செய்கின்றன. அரசின் கருவூலத்தின் பணிகளை ரிசர்வ் வங்கிகளின் கிளைகள் மேற்கொள்கின்றன.

ரிசர்வ் வங்கியிலுள்ள கருவூலத்தின் வைப்புக் கணக்குகளில் வருமான வரிகள், சுங்க வரிகள், பல்வேறு வகையான உள்நாட்டு வருவாய்கள், அஞ்சலக வருவாய்கள், அரசின் பத்திரங்களை விற்பதால் கிடைப்பவை, தங்கப் பத்திரங்கள் ஆகியவை இடம்பெறுகின்றன. கருவூலம் ரிசர்வ் வங்கிகளின் 36 கிளைகளிலும் பெறுகின்ற வகையில் பல்வேறு வகையான காரணங்களுக்காகக் காசோலைகளை வழங்குகின்றது.

ரிசர்வ் வங்கிகள் கருவூலத்திற்குச் செய்கின்ற முக்கியமான பணிகளுள் ஒன்று அரசின் பத்திரங்களை விற்பனை செய்வதாகும். பெருமந்தக் காலத்திலும், போர்க் காலத்திலும் இப் பணி மிகவும் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்தது. ரிசர்வ் வங்கிகள் புதிய கடன் பத்திரங்கள் வெளியிடப் பெறுகின்றபொழுதெல்லாம் முன்னதாகவே அறிவித்து விற்பனை செய்கின்றன. அரசு பத்திரங்களுக்கு வட்டி செலுத்துதல், உரிய காலத்தில் பணம் கொடுத்தல் ஆகியவற்றையும் கவனிக்கின்றன. நியூயார்க்கிலுள்ள ரிசர்வ் வங்கி அமெரிக்க அரசின் சார்பில் தங்கம், அந்நியச் செலாவணி ஆகியவற்றை வாங்கி விற்கின்ற பணிகளைச் செய்கின்றது.

## கடன் கட்டுப்பாடு

தொடக்கக் காலத்தில் ரிசர்வ் வங்கிகள் கழிவுவீதம், வெளி அங்காடி நடவடிக்கைகள் ஆகிய இரண்டு முறைகளைப் பின்பற்றிக் கடனைக் கட்டுப்படுத்தியது. கழிவு வீதத்தைக் கூட்டி வணிக வங்கிகள் கடனை மிகுதிப்படுத்துவதைத் தடுத்தது. அரசின் பத்திரங்களை விற்பதன் மூலமாக உறுப்பினர் வங்கிகளின் இருப்பைக் குறைக்க முடிந்தது.

இப்பொழுது கடன் கட்டுப்பாட்டிற்கு மேலும் இரு முறைகள் பின்பற்றப்படுகின்றன. முதலாவதாக, பத்திரங்களை வாங்குவதற்கு வங்கிகள் பெறுகின்ற கடனைக் கட்டுப்படுத்துகிறனர். இரண்டாவதாக, காப்புத் தேவைகளை மாற்றுகின்ற அதிகாரத்தை ஆளுநர் குழு பயன்படுத்துகின்றது.

1951ஆம் ஆண்டு மார்ச்சு 14ஆம் தேதியில் ஆளுநர் குழு வணிக வங்கிகள், முதலீட்டு வங்கிகள், காப்பீட்டுக் கழகங்கள் ஆகியவற்றின் 12 சார்பாளர்களைக்கொண்ட 'தேசியத் தன் விருப்பக் கடன் கட்டுப்பாட்டுக் குழு' (National Voluntary Credit Restraint Committee) ஒன்றை அமைத்தனர். இந்தக் குழு ஏப்பிரல் மாதத்தில் 12 மண்டலக் குழுக்களை அமைத்துள்ளது. இக் குழுக்கள் வணிக வங்கிகளின் கடன் சிக்கலைக் கவனிக்கின்றன. ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களுக்கு நான்கு மண்டலக் குழுக்களும் முதலீட்டு வங்கிகளுக்காக நான்கு மண்டலக் குழுக்களும் அமைக்கப்பெற்றன. இந்தக் குழுக்கள் பணவீக்கப் போக்கைத் தடுக்கக் கடனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளைக் கவனிக்கின்றன.

அமெரிக்க மைய வங்கிகள் இதுவரை நாட்டுடைமையாக்கப்படவில்லை. ஆனால், அரசு அவற்றைச் சரியான வழிகளில் கட்டுப்படுத்துகின்றது.

## துணை நூல்கள்

1. W. Randolph, 'The Reserve Banks and Money Market'.
2. E. A. Goldenweiser, 'American Monetary Policy'.
3. R. S. Sayers, 'American Banking System'.
4. H. Parker Willis, 'The Federal System'.
5. B. H. Beckhart, 'Banking Systems'.

# 20. உலக நிதி, வங்கி நிறுவனங்கள்

## 1. உலகப் பணத் தொடர்புகள்

இரண்டு உலகப் போர்களுக்குமிடையில் பல நாடுகளில் பல் வேறு வகையான புதிய பணத் தொடர்பான சிக்கல்கள் எழுந்தன. பொன் திட்டம் கைவிடப்பட்டது. பணத்தின் மதிப்புக் குறைந்தது. அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் மிகுதியாயின. மாற்று வீதங்களில் அதிக ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டன. அயல்நாட்டுச் செலுத்துநிலைகள் செம்மை யாக அமையவில்லை. பொருளாதார நடவடிக்கைகளில் நிலை யற்ற போக்குக் காணப்பட்டது. இவற்றையெல்லாம் தீர்க்க உலக நாடுகளுக்கிடையில் பண ஒத்துழைப்புத் தேவையென்ற உணர்வு பிறந்தது.

உலக நாடுகளுக்கிடையில் நிதித்தொடர்பில் ஓர் ஒத் துழைப்பை ஏற்படுத்தச் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எடுத்துக்காட்டாக 'அந்நியச் செலாவணி சமநிலைக்கணக்கு' (Exchange Equalization Account), 'அட்லான்டிக் சாசனம்' (Atlantic Charter), 'ஐக்கிய நாடுகளின் அறிவிப்பு' (Declaration of the United Nations) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவை எல்லாம் சில நாடுகள் தந்நலத்தோடு இணைகின்ற முயற்சி களாக இருந்தனவேயொழிய உலகந்தழுவிய முயற்சிகளாக இருக்கவில்லை.

எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பன்னாட்டு நாண யத்தை உருவாக்குதல், நாணயமாற்று வீதத்தை நிலையாக நிருணயித்தல், உலக நெருக்கடி தோன்றுகின்றபொழுது கைகொடுத்து உதவும் உலக நிறுவனத்தைத் தோற்றுவித்தல் ஆகியவற்றின் தேவையை உணர்ந்து உலக நாடுகள் சிந்தித்தன. இந்தச் சிந்தனையின் விளைவாகப் 'பன்னாட்டுப் பண நிதி' (International Monetary Fund), 'புனரமைப்பு, முன்னேற்றத்திற்கான பன்னாட்டு வங்கி' (International Bank for Reconstruction and Development) ஆகிய இரட்டை

நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இந்த இரு நிறுவனங்கள் தோன்றுவதற்கான சிந்தனையின் பின்புலத்தை விளக்குவோம்.

பின்புலம்: இந்த இரட்டை நிறுவனங்களுக்கு அடித்தள மாக இங்கிலாந்தும் அமெரிக்காவும் தீட்டிய இரண்டு திட்டங்கள் அமைந்தன.

இங்கிலாந்துத் திட்டம் கீன்சினால் தீட்டப்பட்டது. ஆதலால் இதனைக் 'கீன்சுத் திட்டம்' (The Keynes' Plan) என்றும் கூறுவதுண்டு. அவர் தமது திட்டத்தைப் 'பன்னாட்டுத் தீர்வு ஒன்றியத்திற்கான தீர்மானங்கள்' (Proposals for an International Clearing Union) என்னும் தலைப்பில் 1943ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 8ஆம் நாள் அளித்தார். அவரது திட்டத்தில் கீழ்க்காணும் மூன்று சிறப்புக் கூறுபாடுகள் இருந்தன:

முதலாவதாக, வசதியான ஒரு பொது அளவாகத் தங்கத் தைப் பயன்படுத்துவதற்கான புதுமுறையைத் தோற்றுவிக்க வேண்டும். அதனைச் சார்ந்து உலகநாடுகளின் நாணயங்களின் மதிப்புக் குறிப்பிடப்படவேண்டும்.

இரண்டாவதாக, போட்டியிட்டுக்கொண்டு அந்நியச் செலாவணி மாற்று மதிப்பைக் குறைப்பதைத் தவிர்த்துப் பல் வேறு நாட்டுப் பணங்களின் மாற்று மதிப்புகளை எல்லாரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒழுங்கான முறையில் தீர்மானிக்க வேண்டும்.

மூன்றாவதாக, நீண்டகால மூலதன முதலீட்டிற்குப் பன்னாட்டு வங்கிமுறை ஒன்றைத் தோற்றுவிக்கவேண்டும்.

கீன்சு, தமது திட்டத்தில் 'பாங்கர்' (Bancor) என்னும் பன்னாட்டு நாணயத்தை எப்படி உருவாக்குவதென்று விளக்க மாகக் கூறியிருந்தார்.

அமெரிக்காவின் திட்டத்தை டாக்டர் ஹேரி ஒயிட் (Dr. Hary White) உருவாக்கித் தந்தார். ஆதலால், இதனை 'ஒயிட் திட்டம்' (White Plan) என்றும் அழைத்தனர். இத் திட்டம் 'பன்னாட்டு நிலைப்படுத்தும் நிதி'யை (International Stabilisation Fund) நிறுவவேண்டுமென்று கூறியது. இத் திட்டத்தை 1943ஆம் ஆண்டு ஜூலை பத்தாம் தேதி வெளியிட்டனர். நிலைப்படுத்தும் நிதியை உருவாக்கப் பின்வரும் நோக்கங்கள் கூறப்பட்டன:

1. பன்னாட்டு வாணிபத்தை மறுமலர்ச்சியடையச்செய்து சீராக வளர வசதிகளைச் செய்தல்.

2. அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளைக் குறைத்தல்.

3. உறுப்பினர் நாடுகளுக்கிடையில் செலாவணி மாற்றை நிலைப்படுத்துதல்.

4. இரண்டு நாணய மாற்று முறைகளைத் தவிர்த்து, பல்வேறு நாணய மாற்றுக்குத் துணைசெய்தல்.

5. போர்க்காலத்தில் சில நாடுகளில் எச்சமாகக் குவிந்திருக்கின்ற அந்நியச் செலாவணியைத் தக்கவகையில் பயன்படுத்துதல்.

6. உறுப்பினர் நாடுகளுக்கிடையில் இருக்கின்ற செலுத்து நிலை ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்.

இரண்டு திட்டங்களையும்பற்றி 19 நாடுகளின் சார்பாளர்களுக்கிடையில் வாஷிங்டனில் பேச்சு நடைபெற்றுக்கொண்டிருந்தபொழுது கனடா, 1943ஆம் ஆண்டு ஜூன் ஒன்பதில் 'பன்னாட்டு மாற்று ஒன்றியம்' (International Exchange Union) ஒன்றனை அமைக்கும் திட்டத்தை வழங்கியது.

அமெரிக்காவும் இங்கிலாந்தும் அவற்றினுடைய திட்டத்தைச் செயல்படுத்துவதில் தீவிரமாக இருந்தன. இரண்டு நாட்டின் சார்பாளர்களும் சந்தித்து விவாதித்தனர். இறுதியில், 1944ஆம் ஆண்டு ஏப்பிரலில் பன்னாட்டுப் பண நிதியை நிறுவுவதற்கான கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

### பிரெட்டன் வுட்ஸ் மாநாடு (Bretton Woods Conference)

1944ஆம் ஆண்டு மேத் திங்களில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட், 44 ஐக்கிய, இணைந்த நாடுகளுக்கு (United and Associated Nations) ஜூலையில் பிரெட்டன் வுட்ஸில் நடைபெறவிருந்த மாநாட்டிற்கு வரும்படி அழைப்பனுப்பினார். அந்த மாநாட்டில் பன்னாட்டுப் பண நிதி, பன்னாட்டு வங்கி ஆகிய இரண்டு நிறுவனங்களை நிறுவுவது குறித்து ஆராயப்போவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

மாநாடு, 1944ஆம் ஆண்டு ஜூலை முதல் தேதி தொடங்கி, ஜூலை 22ஆம் தேதிவரை நடைபெற்றது. 44 நாடுகளிலிருந்து

ஏறத்தாழ 400 சார்பாளர்கள் மாநாட்டில் பங்கு பெற்றனர். விரிவாக விவாதிப்பதற்காக மூன்று பிரிவுகளாகப் பகுக்கப் பட்டது. இறுதியில் பன்னாட்டுப் பணநிதி, பன்னாட்டு வங்கி ஆகிய இரண்டு நிறுவனங்களையும் உருவாக்க முடிவுசெய்தனர்.

## 2. பன்னாட்டுப் பணநிதி

1945ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் தேதியில் வாஷிங்டனில் 29 அரசுகள் 'ஒப்பந்த விதி'களில் (Articles of Agreement) கையெழுத்திட்டன. பன்னாட்டுப் பணநிதியின் முதல் கூட்டம் 1946ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெற்றது. பன்னாட்டுப் பண நிதி 1947ஆம் ஆண்டு மார்ச்சில், தனது பணிகளைத் தொடங் கியது. முதலில் இந்த நிறுவனத்தில் 44 நாடுகள் உறுப்பினர் களாக இருந்தன. இப்பொழுது 107 நாடுகள் உறுப்பு நாடு களாக உள்ளன. இதில் ரஷ்யாவும் வேறு சில பொதுவுடைமை நாடுகளும் சேரவில்லை.

**நோக்கங்கள்:** ஒப்பந்தத்தின் முதலாவது விதி பன்னாட்டுப் பணநிதி அமைப்பின் நோக்கங்களைக் கூறுகின்றது. அவற்றைத் தொகுத்துக் கூறுவோம்:

முதலாவதாக, ஒரு நிலையான நிறுவனத்தின்மூலம் பன்னாட்டுப் பணக் கூட்டுறவை வளர்ப்பது.

இரண்டாவதாக, பன்னாட்டு வாணிபத்தின் சமநிலை வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் வழிவகுப்பது. அதன்மூலம் எல்லா உறுப்பு நாடுகளும் வேலைவாய்ப்பு, உண்மை வருவாய் ஆகியவற்றை உயர்நிலையில் நிறுத்தவும், உற்பத்திச் சாதனங் களை வளர்க்கவும் உதவுவது.

மூன்றாவதாக, நாணய மாற்று மதிப்பை நிலைப்படுத்துவது; உறுப்பு நாடுகளுக்கிடையில் நெறியான செலாவணி மாற்று ஏற்பாடுகளைச் செய்வது; போட்டியிட்டு நாணய மதிப்பைக் குறைப்பதைத் தவிர்ப்பது.

நான்காவதாக, உறுப்பு நாடுகளுக்கிடையில் பலமுகச் செலுத்தல்களை உருவாக்கவும், பன்னாட்டு வாணிப வளர்ச் சிக்குத் தடையாக இருக்கும் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு களை நீக்கவும் உதவுவது.

ஐந்தாவதாக, உறுப்பு நாடுகளுக்குத் தன்னம்பிக்கை அளிக்கும் வகையில் தக்க காப்பு ஏற்பாட்டுடன் நிதியின் பணத்தைக் கடன் கொடுப்பது.

ஆறாவதாக, மேற்காணும் நடவடிக்கைகளின் செலுத்து நிலையிலுள்ள சமன்பாட்டின் காலத்தையும் அளவையும் குறைப்பது.

**அமைப்பு:** பன்னாட்டுப் பணநிதியின் மூலதனத்தை உறுப்பு நாடுகள் பங்குத் தொகையாக (Quotas) அளித்தன. தொடக்கத்தில் 8,800 மில்லியன் டாலர் நிதியின் மூலதனமாக இருந்தது. ஒவ்வொரு நாடும் கொடுக்கவேண்டிய பங்கின் அளவை அந்தந்த நாட்டின் வருவாய், பன்னாட்டு வாணிபத்தில் அதன் பங்கு ஆகியவற்றின் அடிப்படையில் நிருணயித்தனர். உறுப்பு நாடுகளில் மிகுதியாகப் பங்கு கொடுத்தது அமெரிக்காவாகும். அது பங்குத் தொகையாக அளித்தது 2,750 மில்லியன் டாலர் ஆகும். இங்கிலாந்தின் பங்கு 1,300 மில்லியன் டாலர். இந்தியாவின் பங்குத் தொகை 400 மில்லியன் டாலர். உறுப்புகளில் மிகவும் குறைந்த அளவு முதல் கொடுத்த நாடு ஐஸ்லாண்டு ஆகும். இஃது ஒரு மில்லியன் டாலர் அளித்தது.

தொடக்கத்தில் சேர்ந்த நாடுகள் ஒவ்வொன்றும் அவற்றின் பங்குத் தொகையில் 25 சதவீதமோ, அரசின் கையிருப்பு டாலர் தங்கத்தில் 10 சதவீதமோ, எது குறைவாக இருக்கின்றதோ அந்த அளவிற்குத் தங்கம் தரவேண்டும். மீதியைத் தங்களுடைய நாட்டுச் செலாவணியாகக் கொடுக்கவேண்டும். 1947ஆம் ஆண்டுக்குப் பின்னர்ச் சேரும் நாடுகள் எவ்வளவு தங்கம் தரவேண்டுமென்பதை ஆளுநர் குழு தீர்மானிக்கும்.

காலப்போக்கில் நிதியின் பணத்தேவை கூடியது. ஆதலால், 1959-60ஆம் ஆண்டில் உறுப்பினர்களின் பங்குத் தொகையை 50 சதவீதம் கூட்டினார்கள். மேலும் நிதித் தேவை தொடர்ந்ததால், 1966ஆம் ஆண்டில் உறுப்பு நாடுகளின் பங்குத் தொகை 25 சதவீதம் உயர்த்தப்பட்டது. அப்பொழுது பன்னாட்டுப் பணநிதியின் மூலதனம் 21 பில்லியன் (Billion) டாலர்களாகக் கூடியது. நிதி ஆறு பில்லியன் டாலர்வரை கடன் வாங்கலாம்.

**நிருவாகம்:** பன்னாட்டுப் பண நிதியின் நிருவாகத்தை ஆளுநர்குழு கவனிக்கின்றது. உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும்

ஓர் ஆளுநரையும், ஒரு மாற்று ஆளுநரையும் நியமிக்கின்றன. இக் குழு ஆண்டுக்கு ஒரு முறையாவது குறைந்த அளவில் கூட வேண்டும். அன்றாட நடைமுறை அலுவல்களைக் கவனிக்க ஆளுநர் செயற்குழு (Board of Executive Directors) ஒன்று இருக்கின்றது. இப்பொழுது ஆளுநர் செயற்குழுவில் 18 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் ஐவரை, அதிகப் பங்கு தருகின்ற அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, ஃபிரான்சு, இந்தியா ஆகிய நாடுகள் நியமிக்கின்றன. மற்ற ஆளுநர்களைப் பிற நாடுகள் தேர்ந்தெடுக்கின்றன. ஒவ்வோர் உறுப்பு நாட்டிற்கும் அடிப்படை உறுப்பினர் வாக்குரிமை 250. மேலும் ஒவ்வோர் இலட்சம் பங்குத் தொகைக்கும் ஒரு வாக்குரிமை உண்டு. ஆளுநர்கள் செயற்குழுவின் தலைவர் நிருவாக இயக்குநராகப் பணியாற்றுகின்றார்.

பணிகள்: பன்னாட்டுப் பணநிதி பல பணிகளை மேற்கொள்கின்றது. அவற்றில் முக்கியமானவற்றைத் தொகுத்துக் கூறுவோம்.

முதலாவதாக, நிலையான நாணயமாற்று வீதத்தை ஏற்படுத்தத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. ஒவ்வோர் உறுப்பு நாடும் தனது நாணயத்தின் மதிப்பைத் தொடக்கத்தில் தங்கத்தில் அல்லது டாலரில் அறிவிக்கவேண்டும். இதற்கு அதிகமாகவோ குறைந்தோ விலை கொடுத்து உறுப்பு நாடு தங்கம் வாங்கக்கூடாது. நாட்டின் பொருளாதாரத்தில் அடிப்படைச் சமன்சீர்கேடு அடையுமானால் உறுப்பு நாடு நிதியினைக் கேட்டு நாணயமாற்று மதிப்பில் மாறுதல்களைக் கொண்டு வரலாம். 10 சதவீதத்திற்குள் மாறுதல் இருந்தால் நிதிக்குத் தெரிவித்தால் போதும். ஆனால், அதற்குமேல் மதிப்பை மாற்றுவதாக இருந்தால் பன்னாட்டுப் பணநிதியின் முன் ஒப்புதல் தேவை.

இரண்டாவதாக, நிதி குறுகிய காலக் கடன் கொடுக்கும் நிறுவனமாகச் செயல்படுகின்றது. ஒரு நாட்டின் செலுத்துதல் நிலையிலுள்ள ஏற்றத் தாழ்வைச் சமன்செய்யக் கடன் தருகின்றது. இந்தக் கடன் அந்நியச் செலாவணி விற்பனை உருவத்தில் இருக்கும். ஒவ்வோர் உறுப்பு நாடும் பன்னாட்டுப் பணநிதியில் இருந்து, தனது பங்கைப்போல் 125 சதவீதம் வரை அந்நியச் செலாவணி வாங்கலாம். ஓர் ஆண்டில் இந்த அளவு 25 சதவீதத்திற்குமேல் போகக்கூடாது. வாங்கும் அளவிற்குச் சொந்த நாணயத்தைக் கொடுக்கவேண்டும்,

கடன் வாங்கிய நாடு அயல்நாட்டு நாணயத்தில் தீர்க்கவேண்டும், அல்லது தனது நாணயத்தையே வாங்கவேண்டும். கடனுக்குப் பன்னாட்டுப் பணநிதி காலத்தை ஒட்டி வட்டி வாங்குகின்றது.

மூன்றவதாக, நிதி வேறு சில பணிகளையும் மேற்கொள்கின்றது. தனது நோக்கங்களை நிறைவேற்றத்தக்க பணிகளைச் சூழ்நிலைகளுக்கேற்ப மேற்கொள்கின்றது. நிருவாக இயக்குநர்கள் கூட்டங்களில் தொடர்ந்து பண மாநாடு நடத்துகின்றது. அதில் அந்நியச் செலாவணித் தொடர்புடைய சிக்கல்கள் பேசப்படுகின்றன. உறுப்பு நாடுகள் வேண்டிக்கொண்டால், அவற்றின் பொதுநிதி, பணச் சிக்கல் ஆகியவற்றைத் தீர்ப்பதற்கு உதவத் தொழில்நுணுக்க வல்லுநர்களை அனுப்புகின்றது.

**சாதனைகள்:** கடந்த காலத்தில் பன்னாட்டுப் பண நிதி பணி ஆற்றியதை மதிப்பிடுகின்றபொழுது அதனுடைய சாதனைகள் என்று கூறத்தக்க சில நடவடிக்கைகளை நாம் சுட்டிக் காட்டலாம்.

பன்னாட்டுப் பண நிதியின் மூலதனம் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்திருக்கின்றது. 7,000மில்லியன் மூலதனத்தோடு தொடங்கப்பெற்ற நிதி, இப்பொழுது 21,000 மில்லியனுக்கு மேல் மூலதனத்தைப் பெருக்கியுள்ளது; பல நாடுகளுக்கு நெருக்கடியான நேரங்களில் கடன் கொடுத்து உதவியிருக்கின்றது. 1948ஆம் ஆண்டுமுதல் 1965ஆம் ஆண்டுவரை 58 உறுப்பு நாடுகள் நிதியிலிருந்து 9.37 பில்லியன் (Billion) டாலர் மதிப்புள்ள அந்நியச் செலாவணியைப் பெற்றிருக்கின்றன. 1965–66ஆம் ஆண்டில் மட்டும் நிதி 2,800 மில்லியன் டாலர் கொடுத்திருக்கின்றது.

நிதியின் மூலதனம் போதுமானதாக இல்லை. ஆதலால், பன்னாட்டுப் பண நிதி, தொழில் வளர்ச்சிபெற்ற நாடுகளோடு ‘நிற்கும் ஒப்பந்தங்கள்’ (Standby Agreements) செய்து, நிதி 6,000 மில்லியன் டாலர் கொடுத்திருக்கின்றது.

பொருளாதார வளர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கும் நாடுகளுக்குப் பல வழிகளிலும் பன்னாட்டுப் பண நிதி உதவுகின்றது; தொழில்நுணுக்க வல்லுநர்களை அனுப்பி, அவற்றின் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ளத் துணை நிற்கின்றது; மைய வங்கியின் அலுவலர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் பணியையும் செய்கின்றது.

'ஒரு முழுமையான பலமுகச் செலுத்தல் முறையை மீண்டும் ஏற்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட மதிப்பிற்குரிய ஒரு பன்னாட்டு நிறுவனத்தைச் சுதந்தர உலகம் பன்னாட்டுப் பண நிதியின் உருவில் பெற்றுள்ளது' என்று எல்ஸ்வொர்த் கூறுகின்றார்.

**சில குறைகள்:** பன்னாட்டுப் பண நிதியின் நடவடிக்கைகளில் சில குறைகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. நிதியின் தொடக்கக் காலத்தில் பல நாடுகளின் நாணயமாற்று மதிப்பு மிகையாகக் குறிப்பிடப் பெற்றுவிட்டது. இதனால் நாணயங்களின் மதிப்பைக் குறைப்பது தேவையாகியது. 1949ஆம் ஆண்டுக்குள் 29 நாடுகள் பணமதிப்பைக் குறைத்தன. நிதியால் நாணயமாற்று மதிப்பை நிலைபெறச் செய்ய முடியவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக ஃபிரான்சின் ஃபிராங்கின் (Franc) மதிப்புக் குறைந்ததைக் கூறலாம். தொடக்கத்தில் ஃபிராங்கின் மதிப்பு ஒரு டாலருக்கு 119 ஃபிராங்காக இருந்தது. இது பின்னர், 214 ஃபிராங்காகவும் 350 ஃபிராங்காகவும் மாறியது.

உறுப்பு நாடுகளின் செலுத்துநிலையிலிருந்து சீர்கேடுகளை முழுக்க நிதியினால் செம்மைப்படுத்த முடியவில்லை. டாலரின் பற்றாக்குறை ஏற்பட்டதைத் தவிர்ப்பதில் நிதி வெற்றி பெறாததும் குறையாகக் கூறப்படுகின்றது. அமெரிக்காவின் கைப்பாவையாக நிதி இருப்பதாகச் சிலர் குறைகூறுகின்றனர். உறுப்பு நாடுகளைக் கட்டாயப்படுத்த முடியாததால், நிதியினால் திறமையாகப் பணியாற்ற முடியவில்லை.

### பன்னாட்டுப் பணநிதியும் பொன் திட்டமும்

பன்னாட்டுப் பணநிதியின் பொன் திட்டத்தில் சில இயல்புகள் காணப்படுகின்றன. ஆதலால், இதனை ஒரு சீர்த்திருந்திய பொன் திட்டமாக ஜார்ஜ் ஹாம் (George Halm), ஜான் வில்லியம்ஸ் (John Williams) ஆகியோர் கருதுகின்றனர். நிதியில் கீழ்க்காணும் பொன் திட்டத்தின் இயல்புகள் இருப்பது சுட்டிக் காட்டப்படுகின்றன.

முதலாவதாக, உறுப்பு நாடுகளின் நாணயமாற்று மதிப்புத் தங்கத்தில் கூறப்படுகின்றது.

இரண்டாவதாக, நிதியின் ஒப்பந்தப்படி ஒவ்வொரு நாடும் தனது தொடக்க மூலதனத்தில் ஒரு பகுதியைத் தங்கமாகக்

கொடுக்கவேண்டும். மேலும் தங்கத்தின்மூலம் பிற நாடுகளின் நாணயங்களை வாங்கமுடிகின்றது.

மூன்றாவதாக, பலவழி செலுத்துமுறை ஏற்படுகின்றது.

நான்காவதாக, பற்றாக்குறையைத் தீர்க்கத் தங்கத்தையே தரவேண்டியுள்ளது.

கீன்ஸ், பன்னாட்டுப் பண நிதிக்கும் பொன் திட்டத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றார்:

முதலாவதாக, பொன் திட்டத்தில் உள்நாட்டு நாணயம் தங்கத்தின் அடிப்படையில் அமைகின்றது. பன்னாட்டுப் பண நிதித் திட்டத்தில் அப்படிப்பட்ட ஏற்பாடு இல்லை. பன்னாட்டு நாணயங்கள் மட்டும் தங்கத்தால் இணைக்கப்படுகின்றன.

இரண்டாவதாக, பொன் திட்டத்தில் மாற்று மதிப்பு, மாறாத நிலையில் நிருணயிக்கப்படுகின்றது. நிதித் திட்டத்தில் ஒரு நாடு நிதியின் ஒப்புதலைப் பெற்றோ, பெறாமலோ தனது நாணயத்தின் மாற்று மதிப்பை மாற்றலாம்.

மூன்றாவதாக, பொன் திட்டத்தில் பொன்னின் உற்பத்தி யில் தோன்றும் ஏற்றத்தாழ்வுகள் நாணய மதிப்பை உடனே மாற்றிவிடும். நிதித் திட்டத்தில் தங்கத்தின் உற்பத்திக்கும் நாணய மதிப்பிற்கும் தொடர்பில்லை.

நான்காவதாக, பொன் திட்டத்தில் தங்கம் முதலிடம் பெறு கின்றது. இத் திட்டத்தில் தங்கத்திற்கு இரண்டாவது இடமே கிடைக்கின்றது.

இத்தகைய வேறுபாடுகள் இருப்பதால், கீன்ஸ், நிதித் திட்டத்தைப் 'பொன் திட்டத்தின் நேர் எதிரானது' என்று கருதுகின்றார்.

## பன்னாட்டுப் பணநிதியும் பன்னாட்டு ரொக்கத் தன்மையும்

பன்னாட்டுப் பணநிதியைத் தோற்றுவித்ததன் நோக்கம் அந்நியச் செலாவணி கிடைப்பதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைவதாகும். இதற்கு, நாணயமாற்று எளிதாக நடைபெறக் கூடிய பன்னாட்டு ரொக்கத் தன்மைக்கான வழிமுறைகள் இருக்கவேண்டும். பன்னாட்டுப் பணநிதி தோன்றுவதற்கு முன்னால், பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் தங்கம், பவுன்,

ஸ்டெர்லிங், டாலர் ஆகியவற்றின்மூலம் நடைபெற்றன. ஆதலால் ஒவ்வொரு நாடும் இவற்றைச் சேர்த்துவைக்கவேண்டிய தேவையிருந்தது. நிதி அமைந்த பிறகு நேரடியாக ஒவ்வொரு நாடும் தனக்கு வேண்டிய நாட்டின் நாணயத்தை நிதியிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம்.

இப்பொழுது பன்னாட்டு ரொக்கத் தன்மையில் சில சிக்கல்கள் உள்ளன. உலக வாணிகம் வளர்ந்த அளவிற்குத் தங்கம், மற்றைய நாணயங்களின் இருப்புக் கூடவில்லை. பொன்னின் விலை ஓர் அவுன்சு 35 டாலர் என்று குறிப்பிடப் பெற்றிருப்பதால் உலகத்தின் தங்க உற்பத்தி கூடவில்லை. உலக நாடுகள் பவுனையும் (£) டாலரையும் சார்ந்திருக்கின்றன. ஆனால் இவற்றின் மதிப்புக் குறையலாமென்ற அச்சம் இருக்கின்றது. முன்னேறுகின்ற நாடுகளுக்கு முன்னேறிய நாடு களின் பணம் மிகுதியான அளவில் தேவைப்படுகின்றது.

பன்னாட்டு நாணய ரொக்கத்தன்மை சிக்கலைத் தீர்க்கும் நோக்கத்தோடு உறுப்பு நாடுகளின் பங்குத்தொகையை 1959-ல் 50 சதவீதமும், 1965-ல் 25 சதவீதமும் கூட்டியுள்ளனர். 1971-ல் மறுபடியும் பங்கை 35·5 சதவீதம் கூட்டியுள்ளனர். 1962 ஜனவரியில் 'கடன் கொடுப்போர் கழகத்'தை (Lenders Club) தொழில் முன்னேற்றம் அடைந்திருக்கும் பத்துப் பெரிய நாடுகள் சேர்ந்து தொடங்கின. இக் கழகம் நிதிக்கு 6 பில்லியன் (Billion) டாலர் அளித்தது.

**சீர்திருத்தச் சட்டங்கள்**

பன்னாட்டு ரொக்கத் தன்மையைக் கூட்டுவதற்கான திட்டங்களைப் பலர் அளித்துள்ளனர். பேராசிரியர் இராபர்ட் டிரிப்பின் (Prof. Robert Triffin) அவரது தங்கமும், டாலர் சிக்கலும் என்னும் நூலில் பன்னாட்டுப் பணநிதியை உலக மைய வங்கியாக மாற்றி எல்லா மைய வங்கிகளையும் தங்களது இருப்புகளை (Reserves) உலக மைய வங்கியில் வைத்துக் கொள்ளச்செய்து, கொடுக்கல் வாங்கலைக் கணக்கெழுதி மாற்றலாமென்று கூறுகின்றார். ஆனால், இத் திட்டத்தைப் பன்னாட்டுப் பணநிதியின் ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை.

பர்ன்ஸ்டன் (Bernstein) இரண்டு கூறுபாடுகளைக்கொண்ட ஒரு திட்டத்தை வழங்கியுள்ளார். அதன்படி முதலாவது ஒவ்வோர் உறுப்பு நாடும் பணம் எடுக்கும் உரிமையைத் தேவை

வருகின்றபொழுது தானே பயன்படுத்தவேண்டும். இரண்டாவ தாக, தொழில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் நிதிக்குக் கடன் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு ஒரு குறிப்பிட்ட அளவுவரை கடன்கொடுக்கவேண்டும். கடன் கொடுப்போர் கழகம், தோன்று வதற்குப் பர்ன்ஸ்டனின் திட்டமே அடிப்படையாக அமைந் துள்ளது.

ஃபிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி டி-கால் (De-Gaulle) பொன் திட்டத்தை மறுபடியும் கொண்டுவருவதன் மூலம் பன்னாட்டு நாணய நீர்மத்தன்மையைக் காக்க முடியுமென்று கூறினார். மேலும் டாலரின் மதிப்பைக் குறைப்பதன் மூலமாகவும் தங்கத்தின் விலையை இருமடங்காக உயர்த்துவதன் மூலமாகவும் சிக்கலைத் தீர்க்கமுடியுமென்பதே ஃபிரான்சின் திட்டமாகும். இதனை அமெரிக்காவும் இங்கிலாந்தும் ஏற்றுக்கொள்ள வில்லை.

### சிறப்பு எடுப்பு உரிமைகள் (Special Drawing Rights)

பன்னாட்டு ரொக்கத் தன்மையைப் பெருக்கும் நோக்கில் பன்னாட்டுப் பணநிதி 1967-ல் 'சிறப்பு எடுப்பு உரிமைத் திட்டத்' தைக் கொண்டுவருவதைப்பற்றி எண்ணியது. 1967 ஆகஸ்டில் இலண்டனில் அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, ஃபிரான்சு, இங்கிலாந்து, கனடா, பெல்ஜியம், ஹாலந்து, இத்தாலி, ஜப்பான், சுவீடன் ஆகிய பத்து நாடுகளைச் சேர்ந்த நிதி அமைச்சர்களின் மாநாடு நடைபெற்றது. அதில் சிறப்பு எடுப்பு உரிமைகள் திட்டத்தை ஏற்றுக்கொண்டனர். 1967 செப்டம்பரில் நடைபெற்ற பன்னாட்டுப் பணநிதியின் ஆண்டுக் கூட்டத்தில் பல நாடுகள் இதனை ஏற்றுக்கொண்டன.

**திட்டம்:** இத் திட்டம் ஒரு வங்கிக் கணக்கைக் போன்றது. ஆனால், இதில் வைப்புகளை உருவாக்க வேண்டா. இத் திட்டத்தின்படி பன்னாட்டுப் பணநிதியில் தொடர்ந்து சிறப்பு எடுப்பு உரிமைகள் உருவாக்கப்பெறும். இவற்றைப் பங்குபெறும் நாடுகள் ஒதுக்கீடுகளாக (Reserves) ஏற்றுக்கொண்டு பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கலைத் தீர்த்துக்கொள்ளப் பயன்படுத்த உருவாக்குகின்ற சிறப்பு எடுப்பு உரிமைகளை நிதியின் பங்குத் தொகையின் அடிப்படையில் உறுப்பினர் நாடுகளுக்குப் பகிர்ந் தளிப்பார்கள். சாதாரண நடைமுறை வாணிகத்திற்கு இதனைப் பயன்படுத்தமாட்டார்கள். உறுப்பினர் நாடுகளின் மைய வங்கிகள் தங்களுக்கு அளிக்கப்பெற்ற சிறப்பு எடுப்பு உரிமை

களுக்கு எந்த நாட்டு நாணயம் வேண்டுமோ அதனைப் பெற்று, செலுத்துநிலையில் சமநிலையை ஏற்படுத்திக் கொள்ளும்.

இந்தத் திட்டத்தில் சில குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகள் உள்ளன. முதலாவதாக, சிறப்பு எடுப்பு உரிமைகள் ஒவ்வொரு நாட்டின் ஒதுக்கு இருப்பிலும் நிலையான இடத்தைப் பெறுகின்றன. இரண்டாவதாக, ஒவ்வொரு நாடும் அதனுடைய பங்கை எப்பொழுது, எப்படிப் பயன்படுத்துவதென்பதைச் சுதந்தரமாக முடிவுசெய்யும். மூன்றாவதாக, இந்தத் திட்டப்படி ஒவ்வொரு நாடும் சிறப்பு எடுப்பு உரிமைகளைப் பெற்றுக் கொண்டு அதற்கு ஈடாகத் தன்னுடைய பணத்தைக் கொடுக்கும். சிறப்பு எடுப்பு உரிமையைக் 'காகிதத் தங்கம்' (Paper Gold) என்று வருணித்தார்கள்.

**செயல்முறை:** சிறப்பு எடுப்பு உரிமைத் திட்டத்தை *1969* அக்டோபரில் பன்னாட்டுப் பணநிதி ஏற்றுக்கொண்டது. இந்தத் திட்டத்தின்படி *1970*-ல் தொடங்கி மூன்றாண்டுகளில் *9·5* பில்லியன் டாலருக்குச் சமமான சிறப்பு எடுப்பு உரிமைகளை உருவாக்கி *104* உறுப்பினர் நாடுகளுக்கு வழங்கத் திட்டமிட்டனர். இந்தத் திட்டம் *1970* ஜனவரி முதல் தேதியிலிருந்து செயல்படத் தொடங்கியது. முதலாண்டு *3·5* பில்லியன் டாலர் மதிப்பிற்கும் இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் *3* பில்லியன் டாலருக்கு மதிப்புகளிலும் சிறப்பு எடுப்பு உரிமைகளை உருவாக்கினார்கள். *1970*-ல் நாடுகளுக்குப் பங்களவில் *16.8* சதவிதப்படி மொத்தம் *21·3* பில்லியன் டாலர் மதிப்பைப் பிரித்தளித்தனர். இந்தியாவிற்கு இப்படி *126* பில்லியன் டாலர் மதிப்புள்ள (*94·5* கோடி ரூபாவுக்கு) சிறப்பு எடுப்பு உரிமைகள் கிடைத்தன.

நிதியின் நடவடிக்கைகள் இரண்டு தனிக் கணக்குகளில் நடைபெறுகின்றது. உறுப்பினர் நாடுகளுக்கு அந்நியச் செலாவணியை விற்பது உட்படப் பொது நடவடிக்கைகள், பொதுக் கணக்கின் (General Account) மூலம் நடைபெறுகின்றன. சிறப்பு எடுப்புக் கணக்கு (Special Drawing Account) என்னும் புதுக்கணக்கில் சிறப்பு எடுப்பு உரிமைகள் தொடர்பான எல்லா நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.

புதிதாக உருவாக்கப்பெற்ற சிறப்பு எடுப்பு உரிமைகளைப் பங்களவின் அடிப்படையில் பகுத்துக்கொடுத்ததால் இவற்றில் பெரும்பகுதி மேற்கத்திய வளர்ச்சிபெற்ற நாடுகளுக்குச் சென்று விட்டது. பொதுவாகப் பின்தங்கிய நாடுகளுக்குத்தாம்

ஏற்றுமதித் தேவை மிகுதியாக இருக்கும். அவற்றிற்குச் சிறப்பு எடுப்பு உரிமைகள் மிகவும் வேண்டும். ஆனால், அப்படிக் கிடைக்கவில்லை. இருந்தாலும் பின்தங்கிய நாடுகளுக்கு முன்பு கிடைத்ததைவிட இப்பொழுது அதிகமாக அந்நியச் செலாவணி கிடைக்கின்றது.

பன்னாட்டுப் பணநிதியில் தங்கமும் உறுப்பு நாடுகளின் நாணயங்களும் பன்னாட்டு இருப்புகளாகப் பயன்பட்டன. இப்பொழுது புதியதோர் இருப்பு நாணயமாக (SDR) பயன் படுகின்றது. இதனைப் பன்னாட்டுப் பணநிதி தனது விருப்பம் போல உருவாக்கலாம். ஆதலால், இதனைப் 'பன்னாட்டு பண மாகக்' கருதலாம்.

இரண்டாம் முறையாக 1971 ஜனவரியில் 3 பில்லியன் டாலர் மதிப்புள்ள சிறப்பு எடுப்பு உரிமைகளை (SDR) 110 உறுப்பினர் நாடுகளுக்குப் பகிர்ந்தளித்தனர். மூன்றாவதாக, 1972 ஜனவரியில் 112 நாடுகளுக்கு 3 பில்லியனைப் பிரித்து அளித் தனர். மொத்தத்தில் அமெரிக்காவுக்கு 2·249 பில்லியன் (SDR) கிடைத்துள்ளது. இந்தியாவிற்கு 326·34 மில்லியன் (SDR) கிடைத்துள்ளது. முதல் மூன்றாண்டுகளில் 68 பங்கு பெறும் நாடுகள் 1·9 பில்லியன் (SDR) பயன்படுத்தியுள்ளன. அமெரிக்கா வும் இங்கிலாந்தும் மிகுதியான அளவில் (SDR) பயன்படுத்தி யிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### பன்னாட்டுப் பணநிதியும் இந்தியாவும்

பன்னாட்டுப் பணநிதியின் தொடக்கக் காலத்திலிருந்து இந்தியா அதன் உறுப்பு நாடாகி, நிதியின் நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்குபெற்று வருகின்றது. நிதியிலுள்ள ஐம்பெரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஆதலால், ஆளுநர் செயற் குழுவுக்கு ஒருவரை நியமிக்கின்ற உரிமை நமது நாட்டிற்கு இருக்கின்றது.

இந்தியாவின் பங்குத்தொகை முதலில் 400 மில்லியன் டாலர் என்று தீர்மானிக்கப்பெற்றது. 1959ஆம் ஆண்டில் உறுப்பு நாடுகளின் பங்குத் தொகையை 50 சதவீதம் உயர்த்திய பொழுது, நமது நாட்டின் பங்கு 600 மில்லியன் டாலராயிற்று. 1966ஆம் ஆண்டில் மேலும் பங்குத் தொகையை 25 சதவீதம் உயர்த்தியதால் நமது நாட்டின் பங்கு 750 மில்லியன் டால ராயிற்று. இதனை 115 மில்லியன் டாலர் மதிப்பிற்குத் தங்க

மாகவும், மீதி 635 மில்லியன் டாலருக்கு இந்திய நாணயமாகவும் கொடுத்திருக்கின்றது.

இந்தியாவின் எடுக்கும் உரிமை (Drawing Right) 865 மில்லியன் டாலரென்று நிருணயிக்கப்பட்டது. இதில் 115 மில்லியன் டாலர் நமது தங்கச் செலுத்துதலினால் 'தானே' (Automatic) கிடைத்த உரிமை. 750 மில்லியன் டாலர் எடுக்கும் உரிமை 'நிபந்தனைக்கு' (Conditional) உட்பட்டது. இந்தியா இதனை நான்கு ஆண்டுகளில் ஆண்டிற்கு 187.5 மில்லியன் டாலராக எடுத்துப் பயன்படுத்தலாம்.

1946ஆம் ஆண்டில் இந்திய ரூபாவின் மதிப்பை ஓர் அமெரிக்க டாலருக்கு ரூ. 3.309 சமமென்று குறித்தனர். அதாவது, ஒரு ரூபாவின் மதிப்பு 0.268601 கிராம் தூய தங்கம், அல்லது 30.23 செண்டுகள். 1949ஆம் ஆண்டுச் செப்டம்பரில் ஒரு டாலரின் மதிப்பு ரூ. 4.7619 என்று மாற்றி நிருணயிக்கப் பட்டது. 1966ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ரூபா மதிப்புக் குறைப்பிற்குப் பின்னர், ஒரு டாலரின் மதிப்பு ரூ. 7.50 ஆயிற்று.

1957ஆம் ஆண்டிற்குப் பின்னர், இந்தியா அதிக அளவில் நிதியிடமிருந்து உதவி பெறுகின்றது. 1957ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் காரணமாக ஏற்பட்ட அந்நியச் செலாவணிச் சிக்கலைச் சமாளிக்க 20 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டது. இந்தக் கடனை 1961ஆம் ஆண்டுக்கு முன்னர்த் திருப்பிச் செலுத்தியது. 1961ஆம் ஆண்டில் மூன்றாம் திட்டத்தைச் செயல்படுத்த 250 மில்லியன் டாலர் கடன் பெற்றது. 1962ஆம் ஆண்டு ஜூலையில் ஓராண்டு ஒப்பந்தப்படி 100 மில்லியின் டாலர் கடன் பெற்றதில் 25 மில்லியன் டாலரையே பயன்படுத்தியது. 1965ஆம் ஆண்டிற்கு மேலும் 200 மில்லியன் டாலர் கடன் பெற்றது. அந்த ஆண்டின் இறுதியில் இந்தியா திருப்பிச் செலுத்திய 150 மில்லியன் டாலர் போகக் கடன் பாக்கி, 325 மில்லியன் டாலர் இருந்தது. 1966ஆம் ஆண்டு மார்ச்சில் இந்தியா 300 மில்லியன் டாலர் கடன் பெற்றது.

1974 மற்றும் 1975ஆம் ஆண்டுகளில் பல்வேறு துறைகளுக் கான கடனின் அளவு ரூ. 7532 மில்லியன். 1977ஆம் ஆண்டில் இந்தியா இக் கழகத்திற்கு ரூ. 2889 மில்லியனைத் திருப்பிக் கொடுத்தது. சிறப்பு எடுப்பு உரிமையில் 1970-72-ல் இந்தியா விற்குரிய பங்கு 326.22 மில்லியன் SDR ஆக இருந்தது.

இத்தொகை 1979—81-ல் 358 மில்லியன் SDR ஆக உயர்ந்தது. 1980 ஏப்ரலில் SDR-ன் அளவு 523 மில்லியன் டாலராக உயர்த்தப்பட்டது. 1980-81ஆம் ஆண்டு இந்தியா இக் கழகத்திடமிருந்து ரூ. 540 கோடி அளவிற்குக் கடன் பெற்றது. 1981ஆம் ஆண்டு இந்தியா ரூ. 5000 கோடிக் கடனை மூன்று தவணைகளில் பெற வாய்ப்பு பெற்றுள்ளது.

பன்னாட்டுப் பணநிதியில் இந்தியா உறுப்பு நாடாகையால் இந்திய ரூபாவுக்கும் பவுனுக்கும் இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டது. ரிசர்வ் வங்கி, நிதியின் உறுப்பு நாடுகளின் பத்திரங்களையும் நாணயங்களையும் வாங்கி விற்கின்றது.

கடனுதவியோடுகூடப் பன்னாட்டுப் பணநிதியின் சேவைகளையும் இந்தியா பெறுகின்றது. நிதி பொருளியல் வல்லுநர்களை அனுப்பி, இந்தியாவிற்கு உதவி செய்கின்றது. இந்தியாவின் வளர்ச்சிக்கு நிதி கைகொடுத்து உதவி வருகின்றது.

## (3) புனரமைப்பு, வளர்ச்சிப் பன்னாட்டு வங்கி
## (International Bank for Reconstruction and Development)

பன்னாட்டுப் பண நிதியோடு சேர்த்து 'உலக வங்கி' என்று அழைக்கப்படுகின்ற புனரமைப்பு, வளர்ச்சிப் பன்னாட்டு வங்கி நிறுவப்பட்டது. இதுவும் 1946ஆம் ஆண்டு ஜூன் முதல் பணியாற்றத் தொடங்கியது. பன்னாட்டுப் பண நிதியில் உறுப்பு நாடுகளாக இருக்கும் எல்லா நாடுகளும் உலக வங்கியிலும் உறுப்பு நாடுகளாக இருக்கின்றன.

**நோக்கங்கள்:** உலக வங்கி அமைக்கப்பட்டதன் நோக்கங்களை அதன் ஒப்பந்த விதியில் கூறியுள்ளபடி தொகுத்துக் கூறுவோம்:

முதலாவதாக, உற்பத்திப் பணிகளுக்கு முதலீடு செய்ய வசதிகளை அளித்து உறுப்பினர் நாடுகளின் புனரமைப்பிற்கும் வளர்ச்சிக்கும் உதவுவது; இதில் போரினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தைச் செப்பனிடுவது; அமைதிக் காலத் தேவைகளுக்கேற்ப உற்பத்திச் சாதனங்களை மாற்றியமைப்பது; வளர்ச்சி குறைந்த நாடுகளின் உற்பத்தி வசதிகளையும், சாதனங்களையும் பெருக்குவது ஆகியவை அடங்கும்.

இரண்டாவதாக, தனியாரின் அயல்நாட்டு முதலீட்டுக்கு ஆக்கமளிப்பது. இதற்காகத் தனியார் செய்கின்ற முதலீடு

களிலும், அளிக்கின்ற கடன்களிலும் பங்கு பெறவோ அல்லது அவற்றிற்கு உறுதியளிக்கவோ செய்வது. முதலீடு செய்யத் தனியார் முன்வரவில்லை என்றால், உற்பத்திப் பணிகளுக்காகத் தனது சொந்த நிதியைத் தக்க நிபந்தனைகளின்மீது கடனாகக் கொடுப்பது.

மூன்றாவதாக, பன்னாட்டு வாணிகத்தை நீண்ட கால அடிப்படையில் வளர்ப்பது. பன்னாட்டு முதலீட்டின்மூலம் செலுத்துநிலையில் சமன்பாட்டை ஏற்படுத்துவது. இதன் மூலமாக உறுப்பினர் நாடுகளின் உற்பத்தியாற்றல், வாழ்க்கைத் தரம், உழைப்புச் சூழ்நிலை ஆகியவற்றை உயர்த்துவது.

நான்காவதாக, கடன் கொடுப்பதன் மூலமாகவோ, கடனுக்கு உறுதியளிப்பதன் மூலமாகவோ மிகவும் அவசியமும் அவசரமுமான திட்டங்களை மேற்கொள்ளச் செய்வது.

ஐந்தாவதாக, உறுப்பினர் நாடுகளின் பொருளாதாரத்தைப் போர்க்காலப் பொருளாதார நிலையிலிருந்து அமைதிக் காலப் பொருளாதார நிலைக்கு மாற்றுவது ஆகிய நோக்கங்கள் முக்கியமானவை.

**அமைப்பு:** பன்னாட்டு வங்கி 10,000 மில்லியன் டாலர் மூலதனத்தோடு நிறுவப்பெற்றது. உறுப்பு நாடுகள் மூன்று வகைகளில் தங்களுடைய பங்குமுதலைச் செலுத்தவேண்டும்.

முதலாவதாக, பங்கில் 2 சதவீதத்தை அமெரிக்க டாலராகவோ தங்கமாகவோ செலுத்தவேண்டும்.

இரண்டாவதாக, பங்கில் 18 சதவீதத்தை அந்தந்த நாட்டின் பணத்தில் கொடுக்கவேண்டும்.

மூன்றாவதாக, மீதமுள்ள 80 சதவீதத்தை எப்போழுது உலக வங்கி கேட்குமோ அப்போழுது தரவேண்டும்.

ஒவ்வொரு நாடும் எவ்வளவு பங்கு மூலதனம் கொடுக்க வேண்டும் என்பதை அந்தந்த நாட்டின் பொருளாதார நிலையை ஒட்டித் தீர்மானித்தனர். இஃது ஐக்கிய நாடுகளின் சங்கத்தின் (U. N. O.) ஒரு பகுதியாக இருப்பதால் சங்கத்தில் உறுப்பு நாடுகள் எல்லாம் இதில் சேரலாம். ரஷ்யாவும் அதனைச் சார்ந்த சில நாடுகளும் தவிரப் பெரும்பாலான மற்றைய உலக நாடுகள் வங்கியில் உறுப்பு நாடுகளாயுள்ளன. தொடக்கத்தில் (1946ஆம் ஆண்டில்) 28 நாடுகள் உறுப்பினர்களாயின.

இது 1952ஆம் ஆண்டில் 51 உறுப்பினர்களையும், 1956-ல் 60 உறுப்பினர்களையும், 1960-ல் 68 உறுப்பினர்களையும், 1966-ல் 103 உறுப்பு நாடுகளையும் கொண்டிருந்தது. இது 1972-ல் 121 ஆக அதிகரித்தது.

அமெரிக்கா மிகுதியாகப் பங்குகளைப் பெற்றுள்ளது. பங்குத் தொகை அளித்ததன் அடிப்படையில் இந்தியாவிற்கு ஐந்தாவது இடம் கிடைத்துள்ளது. 1959ஆம் ஆண்டில் வங்கியின் மூலதனத்தை 10,000 மில்லியன் டாலரிலிருந்து 21,000 மில்லியன் டாலராக உயர்த்தினர்.

நிருவாகம்: பன்னாட்டு வங்கியினை ஆளுநர் குழு (Board of Governors) இயக்குகின்றது. ஒவ்வோர் உறுப்பு நாடும் ஓர் ஆளுநரை நியமிக்கின்றது. ஆளுநர்குழுக் கூட்டம் ஆண்டிற் கொருமுறை நடைபெறுகின்றது. தொடர்ந்து வங்கியின் அலுவல்களைக் கவனிக்க 17 உறுப்பினர்களைக்கொண்ட இயக்கு நர் செயற்குழு (Board of Executive Directors) ஒன்று இருக் கின்றது. உறுப்பினர்களில் ஐவரை மிகுதியாக மூலதனம் போட்டுள்ள ஐந்து நாடுகள் அனுப்புகின்றன. இந்த ஐந்து நாடுகள் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஃபிரான்சு, இந்தியா ஆகியவைகளாகும்.

மற்றைய உறுப்பினர்களை இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை பிற உறுப்பு நாடுகள் தேர்ந்தெடுக்கின்றன. இந்தக் குழு மாதம் ஒருமுறை கூடுகின்றது. ஆளுநர் குழுவின் தலைவரே இயக்குநர் செயற்குழுவின் தலைவராகவும் பணியாற்று கின்றார். இவர் வங்கியின் அன்றாட நடவடிக்கைகளைக் கவனிக்கின்றார். ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் மூலதனத்தின் அடிப்படையில் வாக்குகள் (Votes) வழங்கப்பட்டுள்ளன. இப் பொழுது 107 நாடுகள் வங்கியில் உறுப்பு நாடுகளாக உள்ளன.

கடன் நிதி: உலக வங்கி தனது நிதியைக் கீழ்க்காணும் மூன்று வழிகளில் பெறுகின்றது:

முதலாவதாக, அதனுடைய மூலதனம் கடன் தரப் பயன் படுத்தப்படுகின்றது. உறுப்பு நாடுகள் தங்களுடைய மூல தனத்தில் 20 சதவீதம் தங்கமாகவும், டாலராகவும், தங்க ளுடைய சொந்த நாட்டுப் பணமாகவும் செலுத்தியுள்ளன. 1966ஆம் ஆண்டில் உலக வங்கியில் உறுப்பினர் நாடுகள் செலுத்தியிருந்த மூலதனம் 22,400 மில்லியன் டாலராகும்.

இரண்டாவதாக, உலக வங்கி, உறுப்பு நாடுகளிடமிருந்து கடன் பெறுகின்றது. அதனிடமுள்ள நிதியில் இது பெரும் பங்காக இருக்கின்றது.

மூன்றாவதாக, உலக வங்கி தனது இலாபத்தையும் கடன் தருவதற்குப் பயன்படுத்துகின்றது.

**கடன் கொள்கை:** வங்கி, கடன் கொடுப்பதில் சில கொள்கைகளைப் பின்பற்றுகின்றது. அவற்றைத் தொகுத்துக் கூறுவோம்:

முதலாவதாக, பொதுவாகப் பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்குக் கடன் தருகின்றது.

இரண்டாவதாக, உறுப்பு நாடுகளுக்கே கடன் வழங்கப்படுகின்றது. கடன் அரசுக்கோ, அல்லது அரசு பொறுப்புறுதி அளிக்கும் நிறுவனங்களுக்கோ தரப்படும்.

மூன்றாவதாக, ஒரு திட்டத்திற்கு வேண்டிய முழுக் கடனையும் உலக வங்கி வழங்காது. அந்தந்தத் திட்டத்திற்கு உதவும் வகையில் தேவையான கடனில் ஒரு பகுதியை மட்டுமே கொடுக்கும்.

நான்காவதாக, உலக வங்கி, போரால் பாதிக்கப்பட்ட துறைகளைப் புனரமைப்புச் செய்யவோ, வளர்ச்சிக்கான திட்டங்களை மேற்கொள்ளவோ மட்டுந்தான் கடன் தரும்.

ஐந்தாவதாக, வங்கிக் கடனை எந்த நாட்டில் செலவிட வேண்டுமென்று எத்தகைய கட்டுப்பாட்டையும் விதிக்காது.

ஆறாவதாக, கடன் பெறும் நாட்டின் திருப்பிச் செலுத்தும் திறனை மதிப்பிட்ட பின்னரே கடன் வழங்கும்.

ஏழாவதாக, திட்டத்தின் அயலகச் செலாவணியின் ஒரு பகுதியை ஈடுகட்டவே கடன் தரும்.

**கடனளிக்கும் முறை:** உலக வங்கி, உறுப்பு நாடுகளுக்குக் கடன் வழங்குவதில் நான்கு படிகள் (stages) உள்ளன. அவற்றைச் சுட்டிக்காட்டுவோம்:

முதலாவதாக, கடன்பெற விரும்பும் நாட்டோடு உலக வங்கி கூடிப் பேசி அந்த நாட்டின் கடனைத் திருப்பித் தரும் சக்தியை மதிப்பிடுகின்றது. இதற்காகத் தேவையானால் அந்த நாட்டிற்கே ஓர் ஆராய்ச்சிக் குழுவை அனுப்புவதும் உண்டு.

இரண்டாவதாக, எந்தத் திட்டத்திற்காகக் கடன் வேண்டப் படுகின்றதோ, அதனைப்பற்றி ஆராய்கின்றது. அது எல்லா வகைகளிலும் சிறந்த பொருளாதாரத் திட்டமாக இருந்தால் மட்டுமே கடன் தரப்படும்.

மூன்றாவதாக, எவ்வளவு காலத்திற்கு, என்ன வட்டி வீதத்தில் கடன் கொடுப்பதென்று முடிவு செய்வார்கள்.

நான்காவதாக, கடன்கொடுத்த பின்னர்க் கடனைக் குறிப் பிட்ட திட்டத்திற்கே செலவிடுகின்றார்களாவென்பதை உலக வங்கி தொடர்ந்து கவனித்துக்கொண்டிருக்கும்.

உலக வங்கி, கடனுக்கு வாங்குகின்ற வட்டி வீதம், அது பெறுகின்ற கடனுக்குக் கொடுக்கின்ற வட்டி வீதத்தைவிட ஒரு சதவீதம் கூடுதலாக இருக்கும். பொதுவாக வட்டிவீதம் 4 சதவீதத்திற்கும் 6 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக இருக்கும்.

**பணிகள்:** உலக வங்கி, அது தோன்றியதன் நோக்கங்களை நிறைவேற்றப் பல வழிகளிலும் பணிபுரிகின்றது. தொடக் கத்தில் இரண்டாம் உலகப்போரால் சீர்குலைந்திருந்த பொருளாதார நாடுகள் புனரமைப்புப் பெறக் கடன்களை வழங்கியது.

1947ஆம் ஆண்டில் மே முதல் ஆகஸ்டுவரை ஃபிரான்சு, டென்மார்க், நெதர்லாந்து, லக்ஸம்பர்க் ஆகிய நாடுகளுக்கு 497 மில்லியன் டாலர் கடனளித்தது. அதன் பின்னர் வளர்ச்சி பெறாத நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தில் தனிக் கவனம் செலுத்தியது. 1967ஆம் ஆண்டு ஜூன்வரை 10,350 மில்லியன் டாலர்களை ஐநூற்றுக்கு மேற்பட்ட கடன்களாக வழங்கியுள்ளது.

பொதுவாக உலக வங்கியின் கடன்கள் மின்சாரம், போக்கு வரத்து, வேளாண்மை, காடுகள் ஆகியவற்றின் முன்னேற்றத் திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. உலக வங்கி முதலீட்டு நிறுவனங்களோடு போட்டியிடுவதில்லை; நடைமுறையில் அவற்றிற்கு உதவியாக இருக்கின்றது. முதலீட்டைப் பெருக்கும் வகையில் இந்தியாவில், 'தொழில் கடன் நிதிக் கழகம்' அமைத்ததைப்போல ஒவ்வொரு நாட்டிலும் நிதி நிறுவனங்கள் அமைய உதவுகின்றது.

உலக வங்கி, கடன் கொடுப்பதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. பொருளாதார முன்னேற்றத்திற்கு வேறு வழிகளிலும் உதவுகின்றது. தொழில் நுணுக்க உதவிகள் தருதல், முழு அளவில் உறுப்பு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான புள்ளி விவரங்களைச் சேகரித்துக் கொடுத்தல், திட்டங்களைப் பற்றித் தக்க ஆலோசனை கூறுதல், அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல், பின்தங்கிய நாடுகளின் நூலகங்களுக்குப் பொருளாதார வளர்ச்சிபற்றிய நூல்களை வழங்குதல் ஆகிய பல பணிகளை மேற்கொள்கின்றது. உலக வங்கி நேரடியாகத் தனியார் துறைக்கு உதவ முடியாமையால், தனியார் துறைக்கு மூல தனம் வழங்கப் பன்னாட்டு நிதிக் கழகத்தை (International Finance Corporation) அமைத்துள்ளது.

### இந்தியாவும் உலக வங்கியும்

உலக வங்கியைத் தோற்றுவித்த நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். ஆசிய நாடுகளில் முதன்முதலில் உதவி பெற்றது நமது நாடே. இப்பொழுது உலக வங்கியிடமிருந்து மிகுதியாகக் கடன் பெற்றிருப்பதும் நமது தாயகமேயாகும்.

1949ஆம் ஆண்டில் இரயில் போக்குவரத்து வளர்ச்சிக்காக முதன்முதலில் 32.8 மில்லியன் டாலர் கடன் கொடுக்கப் பெற்றது. அதுமுதல் ஆண்டுதோறும் அரசின் நிறுவனங்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் ஏற்ற முறையில் கடனுதவி அளிக்கின்றது. 1965ஆம் ஆண்டுவரை இந்தியா ஏறத்தாழ 1,014 மில்லியன் டாலர் கடன் பெற்றுள்ளது. இந்தியா 1980 வரை 5173 மில்லியன் டாலர் கடன் பெற்றுள்ளது. பொதுத் துறையில் பன்னாட்டு வங்கி, ரயில், மின்சார உற்பத்தி, பல நோக்குத் திட்டங்கள், துறைமுகங்கள், வேளாண்மை ஆகிய வற்றிற்கு மிகுதியாகக் கடன் கொடுத்திருக்கிறது. தனியார்த் துறையில் இரும்பு, எஃகு தொழில்கள், நிலக்கரி ஆகியவற்றிற்கு உதவி செய்கின்றனர்.

நமது நாட்டிற்குக் கடன் கொடுப்பதோடுகூட, ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றத்தக்க வகையில் உதவுகின்றது. உலக வங்கியின் முயற்சியால் நமது நாட்டிற்கு உதவ, 'இந்திய உதவிச் சங்கம்' (Aid India Club) அமைக்கப்பெற்றுள்ளது. உலக வங்கி நமது நாட்டிற்கு வேண்டிய பொருளாதார வளர்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்குகின்றது. நமக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலிருந்த சிந்து நதியின் தண்ணீர்த்

தகராறைத் தீர்க்க ஆவன செய்துள்ளது. உலக வங்கியின் உறுப்பினர் என்ற முறையில் எதிர்காலத்திலும் இந்தியா பல நன்மைகளைப் பெறுமென்று எதிர்பார்க்கலாம்.

**மதிப்பீடு :** பன்னாட்டு வங்கி, பல வழிகளிலும் உறுப்பு நாடுகளின் புனரமைப்பிற்கும் வளர்ச்சிக்கும் உதவியபோதிலும், அதனிடமுள்ள சில குறைகள் சுட்டிக் காட்டப்படுகின்றன.

உலக வங்கியிடம் பின்தங்கிய நாடுகளுக்கு உதவக்கூடிய வகையில் போதுமான அளவு நிதியில்லை என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், தொடக்கத்தில் உலக வங்கியிடம் போதுமான நிதியில்லை என்றாலும், இப்போழுது அதனுடைய நிதி உயர்ந்திருப்பது சுட்டிக் காட்டப்படுகின்றது. மேலும் உலக வங்கி சில குறிப்பிட்ட துறைகளுக்கே கடன் கொடுப்பதாலும், அதன் நோக்கம் தனியாரின் முதலீட்டை ஊக்க வேண்டுமென்பதாலும் இப்பொழுது அதனிடம் இருக்கும் மூலதனமே போதுமானதென்று கூறப்படுகின்றது.

வளர்ச்சிபெறாத நாடுகளுக்குக் கடன் கொடுப்பதில் உலக வங்கி போதுமான அளவு ஈடுபாடு கொள்ளவில்லை என்று குறை கூறப்பட்டது. இதற்கு ஆதாரமாக வங்கி தோன்றியது முதல் ஆறு ஆண்டுகளில், 900 மில்லியன் டாலரே கடன் கொடுத்திருந்ததைக் கூறுகின்றனர். ஆனால், 1967ஆம் ஆண்டு ஜூன் வரை 10,460 மில்லியன் டாலர் கடன் கொடுத்திருக்கின்றது தென்பதிலிருந்து, உலக வங்கி விரைந்து செயல்படுகின்றது என்பதை அறியலாம்.

உலக வங்கி தொடக்கத்தில் மிகுதியாகப் புனரமைப்புக் கடன்களை வழங்கியதால், அஃது ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்குச் சாதகமாக இயங்குவதாகக் குறை கூறினர். ஆனால், இப்பொழுது ஆசிய நாடுகளுக்கு அளிக்கின்ற கடனளவு கூடியுள்ளது. அதனுடைய கடனில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு ஆசியா, மத்தியக் கிழக்கு நாடுகளுக்காகக் கொடுக்கப்பெற்றுள்ளது.

வங்கி, சில குறிப்பிட்ட துறைகளுக்கே கடன் கொடுப்பதாலும், பின்பற்றுகின்ற கடன் கொள்கையினாலும், கடன் வாங்கிய பணத்திலேயே திருப்பித்தரவேண்டுமென்ற கட்டுப்பாடு இருப்பதாலும், பின்தங்கிய நாடுகள் உலக வங்கியிடமிருந்து எதிர்பார்க்கும் அளவு கடன் பெறுவதில்லை.

பன்னாட்டு வங்கி, அது அளிக்கும் கடனுக்கு வாங்குகின்ற வட்டி வீதம் அதிகமென்று சுட்டிக்காட்டுகின்றனர். பின்தங்கிய நாடுகளில் முதலீட்டில் கிடைக்கும் இலாபம் குறைவாக இருப்பதால், வங்கி குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பதே சரியானதென்று கூறப்படுகின்றது. ஆனால் வங்கி, அது கடன் வாங்கும் வட்டி வீதத்தை ஒட்டி வட்டி நிருணயிப்பதால், வட்டி வீதம் அதிகமென்று கூறமுடியாது.

உலக வங்கி இயங்குவதிலும் பணியாற்றுவதிலும் சில குறைகள் கூறப்பட்டபோதிலும், அதனால் பின்தங்கிய நாடுகள் பெற்றுக்கொண்டிருக்கும் பயன்களை மறந்துவிட இயலாது. பின்தங்கிய நாடுகளில் பல ஆக்கத்திட்டங்கள் செயல்பட உலக வங்கி துணையாக இருந்திருக்கின்றது. இருக்கின்ற சில குறை களையும் நீக்கிவிட்டால், உலக வங்கி மேலும் பல வழிகளில் பின்தங்கிய நாடுகளின் முன்னேற்றத்திற்குத் துணை செய்யு மென்று எதிர்பார்க்கலாம்.

## துணை நூல்கள்

1. Noman Crump, 'The A B C of the Foreign Exchanges', Chaps. XXXI; XXXIV & XXXV.
2. S. Horie, 'The International Monetary Fund'.
3. S. K. Basu, 'A Survey of Contemporary Banking Trends'.
4. P. T. Ellsworth, 'The International Economy'.
5. Marcus Fleaming, 'The International Monetary Fund, Its Forms and Functions'.
6. W. N. Scammell, 'International Monetary Policy', Chaps. 5, 6 & 7.
7. G. N. Halm, 'International Monetary Corporation'.
8. Jacob Viner, 'International Economics'.
9. 'I. B. R. D. Annual Reports'.

# கலைச்சொற்கள்

## A

Acceptance — ஏற்பு, ஒப்புதல்
Acceptance House — ஏற்பகம்
Agent — பதிலாள்
Agency Houses — பதிலாள் இல்லங்கள்
Agency Services — பதிலாள் பணிகள்
Agricultural Banks — வேளாண்மை வங்கிகள்
Amalgamation of Banks — வங்கிகளின் இணைப்பு
Anti-dated Cheque — முன்தேதியிட்ட காசோலை
Assets — சொத்துகள்
Authorised Capital — அனுமதித்த முதல்

## B

Balance Sheet — இருப்புநிலைக் குறிப்பு
Bank — வங்கி
Bank Acceptances — வங்கி ஏற்புகள்
Bank Draft — வங்கிப் பணச் சீட்டு
Banking — வங்கித் தொழில்
Banking Companies Act — வங்கி நிறுவனங்களின் சட்டம்
Bank Money — வங்கிப் பணம்
Bank Rate — வங்கி வீதம்
Banking School — வங்கிமுறைக் கருத்தாளர்
Barter — பண்டமாற்று
Bill of Exchange — மாற்று உண்டியல்
Bill Market — உண்டியலங்காடி
Bimetallism — இரட்டை உலோக நாணய முறை
Board of Directors — இயக்குநர் குழு
Board of Trade — வாணிபக் கழகம்
Bonds — பத்திரங்கள்
Branch Banking — கிளை வங்கி முறை

Budget — வரவுசெலவுத் திட்டம்
Business Cycle — வாணிபச் சுழல்

## C

Call Money (Loans) — அழைப்புக் கடன்
Called-up Capital — அழைத்த முதல்
Capital — முதல், மூலதனம்
Capital Formation — முதலாக்கம், முதல் திரட்சி
Capitalism — முதலாளித்துவம்
Capital Market — முதல் அங்காடி
Cash — ரொக்கம்
Cash Credit — ரொக்கக் கடன்
Cash Deposit — ரொக்க வைப்பு
Cash-in-hand — கையில் ரொக்கம், ரொக்க இருப்பு
Cash Reserves — காப்பு ரொக்கம்
Central Bank — மைய வங்கி
Chain Banking — தொடர் வங்கி முறை
Charter — பட்டயம்
Chartered Bank — சாசன வங்கி
Cheque — காசோலை
Cheque System — காசோலை முறை
Claims — உரிமைகள்
Clean Advance — ஈடற்ற கடன்
Clearing Houses — தீர்வகங்கள்
Co-incidence of Wants — தேவைகள் பொருத்தம்
Coins — காசுகள்
Collateral Security — துணை ஈடு
Commerce — வாணிகம்
Commercial Bank — வாணிக வங்கி
Co-operative Credit Society — கூட்டுறவுக் கடன் சங்கம்
Correspondent Banking — தொடர்பு வங்கி முறை
Creation of Money — பண உற்பத்தி
Credit — வரவு, கடன்
Creditor — கடன் ஈவோன்
Credit Contraction — கடன் சுருக்கம்
Credit Expansion — கடன் பெருக்கம்
Credit Instruments — கடன் கருவிகள்
Crossing — கோடிட்ட

Cumulative Deposit — வளர் வைப்பு
Currency — செலாவணி
Currency Notes — செலாவணித் தாள்கள், பணத் தாள்கள்
Customer — வாடிக்கையாளர்

## D

Days of Grace — கருணை நாள்கள்
Debit — பற்று
Definition — இலக்கணம்
Deflation — பணவாட்டம்
Delivery Slip — கொடுக்கும் குறிப்பு
Demand — தேவை
Demand Deposit — தேவை வைப்பு
Demand Drafts — பேற்றுரிமைச் சீட்டுகள்
Deposit Bank — வைப்பு வங்கி
Deposit at Call — அழைப்பு வைப்பு
Deposit at Notice — அறிவிப்பு வைப்பு
Deposit Insurance Corporation — வைப்புக் காப்பீட்டுக் கழகம்
Depression — மந்தம்
Derived Deposits — வருவிக்கப்பெற்ற வைப்புகள்
Devaluation — மதிப்புக் குறைப்பு
Discounting — கழிவு செய்தல்
Dishonoured Bill — மதிப்பிழந்த உண்டியல்
Discount House — கழிவகம்
Discount Rate — கழிவு வீதம்
Diversification of Risks — இடர்ப்பாடுகளைப் பரவலாக்குதல்
Dividends — பங்குத்தொகை, பங்கு இலாபம்
Draft — உண்டியல்
Drawee — வரையப்படுவோர்
Drawer — வரைபவர்
Due Date — உரிய காலம்

## E

Economy — சிக்கனம்
Effective Demand — விளைவுள்ள தேவை

Effective Purchasing Power — விளைவுள்ள வாங்கும் ஆற்றல்
Elasticity — நெகிழ்வுத் தன்மை
Eligible — தகுதியான
Endorsement — புறக்குறிப்பு
Expectation — எதிர்பார்ப்பு
Exploitation — சுரண்டல்
External Economies — புறச் சிக்கனங்கள்

F

Fiduciary Issue — நம்பிக்கை வெளியீடு
Finance — நிதி
Fixed Capital — நிலை முதல்
Fixed Deposit — நிலை வைப்பு
Fluctuations — ஏற்ற இறக்கங்கள்
Foreign Bill — வெளிநாட்டு உண்டியல்

G

General Utility Functions — பொதுப் பயன்பாட்டுப் பணிகள்
General Utility Service — பொதுப் பயன்பாட்டுப் பணி
Goldsmiths — பொற்கொல்லர்கள்
Government Securities — அரசு பத்திரங்கள்
Group Banking — தொகுப்பு வங்கி முறை
Guild — கழகம்

H

Hire Purchase — தவணைக் கொள்முறை
Hundis — உண்டியல்கள்

I

Imports — இறக்குமதிகள்
Index — குறியீட்டெண்
Indigenous Banker — நாட்டுப்புற வங்கியாளர்
Industry — தொழில்
Industrial Bank — தொழில் வங்கி
Industrial Finance — தொழில் நிதி
Inflation — பண வீக்கம்
Inland Bill — உள்நாட்டு உண்டியல்

Internal Economies — அகச் சிக்கனங்கள்
Interest — வட்டி
Intermediate Credit — இடைக்காலக் கடன்
International Bank — பன்னாட்டு வங்கி
International Bank for Reconstruction and Development — பன்னாட்டுப் புனரமைப்பு வளர்ச்சி வங்கி
International Monetary Fund — பன்னாட்டுப் பண நிதி
Investment — முதலீடு
Investment Bank — முதலீட்டு வங்கி
Issued Capital — வெளியிட்ட முதல்

## J

Joint Stock Bank — கூட்டுப் பங்கு வங்கி
Joint Stock Company — கூட்டுப் பங்கு நிறுவனம்

## L

Labour — உழைப்பு
Laissez Faire — தலையிடாமை
Land — நிலம்
Land Mortgage Bank — நிலவள வங்கி
Large Scale — பேரளவு
Lender of Last Resort — இறுதிநிலைக் கடனீவோன்
Letter of Credit — கடன் கடிதம்
Liabilities — பொறுப்புகள்
Limitations — வரையறைகள்
Limited Liability — வரையறுக்கப்பெற்ற (வரையிட்ட) பொறுப்புகள்
Liquid — நீர்மைத் தன்மை
Liquidity Preference — நீர்மை விருப்பம், ரொக்க விருப்பம்
Loan — கடன்
Long Term Loan — நீண்டகாலக் கடன்

## M

Management — நிருவாகம்
Managing Directors — நிருவாக இயக்குநர்கள்
Margin Requirements — வரம்புத் தேவைகள்

Market Rate — அங்காடி வீதம்
Maturity — தவணை முடிவு, கெடு
Maximum — உச்சம்
Maximum Fiduciary System — உச்சவரம்பு நம்பிக்கைத் திட்டம்
Medium Term Loan — இடைக்காலக் கடன்
Minimum Reserve System — குறைந்த அளவுக் காப்பு முறை
Mixed Banking — கலப்பு வங்கி முறை
Money at Call — அழைப்புப் பணம்
Money Lending — கடன் கொடுக்கும் தொழில், லேவாதேவித் தொழில்
Money Market — பண அங்காடி
Moral Suasion — அறிவுறுத்தல்
Mortgage — அடைமானம்

## N

National Credit Council — தேசியக் கடன் மன்றம்
National Debt — நாட்டுக் கடன்
Nationalisation — நாட்டுடைமையாக்கல்
Near Money — நெருங்கிய பணம்
Negotiable Instruments — செலாவணித் தன்மைபெற்ற பத்திரங்கள்
Non-Negotiable Instruments — செலாவணித் தன்மையற்ற பத்திரங்கள்
Notes — காகிதப் பணம், பணத் தாள்கள்
Note Issue — காகிதப் பண வெளியீடு

## O

Occupation — தொழில்
Open Market Operation — வெளி அங்காடி நடவடிக்கை
Operation — நடவடிக்கை
Organised Markets — அமைப்புள்ள அங்காடிகள்
Organised Money Market — அமைப்புள்ள பண அங்காடி
Overdraft — மிகைப்பற்றுக் கடன்
Overissue of Notes — பண மிகை வெளியீடு

## P

Paid-up Capital — செலுத்தப்பெற்ற முதல்
Paper Currency — காகிதப் பணம்
Payee — பெறுபவர்
Penal Rate — தண்டனை வீதம்
Post-dated Cheque — பின் தேதியிட்ட காசோலை
Post Office — அஞ்சலகம்
Primary Deposit — முதன்மை வைப்புகள்
Primary Functions — முதன்மையான பணிகள்
Primary Societies — அடிப்படைச் சங்கங்கள்
Problems — சிக்கல்கள்
Profitability — இலாபத்தன்மை
Promissory Note — வாக்குறுதிப் பத்திரம்
Propensity to Consume — நுகர்வு விருப்பம்
Propensity to Save — சேமிப்பு விருப்பம்
Proportion — விதாசாரம், விகிதம்
Proportional Reserve System — வீத அளவுக் காப்பு முறை
Public Debt — பொதுக் கடன்

## Q

Qualitative Credit Control Methods — கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள்
Quantitative Credit Control Methods — கடனளவுக் கட்டுப்பாட்டு முறைகள்

## R

Rationing of Credit — கடன் பங்கிடு
Rebate — கழிவு, தள்ளுபடி
Receipt — ரசீது
Recession — பின்னிறக்கம்
Recurring Deposit — தொடர் வைப்பு
Re-discount — மறு கழிவு
Refinance Corporation — மறுநிதிக் கழகம்
Referee-in-the case of need — தேவைக்கேற்ற துணைவர்
Reserves — ஒதுக்குத் தொகை
Retirement Benefit Deposit — ஓய்வுக்கால நலவைப்பு
Risk — இடர்ப்பாடு

## S

Safety — பாதுகாப்பு
Savings — சேமிப்பு
Savings Bank — சேமிப்பு வங்கி
Scheduled Bank — பதிவு செய்யப்பெற்ற வங்கி, பட்டியலில் சேர்க்கப்பெற்ற வங்கி
Secret Reserves — இரகசிய ஒதுக்கு நிதிகள்
Secured Loan — ஈடுள்ள கடன்
Security — ஈடு
Securities — பத்திரங்கள்
Selective — தெரிந்தெடுத்த
Selective Credit Control — தெரிந்தெடுத்த கடனளவுக் கட்டுப்பாடு
Self Liquidity — சுய நீர்மைத்தன்மை, தானே ரொக்கமாகும்
Shares — பங்குகள்
Share Capital — பங்குமுதல்
Short Period — குறுங்காலம்
Short Term — இடைக்காலம்
Small Scale — சிற்றளவு
Socialism — சமதர்மம்
Social Control — சமுதாயக் கட்டுப்பாடு
Solvency — கடன் தீர்வுத்தன்மை
Speculation — ஊக வாணிபம்
Stock Exchange Speculation — பங்குமாற்று ஊக வாணிபம்
State Financial Corporation — மாநில நிதிக்கழகம்
Stock Market — பங்கு அங்காடி
Subscribed Capital — ஒப்பிய முதல்
Subsidiary — துணை

## T

Table — அட்டவணை, பட்டியல்
Terms of a bill — உண்டியல் தவணை
Three Tier — மூன்றடுக்குகள்
Theoretical — கருத்தியல்
Time Deposit — காலவைப்பு
Trade — வாணிகம்

Treasury — கருவூலம்
Treasury Bills — கருவூல உண்டியல்கள்
Trustee — பொறுப்பாளர், பொறுப்பாண்மையாளர்

U

Uncertainty — நிலையின்மை
Undeveloped — வளர்ச்சியில்லாத
Units — அலகுகள்
Unit Banking — தனி வங்கி முறை
Unlimited Liability — வரையறுக்கப் பெறாத பொறுப்பு
Unorganised Money Market — அமைப்பற்ற பண அங்காடி

V

Value — மதிப்பு
Velocity — வேகம்
View — கருத்து
Verification — சரிபார்த்தல்
Vocation — தொழில்

W

Wage — கூலி
Warehouse — கிட்டங்கி
Ways and Means Advance — வழிவகைக் கடன்
Working Capital — நடைமுறை முதல்
World Bank — உலக வங்கி
World Depression — உலக மந்தம்

Y

Yield on Securities — பத்திரங்களின் வருவாய்

# தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை-600 006

✻

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்
(Tamil Medium Books for Colleges)

✻

இதுவரை பல்வேறு துறைகளுக்கான
910 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

★

கிடைக்குமிடம் :
**தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு**
(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலக வளாகம்)
கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை-600 006.

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்.